இயல் - I

முன்னுரை

ஊராட்சிகளுக்கு, அவற்றின் பல்வேறு நிலைகளில் ஒப்படைக்கப்பட வேண்டிய பொறுப்புகள் குறித்தும் அவற்றால் நிறைவேற்றப்பட வேண்டிய பங்குகள், கடமைகள், செயல்பாடுகள் குறித்தும், கருதுவதற்கும் பரிந்துரைகளைச் செய்வதற்குமாக, மாநில திட்டக் குழு உறுப்பினர்களைக் கொண்ட சிறு பணிக்குழுவை அமைக்குமாறு மாநிலத் திட்டக் குழுவிடம், தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சித் துறை வேண்டுகோள் விடுத்தது. 20.9.96 ஆம் நாளும் 20099 / இ1 / 96 –டி எண்ணுமிட்ட ஊரக வள்ர்ச்சித்துறையின் கடிதத்தின் படியொன்று இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – 1). 27–9–96 அன்று நடைபெற்ற மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்களின் முதற்கூட்டத்தில் இவ்வேண்டுகோள் குறித்துக் பரிசீலிக்கப்பட்டது. இப்பணியை மேற்கொள்வதற்கு குழுவொன்றை அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

குழுவின் அமைப்பு

1.2. இம் முடிவின் தொடர்ச்சியாக, குழுவின் அமைப்பு ஒன்று அமைக்கப்பட்டது. 27.10.96 ஆம் நாளும் 4781/மா.தி.கு/டிபி/96 எண்ணுமிட்ட செயல்முறை ஆணையின் படியொன்று இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – 2)

1.	திரு. எல்.சி. ஜெயின் உறுப்பினர் மாநிலத் திட்டக் குழு	தலைவர்
2.	திரு. டி.வி. அந்தோணி இ.ஆ.ப. (ஓய்வு) உறுப்பினர் மாநிலத் திட்டக் குழு	இணைத் தலைவர்
3.	திரு. கே.வி. பழனிதுரை முழு நேர உறுப்பினர் மாநிலத் திட்ட குழு	உறுப்பினர்
4.	டாக்டர். இ. ரமேஷ் சந்திரபண்டா இ.ஆ.ப. உறுப்பினர் – செயலர் மாநிலத் திட்டக் குழு	அமைப்பாளர்
5.	அரசு செயலாளர் ஊரக வளர்ச்சித் துறை	சிறப்பு அழைப்பாளர்

ஆய்வுக்குரிய பொருள் வரையறை

1.3. பணிக்குழு எடுத்துக் கொண்டுள்ள ஆய்வுக்குரிய பொருள் வரையறை மற்றும் அதன் நோக்கங்கள் வருமாறு :–

(i) ஊராட்சிகளிடம் பல்வேறு நிலைகளில் ஒப்படைக்கப்பட வேண்டிய பொறுப்புகள் மற்றும்

(ii) அவற்றிற்கு அளிக்கப்படவுள்ள இப்பொறுப்புகள் தொடர்பில் ஊராட்சிகளின் பங்குகள், கடமைகள், செயல்பாடுகள் ஆகியன.

கூட்டங்கள்

1.4. மாநிலத் திட்டக் குழு பிரிவு பல்வேறு நிறுவனங்களுடனும் வல்லுநர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டது. இக்குழுவின் பரிந்துரை 27.9.96 அன்று நடைபெற்ற மாநில திட்டக் குழு உறுப்பினர்களின் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. 10.2.97 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாநிலத் திட்டக் குழு கூட்டத்தில் இக்குழுவின் முதல் அறிக்கை அளிக்கப்பட்டது. இம் முதல் அறிக்கை அரசுக்கு 6.1.97 அன்று அனுப்பப் பெற்றது. குழுவின் இரண்டாவது அறிக்கை 17.3.97 அன்று அரசிடம் வழங்கப்பட்டது. 4.4.97 அன்று இறுதி அறிக்கை மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

நாள்	கூட்டத்தின் தன்மை
27.9.96	மாநிலத் திட்ட குழு உறுப்பினர்களின் கூட்டம்
22.10.96 23.10.96 16.11.96 18.11.96 19.11.96	குழுக் கூட்டம்
20.11.96	மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடல்
20.11.96	மா.தி. கு. உறுப்பினர்களின் கூட்டம்
25.11.96	குழுக் கூட்டம்
26.11.96	குழுக் கூட்டம்
30.11.96	மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற உள்ளாட்சி மன்றங்களின் தலைவர்களின் கருத்தரங்கில் கலந்து கொள்ளுதல்
16.12.96 17.12.96	குழுக் கூட்டம்
18.12.96 19.12.96	மா. தி. கு. உறுப்பினர்களின் கூட்டம்
03.01.97 04.01.97	குழுக் குழுக்கூட்டம்
06.01.97	மா. தி. குழுவின் முதல் அறிக்கை தலைமைச் செயலாளர் அவர்களிடம் அளிக்கப்பெற்றது.
08.01.97 10.02.97	குழுக்கூட்டம்
10.02.97	மா.தி.கு. 2 வது கூட்டத்தில் குழுவின் முதல் அறிக்கை கருத்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
11.02.97	குழுக் கூட்டம்
26.02.97	மா.தி.கு. உறுப்பினர்களின் கூட்டம்
11.03.97	குழுக் கூட்டம்
12.03.97	மா.தி.கு. உறுப்பினர்களின் சாரா கூட்டம்

அறிக்கையின் அமைப்பு

1.5. கீழே குறிப்பிட்டுள்ளவாறு முதல் அறிக்கை 7 இயல்களைக் கொண்டதாகத் தயாரிக்கப்பெற்றது.

இயல் – I	அறிமுகம்	இவ்வியலில் குழுவின் கூட்டமைப்பு ஆய்வுக்குரிய பொருள் வரையறை மற்றும் நடைபெற்ற விவாதக் குறிப்புகளை உள்ளடக்கியது.
இயல் – II	வரலாற்றுப் பின்னணி	இவ்வியலில் ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக மாநிலத்தில் பஞ்சாயத்து ஆட்சி முறையின் வரிசைப்படியான வளர்ச்சியையும் முக்கியக் கூறுகளை மட்டும் விவரித்துக் கூறுவதும் உள்ளது.
இயல் – III	அணுகுமுறை	இவ்வியல் குழுவின் பரிந்துரைகளை இறுதியாக்கம் செய்வது தொடர்பில் அனுசரிக்கப் பெற்ற அணுகுமுறை பற்றியதாகும். குழுவில் நிகழ்த்தப் பெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில் தேசிய 'அரசு மற்றும் வட்டாரப் பின்னணிகளின் தொடர்பிலான அணுகுமுறைக் காரணிகள் குறித்து பரிசீலிக்கின்றது.
இயல் – IV	அதிகார ஒப்படைப்புக்கான பரிந்துரைகள்	29 இனங்களின் நிலை குறித்து இவ்வியலில் பரிந்துரைகள் பகுப்பாய்வு செய்யப்பெறுவதுடன் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு, நிருவாகம் நிதி மற்றும் சட்டச்சிக்கல்கள் உட்பட ஒப்படைக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் மீதான பரிந்துரைகள் குறித்தும் ஆராயப் பட்டுள்ளது.
இயல் V	திட்டங்கள் மற்றும் நிறுவனங் களுக்கான பரிந்துரைகளின் வழிகாட்டும் குறிப்பு	இவ்வியல் மாநிலத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் செயற்படுத்தப்பட வேண்டிய, மேற்பார்வையிடப்பட வேண்டிய மற்றும் கண்காணிக்கப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பிலானது. மேலும் இவ்வியல் இவ்வூராட்சி அமைப்புகளால் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய/மேற்பார்வையிடப்பட வேண்டிய/நிருவகிக்க வேண்டிய நிறுவனங்கள் தொடர்பில் ஆனதும் ஆகும்.
இயல் – VI	பரிந்துரைகளின் செயலாக்கம்	இவ்வியல் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்குத் தொடர் நடவடிக்கைகளின் வகைகள் குறித்தும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டிய கூடுதல் அதிகாரங்கள், பொறுப்புகள் குறித்தும் எடுத்துரைக்கிறது.
இயல் – VII	முடிவுரை	

வரலாற்றுப்
பின்னணி

இயல் II

வரலாற்றுப் பின்னணி

வேத காலத்திற்கு முன்பிருந்தே தமிழ்நாடு நெடுங்காலமாக உள்ளூர் தன்னாட்சி முறை வரலாற்றை உடையது. உத்திரமேரூர் கல்வெட்டுப் பொறிப்பில், சமுதாயக்குழு தங்களுடைய பகுதி வளர்ச்சிக்காகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன என்பதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன (இணைப்பு 3). அக்காலத்தில் இது ஓரளவிற்கு ஊர்க்குடியரசு அமைப்பாக இருந்தது. 10 – 11 ஆவது நூற்றாண்டுக் காலத்தில் சமுதாயக்குழு, சோழர் ஆட்சியின் கீழ் தன்னுடைய உச்ச நிலையை அடைந்தது. அப்போது ஊராட்சி மன்றங்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் வரிவிதிப்பு, சமுதாய மேம்பாடு, நீதி நிருவாகம் முதலியவற்றை செயற்படுத்தியது. ஊராட்சி மன்றங்களின் உறுப்பினர்களைத் தெரிவு செய்ய "குட ஓலை முறை" கமுக்கவாக்குச் சீட்டாக பயன்படுத்தப்பட்டது. பல்வேறு குழுக்கள் வாயிலாகச் சமுதாயப் பங்கெடுப்பு வலிவூட்டப்பட்டது. எனினும் ஊராட்சி மன்றங்கள், சோழ மன்னர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தன. சோழ ஆட்சி சரிந்ததும், இம்மாநிலம் உள்ளாட்சி தன்னாட்சியுரிமையின் வீழ்ச்சியையும், ஒருமுகப்ப டுத்தப்பட்ட நிலமானிய நிருவாகமுறை எழுச்சியையும் சந்தித்தது. இது, ஆங்கிலேயே ஆட்சியாளர்கள் அரசின் நிருவாக வசதிக்காகத் தொடக்கத்தில் உள்ளூர் தன்னாட்சி முறையை அறிமுகப்படுத்தும் வரை தொடர்ந்து இருந்தது.

2.2. உள்ளூர் தன்னாட்சி முறையின் வரலாற்றுப் பின்னிணியின் பகுப்பாய்வினைப் பின்வரும் 7 கால அளவில் பிரிக்கலாம்.

I.	1854	–	1871
II.	1871	–	1884
III.	1884	–	1920
IV.	1920	–	1950
V.	1950	–	1958
VI.	1958	–	1989
VII.	1989	–	1996

I. 1854 – 1871

2.3. ஆங்கிலேய ஆட்சியில் பன்முகப்படுத்தப்பட்ட–உள்ளூர் தன்னாட்சியுரிமையின் தோற்றத்தை, 1854–ஆம் ஆண்டைய மாவட்ட சாலை நிதிகள் அமைப்பு விதித் தொகுதியிலிருந்து கண்டறியலாம். சாலை நிதியானது, தோணித்துறைக் கட்டணங்கள் வண்டிவரி மற்றும் மீன்பிடிப்பு வாடகையை உள்ளடக்கியதாக 1855 முதல் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. 1866–இல் சென்னை மாவட்டச் சாலைவரிச் சட்டம் உருவாக்கப்பட்டது. இது, நிலவருவாயில் சாலை வரியை விதிக்க அரசுக்கு அதிகாரமாளித்தது. இவ்வரிவிதிப்பின் நோக்கமானது, மாவட்டச்

சாலைகளை அமைத்து பழுதுபார்த்து மற்றும் பராமரிப்பதாக இருந்தது. சென்னை மாநிலம் முழுவதும் இவ்வரிவிதிக்குட்பட்டதாக இருந்தது.

II. 1871 – 1884

2.4. குடியாட்சியுரிமையைப் பன்முகப்படுத்துதல் தொடர்பில் அண்மை சட்டமாக 1871–ஆம் ஆண்டைய சென்னை உள்ளாட்சி நிதிச் சட்டம் இருந்தது. இச்சட்டமானது தங்களுக்குரிய பகுதியில் பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள் மற்றும் சாலைகள் அமைத்து பராமரித்து பழுதுபார்க்கும் வகையில் உள்ளாட்சி நிதிக் கழகங்களை அமைக்க ஆளுநருக்கு அதிகாரமளித்து. 1882 – இல் லார்டு ரிப்பன் பிரபுவின் தன்னாட்சி யுரிமையரசுத் தீர்மானமானது, ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அதாவது இத்தீர்மானத்தின்படி மாநில அரசுகள் ஊரக மற்றும் நகர உள்ளாட்சி கழகங்களை அமைத்து கல்வி, மருத்துவம் மற்றும் பொதுப்பணிகளுக்கு ஏற்படக்கூடிய செலவைச் சமாளிக்கும் பொருட்டு வருவாயை உயர்த்திக் கொள்ள அவற்றுக்கு அதிகாரமளிக்க வேண்டும். தொடக்கத்தில் தயங்கிய (தமிழ்நாடு) சென்னை மாகாண அரசு, ரிப்பன் தீர்மானத்தை ஆராய 1882 சூன் திங்களில் குழு ஒன்றினை அமைத்தது. அதிக அதிகாரங்களுடனும் வள ஆதாரங்களுடனும் கூடிய உள்ளாட்சியின் மூன்று படிநிலைகளை அமைக்க வேண்டுமென இக்குழு தெரிவித்த முக்கிய பரிந்துரையினை சென்னை மாகாண அரசு ஏற்றுக் கொண்டது.

III. 1884 – 1920

2.5. 1884 ஆம் ஆண்டைய சென்னை உள்ளாட்சிக் கழகங்கள் சட்டம் அமைத்த மூன்று படி நிலைகளிலான உள்ளாட்சி, அரை நூற்றாண்டு காலம் நீடித்தது. மாவட்டக் கழகங்கள் வட்டக் கழகங்கள் மற்றும் ஊராட்சிகள் ஒன்றியம் (பஞ்சாயத்து) என்பன இம்மூன்று படிநிலைகளாகும். 1907–இல் அமைக்கப்பட்ட ராயல்கமிஷன் அறிக்கை (1915) ஒரு திருப்பத்தை உருவாக்குவதாக இருந்தது. அதன் பரிந்துரைகளுள், ஒன்றியத்துக்குக் கீழே, ஊர் அளவில் ஊராட்சிகளை அமைத்தலும் ஒன்றாகும். சென்னை (மாகாண) அரசானது, இப்பரிந்துரைகளைச் செயற்படுத்துவதில் பெரிதும் தயக்கம் காட்டியது. இப்பரிந்துரைகளை ஆராய, குழு ஒன்றினையும் அமைத்தது. 1918–இல் மாண்டேக் – செம்ஸ் போர்ட் அளித்த அறிக்கை, இக்கழகங்களில் போதிய எண்ணிக்கையில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைச் சேர்த்து, மாநில அரசின் மிகக் குறைந்த அளவிலான கட்டுப்பாட்டின் கீழ் கூடுதல் நிருவாக மற்றும்நிதி அதிகாரங்களைக் கழகங்களுக்கு அளிப்பதன் தேவையை நன்கு புலப்படுத்தியது. 1919–இல் இந்திய அரசுச் சட்டமானது, மாநில அரசில், உள்ளாட்சி நிருவாகத் தொடர்பில், குடியாட்சி முறைக்குப் பெரும் பங்கினை அளித்தது.

IV. 1920 – 1950

2.6. 1920–ஆம் ஆண்டில், சென்னை அரசு, இரண்டு சட்டங்களை, அதாவது, (அ) 1884 – ஆம் ஆண்டைய சட்டத்தை மாற்றீடு செய்த சென்னை உள்ளாட்சிக் கழகங்கள் சட்டம், (ஆ) சென்னை சிற்றூராட்சிச் சட்டம் ஆகியவற்றை இயற்றியது. 1930–ஆம் ஆண்டில், சென்னை சிற்றூராட்சிச் சட்டம் நீக்கப்பட்டு, முந்தைய சட்டத்தின் கீழ் ஊராட்சிகள் கொண்டு வரப்பட்டன. கடுமையான நிதி நெருக்கடி காரணமாக, 1934–ஆம் ஆண்டில் வட்டக் கழகங்கள் (இடைநிலை) ஒழிக்கப்பட்டன. இவ்வாறு உள்ளூர், அமைப்புகளின் கலந்தறி நடடிவக்கையுடன் மாநில நிருவாகச் செயற்கைகளைக் கருவியாக வடிவகைப்பட்டு உள்ளாட்சிக் கழகங்கள் செயலளவில் நிறைவு செய்வனவாக நீடித்திருந்தன. காலப்போக்கில் அரசின் பங்களிப்பு குறிப்பிடத் தக்க அளவில் குறைந்து விட்டது. எனினும் இந்நடவடிக்கை முடிவடைய கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளாகிவிட்டன. பெரும்பாலும், சென்னை மாநிலத்திற்கு வெளியே அனைத்திந்திய அளவிலான வெளிப்பாட்டின் தூண்டுதலே இதற்குக் காரணமாகும்.

2.7 1884–இல் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்டக் கழகங்கள், வட்டக் கழகங்கள் மற்றும் சிற்றூராட்சிகள் எனும் மூன்று படிநிலைக் கட்டமைப்பானது, இரண்டாம் அடுக்காக இருந்த வட்டக் கழகங்கள் நீக்கப்பட்ட 1934–ஆம் ஆண்டு வகை 50 ஆண்டுகள் நடைமுறையில் இருந்தது. பல்வேறு காரணங்களால் இம் மூன்று படிநிலை முறையானது தொடர்ந்து செயற்படக்கூடியதாக காண்பிக்கப்படவில்லை. ஒரு பொதுச் சேர்மமே மொத்தத்தில் பற்றாக்குறையானதாகவும் மீள் திறனற்றதாகவும் இருக்கும் போது, அந்த ஒரு சேர்மத்திலுள்ள வள ஆதாரங்களிலேயே பங்கு கொள்ள அனைத்து படிநிலைகளும் ஒன்றுக் கொன்று போட்டியிட்டன. தம்மீது கட்டுப்பாட்டினை விதிக்கும் தம்மிலும் உயர்ந்த மற்றொன்றின் மீது ஒவ்வொரு படிநிலையும், சீற்றம்மடைகின்றன. மேலும், மாவட்ட மற்றும் வட்டக் கழகங்களிடை யேயுள்ள பணிகள் ஒத்த தன்மையுடையனவாகவே இருக்கும். மேல் நிலையில், மாவட்டக் கழகங்களுக்கும், கீழ்நிலையில் ஊராட்சிகளுக்கும் இடையில் வள ஆதாரங்கள் மற்றும் பொறுப்புகளைப் பொறுத்தவரையில் பிந்தியது நசுக்கப்பட்டது. இறுதியாக. இச் சூழ்நிலையின் மாறா நியதியானது 1934–இல் வட்டக் கழகங்களை நீக்குவதற்கு வழிவகுத்தது.

2.8 உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகள், ஊரக உள்ளமைப்புகள் (முக்கியமாக சாலைகள்) மற்றும் அடிப்படைக் குடிமைப் பணிகள்) குடிநீர் வழங்கல், பொதுசுகாதாரம் துப்புரவு மற்றும் தெருவிளக்கு) சார்ந்ததாகும். அவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மேம்பாட்டுப் பொறுப்புகள், பள்ளிக் கல்வி மற்றும் உள்ளூர் மருத்துவ மனைகள் உள்ளிட்ட மருத்துவ வசதிகள் என வரையறுக்கப்பட்டன. உள்ளாட்சி மன்றங்களுக்குரிய வள ஆதாரங்கள் அவற்றில் மிக முக்கியமானதாக உள்ள நில வருவாய் வரி மற்றும் சாலையைப் பயன் படுத்துவோரிடமிருந்து பாதை வரி மீள் திறனற்றதும் பற்றாக்குறையானதுமாகும்.

2.9. பள்ளிகள், மற்றும் மருத்துவம் ஆகியவற்றின் வாய்ப்பு நலத்திற்காக உள்ளாட்சி அமைப்புகள் ஓரளவு முதலீடு பெறத்தக்க வகையில் அரசு மானியங்கள் கிடைத்திடுவதாய் இருந்தது. கல்வியியல் மற்றும் மருத்துவ வாய்ப்பு நலத்திற்கான தேவையை உணரத் தொடங்குகையில் உள்ளாட்சி அமைப்புகள் இத்துறையில் தமது செயற்பாடுகளை விரிவாக்குவதற்குஉதவிசெய்தல் மற்றும் அரசின் வரவு–செலவுத் திட்டத்திலிருந்து இன்றியமையாதவற்றுக்கு நேரடியாக நிதியுதவி அளித்தல் ஆகியவற்றுக்கிடையே அரசின் விருப்பமானது இருந்து வந்தது. அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டின் நிர்பந்தமானது பின்னருள்ள விருப்பத்தையே ஆதரிக்கின்றது.

2.10 இதன் கட்டுபாட்டினை அரசு தனது பணித்துறையைச் சார்ந்த தொடர்புடைய உள்ளாட்சி நிருவாகத்துறை (அதாவது நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் ஆய்வாளர்), வருவாய்த் துறை (அதாவது மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் வருவாய்க் கோட்ட ஆட்சியாளர்கள்) மற்றும் அவற்றுடன் தொடர்புள்ள துறைகள் (பொதுப்பணித்துறை, நலவாழ்வுத் துறை, கல்வித்துறை) வாயிலாக விரிவாகவும் முனைப்புடனும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. நிதி மற்றும் நிருவாகப் பொருண்மைகள் குறித்து விரிவான விதிகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அரசியல் நிலையில் மாநில அளவில் அமைச்சரகங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தலைமையேற்று உள்ளவர்கள் ஆகியோருக்கிடையே தோன்றிய நெருக்கடியானது, வரம்புக்குட்பட்ட பொறுப்பு களையும், நிதிகளையும், அதிகாரங்களையும் பின்கூறியவரிடம் மாற்றி ஒப்படைக்க மிகப் பெரியதொரு காரணியாக உருவாக்கியது.

V 1950 -1958

2.11 விடுதலையடைந்த காலத்திற்குப் பின்னர் இம்மாநிலத்தில் பன்முகப்படுத்தப்பட்ட மக்களாட்சியில் முதன் முதலாக 1950 ஆம் ஆண்டு சிற்றூராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. சட்ட மேலவையில் இச்சட்ட வரைவினை உள்ளாட்சி அமைச்சர் தாக்கல் செய்கையில்:

"ஊரகப் பகுதிகளை முக்கிய கூறாகக் கொண்டிருக்கும் நம்முடையது போன்றதொரு தன்மையுடைய நாட்டில் இன்றும் நம்முடைய கிராமங்களில் கூட்டாண்மை ஒற்றுமை உணர்ச்சி உயர்ந்துக் கொண்டிருக்கும் நிலையில் அடிப்படையானதொரு நிருவாகி அலகினைக் கொண்டதாயிருப்பது இன்றியமையாத தாகும். ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு கொண்ட அலகாக அமைக்கப்பட வேண்டும் என்பதுடன் தனக்குரிய விவகாரங்களைத் தானே சமாளித்துக் கொள்ளும் வகையில் அமைவதும் அடுத்த கட்டநடவடிக்கையாகும். அத்துடன் உணவு மற்றும் உடை ஆகியவற்றை பொருத்தமட்டில் அதன் அனைத்துத் தேவைகளையும் இயன்றளவு உள்ளூரில் உற்பத்தியாகக் கூடியவற்றைக் கொண்டே நிறைவேற்றிக் கொள்வதுடன் மக்களின் சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டுத் தேவைகள் ஆகிய அனைத்திற்கும் தனது சொந்த முயற்சிகளைக் கொண்டு நிறைவேற்றும் வகையில் அவை இருக்க வேண்டும்" என்று கூறினார்.

2.12. ஊராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் மீது ஆய்வாளர்களாலும் செயல் அலுவலர்களாலும் விதிக்கப்படும் கட்டுபாட்டுக் கூறு தொடர்பில் சட்டமன்ற மேலவை எதிர்கட்சித் தலைவர் திரு. வி.கே. ஜான் அவர்கள் கடுமையாக எதிர்த்துப் பேசுகையில் உண்மையான மக்களாட்சியாக இயங்கச் செய்யும் வகையில் அவர்களுக்கு உள்ளாட்சி தன்னமைப்பு அரசைக் கொடுக்க விரும்புகிறார்கள். மேலும் உள்ளபடியான மக்களாட்சியாக அரசால் நியமனம் செய்வதற்கு அலுவலர்களிடம் கடுமையான கட்டுப்பாடு அதிகாரங்களை அளிக்கிறீர்கள். அது தவறான ஒன்றாகும் என்றும் அது ஒருபோதும் உள்ளாட்சி தன் அமைப்பு அரசாக இருக்க முடியாது எனவும் நான் கருதுகின்றேன். அது மாநில அரசாங்கத்தின் அலுவலர்களால் ஏற்படுத்தக் கூடிய ஊராட்சியின் அரசாக இருக்கும்" என்று கூறினார்.

2.13 1920 ஆம் ஆண்டு சென்னை உள்ளாட்சி கழகச் சட்டம், சென்னை மாவட்டக் கழகச் சட்டமாகத் திருத்தப் பெற்றது. இவ்வாறாகக் கீழ் மட்டத்தில் ஊராட்சிகள் மற்றும் மாவட்ட அளவில் மாவட்டக் கழகங்கள் என்ற இருபடி நிலை அமைப்பானது, எவ்வாறிருந்தபோதிலும் இவ்விரு படிநிலை அமைப்புகளுக்கிடையே எவ்விதத் தொடர்புமின்றியே நடைமுறைக்கு வந்தது. இச்சட்டமானது முன்பிருந்ததைக் காட்டிலும் மூன்றுவகையில் வேறுபாடுடையதாக இருந்தது. அவையாவன (i) எல்லோருக்குமான வயது வந்தவர் வாக்குரிமையானது அறிமுகப்படுத்தப்பட்டது. (ii) மாநில முழுமையும் சிற்றூராட்சிகளுக்கு உட்படுத்தப்பட்டன. (iii) சிற்றூராட்சிகள் மாவட்டக் கழகங்களிடமிருந்து தனித்துவம் பெற்றிருந்தன. இருந்த போதிலும் 1950 ஆம் ஆண்டுச் சட்டத்தின் படி அவைகளிடம் அடிப்படைச் சுகாதரம் மற்றும் உள் திட்டமைப்பு வசதிகளைப் பேணி காக்கும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. போதிலும் ஊராட்சிகளை வளர்ச்சி முகமைகளாக அச்சட்டம் தெரிவிக்கவில்லை. மாவட்டக் கழகங்கள் மருத்துவம் மற்றும் நல்வாழ்வுச் சேவைகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் தொடக்கப் பள்ளிகள் ஆகியவற்றைப் பேணிவந்தன. 1995–96 மாநிலத்தில் பின்வரும் நிலை இருந்து வந்தது.

	செயல்	மாவட்டக் கழகம் பேணுதல்	மொத்தம்
1.	மருத்துவ நிலையங்கள்	634 (76.85)	825
2.	உயர்நிலைப் பள்ளிகள்	304 (31.54)	964
3.	தொடக்கப் பள்ளிகள்	12748 (51.52)	24741

அடைப்புக் குறிக்குள் உள்ள விகிதாச்சாரம் மாநில மொத்தத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவதாகும். ஆதாரம் சரஸ்வதி – எஸ் (1973) சென்னை ஊராட்சி முறை தொகுதி – I, இம்பெக்ஸ், டெல்லி, இந்தியா.

2.14. அதே வேளையில், கல்வி, பொது சுகாதாரம், சாலைப் பணிகள், பொது அங்காடிகள், வண்டி நிற்குமிடங்கள், இறைச்சிக் கொட்டில், வார்ப்பு தயாரிப்பு, தோட்டங்கள் மற்றும் பூங்காக்கள் போன்றவற்றைப் பேணுதல் போன்ற செயல் நடவடிக்கைகளை ஊராட்சிகள் மேற்கொள்கின்றன. இக்காலத்தில், 1951–இல் பல்வந்தராய் மேத்தா குழுவை அமைப்பதற்கு முன்னர் தேர்வாய்வு அடிப்படையில் ஊராட்சிகள் இவற்றைக் கொண்டதொரு ஊராட்சி ஒன்றியம் மதுரையில் அமைக்கப்பெற்றது. இம்மாநிலத்தில் ஏற்கனவே நடைமுறைப் படுத்தி வந்த வட்டார வளர்ச்சித் திட்டத்தின் விரிவாக்கமாக இது இருந்தது. 1952– இல், வட்டார மற்றும் மக்கள் பங்கேற்பு வாயிலாக அப்பகுதியினை வளர்க்கச் செய்யும் நோக்கத்துடன் சமுதாய வளர்ச்சி மற்றும் தேசிய விரிவாக்கச் சேவைத் திட்டத்தை இந்திய அரசு துவக்கியது. திரு. பல்வந்தராய் மேத்தா அவர்களின் தலைமையின் கீழ் இத்திட்டத்தை ஆராயவேண்டி அமைக்கப்பட்ட குழு அதன் அறிக்கையை 1957–இல் அளித்தது. அதில் உள்ளடங்கியுள்ள பரிந்துரைகளாவன;

(i) வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டி கிராம, வட்டார, மாவட்ட நிலைகளில் மக்களாட்சியுடன் இணைந்த நிலையங்களை உருவாக்குதல்.

(ii) அனைத்து வளர்ச்சிப் பணிகளுக்கும் வட்டார வளர்ச்சி (ஊராட்சி ஒன்றியம்) பொறுப்பை ஏற்பது.

(iii) அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றுக்கான வழிவகை ஏற்பாடுகளை ஊராட்சிகள் மேற்கொள்ளுதல், மற்றும்

(iv) மாவட்ட ஊராட்சிகள் (ஜில்லா பரிஷத்) ஊராட்சி ஒன்றியங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

2.15. இருந்த போதிலும், சென்னை அரசு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்குரிய செய் கடமைகளின் தன்மைகள் தொடர்பில், குழுவின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அடியோடு மாற்றஞ் செய்ய வேண்டி குழு பரிந்துரைத்த போதிலும் வேளாண்மை, தொழில்கள், கல்வி மற்றும் நலவாழ்வு ஆகியவை போன்ற வளர்ச்சி நடவடிக்கைகள் தொடர்பில் உள்ளாட்சி அமைப்புக்குப் பொறுப்புகளை ஒப்படைப்பதற்கு சென்னை அரசு ஆதரவாக, அதாவது உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கைக்கு முழுமையான பொறுப்புகளை அரசு வைத்துக்கொள்ளும் என்பதாக இருக்கும்.உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரத்திற்குரிய மூன்று நிலைகள் உள்ளிட்ட பரிந்துரைகள் : (அ) சில செய்கடமைகளுக்கான சட்டப்படியான பொறுப்புரிமை ஒப்படைப்பு. (ஆ) ஏனைய சில செய்கடமைகளின் நிருவாக ஒப்படைப்பு மற்றும் (இ) மற்ற சிலவற்றிற்கான அறிவுரைக் குழுமம். சென்னை அரசின் அணுகுமுறையானது, உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சட்டப்படியாக ஒதுக்கப்பட்ட பொறுப்புகளின், ஆட்சிப்பகுதியை விரிவு படுத்தாமலே இருக்கையில், அது விருப்புரிமை ஒப்படைப்பு மற்றும் கலந்தாய்வின் தேவையை ஏற்றுக் கொண்டது. 1957இல், சென்னை அரசாங்கம் 'உள்ளாட்சி சீரமைப்பு' மீது வெள்ளை அறிக்கை ஒன்றை வைத்தது. இது குறித்துச் சட்டப்பேரவையில் 1957 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 4–5 ஆம் நாட்களிலும் சட்ட மேலவையில் 1957 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 6–7 ஆம் நாட்களிலும் கலந்துரையாடப்பட்டது.

2.16. இவ்வெள்ளை அறிக்கையின் முக்கியக் கூறுகள் வருமாறு :

(i) வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் ஊராட்சி ஒன்றியம் ஒன்று அமைக்க வேண்டும். அவ்வாறு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் அமைப்பானது, அவ்வட்டாரத்தில் அமைந்துள்ள அனைத்து சிற்றூராட்சிகளின் சார்பாக ஒரு கூட்டுறவுச் சங்கமாகத் திகழவேண்டும்.

(ii) ஊராட்சி ஒன்றியங்களால் மாவட்டக் கழகங்களின் செய்கடமைகள் மேற்கொள்ளப் பெறும் என்பதால் மாவட்டக் கழகங்களை அவற்றின் செயல்பாடுகளுடன் கலைக்க வேண்டும். மேலும்,

(iii) வட்டார மக்களின் சார்பாளர்களுக்கும் மாநில அரசின் துறை சார்ந்த முகமைகளுக்குமிடையே அறிவுரைச் சங்கமொன்றைத் தோற்றுவிப்பதற்காக வளர்ச்சியுறும் மாவட்டத்திலும் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் அமைக்கப் பெற வேண்டும். இவ்வறிக்கையானது, அவைக் குழு ஒன்றால் ஆய்வு செய்யப்பட்டு அதன் பரிந்துரைகளின் அடிப்படையில், 1958 ஆம் ஆண்டு சென்னை ஊராட்சிச் சட்டம் இயற்றப்பட்டது.

2.17 மாவட்டக் கழகங்களைக் கலைப்பதற்கு 3 முக்கிய காரணங்களை இங்கு குறிப்பிடுதல் தக்கதாகும். (அ) பல இடங்களில் கழகங்களின் செய்கடமைகள் நிதிகள் மற்றும் கழகங்களின் பணித்துறை அதிகாரிகள் ஆகியோர் மீதான மொத்தக் கட்டுப்பாட்டை அரசு/பணித்துறை கொண்டிருந்த தன் விளைவே கழகத்திற்கும் அரசுக்குமிடையே பதற்ற நிலை ஏற்பட்டது. (ஆ) கழகமானது, தங்களின் செயல்பாடுகளிலும், நிதிகளிலும் தலையிடுவதாக சிற்றூராட்சிகள் கருதினர். மேலும், (இ) மாவட்டக் கழகத்தின் பரப்பானது, மேம்பாட்டுப் பணிகள் மற்றும் மெய்யான மக்களின் பங்கேற்பின் மீது பயனுள்ள வகையில் கட்டுப்பாட்டை ஐயமின்றி பெரிய அளவில் கொண்டுள்ளது.

VI 1958 - 1989

2.18. முப்பதாண்டுகளுக்கும் மேலாக மாநிலத்தில் மக்களாட்சியைப் பன்முகப் படுத்துதலில் ஏற்ற இறக்கங்களைக் காண்கிறோம். மாநிலச் சட்டப்பேரவையில் ஆழ்ந்தாராய்வு மேற்கொண்ட பின், முன்னரே தெரிவித்தபடி 1958 ஆம் ஆண்டு சென்னை ஊராட்சிச் சட்டமும் 1958 ஆம் ஆண்டு சென்னை மாவட்ட வளர்ச்சி மன்றக் சட்டமும் பெறப்பட்டன. மேற்கண்ட சட்டங்களில் பெரும் சிறப்பியல்புகள் சில : (i) வட்டாரங்களின் வளர்ச்சியும், அமைப்பும் ஒன்றுக்கொன்று இணைந்தவாறு ஊராட்சி ஒன்றியங்களைத் தோற்றுவித்தல். (ii) மாவட்டக் கழகங்களைக் கலைத்தல் (iii) ஆலோசனைக் குழுவாக மாவட்ட வளர்ச்சி மன்றத்தை உருவாக்குதல், மற்றும் (iv) ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் சிற்றூராட்சிகளிடம் பெரும்அளவில் மேம்பாட்டு மற்றும் சமூகநலச் செயல்பாடுகளை ஒப்படைத்தல். 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டமானது, 1958 – 92 ஆம் வரையிலான காலத்தில் 30 முறைக்கும் மேலான திருத்தங்களுக்குட்பட்டதாகும்.

2.19 முந்தைய சட்டங்களை ஒப்பிடுகையில் 1958 ஆம் ஆண்டுச் சட்டத்திற்குப் பல திருத்தங்கள் கொண்டு வரப்பெற்றுள்ளன. ஐந்து பல்வேறு பிரிவுகளாக அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன:

(i) நீதி சார்ந்த அதிகாரங்கள் உள்பட சிற்றூராட்சிகளுக்கான செயல்பாடுகளை நீக்கல்.

(ii) சமுதாய வளர்ச்சி மற்றும் தேசிய விரிவாக்கப்பணித் திட்டங்களை ஒப்படைத்தல் உள்பட ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதல் செய்கடமைகளை அளித்தல்.

(iii) மாவட்டக் கழகங்களிலிருந்து அரசுக்கு இரு செய்கடமைகள் மாற்றம் செய்யப்பட்டன. அவை (அ) மாவட்டப் நெடுஞ்சாலைகளை அமைத்துப பேணுதல் மற்றும் (ஆ) இடைநிலைப் பள்ளிகளை ஆரம்பித்துப் பேணுதல்.

(iv) மாவட்டக் கழகங்களிலிருந்து ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு இரு செய்கடமைகள் மாற்றம் செய்யப்பட்டன. அவை (i) தொடக்கப் பள்ளிகளை நிறுவிப் பேணுதல் மற்றும் (ii) அம்மை குத்துபவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(v) சிற்றூராட்சிகளிடமிருந்து ஊராட்சி ஒன்றியக்குழுக்களுக்கு பத்து செய்கடமைகள் மாற்றம் செய்யப்பட்டன. அவை வருமாறு : (1) மலேரியா மற்றும் கொள்ளை நோய் தொடர்பில் தடுப்பு மற்றும் பொதுச் சுகாதார நடவடிக்கைகள். (2) மருந்தகங்களை நிறுவிப் பேணுதல் (3) தாய், சேய் நல மையங்களை நிறுவிப் பேணுதல் (4) தொடக்கப் பள்ளிகளை ஆரம்பித்து பேணுதல் (5) கால்நடை மருத்துவ உதவி (6) பிறப்பு, இறப்புகளைப் பதிதல் (7) சத்திரங்களை நிறுவிப் பேணுதல் (8) கிராமப்புற மனைகளை விரிவாக்கிக் கட்டடங்களைச் சீர்படுத்துதல். (9) வேளாண்மை மற்றும் வேளாண்மை கிடங்குகளை மேம்படுத்தி, வேளாண் கண்காட்சிகளை நடத்துதல், மற்றும் (10) ஊரகத் தொழில்களை மேம்படுத்துதல். 1950 ஆம் ஆண்டுச் சட்டத்தில், வரிசை எண். 1 இல் உள்ள செயல்பாடு மட்டுமே கடப்பாடுடையதாகும். மற்றவை சிற்றூராட்சிகளுக்கு விருப்புரிமை மற்றும் விருப்பத்துக்குரிய பணிகளாகும்.

2.20. 1975 ஆம் ஆண்டு வரை தேர்தல்கள் வாயிலாக இருபடிநிலை அமைப்பானது குடியாட்சி வழியில் செயற்படுத்தப்பட்டது. ஊராட்சி மற்றும் ஒன்றியங்களின் பதவிக்காலம் முறையே 12–9–79 மற்றும் 1–2–77 வரை அனுமதிக்கப்பட்டது. அதன்பின், இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். 1986 ஆம் ஆண்டில் ஊராட்சித் தேர்தல்கள் நடைபெற்றன. இந்த அமைப்புகளுக்கு மறுபடியும் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு அவர்களின் பதவிக் காலம் 1991 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் இயற்றப்பட்ட பின்னர், உள்ளாட்சி அமைப்புகளுக்கானத் தேர்தல் 1996 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வரை நடைபெற்றது.

VII 1989 - 96

2.21. 1989 ஆம் ஆண்டிலிருந்து இந்திய அரசானது, ஊராட்சிகள் தொடர்பில் தனியானதொரு பாகமாகச் சேர்ப்பதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த நடவடிக்கைகளைத் தொடங்கியது. தமிழ்நாடு அரசானது அரசமைப்புத் திருத்தத்திற்குட்பட்டு ஊராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் கருத்தினை ஏற்றுக் கொண்டபோதிலும், மாநில அரசுகளால் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்கான இம்முயற்சியானது அடிப்படையானதாகும். 1989 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் மாநிலங்களவையில் அரசமைப்புச் சட்டத் திருத்தம் தோல்வியடைந்தமையால், கொண்டு வரப்பட்டபோதிலும். தமிழ்நாடு அரசானது, பஞ்சாயத் ராஜ் நிறுவனங்களை வலுப்படுத்தும் நோக்கில் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்திற்குத் திருத்தங்களை மேற்கொண்டது. திருத்தங்களின் முக்கியமான சிறப்பியல்புகள் (i) ஐந்தாண்டுக் கொருமுறை ஊராட்சிகளுக்கு தேர்தல் நடத்த வாக்களிப்பு மூலம் உரிமை அளித்தல் (ii) மகளிருக்கு இடஒதுக்கீடு (iii) உள்ளாட்சி மன்றங்களின் நிதிநிலைமையை ஆய்வு செய்ய நிதி ஆணையத்தை அமைத்தல் (iv) ஊராட்சி மன்றங்களுக்கு வளர்ச்சித் திட்டங்களை ஒப்படைத்தல்.

2.22. 1989 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்குப்பின், 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், அரசமைப்புச் சட்டத்திருத்தம் சட்டவரைவு அறிமுகம் செய்யப் பெற்றும் அது பலனளிக்கவில்லை. இருந்தபோதிலும், 1992 ஆம் ஆண்டு,

73 ஆவது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 23–12–92 ஆம் நாள் கொண்டு வரப்பட்டது. மாநில அரசானது ஊராட்சிகள் தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் அல்லது மேற்காணும் அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்திற்கு இசைய ஊராட்சிகளுக்கு 24–4–94 ஆம் நாளுக்குள்ளாக புதிய சட்டமியற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. மாநிலத்தில் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் 22–4–94 அன்று முதல் செயற்பாட்டிற்குக் கொண்டு வரப்பெற்றது. 1994 ஆம் ஆண்டுச் சட்டமானது தமிழ்நாட்டில் பஞ்சாயத்து ராஜ் திட்டங்களுக்கு பல மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது அவை : (அ) ஊராட்சிகளில் 3 அடுக்கு முறையை அறிமுகப்படுத்துதல் (ஆ) ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிக்கு மறைமுகத் தேர்தலை மீண்டும் அறிமுகப்படுத்துதல் (இ) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு அம்மக்கள் தொகையின் அடிப்படையில் இடஒதுக்கிடு செய்வதை அறிமுகப்படுத்துதல். (ஈ) தாழ்ததப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் மகளிர் உட்பட, மகளிருக்கான இடஒதுக்கீடுத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல் (உ) சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்டத் திற்கான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல் (ஊ) மாவட்டத் திட்டக்குழு அமைத்தல் (எ) மாநில தேர்தல் ஆணையம், மாநில நிதி ஆணையம் ஆகியவற்றை நிறுவுதல்.

2.23. 1994 ஆம் ஆண்டு ஏப்ரலில் சட்டமியற்றப்பட்டாலும், 1996 ஆம் ஆண்டு மே வரை, ஊராட்சித் தேர்தலை நடத்துவதற்கு உள்ளபடியான முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. 1996 ஆம் ஆண்டு மே திங்களில், புதிய அரசு அமைக்கப்பட்டவுடனே, 1996 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களின் ஊரக, நகர உள்ளாட்சி மன்றங்களுக்கு எல்லோரும் எதிர்பார்த்தவாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கான எல்லா நிலைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது.

2.24. ஒரு நூற்றாண்டுக்கு மேல் மேற்காணும் வரலாற்று தொலைநோக்குப் பரவுதலானது பல வழக்கெழு வினாக்களையும் சிறப்பியல்புகளையும் கொண்டு வந்துள்ளது. அவை தற்போதைய சூழமைவிற்குச் சமமானதும் தொடர்புடையதும் ஆகும். (1) பன்முகப்படுத்துதலும் மக்களாட்சியின் முக்கியத்துவம் ஆகியவற்றின் நிலைகள் காலந்தோறும் வேறுபட்டு வந்திருக்கின்றன. இரண்டுபடி நிலை ஊராட்சி அமைப்பானது நீண்டு நிலைத்திருக்கக்கூடியது என்பதையும் திறம்படச் செயற்படுத்துதற்குரியது என்பதையும் தமிழ்நாடு அரசின் அனுபவம், எடுத்துக் காட்டுகின்றது. மாவட்ட அளவிலான மூன்றாம்படி நிலையானது வாய்ப்பு நலமற்ற ஒன்றாக உள்ளது. தற்பொழுது மாவட்ட ஊராட்சிக்குச் செயற்படுத்தும் அதிகாரத்தை தவிர்த்து ஆலோசனை வழங்கும் அதிகாரம் அளிக்கப்படவுள்ளதால் இப்படி நிலையானது. இம்மாநிலத்தில் எவ்வாறு செயற்படவுள்ளது என்பது காணப்பட வேண்டியதாகும். (2) கடந்த காலங்கள் முழுவதும், உள்ளாட்சி மன்றங்கள். அவற்றிற்குட்பட்ட பகுதிகளில் குறிப்பிட்ட அடிப்படை வசதிகளையும், உள்கட்டமைப்புகளையும் அளிப்பதற்கான முகமைகளாகக் கருதப்பட்டு வந்துள்ளன. அரசியலமைப்புத் திருத்தமானது 29 நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில், அவற்றின் மாநிலச் சட்டமானது மூன்றுபடி நிலை அமைப்பு ஒவ்வொன்றிடமும் ஒப்படைக்கப்பட வேண்டிய அதிகாரங்களைப் பற்றிக் குறிப்பாகக் காட்ட வேண்டுவதுடன் 1994 ஆம் ஆண்டுச் சட்டமானது ஊராட்சிகளுக்கு முந்தைய கடமைக் கூறுகள், அதிகாரங்கள், பொறுப்புகள் ஆகியவற்றை அளிப்பதைத் தவிர்த்துள்ளது. (3) லார்டு ரிப்பன் அவர்கள் காலம் முதலாகப் நிதிக் கட்டுப்பாட்டு நிலையானது பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் எளிதில் இயங்கும் நடவடிக்கைகளையும், அவற்றின் நிலைத்த தன்மையையும் வரையறுத்துள்ளன. இவை அரசு மானியங்களையே நம்பியிருந்தன. தற்போதும் இச்சூழ்நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. ஊராட்சிகளால் எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் நிருவாகம், செயலாற்றும் பொறுப்புகள் ஆகியவற்றை சமாளிப்பதற்கு நிதி அதிகாரங்களைப் பரவலாக்குதல். சரிசம அளவில் போதுமானதாக இருக்கும் என்பது இனிமேல் தான் காண வேண்டும். (4) கடந்த காலங்களில் உள்ளாட்சி மன்றங்கள் மீது அரசு மிகப்பெரிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அது போன்ற கட்டுப்பாடு அதிகமில்லை என்றாலும் புதிய முறையாட்சியில் இன்னும் நிலைத்திருக்கிறது. உள்ளாட்சி மன்றங்களின் ஆய்வாளர்களுக்கு மிகப்பரந்த அதிகாரங்கள் உள்ளன. உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படவிருக்கும் மாற்றுப் பணிக்குச் செல்லும் அரசுப் புதிய கடமைகளுக்காக மாற்றுப் பணியில் செல்லும் அரசுப் பணியாளர்கள் நாடோடிப் பறவைகளைப் போன்று குறைந்த வேலையில் அர்ப்பணித்துக் கொள்ளலாம். (5) தேர்தல் தொடர்ச்சியாக நடை பெறவில்லை என்பதால் உள்ளாட்சி மன்றங்களின் மக்களாட்சியின் கொள்கை அழிக்கப்படுகிறது. சட்டத்தில் போற்றி வைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் ஒதுக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கான காப்பு விதிகள் தேவைப்படுகின்றன.

2.25. மேற்கூறிய பின்னனியில் இக்குழு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் ஒப்படைப்பு குறித்த பரிந்துரைகளை பின்வரும் இயல்களில் அளிக்கிறது.

அணுகுமுறை

இயல் III

அணுகு முறை

பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படவுள்ள செய்கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் பற்றித் தன்னுடைய பரிந்துரையை முடிவு செய்வதற்கு முன், இக்குழுவானது, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கான அரசமைப்புச் சட்டத் திருத்தம் மற்றும் மாநிலச் சட்டம் மற்றும் 1996–ஆம் ஆண்டு அக்டோபர் 31–ஆம் நாள் மற்றும் நவம்பர் 1–ஆம் நாள் நடைபெற்ற துறைகள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் சார்பாளர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டுள்ளது. இது தவிர, இக்குழு, தன்னுடைய பரிந்துரைகளை முறையாக வகுப்பதற்காகச் சில அடிப்படைத் தத்துவங்களைத் தாமே உருவாக்கியது. ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரங்களையும், செய்கடமைகளையும் ஒப்படைத்தல் குறித்த முதல் அறிக்கையில் (1977 ஜனவரித் திங்கள்) குழுவால் பின்பற்றப்பட்ட அணுகுமுறை பொதுவாக எடுத்துக்காட்டப் பட்டது. அப்போதிலிருந்து, தொடர்புடைய சில வளர்ச்சிகள் ஏற்பட்டன. அவைபற்றிய விவரங்களை, குழு, இந்த இறுதி அறிக்கையில் சேர்த்துள்ளது. இவையாவும் சுருக்கமாகக் கீழே கூறப்பட்டுள்ளது.

தேசிய அளவிலான கொள்கைகள்

3.2. இந்தியா, நெடிய மற்றும் மாறுபாடுகளுடைய பஞ்சாயத்து ஆட்சி நிறுவன வரலாற்றை உடையது. அவை தொடங்கப்பட்டு, உறுதியான வளர்ப்பு முறையின்மை மற்றும் தேசிய சட்ட உதவி மற்றும் ஆணையுரிமையுடன் கூடிய உரியபேணுகை, செய்கடமைகள் மற்றும் நிதிவள ஆதாரங்கள் இன்மை காரணமாகச் சோர்வடைய இடமேற்பட்டுவிட்டது. இவையன்றி, குடியாட்சி முறைக்கு அடிப்படையாக இருக்கும் காலமுறையிலான தேர்தல்கள் நீண்டகாலமாக நடத்தப்படாத நிலையானது, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் சரிவுக்கு வழிவகுத்து விட்டது. இக்காரணக் கூறுகள்யாவும், சட்டத் திருத்தத்தில் கூறப்பட்டுள்ள மறுப்புகள் மற்றும் காரணங்கள் அறிக்கையிலிருந்து தெளிவாக உணரப்படுகின்றன. அரசமைப்புச் சட்டத்திற்குப் பின்வரும் 73–ஆவது திருத்தத்தினை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் நீண்டகாலமாகவே இருந்து வந்தாலும், காலத்தில் தேர்தல்கள் நடத்தாமை, நீடித்த தள்ளிவைப்பு, ஆதி திராவிட வகுப்பினர், ஆதிதிராவிட பழங்குடியினர் மற்றும் பெண்கள் போன்ற நலிந்த பிரிவினருக்கான சார்பாண்மைப் பற்றாக்குறை, தேசிய அதிகார ஒப்படைப்பின்மை, நிதிவள ஆதாரங்கள் இன்மை ஆகியவை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வளம் பெறக்கூடிய மற்றும் ஒத்துணர்வுமிக்க மக்கள் மன்றங்களின் சமுதாயப் படி நிலையையும், மதிப்பையும் பெற இயலாமற் போய்விட்டது.

ஊராட்சிகளை அமைத்து, அவை தன்னாட்சிப் பிரிவுகளாகச் செயலாற்றும் வகையில் தேவையான அதிகாரங்களையும், ஆணையுரிமைகளையும் அவற்றுக்கு வழங்க, மாநில அரசு நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசமைப்புச் சட்டத்தின் 40–ஆவது பிரிவுக்கூறு வரையறுத்துள்ளது. கடந்த நாற்பது ஆண்டுகால அனுபவத்தின் அடிப்படையிலும் காணப்பெற்ற குறைபாடுகளைக் கருத்திற்கொண்டும், உறுதிப்பாடு, தடையற்ற இணைப்பு மற்றும் வலிவூட்டல் ஆகியவற்றைப் பஞ்சாயத் ராஜ் நிறுவனங்களுக்கு அளிக்க அந்நிறுவனங்களின் அடிப்படையான மற்றும் முக்கியமான சில சிறப்பியல்புகளைப் பற்றி அரசமைப்புச் சட்டத்தில் பொதித்து வைக்க வேண்டுவதன் அவசரத் தேவை உள்ளதெனக் கருதப்பட்டது.

"அதன்படி, ஊர் ஒன்றில் அல்லது பல ஊர்கள் அமைந்த ஒரு தொகுப்பில், மற்றவற்றுக்கிடையே ஊர் சபை ஒன்றினை ஏற்படுத்த அரசமைப்புச் சட்டத்தில் ஊராட்சிகள் தொடர்பில் புதிய பகுதி ஒன்றினைச் சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஊர் மற்றும் பிற நிலையில் அல்லது நிலைகளில் ஊராட்சிகளை அமைத்தல், பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதிக்காகத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல் ஆகியவை தொடர்பில் அதிகாரங்களையும், பொறுப்புகளையும் மாநில சட்டமன்றம் அளித்தல்; மாநில தொகுதியிலிருந்து ஊராட்சிகளுக்கு உதவி மானியங்களுக்காக மாநிலச் சட்டமன்றங்களிலிருந்து உரிமை பெறுவதன் வாயிலாக, மற்றும் அதே போன்று குறிப்பிட்ட வரிகள், தீர்வைகள், சாலைச் சுரங்கம் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றால் கிடைக்கும் வருவாயை ஊராட்சிகளிடம் அளித்தல்."

3.3 பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்களையும் செய்கடமைகளையும் அளிப்பதற்கான சட்ட உரிமைக் கட்டளையின் நோக்கத்தையும் வேகத்தையும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 73–ஆவது மற்றும் 74–ஆவது திருத்தங்களுக்குத் தொடர்புடைய பின்வரும் ஏற்பாடுகளிலிருந்து முறைப்படி மதிப்பிடலாம்.

பிரிவு 243 "G"

அரசமைப்புச் சட்டத்திலுள்ள வழிவகைகளுக்குட்பட்டு, மாநிலச் சட்ட மன்றமானது, சட்டத்தின் வாயிலாக ஊராட்சி தன்னாட்சி நிறுவனமாகச் செயற்படத் தேவையானதாக இருக்கக்கூடிய அதிகாரங்களையும், ஆணையுரிமையையும் அதற்கு வழங்கலாம். அச்சட்டமானது, அதில் குறிப்பிடக் கூடிய வரையறைகளுக்குட்பட்டு, பின்வருவன தொடர்பில், உரிய நிலையில் ஊராட்சிகளிடம் அதிகாரங்களையும், பொறுப்புகளையும் ஒப்படைப்பதற்கான வழிவகைகளைக் கொண்டிருக்கலாம்.

(அ) பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் தயாரித்தல்.

(ஆ) பதினோராவது அட்டவணையில் பட்டியலிடப்பட்ட பொருள்களுக்குத் தொடர்புள்ளவை உள்பட அவற்றிடம் ஒப்படைக்கப்படக் கூடிய பொருளாதார வளர்ச்சிகள் மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைச் செயற்படுத்துதல்.

(74–ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்) மாவட்டத் திட்டமிடலுக்கும், குழு அமைத்தலுக்கும், இயங்கலுக்கும் வகை செய்கிறது.

பிரிவு 243 "ZD"

"ஒவ்வொரு மாநிலத்திலும், மாவட்ட நிலையில், மாவட்டம் முழுமைக்கும் வரைவு வளர்ச்சித் திட்டம் தயாரிக்க, மாவட்டத்தில், ஊராட்சிகளாலும், நகராட்சிகளாலும் தயாரிக்கப்படும் திட்டங்களை ஒருங்கிணைக்க, மாவட்டத் திட்டமிடல் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

மாவட்டத் திட்டமிடல் குழு ஒவ்வொன்றும் வளர்ச்சித் திட்ட வரைவு தயாரிப்பதில்.

(அ) (i) நிலம் சார்ந்த திட்டம், நீர் மற்றும் இயற்பியல் சார்ந்த மற்றும் இயற்கை வள ஆதாரங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் உள்ளமைப்பு மற்றும் சுற்றுச்சுழல் பாதுகாப்பு உள்பட ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக் கிடையிலான பொது நலன் குறித்த பொருள்களில்,

(ii) நிதியோ அல்லது பிறவகையோ, கிடைக்கக்கூடிய வள ஆதாரங்களின் அளவு மற்றும் வகையில் கவனம் கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) ஆளுநரால், அரசாணையில் குறிப்பிடப்படும் நிறுவனங்களுடனும், அமைப்பு களுடனும் கலந்தறியப்பட வேண்டும்.

மாவட்டத் திட்டமிடல் குழு ஒவ்வொன்றின் தலைவரும், அக்குழுவினால் பரிந்துரைக்கப்படும் வளர்ச்சித் திட்டத்தினை மாநில அரசுக்கு அனுப்ப வேண்டும்.

3.4 ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படும் செய்கடமைகள் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள், அவற்றை மக்களாட்சி நிறுவனமாகச் செயற்பட இயல்விக்கும் வகையில் இருக்க வேண்டுமென்பதே அரசமைப்புச் சட்டத்தின் இலக்காகும். இந்த அரசமைப்புச் சட்டத்தின் இலக்கானது, வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். இதனை இங்கு மீண்டும் குறிப்பிடக் காரணம் என்னவெனில், அதன் முழுச் சிறப்பும் மூலக்கருத்தும் இன்னும் அனைவராலும் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படாததே யாகும்.

3.5. மேலும், விடுதலை பெற்ற நாள் முதல், நம்முடைய வளர்ச்சியின் அனுபவமும் அடிமட்டத்திலிருந்து குடியாட்சியைப் பன்முகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை நன்கு புலப்படுத்தியது. தேசிய வளர்ச்சி மன்றமும், திட்டக் குழுவும் வளர்ச்சி நோக்கங்களுக்காக ஊராட்சிகளின் பங்கினை வலியுறுத்தியது. கிராம அளவில் திட்டமிடல் மற்றும்

மக்களின் ஈடுபாடு தொடர்பில் தேசிய வளர்ச்சி மன்றத்தால் 1993–இல் அமைக்கப்பட்டக் குழுவானது மைய அல்லது மாநில அரசுகளால் வெளியிடப்படும் வழிகாட்டல் நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்குட்பட்டு, ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டம், குறைந்த பட்ச தேவைத் திட்டம் மற்றும் உள்ளூர் வளர்ச்சிப் பணிகள், அதற்கே உரிய மற்றும் முழுமையான நிறைவேற்றலுக்காக குறைந்தபட்ச தேவைத் திட்டமிடலிடம், ஒப்படைக்கப்பட பரிந்துரைத்தது. தேசிய வளர்ச்சி மன்றம் மேலும் குறிப்பிடுவதாவது :

" பன்முகப்படுத்தப்பட்ட திட்டமிடல் வெற்றி பெற, அதிகாரப் பன்முகப்படுத்துதலும் நிதியும் மட்டுமே அவற்றுக்குப் போதாது. அதனிடம் முழுமையான நிறைவேற்றலுக்குரிய ஒருமித்தக் கருத்தும் உறுதிப்பாடும் இருத்தல் வேண்டும். நுண் திட்டமிடல் அமைப்பிடம் ஆணையுரிமையையும், அதிகாரங்களையும் ஒப்படைப்பதில் தொழில்முறைத் துறைகளின் அல்லது உயர்நிலை அமைப்புகளின் தனிச் சிறப்புரிமையாவும் கைவிடப்பட வேண்டும் எனக் குழு பரிந்துரைக்கிறது. இன்று, அதிகாரத்தையும், செயலையும் கைவிட பொதுவாக விருப்பமின்மை காணப்படுகிறது. அவ்வாறு கைவிடப்பட்டாலும், போட்டி முகமைகள் வாயிலாக இணையொத்த செயற்பாட்டுக்கு ஆற்றல் முரண்பாட்டுச் சூழ்நிலையை உருவாக்குவதன் வகையில் ஏதேனும் தடை ஏற்படுகிறது."

3.6. நிருவாக முகமைகள் வாயிலாகத் தொடக்கத்தில் நிறைவேற்றப்பட்ட ஊரக மற்றும் சமூக வளர்ச்சித் திட்டத் துறையில் ஏற்பட்ட கடந்த கால அனுபவத்தை ஆராய்ந்து திட்டக்குழுவின் 8–ஆவது திட்டத்தில் பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்தியுள்ளது.

"எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மக்கள் இயக்கம் ஒன்றை வளர்த்தல் இன்றியமையாததாகும். மக்களின் முயற்சியும் பங்களிப்பும் வளர்ச்சி முறையின் அடிப்படைக் கூறாக இருக்க வேண்டும். கல்வி (குறிப்பாகக் கல்வியறிவு, உடல்நலம், குடும்பநலம், நில மேம்பாடு, நிலப் பயன்பாடு, சிறு பாசனம்) நீர்ப் பிடிப்பு பகுதி மேலாண்மை, தரிசு நிலங்களை மீட்டல், காடு வளர்ப்பு, கால் நடைப் பராமரிப்பு, பால் பண்ணை, மீன் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு முதலியவற்றில் சமுதாயத்தில் பதில் சொல்லும் பொறுப்புடைய மக்கள் மன்றங்களை உருவாக்குவதன் மூலம் உயர்வு பெறலாம்."

"இத்திட்டங்களுடன், திட்ட குழுவானது, மாவட்ட, வட்டார மற்றும் ஊர் நிலைகளிலுள்ள பல்வேறு மக்கள் மன்றங்களை உருவாக்கும் அல்லது வலிவூட்டும் குறிக்கோளுடைய நிறுவனமாகச் செயல்பட வழிவகை செய்துள்ளது."

"அரசின் பங்கானது, குறிப்பாக, ஊரகப் பகுதிகளில் அமைப்பு வழியாகச் செயலாற்றுகிற ஏற்புடைய உள்ளமைப்புகளை உருவாக்குவதன் வாயிலாக மக்களின் ஈடுபாட்டுக்குத் துணையாக இருப்பதாகும். இந்த அமைப்புகள் மக்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வரும் அதிகத் தேவையை உடைய மாநிலங்களில் இந்நிலையங்கள் மிகவும் நலிந்த நிலையில் உள்ளன."

"மாநிலங்களில், மாவட்டங்களில், வட்டாரங்களில், இன்னும் சொல்லப்போனால், ஊர்களில் உள்ள நிருவாகப் படிநிலை அமைப்பு முறை மாற்றப்பட வேண்டும். வெவ்வேறு துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம்."

3.7. ஜனவரித் திங்கள் 16–ஆம் நாளன்று நடைபெற்ற கூட்டத்தில் தேசிய வளர்ச்சி மன்றத்தால் ஏற்கப்பட்ட ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குரிய (1997–2002) அணுகு முறையில் குறிப்பிடப்பட்டுள்ள சில பகுதிகள் கீழேக் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனெனில், அவை, இக்குழு தன்னுடைய பரிந்துரைகளை உருவாக்குவதில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

"அதிகார பரவலாக்குதலும் மற்றும் தன்னாட்சி வழங்குதலும் மாநில அளவில் நின்றுவிடுவதில்லை. ஆனால், இவை வட்டார மற்றும் துணை வட்டார நிலைகளில் மாநில அரசுகளால் மேற்கொண்டும் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. பஞ்சாயத்து ஆட்சி மூலமாக குடியாட்சி பன்முகப்படுத்துதல் 1950களில் சில மாநிலங்களில் பின்பற்றப்பட்டு வந்தது. எனினும், 1960களின் இடைப்பட்ட காலத்தில் இவ் அமைப்புகளின் செய்கடமைகளில் தொய்வு ஏற்பட்டது. இவ்வமைப்புகளைப் புத்துயிர் ஊட்ட 1970 மற்றும் 1980 களில் பலமுறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால், பயன் அரிதாக இருந்தது. எனினும், அரசிலமைப்புத் திருத்தச் சட்டம் (1992) இயற்றப்பட்டதும், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் உயிர்ப்பிக்கப்பட்டு குடியாட்சி பன்முகப்படுத்தல் முறை ஏற்பட்டது.

"பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் தயாரித்து அவற்றைச் செயற்படுத்தும் பொறுப்புடன் உள்ளாட்சி நிறுவனங்களாகச் செயற்பட ஏதுவாக அதிகாரம் மற்றும் ஆணையுரிமையுடன் கூடிய அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். ஒன்பதாவது திட்டத்தில், பதினோராவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 29 இனங்கள் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு மாற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு ஏற்றவாறு வள ஆதாரங்களும் மாற்றப்பட வேண்டும். இது தவிர, அவற்றுக்கு பணியாளர்கள் மற்றும் நிருவாக ஆதரவும் தேவைப்படும். குறிப்பிட்ட பணிகளில்/துறைகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் அப்பணியுடன் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு மாற்றப்பட வேண்டும். சுருங்கச் சொன்னால், புதிதாகப் பணியாள்ர்களை அமர்த்துவதைவிட பல்வேறு அரசுத் துறைகளில் உள்ள பணியாளர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை ஏற்படும். மாநில அரசு தொகுநிதி மற்றும் மைய அரசு தொடங்கிய திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு மைய அரசிடமிருந்து பெறப்படும் ஒதுக்கீடுகள் தவிர, தாங்களே வருவாய் உயர்வு செய்து கொள்ளும் அதிகாரங்கள் ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். மொத்தத்தில், ஊராட்சிகள் மிகக்குறைந்த வருவாய்ப் பெருக்க அதிகாரங்களையே கொண்டுள்ளதால், அவை, மாநிலங்களின் மான்யங்களையே பெரும்பாலும் நம்பியுள்ளன. பஞ்சாயத்து அமைப்புகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் நிதிநிலையோ மிகவும் மோசமான நிலையிலுள்ளது."

"எனவே, உள்ளாட்சி மன்றங்களிடம் குறிப்பிட்ட பொறுப்புகளும் வள ஆதாரங்களும் இருத்தல் மிகவும் இன்றியமையாததாகும். உண்மையில், மைய அரசு தொடங்கிய திட்டங்கள் பஞ்சயாத்து ஆட்சி நிறுவனங்களிடம் நேரிடையாகப் சென்றடைய வேண்டும். மேலும், மாநிலங்களின் ஆண்டுத் திட்டமானது, அவற்றின் மொத்த திட்டத்தில் (பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளின்) பஞ்சாயத்து ஆட்சியின் பங்கினைக் குறிப்பிடவேண்டும். எனினும், மாநில வள ஆதாரங்களை மாற்றுதல் பஞ்சாயத்து ஆட்சி நோக்கத்தை நிறைவு செய்யாது. பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் உள்ளூர்வள ஆதாரங்களைப் புழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டும். பல்வேறு நிலைகளில், வரிகளையும் மேல்வரிகளையும் விதிக்க, அவற்றுக்கு மாநிலச் சட்டங்கள் அதிகாரமளிக்க வேண்டும். இது, ஒன்பதாவது திட்டத்தில் முக்கிய முன்னுரிமையாக இருக்கும்.

"ஆகையால், மூன்றடுக்குகள் ஒவ்வொன்றுக்கும் பங்கினை அளிக்க, பொதுத் தன்மையிலான கொள்கைகள் சில விதிக்கப்பட வேண்டும். உள்ளபடியான பொறுப்புரிமை ஒப்படைப்பு என்பது கீழ்நிலையால் செய்யப்பட வேண்டிய ஒன்று அதே நிலையால் செய்யப்பட வேண்டுமேயன்றி, மேல்நிலையால் அல்ல எனும் விதியின்படி தான் அமைந்திருக்க முடியும். சபையானது, முன்னுரிமைகளைப் பட்டியலிட்டு, பல்வேறு திட்டங்களுக்கான பயனாளர்களைத் தெரிவு செய்வதில் உதவும். இவ்விதத்தில், மக்களின் பேரார்வம் தெளிவாகத் தெரியவரும். அதன் பின்னர், இடைநிலை அளவிலுள்ள திட்டங்களுடன் சேர்ந்து, இறுதியாக மாவட்டத் திட்டத்தில் இணையக்கூடியதாக உள்ள கிராமத் திட்டங்களிலிருந்து திட்டமிடல் முறை தொடங்கும்."

ஒவ்வொரு நிலையிலும் கிடைக்கக்கூடிய வள ஆதாரங்களைக் கருத்திற் கொண்டு, கண்டறியப்பட்ட முன்னுரிமை அடிப்படையில் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பன்முகப்படுத்தப்பட்ட திட்டமிடலுக்கான வள ஆதாரங்களை குறிப்பிட்டவாறு ஒதுக்கீடு செய்வதைப் பொறுத்தமட்டில், இதற்கெனத் திட்ட வள ஆதாரங்களில் 41 விழுக்காடு ஒதுக்கப்பட வேண்டுமெனவும், தேசிய வளர்ச்சிக் குழு பரிந்துரையானது, ஒன்பதாவது திட்டத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். பிணைப்பில்லா நிதியாகவும், ஊக்கமானியமாகவும், பஞ்சாயத்து ஆட்சி அமைப்பால் உயர்த்தப்படும் பங்குத் தொகைக்குப் பொருந்தக் கூடியவாறு இது ஒரு வீதத்தைச் சேர்க்கும். அதன் பின்னர், மாநில அளவிலான துறைக்குரிய ஒதுக்கீடுகள். மாவட்ட நிலைக்குக் கீழே உள்ளவற்றால் விடுக்கப்படும் வேண்டுகைகளின் அடிப்படையில் தேசிய முன்னுரிமைகளாகக் கருத்திற்கொண்டும் இருக்க வேண்டும். இவ்வகையில், வள ஆதாரங்களின் மற்றும் தேவைகளின் முழுமையை, ஒவ்வோர் அடுக்கிலும் பல்வேறு துறைகளின் கூடுகை, ஏழ்மைக் குறைப்பு மற்றும் பகுதி வளர்ச்சித் திட்டங் களுக்கான பாதுகாப்பை அளிக்கும். திட்ட ஒருங்கிணைப்பானது. ஊர்நிலையிலிருந்து மாநில நிலை வகையிலான பகுதித் திட்டங்களின் ஒருங்கிணைப்பினால் எளிதாக்கப்படும்.

3.8. மைய ஊரக வளர்ச்சி அமைச்சகமும் பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துகிறது. "சமூகத் துறை மேம்பாட்டுக்கான நிதியளிப்பு முறையிலும் நிதி ஒப்படைப்பு முறையிலும் கண்டிப்பான மாற்றம் தேவைப்படுகிறது. இப்போது, இந்நிதிகள் மாநிலங்கள்/மாவட்டங்கள் வாயிலாக தடையின்றி கிடைக்கின்றன. ஒதுக்கப்பட்ட கடமைப்

பொறுப்புகளின் இசைவிணக்கத்தையும், தொடக்க முயற்சியையும் காலம் தவறாச் செயற்பாட்டையும் அனுமதிக்காது. மாவட்ட, வட்டார மற்றும் கிராம நிலையில் ஊராட்சிகள் அமைப்புடன், சமூகத் துறைத் திட்டங்களுக்கெனச் செயல் குறிக்கப்பட்ட திட்டம் சார்ந்த மற்றும் திட்டம் சாராத நிதிகள் உரிய நிலையில் இந்த ஊராட்சிகளுக்கு மாற்றப்பட்டு அவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்.

3.9 இவையே ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரங்களை ஒப்படைக்கும் பொருளுக்குப் பொருத்தமானதாகும் குறிப்பிடத்தக்க மேலும் சில வளர்ச்சிகளாகும். முதலாவது, அண்டை மாநிலமான கேரளத்தில் மேற்கொள்ளப்படும் சில முயற்சிகளாகும். அடுத்தது, 1996 ஆம் ஆண்டு டிசம்பர் 24–அன்று குடியரசுத் தலைவரால் ஒப்புதலளிக்கப்பட்ட ஊராட்சிகள் (அட்டவணையிடப்பட்ட பகுதிகளுக்கு விரிவாக்கம்) சட்டத்தின் வழிவகைகளுக்குத் தொடர்புடைய நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டமாகும்.

(அ) கேரளத்தின் தொடக்க முயற்சிகள்

அண்மையில், ஒன்பதாவது திட்டத்தைக் கீழ் நிலையிலிருந்து மேல்நிலை வரையில் கிராம சபையிலிருந்து மாவட்ட நிலைவரை உருவாக்க, மக்கள் இயக்கத்திற்காக மாநில அளவிலான வழிகாட்டல் குழு ஒன்றினை அமைத்துள்ளது. இவ்வழிகாட்டல் குழுவானது கேரளாவின் அனைத்து அரசியல் கட்சிகளின் சார்பாளர்களையும், அதனுடைய நாடாளுமன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோரையும் முதுநிலை நிருவாகிகளையும், மாவட்ட ஆட்சியாளர்களையும், கல்வியாளர்களையும், அறிவியலாளர்களையும், சமூக சேவகர்களையும் கொண்டது. இக்குழு பெருவாரியான உறுப்பினர்களை கொண்ட பெரிய குழு என்று சொன்ன போதிலும் இந்தவழி காட்டும் குழு, வலிதான போக்கினையும் நடைமுறையையும் எளிதாக்கலுக்கு இக்குழுவின் ஆலோசனையும், வழி காட்டுதலும் அவசியமாகும். (அ) விடுதலைக்குப் பின்னர் கிராமம் மற்றும் மக்களின் நிலை என்ன? (ஆ) கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன? (இ) பொருளாதார மற்றும் சமூகத் துறையில் உடனடியான கடமைப் பொறுப்பாக இருக்கக் கூடியதாக உள்ளூர் சமுதாயத்தால் கருதப்படுவதென்ன? என்பன பற்றிக் கலந்தாய்ந்து எழுத்தில் வடிக்கு மாநிலத்தின் ஒவ்வொரு மூலை முடிக்கிலும் அனைத்து ஊர்ச்சபைகளின் கூட்டங்களை நடத்துவதே இதன் முதற்படியாகும். அதன் பின்னர், கிராம சபைகளால் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கைகளும் திட்டங்களும் முன்னுரிமை வரிசையை அமைக்கவும், கிடைக்கக்கூடியதாக உள்ள வள ஆதாரங்களுக்கிணங்க அவற்றைப் பொருத்தவும் ஊராட்சி முன்வைக்கப்படவேண்டும். ஊராட்சிகளின் வளர்ச்சித் திட்டங்களுக்காகப் போதிய வள ஆதாரங்கள் அளிக்கப்படுமெனக் கேரள அரசு குறிப்பிட்டுள்ளது. இந்நடைமுறையைச் சுணக்கமின்றித் தொடங்குவதற்கு ஊராட்சி ஒன்றுக்கு ரூ.10 இலட்சம் வீதம் ஒதுக்கீட்டுக்கு மாநில அரசு முன்னரே ஒப்புதல் அளித்துள்ளது. இது உழைப்பு, மூலப்பொருள் அல்லது ரொக்கம் எனும் முறையில் கூடுதலாக 25 விழுக்காடு அளவுக்கு உள்ளூர் சமுதாயப் பங்களிப்பதெனும் வரையறைக்குட்பட்டதாகும். கிராம சபைகள் மற்றும் ஊராட்சிகள் தங்களுடைய ஆழ்ந்தாராய்வு, தேவைகளின் மற்றும் கடமைப் பொறுப்புகளில் முன்னுரிமைகளையும் நிறைவேற்ற இயலவிக்கும் வகையில் தொண்டு அமைப்புகள் சமூக நடவடிக்கைக் குழுக்கள் மற்றும் கல்வி நிலையங்களிலிருந்து K.S.S.P. மற்றும் C.D.S.-இன் உதவியுடன் நுண்திறமுடைய 600 பேர்களை வழிகாட்டல் குழு திரட்டியது. அவர்களுக்கு தேவையான பயிற்சியும் அளிக்கப்பட்டு திட்டமிடல் பணிக்கு அனுப்பப்பட்டனர்.

(ஆ) நாடாளுமன்றத்தால் அட்டவணைப்பகுதிக்கெனச் சட்டமியற்றல்.

1996 – ஆம் ஆண்டு டிசம்பர் 24 – ஆம் நாளன்று நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டமானது அட்டவணைப் பகுதிகளில் உள்ள ஊராட்சி நிறுவனங்களின் தன்னாட்சித் தன்மைக்கு மேலும் அடிப்படை அளித்தது. இச்சட்டமானது, அட்டவணை சாராத பகுதிகளுக்கு இதே போன்ற அரசமைப்புத் சட்டத் திருத்தங்களுக்கு முன்னோடியாக விளங்க வேண்டும். இச்சட்டம் பின்வரும் ஏற்பாடுகளை உள்ளடக்கியது. (அ) வளர்ச்சித் திட்டங்களுக்காக அட்டவணைப் பகுதிகளில் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு முன் கிராமச்சபை அல்லது ஊராட்சிகள் உரிய நிலையில் கலந்தறியப்பட வேண்டும். (ஆ) அட்டவணைப்பகுதிகளில் உள்ள சிறிய நீர் நிலைகளை திட்டமிட்டு நிர்வகிக்கும் பணியினை உரிய நிலையில் ஊராட்சிகளிடம் அளிக்கப்பட வேண்டும். (இ) உரிய நிலையில் கிராமச் சபை அல்லது ஊராட்சிகளின் பரிந்துரையான்று சிறு கனிமப்பொருள்களுக்கான கனிமவள ஆய்வு உரிமம் அல்லது சுரங்க வேலை குத்ததை அளிப்பதற்கு முன்னுரிமைக் கட்டளைக்குரியதாக்கப்பட வேண்டும். (ஈ) உரிய நிலையில் செய்யப்படும் கிராமச்சபை அல்லது ஊராட்சிகளின் முன் பரிந்துரையானது ஏலம் வாயிலாக சிறு கனிம பொருள்களின் தன்னிலைப்படுத்தலுக்கான

சலுகை வழங்குவதற்கும் உரிமைக் கட்டளைக்குரியதாக்கப்பட வேண்டும். (உ) தன்னாட்சி நிறுவனங்களாகச் செயல்படும் வகையில் தேவையான அதிகாரங்களுடனும் ஆணையுரிமையுடனும் கூடியதாக அட்டவணைப் பகுதியிலுள்ள ஊராட்சிகளை உரியதாக்குகையில் மாநிலச்சட்டமானது உரிய நிலையில் ஊராட்சிகளும் கிராமச் சபைகளும் பின்வரும் அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். (1) மதுவிலைக்கைச் செயல்படுத்துவதற்கு அல்லது வெறியூட்டும் குடிவகை எதனையும் விற்பனை செய்தலை மற்றும் பயன்படுத்துதலை முறைப்படுத்துவதற்கு அல்லது கட்டுப்பட்டுவதற்குரிய அதிகாரம் (2) சிறுகாடுகளில் உற்பத்தியாகும் பொருள்களின் உடைமையுரிமை (3) அட்டவணைப் பகுதிகளில் உள்ள நிலத்தைச் சட்டத்திற்கு மாறாகக் கைமாற்றியிருந்தால் அதனை மீட்க உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்குரிய அதிகாரம். (4) ஊர் அங்காடிகளை மேலாட்சி செய்வதற்கான அதிகாரம் (5) ஆதிதிராவிட பழங்குடியினருக்குப் பணம் கடன் கொடுத்தலில் கட்டுப்பாட்டினைக் கையாள்வதற்கான அதிகாரம் (6) அனைத்து சமூகப்பிரிவுகளிலும் நிறுவனங்கள் மற்றும் கடமைப் பொறுப்பாளர்கள் மீது கட்டுப்பாட்டினைக் கொள்ளுதல் (7) உள்ளூர் திட்டங்கள் மற்றும் பழங்குடிப்பகுதித் துணைத்திட்டங்கள் உள்பட அத்திட்டங்களுக்கான வள ஆதாரங்களைக் கைக்கொள்வதற்கான அதிகாரம்.

மேலும்,' ஊராட்சிகளுக்கு அதிகாரங்களையும் ஆணையுரிமைகளையும் உரிதாக்கக்கூடிய மாநிலச் சட்டங்கள் மேல்நிலைமயிலுள்ள ஊராட்சிகள் கீழ் நிலையிலுள்ள எந்த ஒரு ஊராட்சி அல்லது ஊர்ச்சபையின் அதிகாரங்களையும், ஆணையுரிமையையும் மேற்கொள்ளாது என்பதை உறுதிசெய்து கொள்வதற்குரிய பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும்.

3.10. நாம், கடந்த கால அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும். வளர்ச்சித் திட்டத்தின் குறைந்த நிறைவேற்றலுக்கு திட்டமிடுவதிலும் செயலாற்றுவதிலும் உள்ள குறைபாடுகளே காரணமாகும் என்பதை மைய திட்டக்குழுவினால் நடத்தப்பட்ட மதிப்பீட்டு ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. மானியம் பற்றிய தேவைகள் இலக்குத் தொகுதிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்வு முறையை அறுதியிடுதல், செயற்பாட்டு முறைகளிலும் வழங்கல் முறைகளிலும் விருப்பேற்பு, செயல் மற்றும் நிதி முதலீடுகள் மற்றும் திட்டப்பயன்களின் தொடர் தன்மை முதலியவற்றை மதிப்பிடுவதில் போதிய கவனம் செலுத்தப்படுதல் அரிதாகவே காணப்படுகிறது. திட்டங்களைச் செயற்படுத்துதல், உயர் இயக்கச் செலவு, முறையற்ற இலக்கிடல் காரணமாக இலக்கிடப்படாத பகுதிகளுக்கு/ மக்களுக்குரிய பயன்களில் குறைவேற்படல், " விலக்கல் " எனும் இடரைத் தவிர்ப்பதற்காகப் பெரும் பகுதிக்கு / மக்கள் தொகைக்கு திட்டத்தை நீட்டித்தல், பல திட்டங்களில் வழங்கல் திட்டங்களில் போதாமை முதலியவற்றுக்கான விட்டுக் கொடுக்காத வழிமுறைகள் யாவும் நிறைவேற்றலுக்கு முந்திய செயல்களின் திட்டங்களில் உள்ள போதாமையே ஆகும். பயனுள்ள திட்ட உருவாக்கமானது, மாநிலங்களிடையே குடியேற்றச் செயல் இலக்கின் சமூகப் பொருளாதார மற்றும் பண்பாட்டு ஒப்பீடளவுக்கோடு மற்றும் திட்டங்களுடனும் அது இயங்கக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழல்களால் பாதிக்கப்படக்கூடிய அல்லது பாதிக்கப்பட்ட வழி பற்றி விரிவான ஆராய்ச்சியைத் தேவைப்படுத்துகிறது. இது, பல்வேறு செயல்முறைகளின் ஒப்புமை சார்ந்த பயன்பாட்டினையும், அவற்றின் செலவு மற்றும் இலக்குத் தொகுதிகளில் திட்டத்தில் ஏற்படக்கூடிய செயல்விளைவு முதலியவற்றை மதிப்பிட தொடர்புடைய முகமைகளை இயல்விக்கும். எனினும் பல்வேறு காரணங்களினால் இவ்வகையான விரிந்த பகுப்பாய்வு ஒருபோதும் இயலாத ஒன்றாகும். அதாவது, தேவைப்படும் விவர அடிப்படை கிடைக்காமை, காலம் மற்றும் வள ஆதாரங்களின் கட்டுப்பாட்டுவரி, திட்டம் மற்றும் அதன் சூழலுக்கிடையில் சிக்கலான இருபுற மாறுபாடு, உள்ளூர் நிலைமைகளில் மற்றும் அவை போன்றவற்றில் காணப்படும் வழக்கத்துக்கு மாறான மாறுபாடுகள் முதலியனவாகும். இந்த அனுபவத்திலிருந்து, திட்ட உருவாக்கத்திற்கு மிகுதியான செயல்முறை சார்ந்த அணுகுமுறை குறிப்பாக, சமூகத் துறைத் திட்டங்களுக்குத் தேவையாகும். இவ்வாணையம் இதுவரை ஏறத்தாழ 170 திட்டங்களை மதிப்பீடு செய்துள்ளது. மாநில, மைய அரசுகளும், மதிப்பீட்டு ஆராய்ச்சிகளின் முடிவுகள், சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும், நடைமுறையில் செயற்படத்தக்கதாகவும் உள்ள முறைகளைத் தெரிவு செய்ய திட்டம் – ஏற்பாடு முதலியலவற்றை நிறைவேற்றுவதாயிருந்தால் கணிசமான அளவில் காலத்தையும் வள ஆதாரங்களையும் மிச்சப்படுத்த இயலும். இது, மக்களின் ஒத்துழைப்புக்கான தேவை பற்றிப் பொருத்தமற்ற ஊகங்களைத் தவிர்ப்பதுடன், பெரிய செயல் முகமைகளைத் தெரிவு செய்யவும் உதவும். கடந்த நாற்பது ஆண்டு காலத்தில் வளர்ச்சித் திட்டங்களின் அனுபவத்திலிருந்து பெற்ற படிப்பினைகள் விவரம் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன.

(i) திட்ட உருவாக்கலின்போது கிடைத்த தகவல்களின் பகுப்பாய்வு குறைவாக உள்ளது. இலக்குத் தொகுதிகள் / பகுதிகள் அல்லது மதிப்பீட்டு ஆராய்ச்சி முடிவுகள் குறித்து உரிய விபரங்கள் உடனடியாக கிடைக்கப் பெறாமையால் இது நிகழ்கிறது. இதன் விளைவாக, திட்டமிடல் நிலையில் தவிர்க்கத் தக்க தவறுகள் நிகழுகின்றன.

(ii) திட்டவட்டமான குறிக்கோள்கள் வகுக்கப்படும் பல்வேறு திட்டங்கள் எதுவுமின்றி, பல்வேறுப்பட்ட சிக்கல்களுக்கு வழி வகுக்கும். கிடைக்கக்கூடிய வள ஆதாரங்கள், பெரும் எண்ணிக்கையிலான திட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதால் முழுப்பயன் கிட்டாமல் போய் விடுகிறது.

(iii) செயலாக்கத்தில், பொது அணுகு முறையானது மேல்மட்டத்திலிருந்து செயல்படுத்துவதாகவும், இலக்கு தொடர்புடையதாகவும் உள்ளது. திட்டங்களில் ஏதோ சில நிதி இலக்குகள் அல்லது எண்ணிக்கை இலக்குகள் அடைவதே நோக்கமாக இருக்கிறது. திட்ட இலக்குகள் நிறைவேட்டப்பட்டாலும் திட்ட நோக்கங்கள் அடையப் பெறவில்லை என்பதே திட்டக்குழுவால் செய்யப்பட்ட மதிப்பீட்டு ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன.

(iv) பாலைவன மேம்பாடு ஒருங்கிணைந்த பழங்குடியின் மேம்பாடு மற்றும் மாவட்டத் தொழில் மையங்கள் போன்ற சில திட்டங்களுக்குத் தனித்தனியான செயல்முகமைகள் உருவாக்கப்பட்டன. அவ்வாறிருக்க, ஒரு திட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கெனத் தனித்தியங்குகின்ற துறைகளால் தான் இவை உள்ளபடியே செயற்படுத்தப்படுகின்றன. இலக்குத் தொகுதிகளில் குவிமையக் குறைப்பாட்டுக்கும் இது வழி வகுக்கிறது. தேவையான நிறுவன மாற்றங்கள் இன்றி இம்முகமைகளை உருவாக்குதல், இம்முகமைகளை தேவைக்கு மேற்பட்டதாகவும், செயற்பாட்டையும் திட்டங்களின் இயக்கத்தையும் பாதிப்பதாகவும் உள்ளது.

(v) திட்டங்களின் கண்காணிப்பும் மதிப்பீடும் (க/ம) திட்ட அமைப்பிலும் செயற்பாட்டிலும் தேவையான திருத்தங்களைப் புகுத்த மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட்டில் விரிவான க/ம முறை நடை முறையில் இருக்கும் போதே கண்காணிப்பும் மற்றும் மதிப்பீட்டின் முடிவுகள் பல்வேறு காரணங்களால் பயன்பாட்டில் கொள்ளப்படவில்லை.

(vi) செயற்பாட்டு முகமைகள் அரசுக்கோ அல்லது மக்களுக்கோ பதில் சொல்வதில் உள்ள குறைபாடானது, வளர்ச்சித் திட்டங்களிலுள்ள நிதிகளில் பணமோசடி செய்வதற்கான மிகப் பெரியதொரு காரணமாகும். செயற்பாட்டு முகமைகளும் திட்ட அலுவலர்களும் தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணக் கூறி திட்டத்தை நிறைவேற்ற இயலவில்லையெனக் தப்பித்துக் கொள்வர். இச்சிக்கலிருந்து விடுபட, தக்க நிறுவன சீர்திருத்தங்களும், திட்ட உருவாக்கல் மற்றும் செயற்பாட்டில் மக்களின் மற்றம் அரசு சாரா முகமைகளின் ஈடுபாடும் தேவைப்படுகிறது.

(vii) சில திட்டங்களின் இயக்கச் செலவானது, இயல்புக்கு மீறி உயர்வாக இருப்பதற்கு ஒருவகையில் தேவைக்கு மேற்பட்ட மற்றும் பயனற்ற நிருவாகமும், மற்றொரு வகையில் திட்டமிடுதலிலும் செயற்படுத்துவதிலும் உள்ள குறைபாடும் காரணங்களாகும்.

(viii) பயன்கள் நிலை நாட்டப்படுவது குறித்த வினா எழுப்படாமலேயே பெரும்பாலான சமூகத் துறைத் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இத்திட்டங்களின் அடிப்படை நோக்கமானது. நளிந்த பிரிவினர் தற்சார்பு நிலையை உருவாக்கி கொள்ளும் நிலையைப்பெற வேண்டும். உண்மையில் பெரும்பாலான திட்டங்கள், எப்போதும் வருகின்ற அரசு வரவு செலவுத் திட்டத்தின்படி நிறைவேறுகின்றன. இவ்வகையில், சிறப்பான மாற்றுத் திட்டங்களுக்கு வாய்ப்புகளுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. திட்டங்களின் உருவாக்கல் செயலாக்கம் மற்றும் இயக்கம் ஆகியவற்றில் மக்கள் ஈடுபாட்டால், பல திட்டங்களின் இயக்க மற்றும் பராமரிப்புச் செலவுகளில் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ மீட்க இயலும்.

3.11. திட்ட உருவாக்கலிலும் செயலாக்கத்திலுமு பொதுவில் தளர்வு இருப்பினும், வெற்றி எய்திய பல நேர்வுகள் உள்ளன. சில மாவட்டங்களில் மகிளா சம்ரித்த திட்டமும், ஊரகக் குடிநீர் வழங்கல், ஆந்திரப் பிரதேசத்தில் மகிள சாமக்கியா மற்றும் தென் மாநிலங்களில் ராஷ்ட்ரிய மகினா கோஷ் முதலியவை அவற்றில் சில எடுத்துக் காட்டுகளாகும்.

சில திட்டங்கள் பயனாளிக்கு மிகுந்த பயன்களையும் அளித்துள்ளது. (அ) ஆந்திர பிரதேசம், கேரளா, நாகாலாந்து மற்றும் திரிபுராவின் ஊரகப்பகுதிகளிலுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சிக்கான திட்டம் (ஆ) மகாராஷ்டிரா ஊரக ஏழைகளுக்குரிய வேலை உறுதித்திட்டம் மற்றும் (இ) தற்சார்பு மற்றும் பெண்கள் வேலைவாய்ப்பு மீதான பெண்கள் சுயவேலை வாய்ப்புச் சங்கம் ஆகியவற்றின் திட்டபலன்கள், ஊக்கமூட்டுவதாக உள்ளது. மக்கள் நிலையங்களால் பங்குகொள்ளப்படும். பல்வேறு முன் மாதிரிகள் செயற்படும் இடம் பற்றி அல்லது திட்டம் செயற்பாட்டில் மிகுந்த ஆர்வம் கொள்ளும் அரசு அலுவலர்கள் பற்றியும் வெற்றிகரமான நிகழ்ச்சிகள் பற்றி பொதுவாக வெளிவருகின்றன. இந்நிலையங்கள் பின்வரும் இன்றியமையா ஆக்கக்கூறுகள் உள்ளன என்பதை ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

- அவை, உரிமை அனுபவம் உடையவர்களால் / உற்பத்தியாளர்களால், பயனாளர்களால் சொந்தமாகக் கொள்ளப்பட்டு மேலாண்மை செய்யப்படுகின்றன.
- அவை, சமுதாயத்திற்குப் பதில் சொல்லும் கட்டுபாடுடையவை.
- அவை, குறிப்பிட்டதொரு காலத்திற்கு மேல் தற்சார்புத் திறனுடையவை.
- அவை, பகுதிகளின் தேவையைக் கண்டறியும் திறனையும், தேவை அடிப்படையில் உள்ளூர் திட்டங்களை வரையும் பொருட்டும், நிருவாகத்தின் நெருங்கிய ஒத்துழைப்புடன் இவற்றைச் செயற்படுத்தவும் அரசு முகமைகளுடன் இணைந்து செயற்படவும் தகுதியுடையவை.
- அவை, வளர்ச்சி தொடர்பில் பொதுவான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகச் சமுதாயத்தில் பல்வேறு பிரிவுகளை ஒருங்கிணைக்க உதவுகின்றன. உள்ளூர் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு திட்டங்கள் கண்டறியப்பட்டு, தெரிவு செய்யப்பட்டு வரையப்படுவதால். இந்நிலையங்களின் ஈடுபாடு, மேலான திட்டமிடலுக்கும் செயற்பாட்டிற்கும் பங்களிக்கிறது. செயற்பாட்டில் தமது பங்கு தீர்வுகட்ட நிலையில் உள்ள பயனாளர்களிடையேயான விழிப்புணர்வு உண்டாக்கல் திட்டங்களைக் கண்டறிந்து தெரிவு செய்யும் நடைமுறையில் தாமாகவே இடம்பெறும்.

  சமூகப் பிரிவுத் திட்டங்களுக்கு, அடுத்து வரும் 9–ஆவது திட்டம், பின்வரும் நடைமுறைத் திறங்களை எதிர்நோக்குகிறது.

- ஆட்சியுரிமையைப் பன்முகப்படுத்துதலையும், மக்களின் பங்கேற்பையும் நோக்கி உடனடியான முயற்சியுக்குவிக்கப்படும். அமைப்பு சீர்திருத்தங்கள் மூலமாக பஞ்சாயத்து ஆட்சி மற்றும் மக்கள் அமைப்புகள் பல்வேறு முன்னோடி உருமாதிரிகளுக்கு மக்களின் பங்கு கொள்ளலுக்குகந்த சூழ்நிலை உருவாக்கப்படும். எனினும், இதனை இயலக் கூடியதாக்க, மைய அரசும் மாநில அரசுகளும் இணைந்து செயற்பட வேண்டியிருக்கும். இது ஒன்றே திட்ட உருவாக்கலிலும், செயற்பாட்டிலும் உள்ள பெரும்பாலான குறைபாடுகளை விஞ்சி மேம்பட உதவும்.
- வள ஆதாரங்கள் குறைவாகப் பரவுவதையும், வீணாவதையும் தடுக்க பஞ்சாயத்து ஆட்சி திட்டத்தின் கீழ் உள்ள ஊர் அளவிலான திட்டங்கள யாவற்றையும் ஒழுங்கு படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- நடைமுறையிலுள்ள திட்ட செலவுகள் அளவுக்கு மீறி உயர்வாக் அல்லது விரும்பிய பயனளிக்கத் தவறினால் அத்திட்டங்கள் மறு புத்தாக்கலுக்கும் முடிவுக்குக் கொண்டு வருவதற்குக் கருதப்பட வேண்டும் அவ்வாறு செலவு அதிகமாகின்ற, அதாவது திட்டத்தை இயக்குவதற்கான மொத்த செலவில் 15–10 விழுக்காடு அளவுக்கு ஆகின்றதற்குரிய திட்டங்களை ஒதுக்கி வைத்தல் இன்றியமையாததாகும்.
- திட்டங்களைக் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும் மிகவும் பயனுடையதாகவும் செயல் நோக்கமுடையதாகவும் இருக்க வேண்டும். மைய, மாநில அரசுகள் மற்றும் கீழ்நிலை அமைப்புகள் / நிறுவனங்கள் யாவும் M/s. திட்டத்தைப் பயனுடைய தாக்குதலை உறுதி செய்ய ஈடுபடுத்தப்பட வேண்டும்.

மதிப்பீட்டு ஆராய்வின் மீதான தகவலையும் திட்டமிடுபவர்களால் கண்காணிக்கப்பட்ட அடிப்படை விவரங்களின் கண்டுபிடிப்புகளையும் மேம்படுத்துவதற்கு கொள்கை வகுப்பவர்களும் செயல்முறைத் திட்ட மேலாளர்களும் பயன்படுத்துபவர்களுக்குப் புரியக் கூடிய வகையிலான படிவங்களை கிடைக்கக் கூடிய தகவல்களைக் கொண்டு அமைக்கும் முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும்.

திட்டங்களின் செயலாக்கம் மற்றும் இயக்கத்தில் தெளிவான நிலையினை நிறுவன மாற்றங் கொண்டு வரும். இந்நோக்கத்திற்காக, முழுமையான தகவல்களைத் தருவ்தற்குத் தடையாக உள்ளவற்றை அகற்ற வேண்டும்.

திட்ட/செயல்முறைத் திட்ட உருவாக்கத்திற்குத் தேவையான உறுப்பைப் போன்ற பொது மக்களுக்குரிய வசதிகளின் பேணுகை மற்றும் விளைவுகளையும் பயன்களையும் வலுவுள்ளதாக அமைக்க வேண்டும்.

மேம்பாட்டின் பயன்களை மகளிருக்கு சமமாகப் பங்கிடப்படவில்லை. மகளிருக்கு அதிகாரமளிக்கும் அரசியல் செய்முறை இருந்தபோதிலும், சமூக மாற்றத்திற்குரிய முகவர்களாக ஆவதற்கு சிறப்பான சூழ்நிலை தேவைப்படுகிறது. மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள், சுயஉதவிப் பிரிவுகள் மற்றும் அடித்தள அரசு சாரா நிறுவனங்கள் சமூக அடிப்படைத் தேவைகளின் கட்டுப்பாட்டைக் கைகொண்டிருக்க வேண்டும்.

மாநில அளவிலான கொள்கைகள்

3.12. அரசியலமைப்புச் சட்ட 73 மற்றும் 74வது திருத்தங்களின் படி, நாடாளுமன்றத்தால் அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தை அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் அரசமைப்புச் சட்டத்திற்கிணங்க, தொடர்புடைய தங்களின் ஊராட்சிச் சட்டங்களை மாநில அரசுகள் மாற்றிக் கொள்ள வேண்டப்படுகிறது. அதற்கிணங்க, தமிழ்நாடு அரசு 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தை இயற்றியது. இது, 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22ம் நாளில் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தில் குறிப்பிடப்படும் நோக்கங்களும் காரணங்களும் வருமாறு :–

"மக்கள் மிகப்பெரிய அளவில் பங்கேற்பதற்காக ஊராட்சிகள் தொடர்பில், 1993 ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்திமூன்றாவது திருத்தம்) சட்டத்தை மனதில் கொண்டு கிராம, இடைநிலை மற்றும் மாவட்ட நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளுக்கு மாநிலத்தில் மூன்று நிலையிலான பஞ்சாயத்துஆட்சி முறையை அமைப்பதற்கு 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை நீக்கி விட்டு மறுமுறை சட்டமியற்றல் தக்கதாகும். இதனால், ஊரக மேம்பாட்டுத் திட்டங்களை அதிக அளவில் சிறப்பாகச் செயற்படுத்துவதுடன் அவைகளை சுயாட்சி நிறுவனங்களாக்க இயலும்".

3.13. 1996 ஆம் ஆண்டு மே திங்கள் 13ம் நாளில், தமிழ்நாட்டு மக்களால் புதிய அரசு ஒன்று பதவியேற்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஏற்கனவே தாமதமாக உள்ள அனைத்து ஊராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் நடத்துவதற்குத் தீர்மானித்தது. இத்தேர்தல்கள் 1996ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26ம் நாளில் நிறைவுற்றது.

3.14. மாநிலத் திட்டக்குழுவையும் அரசு திருத்தியமைத்தது. 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நடைபெற்ற குழுவின் முதல் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தில் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டில் உடனடியாக முன்னுரிமை அளிக்கக்வேண்டிய சில பகுதிகளைக் கோடிட்டுக் காட்டினார்.

வேண்டிய ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கிக்கொண்டிருந்தும், நாம் எய்திய மேம்பாடுகளை கணக்கில் எடுத்துக் கொள்வது நமக்கு அவசியமானது. நம்முடைய பல திட்டங்களில் வறுமையை

ஒழிப்பதும் வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவதும் ஆகும்.இவ்விரு ஆண்டுகளின் செயலாக்கத்தை மதிப்பிடுகையில், இப்பிரிவுகளில் ஏற்பட்டுள்ள வெற்றி, நமக்கு முழுமையான அளவில் மனநிறைவளிக்கவில்லை. தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள நபர்களின் விழுக்காடு, அகில இந்திய அளவை விட அதிகமாகவே உள்ளது தொடர்கிறது. ஆனால், திட்டக்குழுவின் மதிப்பீடானது அல்லது வல்லுநர் குழுத் தொகுதி மதிப்பீடானது, உண்மையில் எஞ்சியுள்ள 1/3 பங்குக்கு மேற்பட்ட மக்கள் தொகையினர் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். தமிழ்நாட்டில் தனி நபர் வருமானமானது அகில இந்திய அளவில் உள்ள தனி நபர் வருமானத்தை விட அதிகமாக இருந்தபோதிலும் வறுமைக் கோட்டுக்கு கீழேயுள்ள மக்களின் விழுக்காடு தான் அதிகம் என்பதுதான் உண்மை. கீழ்நிலையிலுள்ள மக்களுக்குத் திட்டங்களின் பயன்கள் சென்றடைவதில்லை. வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ளோரின் எண்ணிக்கையானது நாட்டில் மிக அதிக அளவில் உள்ள ஒன்றாகும். வறுமை ஒழிப்பு மற்றும் வேலை வாய்ப்பின்மைக்கான இத்திட்டங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அவசியம் என்ற உண்மை நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. திட்டக் குழுவின் ஆழ்ந்த ஆராய்வுகளும் பரிந்துரைகளும் ஏழை மக்களின் பயன் பெறுவதற்குத் திட்டங்களை உருவாக்குவதில் வழி அமைக்கும். இத்திட்டங்கள் செயற்படுத்தப் படுகையில்தான் திட்ட இலக்குகளை எய்தியமையை அடைந்ததற்கான உறுதி செய்தவதற்குரிய தகுந்த நடைமுறையை மதிப்பிட இயலும், மேலும் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சென்றடைவதையும், மேம்பாட்டின் பயன்விளைவையும் அது உறுதிப் படுத்துவதாக இருக்க வேண்டும்.

3.15. பண்முகப்படுத்தப்பட்ட அமைப்புகளுக்குரிய பணிகள் மற்றும் அதிகாரங்களை வழங்க ஆணையிடும் 73 மற்றும் 74 ஆவது திருத்தங்களைக் கருத்தில் கொண்டு ஒன்பதாவது திட்டத்தில் மாநிலத்திற்கான மேம்பாடு மற்றும் முன்னுரிமைகள் மற்றும் செய்திறம் ஆகியவற்றின் மீது தங்களின் தொலை நோக்கைக் கற்றுக்கொள்வதற்கு மாநிலத் திட்டக்குழு, தமிழ்நாடு அரசின் அனைத்துச் செயலாளர்களுடன் கலந்துரையாடியது. மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பில், ஆக்கச் சார்பான பொறுப்புகளுடன் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிகளுக்குத் அதன் உரிமைகளை அளிக்கும் ஆர்வ நிலையில் மாநில அரசு, ஊராட்சிகளிடம் ஒப்படைக்கவுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளின் மீது (தற்பொழுது இவை அரசுத் துறைகளால் நிறைவேற்றப்படுகின்றன.) மாநில அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காக உறுப்பினர்களின்தொகுதி ஒன்றை அமைக்குமாறு மாநிலத் திட்டக் குழுவிடம் கேட்டது. மேலும், சீரான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக ஊராட்சிகளின் மூன்று நிலைகளான, சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிக்கிடையே என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்னும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

3.16. 1996 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 மற்றும் டிசம்பர் திங்கள் முதல் நாளில் மாநில அரசால் கூட்டப்பட்ட ஊராட்சித் தலைவர்களின் மாநாட்டின், விவாதங்கள் இக்குழுவிற்கு அளவிடமுடியா பயனை அளித்தது. இம்மாநாட்டில், ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றின் தலைவர்கள் அனைவரும் பங்கேற்றனர். மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்களும் அழைக்கப்பட்டனர். அதில் தோற்றுவிக்கப்பட்ட 12 குழுவினர் மாநாட்டில் தங்களின் அறிக்கைகளை அளித்தனர். முக்கியமான பரிந்துரைகள் முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. அவைகளில் சிலவற்றின் மீது மாநில அரசின் முடிவுகள் மாநாட்டில் அறிவிக்கப்பட்டன. இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்கள் பகுதிகளின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிப் பணிக்கு பேரளவியான பொறுப்புகளைச் சுமக்க விரும்பினார்கள். அத்துடன் மாநில அரசு தங்களுக்கு பொறுப்புகளை வழங்குவதற்கு இணையான அதிகாரம் மற்றும் நிதி ஆதாரங்களையும் அளிக்குமாறு வற்புறுத்தினர். ஊராட்சி மற்றும் நிர்வாகத் துறைகளிடையேயான உறவுமுறை மிகவும் சுமூகமாக இருக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

3.17 ஊரக வளர்ச்சித் துறை மூலம் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களின் மதிப்பீடு அறிக்கைகளை இக்குழு ஆய்வு செய்தது. இத்திட்டங்களின் மீது கணிசமான அளவில் செலவு செய்யப்பட்ட போதும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.

3.18 தமது பரிந்துரைகளைத் தயாரிக்கையில், இக்குழு, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 257 ஆவது பிரிவிலுள்ள வகைமுறைகளைக் கருத்தில் எடுத்துக் கொண்டது. 257 ஆவது பிரிவானது வருமாறு:–

"இந்தச் சட்டத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டவாறு அல்லாமல், அரசு அறிக்கை வாயிலாக மற்றும் அதில் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளுக்கும், அல்லது இந்தச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட பிற குழு எதற்கும், பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கு திட்டங்கள் தயாரிப்பது பொறுத்த அதிகாரங்களையும் பொறுப்புகளையும் மற்றும் IV – ஆம் இணைப்புப் பட்டியலில் இடப்பட்ட பொருட்கள் தொடர்பானவைகள் உள்ளடங்கலாக, பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படலாகும் அதிகாரங்களையும். அதிகார அடைப்பினையும் ஒப்படைக்கலாம் "

மாநில திட்டக்குழுப் பிரிவின் அணுகுமுறை

3.19 மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் அனைத்தையும் தேசிய மற்றும் மாநில அளவில் கவனத்தில் எடுத்துக் கொண்டு அதில் சட்ட அரசமைப்பிலும் சட்ட அடிப்படையிலும் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதிக்காகக் கணிசமான அளவில் பொறுப்புகளையும் செயல்பாடுகளையும் ஒப்படைப்பதற்குத் தன்னாட்சிமுறை நிறுவனம் போன்று ஊராட்சிகளை கட்டமைப்பதற்கான கொள்கை மற்றும் திட்ட ஆதரவிலும் பலமில்லாதவைகளுக்கு பின்வரும் பணி அளவை உறப்பினர்களின் தொகுதி தன் சொந்த வழிகாட்டலாக அமைந்தது :–

(அ) ஊராட்சிகளுக்கு அதிகார ஒப்படைப்பின் சாரமானது, மேம்பாட்டு செய்முறை மற்றும் முடிவுகளுடன் சமுதாயத்தினரின் மனநிறைவை அதிகரிப்பதின் தேவையால் வழிகாட்டப்படவேண்டும். திட்டமிடல் மற்றும் செயலாக்கத்துடன் முடிவெடுப்பதில் சமுதாயத்தினரின் தீவிர பங்கேற்பின் மீது கணிசமான அளவில் சார்ந்துள்ளவை, தன்னாட்சி நிறுவனமாகக் கருதப்படும் என்று இது அங்கீகரிக்கிறது.

(ஆ) மொத்தப் பொருளாதாரத்தில், போதிய நிதி வழங்குவதில் சிக்கல் ஏதாவது இருக்குமாயின் இருக்கக்கூடிய இயற்கை வளங்களை சேதாரம் இல்லாமல் பன்படுத்துவதற்கு ஒரு பக்கம் வரையறைகள் உருவாக்கப்படவேண்டும். மற்றொரு பக்கம் விரும்பக்கூடிய பொருளாதார மற்றும் சமூக இலக்கை அடைவதற்கு மேம்பாட்டுக்குரியவன ஆதாரங்களின் மொத்த அளவை விரிவுபடுத்த உள்ளூர் வாய்ப்பு வளங்களை அதிகரிப்பதற்குச் சமுதாயத்தினரை ஊக்கப்படுத்த வேண்டும்.

(இ) அதிகார ஒப்படைப்புத் திட்டம். ஒரு பக்கத்தில் இரட்டைக் கட்டுபபாட்டைத் தவிர்க்க வேண்டும். திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் மேம்பாடு தொடர்பில், முடிவில் ஒழுங்குபடுத்தலும் முடிவெடுத்தலில் விரைவும் இருக்க வேண்டும். இது முன்னுரிமைகளை அறுதியிடவும் செயற்பாட்டு நிலையிலுள்ள மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைக்கவும் உள்ளாட்சி சார்பான அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். மேலும் அதற்கேற்ப, அதிகபட்ச நன்மை அடைவதற்காக வேண்டி ஏற்கனவே உள்ள இயற்கை வளங்களை விரிவுபடுத்தி, மேலும் விரிவு படுத்த வேண்டும்.

(ஈ) பதினோராவது அட்டவணையின்படி, ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய பேரளவிலான பொருள்களை அளிப்பதற்குப் படிப்படியான பன்முகப்படுத்தல் திட்டத்திற்குப் பரிந்துரை செய்து அதன் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும். இந்நோக்கத்திற்காக, உடனடியாக ஊராட்சிகளுக்கு ஒப்படைக்க வேண்டிய நடவடிக்கைகளை அறிந்து கொள்வதற்கு, அதாவது, முதலாண்டுக்குள், அடுத்த ஆண்டு அல்லது மூன்றாண்டில் ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கவுள்ள நடவடிக்கைகள். மேலும், அரசியலமைப்புச் சட்டமானது 29 இனங்களுக்கு சுட்டிக்காட்டும் பட்டியலுக்கு வழிவகை செய்வதுடன், மாநிலமானது உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்களை ஒப்படைக்க முடியும்.

உறுப்பினர்கள் குழுவானது 29 இனங்களுக்கு மட்டும் தன் பரிந்துரைகளை தெரிவித்துள்ளது. இதனை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்குவதற்கான முதல்படியாகக் கருத வேண்டும். மேம்பாட்டு வடிவத்திற்கும் செயற்படுத்தலுக்கும் நிலையாக அதிக அளவிலும் கணிசமாகவும் உள்ள அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசால் ஒப்படைக்கப்பட வேண்டும். இது, ஊராட்சிகள் மீது அதிகப் பொறுப்புகளைச் சுமத்துகையில், மாநில அரசின் பளுவானது இலகுவாம்.

(உ) அரசுத் துறைகளுக்கும் ஊராட்சிகளுக்குமிடையேயான பணிகளைப் பிரிப்பதற்குச் செயற்படுத்த வேண்டிய கொள்கையானது, ஊராட்சிகளால் என்ன செய்ய முடியும் எற்றும் வட்டாரத் தகவலுக்கு வேண்டிய மற்றும் மேம்பாட்டிற்குத் தேவையான அறிவையும் ஊராட்சிகள் பெற்றிருக்க வேண்டும். அப்பொருளை ஊராட்சிக்கு ஒதுக்கப் பெறவேண்டும். அதே போன்று, பஞ்சாயத்து நிறுவனங்களின் மூன்று நிலைகளுக்கிடையே, ஒவ்வொரு நிலைக்கும் ஒதுக்கப்படவேண்டிய பணிகளை எவ்வமைப்பினால் எப்பணியினை சிறப்பாக செய்ய முடியும் என்ற அடிப்படையில் ஒதுக்கப்பெற வேண்டும். ஊராட்சி ஒன்றியம் மற்றும் அல்லது மாவட்ட ஊராட்சி போன்ற உயர்நிலைக்கு அதனை ஒதுக்கப்படகூட்டாது.

(ஊ) முடிந்த அளவுக்கு, ஊராட்சிகளுக்குச் கூட்டுறவுத் துறைகளாலும் இந்நோக்கத்திற்குப் பொருத்தமான பிற நிறுவனங்களாலும் சிறப்பாக நடத்தப்படுகின்ற பொருளாதார நிறுவனங்களை நடத்தும் பொறுப்பைச் சுமத்தக் கூடாது. ஊராட்சிகளின் பங்கானது. அத்தகைய நிறுவனங்களைப் பயனுள்ளவாறு செயற்படுத்துவதற்கு இயலும் வரையறைகளை உருவாக்க வேண்டும்.

(எ) சில நடவடிக்கைகளை, சிறப்பு பெற்ற முகமைகள் வாயிலாக சில குறிப்பிட்டச் சட்டங்களின் கீழ் அரசால் நடத்தப் பெற்றுவருகின்றன. அப்பணிகளை அவ்வமைப்புகளினால் தான் சிறப்பாக செய்யமுடியும் என்ற நிலை இருக்குமானால் அவ்வமைப்புகளே செய்து வரும் படியாக விட்டுவிட வேண்டும். இப்பொருள் குறித்து மூன்று வருடங்களுக்குள் ஓராண்டிற்குப் பின் அதன் நிலைமை குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும்.

(ஏ) திட்டங்கள் , நடவடிக்கைகளை மாநில அரசால் நிறுத்தி வைக்கப்படும் போதும் அல்லது நேரிடையாக மேற் கொள்ளப்படும் போதும், ஊராட்சிப் பகுதிகளில் செயற்படுத்தப் படுபவைகளைப் பற்றிய திட்டங்களின் , செயற்முறைத் திட்டங்களின், தங்களின் செயற்பாட்டிற்குரிய திட்டக் கூறுகளையும் ஏற்பாடுகளுக்கான நோக்கங்கள் மற்றும் விவரங்களின் முழுத் தகவலைத் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களுக்கு முறையாக அளிக்கப்பட வேண்டும். மாவட்ட ஊராட்சிகள் அத்தகைய திட்டங்களையும் செயற்முறை திட்டங்களையும் மறு ஆய்வு செய்வதற்கு அதிகாரம் உண்டு. அத்தகைய நேர்வுகளில் தொடர்புடைய துறைகளும் முகமைகளும், ஊராட்சிகளால் நடத்தப்பெறும் கால முறையான ஆய்வுக் கூட்டங்களில் பங்கேற்க வேண்டும்.

3.20. தமிழக அரசுக்கு அளிக்கப்படவிருக்கும் இக்குழுவின் பரிந்துரைகள். ஊரகப் பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியையும் சமூக நீதியையும் கொண்டு வருவதற்காக உள்ளாட்சி மன்றங்கள் தன்னாட்சி நிறுவனங்களாவதற்கு அத்தகைய அதிகாரங்கள் அளிக்கப்படும்.

3.21. வட்டாரத் தன்னாட்சி என்பது, ஒரு குறிப்பிட்ட வட்டாரப் பகுதி மக்களுக்கு தொடக்க நிலையில் உரிமை அளிப்பதாகும். அவ்வமைப்பு அப்பகுதி மக்களின் குரலுக்கு செவிசாய்ப்பதோடு மட்டுமின்றி அப்பகுதியின் சமூகப் பொருளாதார வளர்ச்சியினை நிர்ணயம் செய்வதற்கான அதிகாரம் பெற்றதாகவும் விளங்கும். கிராம சபையின் அரகமைப்பு அங்கீகாரம் என்பது, மக்காளாட்சியில் உண்மையிலேயே பங்கேற்றலின் அடையாளமாகும். மக்களின் ஈடுபாடு அதிகமானால் , அவைகளின் செயற்பாடு அதிகத் திறன், பயன் மற்றும், ஒளிவு மறைவுயில்லாத தன்மையும் பெற்றதாக விளங்கும்.

3.22. "அதிகார ஒப்படைப்பு" என்பது ஒருமுகப்படுத்துதலற்ற அல்லது ஒப்படைப்பு என்று பொருள் ஆகாது. ஊரக உள்ளாட்சி மன்றங்களின் செயல்பாட்டை மூன்று நிலையாக்குவதற்குக் குறிப்பிட்ட பகுதிகளுக்குள் தடையின்றி

இயக்கவும் மாற்றப்பட்டுள்ள உண்மையான அதிகாரம், செயல்பாடுகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் உள்ளவிடத்து இது பண்முகப்படுத்துதல் மற்றும் அதிகார மாற்றத்திற்கு அருகிலுள்ளதாகும். இந்த அதிகாரமானது, ஆற்றல் மிகுந்த மற்றும் ஆற்றவற்றவைகளுக்கிடையே பிரிவினை, தொலைவு மற்றும் கட்டளையிடல் போன்றவற்றை உருவாக்குமென்று நாங்கள் கருதவில்லை. மக்களின் திறமைகள், உற்பத்திப் பெருக்கம், சமமின்மையைக் குறைத்தல், கூட்டுறவை உயர்த்துதல், உள்ளூரில் பங்கு பெறுதலையும் திட்டமிடலையும் மேம்படுத்தல் ஆகியவற்றை மாற்றப் பெறுவதற்குரிய அதிகாரம் என்று எங்கள் அறிக்கையில் நாங்கள் கருதுகிறோம். மாநில அரசின் அதிகாரங்களையும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப் பெற வேண்டிய அதன் செயல்பாட்டிற்குரிய பகுதியையும் செங்குத்தாகவும் கிடைநிலையாகவும் அதிகாரங்களை மாற்ற நாங்கள் கருதுகிறோம்.

3.23 இந்த அணுகுமுறையானது, பின்வரும் சில அடிப்படையான தத்துவங்கள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது:–

(i) உள்ளாட்சி அமைப்புகள் சுதந்திரமாக செயல்பட வேண்டும். அரசு வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னுரிமையும், முக்கியத்துவத்தையும் நிர்ணயம் செய்வதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்காக நிருவாக, நிதி மற்றும் செயற்பாட்டுச் சுதந்திரம் ஆகியவற்றுக்காக அரசிடமிருந்து வழிகாட்டுதலுடன் ஒருங்கிணைப்பு, உள்நடவடிக்கை, கூட்டுறவு மற்றும் ஒருங்கிணைப்பின் செயலெல்லையில் பஞ்சாயத்து ஆட்சி அமைப்பு அதிக அல்லது குறைந்த அளவுள்ள தற்சார்வு நடவடிக்கை என்பது இதன் பொருளாகும்.

(ii) உள்ளாட்சி அமைப்பு மற்றும் அரசின் நிலை தெளிவாக இருக்க வேண்டும். அப்போதுதான் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு இரண்டிற்குமிடையே செயற்படுத்துவதில் ஒத்த கருத்து நிலவும். அவர்கள் ஒன்று சேர்ந்து பணியாற்றுகின்றனர். ஒருவருக்கொருவர் ஆதரவு அளிக்கின்றனர். ஒவ்வொருவரும் மற்றவருக்கு எதிராக ஆவதில்லை.

(iii) சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிக் கிடையே ஒழுங்கான நிறுவன ரீதியான ஒற்றுமை நோக்கம் நிலவ வேண்டும்.

(iv) மக்களின் ஈடுபாடு என்பதாவது தகவல் பரிமாற்றம் அல்லது இசைவளிப்பதற்கு முந்திய கலந்தாய்வு என்பதாக மட்டும் கருதக் கூடாது. மக்களாட்சி அமைப்பில் இது ஒரு பகுதியாகும். ஊரக உள்ளாட்சி மன்றங்களின் 3 நிலைகளுக்குரிய தேர்தல் மக்களாட்சி அமைப்பை உருவாக்குகிறது. மக்கள் மற்றும் அவர்கள் சார்பாளர்களின் நேரிடையான ஈடுபாட்டிலிருந்து பங்கேற்கும் வாய்ப்பு கிட்டுகிறது. திட்டங்களுக்குரிய தேவைகள்/உதவி புரியக்கூடிய நபர்கள் ஆகியவற்றை அடையாளம் காணக்கூடிய நிலையிலிருக்கும் மேம்பாட்டுத் திட்டம், செயற்படுத்துதல், இயக்குதல், மேலாண்மை மற்றும் பேணுகை நிலைவரையும் அதே போன்று திட்டங்கள்/நிறுவனங்களைக் கண்காணித்து மதிப்பீடு செய்தலுக்கும் வட்டார மக்கள் பணயதாரர்களாக ஈடுபடவேண்டும்.

(V) ஒளிவு மறைவற்றதன்மை மற்றொரு அடிப்படைக் கொள்கையாகும். இதனை அனைத்துத் திட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு திட்டம் பயனார்களின் தெரிவு மற்றும் திட்டங்களுக்கு ஏற்பட்ட செலவினம் முதலியனவற்றைப் பற்றிய ஒவ்வொரு விபரத்தையும் மக்கள் அறிவதற்குச் சுதந்திரம் உண்டு. இவ்வாறு, திட்டங்களை செயல்படுத்துவதிலும், பயனாளிகளை தேர்வு செய்வதிலும் உள்ளாட்சி அமைப்புகள் நட்பு முறையிலும் ஒளிவு மறைவின்றியும், பதில் சொல்லும் அளவிலும் தன்னை அமைத்துக் கொள்ள வேண்டும்.

வரையறைகள்

3.24. சில வரையறைகளின் கீழ், திட்டக்குழுப் பிரிவு தன் பரிந்துரைகளை முடிவெடுக்கிறது. தொடக்கத்தில், ஊரக உள்ளாட்சி மன்ற நிலையில் அனைத்துத் துறைகளின் திட்டங்களைப் பற்றி எழுத்து மூலம் கேட்டுக் கொள்கிறது. மாநில அளவிலும் நிறுத்திவைத்துக் கொள்ள அவசியமானது என்று கருதும் திட்டங்களைப் பற்றி அறிவுரை செய்வதுடன் அதற்கான காரணங்களையும் தெரிவிக்கிறது. நினைவூட்டுக்கள் அனுப்பியும் சிலவற்றைத் தவிர பிற துறைகள் மறு மொழி அளிப்பதில்லை. (ii) இக்குழு, தெரிவு செய்யப்பட்ட ஊராட்சி அலுவலக உறுப்பினர்களுடன் நேரிடையாகக் கலந்தாய்வு செய்வதில் ஆர்வமாக உள்ளது. ஆனால், இக்குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காக, அத்தகைய கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யவில்லை. இருப்பினும், மேலே குறிப்பிட்டபடி, மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்களும் 1996 ஆம் ஆண்டு நவம்பர் 30 மற்றும் டிசம்பா 1 ஆம் தேதியன்று மாநில அரசால் கூட்டப்பெற்ற ஊராட்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் பயன் கிட்டியது. (iii) முதல் அறிக்கை அனுப்பப்பட்ட பின், மாநில நிதிக்குழுவின் அறிக்கை எங்களுக்கு கிடைத்தது.


அதிகார ஒப்படைப்பு
குறித்த பரிந்துரைகள்

இயல் IV

அதிகார ஒப்படைப்பு குறித்த பரிந்துரைகள் (இனங்கள்)

❊ ❊ ❊ ❊

வேளாண்மை சார்ந்த விரிவாக்கம் உள்ளடங்கலாக வேளாண்மை

(இனம் - 1)

01. தமிழ்நாட்டின் வேளாண்மை வளர்ச்சி மிக சிறந்த முன்னேற்றத்தை எய்தி உள்ளது. மாநிலத்தின் மொத்த பயிர்ப்பரப்பு 71.58 இலட்சம் ஹெக்டேர் (1993 – 94) ஆகவும் பயிர் செரிவு 120.90% ஆகவும் உணவுப் பயிர் உற்பத்தி 97.42 இலட்சம் டன்னாகவும் உள்ளன. அதில் அரிசி உற்பத்தி 76.85 இலட்சம் டன்களாகும். சர்க்கரை உற்பத்தித் திறனில் நாட்டில் முதலிடம் வகிக்கிறது. (எப்போதுமே ஹெக்டேருக்கு 103 டன்னுக்கு மேல்) 1994 – 95 ஆம் ஆண்டில் எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி உற்பத்தி முறையே 21.28 இலட்சம் டன் மற்றும் 19.7 இலட்சம் சிப்பம் ஆகும். வேளாண்மை சில அறைகூவல்களை எதிர்நோக்கியுள்ளது.

- அதிகமான வேளாண் விளை நிலங்கள் வேளாண்மை அல்லாத பயன்பாட்டிற்கு மாற்றப்படுகிறது.
- பயிரிடத் தக்க தரிசு நிலப்பரப்பு அதிகரித்திக்கிறது. பயிரிடும் பகுதியில் வானம் பார்த்த நிலையில் உள்ள பகுதிகள் 50 விழுக்காட்டிற்கு மேல் உள்ளன.
- நீர்பாசன செரிவு 125 விழுக்காட்டிலேயே மாறாமல் உள்ளது.
- பாசன பரப்பு பெரும்பாலும் முறையானன பாசனவசதியை சார்ந்துள்ளது.
- நிலத்தடி நீரைப் பயன்படுத்தி மட்டுமே பாசன வசதியை பெருக்க இயலும்.

தோட்டக்கலை. பழங்கள், காய்கறிகள், நறுமணப் பொருள்கள், மலர்கள் மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் பயிர்செய்யும் பகுதியானது 1994 – 95 ஆம் ஆண்டில் முறையே 186 இலட்சம் ஹெக்டேராகவும், 1.75 இலட்சம் ஹெக்டேராகவும், 1.65 இலட்சம் ஹெக்டேராகவும். 0.14 இலட்சம் ஹெக்டேராகவும் மற்றும் 1.77 இலட்சம் ஹெக்டேராகவும் அதிகரித்துள்ளது. வேளாண்மை வளர்ச்சியானது ஊரக வளர்ச்சி மற்றும் ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தி விரைவான வேளாண்மை வளர்ச்சி அடைவதே தமிழ்நாடுவேளாண்மை கொள்கையின் முக்கிய நோக்கம் ஆகம். மானாவரி வேளாண்மை, தரிசு நில மேம்பாடு, நீர் மற்றும் நில மேம்பாடு, தோட்டப் பயிர் வளர்ச்சி, நுண்பாசன மேம்பாடு, வேளாண்மை விளைபொருட்கள் விற்பனை. வேளாண்மை வளர்ச்சியை நிறுவுதல், நடைமுறைக்குகந்த வேளாண்மை, பண்ணை இயந்திரமயமாக்குதல், வேளாண் கடன் வசதியை பெருக்குதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. விரிவுபடுத்தப்பட்ட வேளாண்மை விரிவாக்கம் ஒட்டு மொத்த வேளாண்மை மேம்பாட்டிற்கு அடித்தளமாக அமைந்துள்ளது.

02. வேளாண் வளர்ச்சி என்பது நிலத்தை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சியாகும். இதற்கு கிராம உள்ளாட்சிகள் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகம், நிதி நிறுவனங்கள். அரசு சார்பற்ற அமைப்புகள் மற்றும் விவசாயிகள் ஆகியோரின் ஒத்துழைப்பும், ஒருங்கிணைப்பும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் தேவைப்படுகின்றன. வேளாண் துறையானது தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வருவாய், கால்நடை, வனம், சுற்றுச்சூழல் மற்றும் நீர்பாசனம் ஆகிய அரசின் பிற துறைகளின் ஒத்துழைப்புக்கும், ஒருங்கிணைப்புக்கும் தொடர்புடையதாக செயல்பட்டு வருகிறது. பல்வேறு பயிர்கள் முறையே, உணவுப் பொருட்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், தோட்டப் பயிர்கள் மற்றும் நறுமணப் பயிர்கள்

ஆகியவைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை உயர்த்துவதற்கு வேளாண்மைத் துறை குறிப்பிட்ட பகுதிக்கேற்ற மற்றும் பயிர்வாரியான பல திட்டங்களை செயல்படுத்துகிறது. அத்திட்டங்கள்யாவன நடைமுறைக் கேற்ற தொழில்நுட்பம் முறைகள், நீர்மேலாண்மை, உயிரின உரம், ஊட்டச் சத்து மேலாண்மை, மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி ஒழிப்பு மேலாண்மை ஆகியவைகளை தன்னுடைய விரிவாக்கத்துறை மூலம் நடைமுறைப்படுத்துகிறது. இவைகளை அல்லாமல் பலதரப்பட்ட திட்டங்கள் முறையே விதை, உரம், பசுந்தாள் உரம் மற்றும் வேளாண்மை பொறிகளை வழங்குவது ஆகியவற்றின் மூலம் உழவர்களுக்கு உதவிபுரிகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் பல்வேறு உதவி உரங்கள் திட்டங்களான விநியோகம், பூச்சிக் கொல்லி மருந்து, மின் தெளிப்பான், டயர், மாட்டு வண்டி, சிறிய டிராக்டர், இழுவைகள், மின்அறுவடை கருவி, வேளாண் கருவிகள், சேமிப்பு கிடங்கு, தார்ப்பாலின், உயிரின் உரம், பசுந்தாள் விதை, பூச்சியை பிடிக்கும் பெட்ரோமாக்ஸ் மின்வெட்டி, எலிகளை கட்டுப்படுத்தும் இராசாயணப் பொருட்கள் போன்றவற்றை வழங்குவதற்கும் இத்துறை பொறுப்புடையதாக இருக்கின்றது.

03. மாநில அளவில் இச்செயற்பாடுகளை வேளாண்மை இயக்கம் தோட்டக்கலை இயக்கம், விதை சான்றளிப்பு இயக்கம், வேளாண் விளை பொருள், விற்பனை இயக்ககம், வேளாண்மைப் பொறியியல் துறை தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம், மற்றம் தமிழ்நாடு மாநில வேளாண் விளைபொருள் விற்பணை வாரியம் மேற்கொள்கின்றன. வேளாண்மை கல்வி மற்றும் ஆராய்ச்சியினை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கவனித்து வருகின்றது. வேளாண் கடனை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மேற்கொள்கின்றார். நாம் இங்கே வேளாண் இயக்ககம் மற்றும் தோட்டக்கலை இயக்கம் ஆகியவற்றின் செயற்பாடுகள் மற்றும் அமைப்பு முறை ஆகியவற்றைப் பற்றி பார்ப்போம். விதை சான்றளிப்பு இயக்ககத்தை பொறுத்த அளவில் முறைபடுதல் மற்றும் தொழில்நுட்ப சான்றளிப்பு குறித்து பணியாற்றுகிறது. எனவே தற்போதுள்ள நிலையை தொடர்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையின் பணிக்ள பொதுவாக "நில அபிவிருத்தி மற்றும் நீர்பிடிப்புப் பகுதி மேம்பாடு" மற்றும் "சிறுபாசனம்" எனும் தலைப்புகளின் கீழ் விளக்கப்பட்டுள்ளது. வேளாண் விளைபொருள் விற்பனை இயக்ககம் ஒழுங்கு முறை அங்காடி மற்றும் சந்தைக் குழுக்கள் ஆகியவை குறித்து ஊரக, உள்ளாட்சி அமைப்புகள் செயல்திறன் குறித்து "அங்காடி மற்றும் சந்தையின் கீழ் விளக்கப்பட்டுள்ளது. அரசு ஆதரவிலான நான்கு அமைப்புகளில் இரண்டு கூட்டுறவுகளும் (மக்கள் அமைப்பு) ஒரு இணையமும், ஒரு வாரியமும் உள்ளிட்டது. ஊராட்சி ஒன்றியமும் மாவட்ட ஊராட்சியும் நேரடியாக எதிலும் தலையிடாமல் திட்டங்களை மட்டும் மறு ஆய்வு செய்வதை மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

மாவட்ட வேளாண்மைத்துறை - நிர்வாக அமைப்பு

04. மாவட்ட அளவில் வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மை தொடர்புடைய அனைத்து பணிகளுக்கும் முழு பொறுப்புடையவராவர். பயிற்சி மற்றும் பயணம் உழவியல், பயிர் பாதுகாப்பு, தகவல் மற்றும் பயிற்சி ஆகியவற்றின் வல்லுநர்கள் அவருக்கு உதவிபுரிகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு துணை இயக்குநர் (விதை) மற்றும் ஒரு உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) ஆகியவர்கள் முறையே மாவட்டத்தின் விதை உற்பத்தி, விநியோகம் மற்றும் தரக்கட்டுப்பாடு ஆகியவற்றை கண்காணிக்கின்றனர். ஒரு வேளாண் துணை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) மற்றும் ஒரு வேளாண் துணை இயக்குநர் முறையே மாவட்ட அளவில் எண்ணெய் வித்து மற்றும் உழவர் பயிற்சி மையம் ஆகியவற்றைக் கவனித்து வருகின்றனர். மண், பூச்சிக்கொல்லி, உரப்பகுப்பாய்வு ஆய்வகங்கள், வேளாண் வேதியியலர், உதவி வேதியிலர் ஆகியோரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. வேளாண்மை துணை இயக்குநர் ஒருவர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண் கொள்கை, தொடர்புடைய துறைகளுக்கிடையே திட்டமிடல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்து அவர் பணிபுரிகிறார். வேளாண் துறையின் அமைப்பு கீழேக் கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் அமைப்பு முறை



வட்ட அளவில்

05. ஒவ்வொரு மாவட்டமும், மேலும் வருவாய் கோட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வட்டங்களை கொண்டதாயிருக்கும். ஒவ்வொரு வட்டத்தின் வேளாண் அமைப்புக்கு வேளாண் உதவி இயக்குநர் ஒருவர் தலைமை ஏற்கின்றார். அனைத்து விரிவாக்க மற்றும் திட்டச் செயலாக்க நடவடிக்கைகளை அவர் மேற்கொள்கிறார். மூன்று தொழில்நுட்ப வல்லுநர்கள் அவருக்கு உதவியாக உள்ளனர். அவர்கள் (1) உழவியல் (2) பயிர்பாதுகாப்பு மற்றும் (3) தகவல் தொடர்பு மற்றும் பயிற்சி ஆகியவற்றைக் கவனித்த வருகின்றனர். 5 அல்லது 6 வேளாண்மை அலுவலர்கள் ஒவ்வொரு சார் கோட்டத்திலும் பணிபுரிகின்றனர். அவர்கள் வேளாண் உதவி அலுவலர்களின் பணிகளை மேற்பார்வையிடுகின்றனர். மாநிலம் முழுவதும் 159 சார்கோட்டங்கள் உள்ளன.

அமைப்பு முறை - வட்ட அளவில்



வட்டார அளவில் (ஊராட்சி ஒன்றியம்)

06. வளர்ச்சி வட்டாரம் தேசிய விரிவாக்கம் பணித்தல் விரிந்துரைக்கப்பட்டவாறு நிருவாக ரீதியிலும் இடஞ்சார்ந்த முறையிலும் தமிழ்நாடு 1958 முதல் 1994 ஆம் ஆண்டு உள்ளாட்சி சட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியத்துடன் இணையானதாக உள்ளது. தேசிய விரிவாக்க சேவை பணிகள் ஊராட்சி ஒன்றியங்களலேயே நடைமுறைப்படுத்தப்பகின்றன. வட்டார அளவில் வேளாண் வளர்ச்சியினை ஒரு வேளாண் வளர்ச்சி அலுவலர் மேற்கொள்கிறார். இவரே தன் கீழ் பணிபுரியும் அலுவலர்களுக்கு சம்பளம் மற்றும் இதர நிதி சம்பந்த மானவைகளைப் பெற்று தரும் அலுவலராகவும் இருக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஒன்று முதல் மூன்று வேளாண் அலுவலர் (பயிற்சி மற்றும் பயணம்) விதை உதவி அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் கள விளக்க அலுவலர் அவரின் கீழ் பணிபுரிகின்றார்.

அமைப்பு முறை - வட்டார அளவில்



07. இம்மாநிலத்தில் பழங்கள், காய்கறிகள், நறுமணப் பொருள்கள், பூக்கள் மற்றும் மலைத்தோட்டப் பயிர்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் தோட்டக்கலை மற்றும் மலைத் தோட்டப் பயிர்த்துறையானது முக்கிய பங்கு வகிக்கின்றது. தோட்டகலைத் துறையானது மேற்குமலைத் தொடர்ச்சி மலைமேம்பாட்டு திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாடு திட்டம், சொட்டு நீர்பாசன செயல்முறை விளக்கம், பசுமைக் குடில்கள், காளான் வளர்ப்புத் திட்டம், வணிகமுறை மலர்செடித் திட்டம் போன்ற மத்திய மற்றும் மாநில அரசு தொடர்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மாவட்ட அளவில் அனைத்துப் பணிகளையும் ஒரு தோட்டக் கலை உதவி இயக்குநர் கவனித்து வருகிறார். அவருக்கு உதவியாக தோட்டக்கலை உதவி அலுவலர்கள் பணிபுரிகின்றனர். மொத்தம் 54 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளை மாவட்ட அளவில் இயங்குகின்றன. அவைகளைத் தோட்டக்கலை அலுவலர்கள் கவனித்து வருகின்றனர். அரசு தற்போது சில குறிப்பிட்ட பழங்கள், காய்கள், பூக்கள், நறுமணப் பொருள்கள் ஆகியவைகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஊராட்சி ஒன்றியங்களை கண்டறிந்துள்ளது. மாற்றியமைக்கப்பட்ட அலுவலர்கள் சுருக்க முறையில் பல தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் பண்ணை செயல்முறை அலுவலர்கள் ஆகியோர்களின் எண்ணிக்கை தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

08. இம்மாநிலத்தில் வேளாண் வளர்ச்சியில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு. அண்மையில் செய்யப்பட்ட அரசியல் சட்டத் திருத்தம் மற்றும் அவ்வமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொள்கையில், இன்றியமையானதாக உள்ளது. வேளாண்மை மற்றும் தோட்டக் கலை வளர்ச்சி ஆகிய திட்டங்களைச் செயல்படுத்துவதில் இவற்றுக்கு அதிக அதிகாரங்களை வழங்கலாம். ஊரகப் பகுதிகளில் மற்றும் வேளாண்மை வாழக்கைச் சூழலில் உள்ள உள்ளாட்சி அமைப்புக்களை பகுதி மற்றும் குறிப்பிட்ட பயிர்த்திட்டங்களில், அரசுத் திட்ட உதவிகளுக்கான பயன்களைக் கண்டறிதல், இடுபொருள்களையும் துணைக் கருவிகளையும் கொள்முதல் செய்தல் மற்றும் அவற்றைப் பகிர்வு செய்தல் போன்ற திட்ட உருவாக்கத்தில் ஊரக

அமைப்புகள் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். கிடைக்கக்கூடிய வளங்களைப் பெருமளவு நிலம் மற்றும் நீர்ப் பயனீட்டைப் பயன்படுத்திக் கொள்வதற்காகவும், பயிர் உற்பத்தி இலக்கினை எய்தி சிறிய மற்றும் நடுத்தர, விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலளர்கள் ஆகியோரின் நிலையை சமூக, பொருளாதார தரம் எய்தவும் வேளாண் கடன் அளிப்பது இன்றியமையாத ஒன்றாகும். உள்ளாட்சி அமைப்புக்கு அதிகாரங்களை ஒப்படைப்பது தொர்பில் பகுப்பாய்வு செய்வதற்காகப் பின்வரும்தலைப்புகளில் வேளாண் நடவடிக்கைகைள் மேற்கொள்ளப் பெறலாம்.

(அ) வேளாண் உற்பத்தியினைப் பெருக்குதல் (ஆ) வேளாண் பரப்பு மற்றும்உற்பத்தி திறனை மதிப்பீடு செய்தல் (இ) இடுபொருள்க்ளை வழங்குதல், (ஈ) வேளாண் விரிவாக்கச் செயற்பாடுகள் (உ) வேளாண் கடன் முறை (ஊ) அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை.

(அ) வேளாண் உற்பத்தியினைப்பெருக்குதல்

09. பயிர் உற்பத்தித் திறனை உயர்த்துதல், நிலை நிறுத்தல் மற்றும் உழவர்களின் இலாபத்தை உயர்த்துதல் போன்றவை வேளாண்மைத் துறையின் அறைகூவலாக இருக்கும். இந்நிலையினை சரியான திட்டமிடல் அவசியமாகிறது. தற்போது வட்டார அளவில் வேளாண்மை பணிகளை வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள் வேளாண் விரிவாக்கம் மற்றும் இதர பணிகளை செயலாக்குகின்றனர். அவருக்கு உதவியாக உதவி வேளாண் அலுவலர் (உ.வே.அ) மற்றும் பண்ணை செயல்முறை அலுவலர் (ப.செ.அ) செயல்படுத்துகின்றனர். ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் குறைந்தது ஒரு உதவி வேளாண்மை அலுவலர் (அ) பண்ணை செயல்முறை அலுவலர்கள் உழவர்களுக்கு திறம்பட உதவி செய்கின்றனர்.

ஆ. வேளாண் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் மதிப்பீடு செய்தல்

10. வேளாண்மை துறை, பொருளாதாரப் புள்ளியில் துறை மற்றும் வருவாய் துறை ஆகியவைகளின் ஒத்துழைப்புடன் பயிர் விளைச்சலை மதிப்பீடு செய்கிறது. வட்டாரத்திலுள்ள வேளாண்மை அலுவலர் அங்குள்ள வட்டார புள்ளியியல் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பயிர் அறுவடை ஆய்வு நடத்தி உற்பத்தியையும் பயிர் விளைச்சலையும் மதிப்பிடுகின்றனர். இந்த பணியில் ஊராட்சிகள் உதவ முடியும். ஊராட்சி ஒன்றியங்களின் உதவியை பயிர்ப்பகுதி மற்றும் விளைச்சல் ஆகியவற்றை மதிப்பீடு செய்யவும் பயன்படுத்திக் கொள்ளலாம். மாவட்ட ஊராட்சியானது பயிர் விளைச்சல் போட்டிக்கு ஏற்பாடு செய்து குறிப்பிட்ட பயிர்களை அதிக மகசூலைப் பெற்றிருக்கின்ற சிறந்த விவசாயிகளுக்கு பரிசுகளை வழங்கும்.

இ. இடுபொருள்களை பகிர்வு செய்ய ஏற்பாடு செய்தல்

11. உற்பத்தியைப் பெருக்குவதற்கு நேரத்துடன் உழவர்களுக்கு இடுபொருள்கள் வழங்க வேண்டியது இன்றியமையாததாகும். தற்போது இடுபொருள் முறையே விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் பசுந்தாள் உரங்கள் ஆகியவைகளை பல்வேறு முகமைகளால் வழங்கப்படுகின்றன. இடுபொருள் வழங்குவதில் உள்ள சில சிற்றப்பம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

விதைகள்

12. நல்ல தரமான உயர்வகை உற்பத்தி தரக்கூடிய விதைகள் தயாரிப்பதற்கு உயர்ந்த தொழில்நுட்ப அறிவு அவசியம். தமிழ்நாடு வேளாண்மை பல்லைகலைக் கழகம் ஆதார விதைப்பெருக்க உற்பத்தியை மேற்கொள்கின்றன. ஆதார விதை 1 மற்றும் 2, 44 அரசு பண்ணைகள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆதார விதைகளை பயன்படுத்திய விவசாயிகளின் வயல்களில் சான்று பெறப்பட் விதைகள் உற்பத்தி

செய்யப்படுகின்றன. தரமான விதைகள் அரசுக்குச் சொந்தமான விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. விதை சுத்திகரிப்பு நிலையங்கள் (16 பெரிய 3 நடுத்தர மற்றும் 51 சிறிய நிலையங்கள்) வருட கொள்ளவு 28,000 டன் ஆகும். எனவே விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டு வேளாண் விரிவாக்க மையங்கள் (கிடங்கு) மூலம் உழவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. 1995 – 96 ஆம் ஆண்டு எய்தப்பட்ட விதைப் விநியோகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(டன்னில்)

	பயிர்	1995 - 96ம் ஆண்டு வழங்கப்பட்ட விதை அளவு
1.	நெல்	19781
2.	சிறு தானியங்கள்	409
3.	பயறு வகைகள்	1892
4.	பருத்தி	359
5.	எண்ணெய் வித்துக்கள்	8309
	மொத்தம்	30750

உரங்கள்

13. வேதியியல் சார்ந்த உரங்களைப் பயிர் வளர்ச்சியின் பல்வேறு பருவங்களில் சரியான அளவு மற்றும் சரியான நேரங்களில் இடுவதால் முழுமையான உற்பத்தித் திறனை அடைய முடியும். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையின் ஒரு பகுதியாக இயற்கை மற்றும் உயிரியல் உரங்களை பயன்படுத்த ஊக்கப்படுத்தப்பட்டது. வேதியியல் சார்ந்த உரங்களின் நுகர்வு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(இலட்சம் டன்களில்)

வ. எண்	இனம்	1993 - 94	1994 - 95	1995 - 96
1.	தழை	4.44	4.56	4.18
2.	மணி	8.61	1.80	1.42
3.	சாம்பல்	2.06	2.39	1.96
	மொத்தம்	8.11	8.75	7.56

பூச்சிக் கொல்லிகள்

14. தமிழ்நாட்டில் பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்கள் குறித்து முறையாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. களப்பணி புள்ளி விவரங்கள் வாரந்தோறும்7356 இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு தொகுக்கப்படுகின்றன. புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு உரிய எச்சரிக்கைகள் வழங்கப்படுகின்றன. அரசாணை எண். 150 வேளாண்மை (தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம்) துறை நாள் 9.3.93ல் தேசீயத் திட்டங்கள் ஒருமித்த பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்துதல் மற்றம் இயற்கை இடர்கள் ஆகியவற்றிற்குத் தேவைப்படுவது தவிர்த்து மாநிலம் முழுவதிலும், பூச்சிக் கொல்லிகளை விற்பனை செய்யக் கூடாதென வேளாண்மை இயக்குநர் ஆணையிடப்பட்டுள்ளார்.

மேலும், பயிர் பாதுகாப்பு பூச்சிகொல்லிகள், கூட்டுறவு அமைப்புகளான தமிழ்நாடு கூட்டுறவு விற்பணை இணையம். தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம், ஆரம்ப வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகங்கள் ஆகியவற்றால் விற்பனைச் செய்யப்படுதல் வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. இருப்பினும் இம்மாநிலம் முழுவதும் வேளாண்மை துறையானது ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு மேலாண்மையினை நெல், பருத்தி மற்றும் கரும்பு ஆகிய பயிருக்கு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஈ வேளாண்மை விரிவாக்கம் மற்றும் உழவர் பயிற்சி

15. வேளாண்மையில் அடையப்பெற்ற இப்போதைய வளர்ச்சிகளை கிராம அடிப்படையிலான பயிற்சித் திட்டங்கள் செயல் விளக்க கூட்டங்கள், பண்ணை செய்தி மடலை வெளியிடுதல், திங்கள் செய்தி மடல்கள், விவசாயிகள் தொகுதி முறை கலந்துரையாடல்கள், உழவர் சுற்றுலா மற்றும் உழவர் விழா போன்றவற்றின் வாயிலாக விவசாயிகளுக்கு தொழில் நுட்ப இயல் சார்ந்த பயிற்சியை அளிப்பதே வேளாண்மை விரிவாக்கத்தின் நோக்கமாகும். கிரிசி விஞ்ஞான கேந்திரா மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம் அல்லாமல் மொத்தம் 12 மாவட்டங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்குகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு உழவர் பயிற்சி நிலையமும் 22 கிராமம் சார்ந்த பயிற்சியும், 10 உழவர்கள் ஆலோசனை நடத்தும் அமைப்பாளர் பயிற்சியும், பல்வேறு திறன்களின் மீது 110 இடைநிலை செயல்விளக்க சுற்றுப்பயிற்சியும் நடத்தப்படுகின்றன. இந்நோக்கத்திற்காக 1995 ஆம் ஆண்டு ரூ. 13.57 இலட்சம் செலவிடப்பட்டது. 1995 – 96 ஆம் ஆண்டின் இலக்கு மற்றும் சாதனை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	பொருள்	1995 - 96 ஆம் ஆண்டின்	
		இலக்கு	சாதனை
1.	பண்ணையில் பணியாற்றும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான கிராம அடிப்படையிலான பயிற்சி	264	259
2.	உழவர் விவாத குழு அமைப்பாளர்களுக்கான கிராம அடிப்படையிலான பயிற்சி	120	151
3.	இடைநிலை செயல் விளக்கம் மற்றும் சுற்று பயிற்சி	320	1311

பொதுவாக வேளாண் விரிவாக்கப் பணி மேம்பட்ட வேளாண் தொழில்நுட்பத்தை உழவர்களுக்கு எடுத்துச் சொல்லுதல், இடுபொருள் வழங்குதல், உழவர் பயிற்சி, செயல்முறை விளக்கம், ஆராய்ச்சியைப் பின்பற்றுதல், மண்வள ஆய்வு, பசுந்தாள் உரம் ஊக்குவித்தல், உரச்செயல் திட்டம், தரக்கட்டுப்பாடு, செடிப் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவைகள் உள்ளிட்டதாகும். பயிற்சிக்காக உழவர்களை கண்டறிதல், இடுபொருள்களை வழங்குவதில் உதவியாக இருத்தல் ஆகிய பணிகளை ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வழங்கலாம். வேளாண்மைத் துறை வேளாண் திட்டங்களை செயற்படுத்த வேண்டி வேளாண் விரிவாக்கம் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவை மீது பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும்.

உ. வேளாண் கடன்கள்

16. குறுகிய கால மற்றும் மத்திய கால கடன் வழங்கும் நிறுவனங்கள் கீழ்க்காணும் மூன்று அடுக்கு முறையைக் கொண்டதாகும்.

1. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி (மாநில அளவில்)

2. மத்திய கூட்டுறவு வங்கி (மாவட்ட அளவில்)

3. கிராம கூட்டுறவு வங்கி (கிராம அளவில்)

பொதுவாக ஒரு கிராம கூட்டுறவு வங்கி ஒன்று அல்லது இரண்டு கிராமங்களை எல்லையாகக் கொண்டு செயல்படுகிறது. இம்மாநிலத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் இவ்வங்கியின் செயல்பாட்டு எல்லைக்குள் உள்ளன மொத்தம் 4655 கிராமக் கூட்டுறவு வங்கிகள் மாநிலம் முழுவதும் பயிர்கள் மீது குறுகிய கால கடன் மற்றம் பால் வளம், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் பல வேளாண் சார்ந்த தொழில்களுக்கு மத்திய கால கடன் வழங்கி வருகின்றன. குறுகிய, மத்திய காலக் கடன் வழங்குவதில் ஏற்பட்ட முன்னேற்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வருடம்	குறுகிய கால கடன்	மத்திய கால கடன்
	(ரூபாய் கோடியில்)	
1992 – 93	340.86	45.75
1993 – 94	439.54	52.65
1994 – 95	561.74	61.97
1995 – 96	561.37	65.17

ஊ. அறுவடைக்குப் பிந்திய தொழில் நுட்பம்

17. தமிழ்நாட்டில் அதிக மகசூல் தரக்கூடிய பயிர் வகைகள், தீவிர வேளாண்மை நடைமுறைகள், தொழில்நுட்ப வளர்ச்சி, ஆகியவைகள் வேளாண்மையில் உயரளவு உற்பத்தியை அடையவழி வகுத்தன. இ ருப்பினும் உற்பத்தி உயர்ந்த அளவு அறுவடைக்குப் பிந்திய தொழில் நுட்பம் வளர்ச்சியடையவில்லை. இதனால் நுகர்வோரும் விவசாயிகளும் எதிர்ப்பார்த்த பயன்பெற முடியாமல் போனது. அறுவடையின் போதும், அறுவடைக்குப் பின்னும் அதிக அளவு விளைச்சல்கள் விரயமாவதாக தெரியவந்துள்ளது. எனவே உள்ளாட்சி நிறுவனங்கள் அறுவடைக்கு பிந்திய தொழில் நுட்ப மேம்பாட்டையும், தானியப் பாதுகாப்பு இயக்கத்தையும் நடத்துவதற்கு சரியான அமைப்புகளாகும்.

18. சுருங்கக்கூறின், மாவட்ட ஊராட்சிகளிடம் (1) உரிய நேரத்தில் வேளாண் இடுபொருள்கள் கிடைக்கக் செய்தலை உறுதிப்படுத்துதல் (2) கடன் வழங்குவது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல் (3) இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் இழப்புக்களை மதிப்பிடுதல், துயர் துடைப்பு நடடிவக்கைகளை உருவாக்குதல் போன்றவற்றிற்கு உதவி செய்தல் (4) மாவட்ட வேளாண் திட்டத்தை வரைதல் ஆகிய அதிகாரங்களை ஒப்படைக்கலாம். ஊராட்சி ஒன்றியங்கள் (1) பயிர் மகசூல் மதிப்பீடு – போட்டி ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல் (2) பரப்பு உற்பத்தி, நிலத்தின் தரம் முதலியவை குறித்து புள்ளி விவரங்களை தொகுக்கலாம். (3) உரிய பயிர்களை பயிரிடுவது குறித்து ஆலோசனை வழங்கலாம். (4) புதிய தொழில் நட்ப விளக்கத்திற்கு ஏற்பாடு செய்யலாம். (5) தொழில் நுட்ப மாறுதலுக்காக ஊராட்சி, மாவட்ட ஊராட்சி மற்றும் வேளாண் வல்லுநர்கள் ஆகியோர்களிடையே தொடர்பை ஏற்படுத்தலாம். (6) இடுபொருள்களின் தேவையை கணக்கிட்டு அதனை பெற்று உழவர்களுக்கு ஊராட்சிகள் மூலம் பகிர்ந்தளிப்பதில் ஈடுபடச் செய்யலாம். (7) கடன் வழங்கு முறையை தயாரித்து கண்காணிக்கலாம் (8) மண்வள ஆய்வு மற்றும் கிடங்கு பராமரித்தல் உட்பட அனைத்து களப்பணியாளர்களின் பணிகளையும் கண்காணிக்கலாம் (9) வேளாண்மை கிடங்குகளை செயற்படுத்தலாம் மற்றும் அணைத்து வேளாண் திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். ஊராட்சிகள் – (1) பயிர் மகசூலை மதிப்பீடு செய்ய உதவிடலாம் (2) கடன் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களால் பயன்பெறுகின்ற விவாசயிகளை

கண்டறியலாம். (3) வேளாண் திட்டத்தின் கீழ் இடுபொருள்களையும் துணைக்கருவிகளையும் பகிர்வு செய்யலாம். (4) பயிர் காப்பீடு செய்யுமாறு விவசாயிகளை ஊக்கப்படுத்தலாம் (5) இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் இழப்பினை மதிப்பிடலாம் (6) உதவி நடவடிக்கைகளையும் இழப்பை சரிசெய்யும் பணிகளையும் பார்வையிடலாம்.

மூன்று அடுக்குமுறையில் ஊரகப் பகுதியில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படும் அதிகாரகங்கள் பற்றிய பின்வரும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது

I. ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
வேளாண் உற்பத்தியை அதிகரித்தல்	1. கிராமங்களின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டத்தை தயாரிக்க ஊராட்சிகளுக்கு உரிமைக் கொடுக்கப்படுகிறது. கிராம அளவில் பகுதித் திட்டமானது பொதுவான வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கருவாக இருக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இயற்கை வளங்களான மண், நீர், தாவர வளர்ச்சி ஆகியவற்றை செயலாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் போன்றவை நிலையான முறையில் முன்னேற்றம் அடைவதற்கான சூழ்நிலையின் முதல் கட்ட நடவடிக்கையாக இருக்கும். தனி நபர்கள் நேரடியாக விவசாயப் பணிகளை மேற் கொள்கின்றனர். தொழில் நுட்பங்களை பின்பற்றுதல், பயிர் திட்டமிடல் போன்றவை தொடர்பில் விரிவாக்க கல்வி அளிப்பது ஊராட்சியின் முக்கிய பணியாகும். கிராம பஞ்சாயத்துக்கள் எளிய வகையில் இடுபொருள்கள் கிடைக்க ஏதுவாக உள்கட்டமைப்பு வசதிகளை செய்து தரலாம். இப்போதைய வேளாண் செயற்பாடுகள், கிராம அளவில் நடைபெறும் திட்டங்கள் அனைத்து பணிகளும் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படும் கிராமப்பகுதி திட்டத்தைச் சார்ந்து தெடார்புத் திட்டங்கள் உருவாக்குதல் வேண்டும்.

II. ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. வேளாண் உற்பத்தியை அதிகரித்தல்	வேளாண்மை பொறுத்த வரையில் ஊராட்சி ஒன்றியமானது ஒன்றியப் பகுதியில் வேளாண்மையை மேற்பார்வையிட்டு ஊராட்சி பகுதித் திட்டத்தை ஒருமுகப்படுத்த வகை செய்யும், வேளாண்மை வளத்தைக் கருதி, விடுபாட்டையும், மேற்கொள்ளப்பட வேண்டிய முயற்சிகளையும் கண்டறிந்து மண், நீர், தாவர வளர்ப்பு மற்றும் தேவைப்படும் புல் தரைகள் ஒன்றியப் பகுதியில் உள்ள கால்நடைகளுக்கான நீர் மற்றும் தீவனம் போன்றவற்றில் உள்ளாற்றலை முழுமையாக உணர்ந்து மேற்கொண்டு முயற்சியில் ஈடுபட வேண்டும். ஒன்றியத்தின் இச்செயற் கடமைகளை நிறைவேற்றிட இயன்ற வகையில்

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
		ஊராட்சி ஒன்றிய அளவில் உள்ள வேளாண் வளர்ச்சி அலுவர்கள் விரிவாக்க அலுவலராக (வேளாண்மை) செயற்படுத்தல் வேண்டும். பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருதல் வேண்டும்.
		2. பல்வேறு முகமைகளுடனும், இணைந்து தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதன் வாயிலாக பயிர் மகசூல் மதிப்பீடு செய்ய உதவி செய்தல்.
		3. பயிர் பரப்பின் அடிப்படை விவரம், அப்பகுதியில் வளரும் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் ஆகிய விவரங்களை உருவாக்கிட வேண்டும்.
		4. அமைவிட தன்மைக்கு தகுந்தாற் போல உரிய பயிர்களை, பயிர் முறைகளை குறித்து ஆலோசனை வழங்குதல்.
		5. உழவர் சந்தை, உழவர் நாள், உழவர் பயிற்சி ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல். தொழில் நுட்பங்களை அனைத்து மட்டத்திலும் கொண்டு செல்வதில் மாவட்ட மற்றும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி ஆகியவற்றிற்கிடையே தொடர்பு ஏற்பட நடவடிக்கை எடுத்தல்.
		6. புதிய தொழில் நுட்பங்கள் குறித்து பண்ணையில் சென்று நேரில் பார்வையிடுதல் மற்றும் செயல் முறை விளக்கம் அளித்தல்.
		7. கள அளவிலான விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் (வே.அ, உ.வே.அ. மற்றும் க.செ.அ) செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
2.	இடுபொருள்களை தேவையை மதிப்பிடுதல் மற்றும் பகிர்ந்தளித்தல்	1. ஊராட்சிகளுக்கான இடுபொருள் தேவைகளை மதிப்பீடு செய்து உரிய நேரத்தில் வழங்க ஏற்பாடு செய்தல்.
		2. இடுபொருள்கள் வழங்கும் முகமைகள் போதிய அளவுக்கு இருப்பு வைத்துக் கொள்ளவும் போக்குவரத்து வசதிகளைப் பெற்றிருக்கவும் உதவி செய்தல் மற்றும் இடுபொருள்கள் வழங்கும் முறையை பேணிக் கண்காணித்தல்.
3.	கடன் ஆதாரம்	1. வேளாண் கடன் திட்டம் தயாரித்தல், நிதி நிறுவனங்கள் உரிய நேரத்தில் கடன் வழங்க முன்னோடி வங்கியுடன் ஒருங்கிணைப்பு செய்தல்.

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
		2.	கடன் வழங்கு முறையை கண்காணித்தல் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள கூட்டுறவு கடன் நிறுவனங்களை வலுப்படுத்திட உதவி செய்தல்.
4.	விரிவாக்க ஆதாரம்	1.	விரிவாக்கப் பணியாளர்கள் பயணத்திற்காக திட்டமிடுதல் மற்றும் விவசாயிகளுக்கும் விரிவாக்கப் பணியாளர்களுக்குமிடையே சிறந்த தொடர்பினை உறுதி செய்தல்.
		2.	திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக விரிவாக்க அலுவலர்களை கண்டறிதல்.
5.	மண்வள ஆய்வு	1.	மண்வள ஆய்வுப் பணிகளை கண்காணித்தல் மற்றும் மண் வள ஆய்வுப் பணிகளுக்கான இடங்களை கண்டறிவதற்கு ஊராட்சிகளுக்கு உதவி செய்தல் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கான மண்வள வரைபடத்தை தயாரித்தல்.
		2.	மண்வள ஆய்வு முடிவிற்கிணங்க மண் செழிப்பினை மேம்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு உதவி செய்தல்.
6.	அறுவடைக்குப் பிந்திய மேலாண்மை	1.	கூட்டுறவு, ஒழுங்குமுறை விற்பனை மற்றும் ஊராட்சி ஒன்றிய பகுதி உள்ளிட்ட அங்காடிகளுக்கான தேவையைக் கண்டறிதல்.
		2.	உணவுப்பதனிடுதல், விவசாயிகளுக்கான அறுவடைக்குப் பிந்திய பயிற்சிகளையும், கருத்துப் பயிலகம் அளித்தல்.
		3.	வேளாண் பதனிடுதல் மற்றும் வேளாண் வணிகம் ஆகியவற்றிற்கான உள் கட்டமைப்புத் தேவையை கண்டறிந்து ஏற்புடைய முகமைகளின் வாயிலாக அத்தகையை உள் கட்டமைப்புகளை மேம்படுத்தல்.
7.	இடர்தாங்கு மேலாண்மை	1.	இயற்கை இடர்பாடுகள் காரணமாக ஏற்படும் பயிர் இழப்புகளை மதிப்பிட்டு நிவாரணம் சம்பந்தமான செயற்பாட்டினை கண்காணித்தல்.
		3.	பயிர் காப்பீட்டுறுதி திட்டங்களை விரிவாக்க உதவுதல்.
8.	திட்டங்களின் செயலாக்கம்	1.	ஊராட்சி ஒன்றிய பகுதியில் செயற்படுத்தப்பட்ட அனைத்து மாநில, மத்திய வெளிநாட்டால் உதவி பெறும் செயல்திட்டங்கள் நடவடிக்கைகள் அனைத்தையும் ஆய்வு செய்தல்.

III. மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
1.	வேளாண்மைத் திட்டமிடுதலும் வளர்ச்சியும்	1.	ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கான இடுபொருளைக் கணக்கில் கொண்டு மாவட்டத் தொலைநோக்கு வேளாண்மை திட்டம் ஒன்றினை வரைதல்.
		2.	வேளாண்மை பொருள்களைப் பதனிடுதல் வேளாண் பொருள்களை விற்பனை செய்தல் மற்றும் தேவைப்படும் வேளாண் உள்கட்டமைப்புகள் ஆகியவை மீது மாவட்ட திட்டமொன்றினை வரைந்து அப்பொருள் தொடர்பில் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
		3.	ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, மாநில அரசு ஆகியவற்றின் எல்லைப் பிரிவு நடவடிக்கைகளை கோடிட்டுக் காட்டி செயலாற்றுவதற்கான திட்டங்களை உருவாக்குதல்.
		4.	மாவட்டத்தில் வேளாண்மை வளர்ச்சியை ஆய்வு செய்தல்
		5.	நேரத்துடன் கடன் உட்பட அனைத்து இடுபொருள்கள் கிடைக்க செய்தல்.
		6.	இயற்கை சீற்றம் காரணமாக ஏற்படும் இழப்பினை மதிப்பீடு செய்ய உதவுதல் மற்றும் துயர்துடைப்புத் திட்டங்களை உருவாக்குதல், மற்றும் துயர்துடைப்பு பணியில் வருவாய்த்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுத்தல்.

நிர்வாக சிக்கல்கள்

19. தொழில் நுட்பங்களைச் செயற்படுத்துதல், பயிற்சி, செயல்முறை விளக்கம், இடுபொருள்களையும் துணைக்கருவிகளையும் கொள்முதல் செய்து பகிர்ந்தளித்தல் போன்ற அனைத்து திட்டங்களுக்கும் விவசாயிகளைக் கண்டறிதல் போன்றவை வேளாண் அலுவலர்களாலும் வட்டார வளர்ச்சி அலுவலர்களாலும் நிறைவேற்றப்டுகின்றன. இதற்கு முன்னர் வேளாண்மைச் செயற்பாடுகளுக்கு ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் வேளாண்மை அலுவலர் ஒருவர் பொறுப்பேற்றிருந்தார். நிருவாக அமைப்பு முறையில் அவர் வட்டார வளர்ச்சி அலுவலர்களின் கட்டுப்பாட்டில் இருந்தார். வேளாண்மை அலுவலரின் கீழ் சில விரிவாக்க வேலைகளை செய்து வந்தனர். அதன் பிறகு நிர்வாக மற்றும் தொழில்நுட்பக் கட்டுப்பாடானது வேளாண்மை அலுவலரின் கீழ் வந்தது. அனைத்து அலுவலர்களும் பணியாளர்களும் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இப்போது பணியாற்றுகின்றனர். வேளாண்மை விரிவாக்கம், செயல்முறை விளக்கம், பயிற்சி ஆகியப் பணிகள் தொழில்நுட்பம் வாய்ந்தபடியால் அவைகளை வேளாண்மைத் துறையே தொடர்ந்து மேற்கொள்வது இன்றியமையாததாகும். பயிர் அடிப்படையிலான திட்டங்களின் கீழ் பயன்பாடு சென்றடைய வேண்டிய விவசாயிகளைக் கண்டறிதல், கொள்முதல் மற்றும் உதவியளிக்கக் கூடிய விவசாயிகளைக் கண்டறிதல், கொள்முதல் மற்றும் உதவியளிக்கக்கூடிய வகைகளைப் பகிர்ந்தளித்தல் ஆகியவைகளை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கலாம். வேளாண்மை வளாச்சி அலுவலரை அவரது பணியாளர்களுடன் ஊராட்சி ஒன்றிய மன்றத்துடன் சேர்க்கப்படுதல் வேண்டும். வேளாண் அலுவலர்கள், உதவி வேளாண் அலுவலர்கள்/வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வேளாண்மை சிறப்புப் பயிற்சியில் உதவி செய்வார்கள். மாவட்ட அளவில் வேளாண் வளர்ச்சி

அலுவலரின் செயற்பாடுகளை இணை வேளாண்மை இயக்குநர் மேற்பார்வை செய்தும் மறு ஆய்வு செய்தும் கண்காணிப்பார். இணை இயக்குநர் தொழில் நுட்ப அறிக்கையை அனுப்புவார். ஆனால் திட்ட ஆய்வு, கண்காணிப்பு குறித்த வேளாண் அறிக்கையை வேளாண் இயக்குநருக்கு அனுப்புவார். வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பணியாளர்கள், அறிக்கைகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுப்பப் பெறலாம். அவர்கள் தொடர்ந்து அரசுப் பணியாளர்களாகவே இருப்பர். ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் அமைந்த அனைத்து வேளாண்மை திட்டங்களும் அவற்றின் பணியாளர்களுடன் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

நிதிச்சிக்கல்கள்

20. வேளாண் துறையானது நிதி ஒதுக்கீட்டினை மத்திய மற்றும் மாநில அரசிடம் இருந்து பெறுகிறது. இருப்பினும் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றுவது கடினமானதாகும். வேளாணமை துறையானது கீழ்காணும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கலாம் என வேளாண்மை துறை க.எண். 49274 / ப. தி / 96 –97 நாள் 7.2.97இல் தெரிவித்துள்ளது.

1. சமுதாய கதிர் அடித்தளம்

2. கழிவுநீர், சாக்கடை நீர் ஆகியவற்றை பயன்படுத்தி உள்ளூர், எரு ஆதாரங்களை பெருக்குதல்.

3. பள்ளி செல்லும் குழந்தைகளுக்குத் தென்னங்கன்றுகளை வழங்குதல்.

4. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நாற்றாங்கல் அமைத்தல்.

மேலும் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறையின் 10 திட்டங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. முதல் கட்டமாக கீழ்கண்ட திட்டங்களில் ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் கண்டறியப்பட்டு பயனடைய இருக்கும் விவசாயிகளை கண்டறிந்து குறைந்த விலையில் பெறப்பட்டும் பொருட்களை விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்தல் வேண்டும். இச்செயற்பாட்டு நடைமுறை நிலைநிறுத்தப்படுகையில் திட்டச் செயலாக்கமானது இவ்வுள்ளாட்சி அமைப்புகளிடம் முழுமையாக ஒப்படைக்கப்படும்.

வ.எண்	திட்டம்	1995 - 96 ஆம் ஆண்டு நிதிச் செயலாக்கம் (இலட்சம் ரூபாயில்)
1.	ஒருங்கிணைந்த பயிர் வகை மேம்பாட்டுத்திட்டம்	604.50
2.	தீவிர பருத்தி விளைச்சல் மேம்பாட்டுத் திட்டம்	232.312
3.	தேசியப் பயறுவகைகள் உற்பத்திப் பெருக்குத் திட்டம்	190.200
4.	எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம்	1848.222
5.	பணை எண்ணெய் வளர்ச்சித் திட்டம்	170.657
6.	கரும்பு வளர்ச்சித் திட்டம்	99.989
7.	முந்திரிக்கான ஒருங்கிணைந்த திட்டம்	134.930
8.	ஒருங்கிணைந்த வெப்ப மண்டல, வறட்சிப்பகுதி பழத் தோட்ட திட்டம்	84.62
9.	ஒருங்கிணைந்த நறுமணப் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டம்	152.00
10.	தோட்டப் பயிர்களுக்கான சொட்டுநீர் பாசன முறை	500.00

நிலச்சீர்திருத்தத்தையும் நிலத் தொகுப்பினையும் செயற்படுத்துதல்

(இனம் . 2 (அ))

01. நிலச்சீர்த்திருத்தத்தின் நோக்கமானது, சமூக நீதிக்கண்ணோட்டத்திலிருந்து நில உடமைகளின் உரிமையை மறு பங்கீடு செய்வதும், நிலத்தின் உச்ச பயன் பயன்பாட்டுக்காக உடைமை இயங்கு முறையினை மாற்றியமைத்தலும் ஆகும். இதனுடன் கூட குடிவாரச்சிக்கலும் இருக்கிறது. அதாவது, நில உடைமைகளின் உரிமைகளும் நிலைமைகளும் நீலச்சீர்திருத்தங்கள் நோக்கம் (குடிவார குத்தகைக்குக்கு) பாதுகாப்பு ஏற்படுத்துதல், குத்தகையை அறுதியிடல் உடைமையினை அளித்தல் முதலிய நிலச்சீர்திருத்தத்தினுடைய எண்ணம் முழுவதும் இடைத்தரகர்களை ஒழிப்பதிலும் உண்மையான உழவரை அரசின் நேரடித் தொடர்புக்குக் கொண்டு வருதலிலுமே உள்ளது. இத்துடன், குடிவாரப் பாதுகாப்பிற்கும் குத்தகைக்கும் வழிவகை செய்வதுடன் ஒழுங்குபடுத்தி ஒரு உகந்த சூழலை உருவாக்கி உழவர்கள் தங்களுடைய உழைப்பின் பயனைத் துய்க்கும் உறுதியை உணரச் செய்தலுமாகும்.

02. 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் சட்டம் (நில உச்சவரம்பை அறுதியிடல்) உழவு நிலங்களினுடைய உரிமையாளர்கள் வேறுபாட்டை குறைக்கும் நோக்குடனும் இத்தகைய நிலங்கள் ஒரு சிலரிடம் குவிந்துகிடப்பதை மாற்றி நிலமில்லா ஏழைகளுக்கு இந்நிலங்களைப் பகிர்ந்தளிக்கும் எண்ணத்துடனும் சட்டமாக்கப்பட்டது. இச்சட்டம் 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் 6ம் நாள் நடைமுறைக்கு வந்தது. தொடக்கத்தில், ஒரு குடும்பத்திற்கு 60 திட்டமான ஏக்கர்கள் உச்சவரம்பாக அறுதியிடப்பட்டது. 1.3.72 முதல் 5 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 15 திட்ட ஏக்கராகக் குறைக்கப் பட்டு கூடுதல் உறுப்பினர் ஒவ்வொருக்கும் கூடுதலாக 5 திட்ட ஏக்கர்கள் அனுமதிக்கப்பட்டு உச்ச அளவாக 30 திட்ட ஏக்கர்கள் என வரையறுக்கப்பட்டது. உச்ச வரம்புக்கு மிகைப்பட்ட நிலம், 1965 ம் ஆண்டு தமிழ்நாடு நில சீரமைப்பு (உபரிநில பங்கீடு) சட்டத்தின் கீழ் தகுதி பெற்ற நிலமற்ற ஏழைகளுக்கு 3 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம், அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலம் பகிர்ந்தளிக்க கையகப்படுத்தப்பட்டது.

03. இந்திய அரசு, இத்தகைய உச்ச வரம்புக்கு மிகைப்பட்ட நிலத்தை ஒதுக்கீட்டாகப் பெற்றவர்களுக்கு நிதி உதவியளிக்கும் மத்திய அரசின் திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. எக்டேர் ஒன்றுக்கு ரூ.2,500 வீதம் நிதிஉதவி தரப்படுகிறது. இச்செலவை மத்திய மாநில அரசுகள் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. இந்த திட்டத்தின் கீழ் சிறப்பு ஏற்பாடொன்று ஆதி திராவிட வகுப்பினர் மற்றும் ஆதி திராவிட பழங்குடியினர் பயன்பெறும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது.

04. இதோடு கூட வேளாண்மைச் சீர்திருத்தங்களை நடைமுறைக்குக்கொண்டுவர குத்தகை சட்டங்களை அரசு அறிமுகப்படுத்தியது.

அவற்றில் முக்கியமானவை சில :

(i) 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம்

(ii) 1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உழவுக் குத்தகைதாரர் (நியாயமான குத்தகை வழங்கல்) சட்டம்

(iii) 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நில சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம்

(iv) 1961–ஆம் ஆண்டைய தமிழ்நாடு நில பொது பொறுப்பாட்சிகள் (வேளாண்மை நில நிர்வாகத்தை முறைப்படுத்தல்) சட்டம்

(v) 1969–ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவண சட்டம் (1969–ஆம் ஆண்டு தமிழ் நாடு சட்டம் எண்.10)

(vi) 1971–ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்போர் குடியிருப்பு உடைமை உறுதிபடுத்தல் (தமிழ்நாடு சட்டம் 40/ 71) சட்டம்

(vii) 1976 ஆம் ஆண்டைய ஊரகக் கைவினைஞர் (குடியிருப்பு உரிமை உறுதிப்பாடு) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 1976ன் 38வது பிரிவு)

(viii) 1990–ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு சட்டத்திருத்த சட்டம் (தமிழ்நாடு சட்டம் 39/ 1990)

05. நிலச்சீரமைப்பு வழக்குகளின் தீர்வை விரைவுபடுத்தும் நோக்கில் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நிலத்தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூரில் ஒரு நில தீர்பாயம் மாநில முழுவதுக்குமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. நான்கு வருவாய் நீதி மன்றங்கள் தனித்துணை ஆட்சியர்கள் கட்டுப்பாட்டின் கீழ் சேலம், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், மதுரை, திருநெல்வேலி கட்ட பொம்மன் ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன. தனித்துணை ஆட்சியர்கள், வருவாய் நீதிமன்றங்கள் தொடர்புடைய வட்டாட்சியரின் ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை முடிவு செய்யும் மேல்முறையீட்டு அதிகாரிகளாக இருக்கிறார்கள்

தற்போதைய நிர்வாக அமைப்பு முறை :

06. வருவாய்துறை, எல்லா நிலங்களுக்கும் பாதுகாவலனாக இருக்கிறது. எல்லா நிலத்தீர்வுக்கும் தொடர்புடையதாக அது இருக்கிறது. நிலக்கையகப்படுத்துகை, நில ஒதுக்கீடு, நிலஉரிமை மாற்றல், நில வருவாய் ஆவனங்கள் பராமரிப்பு, பட்டா வழங்குதல், நிலச்சீரமைப்பு, நில உச்சவரம்பு, வரி விதிப்பும் நகர்புற நில வரி மற்றும் வேளாண்மை வருமான வரி தொடர்பான வரி விதித்தல் மற்றும் திரட்டல் முதலான பணிகள் யாவும் வருவாய்துறையால் மேற்கொள்ளப்படுகிறது.

07. 1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1994ல் 21வது பிரிவு) அறக்கட்டளைகள் மற்றும் இனாம் மாற்றம், புறம்போக்குகள் பயன்பாடு ஊராட்சிகளினுடைய சமுதாய நிலங்கள் தொடர்பான சில அதிகாரங்கள் அளிக்கிறது. இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கீழ்கண்டுள்ள ஏற்பாடுகள் செயற்படுத்துவது இன்றியமையாதாகிறது.

மேற்படி சட்டத்தின் பிரிவு 122 வழங்கியுள்ளவை. நிலைக் கட்டளைகளின் அல்லது இனாம்களின் கட்டுப்பாட்டை மாற்றம் செய்வதற்கு அல்லது திரும்பக் கைக்கொள்வதற்கு நில நிர்வாக ஆணையருக்குள்ள அதிகாரம்

(1) (a) அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, நில நிர்வாக ஆணையர். அறிவிக்கை வாயிலாக 1817 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலைக்கட்டளைகள் மற்றும் அரசு உறுபொருள்கள் ஒழுங்கு முறை விதிகளின் வகை முறைகளின்படி, நில நிர்வாக, ஆணையருக்கு இணைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகளைப் பொறுத்த வரையில், அறநிலைக்கட்டளை எதனின் நிருவாகத்தையும் கண்காணிப்பையும், வட்டார ஊராட்சி மன்றமொன்றிற்கு அதன் இசைவுடன் வழங்கலாம், மற்றும் அதன் பேரில் அவை பொறுத்தவரையில் நில நிர்வாக ஆணையரிடம் இணைக்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களும் கடமைகளும், மேற்சொல்லப்பட்டுள்ள ஒழுங்குமுறை விதிகளில் தனிவகையில் அது பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாற்போன்று வட்டார ஊராட்சி மன்றத்திடம் இணைந்திருத்தல் வேண்டும் மற்றும், அத்தகைய நிலைக்கட்டளையை, வட்டார ஊராட்சி மன்றம் நிர்வகித்துக் கண்காணித்து வருதல் வேண்டும்.

(b) நில நிர்வாக ஆணையர் (a) எனுங் கூறின்படி ஓர் வட்டார ஊராட்சி மன்றத்திற்கு மாற்றியளிக்கப்பட்டுள்ள, நிலைக்கட்டளை எதனின் நிர்வாகத்தையும், கண்காணிப்பையும் அறிவிக்கை ஒன்றின் மூலமாகத் திரும்பக் கைக்கொள்ளலாம். ஆனால், அவ்வாறு செய்ய வேண்டுமென்று அரசிடமிருந்து பணிப்புரை வந்திருப்பின் அவர் அவ்வாறே செய்தாக வேண்டும், அவ்வாறு திரும்பக் கைக்கொள்ளப்படுவதன் பேரில், அந்த நிலைக்கட்டளையைப் பொறுத்த வரையில் வட்டார ஊராட்சி மன்றத்திடம் இணைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகள் அனைத்தும் அற்றுப்போதலு, முடிவுற்றுப் போதலும் வேண்டும்.

2) அரசு தன்னால் அல்லது பிற அதிகார அமைப்பு எதனாலேனும் திரும்பக் கைக்கொள்ளப்பட்ட அறக்கட்டளை இனாம் ஒன்றை வட்டார ஊராட்சி மன்றம் ஒன்றிடம், அதன் இசைவுடன் குறித்தளிக்கலாம். ஆனால் அத்தகைய இனாமிலிருந்து பெறுகிற நிகர வருமானமானது, அத்தகைய வட்டார ஊராட்சி

மன்றத்தின் நிதியங்களை முற்றிலும் எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தபடக் கூடுமோ அந்த நோக்கத்திற்கு பயன் படுத்தப்படலாம், மற்றும் அவ்வாறு குறித்தளிக்கப்பட்டதை அரசு நீக்கிவிடவும் செய்யலாம்.

3) ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் எதற்காகவும் கடைசியாக வட்டார ஊராட்சி மன்றமொன்று அமைத்துரு வாக்கப்படுவதற்கு முன்பு, 1920–ஆம் ஆண்டு சென்னை மாவட்டக் குழுமங்கள் (வாரியங்கள்) சட்டத்தின்படி மாவட்டக் குழுமமொன்றிடம் (வாரியத்திடம்) மேவியிருந்த நிலைக்கட்டளை எதனினும் நிர்வாகமும் கண்காணிப்பும், நிலைக்கட்டளை அமைத்திருக்கின்ற இடத்தின் மீது அதிகார வரம்பு செலுத்துகின்ற வட்டார ஊராட்சி மன்றத்திடம் மேவியிருந்தல் வேண்டும்.

சட்டப்பிரிவு 123. வட்டா ஊராட்சி மன்றத்தின் அலுவல்களைக் கூடுதலாக்க அரசிற்குள்ள அதிகாரம்.

விதிக்கப்படும் விதிகளுக்கு உட்பட்டு, வட்டார ஊராட்சி மன்றத்திற்கு அதன் சம்மதத்துடன் எந்த நிலையத்தின் நிர்வாகத்தையும் அல்லது எந்த வேலையை நிறைவேற்றுதலையும் அல்லது பேணுதலையும் வட்டார ஊராட்சி மன்றத்தின் உள்ளவாவோ அல்லது வெளியேயோ இந்தச் சட்டத்தில் ஏற்பாடு செய்திருந்தாலும் இல்லாவிட்டாலும், அரசாங்கம் நில நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது வருவாய்க் கோட்ட அலுவலர் அல்லது எவரும் அல்லது எந்தக் குழுவினரும் ஒப்புக் கொள்ளப்படும் வரையறைகளுக்குட்பட்டு மாற்றுதல் செய்யலாம்.

சட்டப்பிரிவு 134. இரயத்துவாரி நிலப்பரப்புகளிலுள்ள குறித்த சில புறம்போக்குகளைப் பயன்படுத்துவதை ஊராட்சி முறைப்படுத்துதல்

(1) இப்பிரிவின் விதிகள் இரயத்துவாரி நிலப்பரப்புகளுக்கு மட்டுமே பொருந்தும்.

(2) கீழ்க்காணும் புறம்போக்குகள், முறையே மேய்ச்சல் நிலங்கள் கதிரடிக்கும் களங்கள், சுடுகாடுகள் அல்லது இடுகாடுகள், கால்நடைத் தொழுவங்கள் வண்டிப் பேட்டைகள், தோப்புகள் ஊராட்சிகை சேரும் நிர்ணயிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கும், தடைகளுக்கும் உட்பட்டு மேற்சொன்ன புறம்போக்குகளின் உபயோகத்தை இப்புறம்போக்குகள் அரசாங்கத்திற்கு உட்பட்டவையென்றால் ஒழுங்கு செய்யும் அதிகாரம் ஊராட்சிக்கு உண்டு.

(3) மாவட்ட ஆட்சியர் ஊராட்சியுடன் கலந்து கொண்டு அறிவிக்கை மூலமாக (2) ஆம் உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு புறம்போக்கை, இந்தச் சட்டத்தின் அமலிலிருந்து நீக்கிவைக்கலாம். அவர் இந்த அறிவிக்கையை மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாம்.

(4) நிர்ணயிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கும், தடைகளுக்கும் உட்பட்டு, அரசாங்கத்தின் ஆட்சியிலுள்ள வேறு எந்த ஒரு புறம்போக்கின் உபயோகத்தையும் ஒழுங்கு செய்ய ஊராட்சிக்கு அரசாங்கம் ஒரு ஆணையால் அப்படிச் செய்ய அனுமதியளித்திருந்தால், ஊராட்சிக்கு அந்த அதிகாரம் வந்துசேரும்.

(5) நிர்ணயிக்கப்படக் கூடிய கட்டுப்பாடுகளுக்கும் தடைகளுக்கும் உட்பட்டு ஊராட்சி (2) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் உபயோகத்தை ஒழுங்குபடுத்தும் உரிமையுள்ள புறம்போக்கில் மரங்கள் நடலாம்.

சட்டப்படி 135. தமிழ்நாடு 1908 ஆம் ஆண்டு எஸ்டேட்டுக்கள் நிலச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட்ட பண்ணை தோட்டத்திலுள்ள சில பொது நிலங்களின் உபயோகத்தை ஊராட்சி முறைப்படுத்துல்

(1) 1908 தமிழ்நாடு நிலச் சட்டத்திற்கு (தமிழ்நாடு சட்டம் 1 1908 உட்பட்ட எஸ்டேட் நிலங்களில் அச்சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் குறிப்பிடப்படும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஊராட்சிக்குக் கீழ்கண்ட அதிகாரங்கள் இருக்கும்.

(a) அந்தச் சட்டத்தின் 3வது பிரிவின் (16) உட்பிரிவு (b) கூறில் சொல்லப்பட்டிருக்கும் நோக்கங்களுக்காக விடப்பட்டிருக்கும் நிலங்களின் உபயோகத்தை முறைப்படுத்துதல் அந்நிலங்களாவன; கதிரடிக்கும் களம்,

கால்நடைத் தொழுவம், ஊர் நத்தம் இன்ன பிற, அந்த ஊர் மக்களின் பொது உபயோகத்திற்காக விடப்பட்டிருக்கும், அந்த ஊருக்குள் இருக்கும் நிலங்கள்.

(b) அச்சட்டத்தின் 20–ஏ–வது உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் மாவட்ட ஆட்சியரின் அதிகாரங்களை பயன்படுத்துதல், அதாவது (a) கூறில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலம் முதலில் எதற்கென விடப்பட்தோ அதற்குத் தேவைப்படாதவிடத்து வேரொரு உபயோகத்துக்கு மாவட் ஆட்சியரின் அனுமதி பெற்றிருந்தால், அனுமதியளித்தல்.

(c) கூறு (a) –யின் மூலம் நிலங்களின் உபயோகத்தை முறைசெய்யும் உரிமை பெறும் ஊராட்சிகள் அவற்றில் மரம் நடல்.

இச்சட்டத்தினால் அல்லது இதனடியில் இயற்றப்படும் விதிகளினால் நிலம் எடுக்க ஊராட்சி அல்லது வட்டார ஊராட்சி மன்றத்துக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால் அதனை நிலம் எடுப்பு சட்டம் 1894 (மத்திய சட்டம் 1,1894) விதிகளின் படி கைப்பற்றலாம். அச்சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஈட்டுத் தொகையும் கைப்பற்றுவதற்கு ஆன செலவுகளும் கொடுத்த பிறகு அந்தச் சொத்து அந்த ஊராட்சி அல்லது வட்டார ஊராட்சி மன்றத்துக்கு சொந்தமாகும் (சட்டம் 137). ஒவ்வொரு ஆண்டிலும் அந்த மாநிலத்தில் வசூலாகும் நிலவரி (நீர்வரி உட்பட) தொகையிலிருந்து அரசாங்கம், ஒவ்வொரு வட்டார ஊராட்சி மன்றத்துக்கும் அந்த ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலுள்ள மக்களின் கணக்கின் மேல் நபருக்கு ஒரு ரூபாய் விதம் கணக்கிட்டால் வரும் தொகைக்கு சமமான ஒரு தொகையைத் தரவேண்டும் இப்படி வட்டார ஊராட்சி மன்றத்துக்கு வரவு வைக்கப்படும் தொகை, அந்த வட்டார நிலவரி ஒப்படைப்புத் தொகையாக குறிப்பிடப்படும்.

08. சற்றேறக்குறைய கடந்த 50 ஆண்டுகளாக சீரிய முயற்சிகள் மேற்கொள்ளபட்ட போதிலும், நில சீரமைப்பில், குத்தகை சட்டங்களும் அத்தகைய உபரி நிலங்களின் புனரமைப்பிலும் தரத்திலும் அளவிலும் நிறைய செய்ய வேண்டியிருக்கிறது. இப்பணியினை முழுமையாக வருவாய் நிர்வாக (அமைப்பு) இயந்திரத்தின் மூலமாகவே நில சீர்திருத்த நடவடிக்கைகளை ஆய்வு செய்தல் , கண் காணித்தல் மற்றும் ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்க மாநில திட்டக் குழுவின் பிரிவு பரிந்துரை செய்கிறது. ஊராட்சிகளினுடைய மும்முக அமைப்புகளுக்கு இடையில் எல்லை வரையறைப் பங்கானது கீழ்கண்டவாறு இருக்கலாம். மாவட்ட வருவாய் அதிகார அமைப்பு அலுவல்களை மேற்பார்வையிடலிலும் ஒருங்கிணைப்பதிலும் மாவட்ட ஊராட்சிகளுக்கு அதிகாரமளிக்கலாம். ஆய்வு, மாவட்ட ஊராட்சிகளால் செய்யப்படலாம். ஊராட்சி ஒன்றியங்கள் சிற்றூராட்சிகளிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைளைப் பொருத்தமட்டில் நில ஆவணங்களை மேம்படுத்தலாம் பராமரிக்கலாம். குத்தகை சட்டங்களிலும் உபரி நில பங்கீட்டிலும் பங்கேற்கலாம். நில உச்சவரம்பும் குத்தகை அளவு ஆகியவற்றை செயல்படுத்துவது தொடர்பான சட்ட விசாரணை நடத்துவதில் ஊராட்சி ஒன்றியமானது சட்ட அமைப்புக்கு உதவலாம். அனைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் ஊராட்சி வாரியான நில உச்சவரம்பு அளவுகளில் இதுவரை எடுக்கப்பட்ட மற்றும் எடுக்கப் படவுள்ள விவரங்களைத் தொகுக்க ஊராட்சி ஒன்றிய குழு ஏற்பாடு செய்யலாம். நில உச்சவரம்பு உபரி நிலத்தையும் நில ஒதுக்கீடு தேவைப்படும் தனி நபர்களை அல்லது குடும்பங்களையும் கண்டறிவதில் ஊராட்சிகளுக்கு உதவலாம். குத்தகை உரிமைகளைப் பாதுகாப்பதிலும் முறைப்படுத்துவதிலும், அவை வருவாய் நிர்வாகத்தினருக்கு உதவலாம். நில ஆவணங்கள் மேம்படுத்தலிலும் விவரங்களைப் பயன்படுத்தலிலும் ஊராட்சிகள் தன்னுடைய உதவியை நீட்டிக்கலாம். ஊராட்சி நிறுவனத்திற்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

I. ஊராட்சிகள்

தொ. எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	நில உச்சவரம்பு அளவுகள்	i) உபரி நில உடைமையாளர்களை அந்த ஊராட்சியில், பிற பகுதிகளில் அவர்களுடைய மொத்த நிலங்களைக் கண்டறிய உதவுதல் ii) நிலச்சீரமைப்பு சட்டங்களின் செயலாக்கத்திற்காக சட்ட விசாரணைகள் நடத்துவதில் வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதல். iii) உபரி நில ஒதுக்கீடு தேவைப்படுகின்ற குடும்பங்கள், தனி நபர்களைக் கண்டறிய உதவுதல். iv) நில வளப்படுத்தும் அமைப்பிலும் தனி ஒதுக்கீட்டாளர் அல்லது அவர்களின் குழுவின் மேம்பாட்டிற்கு உற்பத்தியை உயர்த்தும் அளவுகளுக்கும் ஏற்பாடு செய்வதில் உதவுதல்.
2.	குத்தகை அளவுகோலைச் செயற்படுத்துதல்	i) வெளிப்படையான மற்றும் மறைமுகமான குத்தகை (பங்கு–குத்தகை உள்ளிட்ட) நிலையினைக் கண்டறிவதில் உதவுதல். பாதுகாப்பும் அதோடு கூட நேர்வுக்கேற்ப குத்தகை உரிமையை ஒழுங்குபடுத்துதல் அல்லது உரிமையாளர் உரிமையை உறுதி செய்தல் ஆகியவற்றில் வருவாய் அமைப்புக்கு அதன் பணியில் உதவலாம்.
3.	நில ஒருங்கிணைப்பு	i) சட்டத்தில் இருப்பது போல வெவ்வேறு நிலை செயற்பாட்டில் செயல் திறனுடைய மற்றும் உள்ளூர் குடிமக்களின் தொடர் ஈடுபாட்டினை அடைய முயலுதல். ii) உடைமையும் நிலப்பயன்பாடும், நில உரிமைகள் பொது நில நிலையும் சமுதாயச் சொத்துகள் நிலை போன்றவற்றில் வருவாயைத் தொகுப்பதில் வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதலும் ஒவ்வொரு பட்டாதாரருடைய நில உடமைகள் தொகுப்பில் உதவுதலும். iii) தொகுக்கப்பட்டபின் தொகுப்புத்திட்டம் செயற்படுத்தலுடன் உண்மையில் ஒதுக்கப்பட்ட இடம், உடைமையின் அனுபவம், உறுதி செய்வதில் வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதல்.
4.	நில ஆவணங்களை மேம்படுத்தலும் பராமரித்தலும்	i) வேளாண்மை மற்றும் மேய்ச்சல் நிலம், தரிசு நிலம், நீர்த்தேக்கங்கள், நீர் நிலைகள், சாலைகள், கரைகள் போன்ற ஏனைய சமுதாய நிலங்கள் தொடர்பான விபரங்களை மேம்படுத்த உதவுதல். ii) நில ஆவணங்களையும், மாறக்கூடிய செயல் முறைகளையும் மேம்படுத்துவதில் வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதல்.

II. ஊராட்சி ஒன்றியம்

தொ. எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	நில உச்சவரம்பு அளவைச் செயற்படுத்தல்	i) வெவ்வேறு நில உச்ச வரம்பு சட்டங்களை செயற்படுத்துவதற்கு வட்டார வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதல். பல்வேறு ஊராட்சிப்பகுதிகளில் உள்ள உபரி நிலங்கள் கலந்தாய்வு செய்வதிலும், ஏழை விவசாயிகளுக்கு உபரி நில பங்கீட்டுப் பணிகளிலும் உதவுதலும்.
2.	குத்தகை அளவீடு செயற்பாடுகள்	i) குத்தகை சட்டம், பங்கு, பயிரிடும் முறை, செயலாக்கம் ஆகிய பணிகளில் வருவாய் அதிகாரிகளுக்கு உதவுதல்.
3.	நில ஒருங்கிணைப்பு	i) துண்டு நிலங்களை ஒருங்கிணைப்பதில் வருவாய் மற்றும் நில நிர்வாக அதிகாரிகளுக்கு உதவுதல். ii) ஒரு தொடர் முறையில் சட்ட அமைப்புடன் ஒருங்கிணைத்தல்.
4.	நில ஆவணங்கள் மேம்படுத்தலும் பராமரித்தலும்	i) உரிமையாளர், உடைமையாளர் போன்றோரின் நில ஆவணங்களின் மேம்படுத்தலும் வட்டாட்சியர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் ஆகியோரின் பணிகளை ஆய்வு செய்தலும்.

III. மாவட்ட ஊராட்சிகள்

தொ. எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1	மாவட்டத்தில் நில சீரமைப்பின் செயல்பாடு	i) மாவட்டத்தில் எல்லா நில சீரமைப்புச் சட்டங்கள், செயற்பாடுகள் மீதான வருடாந்திரத் தகுதி நிலை அறிக்கையை தயாரித்தல் சட்டமாற்றம் தேவைபட்டாலும் செயற்பாட்டுக் குறைபாடுகளைக் களைவதிலும் அரசுக்கு ஆலோசன வழங்குதல். ii) வேளாண் நிலைக் குழு மூலமாக மாவட்டத்தில் நிலச்சீரமைப்பு நடவடிக்கைகளை மறு ஆய்வு செய்தல். மாவட்ட வருவாய் அலுவலகம், இத்தகைய எல்லா ஆய்வுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

நிர்வாகச் சிக்கல்கள் :

09. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியராலும் கிராம அளவில் கிராம நிர்வாக அலுவலராலும் நிலச்சீரமைப்பு, நிலத் தொகுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பஞ்சாயத்து நிறுவனங்கள் செயலாக்கத்திற்கு வந்தபின் உபரி நிலங்களைக் கண்டறிந்து பகிர்வு செய்வதிலும், ஊராட்சி நிலையில் வந்தபின். குத்தகை ஆவணங்களைப் பராமரிப்பதிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை ஈடுபடுத்துதல் தவிர்க்க முடியாதது. ஊராட்சிகள். ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், குறிப்பட்ட பங்கிணை ஆற்றும், உபரி நிலத்தைக் கண்டறிதல். குத்தகை, பங்கு, பயிரிடுதல், ஏழைகளுக்கு உபரி நிலங்களை வழங்குதல் ஆகியவற்றைக் கிராம நிர்வாக அலுவலர் ஊராட்சியுடன் இணைந்து செயல்படுவது அவசியமாகும். ஊராட்சி ஒன்றிய அளவில், வட்டாட்சியர் மற்றும் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் மாவட்டத்தில் நிலச் சீரமைப்புச் கூட்டங்களை செயற்படுத்தவும், திட்டங்களைத்

தொகுக்கவும், ஒருங்கிணைப்பு, திட்டமிடுதல் மற்றும் அறிவுரை கூறுதல் ஆகியவை தொடர்பான முக்கிய பங்கினை மாவட்ட ஊராட்சிகள் ஆற்ற வேண்டும். நிலச் சீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் உள்ளாட்சி அமைப்புகளின் கலந்தறிதலையும் ஈடுபாட்டினையும் வருவாய்த் துறையானது நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நிதிச் சிக்கல்கள்:

10. உபரி நில மேம்பாட்டுக்காகவும், விவசாயத்திற்காகவும் நில உச்சவரம்பைச் செயல்படுத்தவும், ஆதி திராவிடர் சிறப்புக்கூறு திட்டத்திற்காகவும் நில சீரமைப்பின் கீழ் ஆண்டுதோறும் 25 இலட்சங்கள் ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

சட்டச்சிக்கல்கள்:

11. நில நிர்வாகத்தில் ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றிய குழுக்களும் தங்கள் கடமைகளை நிறைவேற்ற தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் தந்துள்ள அதிகாரங்கள் பற்றி பத்தி 7ல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நிலச்சீரமைப்பில் ஊராட்சிகளுக்கு இந்த சட்டமுறை அதிகாரத்தின்படி போதுமான அதிகாரங்கள் தரப்பட்டுள்ள போதிலும், இந்த ஏற்பாடு பற்றி அரசால் அல்லது உரிய அதிகார அமைப்புகளால் அறிவிக்கை சொல்லிடுதல் (அமைப்பு) அதிகாரங்களைச் செயற்படுத்துதலை விரிவுபடுத்தும்.

நில மேம்பாடு மண்வளப்பாதுகாப்பு மற்றும் நீர் பிடிப்பு பகுதி மேம்பாடு

(இனம் - 2 (ஆ)

இப்பகுதியில், இரண்டு இனங்களுக்கான (இனம் 2 மற்றும் 3) செயல்தொடர்புகள் மேற்கொள்ளப் படுகின்றன. நில மேம்பாடும், மண்வளபாதுகாப்பும் (இனம் 2) மற்றும் நீர் பிரிமுகடு (Water Shed) மேம்பாடு (இனம் 3) ஆகியவை ஒன்றொடொன்று தொடர்புடைய இனங்கள். இருந்தபோதிலும், இரண்டு இனங்களின் ஏனைய பொருட்களான, நிலச்சீர்திருத்தமும் தொகுப்பும் (இனம் 2) மற்றும் சிறுபாசனமும், நீர் நிர்வாகமும் (இனம் 3) தனியாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டு சிறப்பு பொருட்களும் தொடர்புடையதாக இருப்பினும், திட்டச்செயலாக்கம், அமைப்பில் பங்கேற்பிலும், நிதி முறையிலும் வேறுபடுகின்றன. ஆகையால், இவை விரிவான முறையில் விவரிக்கப்படுகின்றன.

நீர் பிரிமுகடு மேம்பாடு:

02. நீர் பிரிமுகடின் கோட்பாடானது, நீர் நிலையை ஏற்படுத்துவதையும், பயிர் உற்பத்தித்திறன், குடியானவர்களின் வருவாய் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக மண்வளப் பாதுகாப்பையும் குறிப்பிட்டுக் காட்டுவதாகும். இவ்வாறாக, முன்னேறிய விவாசாயத் தொழில்நுட்பம் 1000 எக்டேர் அளவிலான நுண்ம நீர் பிரிமுகடுகள் மீது வளர்ச்சியுற்றிருப்பதுடன் வலியுறுத்தவும் செய்கிறது. வறட்சிப் பகுதி மேம்பாட்டு திட்டம், வானம் பார்த்த நிலப்பகுதிகளுக்கான தேசிய நீர் பிரிமுகடு வளர்ச்சித் திட்டம், உலக வங்கி உதவியுடனான ஒருங்கிணைந்த நீர் பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம், டானிடா நிதியுதவிடனான விரிவான நீர் பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற பல நீர் பிரிமுகடு திட்டங்களைத் தமிழ்நாடு செயற்படுத்திக் கொண்டிருக்கிறது. பயிரை வளர்க்க உயர்வகைக் கன்றுகளைப் பயன்படுத்துதல் மற்றும் தரிசு நில பண்ணை தொழில் நுட்பங்கள், வனப்பண்ணைகள், தோட்டப்பயிர், பட்டு வளர்ப்பு போன்றவற்றிற்கு சிறப்பு அமைவிடம் மூலம் மண் அரிப்பைக் கட்டுப்படுத்தவும் மழை நீரை இயன்ற அளவு அதிகமாகப் பயன்படுத்தவும், பயிர் வளர்ச்சிக்குரிய மண்ணையும் நீரையும் வழங்க இத்திட்டங்கள் வகை செய்கிறது. இத்திட்டங்கள் ஏனைய துணைத் தொழில்களினால் விவாசாயிகளின் வருவாய் நிலையைப் பெருக்க மேலும் ஊக்குவிக்கிறது. நீர்பிரி முகடு மேம்படுத்தலின் நோக்கமானது இயற்கை வள ஆதாரங்களைப் பாதுகாப்பது என்றாலும், உள்ளூர் மக்களின் சுற்றுச் சூழல் மேம்பாட்டையும் சமூகப் பொருளாதார வளர்ச்சியையும் குறிப்பதுடன் இத்திட்டங்களில் மண், நீர், இவற்றின் பாதுகாப்பு உட்பட இயற்பியல் உள்தொடர்புகள் மட்டுமின்றி பொருளாதார சமூக நிறுவன கூறுகளையும் கருத்தில் கொள்ளப்பெற்றுள்ளது. நீர்பிரிமுகடு மேம்பாட்டின் பெரும்திறன் செயலாக்கத்திற்கு நிலமேம்பாடும் மண்வள பாதுகாப்பும் வழிமுறைகளாக மேற்கொள்ளப்படுகிறது. மேலே கண்ட நோக்குடன் மாநிலத்தில் பின்வரும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது சுருக்கமாக எடுத்து உரைக்கப்படுகின்றன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிக்கான திட்டம்:

03. இது ஒரு மைய அரசின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் திட்டம் ஆகும். மைய மாநில அரசுகளால் 50 : 50 என்கிற அடிப்படையில் திட்டத்திற்கு செலவு செய்யப்படுகிறது. இது மாநிலத்தில் 1972–73 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டுவருகிறது. 1995–96ம் ஆண்டிலிருந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி திட்டம் 43 வட்டாரங்களிலிருந்து 80 வட்டாரங்களாக உயர்ந்துள்ளது. அனுமந்த ராவுக் குழுவின் அறிக்கையினுடைய அடிப்படையில் இத்திட்ட மாற்றங்களை உள்ளடக்கியும் செயல்பாட்டு முறையில் மாற்றங்கள் மேற்கொண்டும் இருக்கிறது. இத்திட்ட நோக்கினை அடைய நீர்பிரி முகட்டு செயலாக்கத்தை மேற்கொள்கிறது.

தரிசு நில மேம்பாட்டுத்திட்டம் :

04. இத்திட்டத்தின் நோக்கம் தரிசு நிலத்தினுடைய நிரந்தர வளர்ச்சிக்கென செயல்படுவதற்கு நீர் பிரிமுகடு அடிப்படையில் உள்ளூர்ச் சமுதாயத்தினரின் செயல் திற ஆதரவுடன் கூடிய, பங்கெடுக்கச் செய்வதாகும். இத்திட்டம் உள்ளூர் கால் நடைகளின் உணவு தேவைக்கும் உள்ளூர் மக்களின் வேலை வாய்ப்புக்கும் உள்ளூர் மக்களின் பழங்கள், கால்நடை தீவனம், மரம், எரிபொருள் தேவைகளுக்கும் தரிசு நிலங்களில் அதிக அளவு மரங்களை நடுவதன் மூலம் பல விதமான மரங்களின் தொகுதிகளை உருவாக்குவதை உறுதி செய்து பசுமை சூழலை உண்டாக்குவது. இது மைய அரசின் ஆதரவுடன் இந்திய அரசினால் நிதியுதவி அளிக்கப்படும் திட்டமாகும்; மாநில அரசு இத்திட்டத்தின் கீழ் அதிக அளவு தரிசு நிலங்களை கொண்டு வருவதில் முக்கியத்துவம் அளித்து வருகிறது. அரசு சாரா நிறுவனங்கள், விருப்பமுள்ள விவசாயிகள், கூட்டாண்மை அமைப்புகள், தனியார் தொழில் முனைவர்கள் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுகின்றன. இவற்றில் பல தன்னார்வ நிறுவனங்கள் மான்ய உதவி திட்டத்தின் கீழும் முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழும் திட்ட கருத்துருக்களை அனுப்பி இருக்கின்றன. அண்மைக் கால திட்டங்களுள் தமிழ் நாட்டிற்காக ஏற்பளிக்கப்பட்டகந்தர்வ கோட்டை திட்டமும் ஒன்றாகும். மத்திய அரசு புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த கந்தர்வ கோட்டை வட்டாரத்தின் 2155 எக்டேர் பரப்பில் ரூ.1.26 கோடி மொத்த செலவில் 5 ஆண்டு காலத்திற்கு ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு திட்டக் கருத்துருவினை ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.40.58 இலட்சங்கள் செலவில் தமிழ்நாடு தோட்டங்கள் நிறுவனத்தினரால் (திருவாளர்கள் டி.என். பிளான்டேசன்ஸ்) கருதப்பட்ட முதலீட்டு திட்டம் அனுப்பப்பட்டு ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆறு மாவட்டங்களுக்கான சில திட்டக் கருத்துருக்கள் மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவை 1995–96 லிருந்து செயற்பாட்டின் கீழ் இருந்துவருகிறது. அத்திட்டங்களின் விபரம் வருமாறு:

மாவட்டத்தின் பெயர்	மொத்த பரப்பளவு (எக்டேரில்)	மொத்த செலவு (ரூ.இலட்சத்தில்)	திட்டகாலம் (ஆண்டுகளின்)	வட்டார /நீர் பிரிமுகடு பெயர்
1) புதுகோட்டை	2155	126.45	5	கந்தர்வ கோட்டை
2) பெரியார்	4000	344.00	4	குடியாலத்தாரில் 10 நீர்பிரிமுகடுகள்
3) பசும்பொன் முத்து ராமலிங்க தேவர்	3072	285.00	5	காளையார் கோவில்
4) தென்னாற்காடு	3010	249.88	5	கெடிலம்
5) வடாற்காடு அம்பேத்கார்	5000	296.04	3	பொன்னையார்
6) திருவண்ணாமலை சம்புவராயர்	3900	255.94	4	செங்கம்

ஒருங்கிணைந்த நீர் பிரிமுகடு மேம்பாட்டு திட்டம் :

05. மற்றுமொரு முக்கிய நீர் பிரிமுகடு திட்டமான, 54,000 எக்டேர் பரப்பிற்கு நீர்வழங்கக் கூடிய பாலாற்றிலும் வெள்ளாற்றிலும் உள்ள நீர் பிரிமுகடுகள், திட்டம் செயற்பாட்டிலுள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் நடத்தப்படும் தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நீர் பிரிமுகடுகளின் அடிப்படையில் மேலும் கூடுதலாக 36,000 எக்டேர் பரப்பளவிற்கான திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. நீண்ட காலத்திற்கு நிலையான மேம்பாட்டினை செய்யும் வகையில் சுற்று சூழல் குறைபாட்டை மாற்றியமைப்பது, திட்டப்பகுதியில் மானாவாரி நிலங்களில் பயிர் செய் நிலத்தையும், பயிர் செய்யப்படாத நிலத்தையும் மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மானாவாரி பகுதி தேசிய நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம்

06. 1) உறுதியான உயிர் உரத்தின் நிலைத்த உற்பத்தியையும், 2) சுற்றுச்சூழல் சமன் பாட்டைத் தக்க வைத்தலும் மானாவாரி பகுதி தேசிய நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டத்தின் இரு நோக்கங்களாகும். மேம்பாட்டு திட்டம் 15 மாவட்டங்களில் ரூ.41.51 கோடி செலவில் 1990–91 முதல் 1996–97 வரையிலான 7 ஆண்டு காலத்திற்கு 84 நீர் பிரி முகடு பகுதிகளில் பரவலாக செயல்படுத்தப் பட்டுக்கொண்டு இருக்கிறது. ஒன்பதாவது திட்ட காலத்தில் (1997–2002). பெரியளவில் வலியுறுத்தப்பட்டு அதிக ஒதுக்கீடும் பெறுவதற்கு எதிர்பார்க்கப் படுகிறது. 1) அடிப்படை நடவடிக்கைகள் 2) பயிரிடப்படும் நில நடவடிக்கைகள் 3) பயிரிடப்படாத நில நடவடிக்கைகள் மற்றும் 4) கால்நடை நிர்வாகம் ஆகியவற்றைத் திட்டத்தில் உள்ளடக்கிச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. i) மண் வளத்தை (உரம்) பாதுகாத்தல் (ii) சிறிய தடுப்பு அணைகள், தாவர வேலிகள் போன்றவற்றை அமைப்பதன் மூலம் மழை நீரைப்பாதுகாத்தல் (iii) விவசாயிகளுக்கு துணைப்பணிகள் வழங்குவதன் மூலம் அவர்களது வருவாயை உயர்த்த வேலைவாய்ப்புகள் ஏற்படுத்துதல் ஆகிய முக்கிய பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊராட்சிகள். ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் முனைப்புடன் தம்மை நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக் கொண்டால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மானாவாரி பகுதி தேசிய நீர்பிரிமுகடு திட்டத்தின் செயலாக்க நடவடிக்கைகளை நல்லமுறையில் செயற்படுத்த முடியும்.

விரிவான நீர்பிரிமுகடு மேம்பாட்டு திட்டம்:

07. திருநெல்வேலி கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார் மாவட்டங்களிலும் மற்ற மூன்று மாவட்டங்களிலும் தரம்குறைந்த நிலங்களை மேம்படுத்துவது டானிடா நிதித் திட்டமாகிய இத்திட்டத்தின் நோக்கமாகும். முதற்கட்டமாகத் திருநெல்வேலி கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில் ரூ.583 இலட்சங்கள் செலவில் 17861 எக்டேர் பரப்பளவில் 1994 வரை திட்டம் செயற்படுத்தப்பட்டது. டானிடாவுடன் 1994 மேயிலிருந்து ஜூலை 1994 வரை யிலான கால இணைப்பு ஏற்பாடுகளுடன் 1994 ஆகஸ்டிலிருந்து இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. இத்திட்டம் 7 ஆண்டுகள் கால அளவும் 42.500 எக்டேர் பரப்பளவில் ரூ.4172.00 இலட்சங்கள் செலவில் நடைபெற உள்ளது.1995–96 கால கட்டத்தில் ரூ.400.81 செலவில் 5160 எக்டேர் நிலம் உள்ளடக்கப்பட்டுள்ளது. 1996–97ல் ரூ.486.69 இலட்சங்கள் செலவில் 3600 எக்டேர் பரப்பில் இத்திட்டம் நடைபெற இருக்கிறது. திருநெல்வேலி திட்டம் போன்றே ஒரு டானிடா உதவி திட்டம் இராமநாதபுரம்.காமராசர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் 5½ ஆண்டுகளில் 11,000 எக்டேர் நிலம் பயனடையும். 1995–96ல் ரூ.174.32 இலட்சங்கள் செலவில் 1,500 எக்டேர் பரப்பில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. 1996–97 ல் ரூ.249.46 இலட்சங்கள் செலவில் 2,250 எக்டேர் பரப்பில் செயற்படவுள்ளது. நிலமேம்பாடு, மண் வளப்பாதுகாப்பு, நல்ல நிலம் தரிசாவதைத்தடுப்பது, தரிசு நிலத்தை வளம்கொழிக்கச் செய்தலும், நிலத்தை விரிவுபடுத்துதல் காய்கறி பயிரிடுதலும் வளர்ச்சியும் நீர்பிரிமுகடு நிர்வாக அணுகுமுறை மூலம் கிராமப்புற மக்களுக்கு வாழ்க்கைத் தொழில் வள ஆதாரத்திற்காகவும் வேளாண் உற்பத்தித் திறன் உயர்வுக்காகவுமாக இயக்க மையமாக இருக்கிறது. திட்டங்களினுடைய பெருக்கங்களின் மூலம் பல முயற்சிகளும், செலவுகளும் செய்யப்பட்டதை இது ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த பின்னணியில் பல ஆண்டுகளுக்கு மேலாகியும் பொது நல அல்லது நிலையான பயன் விளையவில்லை. உள்ளாட்சி நிறுவனங்களின் குறைபாடுகளும் உள்ளூர் சமுதாய பங்களிப்பு இன்மை உள்ளிட்டவை காரணங்களாகக் கண்டறியபட்டது. இத்தகைய திட்டங்களுக்கான பொறுப்பை 9ம் திட்ட அணுகுமுறை அறிக்கை ஆதரவளித்திருப்பதைப் போல ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்குதன் மூலம் தற்பொழுது இக்குறைபாடுகளை களைய முடியும்.

08. எட்டாவது திட்ட காலத்தில் மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ரூ.119.81 கோடி பயன்படுத்தப் பட்டிருக்கிறது. கீழே கண்ட அட்டவனையில் திட்ட தொடக்க ஆண்டும், 1992–97 கால கட்டத்திற்காகச் செய்யப்பட்ட செலவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சங்களில்)

திட்டத்தின் பெயர்	திட்ட தொடக்க ஆண்டு	1992-97 இல் செய்யப்பட்ட செலவு
1. வறட்சி பாதித்த பகுதி திட்டம்.	1972–73	3,717.39
2. மானாவாரி தேசீய நீர்பிரிமுகடு திட்டம்	1990–91	3,825.04
3. ஒருங்கிணைந்த நீர்பிரி முகடு	1990–91	2,252.37
4. விரிவான நீர் பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம்	1987–88	1888.29
5. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்	1994–95	298.12
மொத்தம்		11,981.21

09. ஊரகப் பகுதிகளில், வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு மண் மற்றும் நீர் நிருவாகம் வெற்றிகரமாக ஏழ்மையை ஒழிப்பதற்கான உயிர் நாடியாகும். 50% விழுக்காட்டிற்கு அதிகமாக விவசாய நிலம் மானாவாரியாகிக் கொண்டிருக்கிறது. விவசாய நிலம் மேலும் மேலும் விவசாயத்திற்கல்லாத நிலமாக மாற்றப்படுகிறது. வேளாண் உற்பத்தி ஒரு நிலையை அடைந்திருக்கிறது, தமிழ்நாட்டின் முக்கியதேவை இயற்கையோடு இணைந்த பயிர் வளர்க்கும் முறையாக மாற்றுவதற்காகக் பெரிய அளவிலான நில முன்னேற்றத் திட்டங்கள் உள்ளூர் மக்களின் முனைப்பான பங்கேற்புடன் ஒரு நிலையான அடிப்படையில் எடுத்துக் கொள்வதாக இருக்கிறது. நீர்பிரிமுகடு செயல் திறன் வளர்ச்சி பல ஆண்டுகளுக்கு மேலாக காலத்தின் சோதனையாக இருந்துள்ளது. பஞ்சாயத்து நிறுவனங்கள் மக்கள் அமைப்பாக இருக்கிறது, அவர்களுக்கு மிக நெருக்கமாகவும் இருப்பதுடன் இத்தகைய நில அடிப்படையிலான திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்தும் திறனுடையது. நிலமேம்பாடு, நீர்பிரிமுகடு மேம்பாடு ஆகியன சிறப்பான அமைவிடத்தையும் கூட்டு திட்டங்களைக் கொண்டவையாகவும் இருக்கின்றன. ஆகையால் அவைகளின் திட்டமிடலும் செயலாக்கமும் சிறந்த முறையில் ஆற்றப்படுவதற்கு அவற்றைப் பஞ்சாயத்து நிறுவனங்களிடம் ஒப்படைப்பதன் மூலம் சிறந்த நிலைத்த பலன்களைப் பெறுவதற்கு இயலும். இந்த பின்னணியில் நீர் பிரிமுகடு திட்டங்களில் ஊராட்சிகளை ஈடுபடுத்த மாநில திட்டக் குழுவின் பிரிவு கருதுவதுடன் கீழே கண்ட அதிகாரங்களை ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு வழங்கவும் பரிந்துரைக்கிறது.

I. ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
i) நீர்பிரிமுகடு மேலாண்மை	i) நீர்பிரிமுகடு திட்டங்களின் அனைத்து நில / நீர் பயன் படுத்துவதை ஊராட்சி மூலம் (ஊர் அவை) ஏற்பளித்தல்.
	ii) நீர்பிரிமுகடு வளர்ச்சித்திட்டத்தின் கீழ் மேம்பாட்டிற்காகவும் உற்பத்திப் பயனுக்காகவும் சமுதாய நிலம் மற்றும் ஏனையப் பொதுச் சொத்துக்களை முறையாகப் பயன்படுத்துவதனை அமைத்தல்.
	iii) நீர் பிரிமுகடு பணிகளை மேற் பார்வையிடுதலுக்கும் தரத்தைக் கண்காணிப்பதற்கும் உதவி செய்தல்.

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
		iv)	இயற்கை வள ஆதாரங்களும் சுற்றுசூழல் வளர்ச்சியும் எல்லாப் பகுதியிலும் நல்ல முறையில் நிருவகிக்கப்படுவதற்கான நீர்பிரிமுகடு வளர்ச்சி அணுகு முறையை மேம்படுத்துதல்.
II)	நில மேம்பாடு	i)	சிற்றூராட்சிகளுக்கான விரிவான நில மற்றும் நீர் பயன்பாட்டுத் திட்டம் வரைதல்.
		ii)	கிராமத்தில் உள்ள எல்லா விவசாய நிலங்களுக்கான மண் வள அட்டைகளுக்கு ஏற்பாடு செய்தல்.
		iii)	சிற்றூராட்சி சூழலுக்கு ஏற்றவாறு மரம் உள்ளிட்ட பயிர்களைக் கண்டறிதல்
		iv)	புன்செய் நிலங்களிலும் மானாவாரி பகுதியிலும் சிறந்த மண் மற்றும் நீர்வளத்தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல்.

II. ஊராட்சி ஒன்றியம்

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
I	நீர்பிரிமுகடு மேம்பாடு	i)	ஊராட்சிகளுடன் தொடர்புடைய பகுதித் திட்டங்கள் ஏதேனுமிருப்பின் நீர்பிரி முகடு திட்டத்திற்குத் திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும்.
		ii)	பணிக்குழுக்கள் பயன்படுத்தோர் குழுக்கள் மற்று நீர் பிரிமுகடு குழுக்கள் ஆகியவற்றை மக்கள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்தல்.
		iii)	நீர்பிரிமுகடு திட்டங்களின் செயல்பாட்டில் சிற்றூராட்சிகளுக்கு உதவ ஒரு தொழில் நுட்பப்பணியாளர் குழு அமைத்தல்.
		iv)	ஊராட்சி ஒன்றியங்களில் செயற் படுத்தப்படும் அனைத்து நீர் பிரிமுகடு திட்ட முன்னேற்றத்தைக் கண் காணித்தல் மேற் பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.
ii.	நில மேம்பாடு	i)	வேளாண்மைச் சூழல், வட்டாரத் திட்டமிடுதல் மற்றும் தொலை உணர்வு விவரத்திட்ட அடிப்படைகளைக் கொண்டு நில மற்றும் நீர் மேலாண்மைத் திட்டங்கள் வரைய ஏற்பாடு செய்தல்.
		ii)	மண் நல அட்டைகள் பெறுவதற்கு ஊராட்சிகளுக்காக நிறுவன இணைப்புகளை ஏற்படுத்துதல்.
		iii)	ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பயிர் மற்றும் நில அடிப்படையிலான பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்து, தகுந்த பயிர்த் திட்டத்தை மேம்படுத்துதல்
		iv)	நவீன மண், நீர் பாதுகாப்பு மற்றும் நில மேம்பாட்டு தொழில் நுட்பங்களை பயன்படுத்த விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல்.

III. மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
I. நீர் பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம், நில மேம்பாடு மற்றும் மண்வள பாதுகாப்பு	i) மாவட்டங்களுக்கான நிலம், மண் மற்றும் நீர் வள ஆதார விபரங்களை மேம்படுத்துதலும் நீர்பிரி முகடு மேம்பாட்டுக்கான தொலை நோக்குத் திட்டங்களைத் தயாரித்தலும்.
	ii) மாவட்டத்தின் நீர்பிரிமுகடு மேம்பாட்டு திட்டங்களை ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்.
	iii) மாநிலத்தின் ஏனைய மாவட்டங்களின். நாட்டின் நீர்பிரிமுகடு மேம்பாடு பற்றிய அனுபவங்களை ஆராய்ந்து அப்படிப்பினையை ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கும், சிற்றூராட்சிகளுக்கும் பரப்புதல்

நிர்வாக சிக்கல்கள்:

10. நீர் பிரிமுகடு மேம்பாட்டுச் செயலாக்க திறனுடன் மானாவாரி பகுதி தேசிய நீர்பிரிமுகடு மேம்பாடு திட்டம், வறட்சி பகுதித் திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்துவதில் வேளாண்மைத் துறை முக்கிய முகவராக இருக்கிறது. பல ஊராட்சி ஒன்றியங்களில் மானாவாரி பகுதி தேசிய நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டப்பணிகளுக்கு வேளாண் துறை உதவி இயக்குநர்கள் முழு பொறுப்பேற்று இருக்கின்றனர். ஒரு சிறிய உதவி அலுவலகம் அவர்களிடம் உள்ளது. இந்த நிர்வாக அலகு. மானாவாரி பகுதி தேசிய நீர்பிரிமுகடு மேம்பாட்டுத்திட்ட செயலாக்கத்திற்காக. ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்படவேண்டும். நீர்பிரிமுகடு அடிப்படையில் 80 வட்டாரங்களில் (ஊராட்சி ஒன்றியங்கள்) வறட்சி பாதித்த பகுதித் திட்டங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக செயற்படுத்தும் அலுவலர்கள் அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டிருக்கிறார்கள். எல்லா வறட்சி பாதித்த பகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்காக, எல்லா வறட்சி பாதித்த பகுதி மேம்பாட்டுத் திட்ட அலுவலர்களாக மாற்று பணிபுரிய எந்த அரசு துறையிலிருந்து அனுப்பப்பட்டவர்களாயினும் பொருட்படுத்தாமல் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். மாநில அளவில் வறட்சி பாதித்த பகுதி மேம்பாட்டு திட்ட அலுவலர் வேளாண் துறையில் தொடர்ந்து இருக்க வேண்டும். விரிவான நீர்பிரிமுகடு மேம்பாட்டு திட்டத்தைப் பொறுத்தவரையில் அரசுசாரா நிறுவனங்களையும் நீர்பிரிமுகடு பயனாளர்கள் குழுமத்தையும் திட்ட செயலாக்கத்தில் ஊக்குவிக்க தனித்திட்ட இயக்குநர்களை வேளாண் பொறியியல் துறை பெற்றிருக்கிறது. இந்த பின்னணியில், உள்ளாட்சி அமைப்புகளுடன் வேளாண் பொறியியல் துறை அலுவலர்களை இணைக்கும் நிலை இருக்கவில்லை.

11. அவ்வாறு ஊராட்சி ஒன்றியத்தில் இணைக்கப்பட்டுள்ள எல்லா அரசு அலுவலர்களும் தொடர்ந்து அரசப்பணியாளர்களாகவே இருக்க வேண்டும் என்பதுடன் அரசு அலுவலர்களுக்குப் பொருந்தக்கூடிய. தேவையான வசதிகளையும் அவர்கள் பெறுவர். ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு இணை நிறுவனம் உண்டாக்கக் குழுமம் கருதவில்லை. ஏனெனில். எல்லா நீர் பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டங்களும் குறிப்பிட்ட பகுதிகளுக்குறியவை. மேலும், அவை ஒரு காலவரையறைக்குட்பட்டுச் செயல்படுத்தப்படவேண்டியவை. திட்டங்கள் முடிவுறும் பொழுது வேளாண்மை மற்றும் பிற துறைகளிலிருந்து மாற்றுப் பணியில் ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் திரும்பவும் தாய்த்துறைக்கு அனுப்பப்படுவார்கள். சிற்றூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் நீர்பிரிமுகடு மேம்பாட்டு திட்டங்களைத் திறம்பட செயற்படுவதற்காக தொடர்புடைய ஏனைய அரசு துறைகளிடமிருந்து தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

நிதிச் சிக்கல்கள்:

12. இந்த எல்லா நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்ட நிதிகள் முழுமையாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என மாநில திட்ட குழு கருதுகிறது. ஒவ்வொரு திட்டங்களின் கீழும் அனுமதிக்கத்தக்க நிர்வாகச் செலவு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். வறட்சி பாதித்த பகுதி மேம்பாட்டுதிட்டம், மானாவாரி பகுதி தேசிய நீர்பிரி முகடு திட்டம், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் போன்ற வேளாண் துறையின் கீழ் வரும் இத்திட்டங்களுக்காகக் கிடைக்கப்பெறும் நிதிகள் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

சட்டச் சிக்கல்கள் :

13. சில நவீன தொழில் நுட்பங்களும், செயல் திறனும், நோக்கங்களும் மண் மற்றும் நீர் பாதுகாப்பிற்காகவும் நிர்வாகத்திற்காகவும் இணைத்து மேற்கொள்வதற்காக மாநிலத்தில் இருக்கும் தமிழ்நாடு நில மேம்பாட்டுச் சட்டத்திற்குத் திருத்தம் தேவைப்படுகிறது. நீர் பிரிமுகடு மேம்பாட்டு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுவதற்கு ஊராட்சி அமைப்புகளிலிருந்து மக்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இவ்வாறாக மேற் குறிப்பிட்ட கருத்துக்களைச் சேர்ப்பதற்கு நில மேம்பாட்டு சட்டம் திருத்தப்பட வேண்டும்.

சிறுபாசனம் மற்றும் நீர் மேலாண்மை

(இனம் - 3)

01. தமிழ் நாடானது, நிலவியல் பரப்பில் 13 மில்லியன் ஹெக்டேர் அளவில் நாட்டில் 11ஆவது இடத்தை வகிக்கிறது. நிலவியல் பகுதியில் பாதி பயிரிடத் தக்கவையாகும். 6 மில்லியன் ஹெக்டேர்கள் நிகர விதைப்பு பகுதியாகும். பயிரிடத்தக்க மொத்தப் பகுதியில் 50 விழுக்காடு பகுதியானது நீர்ப்பாசனத்தை (3 மில்லியன் ஹெக்டேர்கள்) பெறுகிறது அதில் இயற்கைக் கால்வாயிலிருந்து (0.95 மில்லியன் ஹெக்டேர்கள்), ஏரியிலிருந்து (0.90 மில்லியன் ஹெக்டேர்கள்), ஆழ்துளைக் கிணறுகள் முதலியன உள்ளிட்ட கிணறுகளிலிருந்து (1.15 மில்லியன் ஹெக்டேர்கள்) பெறுகிறது. தமிழ் நாடானது நீர் பாசனத்திற்கான தனது மேற்பரப்பு நீர் வாய்ப்பு வளம் அனைத்தையும் பயன்படுத்தித் தீர்த்து விட்டபடியால், பெரும் மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு மிகக் குறைந்த வாய்ப்பே உள்ளது. இவ்வாறாகத் தமிழ் நாட்டு நீர்ப்பாசனத்தின் எதிர்கால வளர்ச்சியானது, பயனோக்கி நீரைச் சேமித்து வைத்தல், கால்வாய் மற்றும் ஏரிப்பாசனத்தை நவீனமயமாக்கல், இப்போதுள்ள நீர்பாசன ஆதாரங்களிலுள்ள நீரைக் கொண்டு சமாளித்தல் மற்றும் சிறுபாசனத்தை பெரிதும் பயன்படுத்துதல் ஆகியவற்றையே மையமாகச் சார்ந்திருக்க வேண்டியிருகிறது.

02. தமிழ்நாட்டில் 39202 ஏரிகள் உள்ளன. அதில் 3697 இயற்கையாக அமைந்த ஏரிகள், 5242 வெட்டப்பட்ட ஏரிகள், 9850 முன்னாள் ஜமீன் ஏரிகள், மற்றும் 20413 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் ஆகும். பொதுப்பணித்துறை மூலம் அரசு வெட்டப்பட்ட மற்றும் வெட்டப்படாத ஏரிகளை பராமரித்து வருகிறது.

03. ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டங்கள் உள்பட சிறுபாசனத்திட்டங்கள் அரசால் செயற்படுத்தப் படுகின்றன. 100 முதல் 200 வரையிலான ஹெக்டேருக்கிடையே உள்ள பாசனப் பரப்புடன் கூடிய வானம் பார்த்த ஏரிகளையும், சில முன்னாள் ஜமீன் ஏரிகளையும் மேம்படுத்துவதற்கு 115 கோடி ரூபாய் செலவிலான முதல் கட்டத்திட்டம் 1989 ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதே திட்டத்தில், இரண்டாம் கட்டமானது, 50 ஏரிகளை நவீனப்படுத்தலை உள்ளடக்கியுள்ளது. அரசிடமிருந்து அல்லாமல் வெளியிலிருந்து கிடைக்கக்கூடிய நிதியினை கொண்டு திட்டத்தின் III-வது கட்டத்தில் 3,000 ஏரிகளைச் சீரமைக்க திட்டம் மேற் கொள்ளலாம் என்ற கருத்தும் ஒன்று உள்ளது.

04. அரசு, பொதுப்பணித் துறையில் நீர்வள ஆதாரங்கள் அமைப்பை நிறுவுவதற்கும், வடிநிலப் பாதையுடன் கூடிய நீர்ப்பாசனம் தொடர்பிலான அனைத்து வகை நடவடிக்கைகளைப் பரவலாக்கவும் ஆணையிட்டுள்ளது. வடிநிலங்கள், தலைமைப் பொறியாளர்கள் அடிநிலைத்தரத்திலுள்ள வடிநில மேலாளர்களின் தலைமையில் அமைய வேண்டுமென அதில் ஆணையிடப்பட்டுள்ளது. பின்வரும் தலைமை யிடங்களுடன் கூடிய நீர்வள ஆதார அமைப்பின் செயற்பாட்டுப் பகுதிகள் வருமாறு:–

1. திட்டவடிவாக்கம், சென்னை.
2. வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதரவளிப்பு, சென்னை.
3. இயக்கமும் பராமரிப்பும், சென்னை.
4. மாநில நில, மேற்பரப்பு நீர்வள ஆதார விவர வகைபாட்டு மையம், சென்னை.
5. நீர்வள ஆதார நிறுவனம், சென்னை மண்டலம், சென்னை.
6. நீர்வள ஆதார நிறுவனம், திருச்சி மண்டலம், திருச்சி.
7. நீர்வள ஆதார நிறுவனம், பொள்ளாச்சி மண்டலம், பொள்ளாச்சி.
8. நீர்வள ஆதார நிறுவனம், மதுரை மண்டலம், மதுரை.

சென்னை – 5 இல் உள்ள நீர்வள ஆதார நிறுவனத்தின் பொறியாளர் – தலைவர் அவர்கள் பாசன பராமரிப்பு தொடர்பிலான நடவடிக்கைகள், பாசன ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் நீர்வள ஆதார நிறுவனத்தின் பிற நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பிலான அனைத்து பொருண்மைகளிலும் வடிநில பராமரிப்பு மேலாளர்களையும் ஏனைய தலைமை பொறியாளர்களையும் ஒருங்கிணைப்பார். தலைமைப் பொறியாளர், முக்கியச் செயல்முறைகள், பராமரிப்பு மற்றும் ஒழுங்கு முறைகள் ஆகியவற்றுடன் அமைந்த பாசனம் தொடர்பிலான துணைப்பணிகள் அனைத்திற்குமான தனிச்சிறப்புடைய செயல்பாடுகளையும் கண்காணிப்பார்.

05. தமிழ்நாடு ஊராட்சி சட்டம் சிற்றூராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சில அதிகாரங்களைத் தெளிவான வகையில் அளித்துள்ளது. அவை வருமாறு :

"அரசாங்கம், நிர்ணயிக்கப்படக் கூடிய நிபந்தனைகளுக்கும். கட்டுப்பாடு களுக்கும் உட்பட்டு ஊராட்சிக்கோ அல்லது வட்டார ஊராட்சி மன்றத்துக்கோ, நீர்பாசன அமைப்பைப் பாதுகாத்தல், பராமரித்தல், நீர்ப்பாசன முறைகளை மேலாண்மை செய்தல் அல்லது ஒரு நீர்ப்பாசன அமைப்பைச் சேர்ந்த நிலங்களுக்கு நீர் பகிர்மானம் செய்தலை ஒழுங்குபடுத்துதல் முதலிய அலுவல்களை மாற்றலாம்". (133 (1)).

"ஊராட்சி அல்லது வட்டார ஊராட்சி மன்றம், நிர்ணயிக்கப்படக் கூடிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, கிராமத்திலுள்ள ஒரு நீர்ப்பாசன அமைப்பின் மூலாதாரத்திற்கு குடிமராமத்துச் செய்யவும் அல்லது அதற்காக, மேற்குறிப்பிடப் படக்கூடிய வரிவிதிக்கவும் அதிகாரமுடையது" (பிரிவு : 133 (2)).

வரம்புரை

"இருப்பினும், இந்த உட்பிரிவிலுள்ள எதுவும், நீர்ப்பாசன அமைப்பின் ஆதாரத்திற்கு ஊராட்சி குடிமராமத்து செய்யத் தவறின காலத்து, "தமிழ்நாடு கட்டாய உழைப்புச் சட்டம் 1858" (மத்திய சட்டம் 1858) கிராம சமுதாயத்தையும் அதன் எந்த உறுப்பினரையும் அதன் பொறுப்பிலிருந்தோ அவரது பொறுப்பிலிருந்தோ விடுவிக்காது". (133 (2)).

"நீர்பாசன அமைப்பின் பாதுகாப்பு இந்தப் பிரிவின் படி மாற்றப்படும் போது அவ்வமைப்பிலுள்ள அரசாங்கத்தின் மீன்பிடிக்கும் உரிமையும் மாற்றப்பட்டு நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள் கட்டுப்பாடுகளுக்கு (இந்த வருமானத்தை உபயோகிக்க உண்டான நிபந்தனைகள் கட்டுப்பாடுகள் உட்பட) உட்பட்டு தக்கவாறாக ஊராட்சி அல்லது வட்டார ஊராட்சியை சேரும்". (133 (3))

06. சிறுபாசனம் மற்றும் நீர் பராமரிப்பு தொடர்பிலான அனைத்து வகை நடவடிக்கைகள் நேர்வில், இருவகையான நடவடிக்கைகள் உள்ளன:– (i) நீர்ப்பாசன ஆதாரங் களையும் ஏரிகளையும் அமைத்தல் மற்றும் (ii) நீர்வள ஆதாரங்களைப் பராமரித்தல். ஊராட்சி ஒன்றியங்கள் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டங்கள் மற்றும் ஜீவன்தாரா திட்டங்களின் கீழ் குளங்கள் மற்றும் கசிவு நீர்க் குட்டைகளை அமைத்து பராமரிக்கின்றன. 40 ஹெக்டேர்க்குக் குறையாத பாசனப் பரப்பை உடைய நீர்ப்பாசன ஏரிகளை பராமரிப்பதற்குரிய அதிகாரங்களைக் கொண்ட உரிமையால், ஊராட்சி ஒன்றியங்கள் அப்பராமரிப்பை எடுத்துக் கொள்வதற்குக் கடமைப் பட்டுள்ளன. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் குடிமராமத்து பற்றி வலியுறுத்திக் கூறப்பட்டிருந்த போதிலும், அதன் செயல்பாடுகள் பற்றி இனிமேல் தான் தெரியவரும். சிற்றூராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சட்டமுறையான நீர்பாசன மானியம் இல்லை என்றாலும். இச்சட்டத்தின் கீழ், அரசு, நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து நீர்ப்பங்கீடு தொடர்பிலான பணிகள் அங்குள்ள ஊராட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கலாம். அங்குள்ள ஊராட்சி அமைப்புகளும் குடிமராமத்துப் பணிகளுக்கான கட்டணத்தை விதிக்க இயலும். ஊராட்சி ஒன்றியம் தன்னுடைய நிதியிலிருந்து எந்த செலவினைத்தையும் மேற்கொள்ளலாமென எதிர்பாக்க இயலாது. எனவே, பராமரிப்பானது, அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய மானியத்தைப் பொறுத்தே உள்ளது. இந்த ஏரி நீர்ப்பாசன வள ஆதாரப் பராமரிப்பானது சிற்றூராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒப்படைக்க விருப்பதால், பராமரிப்புக்கான சுழற்சி முறையை அரசு மேம்படுத்த வேண்டும். முதல்

மாநில நிதி ஆணையம், 5 ஆண்டு சுழற்சி முறையைப் பரிந்துரைத்துள்ளது. இப்பின்னணியில் மாவட்ட ஊராட்சிக்கு நீர்பாசனம் மற்றும் பாசனம் தொடர்பிலான அனைத்து நடவடிக்கைகளுக்கும் இதற்கான பங்கை அளிக்கவேண்டிய தேவை உள்ளது.

07. மாவட்ட ஊராட்சிக்கு, சிறுபாசனம் மற்றும் நுண்பாசனத்துடன் கூடிய பாசன மேம்பாட்டத் திட்டங்களை கொண்ட தொலைநோக்கு திட்டங்களை உருவாக்கவும், நிலையான வேளாண்மை குழுவின் உதவியுடன் அதை ஆய்வு மற்றும் மேற்பார்வை செய்யவும் அதிகாரம் வழங்கலாம். மேலும், இம்மாவட்ட ஊராட்சியானது, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆண்டுதோறும் தேவையான மானியத்தை அரசிடம் இருந்து பெற்று தரவும் பரிந்துரை மற்றும் ஆலோசனை வழங்கலாம். ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிக்கான திட்டங்களை உருவாக்கவும், அதை நடைமுறைப்படுத்தவும், அதன் கழிவு நீர்குட்டைகள் மற்றும் தடுப்பணை கட்டுவதற்கும் அதற்குரிய பயன்பெறுவோரை கண்டறியவும் வழிவகை செய்யலாம். மேலும், ஊராட்சிகள் ஒன்றியங்கள், குடிமராமத்து முறை செயல் படுத்தவும் மற்றும் அதற்குரிய நீர்பாசனம் மற்றும் வடிகால் பராமரிப்புக்குரிய கட்டணங்கள் வசூலிக்கவும், ஊராட்சிக்கு உதவிபுரியலாம். குடிமராமத்து மற்றும் நீர்பாசன பாராமரிப்புக் குரிய பலவகை திட்டகளை செயல்படுத்துவதிலும். அதற்குரிய பயனாளிகளை கண்டறியவும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கலாம். இத்துடன். பாசன பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில். நீர் விநியோக சுழல்முறையை செயல்படுத்துவதிலும், கசிவு நீர் குட்டைகளை பராமரிப்பதிலும் ஊராட்சிகள் ஈடுபடும். உள்ளூர் தகராறு ஏதாவது இருந்தால் சிற்றூராட்சிகள் தீர்வு காண்பதில் உதவும். மாநில திட்டக்குழு பிரிவின் பரிந்துரைகள் விளக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது :–

I. ஊராட்சி

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	சிறுபாசனம், நீர் வினியோக முறை, வடிகால் அமைப்பு மற்றும் நீர்பாசன மேலாண்மை ஆகியவற்றை மேம்படுத்துதல்.	(அ)	நீர்ப் பாசனத் திட்டங்களை தோற்று விப்பதில் உதவுதல்.
		(ஆ)	குளங்களை ஆழப்படுத்துதல், கால் வாய்கள், ஏரிகள் மற்றும் வடிகால் களைத் தூரெடுப்பு செய்து சுத்த மாக்குதல் போன்ற சமுதாய சிறு பாசனத் திட்டங்களை நிறை வேற்றல்.
		(இ)	மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தால் ஒதுக்கப்பட்டுள்ள திட்டங்கள் உள்பட தொட்டிகளையும், நீர்தடுப்புச்சுவர் அணைகளையும் கட்டுதல்.
		(ஈ)	குறிப்பிடப்பட்டுள்ள தரத்தின் படி கிணறுகளுக்கிடையிலான இடை வெளியை (கிணற்றின் நீர்ச்செறிவு) நெறிமுறைப்படுத்தல்.
		(உ)	சிறு பாசனத் திட்டங்களுக்கான பல்வேறு திட்டங்களின் கீழ் பயனாளர் களைக் கண்டறிதல்.
2.	நுண்மநீர்ப் பாசன முறைகளை மேம்படுத்துதல்	(அ)	விவசாயிகளின் (விவசாயப்) பகுதியையும் நீர்தெளிப்புப் பாசனம், சொட்டு நீர்ப் பாசன வசதி அளிக்கப்பெற்றுள்ள பயிர்களையும் கண்டறிதல்.

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
3.	நீர்பாசன வள ஆதாரத்தைப் பராமரித்தல்	(அ) நீர்பயனாளர் குழுமத்தின் மூலம் சிறுபாசன பராமரிப்பில் பாரம்பரிய முறைகளை தொடருதல் மற்றும் பலப்படுத்துதல்.
		(ஆ) குறிப்பாக அரசால் ஒப்படைக்கப்பட்ட ஆட்சி எல்லையில் நீர்ப்பாசன வள ஆதாரங்களைப் பராமரிப்பதற்காக குடிமராமத்தைச் செயற்படுத்தல்.
		(இ) ஊராட்சி கிராமத்தில் அனைத்து நீர்கசிவுக் குட்டைகளையும் பராமரித்தல்.
		(ஈ) நீரைப் பயன்படுத்தும் குழுக்களின் ஒத்துழைப்புடன் நீர்பாசனப் படுகை பரப்பில் சுழல் முறையைச் (சுழல் முறையில் நீர் வழங்கல்) செயற் படுத்தல்.

II. ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	சிறுபாசனம், நீர் வினியோக முறை, கால்வாய் அமைப்பு, நுண்ம நீர்ப்பாசனத் திட்டம் உட்பட நீரை நிருவகித்தல் மற்றும் நுண்ம நீர்ப் பாசன தொடர்பிலான நடவடிக்கைகள் ஆகியவற்றை மேம்படுத்தல்.	(அ) ஊராட்சி ஒன்றியத்திட்டத்தில் கருதப்பட்டுள்ள சிறுபாசனத் திட்டத்தைத் தோற்றுவித்தலும், தொழில் நுட்ப மதிப்பீடு செய்தலும்.
		(ஆ) ஊராட்சி ஒன்றியத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள சிறுபாசனத் திட்டங் களையும் அரசாலும் பிறமுகமை –களாலும் உருவாக்கப் பெற்ற திட்டங்களைச் செயற்படுத்தலும்.
		(இ) சிற்றூராட்சிகளிடம் ஒப்படைக்கப் பெறாத நீர்கசிவுக் குட்டைகளையும் நீர்த்தடுப்புச் சுவர் அணைக் கட்டு களையும் கட்டுமானம் செய்தல்.
		(ஈ) சிறுபாசனத் திட்டங்களுக்கும், நுண்ம நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் பல்வேறு திட்டங்களின் கீழ் பயனாளர்களைத் தெரிவு செய்தலில், சிற்றூராட்சி களுக்கு உதவிபுரிதல், மற்றும் மானியம் மற்றும் வங்கிக் கடன்களின் ஒப் பளிப்புக்குப் பரிந்துரை செய்தல்.
2.	ஊராட்சி ஒன்றிய ஏரிகள் உள்பட சிறுபாசன வள ஆதாரங்களைப் பராமரித்தல்	(அ) குடிமராமத்தை செயற்படுத்துவதில், சிற்றூராட்சிகளுக்கு உதவுதல். நீர்ப்பாசன மற்றும் வடிகால் அமைப்புகளின் பராமரிப்புக்கு கட்டணம் வசூலித்தல்.

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
		(ஆ)	அரசு மானியத்துடன் ஊராட்சி ஒன்றிய ஏரிகளைப பராமரித்தல்.
		(இ)	அரசால் ஒதுக்கப்பட்ட நீர்ப்பாசன ஆதாரங்களைப் பராமரிப்பதற்காக பாசனப் பரப்புதாரர்களிடம் கட்டண விதிப்பு செய்தல்.
		(ஈ)	நீர் பங்கீட்டில் (சுழல் முறையில் நீர் வழங்கல்) முறை மாற்று முறையை பயனுள்ள முறையில் செயற்படுத்து வதற்காக நீர் உபயோகிப்போர் மன்றத்திற்கு உதவிபுரிதல் மற்றும் சிறு பாசன வளஆதாரங்களை பராமரித்தல்.
3.	சிறு மற்றும் நுண்மநீர்ப்பாசனத் திட்டங்களை ஆய்வு செய்தல்	(அ)	சிறு மற்றும் நுண்ம நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழான பணிகளின் முன்னேற்றத்தையும், தரத்தையும் மேற்பார்வையிடுதல், கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல். ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்பெறும் ஆய்வில் பொதுப்பணித் துறையின் நிருவாகப் பொறியாளர்கள், வேளாண் பொறியியல் துறை மற்றும் வேளாண் உதவி இயக்குநர் ஆகியோர் பங்கேற்றல்.
		(ஆ)	சிறுபாசன மற்றும் நுண்ம நீர்பாசனத் திட்டங்களுக்கு பாசனத்துடன் தொடர் புடைய பல்வேறு துறைகள் / முகமை களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்.

III. மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
1.	சிறுபாசனத் திட்டங்கள், நுண்ம நீர்ப்பாசனம், நீர் அனுப்பும் முறை வடிகால் அமைப்பு மற்றும் நீரை நிருவகித்தல் தொடர்பிலான பணிகள் முதலியவற்றை மேம்படுத்தல் முதலியன.	(அ)	சிறுபாசனம், நுண்ம நீர்ப்பாசனம் மற்றும் பாசனப்படுகைப் பகுதி மேம்பாடு ஆகிய பணிகளில் மாவட்டத் தொலைநோக்குத் திட்டத்தை உருவாக்குதல்.
		(ஆ)	மாவட்ட அளவில் செயற்படுத்தப்பட்டு வரும் சிறுபாசனம், நுண்ம நீர்ப் பாசனத் திட்டங்கள், பாசனப் படுகைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், ஆகியவற்றை ஆய்வு செய்தலும், கண் காணித்தலும்.
		(இ)	மாநில அரசு மைய அரசின் அதிகாரி களிடமிருந்து உரிய நிதியைப் பெறுவதற் காகத் தொடர்புடைய மண்டல தலைமைப் பொறியாளர்களுக்குக் கருத்துருக் களைத் தயாரித்து அனுப்புதல்.

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
2.	நீர்ப்பாசன முறைகளை பராமரிப்பதன் மீது அரசுக்கு அறிவுரை செய்தல்.	(அ)	ஒவ்வொரு சிற்றூராட்சியாலும் ஊராட்சி ஒன்றியத்தாலும் பராமரிக்கப் படவேண்டிய ஏரிகளின் விவரங்கள் குறித்து அரசுக்கு அறிவுரை அளித்தல்.
		(ஆ)	ஒவ்வொரு சிற்றூராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டுதோறும் விடு விக்கப்பட வேண்டிய நீர்ப்பாசன மானியங்களை அரசுக்குப் பரிந்து ரைத்தல்.

நிர்வாக மற்றும் தொழில்நுட்பச் சிக்கல்கள்

08. மேலே கருதப்பட்டுள்ள அதிகார ஒப்படைப்பானது, ஊராட்சி நிறுவனங்களுக்கு, தொழில்நுட்ப அல்லது பிற பணியாளரின் மாற்றம் எதையும் குறிப்பிடவில்லை. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு, (அ) சிறு, நுண்ம பாசனத்திட்டங்களையும் பிற பாசனத் திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் (ஆ) அந்நீர்பாசன ஆதாரங்களைப் பராமரித்தல் ஆகியவை தொடர்பில் பாசனத்துடன் தொடர்புடைய துறை களிலிருந்தும் உள்ளடக்கிய மற்றும் விரிவான தொழில் நுட்ப ஆதரவு வசதிகள் அதிகமாகத் தேவைப்படலாம். ஏரிகள் மற்றும் பிற நீர்ப் பாசன ஆதாரங்களை முழு அளவில் பராமரிப்பதற்கு பயன்படுத்துவோர் / மக்களின் பங்கெடுப்பு ஒருபுறமும், தொழில் நுட்பத்திறன் உடையவர்கள் அரசின் நிதி ஆதரவு ஆகியன மறுபுறமுமாக ஊராட்சிகள் இயங்க வேண்டும். இவ்வாறாக தொழில்நுட்ப துறையின் உடனடி உதவி கிடைக்கப்பெறாத இடங்களில் ஓய்வு பெற்ற பொறியியல் வல்லுநர்களை ஒரு குறிப்பிட்ட வேலைகட்கு பயன்படுத்தினால் திட்டத்தை காலதாமதமின்றி உடனடியாக செயல்படுத்த வாய்ப்பு உண்டு. அரசு கொடுக்கும் மானியத்தில், குறிப்பிட்ட சிறிய விழுக்காடுகள் பொறியியல் வல்லுநர்களுக்கு செலுத்தலாம்.

நிதிச் சிக்கல்கள்

09. மாநில அரசு, சிறு பாசனத் திட்டங்களுக்கு நிதி அளிக்கிறது. அது, ஊராட்சி நிறுவனங்களுக்கும் அல்லது மண்டலத் தலைமைப் பொறியாளர்களுக்கும் கிடைக்கக் கூடியதாகவுள்ளது. மாநில அரசிடமிருந்து திட்டம் சாரா பணிகள், மாநிலத் திட்டப் பணிகள், மைய அரசின் ஆதரவு பெற்ற திட்டங்களும், உலக வங்கியின் உதவி பெற்ற திட்டங்கள், மற்றும் வட்டார நீர்பாசன மானியங்கள் ஆகியவற்றிலிருந்தும் உதவிகள் பெறப்படுகின்றன. 1995–96 ஆம் ஆண்டுக்கு மாநில சிறு பாசனத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.10.00 கோடிகளாகும். பின்வரும் நிதிகள், சிறு பாசனத் திட்டங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டவையாகும். இவை, மாவட்டப்பன்முகப் படுத்தப்பட்ட திட்டங்கள், நுண்ம நீர்ப்பாசனத் திட்டங்கள், பாசனப் படுகைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், ஜீவன் தாரா திட்டங்கள் மற்றும் நீர்ப்பாசன மானியங்கள் ஆகியவற்றின் கீழான நிதிகள் சேர்க்கப்படவில்லை.

(ரூ. இலட்சங்களில்)

1	2	3	4	5
எண்	**திட்டத்தின் பெயர்**	**1994–1995**	**1995–1996**	**1996–1997**
1.	ஊராட்சி ஒன்றியங்கள்களின் உரிமையில் 100 ஹெக்டேருக்குக் குறைவான பாசனப் பரப்பைக் கொண்ட நீர்ப்பாசன ஏரிகளைத் தரம்படுத்தலும் மேம்படுத்தலும்.	44.09	–	–
2.	ஊரகப் பகுதிகளிலுள்ள சிறு பாசன ஏரிகளை மேம்படுத்து வதற்கான சிறப்புத் திட்டம்	235.00	235.00	235.00

(ரூ. இலட்சங்களில்)

1	2	3	4	5
எண்	திட்டத்தின் பெயர்	1994-1995	1995-1996	1996-1997
3.	முன்னாள் ஜமீன் ஏரிகளைச் சீராக்கம் செய்தல்	211.01	–	–
4.	சிறப்பு சிறு பாசனத்திட்டம்	370.91	510.00	559.00
5.	ஏரிகளைத் தூர்வாருதல்–பண்படுத்தல்	13.55	8.00	1.20
6.	மாநில சிறுபாசனத் திட்டம் முன்னாள் ஜமீன் ஏரிகள்	–	500.00	500.00
7.	மாநில சிறு பாசனத் திட்டம் – பொதுப் பணித்துறை ஏரிகள்	–	500.00	500.00
	மொத்தம்	874.56	1753.00	1795.20

ஆதாரம் : திட்டம் – வரவு செலவுத்திட்ட இணைப்படி, 1996–97

10. இம்மாநிலத்தில், 12584 ஊராட்சிகளும் 384 ஊராட்சி ஒன்றியங்களும் இயங்கி வருகின்றன. சிற்றூராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் அவற்றிற்கு அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கைகளின் பராமரிப்புக்கும் சொந்தமாக நிதிகளைக் கொண்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் எட்டுவகையான கணக்கு தொகுப்புக் களை பராமரித்து வருகின்றன. அஃதாவது "ஊரக நிதிகணக்கு I முதல் VIII" வரை".

11. ஊரக வளர்ச்சித் துறையின் 27 ஆவது எண்ணுள்ள கோரிக்கையின்படி, ஊராட்சி ஒன்றியங்கள் 3,28,076 எக்டேர் பாசனப் பரப்பு கொண்ட 23,761 சிறுபாசனத் திட்ட ஏரிகளை பராமரித்து வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலுமுள்ள, சிறு பாசனத் திட்ட ஏரிகள் அனைத்தையும் ஐந்தாண்டு சுழற்சி முறையைப் பின்பற்றி பராமரிப்பதற்கான திட்ட மொன்று தயாரிக்கப்பட உள்ளது. 1996–97 ஆம் ஆண்டில், ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிதி அதிகார மாற்றம், ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை ஒத்திருக்க வேண்டும். நீர்பாசனப் பராமரிப்பு நேர்வில், இதுவரை அரசால் விடுவிக்கப்பட்ட மானியங்களின் அளவு போதுமானதாக இல்லையென்று கருதப்படுகிறது. மாநிலத் திட்டக்குழு நீர்ப்பாசன மானியங்களில் நியாயமான மதிப்பீடு இருக்க வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கிறது.

கால்நடை பராமரிப்பு, பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை

(இனம் - 4)

கால்நடை மற்றும் கோழிவளர்ப்பு மூலம் தொடர்ந்து வருவாய் கிடைப்பதனால் தொடர்ந்து உழைப்பூதியமும் தொழில் வாய்ப்பும் அளிக்கப்பெறுவதால் மாநிலத்தின் பொருளாதாரத்தின் கால்நடை பராமரிப்பானது முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

நம் மாநிலத்தில் கால்நடை இனவிருத்தி, கால்நடைகளுக்கு நலம் பேணுதல், தீவனப் பெருக்கம், கால்நடை பராமரிப்பு, விரிவாக்கம், கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றின் மீதான திட்டங்களின் செயலாக்கம் வாயிலாக மாநிலத்தில் கால்நடையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்பு, பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை ஆகியவற்றின் சிறப்புக்கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கால்நடை பராமரிப்பு

02. 1989 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படியும் 1995 ஆம் ஆண்டின் திட்டமிடப்பட்ட கால்நடைத் தொகையின்படியும் தமிழ்நாட்டின் பசு, எருமை ஆகியவற்றின் இயல்பான வளர்ச்சி வீதம் வருமாறு :

	மொத்த கால் நடைகள் இனவிருத்திக்குத் தகுதியான (கோடிகளில்)		கால்நடைகள் (கோடிகளில்)	
	1989	1995	1989	1995
ஆவினம்	0.94	0.86	0.32	0.29
எருமையினம்	0.31	0.31	0.16	0.15

1989–90 ஆம் ஆண்டு 34 லட்சம் டன்னாக இருந்த மொத்த பால் உற்பத்தியின் அளவு 1995–96 ஆம் ஆண்டில் 37.90 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. 1995–96 ஆம் ஆண்டில் மதிப்பிடப் பெற்ற உற்பத்தி 204.8 கோடி முட்டைகள் என்றும் 40267.40 மெட்ரிக் டன் இறைச்சியாகவும் உள்ளது. இது மாநிலத்தின் ஊரகப் பொருளாதாரத்தில் கால்நடை பராமரிப்பின் விரிவாக்கத்தின் முக்கியத்துவத்தைக் குறிக்கின்றது.

கால்நடை அபிவிருத்தித் திட்டத்தைத் தவிர இந்த துறை செம்மறி ஆடு அபிவிருத்தி, வெள்ளாட்டுப் பெருக்கம், பன்றி வளர்ப்பு, கோழியினப் பெருக்கம், முயல் அபிவிருத்தி, தீவன அபிவிருத்தி ஆகியவை தொடர்பிலான நடவடிக்கைகளையும் வறுமையை ஒழிப்பதற்காகக் மேற்கொள்கிறது. கால்நடை பராமரிப்புச் துறை கீழ்காணும் பயனளிக்கும் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. செம்மறி ஆடு, பால்பண்ணை, பன்றி வளர்ப்பு மற்றும் கன்று வளர்ப்பு ஆகிய பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு விவசாயிகளை ஊக்குவிக்கின்றது. நிதியுதவி அளிப்பது நிறுவனங்களின் பொருளாதாரம் நிலைத்திருக்க உதவுகிறது. மைய சிறப்பு உதவி, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் இதன் பயன்கள் விரிவாக்கப்பட்டுள்ளன.

நீடித்திருக்கக் கூடிய கால்நடை உற்பத்தி, அதிகரிக்கப்பட்ட பால் உற்பத்தி, கால்நடை உடைமையாளர்களின் வருமானப் பெருக்கம் ஆகியவற்றிற்கு வழிவகை செய்வதற்கு வெளியிலிருந்து கிடைக்கும் உதவியுடன் பின்வரும் திட்டங்களை அரசு செயல்படுத்துகின்றது.

1. உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கால்நடை மேம்பாடு.

2. உலகவங்கி நிதி உதவியுடன் கூடிய கால்நடை பராமரிப்பு திட்டத்தின் வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம்.

3. ஐரோப்பிய குழுமநிதி உதவியுடன் கூடிய செயல்படுத்தப்படும் ஆடு வளர்ப்புத் திட்டம்.

4. டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்.

பால்பண்ணை

03. பால்வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாநிலத்தில் உள்ளதைப் போன்ற ஆனந்த் நிறுவன கூட்டுறவுச் சங்கங்களைப் போன்று பால் கூட்டுறவு சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று படி நிலைகளைக் கொண்டதாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாகவும், இடையில் (மாவட்ட அளவில்) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியமாகவும் மேல்மட்டத்தில் (மாநில அளவில்) ஒன்றியங்களின், இணையமாகவும், இயங்கி வருகின்ன.

பால்பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகப் பால் வளத்துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும் அளவிலான நடவடிக்கைகளின் விவரம் வருமாறு :

பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு இலவசமாக கால்நடை மருத்துவ வசதி. செயற்கை முறை கருவூட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த சரிவிகித கால்நடை தீவனம் வழங்குதல் மற்றும் உறுப்பினர்களுக்கு நவீன கால்நடை பராமரிப்புப் பயிற்சி முதலியன இத்துறையினால் அளிக்கப்பட்டு வருகின்றது. அதிக அளவில் பால் கொள்முதல் செய்யவும், பதப்படுத்தவும், பால் விற்பனை செய்யவும். தேவைப்படும உள்ளமைப்புகளுக்கு ஏற்பாடு செய்தல் ஆகியனவும் அளிக்கப்பெறுகிறது. பால் குளிரூட்டும நிலையங்கள் அமைத்தல், கொள்முதல் செய்தல். பதப்படுத்துதல், பால் மற்றும் பாலிலிருந்து தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய வணிக நடவடிக்கைகளை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய்ம (ஆவின்) செயற்படுத்துகிறது. மேலும் இந்த இணையம் பால்வளத் திட்டங்களை (வெண்மைப் புரட்சித் திட்டங்களை) தேசீய பால் பண்ணை மேம்பாட்டு வாரிய நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் செயற்படுத்தி வருகின்றது. 31.3.96 ஆம் நாளன்று 27.30 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 10554 தொடக்கப்பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 17 மாவட்ட நிலை பால் ஒன்றியங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் 1995–96 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 18.25 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்தன. 19 பால்பண்ணைகளும் 42 பால் குளிரூட்டும் நிலையங்களும் பாலை பதப்படுத்தும் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்றன.

04. சில சிறப்புத் திட்டங்களான மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர் நலத் திட்டம் முதலியனவும், பால் பெருக்குத் துறையால் தொடர்புடைய நிதி முகமைகளிலிருந்து நிதிகளைப் பெற்றுச் செயல்படுத்தப்பட்டுவருகின்றன.

05. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல் அவற்றை மேற்பார்வை செய்தல் மற்றும் பால் கூட்டுறவு சங்கங்கள் அனைத்தையும் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு இணையம், ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகளையும், மேற்கொள்வதும் பால்வளத்துறையின் மற்றொரு வகை நடவடிக்கையாகும். கிராம அளவில் பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படுகின்றன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டும உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை மேற்படி சங்கங்கள்

சேகரிக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் வழங்கும் பாலைத் தனித்தனியாகப் பரிசோதித்து அதன் தரத்தின் அடிப்படையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விலையில் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. கொள்முதல் மற்றும் இடுபொருட்கள், மருத்துவப்பிரிவு / மருத்துவ வசதி வசதிக்குழுக்களில் இருக்கும் கால்நடை உதவி மருத்துவர்களால் பால் உற்பத்தியாளர்களின் மாடுகளுக்கு மருத்துவ வசதி அவர்கள் வீட்டிலேயே வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த செலவில் செயற்கைமுறைக் கருவூட்டல் வசதிகளும் அளிக்கப்படுகிறது. இச்சங்கங்களின் செயலாளர்களுக்கு, செயற்கை முறை கருவூட்டல் பயிற்சியும் முதலுதவி செய்யும் பயிற்சியும் அளிக்கப்டுகின்றன. ஒவ்வொரு சங்கமும் தங்கள் சொந்தச் செலவில் முதலுதவிப் பெட்டிகள் வைத்துள்ளன. இக்கிராம சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலில் உள்ளூர் உபயோகத்திற்கு என ஒரு குறிப்பிட்ட அளவு வைத்துக் கொண்டு எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

கோழியினப் பெருக்கம்

06. நல்ல தரமான வெள்ளையின் குஞ்சுகளை வளர்க்கவும், இனப்பெருக்கம் செய்யவும் கால்நடை பராமரிப்புத் துறையினால் 26 கோழியினப் பெருக்க நிலையங்களும் 2 குஞ்சு பொரிப்பகங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகள் நன்மைக்காக இந்த கோழியினப் பெருக்க நிலையங்கள் செயல்முறை விளக்க நிலையங்களாகவும் செயற்பட்டுவருகின்றன. இந்த நிலையங்களில் வளர்க்கப்படும் குஞ்சுகள் உள்ளூர் விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றன. உள்நாட்டுக் கோழியினப் பெருக்கத்தைப் பாதுகாப்பதற்காக இந்த இனப் பெருக்கங்களை பெருக்கும் பணியை காட்டுப்பாக்கத்திலுள்ள கோழிப் பண்ணையும், ஒசூரிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையும் மேற்கொள்கின்றன. கோழியினங்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து கோழிகளுக்கு நோய்கள் பரவாமல் தடுக்க எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை பற்றி விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விவரித்து விவசாயிகள் பயனடையத்தக்க வகையில் ஈரோட்டிலும் சேலம் மாவட்டத்தில் ஆண்டலூர் கேட்டிலும் கோழி புலனாய்வு கூடங்கள் இரண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கால்நடை மருத்துவ உள்ளமைப்புகள்

07. மாநிலத்தில் ஏராளமான கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன.

அ.	கால்நடை மருத்துவ துணை நிலையங்கள்	2147
ஆ.	கால்நடை மருந்தகங்கள்	765
இ.	கால்நடை மருத்துவமனைகள்	94
ஈ.	சுகாதார மையங்கள்	21
உ.	கால்நடை நோய் பல்நோக்கு மருத்துவ மையம்	8
ஊ.	கால்நடை நோய் தடுப்பு கண்காணிப்பு பிரிவுகள்	14
எ.	கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவுகள் (உள்ளாட்சி ஒன்றிய அளவில் – 362)	436

ஒவ்வொரு உள்ளாட்சி ஒள்றியத்திற்கும் ஒரு கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவு என்ற வகையில் 362 கால்நடை மருத்துவ ஊர்த்திப்பிரிவுகள் உள்ளமைப்பைக் குறிப்பிடலாம். உள்ளாட்சி ஒன்றியமானது கால்நடை பராமரிப்புத் துறையின் விரிவாக்க அலுவலரின் பணிகளைப் பயன்படுத்திக் கொள்கிறது. 183 பதிவு செய்த இறைச்சி வெட்டுக் கூடங்கள் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன. இருப்பினும் கால்நடை பராமரிப்புத் துறை இக்கூடங்களில் இறைச்சி பார்வையிடலை நடத்தி வருகின்றது.

சட்ட ஒதுக்கீடுகள்

08. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், கால்நடை பராமரிப்பிற்குத் தொடர்புடைய பின்வரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பொது மக்களுக்குரிய கிராம உள்ளாட்சிக்குத் தேவையான நிற்குமிடங்கள், தங்குமிடங்கள், கட்டை வண்டி நிற்குமிடங்கள், பொது மக்களின் கால்நடைகள் தங்குமிடங்கள், பொது இறைச்சி வெட்டும் கூடங்கள் ஆகிய இவற்றை ஊராட்சிகள் அமைத்துப் பராமரிப்பதற்கு சட்டப் பிரிவுகள் (2) மற்றும் (ஊ) வில் அத்தகைய ஏற்பாடுகளுக்கு அனுமதி வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியத்திற்குத் தேவையான மருத்துவ நிவாரணத்தை மேற்கொள்ளத் தகுந்த ஒதுக்கீடு செய்வது ஊராட்சி ஒன்றியத்தின் கடமையாகும். மேலும் அரசால் குறிப்பிடப்பட்டவாறு கால்நடை பராமரிப்புக்காக (பிரிவு 112(எ) தேசிய விரிவாக்கப் பணித்திட்ட நிறைவேற்றத்தை மேற்கொள்ள பிரிவு 113 இன்படி ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு அதிகாரங்கள் அளிக்கப் பெறுகிறது. பிரிவு 156 மற்றும் 157 ல் இறைச்சி வெட்டும் கூடங்கள் பற்றி குறிப்பிடுகின்றன. ஊராட்சி, இறைச்சி வெட்டும் கூடங்களுக்கான இடங்களை வழங்கலாம்; அதற்கான வாடகையும் கட்டணமும் விதிக்கலாம் (பிரிவு 156) (அ) இறைச்சி வெட்டும் இடங்களைத் தவிர பிற இடங்களில் இறைச்சி வெட்டுவதைத் தடுத்தல் அல்லது வெட்டுவதை ஒழுங்கு முறைப்படுத்துதல் (ஆ) கால்நடைகளை அறுத்தல் அல்லது தோலுரித்தல், கால்நடைகளை வெட்டி பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்கு உரிமம் வழங்குதல் (இ) இறைச்சி வெட்டும் கூடங்களை ஆய்வு செய்தல் மற்றும் அலுவலர்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல் பிரிவு (157) ஆகியவற்றிற்கு விதிகளை அமைக்க அரசுக்கு அதிகாரங்கள் உண்டு.

பிரிவு 245 (1) அட்டவணை 2 இன் கீழ் தண்டங்கள் விதிப்பதற்கான வழிவகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. (அ) பொது இறைச்சி வெட்டும் கூடங்களுக்கு வெளியே கால்நடைகளை வெட்டுவது, அறுப்பது, தோலை உரிப்பது விதிகளை மீறுவதாகும். ரூ.200 வரையில் தண்டம் விதிக்கப்படலாம். (ஆ) உரிமம் இல்லாது அல்லது உரிமத்திற்கு எதிராகக் கால்நடைகளை வெட்டுவது (ரூ.20 தண்டம் விதிக்கப்படலாம்).

09. மேற்கூறியவற்றின் பின்னணியில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கீழ்காணும் அதிகாரங்கள் ஒப்படைக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

I. ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. கால்நடை பெருக்கம்	1. கால்நடை மற்றும் கோழியினங்களை நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
	2. ஊராட்சியில் கால்நடை மற்றும் கோழியினக் கண்காட்சி நடத்துதல்.
	3. கிராம கால்நடை பிரிவு மற்றும் உறைவிந்து தொழில் நுட்ப மையங்களின் பணிகளை மேற்பார்வையிட உதவி செய்தல். குறைகளை ஊராட்சி ஒன்றியத்திற்குத் தெரிவித்தல்.
	4. நோய் மற்றும் தொற்று நோய் பரவுதலை உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) ஊராட்சி ஒன்றிய உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) ஆகியோரிடம் அறிவித்தல்.

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
		5.	அந்தப் பகுதியில் உள்ள இறைச்சி வெட்டும் கூடங்களின் பணிகளை கண்காணித்து மேற்பார்வை –யிடல், அவைகளைப் பதிவு செய்தல், துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு பராமரித்தல்.
		6.	அந்தப் பகுதியிலுள்ள கால்நடை மருத்துவ ஊர்தி பிரிவு, கால்நடை மருத்துவ துணை மையங்கள் மற்றும் மருந்தகங்களின் பணிகளைச் சோதனை செய்தல் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சிக்கல்கள் குறித்துத் தெரிவித்தல்.
2.	தீவன அபிவிருத்தி	1.	சமுதாய புல்வெளியில் தீவன பண்ணைகள் அத்து, பராமரித்தல், பால்பண்ணை கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து தீவன உற்பத்திக்காகச் சமுதாய நிலங்களை வழங்குதல்.
		2.	சமுதாய மேய்ச்சல் நிலங்களில், புல்வெளிகளில் கால்நடைகள் மேய்வதைக் கட்டுப்படுத்துதல், முறைப்படுத்துதல், கட்டணம் விதித்தல்.
		3.	உள்ளூர் தீவன வங்கியை ஏற்படுத்தி, வறட்சி மற்றும் பற்றாக்குறை காலங்களில் தீவனத்தைப் பங்கிட்டு அளிக்க ஏற்பாடு செய்தல்.
		4.	தீவன விதைகள், கன்றுகளை கிராமங்களுக்கு பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்தல்.
3.	பால்பண்ணை வளர்ச்சி	1.	உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பால் சேகரிக்கும் மையங்களின் செயற்பாடுகளுக்கும் அமைப்புகளுக்கும் வசதி செய்து தருதல்.
4.	கோழியின் அபிவிருத்தி	1.	கிராமத்தில் கோழியின் அபிவிருத்தி வசதி செய்தல்.

II. ஊராட்சி ஒன்றியம்

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	கால்நடை பெருக்கமும் கால்நடை மருத்துவப் பணிகளும்	1.	உள்ளூர் தேவைகளுக்கு மட்டுமின்றி தேசீய வேளாண்மை குழுவில் குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டத்தின்படி கால்நடைப் பணிகளுக்காகவும் புதிய கால்நடை மருத்துவமனைகளை அமைத்தல், தற்பொழுதுள்ள மையங்களை பராமரித்தல்.

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
		2.	பல்வேறுபட்ட திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு நல்ல தரமான கால்நடைகளை விநியோகித்தல். நல்லதரமான இனவிருத்திச் செய்யும் கால்நடைகளைப் பற்றி விவசாயிகளிடையே செய்தி பரப்புதல்.
		3.	கால்நடைகளுக்கான இனப்பெருக்கப் பண்ணைகளை நிறுவுதல், முன்னேற்றுதல், பராமரித்தல் ஆகியவற்றை உருவாக்குதலும் அவற்றின் தேவையை மதிப்பீடு செய்தலும்.
		4.	தனியார் இனவிருத்தி மையங்கள் மற்றும் குஞ்சு பொரிப்பகங்களுக்கு உரிமம் வழங்குதல்.
		5.	ஊராட்சிகளின் மூலம் இறைச்சி வெட்டும் கூடங்களைப் பராமரித்தல்.
		6.	ஊராட்சி ஒன்றியக் குழுவிலுள்ள கால்நடை மருத்துவ பணி நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல் கால்நடை மருத்துவக் கவனிப்பை மறு ஆய்வு செய்தல் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் நோய், தொற்றுநோய் பரவாமல் தடுத்தல்.
2.	தீவன அபிவிருத்தி	1.	தீவன உற்பத்திக்கான பயிற்சி முகாம்களை அமைத்தல். நிதி உதவி அளித்தல் நல்ல தரமான தீவன விதைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
		2.	வறட்சி மற்றும் பற்றாக்குறை காலங்களில் தீவனம் வழங்குதல்.
3.	பால்பண்ணை வளர்ச்சி	1.	பால் சேகரிப்பதற்காக பால் கிடைக்கும் புதிய இடங்களைத் தொடங்கவும் அதன் வளர்ச்சிக்கும் உதவுதல்.
		2.	பால் குளிரூட்டும் மையங்கள் கால்நடை தீவன நிலையம், மற்றும் பால்பண்ணை தொழிற்சாலைகளை ஏற்படுத்த பால் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல்.
4.	கோழியின அபிவிருத்தி	1.	கோழி வளர்ப்பவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் கோழி தீவனம் வழங்கவும் ஏற்பாடு செய்தல்.

III. மாவட்ட ஊராட்சி

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	கால்நடை பெருக்கத்திற்கும் மருத்துவப் பணிகளுக்கும் திட்டமிடுதல்	1.	விவசாயிகள் ஆண்டுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தல், திட்டமிடுதல், மாவட்டங்களிலுள்ள கால்நடை அபிவிருத்தியின் சிக்கல்களையும் எதிர்கால விளைவுகளையும் கணக்கெடுத்து ஆராய்ச்சிச் செய்தல், பணியாளர்களை அளித்தல், கால்நடை அபிவிருத்திக்காக நீண்ட காலதிட்டம் இயற்றுதல்.
		2.	வேளாண்மை நிலைக்குழுவின் மூலமாகவும் மாவட்டங்களில் செயற்படும் கால்நடை அபிவிருத்தித் திட்டங்களை / செயல் திட்டங்களை காலமுறை தோறும் (மூன்று மாதத்திற்கொருமுறை) ஆய்வு செய்தல் கால்நடை பராமரிப்புத் துறை இணை / துணை இயக்குநர் இவ்வாய்வினை மேற்கொள்வர்.
2.	பால்பண்ணை வளர்ச்சி	1.	கால்நடைகள் தொடர்புடைய கால்நடை மருத்துவ சுகாதாரத் திட்டங்களைக் கண்காணித்தல்.
3.	கோழியின அபிவிருத்தி	1.	மாவட்ட நிலையில் மேற்கொள்ளப்பெறும் கோழியின அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வசதி செய்தல் மற்றும் மறு ஆய்வு செய்தல்.
		2.	மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகப் பிரிவுகளின் பணிகளை ஆய்வு செய்தல்.

நிருவாகச் சிக்கல்கள்

10. கால்நடை பராமரிப்பு துறையின் மாவட்ட நிருவாகம் மண்டல இணை இயக்குநர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களைப் ஒப்படைக்கக் கருதப்பட்டதன் விளைவாக கால்நடை மருத்துவ ஊர்தி மருந்தகங்களையும் கால்நடை மருத்துவத் துணை மையங்களையும் சேர்ந்த பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படுவர். ஊராட்சி ஒன்றியத்திற்கும் மாற்றுப் பணியின் பேரில் அளிக்கப் பெற்றாலும் அப்பணியாளர்கள் அரசுப் பணியாளர்களாகவே தொடர்ந்து இருப்பர். இப்பணியாளர் மீதான தொழில்நுட்ப மற்றும் நிருவாகக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் கால்நடை பராமரிப்புத் துறையின் விரிவாக்க அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரிடம் இருக்கும். பல்வேறு திட்டச் செயலாக்க நடவடிக்கைகள் ஊராட்சி ஒன்றிக் குழுவிற்கு மாற்றப் பெறலாம். பயனிளிக்கக் கூடிய திட்டங்களைச் செயல்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபாடுள்ள ஒரு சில பணியாளர்களை இவ்வாறாக ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு மாற்றுப் பணியின்பேரில் மாறுதல் செய்யலாம். மாநிலத்தின் கால்நடைகளை உயர்த்துவதற்கான நீண்ட காலத்திட்டம், வினைமுறைத் திட்டம் ஆகியவற்றை வரைவதுடன் மாவட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு கால்நடை பராமரிப்பு இயக்ககம் முக்கியமாக தொழில் நுட்ப வழிகாட்டுதல்களையும் அளிக்கும். கால்நடை தரத்தை உயர்த்தும் வழிமுறைகளையும் மாநிலத்திற்காக இவ்வியக்ககம் வரையறுக்கும்.

நிதிச்சிக்கல்கள்

11. பயனளிக்கச் கூடிய திட்டங்களுக்கு தேவையான நிதிகளை ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றம் செய்யலாம். இத்தகைய திட்டங்களை செயலாற்றுவதற்கு ஆகும் நிறுவாகச் செலவு இயக்கம் மற்றும் நிறுவனச் செலவுகளை ஏற்பதற்கான அரசு மான்யம், கால்நடை மருத்துவ துணை மையங்களிள் செயலாக்கம் மற்றும் ஏனைய செலவுகளுக்கு அரசு மான்யமாக ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு விடுவிக்கப்பெற ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தனியொருவர் கறவை மாடுகளைப் பெற்றுக் கொள்ள அரசு ஊக்கத் தொகை வழங்குகிறது. 1995–96 ஆம் ஆண்டில் இத்தகைய திட்டச் செயலாக்கத்திற்கான வரவு செலவு திட்டத்தில் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(அ) ஆதிதிராவிடருக்கு மத்திய சிறப்பு உதவித் தொகை ரூ.150 இலட்சமும் (ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தில் பழங்குடியினருக்கு ரூ.24.13 இலட்சமும் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

சட்டச்சிக்கல்கள்

12. அனைத்து பொது மற்றும் தனியார் இறைச்சி வெட்டும் இடங்களையும், கால்நடை நோயறியும் நிலையங்களையும் பதிவு செய்வதற்கும், உரிய கட்டணத்தை வசூலிப்பதற்கும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்குவதற்குத் தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டமும் தமிழ்நாடு ஊராட்சி சட்டமும் திருத்தப்பெற வேண்டும். தேவைப்படும் அறிவிக்கைகள் வெளியிடப்பட வேண்டும்.

மீன் வளம்

இனம் - 5

மீன் உற்பத்தியைப் பெருக்குவதாலும் வேலை வாய்ப்பு அளிப்பதாலும் உள்நாட்டு மற்றும் கடல் மீன் வளம் மீன்துறையில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இம்மாநிலம் 1000 கிலோ மீட்டர் கடற்கரையைக் கொண்டிருக்கின்றது. அதில் 5.3 இலட்சம் மக்கள் தொகையும் 442 மீனவ கிராமங்களும் இடம் பெற்றிருக்கின்றன. அவர்களில் 2.52 இலட்சம் மீன்பிடி தொழிலில் நேரடியாக ஈடுபட்டு உள்ளனர். அவர்கள் 25,000 கட்டு மரங்களையும், 13724 வள்ளங்களையும், 8230 விசைப் படகுகளையும், 6800 இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளையும் இயக்குகின்றனர். உள்நாட்டு மீன்வளம் சம அளவில் முக்கிய பங்காற்றுகின்றது. மீன் வளர்ப்புக்காகக் குறிப்பிட்ட கால அளவுக்குட்பட்ட நீர்வரத்து வாய்ப்புள்ள 52 பெரும் நீர் தேக்கங்களும் பெரும் எண்ணிக்கையான குளங்களும் உள்ளன. உள்நாட்டு மீனவர்கள் 50530 பேர் உள்ளனர்.

02. 1994 – 95ல், உள்நாட்டு மீன் உற்பத்தியானது 1.08 இலட்சம் டன்களாகவும், கடல் மீன் உற்பத்தியானது 3.31 இலட்சம் டன்களாகவும் இருந்தது. கடந்த சில ஆண்டுகளாக உவர் நீர் உயிரின வளர்ப்பும் கடல் உயிரின வளர்ப்பும் வளர்ச்சியடைந்துள்ளது. உவர் நீர் உயிரின வளர்பபுக்கும் கடல் உயிரின வளர்ப்புக்குமாகி தற்பொழுது 860 ஹெக்டேர் நீர் பரப்பு உள்ளது. இரால் மீன் உற்பத்தியானது 1994 – 95இல் 270 டன் அளவில் இருந்தது.

03. உள்நாட்டு மீன்வள மேம்பாட்டிற்காக பின்வரும் நடிவடிக்கைகள் அரசால் செயல்படுத்துப்பட்டு வருகின்றன.

1) மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவற்றிற்கான திட்டம்.

2) மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணைகளை அமைத்து பராமரித்தல்

3) மீன் பிடிப்புக்கான் உரிமம் காலத்தில் மற்றும் பெரும்பாலான நீர் தேக்கங்களில மீன்களை பாதுகாத்தல்

4) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை

5) ஊராட்சிகளில் மீன் வளர்ச்சி

6) பெரிய நீாத் தேக்கத்தில மீன் பிடிப்பு

7) ஊரக மீன் வளர்ப்பு விளக்கக் குளங்கள்

8) உள்நாட்டு நீர் நிலையில் மீன் வளர்ப்பு துறை மூலம் மீன் வளர்ப்பு

04. கடல் மீன் உற்பத்தியைப் பொருத்தமட்டில் கடலில் உள்ள மீன் வளத்தை பெரும் அளவில் பயன்படுத்திக் கொள்வதே முக்கிய நோக்கமாகும். 1951–52 இல் 46,000 டன்களாக இருந்த கடல் மீன் உற்பத்தியானது 1994–95 இல் 3,31,000 டன்களாக உயர்ந்தது. கடல் மீன்பிடிப்பை மேம்படுத்துவதற்குப் பல்வேறு திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகின்றது. அவையாவன (1) நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்கலுக்கு மான்யம் வழங்குதல் (2) கண்ணாடி இழை கட்டு மரங்கள் வாங்க மீனவர்களுக்கு மான்யம் வழங்குதல் (3) கட்டுமரங்களை வேதியியல் முறைப்படி பராமரித்தல்

05. மீனவர்களின் நலனுக்காக பல்வேறுபட்ட நலவாழ்வுத் திட்டங்களை மாநில அரசு செயற்படுத்தி வருகின்றது. பின்வருவன சில முக்கியமான திட்டங்களாகும்.

1) மீனவருக்கான இலவச வீட்டுவசதித் திட்டம்

2) தொகுதி காப்புறுதித் திட்டம்

3) சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

4) மிகு வேக டீசல் எண்ணெய் மீதான ஆயத்தீர்வையை ஈடு செய்தல்

06. உள்நாட்டு, கடல் நீர் நிலைகளில் மீன் வளர்ப்பு நடவடிக்கைகள் ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலேயே இந்தியாவில் முறைப்படுத்தப்பட்டன. 1897 ஆம் ஆண்டில் இந்திய மீன் வளர்ப்புச் சட்டமும் 1929ஆம் ஆண்டின் சென்னை மீன் வளர்ப்புத் திருத்த சட்டமும் அரசு மற்றும் தனிப்பட்ட நீர் நிலைகளில் மீன் பிடிப்பு உரிமையிலிருப்பதற்கு வகை செய்கின்றன. 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலும் (தமிழ்நாடு சட்டம் XXXV 1958)/ 1983 ஆம் ஆண்டு ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய குளங்களில் மீன் பிடி விதிகளின் குத்தகை மற்றம் மீன் வளர்ப்பு உரிமைகளின் உரிமம் குறித்த திருத்தங்களிலும் "மீன் பிடிப்பு குத்தகைக்குரிய உரிமம்" என்பது குறித்தும் மீன் பிடிப்பு உரிமைகளை ஏலத்தில் விடுவதற்குத் தகுதியுடைய அதிகாரம் பெற்றவர் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.

07. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள், ஊரக மீன் விளக்கச் செயல் முறை, ஊராட்சி குளங்கள் போன்றவற்றில் தீவிர மீன் வளர்ப்பு போன்ற பல்வேறு மீன் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்திய பின்னர் நீர் நிலை அமைப்புகளை நீண்டகாலக் குத்தகைக்கு விடுவதற்கான தேவை இன்றியமையாததாகி விட்டது. அதற்கேற்ப, தமிழ்நாடு அரசு 17–11–1993 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 332 இல் மீன் பிடிப்பதற்குரிய குத்தகையினை ஓராண்டிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு உயர்த்தியுள்ளது. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன பொது ஏலத்தில் பங்கு பெறும். பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, ஊராட்சித் துறை ஆகியவற்றிற்கு சொந்தமான நீர்நிலை அமைப்புகள் இவ்வரசாணையில் அடங்குவதாகும்.

08. 1994 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 132 ஆவது பிரிவு மீன் பிடி உரிமைகளை ஊராட்சிகளுக்கு வழங்க அதிகாரம் அளித்து பின்வருமாறு தெரிவிக்கின்றது. கிராமக் குடிகளின் பொது நன்மைக்காக நிர்வகிக்கப்படும் அல்லது பழக்க வழக்கப்படி அவர்கள் உடமையானதாக கருதப்படும். மீன்பிடிக்கும் உரிமை உள்பட சொத்து அல்லது வருமானம் அல்லது ஊர் நிலத்தைப் பொதுவாக அனுபவிப்பவருடைய உரிமை வருமானம் அல்லது குறிப்பிட்ட நிலத்தை அனுபவிப்பருடைய உரிமை வருமானம் அல்லது ஒரு குறிப்பிட்ட நீர்ப்பாசன ஆதாரத்தில் உள்ள நிலத்தை அனுபவிப்பவர்களுடைய உரிமை, வருமானம் ஆகிய இவை, அரசு அதற்கென ஒரு அறிக்கை வெளியிட்டால் ஊராட்சியை சேரும். இதை ஊராட்சி அதன் மக்களுக்கு அல்லது உடமையாளர்களுக்கு நன்மை பயக்கும்படி நிர்வகித்து வர வேண்டும்". மேலும், மேற்கூறிய சட்டத்தின் 133(3) வது பிரிவின் கீழ் பாசன பராமரிப்பு பணியினை ஊராட்சிகளுக்கு அரசால் மாற்றம் செய்யப்படுகின்ற போது மீன்பிடிக்கும் அதிகார உரிமையும் ஊராட்சிகளிடம் ஒப்படைக்க வழிவகை செய்கிறது. அப்பிரிவு பின்வருமாறு தெரிவிக்கின்றது. "நீர்ப்பாசன அமைப்பின் பாதுகாப்பு இந்தப் பிரிவின்படி மாற்றப்படும்போது அவ்வமைப்பிலுள்ள அரசாங்கத்தின் மீன் பிடிக்கும் உரிமையும் மாற்றப்பட்டு நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள் கட்டுப்பாடுகளுக்கு (இந்த வருமானத்தை உபயோகிக்க உண்டான நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் உள்பட) உட்பட்டு தக்கவாறாகப் ஊராட்சி அல்லது வட்டார ஊராட்சியை சேரும்.

09. ஒட்டு மொத்த மீன் வளர்ச்சிக்கும் மற்றும் மீனவர் நலனுக்கும் உரிய திட்டங்களை வளர்ப்பதற்கு பொறுப்பினை மாவட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும். மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையை மாவட்ட ஊராட்சி அமைக்கும். மாவட்ட ஊராட்சி வேளாண்மை நிலைக்குழுவும் மீன்வளத் திட்டங்களை ஆய்வு செய்ய வேணடும். ஊராட்சி ஒன்றயம் எலலாத் திட்டங்களையும் மற்றும் மீன்வளர்ப்பு பண்ணைகள். பயிற்சி. உள்நாட்டு மற்றும் கடல் மீன்வள எல்லைக்குபட்பட்ட திட்டங்களில் பயன்பெறும் நபர்களை தேர்ந்தெடுத்தல் போன்ற திட்டங்களை செயலாக்க வேண்டும். ஊராட்சியின் கீழ் உள்ள மீன் வளாப்பு குளம் குட்டைகளை மேம்படுத்தவும், மீனவர்களுக்கு அரசு உதவியுடன் கூடிய இலவச வீடு வழங்கும் திட்டத்தின் பயன்பெறும் நபர்களை தேர்ந்தெடுத்தல் போன்றவற்றிற்கு அதிகாரம் வழங்குதல் வேண்டும். ஊராட்சியில் சுகாதார அடிப்படையில் மீன் விற்பனைக்கூடங்களை அமைக்க உறுதுணையாக இருக்க வேண்டும். ஊராட்சி, மீனவ குடும்பங்களுக்கு இயற்கையின் இடையூறினால் ஏற்படும் பேரிழப்பை மதிப்பீடு செய்ய வேண்டும். மீன்பிடி தொழில், குத்தகை மற்றும் விற்பனை ஆகியவற்றில் காலந்தொட்டு மதித்து வரும் மரபு வழியை மதித்து ஆவணப்படுத்தலாம்.

மேற்கூறியவற்றின் பின்னணியில் மூன்று அடுக்கு ஊரக ஊராட்சி அமைப்புகளுக்கு கீழ்காணும் அதிகாரங்களை ஒப்படைக்கப் பரிந்துரைக்கப் படுகிறது.

I. ஊராட்சி

	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	உள்நாட்டு மீன் வளங்களின் வளர்ச்சி	1. மீன்வளத்திற்காக கிராம குளம்/குட்டைகளை மேம்படுத்துதல்
		2. கூட்டுறவுச் சங்கங்கள்/மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள், உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் உள்ளிட்ட மீனவருக்குக் கிராம குட்டை குளங்களைக் குத்தகைக்கு விடுதல்.
		3. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் / உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் ஆகியவை போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் உதவியளிக்க உரிய நபர்களைக் கண்டறிதல்.
		4. அரசுக்குச் சொந்தமான நீர்த்தேக்கங்களில் மீன் பிடி உரிமம் பெறுவதற்குரியவர்களைக் கண்டறிதல்
		5. படகுகள், வலைகள் மற்றும் ஏனைய மீன்பிடி தளவாடப் பொருட்களை ஊராட்சி ஒன்றியம் வழங்குவதற்கியலும் வகையில் தகுந்தவர்களைக் கண்டறிதல்
2.	கடல் மீன் வள மேம்பாடு	1. படகுகள்/வலைகள் மீன்பிடி தளவாடங்களை ஆட்களுக்கும் கூட்டுறவுச் சங்களுக்கும் வழங்குவதில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு உதவுதல் மற்றும் தகுந்தவர்களைக் கண்டறிதல்.
		2. கடும் வானிலைக் காலத்தில் விழிப்புணர்வு ஊட்டவும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளவும் விழிப்புணர்வு முகாம் களுக்கு ஏற்பாடு செய்தல்.
		3. கிராமச் சூழ்நிலையில் கடல்வாழ் உயிரின வளர்ச்சியின் பயனைக் கண்காணித்தல் ஊராட்சி ஒன்றியக்குழு மாவட்ட ஊராட்சியின் ஒருங்கிணைப்புடன் கட்டுப்பாடு பற்றி தொடர் நடவடிக்கை எடுத்தல்.
3.	விற்பனை மேம்பாட்டிறகான உள்ளமைப்புச் செயல்முறை	1. சுகாதாரச் சூழலில் மீன் கடைகளை அமைப்பதையும், அங்காடியில் விற்கப்படும் மீன்கள் தரத்தை ஆய்வு செய்ய ஏற்பாடு செய்வதையும் ஊக்குவித்தல்
		2. மீனைப் பதப்படுத்தும் பிரிவுகளையும் மீனவர் மற்றும் மீன் பதனம் செய்யும் பிரிவுகளுக்கிடையே சீரான நல்லுறவை ஏற்படுத்தவும் ஊக்குவித்தல்.
4.	மீனவர் நல நடவடிக்கைகள்	1. தொகுதி காப்புறுதித் திட்டங்களில் மீனவர் சேர்ந்து கொள்வதை ஊக்குவித்தல்.

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
	2. புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு இழப்பு/சேதம் குறித்து மதிபபீடு செய்வதிலும் தேவைப்படும் இடஉதவி அளிப்பதிலும் உதவுதல்.
	3. மீனவர் வீட்டு வசதித் திட்டத்தை உயர்வடையச் செய்தல் மற்றும் தகுதியான மீனவர்களைக் கண்டறிதல்.
	4. சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தை மேம்படுத்துதல்
	5. மிக வேக டீசல் எண்ணெய் மற்றும் இதர முதலீடுகளுக்கு ஆயத்தீர்வை ஈடு செய்து வழங்கும் பணிகளை எளிதாக்க வசதி செய்தல்

III. ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்துதல்	1. மீன்வளர்ப்பு குட்டை/குளங்கள் மேம் படுத்தும் திட்டங்களை செயற்படுத்துதல்.
	2. மீனவ நலம் நாடும் வளத்திட்டங்களைக் கண்டறிந்து ஒப்பளித்தல்.
	3. ஊராட்சி ஒன்றியப் பகுதியிலிருக்கும் மீனவருக்குப் பயிற்சியளிக்கும் அமைப்பை ஏற்படுத்த மீன்துறைக்கு உதவுதல்
	4. மீனவர் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதற்கு வசதி செய்தல்
	5. கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றவர்களுக்கும் படகுகள், வலைகள், கருவிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து மற்றும் பிற உதவிகளைச் செய்து வழங்குதல்
	6. ஊராட்சி ஒன்றிய குளங்களிலும் நீர் தேக்க ஆதாரங்களிலும் ஊராட்சி ஒன்றியமானது மீன்பிடி குத்தகைக்கு கட்டணங்களை விதித்தல்.
2. கடல் மீன்வளத்தை மேம்படுத்துதல்	1. தொடர்புடைய சிற்றாட்சியுடன் கலந்து கடல் வாழ் உயிரின வளர்ப்பு / உவர்நீர் மீன்வளர்ப்பு ஆகியவற்றிற்குரிய பகுதிகளைத் தேர்ந்தெடுத்தல்.
	2. பல்வேறு திட்டங்களின் கீழ் உதவி பெறுபவர்களை தேர்ந் தெடுத்தல்
	3. கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வசதி செய்தல்
	4. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் படகுகளையும் தளவாடங்களையும் ஒப்பளித்து வழங்க உதவுதல்.

நடவடிக்கை		அதிகாரப் ஒப்படைப்பு
		5. மீன் பிடிதளம், காயவைக்கும் இடம், சூறாவளி, புகலிடங்கள் ஆகியவற்றைப் பராமரித்தலும் கட்டுப்படுத்துதலும்.
3.	விற்பனை மேம்பாட்டிற்கான உள்ளமைப்புச் செயல் முறை	1. மீன் குளிர்பதனக் கிடங்கு, மீன் பதப்படுத்துதல், சிப்பங் கட்டுதல் பாதுகாத்தல் ஆகியவற்றில் மீனவர்களுக்குப் பயிற்சியளிக்க வசதிச் செய்தல்.
4.	நல நடவடிக்கைகள்	1. நலவாழ்வு திட்டங்கள், தொகுதி காப்புறுதி திட்டங்கள் மீனவர்களுக்கு மேம்பாட்டிற்கு உதவுதல்.
		2. இயற்கை சேதங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்.
5.	உள்நாட்டு கடல் மற்றும் உவர்நீர் மீன் வளர்ப்பு திட்டங்களை ஆய்வு செய்தல்	1. அரசு துறையின் அதிகார எல்லைக்குள் செயற்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் ஆய்வு செய்தல் மீன் துறையின் உதவி இயக்குநர், மீன் வளர்ப்பேர் மேம்பாட்டு முகமை, உவர் நீர் மீன் வளர்ப்போர் முகமை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் அலுவலரின் அதிகார எல்லைக்குள் உள்ள ஊராட்சி ஒன்றியக் குழுவின் சீராய்வு கூட்டத்தில் கலந்து கொள்ளல்.

III. மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை		அதிகாரப் ஒப்படைப்பு
1.	மாவட்டத்திற்காக மீன் வள மேம்பாட்டிற்குத் திட்டமிடல்	1. மாவட்டத்தில் மீன்பிடிப்பவர்கள் நலன் உட்பட ஒட்டுமொத்த மீன் வளமேம்பாட்டிற் கான திட்டங்களைத் தயாரித்தல்
2.	மீனவளர்ப்போர் முகமை மற்றும் உவர்நீரின் மீன் வளர்ப்போர் வளர்ப்பு முகமை	1. தொடர்புடைய மாவட்டத்திற்கான மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மாவட்ட ஊராட்சியின் கீழ் வரும். ஏற்கனவே உள்ளவை மாவட்ட ஊராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் வரும். மாவட்ட ஊராட்சியின் தலைவர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் தலைவராகவும் இருப்பார்.
3.	மீன்வளத் திட்டங்களை சீராய்வு செய்தல்	1. உணவு மற்றும் வேளாண்மை நிலைக்குழுவானது மீன்வளம் மீனவர் தொடர்பிலான அனைத்துத் திட்டங்களை சீராய்வு செய்து காலமுறைப்படி அரசுக்கு அறிவுரை வழங்கும்.

நிருவாக மற்றும் நிதிச்சிக்கல்கள்

10. தற்போது மீன்வள நடவடிக்கைகள் அனைத்தும் மாவட்ட நிலையில் மண்டல உதவி இயக்குநரால் கவனிக்கப்படுகின்றன. மீன்வளாப்பின் குறிப்பிட்ட சில திட்டங்கள் மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையால் கவனிக்கப்படுகின்றன. சிற்றூராட்சிக்ககாகப் பரிந்துரைக் கப்பட்ட மீனவள நடவடிக்கைகளுக்குத் தொழில் நுட்பப் பணியாளர் எவரும் தேவைப்படவில்லை. இந்த இரண்டு அடுக்கு ஊராட்சி அமைப்பில் மீன்துறை உதவி ஆய்வாளர் ஒருவர், மீன்வள நடவடிக்கைகளை முறையாகச் செயல்படுத்துவதற்கு உதவுவதற்காக அந்தந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு நியமிக்கப் பெறுவர். எனினும் ஊராட்சி ஒன்றியக் குழுவால்

மீன் வளத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக மீன்துறை உதவி இயக்குநர் அதற்குரிய முன்னேற்ற அறிக்கைகளை மற்றும் பிரச்சனைகளை அளிப்பதற்கு பொறுப்பாவார்.

11. நிருவாகச் சீர்திருத்த ஆணையின் (1973) பரிந்துரைகளின் படி முன்னுரிமை அடிப்படையில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகை அளிக்கும் தற்போதைய நடவடிக்கைக்குப் பதிலாக மீன்பிடிக் குத்தகையை பொது ஏலத்தில் விடுவதற்குச் சிற்றூராட்சிகளுக்கு அனுமதிக்கலாம். இவ்விவரம் தாமோதரன் குழுவாலும் (1990) மாநில நிதிக் குழுவாலும் ஆய்வு செய்யப்பட்டன.

12. ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கான நிதியம் குறித்த தாமோதரன் குழுவின் அறிக்கை (1990) மீன்பிடி குத்தகையின் மீது கீழ்கண்ட 3 பரிந்துரைகளை அளித்துள்ளது. அவை வருமாறு :–

(அ) ஒப்பளிப்பானது ஊராட்சியால் மட்டும் செய்யப்பட வேண்டுமென ஏற்கனவே அரசு ஆணையிட்டுள்ளது. முறையாகச் செயற்படுத்தப் படுவதற்கு, ஊராட்சி ஒனறியக்குழு, ஊராட்சி மற்றும் அரசு ஆகியவற்றின் காப்பாளர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப் பெற வேண்டும்.

(ஆ) குழுவின் தீர்மானம் தகுந்ததாக இல்லை என்று அறியப்படும் தேர்வுகளில் எந்த ஒரு குத்தகையாளர் எவ்வகை முன்னுரிமையும் அளிப்பதற்கு மாவட்டாட்சியருக்கு அதிகாரம் உண்டு.

(இ) பெரிய ஏரிகளுக்காக குத்தகை தேர்வில் தொடர்புள்ள துறை அலுவலர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் சார்பாளர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றால் ஏலம் நடத்தப் பெற வேண்டும். பெரிய ஏரிகளிலிருந்து மீன் வள வருவாய் தேர்வில், மொத்த வருவாயில் 50 விழுக்காடு தொடர்புள்ள ஊராட்சிகளுக்கிடையே பங்கீடு செய்வதற்கு ஒதுக்கப் பெறலாம். மீதமுள்ள 50 விழுக்காட்டைத் துறையால் ஒதுக்கம் செய்யப் பெறலாம். ஏரியானது ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியத்திற்குள் அமைந்திருக்குமாயின் பங்குத் தொகையைத் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களுக்கிடையே தனிநபர் அடிப்படையில் பங்கிட்டு அளிக்கப் பெறலாம்.

13. மாநில நிதிக் குழு (1996) மீன்பிடிக் குத்தகையின் நோக்கங்களை தாமோதரன் குழுவின் கருத்துக்களை மேம்படுத்தவும் விரிவான அளவில் ஆய்ந்தது. அவை வருமாறு :–

ஊராட்சி ஒன்றியத்தின் உரிமையிலுள்ள ஏரிகளில் மீன் ஏலம் விடும் உரிமை வருவாய்த் துறையால் செயற்படுத்தப்படுகின்றன. அவ்வாறே பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான ஏரிகளும் அமைப்புக் கால்வாய்களும் மீன்துறையால் அல்லது மீன்வள மேம்பாட்டுக் கழகத்தால் ஏலத்தில் விடப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்தின் உரிமையிலுள்ள ஏரிகள் தொடர்பிலான ஏலத் தொகையானது தொடர்புடைய சிற்றூராட்சிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. அப்பகுதியிலுள்ள மீன் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு பங்குத் தொகையை அளிப்பதற்கு அரசு ஆதரவாக உள்ளது. உள்ளபடியே உள்ளாட்சி அமைப்புகள், தங்களின் சொந்த முறைகளைக் கொண்டு வருவாயைக் கைவரப்பெறுவதில் எப்பங்கிணையும் வகிக்கவில்லை. தாமோதரன் குழு (1990) அறிக்கையில் போலிச் சங்கங்கள், லஞ்சக் கூட்டு நடவடிக்கையில் அமைக்கப்பட்டு, குத்தகைதாரரால் அதிக அளவில் ஆதாயங்கள் பெற்ற போதிலும் குறைந்த குத்தகைக்கு எடுக்கப்பட்டு உள்ளூர் சமுதாயத்தினருக்கு அவர்களின் பொது நோக்கங்களுக்கு அதிலிருந்து சிறு பகுதியை வழங்கப்பட்டதுடன் மீதமுள்ளது போலிச் சங்கங்களுடன் தொடர்புடையவர்களால் பங்கீடு கொள்ளப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறு திரட்டப் பெற்ற சொற்பத் தொகையும் தொடர்புடைய சிற்றூராட்சிகளுக்கு முறையாக அனுமதிக்கப்படவில்லை. உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏலம் விடுவதற்குரிய

அதிகாரம் தேவைப்படுகிறது. இதனால் உள்ளாட்சி அமைப்பின் வள ஆதாரங்களை பெருக்குவதற்கான சாத்தியக் கூறு உள்ளது. சங்கங்களும் கூட ஏனைய ஏலதாரர்களுடன் போட்டியிட முடியும் என்றாலும் அதனைச் சங்கம் மட்டும் குத்தகையில் பெறுவதற்கான தனியுரிமை வரையறை இருக்கக்கூடாது என்று மாநில நிதிக் குழு கருதுகிறது. அத்தகைய உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களை ஏலம் விடுவதற்குரிய அதிகாரம் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பிடம் மட்டுமே இருக்க வேண்டும் என்றும் தேவைப்பட்டால், ஊராட்சிகளின் காப்பாளர்கள் மற்றும் அலுவலர்களடங்கிய குழுவொன்றை முறையான செயலாக்கத்திற்காக அமைக்கப் பெறலாம் என்றும் முறையாகப் செயற்படாவிடத்து அதில் தலையிடுவற்கு மாவட்டாட்சியர்களுக்கு அதிகாரங்களை அளிக்கலாம் என்றும் மாநில நிதிக் குழு வலியுறுத்த விரும்புகிறது.

14. பொதுப்பணித்துறை ஏரிகள் தொடர்பில் கூட ஆதாயப் பங்கானது வட்டார ஊராட்சிகளுக்குக் கிடைக்கும் படி இருக்க வேண்டும். மேலும் குத்தகையை மேற்பார்வையிட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுமதியளிக்க வேண்டும். இதனால் குறைந்தது எதிர்காலத்தில் விடப்படும் குத்தகைத் தொகைக்கும் அதிகமான சுரண்டலைக் கண்காணித்து கவனத்துக்குக் கெண்டு வர இயலும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்குள் அமைந்துள்ள பெரிய ஏரிகள் தொடர்பில் உள்ளாட்சி அமைப்புகளின் சார்பாளர்களைக் கொண்டுள்ள குழு ஒன்றின் வாயிலாக ஏலத்தை மேற்கொண்டு ஆய்வாளாரால்/ மாவட்டாட்சி–யாளரால் அனுமதியிடப் பெறும் வீதங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே ஆதாயத்தைப் பங்கிட்டுக் கொள்ளலாம்.

பரிந்துரைகள் :

மாநில நிதிக் குழு பின்வருவனவற்றைப் பரிந்துரைக்கின்றது. 1) உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய சொத்துக்களை ஏலம் விடும் அதிகாரம் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பிடம் மட்டுமே இருக்க வேண்டும். தேவைப்பட்டால் ஊராட்சிகளின் சார்பாளர்கள் மற்றும் அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்றை முறையான செயலாக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக அமைக்கலாம். முறையாகச் செயற்படுத்தாத இடத்தில் மாவட்டாட்சியாளர்கள் தலையிடுவதற்கு அதிகாரங்களை அளிக்கலாம். மீன் வளர்ப்போர் மேம்பாட்டு கூட்டுறவு முகமைகளும் மற்றவர்களுடன் கூட ஏலம் கேட்பவராக இருக்கலாம். ஆனால் அவற்றிற்குத் தனியுரிமை வழங்கக் கூடாது. 2) பொதுப்பணித்துறை ஏரிகள் தொடர்பில் கூட ஆதாயப் பங்கொன்று உள்ளாட்சிகளுக்குக் கிடைக்க கூடியதாகப்பட வேண்டும். அத்துடன் உள்ளாட்சி அமைப்புக்கள் குத்தகையை மேற்பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். இதனால் அளவிற்கதிமான சுரண்டல் கண்காணிக்கப்பட்டு எதிர் காலத்தில் அத்தகையவர்களுக்கு குத்தகைகளை அளிப்பதைத் தவிர்ப்பதற்காகக் கவனித்துக் கொண்டு வர இயலும். 3) ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ள பெரிய ஏரிகள் தொடர்பில் உள்ளாட்சி அமைப்புகளின் காப்பாளர்களைக் கொண்ட குழு ஒன்றின் வாயிலாக ஏலத்தை மேற்கொள்ளலாம். இதன் ஆதாயத்தை ஆய்வாளரால் / மாவட்டாட்சியரால் அறுதியிடப் பெறும் வீதங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே பங்கிடப்படலாம்.

15. மாநில நிதிக் குழு பரிந்துரையைக் கருத்தில் கொண்டு மாநில திட்டக்குழுப் பிரிவானது அவற்றை மேம்படுத்தி, அம்மூன்று பரிந்துரைகளையும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஊராட்சிகளின் ஆய்வாளராக இருக்கும் மாவட்டாட்சியருக்கான முறைப்படுத்திய அதிகாரமானது தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தில் போற்றிப் பேணப்பட வேண்டும் என்றும், ஊராட்சி மீன்பிடி வாடகைகளைப் பங்கிடுவதைக் கண்காணித்து நடுவராக இருக்கும் பங்கு, மாவட்ட ஊராட்சிகளுக்கு அளிக்கப் பெற வேண்டும் என்றும் இப்பிரிவு பரிந்துரைக்கப்டுகிறது.

சட்டசிக்கல்கள்

16. சிற்றூராட்சி/ஊராட்சி ஒன்றியத்தின் உரிமையில் உள்ள மீன்பிடி உரிமை உள்ளிட்ட சொத்து அல்லது வருவாய் எதையும் சிற்றூராட்சியால்/ஊராட்சி ஒன்றியத்தால் நிருவகிக்கப்படுவதற்கு 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளர்போர் மேம்பாட்டு முகமைத் திட்டங்கள், அண்மைக் காலத்தில் மீன்வள மேம்பாட்டில் தடைகளின்றி முன்னேறும் நிலைமை அடைந்துள்ளது. அறிவியலடிப்பபடையில் மீன் வளர்ப்பை மேற்கொள்ள மீனவரிடையே விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. பொதுவான நீர்நிலைகளில், ஊராட்சி ஏரிகளில் மீன்பிடி உரிமைக் குத்தகையை எடுத்துக் கொள்வதற்குக் கடுமையான போட்டி உள்ளது. மேலும் குத்தகைத் தொகையும், ஊராட்சி / ஊராட்சி ஒன்றியத்தின் வருவாயைப் பெருக்குவதற்கேற்ப பன்மடங்காக அதிகரித்துள்ளது. எனவே, மீன் வளர்ப்பு, மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் மீன் விற்பனைகளைப் பல்வேறு திட்டங்களின் கீழ் மானியங்களை ஒப்பளிப்பதற்கான பயன்களை அறிவதற்கு, ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு அதிகாரம் வழங்குவது இன்றியமையாததாகும்.

17. தற்போது மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமை மாவட்ட ஆட்சியர் தலைமையில் இயங்கி வருகிறது. மீன்வளர்ப்பு மேம்பாடு முகமையின் நிர்வாகச் சுமையிலிருந்து மாவட்ட ஆட்சியரை விடுவிக்கும் பொருட்டு மாவட்ட ஊராட்சி தலைவரை மீன்வளர்ப்பு மேம்பாட்டு முகமையின் தலைவராக்க வேண்டுமென பரிந்துரைக்கப்படுகிறது. முகமையின் நிர்வாகக் குழுவை சீரமைக்க உறுப்பினர் எண்ணிக்கையை விரிவுபடுத்துவது அவசியம். இவ்ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் மாவட்டத்திலுள்ள மீன் வளர்ப்போர் பிரதிநிதி கள் (குறைந்தது மொத்தத்தில் மூன்றில் இரண்டு பங்கு) உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட வேண்டும். மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையால் தொழில நுட்ப ரீதியில் மீன் வளர்க்கப் பயன்படும் குளங்கள் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரிமையானவை. எனவே நிர்வாக ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைக் குழுவில் சேர்ப்பது அவசியம் எனக் கருதப்படுகிறது. உள்நாட்டு மீனவர், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பிரதிநிகிள் உறுப்பினர்களாக சேர்த்து உறுப்பினர் எண்ணிக்கையை விரிவுபடுத்துவதால் அவர்களுக்குள்ளேயே ஒரு தலைவரை தேர்ந்தெடுத்து கொள்ள வழி ஏற்படும் என்றும் மீன்வளர்ப்பு மேம்பாட்டு முகமை வலிவோடு இயங்குவதற்கு அதற்குரிய சொந்த தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை அளிக்கப்பட வேண்டும். அத்துடன் கிராமங்களில் விற்கப்படும் மீன்களின் தரத்தை ஆய்வு செய்வதற்குரிய அதிகாரங்களை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க பரிந்துரைக்கப்படுகிறது. அதற்குரிய தேவையான அதிகாரங்களை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கலாம்.

சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்

(இனம் -- 6)

01. தமிழ்நாடு 22,699 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக் காடுகளைக் கொண்டுள்ளது. இது மாநிலத்தின் பூகோள அடிப்படையிலான மொத்தப் பரப்பளவில் 17.45 விழுக்காடாகும். தமிழக அரசு, தேசீய வனக் கொள்கையின் இலக்கான மொத்தப் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கைக் காடுகளாகக் கொண்டிருக்க தீவிர முயற்சி செய்து வருகின்றது. இந்தக் குறிக்கோளைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு மாநில, மத்திய மற்றும் அயல் முகமை நிதி உதவியுடன் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. அண்மைக் காலத்தில் சமூகக் காடுகள், வேளாண்மைக் காடுகள், பண்ணைக்காடுகள் மற்றும் சமுதாயக் காடுகள் ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. இத்திட்டங்களை வனத்துறை, வேளாண்மைத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறைகள் செயல்படுத்தி வருகின்றன.

சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள்

02. தமிழ்நாடு வனத்துறை சமூகக்காடுகள் மேம்பாட்டில் முன்னோடியாகத் திகழ்கிறது. சுமார் 1.3 இலட்சம் ஹெக்டேர் சமுதாய நிலங்களில் மரங்களை வளர்த்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டிலிருந்து சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் சமூகக்காடுகளாக இதன் நிலையை உயர்த்தப்பட்டது. இத்திட்டம் 1996–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை செயல்பட்டு வந்தது. உள்ளூர் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கிராம சமுதாயங்களை உள்ளடக்கி, மரங்களை உருவாக்கி பாதுகாத்தலும், சமுதாய நிலங்கள், தனியார் நிலங்கள் மற்றும் வீட்டு சுற்றுபுறங்களில் மரத்தோட்டங்களை வளர்த்தலும் இதன் முக்கிய கொள்கையாகும், மற்ற துறைகளாகிய வேளாண்மை, ஊரக வளர்ச்சி, வருவாய், நெடுஞ்சாலை மற்றும் பாசனம் ஆகியவை ஈடுபாட்டுடன் பங்கேற்பதற்கான ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையானது இச்செயல்முறை ஏற்பாட்டின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த தேவைப்படுகிறது. ஊரக வளர்ச்சித்துறை மரம் பட்டாதிட்டத்தைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. வேளாண்துறை வறண்ட நிலங்களில் வேளாண்காடுகளை அமைத்து மேம்படுத்துவதில் பொறுப்பு வகிக்கிறது. வனத்துறையிடம் சமுதாயக்காடுகளில் மரங்களை வளர்த்தல், மரக்கன்றுகளை உற்பத்தி செய்தல், ஆராய்ச்சி. பயிற்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதே போன்ற திட்டம், தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 1991–92 ஆம் ஆண்டு முதல் உலக வங்கி நிதியுதவிடன் இயங்கி வருகிறது.

03. சமூக மற்றும் பண்ணைக் காடுகள் பின்வரும் நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. (1) கூழ்மரங்கள் சார்ந்த தொழில்களான காகிதம், ரேயான் போன்றவற்றிக்கு மூலப்பொருட்களை அளிப்பதற்கு விரைவாக வளரும் மரக்கன்றுகளை உடைய தோட்டங்களை வளர்த்தல் (2) வனப்பகுதிக்கு அருகாமையில் உள்ள மாநகரங்கள் நகரங்கள் மற்றும் நீர்பிடிப்பு உள்ள தரிசு நிலங்களில் உள்ளூர் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு எரிபொருள் தரக்கூடிய மரத்தோட்டங்களை அமைத்தல். (3) தமிழ்நாட்டின் கடலோரப் பகுதி மாவட்டங்களில் கடற்கரை நெடுக உள்ள காடுகளில் மரத்தடுப்பு வேலித் தோட்டங்களை அமைத்தல். (4) தரம் குன்றிய வளமில்லாத வனப்பகுதிகளில் வனச்சூழலை ஏற்படுத்தவும், குறுகிய மரங்களடர்ந்த காடுகளில் தீவனம் மற்றும் பிற பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும் காடு வளர்ப்பு பணியை மேற்கொள்ளல்.

04. மேலும், சமூக மற்றும் பண்ணைக் காடுகளின் நடவடிக்கைகளும் பலவிதத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது, (1) இடைபடு காடு திட்டம் (2) தேசிய தரிசுநில மேம்பாட்டு திட்டம் (3) மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் (4) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (5) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் (6) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம். எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், சமூக மற்றும் பண்ணைக்காடுகள் பகுதித் திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் மாநிலத்தில் வனத்துறையால் செயற்படுத்தப்பட்டன. அவைகளாவன: காகிதக்கூழ் மரத்தோட்டம், விறகு மரமும் மென் மரமும், தடுப்பு சுவரை அமைக்க மரங்களை வளர்த்தல். மூங்கில் தோட்டங்களை அமைத்தல் முதலியன. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சமூகக் காடுகளின் கீழ் 77,838 ஹெக்டேர் பரப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 245 கி.மீ நிழல் தரும் மரக்காடுகளும் மேம்படுத்தப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுத் திட்டப்பணிகள், வெளிநாட்டு முகமையான சுவீடன் பன்னாட்டு

மேம்பாட்டு நிறுவனம், உலக வங்கி, வெளிநாட்டு பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனம் ஆகியவற்றிலிருந்து சமூக காடுகள் துறைக்கு நிதியுதவி வருகின்றது. மேற்கூறிய திட்டங்களை எட்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வனத்துறையால் செயல்படுத்தியதற்கான மொத்தச் செலவு ரூ.16,832 இலட்சம் ஆகும்.

05. தமிழ்நாட்டிலுள்ள காடுகளைப் பாதுகாக்கவும், நிருவகிக்கவும் கீழ்காணும் சட்டங்களும் விதிகளும் நடைமுறையிலுள்ளன. (1) 1882–ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டம், (2) 1949–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், (3) 1955–ஆம் ஆண்டு தமிழ்நாடு மலைப்பகுதி (மரங்கள் பாதுகாப்பு) சட்டம், (4) 1972–ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், (5) 1986–ஆம் ஆண்டு சுற்றுபுறச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், (6) 1980–ஆம் ஆண்டு வனப்பாதுகாப்புச் சட்டம். மேற்கண்ட முதல் நான்கு சட்டங்கள் மாநில அரசால் இயற்றப்பட்டவை. இறுதியாக உள்ள இரண்டு சட்டங்கள் இந்திய அரசால் இயற்றபட்டவையாகும். 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமானது, பாதுகாக்கப்படாத காடுகள் தொடர்பில் சிற்றூராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் சில அதிகாரங்களை அளித்துள்ளது. (பிரிவு 120,121,131 மற்றும் 245).

06. பாதுகாக்கப்படாத காட்டு நிலங்களை மாற்றுதல் மற்றும் திரும்ப கைக்கொள்ளுதல் தொடர்பில் ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றித்திற்கும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் (பிரிவு 120,121) அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசு ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பொதுச்சாலைகளில் யாரும் மரம் நடவோ அல்லது சொந்தமாக்கிக் கொள்ளவோ பிரிவு 131 (உ) மற்றும் (ஊ) இன் கீழ் கூடாது. பொதுச்சாலை அல்லது புறம்போக்கு நிலத்தில் உள்ள மரங்களை வெட்டவோ, அழிக்கவோ மரப்பட்டைகளை உரிக்கவோ, இலைகள், பழங்களை எடுக்கவோ ஊராட்சி ஒழுங்குபடுத்தியுள்ளது.

அதிகாரங்கள் ஒப்படைப்பு

07. இப்பொருளானது, எரிபொருள் மற்றும் தீவனம் (இனம்–12) மற்றும் சிறிய காடுகள் உற்பத்திப் பொருட்கள் (இனம்–7) ஆகியவற்றில் உள்ள பொருட்களுடன் நேரடியாக இணைந்துள்ளது. இப்பொருளில் உள்ள பல பரிந்துரைகள், இங்கும் பொருந்தும், எனவே உள்ளாட்சித்துறைகளுக்கு ஒப்படைக்கத் தேவையான கூடுதல் அதிகாரகங்களைப் பின்வரும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளிடமுள்ள நிலங்களில் தோட்டங்களை அமைத்து அதைச் ஊராட்சிகள் சொந்தமாக்கிக் கொள்ளலாம். ஊராட்சியானது அரசு திட்டங்களில் கீழ் பயனாளிகளை அறிந்து தெரிவு செய்ய வேண்டும். ஊராட்சி ஒன்றியச் செயலாக்கத்திற்காக நிதிகளை ஊராட்சிக்கு வழிமுறைப்படுத்தி ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இது குறித்து மாவட்ட ஊராட்சிகள், திட்டமிடலையும் ஆலோசனை கூறும் பங்கையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

I. ஊராட்சி

நடவடிக்கை (1)	அதிகார ஒப்படைப்பு (2)
1. சமூகக்காடுகளையும் பண்ணைக்காடுகளையும் மேம்படுத்துதல்	1. உயிரின வாழ்க்கையும், சுற்றுப்புறச்சூழலையும், மேம்படுத்துவதற்காக சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக் காடுகளைப் பற்றி மேம்படுத்துதலும் பரவச்செய்தலும்.
	2. சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக்காடுகளுக்காகச் சமுதாய தரங்குறைந்த தரிசு நிலங்களை கண்டறிந்து சமுதாயப் பண்ணைகளையும் சமூக வனத்திட்டங்களையும் செயற்படுத்துதல்.

(1)	(2)
	3. பங்கிடல் அடிப்படையில் சமூகக் காடுகளை ஏற்படுத்த ஆர்வமுள்ள,தனியாருக்கு/குழுவினருக்கு ஊராட்சி நிலங்களை குத்தகைக்கு விடுதல்.
	4. உள்ளூரின் பயனுக்கு எரிபொருள், தீவனம் மற்றும் வீடு கட்ட பயன்படும் மரக்கட்டை உற்பத்தி செய்யும் செடிகளை மேம்படுத்துதல்.
	5. பண்ணைக் காடுகளின் கீழ் நாற்றங்கால்களையும் மலைத்தோட்ட நடவடிக்கைகளையும் எடுப்பதற்குத் தனியார் விவசாயிகளை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு உதவி செய்தல். நாற்றுகளையும்,மரக்கன்றுகளையும் வழங்குதல்.
	6. எரிபொருள், தீவனம் மற்றும் வீடு கட்ட பயன்படும் மரக்கட்டை சேகரித்தல், வழங்குதல் மற்றும் விற்பனை செய்தல்.

II. ஊராட்சிஒன்றியம்

நடவடிக்கை (1)	அதிகார ஒப்படைப்பு (2)
சமூகக்காடுகளையும் பண்ணைக்காடுகளையும் மேம்படுத்துதல்	1. உயிரின வாழ்க்கையும், சுற்றுப்புறச்சூழலையும், மேம்படுத்து படுத்துவதற்காக சமூக பண்ணைக்காடுகளைப் பற்றி மேம்படுத்துதலும், பரவச் செய்தலும்.
	2. தரம் குன்றிய தரிசு நிலங்களைக் கண்டறிதல், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திடமுள்ள பொது உரிமை நிலங்களில் நேரிடையாகவோ அல்லது ஊராட்சிகள் மூலமாகவோ செயற்படுத்துவதற்காகச் சமூகக்காடுகள் திட்டங்களை உருவாக்கல்.
	3. ஊராட்சி ஒன்றியத்தின் சமூகக்காடுகள் திட்டங்களையும், அரசாலும், மாவட்ட ஊராட்சியாலும் வழங்கப்பட்ட பணிகளை செய்தல். மேலும் சாலைகள், ரயில் பாதைகள், மற்றும் பொது இடங்களில் மரங்களை நடுதல்.
	4. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள் திட்டங்களுக்கு தேவையான நாற்றுகளையும், மரக்கன்றுகளையும் உற்பத்தி செய்து வழங்கல்.
	5. எரிபொருள், தீவனம் மற்றும் வீடுகட்ட பயன்படுத்தும் மரம் ஆகியவற்றைப் பற்றிக் கிராம மக்களிடையே பரப்புதல்.
	6. ஊராட்சிகளுக்கும், பொதுமக்களுக்கும் நாற்றுகளையும், மரக்கன்றுகளையும் வழங்குவதற்காக நாற்றங்கால்களை அமைத்தல்.
	7. எரிபொருள், தீவனம் மற்றும் வீடுகட்ட பயன்படும் மரங்களை சேகரிக்கவும் விற்பனைக்கு ஏற்பாடு செய்தல்.
	8. வனம், வேளாண்மை, வருவாய் மற்றும் ஊரக வளர்ச்சித்துறைகளால் செயல்படுத்தி வரும் சமூக மற்றும் பண்ணைக் காடுகள் திட்டங்கள் அனைத்தையும் ஆய்வு செய்தல். வனக்காப்பாளர்கள், வட்டாசியர், வேளாண்மை உதவி இயக்குநர் ஆகியோர் இந்த ஆய்வில் கலந்து கொள்ள வேண்டும்.

III. மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை (1)	அதிகார ஒப்படைப்பு (2)	
சமூகக்காடுகளையும் பண்ணைக்காடுகளையும் மேம்படுத்துதல்	1.	சமூக மற்றும் பண்ணைக்காடுகள் மேம்பாட்டில் மாவட்டத்தின் செயல்திறத்தை மதிப்பிடல். ஊராட்சிகள் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள், மற்றும் துறைத் தலைமை அலுவலகங்கள் மூலமாக செயல்படுத்துவதற்குத் திட்டங்களையும், செயல்முறை ஏற்பாடுகளையும் தயாரித்தல்.
	2.	நிதிகளுக்கு ஏற்பளித்து ஒப்பளிப்பு செய்ததற்கேற்ப, ஊராட்சிகளால் தீர்மானிக்கப்பட்ட சமூகக்காடுகள் திட்டங்களையும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஊராட்சிக்கும் ஒதுக்கிய திட்டங்களையும் தொகுத்தல்.
	3.	அனைத்து சமூக மற்றும் பண்ணைக்காடுகள் திட்டங்கள் அனைத்தையும் வேளாண்மை நிலைக் குழுவின் மூலமாக காலமுறையாக (மூன்று மாதத்திற்கொரு முறை) ஆய்வு செய்தல்.
	4.	மாவட்டத்தின் சமூக மற்றும் பண்ணைக்காடுகள் மேம்பாட்டின் இடர்பாடுகளையும் வாய்ப்பு வளங்களையும் பற்றி அரசுக்கு அறிவுரை கூறல்.

நிருவாகச் சிக்கல்கள்

08. சமுதாயப் பொதுஉரிமை நிலங்களில் வளர்க்கப்பட்டு வரும் தோட்டங்களை ஊராட்சிகளாலும், ஊராட்சி ஒன்றியங்களாலும் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் போன்ற திட்டங்கள் மூலமாகப் பேணப் பெற வேண்டும். தங்களின் ஆட்சிக்குட்பட்ட நிலங்களில் மேலே குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளைச் செயற்படுத்துவதன் விளைவாக பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் கட்டுபாட்டிற்கு மாற்றப் பெற வேண்டிய பணியாளரின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. வனக்காவலர்கள், சரக அலுவலர்கள் மற்றும் கோட்ட வன அலுவலர்கள் அரசுப் பணியாளர்களாக இருப்பதால் அவர்களை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அயல்பணியில் அனுப்பலாம். சமூக காடுகளின் வேலையாட்களையும் காவலர்களையும் ஊராட்சிக்கு மாற்றப் பெறலாம். அவர்களின் கூலியைக் காலமுறைப்படி அரசிடமிருந்து மீளப் பெற வேண்டும்.

நிலை	செய்கடமை	பணியாளர்	குறிப்புரை
அ) ஊராட்சி	ஊராட்சியிடம் உள்ள நிலங்களிலும் பொது உரிமை நிலக் குன்றுகளிலும் நடை முறையிலுள்ள தோட்டங் காத்தலும் பேணலும்	கிராம சமூகக் காடுகளின் வேலையாட்கள்/ வனக் காவலர்கள்/(4022 பேர்)	31.3.1996 வரை நிதி ஒதுக்கீட்டை வெளிநாட்டு நிதி உதவித் திட்டத்தின் மூலம் பெற்றுவந்தது. கிராம உள்ளாட்சி அமைப்பு மாற்று நிதி ஆதாரங்களைக் கண்டு பிடிக்க வேண்டும்

ஆ) ஊராட்சி ஒன்றியம்	தோட்டங்களை வளர்த்தல், பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்	வனக்காப்பாளர்கள்: 338 வனக் காவலர்கள் : 67
இ) மாவட்ட ஊராட்சி	சமூக பண்ணைக் காடுகளின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல்	வனத்துறை துணைத் தலைவர்கள் நிலையான கோட்ட வன அலுவலர் : 13

நிதிச் சிக்கல்கள்

09. நீர்பிடிப்புக் பகுதியிலுள்ள மரங்களை அறுப்பதின் மூலம் கிடைக்கும் வருவாயை 50:50 என்ற விகித அளவில் ஊராட்சிகளுடன் வனத்துறை பங்கிட்டுக் கொண்டது. இது 60:40 என்ற விகித அடிப்படையில் மாறியுள்ளது. அம் மரங்களின் இயக்கமும் பராமரிப்பும் ஊராட்சிகளிடம் இருப்பது முதல், 100 விழுக்காட்டு வருவாய் தொடர்புடைய ஊராட்சி அமைப்புகளுக்கே செல்லும். மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்களின் கீழ் சமூக மற்றும் பண்ணைக் காடுகள் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அரசு குறிப்பிட்ட ஒதுக்கீட்டைச் செய்யலாம். பின்வரும் திட்டங்களின் செயலாக்கத்தை ஊராட்சி ஒன்றிங்களுக்கு மாற்றம் செய்யலாம்.

வ.எண்	திட்டம்	முதலீடு (1996-97) ரூபாய் இலட்சங்களில்
1.	விறகு மரக்காடுகள்	236.51
2.	கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான திட்டங்கள்	24.50
3.	சமுதாய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்	716.59
4.	ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்	50.00
	மொத்தம்	1027.60

சிறிய காடுகளின் உற்பத்திப் பொருட்கள்

(இனம் - 7)

மாநிலத்தின் வனப்பொருட்களிலிருந்து கிடைக்கும் வருவாய் ரூ.50 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அது ஆறு முக்கிய இனங்களிலிருந்து பெறப்படுகின்றது. அவையாவன: கூழ்மரங்கள் (30%) சந்தன மரங்கள் (50%) சமூகக் காடுகள் விறகு (7%) வெட்டு மரம் (3%) சிறுவனப் பொருட்கள் (3%) மற்றும் இதர இனங்கள் (7%). சிறுவனப் பொருட்களைச் சேகரிப்பது வணிக நோக்கத்தில் மட்டும் நடைபெறுகிறது அல்ல. வனப்பகுதியில் வாழும் கிராம மக்கள் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் சிறுவனப் பொருட்களைச் சேகரித்து விற்பனை செய்வதே அடிப்படைக் கொள்கையாகும்.

02. சிறுவனப் பொருட்கள் பல வகைகளைக் கொண்டதாகும். அவற்றில் புளி, கறிவேப்பிலை, பிரம்பு, சீயக்காய், சோப்புக்காய் முதலியன முக்கியமானது. சிறுவனப் பொருட்களைச் சேகரிப்பதற்காக குத்தகை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விடப்படுகின்றது. தமிழ்நாடு வனத்துறை விதித்தொகுப்பின் பிரிவு 130(4)இன் கீழ் நியாய விலைக்கு குறைவாக 10 விழுக்காடு சலுகை வீதத்தில் தொகை அறுதியிடப்படுகிறது.

இக்கூட்டுறவுச் சங்கங்கள் இச்சலுகையைத் தவறாகப் பயன்படுத்தினாலோ அலகுகளை ஏற்றுக் கொள்ள விருப்பப்படாவிட்டாலோ இச்சிறுவனப் பொருட்கள் பொது ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் அல்லது வனத்துறையே சேகரிப்பை மேற்கொள்ளும். சமீப காலங்களில், பண்ணை மேலாண்மை அடிப்படையில் புளிய மரக்கன்றுகளை தீவிர முனைப்புடன் நடுவதில் திட்டம் ஒன்றை தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் வனத்துறை மேற்கொள்கிறது. அதன் விளைவாக புளிய மரத்திலிருந்து கிடைக்கும் வருவாய் கணிசமான அளவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

03. மாநிலத்திலுள்ள வனப்பகுதியில் சுமார் 5.20 இலட்சம் பழங்குடியினர் வசிக்கின்றனர். பழங்குடியினரின் மக்கள் தொகை மாநிலத்தில் பரவலாக இருந்த போதிலும், ஒருங்கிணைந்த பழுங்குடியினர் மேம்பாட்டுத் பணிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்ய ஐந்து மாவட்டங்கள் மட்டுமே இந்திய அரசால் கண்டறியப்பட்டுள்ளன. கண்டறியபட்டுள்ளன. கண்டறியப்பட்டுள்ள ஐந்து மாவட்டங்களில் (அதாவது திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, வட ஆற்காடு, தருமபுரி மற்றும் சேலம்) வாழும் பழங்குடியினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த காடு வளர்ப்பு, தற்போது உள்ள சாலைகளைப் பராமரித்தல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் பழங்குடியினர் கிராமக் காடுகள் போன்ற திட்டங்களைச் செயற்படுத்துகின்றன. பத்தொன்பது கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கபட்டு சிறுவனப் பொருட்கள் பழங்குடியினர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. பழங்குடியின மக்கள் தங்களின் அத்தியாவசிய தேவைகளுக்காக மூங்கில், பிரம்பு மற்றும் சிறுதடிமரங்கள் போன்ற மூலப் பொருட்களை சலுகை விலையில் வாங்கிக் கொள்ளவும், அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களின் இல்லம் மற்றும் வேளாண்மை நோக்கத்திற்காகச் சிறு மரத்தடிகள், விறகுகள் மற்றும் சிறுவனப் பொருட்களை இலவசமாக எடுத்துச் செல்வதற்கும், அவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

04. 1996 ஆம் ஆண்டு ஊராட்சி (குறிப்பிடப்பட்ட பகுதிகளுக்கு விரிவாக்கப்பட்டது). சட்ட விதிகளின்படி சிறுவனப் பொருட்களைக் குறிப்பிட்ட பகுதியிலுள்ள ஊராட்சிகளுக்கும், கிராமச் சபைகளுக்கும் உரிமையாக்கத் தேவையான சட்டங்களை இயற்றுவதற்கு மாநிலச் சட்ட மன்றங்களுக்கு அதிகாரமளிக்க இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளன. இயற்றிய இச்சட்ட விதிகளை, குறிப்பிட்ட பகுதிகளில் (குறிப்பாக பழங்குடியினர் ஊராட்சி ஒன்றியங்களில்) பயன்களை நீட்டிபதற்கு, 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் சேர்க்க வேண்டிய தேவையுள்ளது. ஒரே சீராக இருக்கும் பொருட்டு பிற அனைத்து பகுதிகளில் உள்ள வனப் பொருட்களைச் சேகரிப்பதற்கு இதைப் போன்ற வசதிகளை நீட்டிக்கவும் செய்யலாம்.

சிறிய காடுகளின் உற்பத்திப் பொருட்கள் என்ற தலைப்பின் கீழ் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு கருதப்பட்டுள்ள ஒப்படைப்புக்குரிய அதிகாரங்களை கீழே அளிக்கப்பட்டுள்ளன.

I. ஊராட்சி

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
1.	சிறுவனப் பொருட்களின் உற்பத்திக்குப் புத்துயிரூட்டல்	1.	சிறுவனப் பொருட்கள் தரும் மரங்களை நடுவதற்கு விரும்பும் குடும்பங்களைக் கண்டறிவதிலும், சமூகத் தரிசு நிலங்களில் நடுவுதற்குத் தேவையான, சிறுவனப் பொருட்களுக்குரிய மரக்கன்றுகளை வழங்குவதிலும் உதவுதல்.
		2.	சிறுவனப் பொருட்கள் உற்பத்திக்குத் தேவையான (கோந்து, மூலிகைத் தாவரங்கள், வாசனைத் திரவியங்கள், தழைகள், எண்ணெய் வித்துக்கள், மரப்பட்டைகள் சாயப் பொருட்கள், புல்கள் விதைகள், பிரம்பு, மூங்கில் போன்ற சிறுவனப் பொருள்களை வழங்கும்) மரங்களை குறிப்பாக பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதியில் வளர்ப்பதற்கு ஊக்கப்படுத்துதல்.
		3.	வறட்சிப் பாதிப்புப் பகுதி திட்டம், சமூகக் காடுகள் திட்டம், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் சிறுவனப் பொருட்கள் தரும் மரக் கன்றுகளை நடுவதற்கு ஊக்குவித்தல்.
2.	கிராம கைவினைஞர்களாலும் இதர நபர்களாலும் சிறுவனப் பொருட்களைச் சேகரித்தல்.	1.	கிராமக் கைவினைஞர் சிறுவனப் பொருட்களைக் காப்புக் காடுகளிலிருந்து சேகரிப்பதற்கு வனத்துறையிலிருந்து உரிமம் பெறுவதை எளிமையாக்கல்.
3.	பயிற்சி	1.	சிறுவனப் பொருட்கள் தரும் மரக்கன்றுகளை நடுவதில் பயிற்சிக்குச் செல்ல வேண்டிய பயிற்சியாளர்களைத் தெரிந்தெடுப்பதில் உதவுதல்.

II. ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
1.	சிறுவனப் பொருட்களைச் சேகரித்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல்	1.	சிறுவனப் பொருட்களின் சேகரிப்பை மேம்படுத்தவும் அவைகளை விற்பனை செய்வதற்கு முன் தொடக்க நிலையிலேயேப் பதப்படுத்தி தரம் உயர்த்தஉதவுதல்.
		2.	சிறுவனப் பொருட்களைச் சேகரிப்பவர்களுக்குப் போதுமான சேகரிப்புக் கட்டணங்களைக் குறித்த நேரத்தில் வழங்குவதை உறுதி செய்ய உதவுதல்.
		3.	ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சிறுவனப் பொருள்களை மேம்படுத்துதலில், சேகரித்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்வதில் வனத்துறை மற்றும் பிற துறைகளால் செயற்படுத்தும் திட்டங்களை நிறைவேற்றுதல்.
2.	சிறுவனப் பொருட்களின் மீதான திட்டத்தைச் செயல் படுத்துதல்	1.	திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளை ஊராட்சி ஒன்றிங்களுக்கு ஒப்படைக்க வேண்டும்.

III. மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. சிறுவனப் பொருட்களைச் சேகரித்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தலை மேம்படுத்துவதற்கு திட்டமிடுதல்.	1. சிறுவனப் பொருட்களை உற்பத்தி செய்தல், சேகரித்தல், பதப்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அமைப் பாளர்கள், பயன்படுத்துவோர் மற்றும் அலுவலர்களின் ஆண்டு மாநாட்டை நடத்துதல். 2. சிறுவனப் பொருட்களின் உற்பத்தியைக் கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கு தேவையான கடன் தொடர்புகளுக்கு ஏற்பாடு செய்தல். 3. மேற்கூறிய அதிகாரங்கள் (1) மற்றும் (2) தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மீது அரசுக்கு ஆலோசனை கூறுதல்.

நிருவாகச் சிக்கல்கள்

05. சிறுவனப் பொருட்களை மிகப் பெரிய பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கும் , இதர கூட்டுறவுச் சங்கங்களுக்கும் குத்தகைக்கு விட 14.6.1982 ஆம் நாளிட்ட வனம் மற்றும் மீன்வளத்துறையின் 800 என்ற நிலை எண்ணுள்ள அரசாணையில் சில வழிமுறைகளை வெளியிட்டுள்ளது. சிறுவனப் பொருட்களின் வகையை பருவ காலத்திற்கு முன்பே வழங்குவது பற்றி முடிவு செய்வதற்காக அல்லது அவைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையில்லையென்றால், அவற்றை பொது ஏலத்தில் விற்பனை செய்வதற்கும், கூட்டுறவுத் துறை அதிகாரிகள், மிகப் பெரிய பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மற்றும் இதரத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுடன் கூட்டங்களை நடத்துவதற்கு அனைத்து வனப்பாதுகாவலர்களுக்கும் அரசு அதிகாரம் அளித்துள்ளது.

06. சிறுவனப் பொருட்களின் வணிகத்தை அனைத்து நோக்கங்களிலும் ஆழ்ந்த ஆராய்வு ஒன்றுக்கு சிறுவனப் பொருட்கள் ஆய்வுக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. குழுவின் கருத்துக்களின் அடிப்படையில், சிறுவனப் பொருள் பிரிவுகளின் குத்தகையை, பெரிய அளவுடைய பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும், மலைச் சாதியினரால் , ஆதிதிராவிடர்களால் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களால் நடத்தப்பெறும் பிற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தமிழ்நாடு வனத்துறை விதித் தொகுப்பின் பிரிவு 130 (அ) வின் கீழ் வேலை வாய்ப்பளித்தல் மற்றும் அவர்களின் நலம் மற்றும் பொருளாதார தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒதுக்கீடு தொடர்ந்து செய்யப்படுகிறது. சிறுவனப் பொருட்களைச் சேகரிப்பதற்கான அடிப்படைப் பிரிவைப் பழங்குடியின கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை விலையில் அதாவது குத்தகைப் பிரிவுகளுக்கு குறித்து விலைக்கு பத்துக்கும் குறைவான விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பெறுகிறது. நியாயவிலையானது, முந்திய வருடத்தின் ஏல விலையைவிட அதிகமாக இருக்கக்கூடாது எனவும், அரசு அறிவுறுத்தியுள்ளது. இந்திய அரசின் 1996 ஆம் ஆண்டுச் சட்டத்தின் காரணமாக சிறுவனப் பொருட்களின் உரிமையானது குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள ஊராட்சியிலேயே இருக்கும். தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் இதனை சேர்க்கும்போது அத்தகைய விதியை ஊராட்சி நிர்வாகத்தின் கீழ் இந்த உரிமை வருவதால் தற்பொழுது வனத்துறையால் வழங்கப்பெறும் இந்த அனுமதி பொருந்தாது.

நிதிச் சிக்கல்கள்

07. வனத்துறையின் மூலம் சிறுவனப் பொருட்களை மேம்படுத்துவதற்கு மாநில அரசால் அளிக்கப்பட்ட நிதியுதவி 1994–95 இல் ரூபாய் 1.11 கோடியாகும். காப்புக் காடுகளில் உள்ள சிறுவனப் பொருட்களின் மேம்பாட்டிற்காக

மாநில மற்றும் மைய அரசால் தொடங்கப்பட்ட திட்டங்களின் கீழான முதலீடு ஆண்டுக்கு ரூபாய் 1.00 கோடி ஆகிறது. இதற்காக திட்டம் சாராப் பணிகளின் மானியத்தை தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றம் செய்யலாம். மேலும் திட்டங்களைச் செயல்படுத்தும் உரிமையை அவர்களிடம் ஒப்படைக்கலாம். இத்திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைப்பதே சிறந்ததாகும் என்று மாநிலத் திட்டக்குழு பிரிவு கருதுகிறது.

சட்டச் சிக்கல்கள்

08. தமிழ்நாட்டிலுள்ள காடுகளைப் பாதுகாக்கவும் நிருவகிக்கவும் பின்வரும் சட்டங்களும் விதிகளும் நடைமுறையிலுள்ளன.

1. 1882–ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் சட்டம்
2. 1949–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் காடுகளைப் பேணிவளர்த்தல்.
3. 1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு மலைப் பகுதி (மரங்களைப் பேணி வளர்த்தல்) சட்டம்.
4. 1972–ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம்
5. 1986–ஆம் ஆண்டு சுற்றுபுறச் சூழல் பாதுகாப்புச் சட்டம்.
6. 1980–ஆம் ஆண்டு வனப் பேணுகைச் சட்டம்.

மேற்கண்ட வனச் சட்டங்களில் முதல் நான்கு சட்டங்கள், தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டவை. கடைசியில் உள்ள இரண்டு வனச் சட்டங்கள் இந்திய அரசால் இயற்றப்பட்டவையாகும். 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டமானது (1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம்21), பாதுகாக்கப்படாத காடுகள் தொடர்பில் ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் சில அதிகாரங்களை வழங்கியுள்ளது. மேற்கூறியவற்றின் துணை கொண்டு பார்க்கையில் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டி தெரிவித்த அதிகாரங்களை உரிய சட்டங்களில், விதிமுறைகளில், விதி தொகுப்புகளில், சேர்ப்பதற்குத் தேவையான திருத்தத்தை மேற்கொள்ளலாம்.

உணவை பதப்படுத்தும் தொழில் உள்ளிட்ட சிறுதொழில்கள்

இனம் - 8

சிறுதொழில் உள்ளிட்ட சிறுதொழில் நிறுவனப் பிரிவை மேம்படுத்துவதன் வாயிலாக தொழில் மயமாகக் கலை விரைவடையச் செய்ய வேண்டும் என்பது, மைய மாநில அரசுகளின் பெரும் கொள்கை நோக்கங்களில் ஒன்றாகும். 1991 ஆம் ஆண்டில் இந்திய அரசால் தொழில் கொள்கையை அறிவிக்கப்பெற்றது. முதல் சிறுதொழில் நிறுவனப் பிரிவை வலுப்படுத்துவதற்கு பல்வேறு கொள்கைகளை உருவாக்கும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் (i) புதிய பிரிவுகளைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் (ii) சிறுதொழில் நிறுவனப்பிரிவுகளுக்குரிய தொகைகளை முறையாகச் செலுத்துவதை உறுதிப்படுத்த 1993 ஆம் ஆண்டு தாமதமாகச் செலுத்தியவர்களின் மீதான வட்டிச் சட்டம் இயற்றுதல். (iii) சிறுதொழில் முனைவோர்களுக்கும், மேலாண் உதவியாளர்களுக்கும் பயிற்சியளிக்கும் புதிய திட்மொன்றை உருவாக்கல். (iv) ஊரக மற்றும் பின்தங்கிய பகுதிகளின் 50 மையங்களில் அடிப்படை வசதிகளைப் வலுப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த அடிப்படை வசதி மேம்பாட்டுத்திட்டமொன்றைத் தொடங்குதல். (v) ஓராண்டுக்கு ரூபாய் 30 இலட்சத்திலிருந்து ரூ 75 இலட்சம் வரை இலாபத்துடன் கூடிய பிரிவுகளுக்குக் கிடைக்கக் கூடிய ஆயத்தீர்வைச் சலுகைகளைப் பதிவு செய்யப்படாத பிரிவுகளுக்கு நீட்டித்தல். (vi) இந்தியத் தர நிர்ணய கழகத்தின் 9000ஐ அல்லது அதைப் போன்ற பன்னாட்டுத் தர அளவுகளைப் பெற சிறுதொழில் நிறுவனங்களின் உற்பத்தித் தர அளவை மேம்படுத்துவதற்குத் தரச் சான்றிதளித்தல் திட்டத்தைத் தொடங்குதல் மற்றும். (vii) இந்திய சேம வங்கியால் வெளியிடப்பட்ட வழி முறைகளின் படி சிறு தொழில் நிறுவனப் பிரிவுகளுக்கு வங்கிகளிலிருந்து குறித்த நேரத்தில் போதுமான கடனும் பெறுவதற்குச் சிறப்புக் கூட்டு நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் ஆகியன அடங்கும். இக்கூட்டு நடவடிக்கைகளில்: ஊரகத் தொழில்கள் மிகச்சிறிய பிரிவுகள் மற்றும் சிறுதொழில் பிரிவுகளுக்கு இவ்வரிசைப்படி அவற்றின் தேவைகளை அளிப்பதில் முன்னுரிமை தருதல். சிறுதொழில் நிறுவனப் பிரிவின் சட்டப்படியான தேவைகளை முழுமையாகப் பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் கீழிருந்து மேல் நோக்கி அமையும் அடிப்படையில் ஆண்டு வரவு செலவுத்திட்ங்களைத் தயாரித்தல் மற்றும் இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் ஒரே இடத்தில் பலவகைத் தடையின்மைச் சான்றிதழ்கள் பெறும் திட்டத்திற்கான வழிவகைகளைப் பிற வங்கிகளும் மேற் கொண்டு நிதி ஒதுக்கீடு செய்ய வலியுறுத்துதல்.

02. மொத்தத்தில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் குறிப்பாகச் சிறதொழில் வளர்ச்சிக்கும் இணைப்பு முகமையாகத் தொழில் வணிகத்துறை இருந்து வருகிறது தொழில் வணிகத்துறையானது அது தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து இயந்திரவியல், மின்னியல், வேதியியல், மின்னணுவியல் முதலியன போன்ற பல்வேறு பிரிவுகளில் பொறியியல் கல்வி பின்னனியுடன் தகுதியுடைய தொழில்முறையாளர்ளைக் கொண்டு செயற்பட்டு வருகிறது. பொறியாளர் கல்வித் தகுதி பெற்ற பொது மேலாளர்களின் தலைமையில் கீழ் மாவட்டத் தொழில் மையங்கள் இயங்குகின்றன. அத்துடன் அவை சிறு தொழிலதிபர்களுக்கு நடைமுறைப்படுத்தக்கூடிய தொழில்நுட்பம் பற்றியும் மற்றும நிலைத்திருக்கக்கூடிய பொருளாதாரம் பற்றியும் அறிக்கைகளை அளிக்க வகை செய்கின்றன. மேலும் பின்தங்கிய மிகவும் பின் தங்கிய வட்டாரங்களில் வட்டாரங்களில் 15 விழுக்காடு திட்டச் செலவுடன் ரூ.50 இலட்சம் வரையிலான வரம்புடைய மானியங்களை அளிப்பதன் மூலம் பிரதமரின் ரோஜ்கர் யோனா திட்டங்களும் ஏனைய வளர்ச்சிதிட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்டத் தொழில் மையத்தின் பங்கானது தொழில்களை மேம்படுத்துவதற்குப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்துவதாகும் இவற்றில் பின்வருவன அடங்கும்: 1) தொழில் முனைவோர்க்கான வழிமுறைகளை அளித்தல். 2) சிறு தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்து துணைத் தகுநிலைப் சான்றிதழ்களை (மின்சாரம், உரிமம் முதலியன) அளித்தல். 3) நிதியுதவி உட்பட பல்வேறு முதலீடு களைப் பெறுவதில் சிறு பிரிவுகளுக்கு உதவி செய்தல், 4) நிலைமுதல் சரக்குகள் இயந்திரங்கள் அரிய மூலப் பொருட்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கு உதவி செய்தல் 5) பிரதமரின் ரோஜ்கர் யோஜனா திட்டத்தின் கீழ் படித்த

வேலையில்லாத இளைஞர்களுக்கான சுயவேலைவாயப்புத் திட்டங்கள் போன்ற மைய அரசின் ஆதரவு பெற்ற திட்டங்களைச் செயற்படுத்துதல், 6) அரசு மூலதனம், மின் ஆக்கி ஊக்குதவித் தொகை, மின் கட்டண ஊக்குதவித் தொகை, நலிவுற்ற பிரிவுகளுக்கு வட்டியில்லா விற்பனை வரி கடன் நீக்கி விட்டு வரம்புக்குட்பட்ட பண உதவி போன்ற பல்வேறு ஊக்குதவித் தொகைகளையும் ஊக்கத் தொகைகளையும் ஒப்பளிப்புச் செய்து வழங்குதல், 7) கருத்தரங்கள், பரவலாகக் கூட்டங்கள் நடத்துதல் வாயிலாகப் பல்வேறு கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல், 8) தொழில் கூட்டுறவுச் சங்கங்களைத் தோற்றுவித்து நடத்துவதற்காக அமைப்பு முறையிலான ஆதரவுக்கும் தொழில் நுட்பம், மேலாண்மை மற்றும் நிதியுதவி ஆகியவற்றிற்கு வழிவகை செய்தல், 9) தனிச் சிறப்பாகப் பெண் தொழில் முனைவோர்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டு செயல்முறைத் திட்டங்களை நடத்திக் காட்டுதல் மற்றும் தொழில் நுட்பப பொருளாதார மதிப்பீடுகளை நடத்திக் காட்டுதல், 10) சிறு தொழில் பிரிவுகளுக்கு அவற்றின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் உதவுதல் மற்றும் தொழில் முனைவோர்களின் பாதுகாப்புப் பணிகளுக்கு வழிவகை செய்தல், 11) கிராமியக் கைவினைஞர்களை இனங்கண்டு அவர்களுக்குக் குடிசைத் தொழில்கள் மேம்பாட்டில் உதவி செய்தல், மற்றும் 12) தொழில் வளர்ச்சியின் மேம்பாட்டிற்கு மாவட்ட நிலையில் ஒரே நேரத்தில் பலவகைக் குழுக்கூட்டங்களை நடத்துதல்.

03. மாநிலத்தில் சிறுதொழில் நிறுவனங்களின் நிலையான பதிவு தொடர்பில் அவற்றின் முன்னேற்றங்களைச் சுட்டிக் காட்டும் புள்ளிவிவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	நிலையாகப் பதியப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை	(ரூ.இலட்சங்களில்) முதலீடு	உற்பத்தி	வேலை வாய்ப்பு
31.3.90	113658	204584	625119	11.93
31.3.91	127202	228963	699611	13.73
31.3.92	138404	290648	761212	14.95
31.3.93	157892	357789	888406	17.50
31.3.94	178114	397227	1034841	19.41
31.3.95	207357	512765	1326176	21.88
31.3.96	234400	562794	1434348	23.23

கைத்திறத் தொழில் பிரிவுகள்

04. அனைத்து மாவட்டங்களிலும் கைவினைஞர்களும் கலைத் தொழிலாளிகளும் கண்டறியப்பட்டுள்ளனர். கைத்திறத் தொழில் வகையின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்பிரிவுகளை அவர்கள் நடத்தினால், அவர்களுக்கு நிலையானப் பதிவுசான்றிதழ்கள் வழங்கப் பெறும். இதுவரையில் எய்திய சாதனைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	இலக்கு	சாதனை	உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு
1990 – 91	7500	7291	17539
1991 – 92	7500	7822	17698
1992 – 93	8000	7936	19741
1993 – 94	8000	7634	17754
1994 – 95	8000	5901	12173
1995 – 96	8500	5494	13615

குடிசைத் தொழில்கள்

05. பல்வேறு கிராமங்களில் நடைபெறும் குடிசைத் தொழில்கள் கண்டறியப்பெற்று பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இதற்காக அறுதியிடப்பட்ட இலக்கும் அடைந்த சாதனையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆண்டு	இலக்கு	சாதனை	உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு
1990 – 91	7500	7465	28218
1991 – 92	7500	8169	21955
1992 – 93	8000	8879	19622
1993 – 94	8000	8122	18652
1994 – 95	8000	6399	13352
1995 – 96	8000	4896	12605

பிரதம மந்திரியின் ரோஜ்கர் யோஜனா திட்டம்

06. படித்த வேலையில்லாத இளைஞர்களுகானப் பிரதம மந்திரியின் ரோஜ்கர் யோஜ்னா எனப்படும் திட்டமொன்றை இந்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாளில் துவங்கப்பட்டது. இது தொழில்கள், வணிகம், பணி முதலியவற்றை சுயவேலை வாய்ப்புக்கான முயற்சிகளை மேற்கொண்டு அமைப்பதாகும். சாதனையின் முன்னேற்றம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு	இலக்கு	பெறப்பட்ட விண்ணப்பங்கள்	விண்ணப்பங்கள்		
			வங்கிகளால் பரிந்துரைக்கப் பட்டவை	ஒப்பளிக்கப்பட்டவை	
				எண்ணிக்கை	தொகை
1	2	3	4	5	6
1994 – 95	17400	54138	35509	14519	8238.68
1995 – 96	21800	53106	50423	19304	11068.51
1996 – 97	21800	29154	29791	3653	2175.89

(31.10.96 ஆம் நாளன்று)

ஆண்டு	பயிற்சியளிக்கப் பெற்றவர்களின் எண்ணிக்கை	வழங்கியவை	
		எண்ணிக்கை	தொகை (ரூ. இலட்சங்களில்)
	7	8	9
1994 – 95	11976	11356	6124.33
1995 – 96	15787	11699	6365.88
1996 – 97	1585	382	205.82

(31.10.96 ஆம் நாளன்று)

07. தமிழ்நாடு ஊராட்சிச் சட்டமானது, குடிசைத் தொழில்களை மேம்படுத்தவும் ஊக்கப்படுத்தவும் (பிரிவு 112 (என்) அரசால் அல்லது எதாவதொரு சட்டமுறையான அமைப்பால் அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்குள் பிற முகமையால் திட்டங்களை செயல்முறைத் திட்டங்களை மற்றும் நிறைவேற்றப்பட்ட பிற செயல்பாடுகளை மறுஆய்வு செய்யவும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரம் வழங்கவும் வகை செய்கிறது. (பிரிவு 114 (2)) மேலும் இச்சட்டத்தில் "தொழில்கள் மற்றும் தொழிலாளர்" குறித்து நிலைக்குழுவொன்றை அமைக்க மாவட்ட ஊராட்சிக்கு அதிகாரம் வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. (பிரிவு 97 (i) (அ) (ii). இச்சட்டத்தின் நோக்கமானது மாவட்ட ஊராட்சிகளுக்கு அறிவுரை அதிகாரங்களை வழங்கவும் ஊராட்சி ஒன்றியக்குழுக்குரியத் திட்டங்களை மறுஆய்வு செய்வதற்கும் வழிவகை செய்வதாகும். இவ்வாறு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று படி நிலைகளுக்கும் சிறு தொழில்கள் மற்றும் உணவைப் பதப்படுத்தும் தொழில்களை மேம்படுத்தவும் ஊக்கமளிக்கவும் திட்டவட்டமான பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. மேற்காணும் நிலையைக் கருத்திற்கொண்டு மாநிலத் திட்ட குழு பிரிவு பின்வரும் அதிகாரங்களை ஒப்படைக்க பரிந்துரை செய்கிறது.

(I) ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1	2
1. தொழில் வாய்ப்பு வள உள்ளாற்றல் மதிப்பீடும் திட்ட உருவாக்கவும்	ஊராட்சியில் தொடங்க இயலக்கூடிய சிறு குடிசை, உணவைப் பதப்படுத்துதல் மற்றும் கைத்திறத் தொழில் பிரிவுகளுக்கான மதிப்பீடு செய்வதிலும் திட்ட உருவாக்கத்திலும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் மாவட்டத் தொழில் மையத்திற்கும் உதவி செய்தல்
2. அடிப்படை வசதிகளை மேம்படுத்தல்	i) வேளாண் தொழில்கள், ஊரகத் தொழில்கள் மற்றும் உணவைப் பதப்படுத்தும் பிரிவுகள் ஆகியவற்றுக்கு உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு பதப்படுத்துவதற்குப் பொருத்தமான அமைவிடங்களைக் கண்டறிதல்.
3. தொழில் முனைவோரை மேம்படுத்துதல்	i) ஊராட்சியில் ஊரகத்தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து ஊரக/குடிசை/உணவைப் பதப்படுத்தும்

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
	வேளாண் பொருள்களை முறைப்படுத்தும் தொழில்கள் ஆகியவற்றில் அவர்களுக்குத் தேவைப்படும் பயிற்சி வகைகளைப் பற்றிக் கருத்துத் தெரிவித்தல்.

II) ஊராட்சி ஒன்றியம்

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	தொழில் வள ஆதாரங்களின் உள்ளாற்றல் மதிப்பீட்டு திட்டத்தை உருவாக்கலும்	i)	ஊராட்சி ஒன்றியப்பகுதிகளுக்கென மாவட்டத் தொழில் மையம் தொழில் வாய்ப்பு வள உள்ளாற்றலை மதிப்பீடு செய்வதில் உதவி செய்தல்
2.	அடிப்படை வசதிகளை மேம்படுத்தல்	ii)	சிறிய/ஊரகத் தொழிற்பேட்டைகள்/வளாகங்கள்/வளர்ச்சி மையங்கள் ஆகியவற்றை நிறுவுவதற்காகக் குறிப்பிட்டத் திட்டங்களைக் கண்டறிதல்
3.	தொழில் முனைவோரை மேம்படுத்துதல்	i)	தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களுக்காகப் பல்வேறு தொழில்கள், வாழ்க்கைத் தொழில்கள் மற்றும் தேர்ச்சித் திறம் பெற்ற தொழில்களில் ஈடுபடும் தொழில் முனைவோர்களைத் தெரிவு செய்தல்.
		ii)	சிறு தொழில் திட்டங்களை எடுத்துக் கொள்வதற்காக ஊரகத் தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு அரசு மற்றும் நிறுவன அமைப்பிலான நிதியுதவிகள் அன்றியும் வங்கி நிதியுதவிக்கும் பரிந்துரைத்தல்.
		iii)	சிறுதொழில் / உணவைப் பதப்படுத்தும் பிரிவுகளில் ஊரகத் தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல்
4.	பல்வேறு அரசுத் துறை / முகமை களிலிருந்து கடன் மற்றும் நிதியுதவி	i)	சிறு தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவியும் பிற உதவியும் பெறுவதற்கு உதவி செய்தல்உதவி செய்தல்
		ii)	கடன் வசதிகளையும் பிற பண ஊக்கத்தையும் பற்றித் தகவலும் வழிகாட்டலும் அளித்தல்.
5.	அரசு ஆதரிக்கும் / நிதியளிக்கும் திட்டங்களை மறு ஆய்வு செய்தல்	iii)	ஊராட்சி ஒன்றியமானது, மாவட்டத் தொழில் மையத்தால் செயற்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் மறு ஆய்வு செய்ய வேண்டும்.மறு ஆய்வுக்குழுவில் பொது மேலாளர் அல்லது அவரின் சார்பாளர் கலந்து கொள்ள வேண்டும்.

III) மாவட்ட ஊராட்சி

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	தொழில் வள ஆதாரங்களின் உள்ளாற்றல் மதிப்பீடும் திட்ட	i)	சிறு / ஊரக மற்றும் பதப்படுத்தும் தொழில்களின் மீது மாவட்டத் திட்டத்தை உருவாக்குதல். அத்தகைய திட்ட மொன்றை உருவாக்குவதற்காக மாவட்ட ஊராட்சிக்கு மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் உதவி செய்ய வேண்டும்.
		ii)	மாவட்டத்திற்கான சிறுதொழில் நிறுவனங் கள் மீதான அடிப்படை விவரம் / தகவல் / வடிவமைப்புகளைத் தயாரித்துப் பேணுதல்
		iii)	மாவட்டத்தில் தொழில்களின் வளர்ச்சிக்கு நடவடிக்கைகளுடன் அரசுக்கு அறிவுரை கூறுவதற்காக ஆண்டடிற்கான தொழில் வளர்ச்சி மாநாட்டை நடத்துதல்.
2.	அடிப்படை வசதிகளின் மேம்பாடு	i)	சிறுதொழிற் பேட்டைகள் / வளாகங்கள் / மையங்கள் ஆகியவற்றை நிறுவு வதற்கும், சாலைகள், மின்வசதி, நீர் வழங்கல் மற்றும் மாவட்டத்தில் ஏற்கனவே உள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் சிறுதொழில் நிறுவனப் பிரிவுகளுக்குத் தேவையான சுற்றுச் சூழல் கட்டுப்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கும் கூட அரசுக்கு, மாவட்டத் தொழில் மையம் மற்றும் பிற அதிகாரங்களுக்கு அறிவுரை கூறுதல்.
3.	தொழில் முனைவோர் மேம்பாடு	i)	பயிற்சித் திட்டங்களுக்காக ஊராட்சி ஒன்றியங்களையும் மாவட்டத் தொழில் மைய பொது மேலாளரையும் கலந்தாய்ந்து தொழில் முனைவோர்களைத் தெரிவு செய்தல்.
		ii)	மாவட்டத்தில் சிறு தொழில் முனைவோர் களுக்கான பயிற்சித் தேவைகளையும் திட்டங்களையும் கண்டறிதல்.
4.	பலவேறு அரசுத் துறை / முகமை களிலிருநது கடன் மற்றும் நிதியுதவி	i)	சிறு தொழில் முனைவோர்களுக்கும் வேளாண் தொழிலதிபர்களுக்கும் கடன்கள் மற்றும் நிதித் தேவைகள் மீது அரசுக்கு / வங்கிகளுக்கு அறிவுரை கூறுதல்.
5.	தொழில்கள் மற்றும் தொழிலாளர் பற்றிய நிலைக்குழு	i)	சட்ட முறையிலான குழுவை அமைத்தல், அனைத்துச் சிறு தொழில்களையும் சீராய்வு செயவதுடன் உணவைப் பதப்படுத்தும் தொழிலின் இடர் பாடுகளையும் எதிர்கால வாய்ப்புக் களையும் அக்குழுவில் எடுத்துக் கூறுதல். மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர் சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் தொழில் உள்ளமைப்பு மேம்பாட்டுக் கழகம், தொழில் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின்

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
	அலுவலர்கள் ஆகியோர் குழுவிடம் அறிக்கை அளிக்க வேண்டும்.
	ii) சிறுதொழில் நிறுவனங்களுக்கான "ஆய்வாளர் அரசு அமைப்பைக் கலைப்பதற்கு மாநில அரசால் மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகளைச் செயற்படுத்தி மேற்பார்வையிடல்.

சிக்கல்கள்

08. பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்குஅதிகார ஒப்படைப்பின் தாக்கம் கீழ் நிலையிலிருந்து (கிராம நிலை) மாவட்ட நிலை வரை (மாவட்ட ஊராட்சி) கொண்டு வருவதாகும். ஒவ்வொரு ஊராட்சியும், சிறு தொழில் நிறுவனப்பிரிவில் தனது பகுதியில் தொழில் முனைவோர்களையும் தொழில் பிரிவுகளையும் கண்டறிவதை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். இதில் வேலை வாய்ப்பு அளிப்பது என்ற இலக்குடன் மட்டும் நில்லாது ஊரகத் தொழில் முனைவோர்களைக் கண்டறிதலில் உதவி செய்தல் ஊரகத் தொழில்களுக்குத் தகுதியுடைய அமைவிடங்களைக் கண்டறிதல், பயிற்சி பெறுவதற்குரிய ஊரகத் தொழில் முனைவோர்களைக் கண்டறிதல் கடன் வசதிகள் மற்றும் பிற பண ஊக்கத் தொகைகள் குறித்த தகவல் மற்றும் வழிகாட்டல்களை அளித்தல் முதலியனவும் தொடர்ந்து நடைபெறுவனவாகும். ஊராட்சி ஒன்றிய அளவில் திட்டங்களின் மறு ஆய்வானது திறன் வாய்ந்த பயனுள்ள மற்றும் தெளிவான செயற்படுத்தலுக்கு போதிய ஆய்வுகளையும் இருப்புக்களையும் அளிக்க சிறு தொழில்களுக்கான அரசு மற்றும் ஏனைய முகமைகளின் திட்டங்கள் குறித்த அறிக்கையினைப் பல்வேறு துறைகளின் மேலாளர்களால் அளிக்கப் பெறும் உதவியினைக் கொண்டு மாவட்டத் தொழில் மையங்களில் மேலாளர் மாவட்ட ஊராட்சிக்கு அது மறு ஆய்வு மேற்கொள்வதற்காக அறிக்கை அளிக்க வேண்டும். அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள களப் பணியாளர்கள் கிராம நிலையிலான உள்ளாற்றல் நடவடிக்கைகளைக் கண்டறிய வேண்டும். மாவட்டத் தொழில் மையங்கள் உரியவாறு திட்டமிடுவதற்கும் செயலாக்க மறு ஆய்வுக்கும் மாவட்டத் திட்டமிடல் குழு இணைக்கப் பெறவேண்டும்.

09. அதிகார ஒப்படைப்பானது ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் நேரிடையாகச் செயற்படுத்தப்படவிருக்கும் / நிறைவேற்றவிருக்கும் நிதிகளை அல்லது திட்டங்களை மற்றும் பணியாளர் மாற்றம் எதையும் வலியுறுத்தவில்லை. அவை, சிறுதொழில் மற்றும் உணவைப் பக்குவப்படுத்தும் தொழில்களின் மேம்பாட்டிற்குத் தெரிவாளராக, ஒருங்கிணைப்பாளராக, வசதி அளிப்பவராக தம் பங்கை ஆற்றுகின்றன.

கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில்கள்

(இனம் - 9)

01. தமிழ் நாடு கதர் மற்றும் குடிசைத் தொழில்கள் வாரியமானது 1959 ஆம் ஆண்டைய (1959 ஆம் ஆண்டைய சட்டம் எண்.18) தமிழ்நாடு கதர் மற்றும் ஊரகத் தொழில்கள் வாரியச் சட்டத்தின்படி 1–4–1960 இல் அமைக்கப்பட்டது. அதன் நோக்கமானது, கதர் மற்றும் ஊரகத் தொழில்களை முன்னேற்றமடையச் செய்வதும், கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள் துறையை முறைப்படுத்தி, நிதியளித்து, திட்டங்களை மேம்படையச் செய்வதும் ஆகும். ஊரகப் பகுதிகளில், குறிப்பாக, குறைந்த வேலை வாய்ப்புடையவர்களுக்கு, அவர்கள் தங்களுடைய அன்றாட வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் வேலை வாய்ப்பளிப்பதும் அதன் நோக்கமாகும். அது தனது வட்டார எல்லைக்குள் கிடைக்கக்கூடிய வள ஆதாரங்களைப் பயன்படுத்தி, விற்பனை வாய்ப்புடைய பொருள்களை தயாரிப்பதில் தன்னை ஒருமுகப்படுத்திக் கொண்டுள்ளது. மேம்பட்ட கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் அறிமுகப்படுத்தவும் முயலுகிறது. அது தன்னுடைய 36 ஆண்டு காலத் தொண்டினை நிறைவு செய்யும் வேளையில் பாராட்டத்தக்க முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது. 15.53 இலட்சம் ஊரகக் கைவினைஞர்களுக்குத் தொடர் வேலைவாய்ப்பையும் அளித்துள்ளது. 1995–96 ஆம் ஆண்டில் 375 கோடி ரூபாய் மதிப்புள்ள ஊரகத் தொழில் பொருள்களையும், 37.90 கோடி ரூபாய் மதிப்புள்ள கதர் பொருள்களையும் தயாரித்துள்ளது. 1995–96 ஆம் ஆண்டில் மாநில அரசானது, இத்துறைக்கு 12.66 கோடி ரூபாயை வழங்கியுள்ளது. தமிழ்நாடு, கதர் உற்பத்தியில் இரண்டாம் இடத்திலும், தேசிய அளவில் ஊரகத் தொழில் பொருள்கள் உற்பத்தியில் மூன்றாம் இடத்திலும் உள்ளது.

02. வாரியத்தின் செய் கடமைகளானது, மேற்படி சட்டத்தின் 11ஆவது பிரிவில் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது. (அ) கதர் மற்றும் ஊரகத் தொழில்களைத் தொடங்கி, ஊக்குவித்து, உதவி புரிந்து நடத்துதல். (ஆ) தகுதியுடைய நபர்களுக்கு அவர்களுடைய வீடுகளிலேயே ஆதாயம் பெறத்தக்க வேலை வாய்ப்பினை கதர் மற்றும் ஊரகத் தொழில்கள் அமைப்பின் வாயிலாக அளித்தல். (இ) கதர் மற்றும் ஊரகத் தொழில் வளர்ச்சிக்குரிய கடன்களையும் பிற உதவிகளையும் அளித்தல். (ஈ) கதர் மற்றும் ஊரகத் தொழில்களுக்கெனக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல். (உ) பயிற்சி மையங்களை அமைத்து, அம்மையங்களிலுள்ள அல்லது மாநிலத்திற்கு வெளியேயுள்ள கதர் மற்றும் ஊரகத் தொழில் மையங்களிலுள்ளவர்களுக்குப் பயிற்சியளித்தல். (ஊ) பயிற்சி மையங்களுக்கு, மூலப் பொருள்கள், கருவிகள் மற்றும் துணைக் கருவிகளை வழங்கவும், அம்மையங்கள் தயாரித்துள்ள பொருள்களை விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்தல். (எ) மேற்படி தொழில் மையங்களால் தயாரிக்கப்படும் பொருள்களை விளம்பரப்படுத்தவும், அவற்றை மக்கள் விரும்புப்படிச் செய்யயும். பண்டகங்கள், வாணிக மையங்கள், பொருட்காட்சியகங்கள் முதலியவற்றை அமைப்பதன் வாயிலாக ஏற்பாடு செய்தல். (ஏ) இத்தொழில்களுக்கு முன்னுரிமை அளிப்பது குறித்தும், அத்தயாரிப்பாளர்களைப் பயன்படுத்திக் கொள்வது குறித்தும் பொதுமக்களிடையே பொதுக் கருத்தினை உருவாக்குதல். (ஐ) வல்லுநர்களிடமிருந்து அறிவுரையையும் வழிகாட்டுதலையும் பெறுதல். (ஒ) தொழில்நுட்ப ஆராய்ச்சி அல்லது கதர் உற்பத்தி அல்லது ஊரகத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், மேன்மையடையவும் செய்தல். (ஓ) கதர் மற்றும் ஊரகத் தொழில்கள் தொடர்பில் ஏற்படும் சிக்கல்கள் பற்றி ஆராய வசதி செய்தல்.

03. கதர் மற்றும் ஊரகத் தொழில் ஆணையத்தால் (க.ஊ.தொ.ஆ) வகுத்தமைக்கப்பட்டுள்ள 96 ஊரகத் தொழில்களில் 59 ஊரகத் தொழில்களைக் கதர் மற்றும் பிற கதர்த் தொழில்கள் ஊரகத் தொழில்கள் வாரியம் பின்வரும் மூன்று பகுதிகளாகச் செயற்படுத்தி வருகிறது.

		எண்.
1.	வாரியத்தின் சொந்த அலகுகள்	1388
2.	வாரியத்தால் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் கூட்டுறவு நிலையங்கள் (பனை பொருள்கள் உட்பட)	1748
3.	கதர் மற்றும் ஊரகத் தொழில் ஆணையத்தின் உதவித் திட்டத்தின்படி நிதியுதவி பெற்றுள்ள கைவினைஞர்கள்	88116

இவையன்றி, ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடிகள் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டம், தாட்கோ போன்ற அரசுத் திட்டங்களும் கூட ஊரகப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிப்பதற்கு வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

04. எண்ணெய், தானியம் மற்றும் பருப்பு வகைகள், நாரியற் பொருள், எலுமிச்சை, கரும்பு, மூங்கில் முதலிய திட்டங்களைக் கூட்டுறவு நிலையங்கள் மற்றும் தனியார் வாயிலாகச் செயற்படுத்தும் இவ்வாரியமானது கதர் திட்டங்கள் மற்றும் உண்ணத்தகா எண்ணெய் மற்றும் சோப்பு தயாரிப்புத் தொழில்களைத் தன்னுடைய அலகுகள் வாயிலாகச் செயற்படுத்துகின்றது. பிற ஊரகத் தொழில் திட்டங்களைப் பொறுத்த வரையில், வாரியத்தால், அதனுடைய சொந்த அலகுகள், தொழில் கூட்டுறவு நிலையங்கள் மற்றும் தனியார்களில் வாயிலாகச் செயற்படுத்தபடுகின்றன.

05. இவ்வாரியத்தின் கீழ் 751 ஊரக நெசவு நிலையங்களும் 87 கதர் உற்பத்தி நிலையங்களும் உள்ளன. இப்பிரிவுகள், 38500 பெண் உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏறத்தாழ 48,000 கைவினைஞர்களைப் பணிக்கமர்த்திக் கொண்டுள்ளன. இவ்வாரியம், 27 கதர் பட்டு உற்பத்தி நிலையங்கள் உடையது. அவற்றின் உற்பத்தியானது, 1995–96 இல் 20.30 கோடி ரூபாய் ஆகும். பாலியஸ்டர் கதர் உற்பத்தியானது, 1995–96 ஆம் ஆண்டில் ரூ.6.14 கோடி ஆகும்.

06. இவ்வாரியத்தின் கீழ் துறை சார்ந்த 241 ஊரகத் தொழில் பிரிவுகளும், 1748 தொழில் கூட்டுறவு நிலையங்களும் இயங்குகின்றன. சொந்தமாகப் பிரிவுகளைத் தொடங்கி இத்தொழிலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள தனிப்பட்ட கைவினைஞர்களுக்கும் வாரியம் நிதியுதவி அளிக்கிறது. இவ்வகையில், இவ்வாரியமானது இதுவரை, 88116 பேர்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது. தோல், சோப்பு, மின்னணுவியல் மண்பண்டங்கள், கையினால் தயாரித்த தாள்கள் போன்றவை இத்தொழில்கங்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஊரகத் தொழில் பொருள்களின் உற்பத்தியும், விற்பனையும் 1994–95 மற்றும் 1995–96 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ.378.96 கோடிகளாகவும், ரூ.397.30 கோடிகளாகவும் இருந்தது.

07. பனைப் பொருள்கள் தொழிலைப் பெருமளவில் உயர்த்தும் நோக்குடன் 1994 ஆம் ஆண்டைய 15–ஆவது சட்டத்தின் படி தமிழ்நாடு பனைப் பொருள்கள் மேம்பாட்டு வாரியம் 6–1–1995 இல் அமைக்கப்பட்டது. பனை மூலப் பொருள்களைப் பயன்படுத்தக் கூடிய சுய வேலை வாய்ப்பினை அளிப்பதன் வாயிலாக, ஊரகக் கைவினைஞர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதே இவ்வாரியத்தின் முதன்மை நோக்கமாகும். சுய வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்குவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதன் வாயிலாக, மாநில மற்றும் மாவட்டப் பனை இணையங்களின் மூலம் பல்வேறு பனைத் திட்டங்களின் கீழ்ப்பனை கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

08. மாநிலப் பனை இணையமானது, இம்மாநிலத்திலுள்ள தன்னுடைய 22 கிளைகளிலும், 7 மாவட்ட இணையங்களிலும் பல்வேறு பனைப் பொருள்களின் உற்பத்தியை மேற்கொண்டுள்ளது. மாநில மற்றும் இணையங்களின் விற்பனை நிலையங்களின் வாயிலாக இப்பனை பொருட்கள் விற்கப் பெறுகின்றன. உண்ணத்தக்க பல்வேறு பனைப் பொருள்களை, அதாவது, பதநீர், பனைவெல்லாம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு மற்றும் காற்றூட்டப்பட்ட பானங்கள், சாக்லேட் வகைகள், கரும்புப் பொருள்கள் மற்றும் உண்ணத்தக்க பிறவகைப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை தவிர, பல்வேறு உண்ணத்தகா பனை பொருள்கள், அதாவது பனை ஓலைப் பொருள்கள், பனைப் பொருள்கள், பனைநார் பொருள் மற்றும் பனைநார் பொருளுடன் கூடிய பனைத்துடைப்பம் முதலியனவும் தயாரிக்கப்படுகின்றன. பல்வேறு வகைகளில் பனைக் கூடைகள் மற்றும் கைத்தயாரிப்பு பனை பொருள்களும் தயாரிக்கப்படுகின்றன.

09. 1994–95 ஆம் ஆண்டில், 121.10 கோடி ரூபாய் மதிப்பளவில் பனை பொருள்களைத் தயாரிக்கும் முயற்சியில், 8.79 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகியது. அதே ஆண்டில் 137.50 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டது. அதில் ஏற்றுமதியான 71.52 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களும் அடங்கும். (அ) பனங்கற்கண்டு படிக வளர்ச்சி (ஆ) நுங்கு பதனம் (இ) பனை நார் பொருள் மற்றும் பனை நார்க்கூடை தயாரிப்பு (ஈ) பனை மரம் ஏறும்

கச்சை மற்றும் கருவிகள் பகிர்வு முதலியன போன்ற திட்டங்களுக்குரிய நிதி ஆதரவை மாநில அரசு அளிக்கிறது. இத்துறையானது குறைந்த அளவு முதலீட்டுடன் கூடிய ஊரக வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்கான மிகச் சிறந்த ஆற்றலுடையதுடன் ஏற்றுமதிக்கும் தாயகத்திற்குமான பொருள்களையும் தயாரிக்கிறது.

10. மாவட்டத்திலுள்ள அனைத்து திட்டங்களையும் கவனிப்பதற்காக, கதர் மற்றும் ஊரகத் தொழில் வாரியத்தின் சார்பில், கதர் உதவி இயக்குநர் ஒருவர் உள்ளார். அவருக்கு உதவியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் பின்வரும் அலுவலர்கள் உள்ளனர்.

(i) கதர் ஆய்வாளர் – இவர், ஒவ்வொரு மாவட்டத்திலும், கதர் நூல், கதர் கைவினைப் பொருள் முதலியவற்றைத் தயாரிப்பையும், கதர் கைவினைப் பொருள்கள் விற்பனையையும் கவனித்துக் கொள்கிறார்.

(ii) மாவட்டக் குடிசைத் தொழில் ஆய்வாளர் – சோப்பு, கைத்தயாரிப்புத் தாள், காலணிப் அலகுகள் போன்ற துறைப் பிரிவுகளைக் கவனித்துக் கொள்கிறார்.

(iii) கதர் மற்றும் ஊரகத் தொழில் கூட்டுறவு அலுவலர் – எண்ணெய் உற்பத்தி, எலுமிச்சை, தச்சுவேலை, இரும்பு வேலை, தேனீ வளர்ப்பு முதலியன போன்ற கதர் தொடர்பிலான தொழில் கூட்டுறவு நிலையங்களைக் கவனித்துக் கொள்கிறார்.

11. இவ்வாறு, பல்வேறு அமைப்புகளும் கூட்டுறவு நிலையங்களும் உற்பத்திப் பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் விற்பனை அல்லது பயிற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. அவை, இப்போதுள்ளவாறே தன்னுரிமையுடன் தங்குதடையின்றி தொடர்ந்து செயற்பட வேண்டும். எனினும், உதவி இயக்குநரும் அவருடைய கள அலுவலர்களும் மாவட்ட ஊராட்சியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படுவதுடன், அவற்றிற்குப் பொறுப்புடையவர்களாகவும் ஆக்கப்பட வேண்டும். கதர் மற்றும் ஊரகத் தொழில் திட்டங்கள் யாவும் அவை பற்றிய முழு விவரங்களுடன் அவற்றின் செயற்பாடு குறித்த உரிய நிலையில் ஊராட்சி அமைப்புகள் தெரிவிக்கப்பட வேண்டும். மாநில அளவில் கதர் மற்றும் ஊரகத் தொழில் வாரியமானது தன்னுடைய வேலை வாய்ப்பினை/வருவாய் உருவாக்கப் திட்டங்களைச் செயற்படுத்த மாவட்ட ஊராட்சிகள் மற்றும் பிற ஊரக உள்ளாட்சிகளின் ஆலோசனை/ஆதரவைப் பெற வேண்டும். மேலும், மாவட்ட திட்டமிடுபவர்களால் காலமுறையில் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டங்களிலும் கலந்து கொள்ள வேண்டும்.

12. பின்வரும் செய்கடமைகள் ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படலாம்.

I. ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. திட்டமிடல் கண்காணித்தல், மேற்பார்வையிடல்	(1) கிராம அளவில் உள்ளாற்றலுடைய செயல்களைக் கண்டறிந்து, அவற்றுக்கெனத் திட்டங்களை வகுத்தல்.
2. பயனாளர்களுக்குத் தொழில் நுட்பவியல் பயிற்சியளித்தல் மற்றும் செயல் திறம் அளித்தல்	(1) தனித்துறைச் செயல்திறம் மிக்கவற்றில் மற்றும் தொழில் நுட்பவியலில் பயிற்சியளிக்கப்பட வேண்டிய பயனாளர்களைக் கண்டறிதல்.

	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
		(2) ஊரகக் கைவினைஞர்களுக்கு அவர்களுடைய வணிகம் மற்றும் கைத்தறித் தொழில்களுக்கேற்ற பயிற்சி நிலையங்கள் பற்றி தகவல்களைப் சென்றடைய செய்தல்.
3.	உள்ளமைப்பு வளர்ச்சி	(1) கதர் மற்றும் ஊரகத் தொழில் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டுள்ள நிலையங்களுக்கு/ கழகங்களுக்கு உதவி செய்தல்.
		(2) பொதுச் சொத்து வள ஆதாரங்கள் மற்றும் ஊராட்சிச் சொத்துகளிலிருந்து உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களுக்குரிய வாய்ப்புகளை எளிதாக்குதல் அம்மூலப் பொருள்களை / முதலீடுகளைப் பயன்படுத்து வதற்குரிய கட்டணங்களை விதித்தல்.

II. ஊராட்சி ஒன்றியம்

	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	திட்டமிடல் கண்காணித்தல், மேற்பார்வையிடல்	(1) கதர் மற்றும் கிராமத்தொழில்கள் குழு/கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம்/கைத்தறி கைவினைப் பொருள் வளர்ச்சி போன்ற பிற முகமைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து, கதர், ஊரக மற்றும் குடிசைத் தொழில் மற்றும் பிறகை வினைஞர் செயற் – பாடுகளுக்குத் திட்டம் தயாரித்தல்.
2.	பயிற்சி மற்றும் வேலைத் திறன் வளர்ச்சி, தொழில் நுட்பவியல் பயனாளர் மாற்றம்.	(1) பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிக்காக பயனாளர்களைத் ஊராட்சிகள் வாயிலாகப் பயனாளர்களைத் தெரிவு செய்வதில் உதவி செய்தல்.
		(2) பல்வேறு உற்பத்தி, வணிகம் மற்றும் கைத்திறத் தொழிலில் தொழில் நுட்பவியல் சென்றடையவும் மேம்பாடடையவும் செய்தல்.
		(3) ஊரகக் கைவினைஞர்களுக்கு மேம்பட்ட பயிற்சி மற்றும் தொழில் நுணுக்கம் கற்பிக்க புதிய பயிற்சி மற்றும் உற்பத்திப் அலகுகளைத் தொடங்குதல் அல்லது ஏற்கெனவே உள்ள அலகுகளை மாற்றி யமைத்தல்.
3.	உள்ளமைப்பு வளர்ச்சி	(1) பொதுவான பணியிடங்களை ,பட்டறை,பணிவளாகங்கள் கட்டுவது போன்ற உள்ளமைப்பு வளர்ச்சிக்காகப் பல்வேறு முகமைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்தல்
		(2) விளைபொருள்களின் உற்பத்திக்கும், விற்பனைக்கும் கூட்டுறவு நிலையங்களுக்கு உதவுதல்.
4.	கடன் மற்றும் நிதியுதவி	(1) கைவினைஞர்களுக்குக் கடன் உதவியை உறுதி செய்தல்.
		(2) கண்காணித்து, மேற்பார்வையிட்டு முன்னேற்றம் பற்றி மாவட்ட ஊராட்சிகளுக்குத் தெரிவித்தல்.

II. மாவட்ட ஊராட்சி

	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	திட்டமிடல் கண்காணித்தல், மற்றும் மேற்பார்வையிடல்	(1) கதர், கைவினைப் பொருள்கள், பட்டுப்புழு வளர்ப்பு, குடிசை மற்றும் ஊரகத் தொழில் வளர்ச்சிக்காக மாவட்ட நிலையில் திட்டம் தயாரித்தல்
2.	பயிற்சி & வேலைத் திறன் வளர்ச்சி, தொழில் நுட்பப்பயனாளர் மாற்றம்.	(1) உரிய தொழில் நுட்பவியல் பயிற்சியளிக்க ஏற்ற பயிற்சி மையங்களையும் நிலையங் களையும் கண்டறிந்து, அவ் விவரங்களை ஊராட்சி ஒன்றியங் களுக்கும் ஊராட்சிகளுக்கும் பரப்புதல்
3.	கடன் மற்றும் நிதி ஆதரவு	(1) மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய இயல் திறங்களைப் பயன் படுத்துவதற்கு தேவையான உள்ளமைப்புகள் பற்றி கா.ஊ.தொ. வா.க்கு ஆலோசனை அளித்தல்.
		(2) மாவட்டம் முழுவதற்குமான கடன் திட்டத்தின் ஒரு பகுதியாக மாவட்டத்திலுள்ள இப்பிரிவுக்கு ஏற்ற கடன் வசதிக்கு வடி வமைத்துத் கருதல்.

சிக்கல்கள்

13 பஞ்சாயத்து ஆட்சி திட்டத்தின் பயனாவது கீழ்மட்டத்திலிருந்து உருவாகுதல், ஒவ்வொரு ஊராட்சியும் கதர் மற்றும் ஊரக மற்றும் குடிசைத் தொழில் பிரிவுக்கெனத் திட்டப் பணிகளிலிருந்து நிதியுதவி பெறும் நோக்கமுடையதாக இருக்க வேண்டும். இது, வேலைவாய்ப்பை உருவாக்குவதோடு நின்றுவிடாமல் மூலப்பொருள்கள், நியாயமான கூலி, கிடைக்கவும். கைவினைஞர்களுக்கு நன்மைபயக்கும் வகையில் விளைபொருள்களை விற்பனை செய்யவும் வழிவகுக்கிறது. இது, ஊரகப்பகுதிகளுக்கு மற்றும் நகர்புற பகுதிகளுக்கு மக்கள் குடியேறுவதைத் தடுக்கும்.

14. கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் பட்டு வளர்ப்புத் துறை, மாவட்டத்தொழில் மையம், கைத்திறத்தொழில் கழகம், தமிழ்நாடு பனை வாரிய இணையம் முதலியவற்றின் உதவி இயக்குனர்கள், அரசு மற்றும் க.ஊ.தொ.ஆ. திட்ட ஆய்வுக்காக மாவட்ட ஊராட்சிக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். இவர்களுடைய களப்பணியாளர்கள் உள்ளூர் கைவினைஞர்களின் தேவை பயிற்சி மற்றும் ஊர் நிலையில் இயல் திறன் செயற்பாடுகளைக் கண்டறிய வேண்டும்.

15. குடிசை தொழில்களை ஊக்குவுக்கவும் மற்றும் மேம்பாடு செய்யவும் ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய நிதி வரம்பிற்குள் சில வசதிகளை செயது கொடுக்க பிரிவு 112ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஊரக வீட்டு வசதி

(இனம் - 10)

01. உணவுக்கும் உடைக்கும் அடுத்தபடியாக மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையாக அமைந்தது உறைவிடமேயாகும். குடியிருப்பு இல்லாத குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குடியிருப்பினையும் உறைவிடம் இல்லாதவருக்கு உரைவிடம் அமைத்துத் தர வேண்டுமென்பது தமிழக அரசின் நோக்கமாகும். ஊரக வீட்டு வசதித் திட்டம் என்பது (i) வீட்டு மனை (ii) வீடு வழங்குதல் எனும் இரு கூறுகளை உள்ளடக்கியதாகும். 2011–ஆம் ஆண்டு வாக்கில் தமிழ்நாட்டின் வீட்டு வசதி தேவை 175 இலட்சம் அலகுகளாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1994–95–இல் தமிழ்நாட்டின் வீட்டு வசதித் தகுதி நிலையைப் பார்க்குமிடத்து 1981–91 கால அளவில் இருந்ததைக்(22%) காட்டிலும் உயர்ந்த எண்ணிக்கையில் (24.3%) உள்ளதென்பதைக் காணமுடிகிறது. இது 1981–இல் 1.03 விழுக்காடாக இருந்த குடியிருப்பு அலகு ஒன்றுக்குரிய வீடுகளின் எண்ணிக்கையானது, 1991–இல் 1.01 விழுக்காடாக வீழ்ச்சியடையக்கூடிய விளைவை ஏற்படுத்தியது. இம் மாநிலத்திலுள்ள மக்கள் தொகையில் ஏறக்குறைய முன்றில் ஒரு பங்கினர் நகர்ப்புறப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

02. ஊர்ப்புறப் பகுதிகளில் வீட்டு வசதிக்குறைவு பற்றியும், மாற்று வீடு தேவைப்படும் குடிசைகளின் எண்ணிக்கை பற்றியும் சரியாக மதிப்பீடு செய்வதற்கு விரிவான வீட்டு வசதி விவரங்கள் கிடைக்கவில்லை. ஊர்ப்புற மக்கள் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் குடியிறுப்புகளின் எண்ணிக்கை பற்றி மறைமுகமாக அறிந்து கொள்ளக்கூடிய ஆதாரங்களில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பும் ஒன்றாகும். 1991–ஆம் ஆண்டைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஊரகப் பகுதிகளில் 1000 குடியிருப்போருக்கு வீடுகளின் எண்ணிக்கை 1008 ஆகும். எனினும், ஊரக வீட்டு வசதி பற்றாகுறை பற்றிய அடிப்படை விவரங்கள் நான்கு வித வழிகளில் கிடைக்கின்றது. மாநிலத் திட்டகுழு தன்னுடைய எட்டாவது ஐந்தாண்டு திட்ட ஆவணத்தில் வீட்டுவசதிக் குறைவானது 13.70 இலட்சம் அலகுகள் (1991) என மதிப்பிடப்பட்டிருந்தது. தேசிய வீட்டுவசதிக் கொள்கை வரையில், மேம்பாட்டு ஆராய்ச்சிச் சங்கமானது 10.06 இலட்சம் அலகுகள் (1994) குறைவு என மதிப்பிட்டிருந்தது. ஊர்ப்புற வீட்டுவசதிக்கான உட்குழுவானது 2002–இல் தமிழ்நாட்டில் ஊர்ப்புறத்திற்கான ஏறத்தாழ 12.24 இலட்சம் அலகுகள் என மதிப்பிட்டுள்ளது. செயல்முறை ஆராய்ச்சித் துறையின் ஊர்ப்புற வீட்டுவசதித் திட்டம் மதிப்பீட்டு அறிக்கையில் வீட்டுவசதிக் குறைவென உயர்ந்த அளவாக 22.01 இலட்சம் அலகு எனக் கூறுகிறது.

03. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை, 1995 டிசம்பர் திங்களில் ஊரக வீட்டு வசதித் திட்டம் பற்றிய படிப்பாய்வு ஒன்றினை மேற்கொண்டது. இதன் அறிக்கையின் படி தமிழ் நாட்டில் மொத்த வீட்டு வசதித் தேவையானது 31.43 இலட்சம் ஆகிறது. அதே வேளையில், உருவாக்கப்பட்ட வீட்டு வசதிகள் 9.41 இலட்சம் எனவும் எஞ்சிய வீட்டு வசதிக் குறைவு 22.02 இலட்சம் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. 1.4.1995–இல் உள்ளவாறு மாவட்ட வாரியான வீடு இருப்பு தேவை மற்றும் வழங்கல் இடைவெளி பற்றி கீழே உள்ள அட்டவணை–1–இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை - I

1.4.1995–இல் உள்ளவாறு, மாவட்டங்களில் மதிப்பிடப்பட்டுள்ள வீட்டுவசதிக் குறைவுகள்

	மாவட்டம்	வீடு தேவைப்படும் மொத்த எண்ணிக்கை	உருவாக்கப்பட்ட வீட்டுவசதி அலகுகள்				குறைவு (கட்டம் 2-6)
			ஊரக வளர்ச்சி துறையை	வீட்டுவசதிப் பதிவாளரால்	தாட்கோ வினால்	மொத்தம்	
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	செங்கை எம்.ஜி.ஆர். ★	227908	42103	23749	4190	70042	157866
2.	தென் ஆர்க்காடு ★	316239	47744	40425	7056	95225	221014
3.	வட ஆர்க்காடு ★	322932	47103	30878	7653	85634	237298
4.	தருமபுரி	170834	19402	29845	3174	52421	118413

	மாவட்டம்	வீடு தேவைப்படும் மொத்த எண்ணிக்கை	உருவாக்கப்பட்ட வீட்டுவசதி அலகுகள் ஊரக வளர்ச்சி துறையால்	வீட்டுவசதிப் பதிவாளரால்	தாட்கோ வினால்	மொத்தம்	குறைவு (கட்டம் 2-6)
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
5.	பெரியார்	119499	20499	19021	2835	42355	77144
6.	கோயம்புத்தூர்	184854	22650	18714	2834	44198	140656
7.	தஞ்சாவூர் ★	395482	44950	48000	6047	98997	296485
8.	திருச்சிராப்பள்ளி ★	258698	36607	39619	8168	84394	174304
9.	புதுக்கோட்டை	96733	12492	17336	1863	31691	65042
10.	மதுரை ★	228835	38581	50853	5440	94874	133981
11.	இராமநாதபுரம் ★	245071	32070	50278	3488	85836	159235
12.	திருநெல்வேலி ★	245596	28911	29497	3650	62058	183538
13.	கன்னியாகுமரி	86258	4697	10590	1011	16298	69960
14.	சேலம் ★	211918	33622	28261	5686	67569	144349
15.	நீலகிரி	32255	3837	5042	1092	9971	22284
	மொத்தம்	**3143112**	**435268**	**442108**	**64187**	**941563**	**2201549**

பிரிக்கப்படாத மாவட்டம்

04. வழங்கல் பகுதியில், பல முகமைகள் வீட்டுமனைகளையும், வீடுகளையும் மிகுதியாக்கி வருகின்றன. அதாவது (1) இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் மற்றும் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டங்களின் கீழ் ஆதிதிராவிட வகுப்பினருக்கு, ஊரக வளர்ச்சி இயக்குநர் இலவசமாக வீட்டுவசதி செய்து தருகிறார். (2) கடன் மற்றும் உதவித் தொகை வாயிலாக வீட்டுவசதியை மேம்படுத்தும் ஊரக வீட்டுவசதித் திட்டத்தினைக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) செயற்படுத்துகிறார். (3) தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், 1989 வரை ஆதிதிராவிட வகுப்பினருக்கு வீட்டுவசதிக்கான உதவியினை பெற்றுத்தந்தது அதன் பின்னர் தாட்கோ திட்டமானது, ஊரக வளர்ச்சித்துறைத் திட்டங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டது. (4) பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு, குறைந்த வருவாய் பிரிவினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர், உயர் வருவாய்ப் பிரிவினர் ஆகியோருக்கு வீட்டுமனைகள் மற்றும் சேவைகள் திட்டமானது, குடியிருப்பு வீடுகள்/குடியிருப்புத் தளங்கள் கட்டித்தரும் பணியினைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மேற்கொண்டுள்ளது. (5) மீனவர்களுக்கு மீன் துறையானது வீடுகள் கட்டித் தருகிறது. (6) கைத்தறித் துறையானது, பணியிடத்துடன் கூடிய வீட்டினை அளிக்கிறது. (7) இதே போன்று, ஆசிரியர்களுக்கும், காவலர்களுக்கும் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கும், அரசு , வீடுகளைக் கட்டித் தருகிறது. (8) இதுதவிர, வருவாய், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட துறைகள் வாயிலாக வீட்டு மனைகள் அரசு வழங்குகிறது.

05. ஊரக வளர்ச்சித்துறையும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வீட்டுவசதி) 50:50 எனும் வீதத்தில் வீடு கட்டும் பணியினை மேற்கொண்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்போது, ஒவ்வொரு அமைப்பும் ஆண்டுதோறும் ஏறத்தாழ 40,000 வீடுகளைக் கட்டுகின்றன. தஞ்சாவூர், நாகை காயிதே மில்லத், திருவாரூர் ஏ.டி. பன்னீர் செல்வம், வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், தென்னார்க்காடு வள்ளலார், சேலம்,

திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வீட்டுவசதிக் குறைவு, கடுமையாக உள்ளது எனக் கூறலாம்.

கூட்டுறவு (வீட்டுவசதி) சங்கங்கள்

06. வீட்டு வசதிக் கூட்டுறவு சங்கங்கள் நகர்ப்புற மற்றும் ஊர்ப்புறப் பகுதிகளில் வீடுகள் கட்ட நிதியுதவி அளிக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையமானது, நகர்ப்புற மற்றும் ஊர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களைச் செயற்படுத்தும் ஒரு தலைமை அமைப்பாகும். இத்தலைமை அமைப்பானது, இதுவரை, (1978–79 முதல் 1994–95 வரை) ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 4,27,490 வீடுகளும், குறைந்த வருவாய் பிரிவினர் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கான திட்டங்களின் கீழ் 18,341 வீடுகளும், நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 1,40,163 வீடுகளும், ஊரகப் பகுதியில் மாநில வீட்டு வசதி 40,000 வீடுகளும் கட்ட நிதியுதவி அளித்துள்ளது. ஊர்ப்புறப் பகுதிகளில் உள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு வீடுகள் கட்ட ஊரக வீட்டு வசதித் திட்டமானது நிதியுதவிக்கு வகை செய்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், அரசு பொறுப்புறுதியின் கீழ் அட்கோவிலிருந்து பணம் கடன் பெறுவதுடன் அரசிடமிருந்து பகுதி நிதியுதவியும் பெறுகிறது. 1978–79–இல் 7,656 ஆக இருந்த கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையானது, 1994–96 இல் 4.42 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1988–89 முதல் தான் கட்டுமானம் செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையின் போக்கு நிலையாக இருந்தது.

ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான வீட்டு வசதி

07. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஆதிதிராவிடர் வகுப்பினர்/ஆதி திராவிடர் பழங்குடியினர் ஒரே தொகுதியாக சின்னஞ்சிறு குடியிறுப்புகள் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் இலவசமாகக் கட்டித்தரப்படுகின்றன. அப்போதுதான் அவர்கள் அனைவருக்கும் பொதுவான வசதிகள் செய்துதர இயலும். 1994–95 முடிவடையும் பத்தாண்டு காலத்தில் ரூ.594.50 கோடி செலவில் ஊர்ப்புறப் பகுதிகளில் 4.28 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் வருமாறு :

அட்டவணை II

செலவும் விளைவளவும்

ஆண்டு (1)	கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (2)	செலவு (கோடி ரூபாய்களில்) (3)
1984–85	28400	17.78
1985–86	19520	22.96
1986–87	59171	51.84
1987–88	48783	53.03
1988–89	68397	70.53
1989–90	41666	59.64
1990–91	47260	66.74
1991–92	40768	83.50
1992–93	14409	46.08
1993–94	20000	38.40
1994–95	40000	84.00
மொத்தம்	428374	594.50

08. மக்கள் தொகை உயர்ந்துகொண்டே இருப்பதால், பொதுவில், வீடுகளின் தேவையானது, உணரப்பட வேண்டியதாகும். வீடுகட்ட நிதியுதவிக்கான வாய்ப்புகள் கிராம புறப் பகுதிகளைவிட நகர்ப்புறப் பகுதிகளுக்கு அதிகமாக இருப்பதால், வீடில்லாதவர்களுக்கு வீட்டு மனைகளைக் கண்டறிவதில் கிராமபுற உள்ளாட்சி மன்றங்கள் துணை செய்யும் பங்கினை வகிப்பதுடன், அவர்களுக்கு நிறுவன நிபந்தனைக் கட்டுப்பாட்டுடன் கூடிய வீட்டு வசதித் திட்ட முறையிலான ஆதரவையும் ஏற்படுத்த வேண்டும். சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினர், அதாவது, ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிட பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் இன்னும் குறிப்பாக சொல்லுமிடத்து வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வபர் உள்ளாட்சி மன்றங்களின் முன்னுரிமை கவனிப்பைப் பெறுவர். ஊராட்சிகள் வீட்டு வசதியில் தேக்க நிலையை அகற்றவும், வீடுகட்டுவதில் அதிக அளவில் உள்ளூர் மக்களை ஈடுபடுத்தவும், ஒப்பந்தக்காரர்கள், மூலமல்லாமல், உள்ளூர் மக்களைக் கொண்டு வீடுகள் கட்ட வேண்டும். இது, ஊராட்சி ஒன்றியத்தின் சுமையைக் குறைக்கும். இந்தக் கட்டத்தில், உள்ளாட்சி மன்றங்களுக்குப் பின் வரும் அதிகாரங்களையும் கடமைகளையும் ஒப்படைக்கப் பரிந்துரைக்கப்படுகின்றன.

I ஊராட்சி

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனைகள் மற்றும் ஊரக வீட்டு வசதி திட்டங்கள்	(i)	வீடுகள் தேவையை மதிப்பிடுதல்
		(ii)	வீட்டு மனைகளுக்கான நிலங்களைக் கண்டறிதல் மற்றும் பகிர்வில் உதவுதல்
		(iii)	ஆ.தி.வ., ஆ.தி,ப., பி.வ. மற்றும் மி.பி.வ. மற்றும் சமுதாயத்தின் பிற நலிவுற்ற பிரிவினருக்கான ஊரக வீட்டு வசதியில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் பிற வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் இடம் பெற்ற வீடு இல்லாதவர்களைத் தெரிவு செய்தல்.
		(iv)	ஊரில் உள்ள வீடுகளுக்கான தேவை உயர்வைச் சரிசெய்ய ஊரக வீட்டு வசதியை மேம்படுத்துதல்.
		(v)	கூட்டுறவு அமைப்புகளும் தனியாரும் வீடுகட்ட அவர்களுக்கு உதவுதல்.

II. ஊராட்சி ஒன்றியம்

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குதல்	(i)	வீடு இல்லாதவர்களுக்கு மனைகளைக் கண்டறிவதில் ஊராட்சியுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல் மற்றும் அவ்வாறு கண்டறியப்பட்ட மனைகைளைக் கையகப்படுத்தி பகிர்வு செய்தல்.
2.	ஊரக வீட்டுவசதித் திட்டங்களைச் செயற்படுத்துதல்	(i)	வீட்டு வசதித் தரத்தை மேம்படுத்தவும், கட்டுமானச் செலவுகளில் சிக்கனமாக இருக்கவும் ஊராட்சிகளுக்கு வழிகாட்டல் / தொழில நுட்ப உதவியளித்தல்.

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
		(ii) வீட்டு மனைப் பகிர்வுக்காக/மேம்பாட்டுக்காக நிலத்தைக் வாங்குதல் ஊராட்சிகளும் நிதி முகமைகளும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.
		(iii) பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டுமானத்திற்காகக் கட்டடப் பொருள்கள் வழங்குதல்.
		(iv) வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்ற, பணிக்குழுக்களை அமைத்தல்.
3.	ஊர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களை மேற்பார்வையிடுதலும்	(i) கட்டுமானப் பணிகள்/தரத்தை ஆய்வு செய்தல் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடல் மற்றும் பொருள்கள் முதலியவற்றைப் பயன்படுத்துதல் மற்றும் வீட்டு மனைகள் மற்றும் வீட்டு வசதிக்கான பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துதல்.

III. ஊராட்சி

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	கிராமப்புற வீட்டு வசதிக்காக மாவட்டத்தில் திட்டமிடல்	(i) மாவட்ட கிராமப்புற வீட்டுவசதி தேவை குறித்து ஆய்வு செய்தல்
		(ii) கட்டட மையத்தை எடுத்துக் கொள்ளல் மற்றம் குறைந்த விலையில் தரமிகு வீடுகள், கட்டுமான வடிவமைப்பு மற்றும் பொருள்கள் மேம்படுத்துதல்.
		(iii) வீட்டு வசதித் தரத்தை உயர்த்துவதில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு / ஊராட்சிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனை / உதவி அளித்தல்.
2.	ஊர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களை ஆய்வு செய்தல்.	(i) வீட்டு வசதித் திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.

நிருவாக, நிதி மற்றும் சட்டச் சிக்கல்கள்

09. மேற்படி பரிந்துரைகள், கட்டட முகமையிலிருந்து மாவட்ட ஊராட்சி மேம்பாட்டு முகமையிலிருந்து மாவட்ட ஊராட்சிக்கு மாற்றுவதை மட்டுமே உள்ளடக்கியதாகும். எனவே, பணியாளர்கள் / அலுவலர்கள் அனைவரும் மாவட்ட ஊராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் வருவர். ஊராட்சி ஒன்றிய அளவில் ஒன்றியப் பொறியாளரும், அவருக்குத் துணையாக உள்ள பணியாளர்களும், ஆ.தி.ப., ஆ.தி.ப., பி.வ.மி.பி. வகுப்பினர்ளுக்கு, இ.நி.தி. மற்றும் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் ஒப்பந்த முறையில் வீடுகள் கட்டுவதற்கான தொழில் நுட்ப அறிவுரையை அளிப்பர்.

10. இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் பிற திட்டங்களின் கீழ் ஊர்ப்புறத்தில் வீடுகள் கட்ட கிடைக்கும் நிதிகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். ஒப்பந்தம், கணக்கு மற்றும் தணிக்கை நடைமுறைகள், அரசின் வழிகாட்டலுக்கிணங்க ஊராட்சி ஒன்றியங்களால் பின்பற்றப்படும்.

11. கட்டட மையமானது, சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒன்றாக இருப்பதாலும், மாவட்ட ஊராசிக்கு அதனை மாற்றுவதை பரிந்துரைகள் குறிப்பிடுவதாலும், மாவட்ட ஊராட்சித் தலைவரயே கட்டட மையத்தின் தலைவராகவும் இருக்கப் பரிந்துரைக்கிறோம். சங்கங்களின் (கட்டட மையங்கள்) துணை விதிகளுக்குத் தேவையான திருத்தங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

குடிநீர்

(இனம் - 11)

01. தேவைத் திட்டத்தில் ஊரகக் குடிநீர்த் திட்டம் முன்னுரிமை பெற்றதொரு திட்டமாக விளங்குகிறது. தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் அவதியுறும் தமிழகத்தில், ஊரகக் குடிநீர் வழங்கு திட்டமானது மாநில அரசின் முன்னுரிமை அடிப்படையிலான பணிகளில் ஒன்றாகும். தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டம் 1994 – இல், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றுக்கு குளிப்பதற்கும் துவைப்பதற்கும் தேவையான நீரைப் பெறுவதற்கான நீராதாரங்களை உருவாக்க வழக்கத்திற்கு மாறாகத் தக்க அதிகாரம் (பிரிவு 110 ஜி) வழங்கப்பட்டுள்ளது. ஆனால் குடிநீர்த் திட்டங்களை உருவாக்கி பராமரிப்பதற்கான திட்டவட்டமான அதிகாரங்கள் வழங்கப்பெறவில்லை. மேலும் இச்சட்டம், வேளாண்மை அல்லாத பிற பயன் பாடுகளுக்கு, நீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல் ஆகியன உள்ளிட்ட பொதுப் பயன் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்வதனையும் தடை செய்கிறது. (பிரிவு 111 மற்றும் 115) . வெளி நிதியுதவி, மைய அரசின் நிதியுதவி, வறட்சி நிவாரணப் பணிகள் ஆகியவற்றின் கீழ் ஊரகக் குடிநீர் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (த.கு.வ.வா) மேற்கொண்டு வருகிறது. இதுவரை ஊராட்சி அமைப்புகள், கிராமக் குடிநீர் திட்டங்களை செயல்படுத்துவதில் நேரடியாக ஈடுபடுத்தபடவில்லை. அவை மாவட்ட ஆட்சித்தலைவர்களின் மேற்பார்வையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொறியியல் கூட்டுறவு இணையம் (Encofed), தனியார் முகமைகள் மூலமே நேரடியாக செயல்படுத்தப்படுகின்றன. எங்கும் பரந்து நிற்கும் அமைப்பினைக் கொண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அலுவலர்கள் குடிநீர் ஆதாரங்களை இனங்கண்டறிவதுடன் குடிநீர்த் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தியும் வருகின்றனர். (ஆழ்குழாய்க் கிணறுகளை நிறுவுதல், முழுமையான குடிநீர்த் திட்டங்களை அமைத்தல்) 1982 ஆம் ஆண்டு முதல், கையிறைப்பான், மின் இறைப்பான் திட்டங்களைப் பராமரிக்கும் பணி ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு மாற்றப்பட்டது. மாவட்ட நிலையிலான தொழில்நுட்பப் பிரிவு (Technical Cell) கையிறைப்பான், மின் இறைப்பான் திட்டங்களைப் பராமரிக்கத் தேவையான தொழில் நுட்ப உதவிகளை வழங்குகிறது. இத்தொழில் நுட்பப் பிரிவில் தொழில் நுட்ப அலுவலர்கள் பொதுவாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து மாற்றுப் பணி அடிப்படையில் (Deputation) பெறப்படுகின்றனர். மற்றவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்படுகின்றனர். ஊராட்சி மன்றங்கள், ஊராட்சிகளின் தேவைகளை மட்டுமே நிறைவு செய்யும் கையிறைப்பான், மின் இறைப்பான்களைப் பராமரிக்கின்றன. கூட்டமைவுக் குடிநீர்த் திட்டங்கள் பொதுவாகத் தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

02. குடிநீர் வழங்கும் செயல்பாடாவது, குறிப்பான நான்கு வகைச் செயல்பாடுகளைக் கொண்டதாகும். அவை யாவன; அ) குடிநீர் ஆதாரங்களை இனங்கண்டறிதல், உருவாக்கல் அதனை செயற்படுத்துதல். ஆ) குடிநீர் ஆதாரங்களைப் பராமரித்தல். இ) ஊரகக் குடிநீர்த் திட்டங்களை நடை முறைப்படுத்துதலைக் கண்காணித்தல்; மேலும் ஈ) பயனாளர்களிடமிருந்து குடிநீர்க் கட்டணங்களை வசூலித்தல். ஊராட்சிகள், இச்செயல்பாடுகளில் பிற அமைப்புகளைக் காட்டிலும் சிறந்த அனுபவப் பழக்க அறிவு பெற்றுள்ளன. ஊராட்சிகளுக்கு மட்டுமேயான குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரை, அத்தகைய திட்டங்களை இனங்கண்டறிந்து உருவாக்கிப் பராமரிப்பதாவது ஊராட்சிகளுக்கு எளிதாகும். மேலும், ஊரிலுள்ள வீடுகளிலிருந்து குடிநீர்க் கட்டணங்களை வசூலிப்பதற்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கபெறலாம். அத்தகைய ஆதாரங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்கு பயன்படுவதாக அமையும்போது திட்டங்களைச் செயற்படுத்துதல், கண்காணித்தல் உள்ளிட்ட அத்தகைய செயற்பாடுகள் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பாகும். அத்தகைய ஆதாரங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியதாக அமையும்போது, பெரிய குடிநீர்த் திட்டங்களில் மாவட்ட ஊராட்சி (District Panchayat)) நீராதாராங்களை இனங்கண்டறிந்து, உருவாக்குவதோடல்லாமல், திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்திடத் தேவையான நிதியினைத் திரட்டுவதிலும் முக்கிய பங்காற்ற வேண்டியிருக்கும். குடிநீர்த் திட்டம் ஒன்று, ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்குப் பயனளிப்பதாக அமையும்போது, அத்தகைய திட்டங்களை உருவாக்கி, செயற்படுத்தி, பராமரிக்கும் பணியினை மேற்கொள்ளத்தக்க முகமையாக மாநில அளவிலான தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியம் போன்ற அமைப்புகள் அமைவனவாகும். பராமரிப்புப் பணியினை ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்கள்/ மாவட்ட ஊராட்சிகள் மேற்கொண்டிருப்பினும் நீர்கட்டணம் வசூலிப்பதனை ஊராட்சிகளே ஏற்கவேண்டும். ஊராட்சி ஒன்றியம் / மாவட்ட ஊராட்சிகளால் பராமரிக்கப்படும் திட்டங்களைப் பொறுத்து குடிநீர்க் கட்டணத்தில் உரிய விகிதாச்சார அடிப்படையில் அவற்றுக்குச் செலுத்த வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்தல், கண்காணித்தல், பராமரித்தல் ஆகியவற்றுக்குத் தேவையான தொழில்நுட்ப அலுவலர்களை மாற்றுப்பணி அடிப்படையில் அனுப்பக் கருதப்பட்டுள்ளது. அனைத்துக் குடிநீர் ஆதாரங்களும் முழுமையாக ஊராட்சி அமைப்புகளால் பராமரிக்கப்பட வேண்டுவது இன்றியமையாததாகும் எனக் கருதப்படுகின்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தொழில்நுட்பப் பிரிவு, மாவட்ட ஊராட்சியின் மேற்பார்வை கட்டுப்பாட்டில் அமைய வேண்டும். மாவட்ட அளவில் ஊராட்சி அமைப்புகளுக்கு வேண்டப்பெறும் தொடர்பும், ஒருங்கிணைப்பும் மாவட்ட நிலை அலுவலர்களுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நீர்வள ஆதார நிறுவனத்தைச் சேர்ந்த நிலத்தடி நீர்க் கோட்டம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆகியவற்றின் அலுவலர்களுடனும் மாவட்ட ஊராட்சியின் தலைமைச் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்படுவனவாகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாவட்ட ஊராட்சிகளுக்குத் தொழில்நுட்ப அறிவுரை அமைப்பாகச் செயற்படும்.

03. மாநில அரசால் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள ஒப்பிய பொறுப்புகளை அறிந்துள்ள நிலையில், மாநில திட்டக் குழுவானது, சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் குடிநீர் வசதிகள் வழங்கப்படவேண்டும் என்றும், குடிநீர் ஆதாரங்கள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்ட வேண்டும் என்றும், பயனாளர் கட்டணம் செலுத்தும் திட்டங்கள் பயன் அளிக்கத் தக்க வகையிலும், சிக்கன முறையிலும், பயனுறுதி விளைக்கத் தக்க முறையிலும் அமைக்கப்படவேண்டும் என்றும் மாநிலத் திட்டகுழு கருதுகின்றது. அதன் அடிப்படையில்,மாநில திட்டகுழுவானது ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளுக்கு பின்வரும் செயற்பாடுகளை (activities) ஒதுக்கப்பட பரிந்துரைக்கின்றது.

I. ஊராட்சி

வ. எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	குடிநீர் வழங்கும் வசதி மேம்பாடு	(1) கிணறுகள், தொட்டிகள் அமைத்தல் மற்றும் தன்னுடைய மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றம் மாவட்ட ஒப்படைக்கப்பெறும் ஊராட்சிக் ஊராட்சி மற்றும் அரசால் குடிநீர்த் திட்டங்களை மேற்கொள்ளல்.
		(2) ஊராட்சி ஒன்றியங்களை ஈடுபடுத்தி குடிநீர்த் திட்டங்களையும் அமைவிடங்களையும் கண்டறிதல், திட்ட மதிப்பீடு தயாரித்தல், திட்டங்களை உருவாக்குதல்.
		(3) திறந்த வெளிக் கிணறுகளில் காலமுறை தோறும் குளோரின் இட்டுச் சுத்தம் செய்தல், ஊரிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் முறையாகத் தண்ணீர் வழங்குவதனை உறுதி செய்தல்.
2.	ஊராட்சித் குடிநீர்த் திட்டங்களைக் கண்காணித்தல்	(1) திட்ட முன்னேற்றம் குறித்து அறிக்கை அளித்தலும்; திட்டச் செயலாக்கத்தைக் கண்காணித்தலும்.
3.	குடிநீர்த் திட்டங்ளைப் பராமரித்தல்.	(1) குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்தலும் இறைப்பான் இயக்குபவர்கள் போன்றவர்களைப் பராமரிப்புப் பணிக்காக அமர்த்துதலும்.

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
4.	குடிநீர்த் கட்டணம் வசூலித்தல்	(1)	குடிநீர்த் திட்டங்கள் ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் / மாவட்ட ஊராட்சிகளால் இயக்கி பராமாக்கப்பட்டு வந்தாலும், பயன், சிக்கனம் ஆகியவற்றினைக் கருதி குடிநீர்க் கட்டணங்கள் ஊராட்சிகளிடமே ஒப்படைக்கலாம். விகிதாச்சாரக் குடிநீர்க் கட்டணத் தொகையை ஊராட்சிகள் காலமுறைதோறும் அத்திட்டங்களை இயக்கி, பராமரிக்கும் நிறுவனத்திற்குச் செலுத்தலாம்.

II. ஊராட்சி ஒன்றியங்கள்

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	குடிநீர் வழங்கும் வசதி மேம்பாடு	(1)	குடிநீர்த் திட்டங்களுக்கான ஊர்களின் திட்டங்களுக்குரிய அமைவிடங்கள் , நீராதாரங்கள் ஆகியவற்றைக் கண்டறிதலும் முன்னுரிமை அடிப்படையில் முடிவு செய்தலும்.
		(2)	திட்டங்களை உருவாக்குதல் அவற்றுக்கு தொழில்நுட்ப நிர்வாக நிதி ஏற்பினை உரிய அதிகாரகளிடமிருந்து பெறுதல்.
		(3)	ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்கான திட்டங்களை (கூட்டிணைவு குடிநீர் வழங்கு திட்டம்) உரிய தொழில் நுட்பக் கூட்டுடன் செயல்படுத்துதல்.
		(4)	நீர்மாதிரிகளைச் (Samples) எடுத்தலும், பரிசோதித்தலும், கூட்டிணைவான குடிநீர் திட்டங்களுக்கும், ஊராட்சிக்களுக்கும் தண்ணீர் சுத்திகரிப்புக்கான பொருட்களை வழங்குதல்.
2.	ஊரகக் குடிநீர்த் திட்டங்களைக் கண்காணித்தல்.	1)	பணிகளின் முன்னேற்றம், தரத்தினை மேற்பார்வையிடலும், கண்காணித்தலும்.
3.	குடிநீர் அமைப்புகளைப் பராமரித்தல்.	1)	திட்டங்களைப் பராமரித்தல், ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி களுக்கான திட்டங்களின் குடிநீர்க் கட்டணத்தை ஊராட்சிகள் மூலமாக வசூலித்தல்.

III. மாவட்ட ஊராட்சி

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	குடிநீர் வழங்கு வசதி மேம்பாடு மற்றும் கண்காணித்தல்	1)	ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங் களுக்கான பெரிய குடிநீர்த் திட்டங் களைத் கண்டறிதலும், உருவாக்குதலும்.
		2)	முழுமையான குடிநீர்த் திட்டங்களைக் கண்காணித்தல்.

நிர்வாக, தொழில் நுட்பச் சிக்கல்கள்

04. இதுவரையில், குடிநீர்த் திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தி பராமரிக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கே உரிய தனிப் பொறுப்பாக இருந்து வந்தது. மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகள் செயற்படத் தொடங்கியுள்ள நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நேரடிப் பொறுப்பானது ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்குரிய திட்டங்களுக்கு மட்டும் என வரையறுக்கப்பட்ட வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஊரக, நகரக உள்ளாட்சிகளுக்கான ஏதேனும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், தொழிற்சாலைப் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டங்கள், மாவட்டங்களுக்கிடையேயான பெரிய குடிநீர்த் திட்டங்கள் ஆகியவற்றைப் பராமரிக்கலாம். மாவட்ட நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஆழ் குழாய்க் கிணறு அமைக்கத் தேவையான ஆழ்துணைக்கருவி, புவியியல் தொழில்நுட்பக் கருவிக் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இக்கருவிகள் தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமே இருக்கும். ஊராட்சிகள் தங்களுடைய குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளும்போது இக்கருவிகளைபயன்படுத்தலாம். இவ்வாறு, பிற திட்டங்கள், ஊராட்சி அமைப்புகளின் நிருவாகத்தின் கீழ் இருத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட அதிகார, பொறுப்பு மாற்றங்களுடன், மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் நிலையில் நிருவாகத் தொடர்புகள் பெரிதும் வேண்டப் பெறுகின்றன. குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிதல், திட்ட உருவாக்குதல், திட்ட செயற்பாடு ஆகியவற்றில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொழில்நுட்பத் திறமைகளைக் கொண்டுள்ளது. மாவட்ட ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியங்களும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொழில்நுட்பத் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குடிநீர் ஆதாரங்கள், கையிறைப்பான்கள், மின் இறைப்பான்கள் ஆகியவற்றின் பராமரிப்பினைப் பொறுத்தவரை ஊராட்சிகளின் பணியாளர்கள் நல்லமுறையில் அவற்றைப் பராமரிக்க இயலும். முழுமையான குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்து, தற்போது திட்டங்களை மேற்பார்வையிடும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணியாளர்கள், ஒன்றியங்களுக்கு / ஒப்படைப்பு செய்யப் பெறலாம் / மாற்றுப் பணியில் அனுப்பப் பெறலாம். ஊராட்சி அமைப்புகள், திட்டங்களைப் பராமரிப்பதற்காக பணிமாற்றல் / மாற்றுப்பணி அடிப்படையில் அனுப்பப்பெற்ற தொழில்நுட்பப் பணியாளர்களை நிருவகிக்கக் கூடிய நிலையில் இருக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தொழில்நுட்பப் பிரிவில் உள்ள பணியாளர்கள் மாவட்ட அளவில் சீராக இணைவான தன்மையில் ஆணைகளை ஏற்றுத் தற்போது தொழில்நுட்பப் பிரிவு நிறைவேற்றிவரும் பணிகளை மேற்கொண்டு நிறைவேற்ற மாவட்ட ஊராட்சிகளுக்கு மாற்றப்படவேண்டும்.

நிதிச்சிக்கல்கள்

05. மாநில அரசு, வரவு செலவு திட்டத்தின் கோரிக்கை எண்.27 (ஊரக மேம்பாடு) கோரிக்கை எண்.48 (குடிநீர் வழங்கல்) ஆகியவற்றின்கீழ் நிதியினை வழங்குகின்றது. இந்த நிதி, ஊரக குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஊராட்சி அமைப்புகளுக்கோ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கோ வழங்கப்பட்டு வருகின்றது. அரசின் திட்டம் சாரா பணிகள், திட்டம் சார்ந்த பணிகள், மைய அரசின் ஆதரவிலான 100% மானியத் திட்டங்கள், மைய அரசின் ஆதரவுடன் மைய மாநில அரசுக்கிடையே மானியத்தைப் பகிர்ந்துகொள்ளும் திட்டங்கள் ஆகியவற்றின் வாயிலாக நிதி உதவி கிடைக்கப் பெறுகிறது. கீழ்க்காணும் அட்டவணை, நீராதாரங்களை உருவாக்கல், குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்தல் ஆகியவற்றுக்கு 1994–95, 1995–96ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டங்களின் படியும் 1996–97–ம் ஆண்டுக்கான திருத்திய வரவு–செலவு திட்டத்தின் படியும் அமைந்த செலவினங்களைக் குறிப்பிடுவதாகும்.

	1994-95	1995-96	1996-97
	(ரூபாய் இலட்சத்தில்)		
கோரிக்கை எண்.27			
ஊரக மேம்பாடு	829.74	862.18	885.02
கோரிக்கை எண்.48			
குடிநீர் வழங்கல்	7880.70	7735.57	14054.15
மொத்தம்	8710.44	8600.75	14939.17

இவற்றையன்றி பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டப் பணி ஒன்றை (Decentralised District Planning Schemes) அரசு நடைமுறைப் படுத்துகின்றது. இதன்கீழ் குடிநீர்த் திட்டப் பணிகள் முன்னுரிமை ஒதுக்கீடுகளைப் பெறுகின்றன. இங்கே குறிப்பிட்டுள்ள செலவினங்களில் ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் அவற்றின் சொந்த நிதியிலிருந்து செலவழிந்த தொகை அடங்காததாகும். குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு "பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டப் பணிகளின்கீழ் ஒப்பளிக்கப்பெற்ற தொகைகள் வருமாறு·

வரிசை எண்.	ஆண்டு	ஊரகக் குடிநீர்க் திட்டங்களுக்கு ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்)	மொத்த ஒதுக்கீட்டில் சதவீதம்
1.	1993–94	224.28	11.21
2.	1994–95	730.62	18.62
3.	1995–96	1180.37	23.45
4.	1996–97	★	★

★ மாவட்டங்களிலிருந்து நிதி ஒதுக்கீடு விவரங்கள் பெறப்பட வேண்டும்.

கோரிக்கை எண். 27 (ஊரக மேம்பாடு)

வரிசை எண்.	கணக்குத் தலைப்பு	1994-95 கணக்குகள் (ரூபாய் இலட்சத்தில்)	1995-96ன் திருத்திய மதிப்பீடு	1996-97ன் திருத்திய மதிப்பீடு
ஊரகக் குடிநீர்த் திட்டம்				
1.	ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக செயலாக்கப்படும் குடிநீர்த் திட்டங்கள் (மானிய உதவி)	99.92	100.00	100.00
2.	கையிறைப்பான்கள், மின் இறைப்பான்களைப் பராமரிக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதியுதவி.	167.28	197.67	220.51
3.	கையிறைப்பான்கள் பராமரிப்பு	317.48	319.07	319.07
4.	மின் இறைப்பான்கள் பராமரிப்பு	245.06	245.44	245.44
	மொத்தம்	**829.74**	**862.18**	**885.02**

கோரிக்கை எண்.48
(குடிநீர் வழங்கல்)

வரிசை எண்.	கணக்குத் தலைப்பு	1994-95 கணக்குகள்	1995-96 திருத்திய மதிப்பீடு	1996-97ன் திருத்திய மதிப்பீடு
		(ரூபாய் இலட்சத்தில்)		
	ஊரகக் குடிநீர்த் திட்டம்			
I.	**திட்டம் சாராதவை :**			
1.	ஊரகக் குடிநீர் வழங்கல், ஆழ் குழாய் கிணறுகள் மின் இறைப்பான்களைப் பராமரிப்பு தற்குரிய நிருவாகப் பணியாளர்கள் (நெடுஞ்சாலை ஊரகப்பணி)	4.82	5.44	5.59
2.	எட்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்			
II.	**மாநில அரசுப் பணிகள்**			
	அ. குறைந்தபட்சத் தேவைத் திட்டம்	2500.00	2500.00	2650.00
	ஆ. சிறப்புத் ஆக்கத் திட்டத்தின் கீழ்க் குறைந்தபட்சத் தேவைத் திட்டம் (ஊரகக் குடிநீர்த் திட்டம்)	820.00	820.00	850.00
3.	எட்டாவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் :			
III.	**மைய அரசு நிதியுதவி பெற்றது.**			
	அ. விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டம் (மானிய உதவி)	2913.00	10.00	0.01
	ஆ. சிறப்புத் துணைத் திட்டத்தின கீழ் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டம் (மானிய உதவி)	971.00	–	–
4.	மாநில மத்திய அரசுகள் பகிர்ந்து கொள்ளும் திட்டங்கள் :			
	அ. அதிக அளவு ஃபுளூரைடால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான முழுமையான குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் (மானிய உதவி)		3359.84	2298.54
	ஆ. குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின் கீழ் உவர்நீரால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு உவர்ப்பை			

	கட்டுபடுத்த பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்	–	640.16	0.01
5.	பொதுத்துறை நிறுவனங்களுக்கும் பிற நிறுவனங்களுக்கும் உதவி			
	1. திட்டம் சாரா பணிகள்			
	அ. முழுமையான குடிநீர்த் திட்டங்களைப் பராமரிக்க த.கு.வ.வாரியத்திற்கு மானியம் (மானிய உதவி)	–	–	1500.00
	எட்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் :–			
	11. மாநில அரசுப் பணிகள் :			
	ஆ. முழுமையான குடிநீர்த் திட்டங்களைத் சீர்படுத்த த.கு.வ.வாரியத்திகு மானிய உதவி	–	–	1250.00
	இ. ஊராட்சிகளின் குறைந்தபட்சத் தேவைத் திட்டத்திற்காக மின் இறைப்பான்களை மேம்படுத்த த.கு.வ. வாரித்திற்கு மானியம் (மானிய உதவி)	–	–	3000.00
6.	மாநில மைய அரசுகள் பகிர்ந்து கொள்ளும் திட்டங்கள்			
	அ. விரைவுப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் திட்டத்தன் கீழ் உவர்நீரை நன்னீராக்கும் அமைப்புகளை நிறுவ த.கு.வ.வாரியத்திற்கு உதவி (மானிய உதவி)	671.00	403.14	2500.00
	மொத்தம்	**7880.00**	**7738.57**	**14054.15**

ஆதாரம்: தமிழ்நாடு அரசின் வரவு–செலவு ஆவணங்கள் (1996–97)

06. மேற்காணும் அட்டவனைகளிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான குடிநீர்த் திட்டங்கள் ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் துறைகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதனை அறியலாம். குடிநீர்த் திட்டங்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன. அ. ஊராட்சி அமைப்புகளால் செயற்படுத்தக்கூடிய திட்டங்கள். ஆ. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தொடர்ந்து செயல்படுத்தத் கூடிய திட்டங்கள். இந்த வகைப்படுத்துவதில், எல்லாவகையான குடிநீர்த் திட்டங்களுக்கும் நிதி அளிக்கும் முறையினையும், திட்ட முன்னேற்றம் பற்றி பல்வேறு அதிகாரிகளுக்கு அறிக்கை அளிப்பதையும் எளிமைப்படுத்துகிறது.

07. அனைத்து குடியிருப்புகளுக்கும் தேவையான முழுமையான அளவு (ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர்) குடிநீர் வழங்குவது என்பதே மாநில அரசின் முன்னுரிமைப் பணியாகும். 1992ம் ஆண்டு மேற்கொள்ளப் பெற்ற கணக்கெடுப்பின் அடிப்படையில், 1996ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் நிலவரப்படி, மொத்தமுள்ள 66,631 குடியிருப்புகளில், 33.764 குடியிருப்புகள் முழுமையாக (ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் அல்லது அதற்கு மேலும்) குடிநீர் வசதி பெற்றவை என்று அரசுக்கு மதிப்பீடு செய்துள்ளது. எஞ்சிய குடியிருப்புகளில் 154 குடியிருப்புகளில் 1 கி.மீ. தொலைவுக்குள் குடிநீர் ஆதாரம் இல்லை. 12,615 குடியிருப்புகளில் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 1 முதல் 10 லிட்டர் வரையிலான குடிநீர் வசதி உள்ளது. 20,098 குடியிருப்புகளில் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 10 முதல் 40 லிட்டர் வரையிலான குடிநீர் வசதி உள்ளது என்றும் மதிப்பீடப் பெற்றுள்ளது. எனவே மாநில அரசு, ஊராட்சி அமைப்புகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் கீழ்காணும் முன்னுரிமை அடிப்படையில் நிதியினை ஒதுக்கீடு செய்ய முடியும்.

	முன்னுரிமை அடிப்படை	குடிநீர் வசதி அளிக்கப்படவேண்டிய குடியிருப்புகளின் எண்ணிக்கை
1.	நீர் ஆதாரம் இல்லாதவை	154
2.	1 முதல் 10 லிட்டர் வரை (ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு)	12,615
3.	11 முதல் 40 லிட்டர் வரை (ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு)	20,098

மேற்கண்ட முன்னுரிமை அடிப்படையில் ஊராட்சிகளை வகைப்படுத்தலானது குடிநீர்த் திட்டங்களை உருவாக்க நிதி ஒதுக்கீடு அளிப்பதில் பின்பற்றத்தக்க கொள்கையாக அமைவதாகும்.

08. மாநிலத்தில் 1,07,493 ஆழ்குழாய்க் கையிறைப்பான்களும், 36,541 வடிமுனைக் (Filter Point) கையிறைப்பான்களும், 29,445 மின் இறைப்பான்களும் உள்ளன. இவ்வாதாரங்களைப் பராமரிப்பது, புதிய ஆதாரங்களை உருவாக்குவது போன்று முக்கியமானதாகும். குடிநீர்த் திட்டங்களைப் பராமரிக்க அமையும் செலவினம் உள்ளபடியாக அரசின் செலவில் முதல் செலவாக இருத்தல் வேண்டும். மாநில நிதி ஆணையம் இத்தொடர்பில் கருதி தனது பரிந்துரையை வழங்கியிருக்கும் என்று மாநில திட்டக்குழு நம்புகிறது. இருப்பினும் இந்த ஆதாரங்களுக்கான பராமரிப்புச் செலவினம் முற்றிலுமாக மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மாநிலத் திட்டக்குழு பரிந்துரை செய்கிறது.

09. எதிர்காலங்களில் மூன்று அடுக்கு நிலையான ஊராட்சி அமைப்புகளில் நிதி நடவடிக்கைகள் மிகப் பெரிய அளவில் உயரும். சரியாக நிதி சரிபார்ப்புக்கு ஊராட்சி அமைப்பின் அனைத்துப் பணிகளும் தொடர்ச்சியான உடனிகழ் தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். எனவே, உள்ளாட்சி நிதித் தணிக்கைப் பிரிவை வலுப்படுத்த வேண்டுவது தேவையாகும்.

சட்டச் சிக்கல்கள்

10. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சட்டம் 1970, சென்னை பெருநகர் நீங்கலான பிற ஊரக நகரப் பகுதிகளில் குடிநீர், வடிகால் வசதிகளை முறைப்படுத்தவும், மேம்படுத்தவும் வகைசெய்கின்றது. இச்சட்டம் ஊரக பகுதிகளில் குடிநீர்த் திட்டங்கள் தொடர்பான ஆய்வு திட்டமிடல், செயல்படுத்தல் பராமரிப்பு ஆகியவற்றில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குமிடையே வேண்டப்படும் சட்டத் தொடர்புகளை அளிக்கின்றது. இருப்பினும் இச்சட்டத்திற்கு சிறு திருத்தங்கள் வேண்டப் பெறுகின்றன.

(1) மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 2 (7) இல் பொருள் விளக்கம் செய்யப்பட்டவாறு உள்ளாட்சி என்பதில் மாவட்ட ஊராட்சியும் அடங்கும் விதத்தில் திருத்தம் செய்ய வேண்டும். (2) மேலும் பிரிவு 2 (7) (iii) இல் "

தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1958 " என்பதற்கு பதிலாக தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1994 என அமையும் வகையில் திருத்த வேண்டும். (3) தொழில் நுட்ப பொருளில் அடிப்படையில் நடைமுறைபடுத்தத் தக்க குடிநீர்த் திட்டங்களை தெளிவு செய்து செயற்படுத்தும் உரிமை ஊராட்சி அமைப்புகளுக்கு அமையும் வகையில் பிரிவு (27) நீக்கப்படவேண்டும். (4) உள்ளாட்சி அமைப்புகள் நடைமுறைப்படுத்த கூடிய குடிநீர்த் திட்டங்களைக் கண்டறிதல், ஆய்வு செய்தல், திட்டமிடல், செயற்படுத்தல் ஆகியவற்றில் உரிய உரிமைபெறும் வகையில் இயல் vi இன்பிரிவு 18 முதல் 26 வரை பொருத்தமான முறையில் திருத்தப்படவேண்டும். (5) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஊரக நகரப் பகுதிகளிலமைந்த உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களை செயற்படுத்தவதால், இவ்வுள்ளாட்சி அமைப்புகளில் சார்பாளர்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால்–வாரிய அமைப்பில் உறுப்பினர் பதவி நிலை அளிக்கப்படவேண்டும். இதன்படி வாரியத் சட்டத்தின் பிரிவு–4இல் மாவட்ட ஊராட்சியைச் சார்ந்த 2 தலைவர்களையும், ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 5 தலைவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய இயக்குநர் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாக அமையலாம். தமிழ் அகரவரிசைப்படி அவர்கள் சுழற்சி முறையில் தேர்வு செய்ய பெறலாம்.

11. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958, ஊராட்சிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க முன்னரே வகை செய்துள்ளது. தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1994–இல் (சட்டம் 21, 1994) திருத்தம் வேண்டப்பெறும் சில காப்புரைகள் உள்ளன. (1) பிரிவு 110 (எ) இல் குடிநீரை ஒரு செயல்நோக்கமாகச் சேர்த்திடவேண்டும். (2) பிரிவு 111, 115 ஆகியவற்றின் காப்புரைகளை நீக்கிட வேண்டும். இது ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர்த் திட்டங்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்ள உறுதுணைபுரியும்.

12. தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரிய சட்டம் தமிழ்நாடு உள்ளாட்சி சட்டம் ஆகியவற்றில் திருத்தம் மேற்கொள்ள அளிக்கப்பட்டுள்ள மேற்காணும் கருத்துரை இச்சட்டங்களில் தற்போதுள்ள முரண்பாடுகளைச் சரிசெய்யும்.

விறகு மற்றும் தீவனம்

(இனம் . 12)

01. எரிபொருள், தீவனம் மற்றும் வெட்டு மரம் ஆகியவற்றுக்கான காடு வளர்ப்புத் திட்டம் முக்கியமாக ஊரகத் தொழில் செறிந்ததாகும். இப்பணிகளுக்கானச் செலவில் கூலியாகக் கிட்டத்தட்ட 80 விழுக்காடு செல்கிறது. எரிபொருளுக்கான மரத் தோட்டத் திட்டம், எரிபொருள் பற்றாக்குறையான மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. எரிபொருளுக்குரிய மரத் தேவையைப் நிறைவு செய்வதற்கு வனத்துறையானது, சமூகக் காடுவளர்ப்பு, இடைபடு காடுவளர்ப்பு, மற்றும் விரிவான காடுவளர்ப்பு போன்ற திட்டங்களைச் செயல்படுத்துகின்றது. இடைபடு காடு வளர்ப்பு திட்டமானது வனப்பகுதியையும், பொதுத் தரிசு நிலங்களையும் பயன்படுத்தித் தீவனப் பெருக்கம் (புற எல்லையில்) விறகு மரம் (நடுப்பகுதியில்) மற்றும் வெட்டு மரம் (உள்பகுதி) ஆகியவற்றை அதிகரிக்க கருதியுள்ளது. இந்தத் திட்டத்தில் வனத்தைச் சூழ்ந்த பகுதியில் வசிக்கும் உள்ளூர் மக்களை ஈடுபடுத்துவதால் அது அவர்களுக்கு கூடுதலான வேலைவாய்ப்பையும் வருவாயையும் உருவாக்குகிறது. மரங்கள் நடத் தொடங்கும் காலத்தில் வேலைவாய்ப்பையும் அறுவடை காலத்தில் உற்பத்தி பொருள்களை அளிப்பதன் வாயிலாக இத்திட்டத்தின் பலன் உள்ளூர் மக்களுக்கு நேரிடையாகச் சென்றடைகிறது. வேளாண்மைத் துறையும், ஊரக வளர்ச்சித் துறையும் வேளாண்காடு வளர்ப்புத் திட்டத்தைச் சமுதாய / ஊராட்சி / ஊராட்சிஒன்றியத்திற்குரிய தரிசு நிலங்களிலும், குளங்களிலும் முறையே செயல்படுத்தி வருகின்றன.

02. தீவனப் பெருக்கமும் உற்பத்திப் பண்ணைகளும் கால்நடைப் பராமரிப்புத் துறை திட்டங்களின் இன்றியமையா கூறாக உள்ளன. வேளாண் மற்றும் வனத் துறைகளும் கூட தீவன மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்கின்றன. தீவனம் மிக இன்றியமையாததாக உள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகமும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமும் தீவன ஆராய்ச்சியை மேற்கொள்கின்றன. வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும், தீவன ஆராய்ச்சியை ஒரு குறிப்பிட்ட அளவில் எடுத்துக் கொள்கிறது.

03. கால்நடை பாராமரிப்புத் துறையானது மாநிலம் முழுவதிலும் தீவன மேம்பாட்டு நடவடிக்கைகளான தீவனப் பெருக்கம், பெருகி வரும் தேவையை வழங்கி நிறைவு செய்தல் ஆகியவற்றில் சிறப்புக்கவனம் செலுத்துகின்றது. நிலப்பரப்பும், பாசன வசதியும் ஒரளவே இருப்பதால் தமிழ்நாட்டின் விவசாயிகள் தீவனப் பயிர்கள் வளர்ப்பதைக் காட்டிலும் வணிக மற்றும் உணவுப் பயிர்களை வளர்ப்பதிலேயே தீவிரமாக உள்ளனர். இருப்பினும், அரசே தொடங்கி நடத்தும் தீவன மேம்பாட்டு நடவடிக்கையைக் கால்நடைக்குரிய சொந்தக்காரர்கள் தங்களின் தேவையை நிறைவு செய்து கொள்ள தீவனப் பயிரிடுதலை மேற்கொள்ள வேண்டும். இத்துறையானது தீவனக்கன்றுகள், தீவன மர நாற்றுகள், தீவன விதைகள் முதலியனவற்றைப் பல்வேறு திட்டங்களின் மூலம் வழங்கி வருகின்றது.

04. தீவன உற்பத்தியைப் பெருக்குவதன் பொருட்டு உலக வங்கி நிதியுதவி பெற்ற கால்நடை மேம்பாட்டுத் திட்டம், ஐரோப்பிய பொருளாதாரத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாக நல்லதரமான தீவன விதைகள், நாற்றுகள் மற்றும் தீவனத் தழைகளை விவசாயிகளுக்கு வழங்குகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள மாவட்டத் தீவன வளர்ச்சிக் குழுவின் பணியாளர்கள் தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவியையும் விவசாயிகளுக்கு அளிக்கிறார்கள். இவ்வாறு மாநிலத்தில் இன்றியமையாப் பிற பயிர்களின் உற்பத்திக்கு பாதகமின்றி, உற்பத்தியும் வளர்ச்சியும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களால் பெருக்கப்படுகிறது. பால்பண்ணை மேம்பாட்டு நடவடிக்கைகள் இத்துடன் இணைந்துள்ளமையால் தீவனத்திற்கான தேவை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. பொதுவாக. மாநிலத்தில் தீவனப் பற்றாக்குறை எதுவும் இல்லை. கடுமையான வறட்சி நிலைகளின் போது சில பகுதிகளின் தீவனப் பற்றாக்குறையை மாவட்டத்திற்கிடையேயான தீவன வரத்து மூலம் நிறைவு செய்யலாம். இருப்பினும், மதீப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை தமிழ்நாட்டில் 1994 இல் கால்நடைத் தீவன மேலாண்மை பற்றி பல நிலையில் அங்கொன்றும் இங்கொன்றுமான மாதிரி முறையை மேற்கொண்டு மதிப்பீட்டு ஆராய்வை மேற்கொண்டது. அந்த மதீப்பீடு அறிக்கையின் படி தமிழ்நாட்டில் கால்நடைத் தீவன தேவைக்கும், பயனீட்டு அளவுக்குமிடையே பரவலாக இடைவெளியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடைவெளியானது உலர்ந்த தீவனத்தில் 63 விழுக்காடும் பச்சை தீவனத்தில் 93 விழுக்காடும் மற்றும் செறிவூட்டப்பட்ட தீவனத்தில் 78 விழுக்காடும்

உள்ளது. மக்கள்தொகை பெருகிக் கொண்டேயிருப்பதால் எரிபொருளின் தேவையும் அதிகரிக்கின்றது. காப்புக் காடுகளிருந்து எரிபொருள் சேகரித்தலைத் தடைசெய்தல் போன்ற வனத்துறையின் ஒழுங்குமுறை மாற்றங்களில் எரிபொருள், விறகுமர வழங்கு நிலை மேலும் மோசமாகி உள்ளது. எனவே, ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் அங்குள்ள சமுதாயத்தினரை ஈடுபடுத்துதல் மற்றும் பொதுச் சொத்து வளங்களைப் பயன் படுத்துவதன் மூலம் தீவனம் மற்றும் எரிபொருள் வழங்கலை அதிகரிப்பதில் தீர்வுக்குரிய பங்கு வகிக்க வேண்டும். கால்நடை பராமரிப்புத் துறையும் வனத்துறையும் எரிபொருள், விறகு தோட்டங்களை அதிகரிக்கத் தீவன விதைகள் நாற்றுகள், தீவனத்தாள்கள் ஆகியவற்றை வழங்க வேண்டும். வனத்துறைப் பகுதியின் கீழ் விறகு மற்றும் தீவனம் பின்வரும் திட்டங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விறகு மற்றும் தீவனத் தோட்டங்களை அதிகரித்தல், ஊரக மரத் தோட்டமும் காடு வளர்ப்பும் ஆகும். மாநிலத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் 11 கால்நடைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

05. பொதுவாகச் ஊராட்சிக்குச் சொந்தமாகப் புறம்போக்கு புல் வெளிகள் இருப்பதால் சமூக தரிசு நிலங்களில் சமூக பண்ணைத் தோட்டங்களை அமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஊராட்சிக்குரிய நிலங்களில் கிராமத்திற்குத் தேவையான எரிபொருள், தீவனம் மற்றும் வெட்டு மரங்களை உற்பத்தி செய்வதோடு உள்ளூரில் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும். வருவாயைப் பெருகுவதற்கும் வழி கோலுகிறது. ஊராட்சிகள் கிராமமக்களை அவர்களது சொந்த நிலத்தில் நல்ல தரமான எரிபொருள் தோட்டங்களை வணிகரீதியில் மேம்படுத்த ஊக்கப்படுத்தி உதவி செய்ய வேண்டும். சமுதாய மற்றும் ஊராட்சி மேய்ச்சல் நிலங்களில் கால்நடைகள் மேய்வதற்கு உரிய கட்டணத்தை ஊராட்சி பெறவேண்டும். ஊராட்சி ஒன்றியம் நேரடியாகவோ அல்லது ஊராட்சி மூலமாகவோ எரிபொருள் மற்றும் தீவன மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த முடியும். கால்நடை பராமரிப்பு, வேளாண்மை, வனம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளின் மூலமாக செயல்படுத்தும் திட்டங்களின் ஆய்வுவையும் மேற்கொள்ள முடியும். திட்டங்களை வகுப்பது, வேளாண்மை நிலைக்குழு மூலமாக எரிபொருள் மற்றும் தீவன மேம்பாட்டுத் திட்டங்களை ஆய்வு செய்வது மாவட்ட ஊராட்சியின் பங்கு ஆகும். மேற்கண்ட பின்னணியில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பின்வரும் அதிகார ஒப்படைப்புக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

I. ஊராட்சி

நடவடிக்கை (1)	அதிகார ஒப்படைப்பு (2)
1. தீவன உற்பத்தியும் விறகு மரத்தொகுதிகளை அதிகரித்தலும்	1. கிராமத்திற்குத் தேவையான எரிபொருளையும், தீவனத்தையும் மதிப்பிடுதல்.
	2. விறகு மரத்தொகுதிகளையும் தீவனத் தோட்டங்களையும் ஏற்படுத்துவதற்காக கிராமத்தரிசு நிலங்கள் மற்றும் தரமற்ற நிலங்களை அடையாளம் காணல்.
	3. எரிபொருள்/தீவனத் தோட்டங்களுக்காக, வகை மாதிரிகளை, இடங்களைத் தெரிவு செய்தல்.
	4. தீவனம் மற்றும் எரிபொருளுக்காக நாற்றங்கால்கள், விதை பண்ணை வழங்கலை ஊக்குவித்தல்.
	5. சமுதாயம்/ஊராட்சி/பாதுகாக்கப் படாத காடுகள்/இடைபடு காடுகள் ஆகியவற்றில் விறகு மரத்தோட்டங்களை, தீவனப் பயிரிடும் இடங்களைப் பேணிப் பாதுகாத்தல்.

6. சமுதாய இடங்களிலிருந்து உற்பத்தி யாகும் எரிபொருள் மற்றும் தீவன விளைபொருள் வழங்கலை மேற் பார்வையிடுவதற்கும், இயக்குவதற்கும் தீர்மானித்தல்.

7. புகைவரா அடுப்பு, சூரிய அடுப்பு, தரமான தீவன பயிர்கள் போன்ற எரிபொருள் திறனுடைய கருவிகளைப் பயன்படுத்துவதற்குரிய விழிப்புணர்ச்சியை வளர்த்தல்.

8. சமுதாயக் காடுகளில் மேய்ச்சலுக்கு அனுமதிக்கப்பட்ட மிருகங்களுக்குக் கட்டணம் வசூலித்தல்.

9. தீவன விதைகள்/தழைகளை உள்ளூர் மக்களுக்காக வளர்த்தலும் வழங்குதலும்.

II. ஊராட்சி ஒன்றியக் குழு

நடவடிக்கை (1)	அதிகார ஒப்படைப்பு (2)
1. எரிபொருள், தீவன உற்பத்தி	1. எரிபொருள் / தீவனத்தோட்டங்கள் அமைப்பதற்காக தரிசு நிலங்களை தரமற்ற நிலங்களை அடையாளம் காணல்.
	2. தீவன நாற்றங்கால்களுக்கான இடங் களை அடையாளம் காணல்.
	3. நாற்றங்கால் அமைப்பு திட்டத்தை ஒருங்கிணைத்தல்.
	4. எரிபொருள் திறனுடைய மர அடுப்புகள், புகைவரா மற்றும் சூரிய அடுப்புகளை வழங்கல்.
	5. எரிபொருள் திறனுடைய கருவி களையும் நல்லதரமான தீவன மாதிரிகளையும் பயன்படுத்துவதற்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
	6. ஊரக விறகு மரத்தோட்டங்களையும் காடு வளர்ப்பு திட்டங்களையும் செயற்படுத்துதல், விறகு மரங்களை வளர்த்தல் மற்றும் தீவனத் தோட்டங்களை வளர்த்தல்.
	7. வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, வனம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளால் செயல்படுத்தப்படும் எரிபொருள் மற்றும் தீவனத் திட்டங் களை ஆய்வு செய்தல்.

III. மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை (1)	அதிகார ஒப்படைப்பு (2)
1. எரிபொருள், தீவன உற்பத்தி	1. எரிபொருள், தீவன மேம்பாட்டுத்திட்டங்களை, மாவட்ட அளவில் மேற்கொண்டு இப்பொருள் தொடர்பில் மாநில அரசுக்கும் ஊராட்சிக்கும் ஆலோசனை வழங்குதல்.
	2. எரிபொருள், தீவனத்திட்டங்கள், மீதான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் உள்ளாட்சி அமைப்பு களையும், வேளாண்மை, ஊரக வளர்ச்சி, வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகளைக் கண் காணித்து மேற்பார்வையிடல்.
	3. மாவட்டத்தில் தீவனப்பற்றாக்குறையுள்ள இடங்களுக்கு மிகையாக உள்ள இடங்களிலிருந்து எரிபொருளையும் தீவனத்தையும் வழங்க ஏற்பாடு செய்தல்.

நிருவாக மற்றும் சட்டச் சிக்கல்

06. கால்நடை பராமரிப்புத் துறையின் மேம்பாட்டு நடவடிக்கைகள் மாநிலத்திலுள்ள அனைத்துக் கால்நடை நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. கால்நடை பண்ணைகளும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கமும் கால்நடை பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. அதே சமயத்தில், தங்கள் திட்டங்களின் நிருவாகக் கட்டுப்பாட்டினை வனத்துறை வைத்துக் கொண்டுள்ளது. இப்பொருள் தொடர்பில் சட்டச்சிக்கல் இல்லை.

நிதிச்சிக்கல்

07. மலைகள் இல்லாத சுற்றுப்புறப் பகுதிகளின் ஊரக எரிபொருள் தோட்டங்கள் மற்றும் காடு வளர்ப்பு திட்டம் தொடர்பில், மாநில மற்றும் மைய அரசுக்கிடையே 1994–95இல் ரூ.216.44 இலட்சமும், 1995–96 இல் ரூ.284.03 இலட்சமும், 1996–97 ஆம் ஆண்டுக்கு ரூ.289.73 இலட்சமும் பங்கிடப்பட்டுள்ளன. கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் வனத்துறையின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட நிதியுதவியை மூன்று பிற திட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. அதாவது (அ) தீவன மேம்பாடு (ஆ) ஊரக எரிபொருள் தோட்டத் திட்டம் (இ) இமயமலைப் பகுதிகள் அல்லாத இடங்களில் எரிபொருள் மற்றும் தீவனத் தோட்டங்களை வளர்த்தல். இந்நிதியை செயல்படுத்தும் திட்டங்களுடன் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப் பெற வேண்டும்.

சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தோணித்துறை வழிகள், நீர்வழிகள் மற்றும் பிற தொடர்பு வழிகள்

(இனம் - 13)

01. தமிழ்நாடானது நல்ல பின்னலமைப்புப் போன்ற சாலைகளைக் கொண்டுள்ளது. 1960–61 ஆம் ஆண்டு சதுர மீட்டர் ஒன்றுக்கு சாலை நீளத்தின் செறிவு 33.30 கிலோ மீட்டராக இருந்தது. 1993–94ஆம் ஆண்டு 132.45 கீலோ மீட்டராக அதிகரித்துள்ளது. 1996 ஏப்ரல் திங்களில் தேசிய நெடுஞ்சாலைகள் (தே.நெ.), மாநில நெடுஞ்சாலைகள் (மா.நெ.), மாவட்டப் பெருஞ்சாலைகள் (மா.பெ.சா.), இதர மாவட்டச் சாலைகள் (இ.மா.சா.), ஊராட்சிச் சாலைகள் (ஊ.சா.) ஊராட்சி ஒன்றியச் சாலைகள் (ஊ.ஒ.சா.), நகராட்சி, பொதுப் பணித்துறை மற்றும் இதர சாலைகள் ஆகிய சாலைகளின் மொத்த நீளம் 1,72,409 கிலோ மீட்டர்கள் ஆகும். தனித்தனியான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தொடர் எண்.	சாலைகளின் வகை		கிலோ மீட்டரில் நீளம்
1.	தேசீய நெடுஞ்சாலைகள் (தே.நெ.)		2002 *
2.	மாநில நெடுஞ்சாலைகள் (மா.நெ.)		1933 *
3.	மாவட்டப் பெருஞ்சாலைகள் (பெ.மா.சா.)		13973 *
4.	இதர மாவட்டச் சாலைகள் (இ.மா.சா)		37962 *
5.	கரும்புச் சாலைகள்		1132 *
6.	ஊராட்சி ஒன்றியச் சாலைகள் (ஊ.ஒ.சா.)		38100 **
7.	ஊராட்சிச் சாலைகள் (ஊ.சா.)	29020	51634 **
8.	இதர ஊராட்சிச் சாலைகள்	22614	
9.	நகராட்சி மற்றும் மாநகராட்சிச் சாலைகள்		8689 *
10.	பாசனச் சாலைகள்		1332 *
11.	காட்டுச் சாலைகள்		3324 *
12.	தமிழ்நாடு மின்வாரியச் சாலைகள்		679 *
13.	இதர சாலைகள் (வகைப்படுத்தாதவை)		11649 *
		மொத்தம்	172409

* 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் வெளியிடப்பட்ட நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை செயல் நிறைவேற்ற வரவு செலவு மதிப்பீடு (1995–96) புள்ளி விவரத்தின் படி.

** 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சித்துறை செயல் நிறைவேற்ற வரவு செலவு மதிப்பீடு புள்ளி விவரத்தின் படி.

02. புதிய சாலைகள் அமைத்து குறித்து தற்போதைய நிலை என்னவென்றால், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெருஞ்சாலைகள், இதர மாவட்டச் சாலைகள் மற்றும் சிறப்புச் சாலைத் திட்டங்கள் அதாவது கரும்புச் சாலைகள், போன்றவை வெளி உதவித் திட்டங்களின் கீழ் சாலைகளை அமைத்தல் ஆகியன மாநில நெடுஞ்சாலைகள் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சாலைகளைப் பராமரிப்பது மாநில நெடுஞ்சாலைகள் துறையின் பொறுப்பாகும்.

03. ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், இணைப்புச் சாலைகள், ஊரகச் சாலைகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் உள்ளீட்டெல்லையின் கீழ் வரும் திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி சாலைகள் அமைக்கும் பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் செயற்படுத்துகின்றன. இப்பணிகளை மேற்கொள்வதற்காக மாநில நெடுஞ்சாலைகள் துறையிலிருந்து ஒன்றியப் பொறியாளர்கள் அயல்பணியில் அனுப்பப் பெறுகின்றனர். இச்சாலைகளைப் பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்ததாகும். தற்பொழுது சாலைகள் அமைக்கும் பணியில் சிற்றூராட்சிகள் ஈடுபடுவதில்லை. இருந்தபோதிலும், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் சாலைகளைப் போடுவதற்கும் பராமரிப்பதற்கும் போதிய அதிகாரங்களை அளிக்க வகை செய்யப் பெற்றுள்ளது. இன்றியமையாத் தன்மையின் அடிப்படையில் சாலைகள் வகைப்படுத்தப்படுகின்றன. இவை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரிமையான சாலைகளாகும். சாலைகளை அமைப்பது பராமரிப்பது போன்ற சாலைப்பணிகளை மேற்கொள்வதில் அண்மையில் உருவாகிய மாவட்ட ஊராட்சிகளின் பங்கு என்னவென்று முடிவு செய்யப்பட வேண்டியுள்ளது.

04. சாலைகளில் மொத்த நீளமான 1,72,409 கிலோ மீட்டரில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகளின் நீளம் 89,734 கிலோ மீட்டராகும். (இது மாநிலத்தின் மொத்த சாலை நீளத்தில் 52.04% ஆகும்) ஊர் நிலை உள்ளமைப்பு மேம்பாட்டில் இச்சாலைகளைப் பராமரிப்பதும் மேம்படுத்துவதும் மிக முக்கியமான பங்காகும். ஆனால் சுமார் 6000 கிலோ மீட்டர் சாலைகள் தான் (அதாவது மேற்கூறிய சாலைகளில் 10 விழுக்காடு) நல்ல நிலையில் உள்ளன. இது எதனைக் குறிக்கிறது என்றால் 90% அளவு மேலான ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன என்பதையும், சீருந்துகள் செல்லும் சாலைகளாக ஆக்குவதற்கு அவற்றைத் தார்ச்சாலைகளாக ஆக்க வேண்டும் என்பதாகும்.

மேற்பரப்பின் தன்மைக்கேற்ப சாலை நீளங்கள் கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

(நீளம் கிலோ மீட்டரில்)

தொடர் எண். (1)	மேற் பரப்பின் தன்மை (2)	ஊராட்சி ஒன்றியம் (3)	ஊராட்சி நீளம் (4)	மொத்தம் நீளம் (5)
1.	மண்சாலை	7537 (19.77)	22282 (43.15)	29819 (33.23)
2.	சரளைக் கற்சாலை	8209 (21.54)	10865 (21.04)	19074 (21.26)
3.	ஓரடுக்குச் சரளைக்கல் பரவிய சாலை	14154 (37.15)	16298 (31.57)	30453 (33.94)
4.	இரு அடுக்குகளாகச் சரளைக் கல் பரவிய சாலை	4398 (1.55)	–	4398 (04.90)
5.	தார்ச்சாலைகள்	3618 (9.50)	2188 (4.24)	5806 (6.47)
6.	சிமெட்டிச் சாலைகள்	184 (0.40)	–	184 (0.20)
	மொத்தம்	38100 (100)	51634 (100)	89734 (100)

ஆதாரம் : 1996 ஆகஸ்ட் திங்கள் ஊரக வளர்ச்சித் துறையின் செயல் நிறைவேற்ற வரவு, செலவு மதிப்பீட்டின்படி.

05. பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் மூன்று படிநிலை அமைப்பதற்கான அதிகாரங்களை ஒப்படைப்பதற்கான பரிந்துரைகளை செய்யும் முன்னர் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தில் சாலைகள் குறித்துச் சொல்லப்பட்ட சட்டப்படியான வழிவகைகள் குறித்து ஆராய்வது பொருத்தமானதாகும். 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டமானது பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களால் சாலைகள் பராமரிக்கப்படுவது தொடர்பில் பின்வரும் வழிவகைகளை மேற்கொள்வதற்கு வகை செய்கிறது.

ஊராட்சி

(i) பின்வருவன தொடர்பில் ஊராட்சிகளுக்குச் சில வசதிகளைச் செய்வதற்கும் அதன் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் நியாயமான ஏற்பாடுகளைத் தனது நிதிவரம்பெல்லைக்குள் ஊராட்சிகள் செய்து முடிக்க 110 ஆம் பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது.

அ) ஊரின் அனைத்துச் சாலைகளையும், அதாவது ஊரிலுள்ள அனைத்து பொதுச் சாலைகளையும் (தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெருஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என வகைப்படுத்தப்பட்டவை தவிர) அச்சாலை வழிகளில் அமைந்த பாலங்கள், சிறுபாலங்கள், சாலை அணைகள் தரைப்பாலங்கள் அனைத்தையும் அமைப்பது, பழுதுபார்ப்பது, பராமரிப்பது ஆகியன.

(ஆ) கட்டங்கள் அமைந்த பகுதிகளில் பொதுச் சாலைகளிலும், பொது இடங்களிலும் விளக்குகள் அமைப்பது.

(இ) வடிகால் அமைப்பது வடிகால் நீர் சாக்கடை நீரைச் சேர்க்காமல், பிற கழிவுநீர்க் குப்பைகளை அகற்றுவது.

(ii) பிரிவு 125இல் ஊராட்சிக்குச் குறிப்பிட்ட சில பொதுச் சாலைகளின் மீதான உரிமையை அளித்துள்ளதுடன் குறிப்பிட்ட சில சாலைகள் விடப்பட்டும் உள்ளன. இதற்கான வழிவகைகளைப் பின்வருமாறு காணலாம்.

பொதுச் சாலைகள் அனைத்தும் தேசிய நெடுஞ்சாலைகள் அல்லது மாநில நெடுஞ்சாலைகள் அல்லது ஊராட்சி ஒன்றிய சாலைகள் என அரசால் வகைப்படுத்தப்பட்ட சாலைகள் தவிர ஏனைய சாலைகள் அவற்றிற்கான நடைபாதைகள், கற்கள், ஏனைய பொருள்கள் அதன் தொடர்பான பணிகள்,பொருள்கள், அதற்கென வழங்கப் பெற்ற பிற சாமான்கள் ஆகியவற்றுடன் வடிகால்கள், வடிகால் பணிகள், சுரங்கப் பாதைகள் சாலைகளின் பக்கங்களில் ஏற்படுத்துவது என எந்த ஒரு கிராமத்திலும் உள்ளவற்றை ஊராட்சிக்கு உரிமையாக்குவதுடன், இவற்றிற்கான செலவினங்கள் ஊராட்சியால் அல்லது வேறுவகையில் செய்யப் பெற்றிருந்தாலும், அல்லது அத்தகைய நிலையிலுள்ள சாலைகள், அவற்றிற்குத் தொடர்புடைய அனைத்துப் பொருள்கள், சாமான்களையும் அவ்வாறே உரிமையாக்குதல்.

இத்தகைய எந்தவொரு பொதுச் சாலையையும், வடிகால் அமைப்பையும், வடிகால் பணி, சுரங்கப்பாதை அல்லது சிறுபாலம் ஆகியவற்றை அமைப்பது பற்றிய இச்சட்டத்தை அரசானது அறிவிப்பின் மூலம் விளக்கலாம் ; மேலும் இத்தகைய அறிவிப்பினைத் திருத்தலாம் அல்லது நீக்கி விடலாம்.

ஊராட்சி ஒன்றியம்

(iii) பிரிவு 112–இன் படி ஊராட்சி ஒன்றியத்தின் கடமைகளை அதன் நிதி வரம்பிற்குள் சில வசதிகளை நியாயமான வழிமுறையில் செய்வதற்கு வகை செய்கிறது, அவை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பொது சாலைகள் ஊராட்சி ஒன்றிய சாலையாக வகைப்படுத்தபட்டுள்ளன. அனைத்தையும், அத்தகைய சாலைகளில் அமைந்துள்ள பாலங்கள்,

சிறுபாலங்கள். சாலை அணைகள், தரைப்பாலங்கள் ஆகியவற்றையும் அமைக்க, பழுது பார்க்க, பராமரிக்க வசதிகள் அளித்தல்.

(iv) ஒன்றியமானது சில பொதுச் சாலைகளை உடைமையாக்கிக் கொள்வதற்கும் பராமரிப்பதற்கும் இச்சட்டத்தின் 126 ஆவது பிரிவு பின்வருமாறு உரிமை அளிக்கிறது.

(1) ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என வகைப்படுத்துப்பட்ட எந்த ஒரு ஊராட்சி ஒன்றியத்திலுமுள்ள பொதுச் சாலைகள் அனைத்தும் அவற்றிற்கான நடைபாதைகள் கற்கள் ஏனைய பொருள்கள் அதன் தொடர்பான பணிகள், பொருள்கள், அதற்கென வழங்கப் பெற்ற பிற சாமான்கள் ஆகியவற்றுடன் வடிகால்கள். வடிகால் பணிகள், சுரங்கப்பாதைகள் சிறுபாதைகள் சாலைகளின் பக்கங்களில் ஏற்படுத்துவது என உள்ளவற்றை ஊராட்சி ஒன்றியத்திற்கு உரிமையாக்குவதுடன், இவற்றிற்கான செலவினங்கள் ஊராட்சி ஒன்றியத்தால் அல்லது வேறுவகையில் செய்யப்பட்டிருந்தாலும் சாலை நீளப்படுத்துவது அல்லது அத்தகைய நிலையிலுள்ள சாலைகள், அவற்றிற்குத் தொடர்புடைய அனைத்துப் பொருள்கள் சாமான்கள் ஆகியவற்றையும் அவ்வாறே உரிமையாக்குதல்.

(2) இத்தகைய எந்தவொரு பொதுச் சாலையையும் வடிகால் அமைப்பையும் வடிகால் பணி சுரங்கப்பாதை அல்லது சிறுபாலம் ஆகியவற்றை அமைப்பது பற்றிய இச்சட்டத்தை அரசானது அறிவிப்பின் மூலம் விலக்கலாம் ; மேலும், இத்தகைய அறிவிப்பினைத் திருத்தலாம் அல்லது நீக்கி விடலாம்.

அரசின் சார்பாக பராமரிப்பு

(v) பிரிவு 125, 126 ஆகியவற்றிற்குக் கூடுதலாக 127 ஆவது பிரிவானது கீழே குறிப்பிட்ட வகையில் இத்தகைய சாலைகளைப் பராமரிப்பதற்காக ஊராட்சிகளுக்கு அனுமதி அளிப்பதற்கும் இதற்காகும் செலவினங்களை அளிப்பதற்கும் அரசுக்கு மேலும் அதிகாரங்களை அளிக்கிறது.

(அ) வடிகால் அமைப்பில் நீர்வசதி செய்தல் பராமரித்தல் ஆகியவற்றைச் செய்தல்.

(ஆ) வடிகால்களைப் பராமரிப்பதற்கும் பழுதுபார்ப்பதற்கும், வழிவகை செய்தல்.

(இ) அத்தகைய சாலையுடன் இணைக்கப்பட்ட நடைபாதையைப் பராமரித்தல் பழுதுபார்த்தல் ஆகியவற்றிற்கு வழிவகை செய்தல்.

(vi) ஒரு ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு உரிமையாக உள்ள பொதுச் சாலையிலுள்ள இடர்விளைவிக்கும் அமைப்பு மற்றும் சாலை ஓரத்திலுள்ள மரங்கள் சம்பந்தமாக சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரங்கள் 128, 129, 130 ஆகிய பிரிவுகளின் படி முறையே ஊராட்சிக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் உள்ளது.

(vii) பிரிவு 131–இன் படி கிராம நிருவாக அலுவலர்களின் கடமைகள் என்னவென்றால் செயலாட்சி அதிகாரி அல்லது ஆணையாளர் மற்றும் வருவாய் அதிகாரியிடம் ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி மன்றத்திற்கு உரிமையாகயுள்ள சாலைகளின் ஆக்கிரமிப்பை குறித்துத் தெரிவிப்பதுதாகும். தொடர்புடைய செயலாட்சி அலுவலர் அல்லது ஆணையாளரின் கடமை என்னவென்றால் அரசால் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளின்படி ஆக்கிரமிப்பை நீக்குவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுவதாகும். செயலாட்சி அலுவலர் / ஆணையாளர் இத்தகைய ஆக்கிரமிப்பை நீக்குவதற்கு பாதுகாப்பிற்காக வருவாய்த் துறையின் உதவியை நாடலாம்.

(viii) ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் பொதுச் சாலைகளில் விற்பனை நடைபெறுவதைத் தடை செய்வதற்கு பிரிவு 151 இன் படி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. நிறுத்துமிடங்கள், வண்டி நிறுத்துமிடங்கள், மிதி வண்டி நிறுத்துமிடங்கள், இயக்கூர்திகள் நிறுத்துமிடங்கள் போன்றவற்றிற்கு வகை செய்யவும் தேவையான [illegible]

பிரிவின்படி தனியார் நிறுத்துமிடத்தை ஏற்படுத்துவதைத் தடை செய்கிறது மேலும், 155–ஆவது பிரிவில் தனியார் நிறுத்துமிடங்களுக்கு ஊராட்சி ஒன்றியமானது உரிமம் அளிக்கவும், அதற்குரிய உரிமக் கட்டணத்தை விதிப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

(ix) பிரிவு 236–இன்படி ஊராட்சிக்கு உரிமையாக உள்ள அல்லது ஊராட்சியால் பராமரிக்கப்படும் அனைத்து சாலைகளையும் நீர் வழிகளையும் சாதி சமயம் வேறுபாடின்றி மக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளவும், துய்த்து மகிழவும் விடப்பட வேண்டும்.

மாவட்ட ஊராட்சி

(x) சட்டப் பிரிவு 163 இன் கீழ், மாவட்ட ஊராட்சியானது பொதுச் சாலைகளை ஊராட்சி ஒன்றியச் சாலை மற்றும் ஊராட்சிச் சாலைகள் என வகைப்படுத்துவது தொடர்பில் (தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்டப் பெருஞ்சாலைகள் என அரசு வகைப்படுத்திய சாலைகள் தவிர), அரசுக்கு எடுத்துரைக்க அதிகாரம் பெற்றுள்ளது.

அரசு உதவி

(xi) ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும், அவ்வட்டாரத்திலுள்ள மக்கள் தொகைக் கணக்குப்படி ஒவ்வொருவருக்கும் என அரசால் அறுதியிடப் பெற்ற அத்தகைய உள்ளாட்சிச் சாலைகள் மானியத்தை ஒவ்வோராண்டும் இச்சட்டத்தின் 182ஆம் பிரிவின் படி அரசு வழங்குகிறது. ஒவ்வொரு ஊராட்சியாலும் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் மற்றும் தன்மையின் அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் கொடுக்கப்பட வேண்டிய உள்ளாட்சிச் சாலைகள் மானியத்தைச் சேகரிப்பதற்கான நடைமுறைகளுக்கும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள சாலைகளின் பராமரிப்பிற்காக அத்தொகை பயன்படுத்தப்பட வேண்டும். இச்சட்டத்தின் 186 ஆம் பிரிவின் கீழ் ஊராட்சி ஒன்றிய (பொது) நிதியில் உள்ளாட்சிச் சாலைகள் மானியமாக பெறப்பட்ட மானியம் வரவு வைக்கப்பட வேண்டும்.

(xii) சட்டப்பிரிவு 242 (xxxiv,xxxv,xxxvi) இன் கீழ் பின்வருவன பற்றிக் குறிப்பான விதிகளை உருவாக்குவதற்கு இச்சட்டம் வழிவகை செய்கிறது.

(அ) ஊராட்சிக்கு உரிமையாக உள்ள பொதுச் சாலைகளிலிருந்து ஆக்கிரமிப்பை அகற்றுதல். அச்சாலைகளுக்குச் சேதம் ஏற்படக் காரணமாக இருந்தவர்களால் சேதத்தைச் சரிபார்க்கச் செய்வது அல்லது அவரின் செலவில் சேதத்தைப் பழுது பார்ப்பது.

(ஆ) ஊராட்சியைச் சார்ந்த பொதுச் சாலைகளில் வளரும் மரங்களுக்குரிய உரிமைக் கோரிக்கை எதையும் தீர்மானித்தல்.

(இ) ஊராட்சியைச் சார்ந்த பொதுச் சாலைகளில் அனுமதி பெறாத குடியிருக்கைக்காக தண்டத்தொகை விதித்து பிடித்தம் செய்தல்.

06. அடிப்படை அளவுத் தேவைகளுக்கான திட்டங்களில் ஊரக சாலைகளின் மேம்பாடும் ஒன்றாகும், இதில் இந்திய அரசும் மாநில அரசும் மிகவும் முதன்மை அளிக்கின்றன. ஊரகச் சாலைகளின் மேம்பாடும் தற்போதைய முன்னேற்பாடுகளானது, உள்ளாட்சி சாலைகள் மானியத்திலிருந்து (உ.சா.மா.) பெறப்படும் குறைந்த நிதிகளிலிருந்து ஏறத்தாழ 90 விழுக்காடு சாலைகளைப் பராமரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் போதுமானதாக இல்லை என்பதை முந்திய பத்திகளிலிருந்து அறியலாம். இவ்வாறு, அதிக நீளமுடைய ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைக் கட்டமைப்பு மேம்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் உள்ளதால் இதில் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் பயனுள்ள பங்கை ஆற்ற முடியும். சாலைகள் போன்ற உள்ளமைப்பானது ஊரக வளர்ச்சிக்குத் திறவு கோலாக உள்ளன. சிறப்பாகச்

செயலாற்றுவதற்கு ஒவ்வொரு நிலையிலும் பொறுப்புடன் ஒப்படைப்பு இன்றியமையாது பின்பற்றப்பட வேண்டிய அணுகு முறையை மாநிலத்திட்ட குழு மேற்கொள்கிறது. ஆனால் யார் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தினாலும் தகவல் தொடர்பு வலைப்பின்னல் ஒழுங்கு முறையாகவும் உள்ளிணைப்பு முறையாகவும் இணைக்கப்பட வேண்டும். வான் தொடர்பு தொலையுணர்வு, மற்றும் பிற முகமைகளிலிருந்து கிடைக்கக்கூடிய அறிவியல் தொழில் நுட்ப விவரங்களை எவ்வளவு பயன்படுத்த முடியுமோ அந்தளவு பயன்படுத்தி முன்னேறிய திட்டமிடுதலைத் தொடங்கும் முயற்சிக்கான இப்பெரும் பொறுப்பு மாவட்ட ஊராட்சி எனப்படும் உயர்நிலை அமைப்பைச் சாரும். தவிர, பொறியாளர்களைக் குறிப்பாக மாவட்டங்களில் வசிக்கும் கட்டடப் பொறியாளர்களைக் (அரசுத் துறையில் பணியாற்றுபவர்கள் நீக்கலாக) கண்டறியவும் பட்டியலிட்டுக் காட்டவும் துணைபுரிபவராக இது செயற்படவும் கூடும். குறைந்த எண்ணிக்கையின் காரணமாக அல்லது பணிச்சுமையின் பொருட்டு அரசுப் பொறியாளர்கள் போதுமான அளவில் இல்லாத விடத்துத் தொடர்புடைய ஊராட்சிகளாலும் / ஊராட்சி ஒன்றியங்களாலும் தொழில் நுட்பப் பணிகளில் துணையாக இருப்பதற்கு இவர்களின் பணிகளைப் பெற முடியும். இப்பட்டியலிருந்து வல்லுநர்களை தொழில் முறைப் பணியாளர்களை தெரிவு செய்வது தொடர்புடைய ஊராட்சி அமைப்புகளிடம் விடப்பட்டுள்ளது. இருதரப்பிலும் ஏற்றுக் கொள்ளத்தக்க விதிமுறைகள் வரையறைகளின் அடிப்படையில், ஒப்பந்தத்தை ஏற்படுத்தி ஊதிய விகிதத்தின் பேரில் அவர்களைப் பணியமர்த்திக் கொள்ளலாம். மாவட்ட ஊராட்சியின் மூன்றாவது பங்கானது செயல் திட்டங்களின் நிறைவேற்றுவதில் உள்ள முன்னேற்றத்தைக் கண்காணிப்பதுடன் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளால் மேற் கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளின் தரம் குறித்துத தனிப்பட்ட முறையில் தொழில் நுட்பப் பணிப்பட்டியலின் மூலம் மதிப்பிடுவதும் ஆகும். மதிப்பீட்டு அறிக்கைகள் அப்பகுதியிலுள்ள அனைத்து ஊராட்சி அமைப்புகளுக்கும் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் கிடைக்கும் படிச் செய்யவும் வேண்டும். மாவட்ட ஊராட்சியானது சாலைப் பின்னலமைப்பு தொடர்பில் அண்டை மாவட்டங்களும் மாநில அரசு அதிகாரிகளுடனும் ஒன்றுக்கொன்று சார்ந்து செயல்படுவதும், மாவட்டத்திற்காக விரிவு படுத்தப்பட்டத்தபட்ட திட்டங்களை மதிப்பீட்டு செய்வதும் தொடர்ந்து செய்து வருவது இன்றியமையாததாகும். அத்துடன் பஞ்சாயத்து ஆட்சி அமைப்பு பகுதியில் வராத, சாலைப் பணிகளின் தொடர்பில் மாநில அரசால் ஒப்படைப்புச் செய்யப்பட்ட பொறுப்புகளை மேற்கொள்வதற்கும் அல்லது பின்னலமைப்புத் தொடர்புகளை ஒருங்கிணைப்பதற்கு உதவுவதும் இன்றியமையாததாகும். அதற்கேற்ப, சாலைகளின் வகைப்பாடு, கட்டுமானம், மேம்பாடு பராமரிப்பு ஆகியவை தொடர்பில் பின்வரும் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் ஊராட்சி நிறுவனங்களின் 3 படிநிலை அமைப்புகளிடம் கொடுப்பதற்குப் பின்வரும் கருத்துக்கள் அளிக்கப்பெறுகின்றன.

I. ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. சாலைப் பின்னலமைப்பு மேம்பாடும்அணுகஇயலும் தன்மையும்.	(i) இணைப்பு சாலை, நடைபாதைகள், வடிகால் வசதிகளைக் கண்டறிதல் காணுதல். தன் சொந்த நிதியிலிருந்து அல்லது பல்வேறு திட்டங்களின் கீழிருந்தும் நிதியளிக்க வேண்டிய கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான திட்டத்தையும் ஆதாரத்தையும் காட்டுதல்; பின்னதன் நேர்வில் தொடர்புடைய முகமைகளிலிருந்து விடுவிக்கப்படும் நிதியைப் பெறுதல்.
	(ii) இயலக்கூடிய தரம் மற்றும் கருதப்பட்டுள்ள பணிகளுக்கான செலவு பற்றி ஊராட்சி ஒன்றிய (பொறியாளர்கள்) திடமிருந்து தொழில் நுட்ப அறிவுரையைப் பெறுதல், தேவைப்படுமிடத்துக் குறிப்பிட்டத் திட்டங்களுக்குக் கட்டண அடிப்படையில் தனிப்பட்ட தொழில் நுட்ப வல்லுநர்களைப் பணிக்கு அமர்த்துதல்.

	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
		(iii) செயற்பட்டுவரும் பணிகளின் தரத்தைக் கண்காணித்தலும் மேற்பார்வையிடுதலும்.
2.	இப்போதிருக்கும் சாலைகள் / சிறுபாலங்கள், பாலங்கள் ஆகியவற்றை மேம்படுத்துதலும் பராமரித்தலும்.	(i) ஊராட்சிச் சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், நடைபாதைகள் வடிகால் அமைப்புகள் ஆகியவற்றுக்கான திட்டங்களைத் தீட்டுதல், மேம்படுத்த பழுது பார்ப்பதற்காகும் செலவினங்களையும் ஆண்டுதோறும் பராமரிப்பதற்காகவும் செலவுகளையும் மதிப்பிடுதல்.
		(ii) ஊராட்சியின் சாலைப் பராமரிப்புப் பணிகளுக்காகச் சொந்த வள ஆதாரங் களிலிருந்தும் அரசின் வன ஆதாரங் களிலிருந்தும் நிதியை அதிகரித்தல்.
		(iii) ஊராட்சிச் சாலைப் பராமரிப்புப் பணிகளை நிறைவேற்றுதல்.
		(iv) ஊராட்சிச் சாலைகள் தவிர அரசால் பராமரிப்பு நிதி அளிக்கப்படும் அரசால் ஒப்படைக்கப்பட்ட சாலைகளின் பராமரிப்புப் பணியை மேற்கொள்ளுதல் (பிரிவு 127)
3.	நீர் வழிகள் / தோணித் துறைப் பணிகள் முதலியவற்றை மேம்படுத்துதல்.	(i) தேவைப்படுமிடத்தில் தோணித்துறை / அணைகரைகளை கட்டி, உரிமக் கட்டணத்தை விதித்துப் பராமரித்து வருதல்.
4.	சாலைச் சுங்க வரி விதிப்பு	(i) ஊராட்சியானது சாலைகள் மற்றும் பாலங்களின் மேம்பாட்டிற்குப் போதிய அளவில் நிதிகளை செலவிட்ட விடத்து மூலதனம் மற்றும் பராமரிப்புச் செலவுகளை ஈடுகட்ட சாலை சுங்கத்தை விதித்தல்.
5.	சாலைகளின் வகைப்பாடு	(i) ஊராட்சி ஒன்றியச் சாலை அல்லது உயர் வகைச்சாலை என்று வகைப்படுத்தப் பட வேண்டிய எந்த ஒரு ஊராட்சி சாலை குறித்தும் ஊராட்சி ஒன்றியத்திற்குக் கருத்துத் தெரிவித்தல்.
6.	நிழல் தரும் மரங்கள்	(i) ஊராட்சிச் சாலைகளில் நிழல் தரு மரங்கள் / மலைத் தோட்டப் பயிர்களை அதிக அளவில் வளர்த்தல், இருந்து வரும் மரங்களைப் பராமரித்தல் அவற்றிலிருந்து தேவைப்படும் வருவாயைப் பெறுதல்.
7.	சில பகுதிகளில் தண்டம் விதித்தல்	(i) ஊராட்சி சாலைகளுக்குத் தொடர்புடைய 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டக் காப்புரைகளை மீறியமைக்கழகத் தண்டனை விதித்து அபராதத் தொகைகளைத் திரட்டுதல். (சட்டப்பிரிவுகள் 131, 151, 154, 155, 236 மற்றும் 245 உடன் படித்தறியப்பட்ட II மற்றும் III ஆம் அட்டவணை

II. ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. சாலைப்பின்னல் மேம்பாடும் அணுக இயலுந்தன்மையும்	(i) (குறும அளவுத்தேவைத் திட்டம் குறித்த அளவுகளின் படி) சாலைத் தொடர்பு தேவைப்படும் கிராமங்களைக் கண்ட -றிதல், மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளின் சாலைகளை இணைக்கும் சாலைகளையும் ஊராட்சி ஒன்றிய சாலைகளையும் கட்டுவதற்கான திட்டங்களை உருவாக்குதல்.
	(ii) நில அளவை இயலக்கூடிய தொழில் நுட்பம் செய்தல், அறிந்து அளித்தல் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் கட்டு மானத்திற்குப் பல்வேறு திட்டங்களின் கீழும் அதன் சொந்த நிதியிலிருந்தும் நிதி ஒதுக்கி ஒப்பளிப்புச் செய்தல்.
	(iii) ஊராட்சிகளால் கருதப்பட்ட சாலை கட்டுமானப் பணிகளுக்கும் பராமரிப்புப் பணிகளுக்கும் தொழில்நுட்ப உதவி அளித்தல்.
	(iv) சாலை/பாலங்களின் விவரக் குறிப்பீடுகளைக் கண்காணித்து பணியின் தரத்தை மேற்பார்வையிடுதல் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஊராட்சிக்கு அறிக்கை அனுப்புதல்.
2. இப்போதிருக்கும் சாலைகள் / சிறுபாலங்கள், பாலங்கள் ஆகியவற்றை மேம்படுத்துதலும் பராமரித்தலும்.	(i) சாதாரண ஊராட்சி ஒன்றியச் சாலைகளை தார்ச் சாலைகளாக இயக்கூர்தி வாகனங்கள் செல்லும் சாலைகளாக மாற்றுதல்.
	(ii) ஊராட்சி ஒன்றியச் சாலைகள், சிறுபாலங்கள், பாலங்களை ஆண்டுக் கொரு முறை பழுது பார்த்துப் பராமரித்தல்.
	(iii) ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் பணி ஒதுக்கீட்டிற்கு ஏற்பளித்தலும் அவற்றின் மேம்பாட்டிற்கும் பராமரிப்பிற்கும் நிதி ஒப்பளிப்புச் செய்தலும்.
	(iv) பணியின் தரத்தைப் பற்றி கண்காணித்து மேற்பார்வையிட்டு மாவட்ட ஊராட்சிக்கு முன்னேற்றம் குறித்து அறிக்கை அனுப்புதல்.
3. நீர் வழிகள்/தோணித் துறைப் பணிகள் முதலியவற்றை மேம்படுத்துதல்.	(i) போக்குவரவு ஒழுங்கு முறைகள் உடன்பட்டிருப்பதை உறுதி செய்வதற்காகச் ஊராட்சிகளால் தேவைப்படும் தோணிகளை/ படகுகளை ஆய்வு செய்தலும், முறையாகத் தோணிப் போக்குவரத்தை அமைத்தல்.

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
4.	சாலைச் சுங்க விதிப்பு	(i)	கணிசமான அளவில் நிதி முதலீடு செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றியச் சாலைகளை/பாலங்களைப் பயன்படுத்தும் பயணிகள்/ஊர்திகள் மீது சாலைச் சுங்கம் விதித்தல்.
5	சாலைகளின் வகைப்பாடு	(i)	சாலைகளை வகைப்படுத்தலில் தேவைப்படும் எந்த ஒரு மாற்றங்கள் குறித்தும் மாவட்ட ஊராட்சிக்குப் பரிந்துரை செய்தல்.
		(ii)	சாலைகளை வகைப்படுத்தல் தொடர்பில் ஊராட்சியின் கருத்துக்கள் கிடைத்ததும், அதனை ஊராட்சி ஒன்றியம் பகுத்தாய்ந்து, நடவடிக்கைக்காகத் தன் கருத்துக்களை மாவட்ட ஊராட்சிக்குத் தெரிவித்தல்.
6.	நிழல் தரும் மரங்கள்	(i)	நிழல் தரும் மரங்கள்/மலைத் தோட்டப் பயிர்களை அதிக அளவில் வளர்த்தல் ஊராட்சி சாலையில் இப்போதிருக்கும் மரங்களைப் பராமரித்தல், அதிலிருந்து உரிய வருவாயை ஈட்டுதல்.
7.	சில நேர்வுகளில் தண்டம் விதித்தல்	(i)	ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தொடர்பில் (சட்ட அட்டவணை II மற்றும் III) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் காப்புரைகளை மீறியமைக்காகத் தண்டம் விதித்து அபராதத் தொகைகளைத் திரட்டுதல்.
8.	(பிரிவு 114 (2) இன் கீழ்) ஊராட்சி ஒன்றியத்தால் நிறைவேற்றப்பட்டு வரும் அரசுத் திட்டங்களை சீராய்வு செய்தல்.	(i)	ஊரகச் சாலைத் திட்டம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டம், பேருந்து தட மேம்பாட்டுத் திட்டம் இயற்கைச் சீற்றங்களினால் பழுதுபட்ட சாலைகளை (பிரிவு 114(2) இன் கீழ்பழுது பார்த்தல் ஆகியவற்றின் கீழ் செயற்படுத்தப்பட்ட பணிகளை சீராய்வு செய்தல். பணிகளை மேற்கொள்ளல். (நெ.சா.ஊ.ப. கோட்டப் பொறியாளரும் தொடர்புடைய மற்றவர்களும் ஊ.ஒ.தால் சட்டப் பெறும் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்).

III. மாவட்ட ஒன்றியம்

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
1.	சாலைப் பின்னலமைப்பு மேம்பாட்டிற்காக மாவட்ட நிலையில் திட்டமிடல்.	(i)	அறிவியில் மற்றும் தொழில் நுட்ப விவரங்களைப் பயன்படுத்தி மாவட்டத்திலுள்ள சாலைப் பின்னலமைப்பிற்கான முன்னேறிய, திட்டங்களை முயற்சித்தல், மேலும் அதனை அனைத்து ஊராட்சிகளுக்கும் பரவலாக்குதல்.
2.	சாலைப் போக்குவரத்து உள்பட சாலைகளின் வகைப்பாடு.	(i)	பொதுச் சாலைகளை (தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்டப் பெருஞ்சாலைகள் என்று

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
		அரசால் வகைப்படுத்தப்பட்ட சாலைகள் தவிர) ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் ஊராட்சிச் சாலைகள் என்று வகைப்படுத்துவது குறித்து அரசுக்கு அறிவுரை கூறல்.
		(ii) சாலைகள் மற்றும் சாலை போக்குவரத்தின் தரத்தை ஒரு நிலையிலிருந்து உயர் நிலை வகைக்கு மேம்படுத்துவதற்கு அரசுக்கு அறிவுரை கூறல்.
3.	சாலை மேம்பாட்டுத் திட்டங்களைச் சீராய்வு செய்தல்.	(1) சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்தையும் சீராய்வு செய்தல்.

நிர்வாகம் மற்றும் தொழில்நுட்பச் சிக்கல்கள்

07. அனைத்துப் பொறியியல் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு, ஊராட்சி ஒன்றிய நிலையில் இப்போது நிருவாக ஏற்பாடுகள் சாலைத்திட்டங்களின் செயல்முறைத் தேவைகளை எதிர்நோக்கியுள்ளன. பொதுவாகவே, நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையிலிருந்து பொறியாளர்கள் வரவழைக்கப்படுவர். ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் நிருவாகக்கட்டுப்பாட்டின் கீழ் இத்தகைய பொறியாளர்கள் பணியாற்ற வேண்டியிருக்கும். மாவட்டச் சார்நிலைப் பணிநிலையில் உள்ள (வருவாய்க் கோட்டம்) நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையின் உதவி கோட்டப் பொறியாளரிடமிருந்தும் கோட்டப் பொறியாளரிடமிருந்தும் இவர்கள் தொழில் நுட்ப அறிவுரையையும், பணிசார்ந்த ஆதரவையும் பெறுவர்.

08. ஊராட்சி ஒன்றிய பொறியாளர் தொகுதிப் பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியப் பணிகளைச் செயற்படுத்த வேண்டும் என்பதோடமல்லாமல் ஊராட்சிகளுக்குத் தொழில்நுட்ப அறிவுரைகளையும் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவும் அதிகார ஒப்படைப்பு குறித்துப் பரிந்துரைக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியத்தில் பணிச்சுமை அதிகமாக உள்ள இடங்களில் கூடுதலாகப் பொறியாளர்கள் தேவைப்படுவர். பொறியாளர்கள் இருவகை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதிருக்கும் ; அவை (அ) கட்டுமானம் மற்றும் (ஆ) பராமரிப்பு கட்டுமானப் பணி நடவடிக்கைகள் காலவரையறைக்குட்பட்டவை ; ஆனால் பராமரிப்புப் பணிகள் தொடர்ந்திருப்பவை. பராமரிக்கப்பட வேண்டிய சாலைகள் கட்டிடங்கள் மற்றும் பிற உள்ளமைப்புகளைக் கணக்கில் கொண்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் தனது பராமரிப்புப் பணியாளர்களை நியமித்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. மேலும், ஒவ்வொரு வகையான உள்ளமைப்பு தொடர்பில் தொழில்நுட்பம் மற்றும் நிதி பராமரிப்புத் தரம் பற்றிக்குறிப்பிடுவதற்கு இப்போதுள்ள வழிகாட்டல்கள் புதிதாக்கப் பெறவேண்டும். திட்டங்களை மூலமாகக் கொண்டு, கட்டுமானப் பணிகள் அமைவதால் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களில் தொழில்நுட்பப் பணியாளர்கள் அயல்பணி முறையில் பணிக்கு வர வேண்டும். இத்தகைய பணிகள் முடிவடைந்ததும், பணியாளர்கள் தத்தம் அரசுத் துறைகளுக்குத் திருப்பி அனுப்பப் பெறலாம். இதன் உள்நோக்கம் யாதெனில் ஒரு குறிப்பிட்ட காலம் முடிவடைந்ததும் ஊராட்சி ஒன்றியங்கள் தமக்கென தொழில்முறைப் பணியாளர்களை பெற்றிருக்க வேண்டும் என்பதுதான். இப்போதுள்ள ஏற்பாடுகளை அகற்ற வேண்டுமெனக் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை ; ஆனால் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் தமது தொழில் நுட்பப் பணியமைப்பை வலுப்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும். எனவே அரசின் அயல்பணி / மாற்றுபணி பணியாளர்கள் ஓய்வு பெறும் போதும், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் அதன் தொழில் நுட்பப் பணியாளர்கள் நீடித்திருப்பதற்கு நியமனங்களைச் செய்ய வேண்டும். மாவட்ட ஊராட்சிகளுக்கு என போதுமான எண்ணிக்கையில் உதவிக்கோட்டப் பணியாளர் மற்றும் கோட்டப் பணியாளர் பணியிடங்களைச் சேர்ப்பதானது பொருத்தமானதாகும். அதனால் நிலைத்தத் தொழில் நுட்ப அறிவுரைகள் மாவட்ட ஊராட்சியிடமிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கிடைக்கக்கூடும். குறிப்பிட்ட சில சில திட்டங்களுக்காக (அதாவது ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்) ஒப்பளிப்புச் செய்யப் பெற்றுள்ள உதவி கோட்டப் பொறியாளர் பணியிடங்களை மாவட்ட ஊராட்சிகளுடன் இணைக்கலாம்.

09. பல்வேறு அதிகாரக் குழுக்களின் கட்டுப்பாட்டில், சாலைகளைப் பல்வேறு வகைகளாகப் பிரித்து, அவற்றைப் பராமரிப்பதற்கான பொறுப்பை நிர்ணயிக்கும் திட்டத்தின் மறைந்துள்ள நோக்கம் யாதெனில் தேசிய அளவிலும் மாநில அளவிலும் முக்கியத்துவம் வாய்ந்த எல்லாச் சாலைகளையும் போதிய அளவு உயர்ந்த தரத்தில் அரசு பராமரிக்க வேண்டும் என்பதாகும். மேலும், மாவட்டங்களுக்கிடையே அமைந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த பெரும்பாலான சாலைகளை அதன் நிதியிலிருந்து குறிப்பிட்ட தரத்தில் திறம்பட பராமரிக்கப்படுவது போன்று அரசு பராமரிக்க வேண்டும் என்பதாகும். இது மேலும் படிப்படியாக அதிகரிக்கக்கூடும் என எதிர்பாக்கப்படுவதுடன், அரசால் பராமரிக்கப்பட்டு வரும் மாவட்டப் பெருஞ்சாலைகள் என வகைப்படுத்தப்பட்ட சாலைகளில் சரியான இடைவெளிகளில் மேலும் கூடுதலாக சாலைகள் இணைக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. சாலை வகைப்பாடு பற்றிய விவரங்கள் தொடர்பில் அரசுக்கு அறிவுரை வழங்குவதற்கு மாவட்ட ஊராட்சிகள் தான் ஏற்ற நிறுவனங்களாக இருக்க வேண்டும். இப்போதுள்ள நிலையில் ஊரகப்பகுதிகளிலுள்ள சாலைகள் அனைத்தையும் அவ்வாறு பராமரிக்க இயலா நிலை தொடருகிறது. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் என வகைப்படுத்தப்பட்ட சாலைகளின் பொறுப்பு முறையே ஊராட்சிகள் அல்லது ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்ததாகும். பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் இரு கீழ்நிலை அமைப்புகளுக்கு அவற்றிற்குத் தொடர்பாகவுள்ள சாலைகளின் அமைப்பிற்கும் பராமரிப்பிற்கும் போதுமான அதிகாரங்களை அளிக்க இச்சட்டம் வகை செய்கிறது. 245(1) மற்றும் (2)ஆகிய பிரிவுகளின் கீழும், 31, 151, 154, 155 மற்றும் 236 பிரிவுகளிலும் உள்ளவாறு சாலைகளை தொடர்பான சட்டக் கூறுகளை மீறியதற்காக ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், மேற் குறிப்பிட்ட சட்டத்தின் II மற்றும் III ஆம் அட்டவணையின் படி தண்டம் விதிப்பதற்கு வகை செய்யப் பெற்றுள்ளன. எனினும் இத்தகைய நிதி ஆதாரங்களை வலியுறுத்திப் பெறுவதற்கிடையில் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவது பெரும் இடராகும்.

நிதிச் சிக்கல்கள்

10. இவ்வாறாக, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஊராட்சி ஒன்றியத்தாலும் அல்லது ஊராட்சிகளாலும் பராமரிக்கப் பட வேண்டிய சாலைகளின் எண்ணிக்கை பெருமளவில் இருக்கும். புதிய சட்டத்தில் இவ்விரு அமைப்புகளுக்குமான நிதி ஆதாரங்கள் குறித்துத் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 182க்கும் பிரிவு குறித்துக் கருத்தில் கொள்ள வேண்டும். இதில் வகை செய்யப்பட்டுள்ள "உள்ளாட்சிச் சாலைகள் மானியம்" ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் பராமரிப்பிற்கெனவே குறிப்பிடப்பெற்றதாகும். அத்தகைய சாலைகள் ஊராட்சி ஒன்றிய சாலைகள் என வகைப்படுத்தப்பட வேண்டும் என்பது நோக்கமாகும். இவை வட்டாரங்களுக்கிடையே முக்கியத்துவம் வாய்ந்தவையாக ஏற்கப்பட்டவையாகும் என்பதுடன் முறையாகப் பேணப்பட வேண்டியவையுமாகும். 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி ஒருவருக்கு 40 காசுகள் வீதம் உள்ளாட்சிச் சாலைகள் மானியம் அளிக்கப்பட்டு வந்தது. 15 ஆண்டுகளுக்கு முன்னர், 1981 இல் இருவகைக் கூறுகளின் முறைப்படி அதாவது (அ) ஒருவருக்கு 18 காசுகளாகவும் (ஆ) சாதாரண பாதை எனில் ஒரு கி.மீக்கு ரூ.535 வீதமும், கடற்கரைச் சாலை எனில் ரூ.715 வீதமும், மலைப் பாதைகளுக்கு ரூ.1340 வீதமும் எனத்திருத்தி அமைக்கப்பட்டது. காலங்கடந்த விலை உயர்வினால், ஒரு மீட்டருக்காக தற்போதைய விலை வீதத்தைத் திருத்தியமைப்பது தேவை எனத் தெளிவாகிறது. நாளைய செயற்பாட்டிற்கான வகை முறைமையை மாநில நிதி ஆணையம் வகுத்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், 1996–97 ஆம் ஆண்டுக்கென ஒவ்வொரு வகைப்பாதைக்கும் கிலோ மீட்டருக்கான கட்டண வீதம் குறித்து அறுதியிடலாம் எனவும் ஆண்டுதோறும் உயரும் பணவீக்கக் குறைவின் காரணமாக 5% உயர்வளிக்க அனுமதிக்கலாம் எனவும் மாநிலத் திட்டக்குழு பரிந்துரைக்கிறது. மேலும், ஊராட்சிகளுக்குச் சாலை பராமரிப்பிற்காக நிதி அளிப்பது தொடர்பில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் முழு நீளத்தையும் உள்ளாட்சிச் சாலை மானியத்திற்காக கணக்கெடுக்க வேண்டும்.

11 1992–93 லிருந்து 1996–97 வரை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்ட உள்ளாட்சிச் சாலை மானியங்களின் விவரங்கள் வருமாறு :

தொடர் எண். (1)	ஆண்டு (2)	அளிக்கப்பட்ட மானியம் ரூபாய் இலட்சங்களில் (3)
1.	1992–93	1200
2.	1993–94	1500
3.	1994–95	1728
4.	1995–96	2000
5.	1996–97	2200

ஆதாரம் : ஊரக வளர்ச்சித்துறையின் ஆகஸ்டு '96 செயல் நிறைவேற்ற வரவு, செலவுத் திட்டம்.

உள்ளாட்சிச் சாலை மானியத்தின் 70 விழுக்காடு அளவுத் தொகை பணியாளர்களின் சம்பளம் மற்றும் பிற தொகைகளை வழங்க செலவிடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக அந்த சாலைகளில் மேம்பாட்டிற்கும் பராமரிப்பதற்கும் என சிறிய அளவில் நிதி எஞ்சியுள்ளது. மேலும், உள்ளாட்சி சாலைகள் மானியம் அளிக்கும் நிதியானது சற்றொப்பத் தற்காலிக நிதியாகவே அமைவதையும் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனச் சாலைகளின் முழுநீளமும் கருதப்படவில்லை என்பதும் கண்டறியப் பெற்றது. உள்ளாட்சி சாலைகள் மானியம் என்பதன் கீழ் 1996–97 ஆம் ஆண்டிற்கு மொத்தமாக அளிக்கக்கூடிய நிதி ரூ. 103.30 கோடிகளாகும் என மாநிலத் திட்டக்குழு வாயிலாக அறியப் பெறுகிறது.

மின்சார விநியோகம் உள்ளடங்கலாக ஊரக மின் இணைப்பு

(இனம் - 14)

ஊரக மின்மயமாக்கம் என்பது i) எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்குதல் ii) நீரிறைக்கும் விசையேற்றத்திற்கு மின் ஊட்டுதல் iii) தெரு விளக்குகள் அமைத்தல் iv) சிறு திருட்டுகளைத் தடுப்பதுடன், மின்சக்தியைப் பேணுதல் ஆகியன அடங்கும். 31.03.1995 அன்று, எல்லா நகரங்கள் (439) குடியிருப்பு உள்ள எல்லா ஊர்களுக்கு (15822) 99.897 விழுக்காடு அளவு சிற்றூர்களும் (47845 இல் 47794 ஊர்களுக்கு) மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் பல மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு முதன்மை வகிப்பதுடன் அகில இந்திய சராசரியிலும் முன்னிலை வகிக்கிறது. (85% அளவு மின்சக்தி அளிக்கப்பட்டுள்ளது) ஆதி திராவிடர் குடியிருப்புகள் அனைத்திற்கும் (26713) மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 10.92 இலட்சம் குடிசை வீடுகள் மின்வசதியைப் பெற்றுள்ளது. வேளாண்மைக்கான நீரிறைக்கும் 14.88 இலட்சம் விசையேற்றங்களுக்கு மின்ஊட்டம் பெற்றுள்ளன. 1.4.95 அன்று நீரிறைக்கும் விசைக்குழாய்களுக்கு மின்ஊட்டம் அளிப்பதற்காக 467561 விண்ணப்பங்கள் தமிழ்நாடு மின்வாரியத்திட்ம் நிலுவையாக உள்ளன. அதிகமான பின் நிலுவைக்குக் காரணம், குறைந்த மின்சக்தி அளவினாலாகும். தமிழ்நாடு மின்வாரியம் ஆண்டுக்குச் சற்றொப்ப 40,000 நீர் இறைக்கும் விசைக் குழாய்களுக்கு மின் இணைப்பு அளிக்கிறது.

02. (1.4.95 அன்று உள்ளவாறு) 1166157 தெரு விளக்குகளுள் 910730 (1.4.96 அன்று உள்ளவாறு) விளக்குகளை ஊராட்சிகள் பெற்றுள்ளது. 832557 குழல் விளக்குகள், 36545 குமிழ் விளக்குகள், 4197 சோடிய (ஆவி)ம் விளக்குகள் மற்றும் 2926 மெர்குரி (ஆவி) விளக்குகள் உள்ளன. மின்சாரத்தைக் சேமிப்பதற்காக அரசு குமிழ் விளக்குகள் அனைத்தையும் சூழல் விளக்குகளாக மாற்ற முடிவு செய்துள்ளது. தலைக்கு ரூ. 20 /- க்கும் குறைவான வருவாயை உடைய 7047 ஊராட்சிகள் நிதி பற்றாக்குறை (ரூ. 10/- க்கும் குறைவான வருவாயை உடையவனாக 3452 ஊராட்சிகளும் ரூ. 20/- க்கும் குறைவான வருவாயை உடையனவாக 3590 ஊராட்சிகள்) ஊரக வளர்ச்சித்துறை இயக்குநரால் குறிப்பிடப்பெற்றன. இத்தகைய நிதிப் பற்றாக் குறையுடைய ஊராட்சிகளில் 341426 தெரு விளக்குகள் உள்ளன.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் படி, சாலைகளுக்கும் கட்டிடங்கள் உள்ள பகுதியிலமைந்த பொது இடங்களுக்கும் மின் விளக்குகள் அமைப்பது ஊராட்சிகளின் கடமையாகும். இவ்வாறாக ஊராட்சிகள் தமது சொந்த நிதியிலிருந்து தெரு விளக்குகளைப் பராமரிப்பதற்கான செலவினங்களை ஏற்க வேண்டுமென எதிர்ப்பார்க்கப் படுகிறது. தெரு விளக்குகளுக்கான மின் நுகர்வு கட்டணச் செல்வுகளை மேற்கொள்வதற்கும் வருவாய் குறைந்த ஊராட்சிகளுக்கு என மாநில அரசு ஒவ்வொரு ஆண்டும் தெரு விளக்கு மானியங்களை அளிக்கிறது. 1996 – 97க்கான வரவு செலவு திட்டத்தில் இத்தகைய மானியத்திற்காக 3 கோடி ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பெற்றுள்ளது

03. 1970 – 71 ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஊரக மின்வசதிக் கழகம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு நிதியுதவி அளிக்கிறது. (ஆதி திராவிடர் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு மின்சாரம் வழங்குதல், நீரிறைக்கும் விசையேற்றங்களுக்கு மின்ஊட்டுதல் போன்றவற்றிற்காக) 31.3.95 வரை 412.02 கோடி ரூபாய்களை ஊரக மின்வசதிக் கழகமும் 324.40 கோடி ரூபாய்களை வங்கிகளுக்கும 2083 ஊரக மின்வசதித் திட்டங்களுக்காக கடனாக நிதியுதவி அளித்துள்ளன

04. நெடுந்தொலைவிலுள்ள ஊர்கள் வரையும் பல்வேறு வகையான பயன்பாடுகளுக்காக மின்சாரம் பகிர்மானம் வழங்க தமிழ்நாடு பரந்த தொலைவுவரைப் பணியைக் கொண்டுள்ளது. மின்சக்தி சிறு திருட்டுக்கள் பரந்த அளவில் செய்யப்படும் தொழிலாகி விட்டது. அவை அடிக்கடியிலேயே தமிழ்நாடு மின் வாரியப் பணியாளர்களால் கண்டறியப்பட்டும் வருகின்றன. உள்ளூர் குற்றவாளிகளைப் பிடிக்கும் நோக்கம் எதுவுமின்றி இவ்வாறான சில திருட்டுகளைக் கண்டு பிடிக்கும் பணி முழுவதும் தமிழ்நாடு மின்வாரிய பணியாளர்களுடையதாகும். புதிய மின்கம்பங்கள், மின் மாற்றிகள் அமைப்பது உட்பட புதிய மின் இணைப்புகளைத் தருவது போன்றவை இதுவரை

தமிழ்நாடு மின்வாரியத்தர்ல் முடிவு செய்யப் பெற்று வந்தன. பஞ்சாயத்து இராசிய அமைப்புகள் தோன்றிய பின்னர் கிராமங்களில் மின் மாற்றிகளையும் மின் கம்பங்களையும் நிறுவுவதற்கான புதிய அமைவிடங்களைக் கண்டறிவதற்கான உதவியையும் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து தமிழ்நாடு மின்வாரியம் பெற இயலும் நிலையிலுள்ளது. சூழ்நிலையானது மின்வாரியமும், ஊராட்சிகளும் ஒன்றுக்கொன்று பலனடையதக்க வகையிலும், அவற்றிற்கிடையே ஆக்கப் பணித் தொடர்புகளுக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள இடமளிக்கிறது. தமிழ்நாடு மின்வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட அனைத்து பொருளாதார வளர்ச்சி, நலத் திட்டங்கள் ஆகியவற்றை விழிப்புடன் கண்காணிப்பதற்குரிய சீராய்வு அதிகாரங்களை ஊராட்சி ஒன்றியங்கள் பெற்றிருக்க வேண்டும். மேலும் மாவட்ட நிலையில் மின் ஆற்றல் குறித்துத் திட்டமிடுதலில் அரசு, தமிழ்நாடு மின்வாரியம் ஆகிய இரண்டிற்கும் மாவட்ட ஊராட்சியானது அறிவுரை கூறும்.

04 . மேலே குறிப்பிட்ட பின்புலங்களின் அடிப்படையில் பின்வரும் செய்கடமைகள் ஊரக உள்ளமைப்பு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட வேண்டுமெனப் பரிந்துரைக்கப்பெறுகிறது.

I. ஊராட்சி

தொடர் எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	தெருவிளக்குகளை இயக்குதலும் பராமரித்தலும்	1. தெரு விளக்குகளை பராமரிப்பதற்கான உபகரணங்களை (பல்புகள் / ட்யூபுகள்) கொள்முதல் செய்து விநியோகித்து தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பணியை மேற்கொள்ளுதல்.
2.	மின்னாற்றல் வழங்கப்படுதலைக் கண்காணித்தல்	1) முதன்மைப் பயிர் பருவகாலத்தில் மின் ஆற்றல் வழங்குதலைக் குறித்து அறிக்கை அளித்தல்.

II. ஊராட்சி ஒன்றியம்

தொடர் எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	மின்னாற்றல் வழங்கப்படுதலைச் சீராய்வு செய்தலும் கண்காணித்தலும்	1) ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் வேளாண்மைக்காக மின்சக்தி வழங்குதல், நீரிறைக்கும் விசையேற்றிகளுக்கு மின்ஊட்டுதல் – ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்புத் தருதல், குடிசைகளுக்கு மின் இணைப்பு தருதல் போன்ற தமிழ்நாடு மின் வாரியத்தாலும் அரசாலும் நிறைவேறறப்படுகின்ற அனைத்துத் திட்டங்களையும் கண்காணித்தலும், சீராய்வு செய்தலும்.

III. மாவட்ட ஊராட்சி

தொடர் எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	மின்சக்தியை கண்காணித்தலும் சீராய்வு செய்தலும்	i) அரசின் திட்டங்கள் அனைத்தையும் சீராய்வு செய்தல்; குறிப்பாகநீரிறைக்கும் விசையேற்றிகளுக்கு மின்ஊட்டல் (எண்ணிக்கையிலும் தரத்திலும்) குடிசை மின்னிணைப்பு திட்டம் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளித்தல் ஆகியவற்றுடன் மாவட்டத்தில் மக்கள் நலனுக்காகவும் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் தமிழ்நாடு மின்வாரியத்தால் செயற் படுத்தப்பட்ட எந்த ஒரு திட்டம் குறித்தும் செய்த பணிகளை கண்காணிப்பு (மேற் பார்வை) பொறியாளர்கள் மேற் கொள்வதுடன் மாவட்ட ஊராட்சிகளுக்கு உத்தரவாதமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

சிக்கல்கள்

06. தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பணியில் உரிய நேரத்தில் தெரு விளக்குகளுக்கு மாற்று விளக்குகளைப் பொருத்துவதற்குத் தேவைப்படும் மின் பணியாளர் (கம்பியாளர்) கிடைக்காதிருப்பதே பெருங்குறையாகும். ஊராட்சி ஒன்றியத்துடனும் ஊராட்சியுடனும் இப்போது பராமரிப்புப் பணியினை தமிழ்நாடு மின்வாரியம் மேற்கொண்டுள்ளது. எனினும், மாற்றி வைப்பதறகான மின் சாதனங்கள் ஊராட்சிகளால் வழங்கப்பெறுகின்றன.

07. எல்லா பகுதிகளுக்கும் மின்னொளி வழங்குவதும், எல்லா குமிழ் விளக்குகளையும் நான்கடி குழல் விளக்குகளாக மாற்றி அமைப்பதும் அரசின் கொள்கையாகும். மின்சட்டத்தின்படி தெருவிளக்குகளை இயக்குவது பராமரிப்பது ஆகிய பணிகள் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பெற்றுள்ளன. (அ) தெருவிளக்குகளுக்கான மின் பயனீட்டளவு கட்டணங்கள் (ஆ) நீர் வழங்குதலுக்கான மின் பயனீட்டளவு கட்டணங்கள் (இ) தெருவிளக்குகளைப் பராமரித்தல் ஆகிய மூன்றுக்குமான செலவினங்களை சிற்றூராட்சிகள் ஏற்க வேண்டும். ஊராட்சிகள் அரசு ஆகிய இரண்டுமே பொறுப்பை ஏற்க வேண்டும்.

மரபு சாரா - எரிசக்தி ஆதாரங்கள்

(இனம் - 15)

01. அரசின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய உள்ளீடு எரி பொருளாகும். வளர்ந்து வருகின்ற தொழில் மற்றும் வேளாண்மை நடவடிக்கைகளால் எரிசக்தியின் தேவை அதிகரிக்கிறது. வழக்கத்தில் உள்ள எரிசக்தி ஆதாரங்களின் (நிலக்கரியும் பெட்ரோலியமும்) நெருக்கடி அதிகரிப்பதால் மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் இருக்கும் எரிசக்தியை சிக்கனப்படுத்த மிகவும் பொருத்தமுடையதாக இருக்கும். 2002ல் (ஒன்பதாவது திட்ட முடிவில்) தமிழ்நாட்டின் எரிசக்தித் தேவையானது 9223 மெகாவாட்டாக இருக்கும். எரிசக்தியாக்கம் கிடைக்ககூடியது 6213 சற்றொப்ப 3010 மெகாவாட் பற்றாக்குறையாக இருக்கும். இருந்தபோதிலும், எரிசக்திக்கான தேவையை இயல்பான சிறிய, பன்முகப்படுத்தப்பட்ட, புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்கள், மூலமாக நிறைவேற்றப்படும். நிலைத்திருக்கிற நம்பத்தக்க கிடைப்பதற்கு ஏராளமனதாகவும் உள்ள சூரியன், காற்றோட்டம், உயிரினக் கழிவு, கடல் போன்ற புதுப்பிக்ககூடிய எரிசக்தி ஆதாரங்களின் முக்கியத்துவம் கொள்கையளவில் அதிகரித்து வருவதுடன் இவற்றை மேம்பாடு அடையச் செய்வதும் முறையாக உதவி அளிப்பதும் கொள்கையைச் சார்ந்ததாக அமைகிறது.

02. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் (த.எ.வ.நி) புதுப்பிக்ககூடிய வழக்கத்தில் இல்லாத எரிசக்தி திட்டங்களை நிறைவேற்றும் அரசின் தொடர்பு முகமையாக உள்ளது.

03. தமிழ்நாட்டில் புதுப்பிக்ககூடிய எரிசக்தி வளர்ச்சிக்குக் குறிப்பாகக் காற்றோட்ட எரிசக்திப் (காற்றோட்ட சக்தி உண்டாக்குதல் மற்றும் நீர் இறைப்பு) சிறப்பாக வலியுறுத்தப்படுகிறது; எரி சக்தி (சாணஎரிவாயு சக்தி, இயந்திர மின்னியல், மற்றும் வெப்பஞ்சார்ந்த செயற்பாடுகள், சர்க்கரை ஆலையில் சக்தி ஆக்கம் மற்றும் இணைவு உருவாக்கம்) கதிரவன் சக்தி (கதிர் ஒளியிலிருந்து சக்தி திரட்டும் முறை, கதிரவன் அமைகலம் மற்றும் கதிரவன் காற்று வெப்ப முறை) மற்றும் கடல் சக்தி (கடல் வெப்பஞ்சார்ந்த சக்தி ஆலைகள்) ஆகியனவாகும். இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் பல்வேறுபட்ட ஊக்கமும் ஊக்குதவியும் மரபுசார்ந்த எரிசக்தி ஆதாரங்களுக்கு அளித்து வருகின்றது. இந்திய அரசு (i) கதிரொளி விளக்குகளுக்கு ரூ1500/-ம், (ii) கதிரவன் இறைப்பு மின்னாற்றல் அலகுக்குப் பெருமளவு ரு. 1.50 இலக்கம் எனும் வகையில் ரூ.125/-உம், எளிய கடனாக ரூ.1.00 இலக்கம் வரையும் (மேமிட்ட வட்டி வீதத்தில்) (iii) கதிரவன் பகுதி முறையின் ச.மீ. ஒன்றுக்கு ரூ.800/- வீதமும், (iv) பெரிய அளவிலான எரிவாயு ஆலைகளுக்கு ரூ.75,000/- வரை 40 முதல் 50 விழுக்காடு ஊக்குதலாகவும், (v) இணைந்து உருவாக்கும் சக்தி ஆலைகளுக்கு பெருமளவு ரூ.3.5 இலக்கம் வரை 20% உம், (vi) எரிசக்தி அமைப்புகளுக்கு இவைபோன்று ஊக்குதவியும் அளித்து வருகின்றது. இவைபோன்ற முன்னேற்ற முயற்சிகளுக்கு உரியவாறு ஈடான மானியத்தை மாநில அரசு அளித்து ஆதரவளித்து வருகிறது.

04. மாவட்ட முகமைகள் வாயிலாக ஊரக வளர்ச்சி இயக்ககம் தேசீய உயிரியல் எரிவாயு திட்டத்தைச் (தே.உ.எ.வ.) செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் சாண எரிவாய்வுக் கருவிகள், கழிவறையுடனிணைந்த பையோ எரிவாய்வுக் கலத்துடனான இல்லம் ஆகியன அமைக்கப்படுகின்றது. மேலும் இதுபோன்ற கருவிகள் பள்ளிகளுக்காகவும், தங்கும் விடுதிகளுக்காகவும் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் எரிசக்தியை சேமிக்கும் வகையில் இரட்டை எரிவாய்வுக் கலனிகள் செயற்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்கள் அனைத்துக்கும் இந்திய அரசின் நிதியாதரவு கிடைக்கும். இத்துடன், பயனாளர்களுக்கும் அரசு சாரா அமைப்புகளுக்கும் பயிற்சி, தகவல் தொடர்புகளும் விளம்பரத்திலும், பயிற்சியளித்தலில் ஆதரவும் சேவையும் அளிக்கப்படுகிறது. மேலும் மாநிலத்தில் சாண எரிவாய்வு மேம்பாடு மற்றும் பயிற்சி மையல்கள் ஆகியவற்றை நிறுவியும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மொத்ததில் தமிழ்நாடு 6.15 இலட்சம் சாண எரிவாய்வுக் கலங்களை அமைப்பதற்கு உள்ளாற்றலைப் பெற்றதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதில், 1.81 இலக்கம் கலங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் உள்ளாக்குவதற்குரிய உள்ளாற்றலில் சற்றொப்ப 70% இடைவெளி உள்ளது.

05. மேம்பட்ட தேசீய சூளைகள் அமைப்புத் திட்டம் (மே.தே.சூ.அ.தி.) மைய அரசின் உதவியுடன் 1983–84

முதல் செயற்படுத்தப்படுகின்றது. 1994–95 இல், மைய அரசு உதவியுடன் ரூ.2.53 இலட்சம் எண்ணிக்கையுள்ள சூளைகள் நிறைவெய்தியுள்ளன. இது ஊரகப் பகுதிகளில் வாழும் பெண்கள் கடின வேலை செய்வதிலிருந்து மட்டுமல்லாமல் அதிக அளவில் விறகுக்கட்டை பயன்படுத்துவதையும் பெருமளவு மிச்சப்படுத்த உதவிடும்.

06. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவமும், ஊரக வளர்ச்சி இயக்கமும் இத்திட்டங்களுக்கான நிதியுதவியைப் பெற்று வருகின்றன. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் பின்வருமாறு நிதிகளைப் பயன்படுத்தியள்ளது.

நிதிச் செயலாக்கம்

தொடர் எண்.	மேம்பாட்டுத் திட்டங்கள்	1993-94	1994-95	1995-96
		(ரூபாய் இலட்சத்தில்)		
1.	காற்றோட்ட எரிசக்தி	–	10.00	162.14
2.	உயிரியல் எரிசக்தி	3.00	3.00	10.50
3.	சூரிய வெப்பஞ் சார்ந்தது	69.76	43.50	23.78
4.	எரிசக்தி பேணுகை	25.00	30.00	35.00
5.	ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்	17.00	36.00	80.00
6.	ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டமிடல் மைய அரசால் ஏற்பாடு செய்யப்பட்டது.	17.40	15.24	20.58
	மொத்தம்	**132.16**	**137.74**	**336.50**

07. இப்போதுள்ள நிலையையும் ஊரக மக்களின் ஆதாயத்தற்கெனப்பயன் படுத்துவதற்குக் கிடைகக்கூடிய ஆற்றல்வளங்களையும் கருத்திற்கொண்டு மாநில திட்டக்குழு பிரிவு பின்வருவனவற்றைப் பரிந்துரைக்கிறது.

I. ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. எரிசக்தித் தேவையை மதிப்பீடு செய்தல்	கோபர் எரிவாயு, பையோ மாஸ், சூரியசக்தி மற்றும் காற்றாலைச் சக்தி போன்ற மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களையும் உள்ளாற்றல்களையும் கண்டறிய ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவுதல்.
2. சூரிய சக்தியமைப்பு காற்றாலைகள், கோபார்	(i) தனிப்பட்ட உயிரியல் எரி கலங்கள், காற்றாலைகள், மற்றும் பிற வழிகளில் பயனாளர்களைக் கண்டறிதல்

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
எரிவாயுக் கலங்கள் மற்றும் அதன் விரிவாக்கம் உள்ளிட்ட மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்துதல்	(ii) ஏற்புடை மையங்களில் பயனாளர்கள் பயிற்சி ஏற்பாடு செய்தல். (iii) ஊராட்சியில் செயலாக்க வழிகளைக் கண்காணிப்புச் செய்வதில் உதவிடல் (iv) மரபுசாரா எரிசக்தி வழிகளை/ஆதாரங்களை மேம்படுத்திடல் (v) எரிசக்தி சேமிப்புவழிகளை மேம்படுத்தலும் எடுத்துரைத்தலும்.

II. ஊராட்சி ஒன்றியம்

	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	எரிசக்தி தேவையை மதிப்பீடு செய்தல்	(i) ஊராட்சி ஒன்றியப் மதிப்பீடு செய்தல் பகுதியில் மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களையும் பயன்படுத்து–வதற்கான திட்டங்களை உருவாக்குதல்.
2.	சூரிய சக்தியமைப்பு, காற்றாலைகள் கோபார் எரிவாயுக் கலங்கள், மற்றும் அதன் விரிவாக்கம் உள்ளிட்ட இல்லாத எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்துதல்	(i) மூலப்பொருள்களையும் தள வாடங்களையும் பெற்று வழங்குதல் மற்றும் சாண எரிவாயு, காற்றாலை, உயிரியல் எரிவாயு, காற்றாலை, நடைமுறைப் படுத்துதல் (ii) ஏற்புடைய இடங்களைக் கண்டறிந்து மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை ஒத்த குழுநலம் மற்றும் தனிப்பட்டவர்கள் ஆகியோர் பயனடைவதற்காக அமைத்தல். (iii) மரபுசாரா எரிசக்தி ஏற்பாடுகளை/ஆதாரங்களை மேம்படுத்துதல். (iv) எரிசக்தி பாதுகாப்பு வழிகளை மேம்படுத்தி பொதுமக்களிடையே பரப்புதல். (v) மாறுபட்ட எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்து–வதற்காக அரசு சாரா அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு முகமைகளுக்கிடையே ஒருங்கிணைந்து செய்தல்.

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
	(vi) மரவுசாரா எரிசக்தி ஏற்பாடுகளைப் பேணுவதில் பயன்படுத்துவோருக்குப் பயிற்சி அளித்தல்.
	(vii) திட்டங்களைச் செயலாக்கம் செய்தலும் நடைமுறைப்படுத்துவதிலும் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதலும்.

III. மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. எரிசக்தித் தேவைகளை திட்டமிடல் மற்றும் மதிப்பிடல்	(i) எரிசக்தி சேமிப்புத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை மாவட்டத்தில் தன்னலப்பயன்படுத்துதல்.
	(ii) ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களை மறு ஆய்வு செய்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.
2. மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்துதல்	(i) மாவட்டத்தில் இயலக்கூடிய மற்றும் வளம்பெறக்கூடிய வழக்கத்தில் இல்லாத எரிசக்தித் திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
	(ii) மரபுசாரா எரிசக்தி ஏற்பாடுகளைப் பயன்படுத்துவோர் மற்றும் தயாரிப்பாளர் ஆகியோர்களுக்கு மாவட்ட நிலையில் அவர்களுக்கிடையே பணிப் பட்டறைகளை அமைத்தல் மற்றும் உரிய அலுவலர்களுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

நிர்வாக சிக்கல்கள்

08. மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை பயன்படுத்துவது பெருமளவு செலவு, உயரளவு தொழில் நுட்பம் மற்றும் இடையூறு ஆகியவற்றை உள்ளடக்குதலாகும். காற்றலை சக்தி ஆக்கம், காற்றாலை மின்னாக்கம், சூரிய சக்தி ஆக்கம் மற்றும் நீரேற்று முறைகள் உயரளவு தொழில் நுட்ப மற்றும் உயரளவு ஆராய்வு செய்தல் ஆகியவை தொடர்புடையதாகும். பயோ ஆவியாக மாற்றம், மேம்படுத்திய சூளைகள், சூரிய இயக்கத்தால் விளையும் மின்வலி முறை, சூரியனால் காற்றினை வெப்பப்படுத்தும் முறைகள் ஆகியன உயர்வுச் செலவு மற்றும் தொழில்நுட்ப உள்ளாக்கம் ஆகிய வகை தொடர்புடையதன்று. மரபுசாரா எரிசக்தி ஆதாரவகைகளில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் பயனாளர்களைக் கண்டறிவதிலும், பயனாளர்களுக்கான பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்வதிலும், எரிசக்தி சேமிப்பு வழிவகைகளைப் பரப்புவதிலும் பெருமளவு பங்கு வகிக்கிறது. செயல்திறமுடைய ஈடுபாடும், சமூகப் பங்கேற்பும் இத்திட்டத்தைத் தேசிய அளவில் வெற்றியடையச் செய்யும். ஆகையால் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மேலே

குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களும் செய்கடமைகளும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம மற்றும் ஊரக வளர்ச்சி இயக்ககம் ஆகியவற்றின் முகமைச் செய்கடமைகளாக அளிக்கப்படுவது தேவையானதாகும். மாவட்டம் முழுவதற்குமான மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்துவதற்குரிய திட்டமிடுபவராகவும் ஆலோசனை வழங்குபவராகவும் மாவட்ட ஊராட்சி செயப்படுதல் வேண்டும். மாவட்டத்திற்குள் உள்ள இப்போதைய தொழில் தொகுதியினால் சக்தி தணிக்கை செய்யப்படவும், மாவட்ட ஊராட்சியால் கண்காணிப்பு செய்யப்படவும்., ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். இது மனித ஆற்றல் எதனையும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடமிடுவதோ அல்லது தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்தோ அல்லது ஏதேனும் பிற முகமையிடமிருந்தோ ஊரக உள்ளாட்சியமைப்புகளுக்கு எவ்விடத்திலும் மாற்றுவதாக அமையாது. பிற வகையில், விரிவாக்க அலுவலர்களும், ஊராட்சி ஒன்றிய அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர்களும் அரசு ஆதரவிலான திட்டங்களை வெற்றியுடன் நிறைவேற்றுவதற்காக ஒருங்கிணைப்பிலும் தொடர்வுப் பணியிலும் குறிப்பிடத்தக்க வகையில் செயலாற்ற வேண்டும்.

நிதிச்சிக்கல்கள்

09 ஊராட்சி ஒன்றியங்களிடம் பயனாளர்களைக் கண்டறியும் பொறுப்பு ஒப்படைக்கப்படவிருப்பதால் பயனாளர்களுக்கு அளிக்கக்கூடிய உதவிகள் உதவித் தொகைகளை உரிய மைய அரசு/த.நா. அரசு/த.எ.வ.நி./ இ.ஊ.எ.வ.நி. அல்லது வேறு எந்தவொரு நிறுவனத்திலிருந்தும் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட வேண்டும். நிதியுதவிகளைப் பயன்படுத்துவதற்கும் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் மான்யத்தினை பயன்படுத்துவதற்குரிய பொறுப்பும் பதிலிறுக்க வேண்டிய கடமையும் ஊராட்சி ஒன்றியத்தினதாகும்.

வறுமை ஒழிப்புத் திட்டம்

(இனம் - 16)

01. வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலம் ஏழை மக்களின் வருமானத்தைப் பெருக்கி வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வறுமை ஒழிப்புத் திட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இத்திட்டங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1) பயனாளிகளுக்கு உதவும் திட்டம் 2) சமுதாய சொத்துக்களை உருவாக்கும் திட்டம் என்பனவாகும். ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (JVVT), அதைச் சார்ந்த ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டம் (DWCRA), ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம் (TRYSEM), ஜவஹர் வேலை வாய்ப்பு முனைப்புத் திட்டம் (IJVVT), வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டம் (EAS), போன்ற திட்டங்கள் வறுமை ஒழிப்புத் திட்டங்களின் பெரும் பொருளுடைய திட்டங்களாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் வருமானத்தைப் பெருக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மானியம் மற்றும் கடன் வழங்க வழி வகை செய்யும் நோக்கத்தைக் கொண்டதாகும். வேளாண் தொழிலாளர்களுக்கும் பயிற்சித் திறனற்ற தொழிலாளர்களுக்கும் வேலையில்லாத நாட்களில் வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்திற்காகவே ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

02. 1975 ஆம் ஆண்டு தமிழ் நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஓர் அமைப்பான மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் (DRDA), மாவட்ட அளவில் மேற்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சியாளர் இதன் தலைவராகவும் திட்ட அலுவலர் இதன் உறுப்பினர் செயலாளராகவும் செயற்படுவார். மாவட்ட அளவிலான அரசு அலுவலர்கள், பொது மக்களின் சார்பாளர்கள் கூட்டுறவு வங்கிகள் வணிக வங்கிகளைச் சார்ந்தவர்கள் மாவட்ட அரசு வளர்ச்சி முகமையின் ஆட்சி மன்றக் குழுவில் பெரும் எண்ணிக்கையில் அங்கம் வகித்து வருகின்றனர். ஒருங்கிணைந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் யாவும் மைய அரசின் ஆதரவு பெற்ற திட்டங்களாகும். வேலை வாய்ப்பு அமைச்சகம் விரிவான வழிகாட்டு நெறி முறைகளை வழங்குகின்றன. இத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மாநில மாவட்ட அளவில் மைய அரசு அளவில் முடிவு செய்யப்படுகின்றது. வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகும் ஏற்பாடுகளுக்கான செலவுகளைப் பகிர்வு செய்வதில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு ஆகும் செலவுகளில் 50 விழுக்காடு மைய அரசும், 50 விழுக்காடு மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன. அவ்வாறே ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டச் செலவில் 80 விழுக்காடு மைய அரசாலும், 20 விழுக்காடு மாநில அரசு ஏற்றுக் கொள்கின்றன. இத்திட்டங்களின் செயல்பாட்டில் குறிப்பிடத் தக்கது என்னவென்றால் மாவட்ட, வட்டார மற்றும் கிராம அளவில் இதுவரையில் அலுவலர்களைக் கொண்டே செயல்படுத்தப்பட்டு வருவதாகும். இத்திட்டத்தின் கீழ் உதவி பெறும் பயனாளர்களை தெரிவு செய்வதற்கு மட்டுமே மக்கள் பிரதிநிதிகளின் ஈடுபாடு உள்ளது.

03. தமிழ் நாட்டில் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் அதைச் சார்ந்த திட்டங்களுக்காக மொத்தம் ரூபாய் 1161 கோடி செலவிடப்பட்டுள்ளது. அநேகமாக ஒன்பது இலட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்துள்ளனர். வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான திட்டங்களுக்காக 208.55 கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சுமார் 400 இலட்ச மனித உழைப்பு நாட்கள் உருவாக்குவதற்கு திட்டமிடப் பெற்றது. வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் வேலை வாய்ப்புத் திட்டங்களை மாவட்ட அளவில் சிறந்த முறையில் நிர்வகிக்கத் தேவையான ஒரு அமைப்பின் இன்றியமையாமை குறித்து உணர்ந்த போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் (DRDA), 1981–ம் ஆண்டில் உருவாக்கப்பட்டன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்புகள் தமிழ் நாட்டிலும் பிற மாநிலங்களிலும் 1971–ம் ஆண்டு முதல் செயல்படாத நிலையில் இருந்தபோது அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காகவும் வளர்ச்சித் திட்டப்பணிகளை சீரிய முறையில் நிறைவேற்றுவதற்காகவும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த ஊரக வளர்ச்சி முகமைகள் மைய அரசு, மாநில அரசு ஆகியவை அவ்வப்போது வழங்கும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு

ஏற்ப செயல்பட்டு வருகின்றன.

04. மக்களாட்சி நெறிமுறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சுய ஆட்சி அமைப்புகளில் ஒன்றான மாவட்ட ஊராட்சி மாவட்ட அளவில் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இதுவரை வளர்ச்சிப்பணிகளை தயாரித்து, நிறைவேற்றி வரும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிலைமைகளை ஆய்வு செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. 1994–ம் ஆண்டு ஊராட்சி சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளவாறு மாவட்ட ஊராட்சியும் மாவட்ட திட்டக்குழுவும் மாவட்டத்திற்கான வளர்ச்சித் திட்டங்களை தயாரித்தல், பார்வையிடுதல், கண்காணித்தல் போன்ற பணிகளில் மிக முக்கிய பங்கினை ஆற்ற வேண்டிய நிலையில் உள்ளன. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையானது திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனம் என்று சொல்வதைவிட அது ஒரு ஒருங்கிணைப்பு நிறுவனம் என்றே கூறவேண்டும். இந்நிறுவனம் திட்டங்கள் செயல்படுத்துவதற்கான பணத்தைப் பெற்று ஊராட்சி ஒன்றியங்களிடம் பணிகளை செய்வதற்காக ஒப்படைத்து தொழில் நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குகிறது. அடிமட்டத்தில் கிராம சபையின் உதவிகளை நாடி ஏழைக் குடும்பங்களை தெரிவு செய்வதில் உதவி செய்கிறது. திட்டமிடுவதில் கிராமசபை, ஊராட்சி ஒன்றியங்கள், கூட்டுறவு சங்கங்களின் உதவிகளை மாவட்ட ஊராட்சி நாடுகிறது.

மாவட்ட ஊராட்சிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினை தனக்குள் எடுத்துக்கொள்ளும் போது அந்த முகமை செயல்படும் விதம்போல் செயல்பட வேண்டிய அவசியம் மாவட்ட ஊராட்சிகளுக்கு எழவில்லை. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சில பணிகளை எடுத்து செய்தாலும் மாவட்ட ஊராட்சிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை போன்று செயல்பட வேண்டியதில்லை. சுயேச்சையான நிறுவனங்கள் பணிகளை எடுத்து செய்வது போன்று மாவட்ட ஊராட்சிகளும் எடுத்து செய்யலாம். மத்திய அரசும் மாநில அரசும் பொறுப்பேற்கும் திட்டங்களுள் ஒன்றான வறுமை ஒழிப்புத் திட்டத்தில் 80 விழுக்காடு சிற்றூராட்சிகளுக்கும் 20 விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று முதலமைச்சரின் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளிலிருந்து இந்நிலை தெளிவாக விளங்கும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினைன மாவட்ட ஊராட்சியுடன் இணைப்பது என்ற முடிவு – மாவட்ட ஊராட்சியை ஒரு செயலாக்க நிறுவனமாக மாற்ற வேண்டிய அவசியமில்லை.

இருந்தாலும் வளர்ச்சிப் பணிகளை மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பில் ஏதாவது ஒன்றிற்கு அரசு வழங்குவதற்கு எதுவும் குறுக்கே நிற்காது. இந்திய அரசியலமைப்பு திருத்தத்தின் 243 (ஜி) பிரிவுக் கூறானது ஊராட்சிகளின் மீதான பொறுப்புரிமை மாற்றத்திற்கும் பொறுப்புகளுக்கும் உரிய நிலைகளில் அமைப்பது குறித்து தெவிக்கிறது. அதாவது

(அ) பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்காக திட்டப்பணிகளைத் தயாரித்தல் ;

(ஆ) இவை தொடர்பில் 11–வது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள இனங்கள் உட்பட பொருளாதார மேம்பாடு, சமூக நீதி ஆகிய திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகியவையாகும். 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 257 ஆம் விதியிலும் இந்நிலை வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன. வறுமை ஒழிப்புத்திட்டங்கள் 11வது அட்டவணையில் (16வது இனம்) சேர்க்கப்பட்டுள்ளன.

05. வரலாற்று முறைப்படி மாநில அளவிற்குக்கீழ் "மாவட்ட அளவில் நிர்வாகம்" என்பது எல்லாரும் ஏற்றுக்கொண்ட ஒன்றாகும். பரவலாக்கப்பட்ட ஆட்சி முறை அமைப்பிலுள்ள எந்த ஒரு திட்டத்திற்கும் மாவட்ட அளவிலுள்ள நிர்வாக அமைப்பிற்கு முக்கிய நிலை கொடுத்தாக வேண்டும். உள்ளூர் நிலைகளுக்கு ஏற்ப வளர்ச்சித் திட்டப்பணிகளை தயாரிப்பதும் அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது ஆகிய பணிகளில் முடிவெடுக்கும் அதிகாரம் மாவட்ட அளவில் மக்களாட்சி முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு மாவட்ட ஊராட்சியிடம் அளிக்க வேண்டும். இம்மாநிலத்தைப் பொறுத்தவரை மாவட்ட அளவில் வறுமை ஒழிப்புத் திட்டங்களை நிர்வகிப்பதற்காக நிர்வாக அமைப்பு மாவட்ட ஊராட்சி மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடம் உள்ளது. மூன்று படி நிலை ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை வழங்கவேண்டும் என்று கூறும் அரசியலமைப்புக் கட்டளையானது மாநில அரசு மாவட்ட ஊராட்சிகள் அதிக அதிகாரங்களுடன் சுயாட்சித் தன்மையோடு சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற நோக்கில் இயற்றப்பட்டதாகும்.

06. வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் தயார் செய்து, நிறைவேற்றும் பணிகளை மாவட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று மாநிலத் திட்டக் குழுவின் கண்ணோட்டத்தில் கருதப்படுகிறது. மாதிரி அளவையின்படி (NSS) (1987 – 88) தமிழ் நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருப்பவர்களின் எண்ணிக்கை 32.8 விழுக்காடாகும். 1.77 கோடி மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு இல்லா நிலைமையும் தமிழகத்தைப் பொறுத்தவரை சற்று அதிகமாகவே உள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத் தொடக்கத்தில் 11.87 விழுக்காடு அளவினர் வேலையில்லாமல் இருப்பதாக தேசிய மாதிரி அளவிடு அறிக்கை கூறுகிறது. வறுமையின் தன்மை, அளவு, வேலையில்லாததோரின் நிலை, வாய்ப்பு வள அமைப்பு, சமூக, பொருளாதாரப் பிரச்சனைகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாறுபடுகின்றன. இத்தகைய மிக முக்கியமான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் உள்ளூர் தலைமைக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது மிகவும் இன்றியமையாததாகும்.

07. மக்களாட்சி பரவலாக்கும் அணுகுமுறைக்கு அலுவலர்களை அதிகமாகக் கொண்டுள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பொருந்துவதாகாது. மாவட்ட அளவில் வலுவிழந்த மக்களாட்சி அமைப்பு ஒரு புறமும், அதிகார வர்க்கத்துடன் கூடிய பலமான நிர்வாக அமைப்பான ஊரக வளர்ச்சி முகமை மறு பக்கமும் இயங்க முடியாது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகள் வந்த பிறகு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தேவையற்றதொரு அமைப்பாகும் என மாநிலத் திட்டக்குழு கருதுகிறது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தற்போதைய நிலையுடன் தொடர்ந்து நீடிப்பதானது மாவட்ட ஊராட்சியின் நிலையினைக் குறைப்பதோடு அதனை பின்னுக்கும் தள்ளி விடும். மேலே குறிப்பிட்டுள்ள இந்நிலையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையைக் கலைத்துவிட்டு அம்முகமை இதுவரை செய்து வந்த அதனுடைய அனைத்துப்பணிகளையும் மாவட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிறது. மாவட்ட ஊராட்சியின் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவரான மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்தில் இருப்பார். மாவட்ட அளவில் நிறைவேற்றப்பட்டு பெரிய அளவில் நடைபெற்று அனைத்து திட்டங்களையும் வறுமை ஒழிப்பு திட்டம் என்ற ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வரலாம். மலைப்பகுதி மேம்பாடு திட்டம் (HADP), வறட்சிக்கு இலக்காகும் திட்டம் (DPAP) போன்ற நிலவள மேம்பாடு திட்டங்களும் நடைமுறையில் உள்ளன. ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டத்தை ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியப்பகுதிக்கான வளர்ச்சித் திட்டத்தை ஊராட்சி ஒன்றியமும் தயார் செய்வதற்கு ஊராட்சிகள் சட்டம் வழிவகை செய்துள்ளது. பல்வேறு துறைகளின் மூலம் நிறைவேற்றப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களுடன் வறுமை ஒழிப்பிற்கான திட்டங்களும் முறையாக இணைந்து நிறைவேற்றப்பட வேண்டுவது இன்றியமையாததாகும். மாவட்ட ஊராட்சி மற்றும் மாவட்ட திட்டக்குழு ஒருங்கிணைந்து செயல்படும்போது தான் மாவட்டத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கானத் திட்டங்களைத் தீட்டி செம்மையாக செயல்படுத்த முடியும்.

08. மாவட்ட ஊராட்சிகள் செய்ய வேண்டிய சட்டப்படியாகவும் கட்டுப்பாட்டுடனும் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் மாவட்ட ஊராட்சிக்குத் தேவையான செயலக ஆதரவு குறித்தும் அரசு ஏற்கனவே முடிவெடுத்து வெளியிட்டுள்ள அறிவுரைகளையும் இக்குழு கருத்தில் கொண்டுள்ளது. மாவட்ட ஊராட்சியின் முதன்மை செயலாக்க அலுவலராக மாவட்ட வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மாவட்ட ஆட்சியரகத்தில் வளர்ச்சிப் பிரிவுப் பணியாளர்களும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் பணியாற்றிய சில அலுவலர்களும் ஏற்கனவே மாவட்ட ஊராட்சியின் கீழ் பணியாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஊராட்சியின் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து 15–10–96 ஆம் நாளும், 226 நிலை எண்ணும் பெற்ற ஊரக வளர்ச்சித்துறை அரசாணையில் பட்டியலிட்டுக் குறிப்பிடப் பெற்றுள்ளன. இத்திட்டங்களின் நிறைவேற்றம் குறித்தும் ஆய்வு குறித்தும் ஊராட்சிகள் முடிவெடுக்க வேண்டியுள்ளன. அரசின் இவ்வாணைகள் சரியான பாதையில் எடுக்கப்பட்ட நல்ல முடிவுகளாகும். மாவட்ட ஊராட்சிகள் செயல் திறனுள்ள நல்லதொரு அமைப்பாக திகழச் செய்ய இவ்வாணைகள் நிறைவேற்றப்பட வேண்டும். பலதரப்பட்ட பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு ஏதுவாக மாவட்ட ஊராட்சிகளுக்குத் தேவையான தொழில் நுட்ப மற்றும் நிர்வாகத் திறன் பெற்றுள்ள வல்லுனர்களை நியமனம் செய்தல் வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கலைக்கப்பட்டால், அதிலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மாவட்ட ஊராட்சிப்பணிகளுக்கு மாற்றப்பட வேண்டும். மேலே கூறப்பட்டுள்ள பின்னணியில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கீழ்க்கண்ட அதிகாரங்களையும், பணிகளையும் வழங்குவதற்கு மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிறது.

I. ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. சுய வேலை வாய்ப்புத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம் பாட்டுத் திட்டம் ஆகிய இத்திட்டங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்துதல்.	(1) பயனாளிகள் தேர்வில் உதவி உதவி செய்தல் – வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் பட்டியலைத் தயார் செய்வதில் உதவி புரிதல்.
	(2) பயனாளர் நலத்திட்டங்களைச் செயற்படுத்துவதில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவி செய்தல்.
	(3) ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டம் ஊரக இளைஞர்கள் சுய வேலை திட்டங்களில் பயனாளிகளுக்குத் தேவையான பணியிடங்கள், பணிப்பட்டரைகள் கட்டுவதில் உதவி புரிதல்.
	(4) சிற்றூராட்சிகளிடம் உடைமையாக உள்ள நிலங்களையும், பொதுச் சொத்து வளங்களையும் உற்பத்தி நோக்கங்களுக்குப் பயன்படு வதற்காக பயனாளர்களுக்கு ஒதுக்கீடு செய்தல் / குத்தகைக்கு விடுதல்.
	(5) வங்கிகளுக்குச் சேரவேண்டிய கடன் பாக்கிகளைத் திரட்டுவதில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவி புரிதல்.
	(6) பயனாளிகள் நலனுக்கென செயற்படுத்தப்படும் திட்டங்களை செம்மையாக செயல்படு வத்துவதை கண்காணிப்பதில் மேற்பார்வையிடுவதில் உதவி செய்தல்.
	(7) சொத்துக்கள் மானியத் தொகை மற்றும் கடன் ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்துவது குறித்து ஊராட்சி ஒன்றியங் களுக்குத் தெரிவித்தல்.
2. கிராம கைவினைஞர்களுக்கு நவீன கருவிகள் வழங்கும் திட்டம்	கிராம கைவினைஞர்களுக்குத் தேவையான நவீனக் கருவிகள் (TOOLKIT) வழங்கும் திட்டத்தில் பயனாளர்களைத் தேர்வு செய்வதில் உதவி புரிதல்.
3. ஊதிய வேலை வாய்ப்புத் திட்டங்களான ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், ஐ.வே.வா. முனைப்புத் திட்டம், வேலைக்கு உறுதி அளிக்கும் திட்டம்	(1) ஊதிய வேலை வாய்ப்புத் திட்ட பணிகளில் சேருவதற்கான பயனாளிகளைச் சிற்றூராட்சியில் தெரிவு செய்வதற்கு உதவி புரிவதோடு அவர்களுக்குத் தேவையான அடையாள அட்டை வழங்கல்.

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
	(2) மேற்படி திட்டங்களுக்கான செயற்திட்டங்களைத் தயார் செய்து ஊராட்சி ஒன்றியத்தின் தொழில் நுட்ப ஒப்புதலைப் பெறுதல்.
	(3) பணிகள்/திட்டங்கள் நிறை வேற்றுவதற்கான பணிக் குழுக்களை அதைத்தல்.
	(4) கிராமத்திலுள்ள தகுதி வாய்ந்த குடும்பங்கள் அனைத்திற்கும் வேலை கிடைப்பதற்கு உறுதி செய்தல்.
	(5) பணிகள், சொத்துக்கள் உருவாக்குதல் மற்றும் மனித உழைப்பு நாட்களை உருவாக்குதல் போன்ற நிகழ்வுகளில் கண் காணிப்பு மற்றும் மேற் பார்வையிடுவதில் உதவி செய்தல்.
4. மில்லியன் கிணறுகள் திட்டம் (MWS)	(1) பயனாளிகள் தெரிவு செய்தல்
	(2) ஐ.வே.வா. திட்டம் மற்றும் ஐ.வே.வா. முனைப்புத்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் வேளாண்மைப் பணிகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் பயனாளிகள் திட்டத்திற்கு ஏற்பளித்து நிதி ஒதுக்கீடு செய்தல்.
	(3) பயனாளியின் நிலத்திற்கு அப்பால் பாசனக்கிணறுகள் இருப்பின் அந்நிலத்தை மாற்றுதல் அல்லது குத்தகைக்கு எடுப்பதில் பயனாளி களுக்கு உதவி புரிதல்.
	(4) ஐ.வே.வா. திட்டம், ஐ.வே.வா. முனைப்புத் திட்டம் வேளாண் உதவி திட்டம் ஆகிய திட்டங் களில் வேளாண் வளர்ச்சிக்கென உள்ள திட்டங்களில் பயனாளிகளுக்கு உதவி புரிதல்
	(5) திட்டப் பணிகளின் செயலாக்கத்தை கண்காணித்து மேற்பார்வையிடுவதுடன் ஊராட்சி ஒன்றியங் களுக்கு அறிக்கை அளித்தல்.
5. நில வளர்ச்சிக்கான திட்டங்கள் (வறட்சி இலக்காகும் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலைத்திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்)	(1) திட்டத்தயாரிப்பு பணிகளில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவி புரிதல்.
	(2) இச்செயல் திட்டங்களின் கீழமைந்த பல்வேறு திட்டப் பணிகளுக்காகப் பயனாளிகள் தேர்வு செய்வதில் உதவி புரிதல்.

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
	(3) சிற்றூராட்சியின் உதவி தேவைப் படும் திட்டப்பணிகளில் அதனை செம்மையாகச் செய்து முடித்திடும் வகையில் உதவி செய்தல்.
	(4) பணிகளின் தன்மை, தரம் பற்றி மேற்பார்வையிட்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு முன்னேற்றம் குறித்துத் தெரிவித்தல்.
6. பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டம் (DDP)	மக்களுக்கு அவசிய, மிகவும் அத்தியாவசிய தேவையென கருதும் பணிகளைத் தேர்ந்தெடுத்து ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி களுக்குத் தெரிவித்து அத் திட்டங்களை பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டத்தில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்தல்.

II. ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. சுய வேலை வாய்ப்புத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக பெண்கள மற்றும் குழந்தைகள் மேம் பாட்டுத் திட்டம் ஆகிய இத்திட்டங்களை திட்டமிட்டுச் செயற்படுத்துதல்.	(1) சிற்றூராட்சிகளின் மூலம் தகுதி வாய்ந்த பயினாளிகளைத் தெரிவு செய்தல். அத்துடன் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம், ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கான திட்டம் தயாரித்தல்.
	(2) பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் மானியம் மற்றும் கடன் வழங்கு வதற்காக விண்ணப்பங்களை செயல் முறைப்படுத்துதல்.
	(3) வங்கிகளிடமிருந்து கடன் வழங்கத் தேவையான ஏற்பாடுகள் செய்தல்.
	(4) பயனாளிகளுக்கு நல்ல பயனைக் கொடுக்கும் திட்டங்களைத் தேர்வு செய்வதிலும் நடைமுறைப் படுத்து வதிலும் உதவி புரிதல்.
	(5) ஊரக இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தில் சேருவதற்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களை தெரிவு செய்தல்
	(6) பயிற்சி முடிந்த பிறகு அப்பயனாளிகளுக்கு சுயவேலை வாய்ப்புத் தொடங்க வேண்டிய உதவிகள் தொடர் நட வடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
	(7) ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் சேருவதற்குத் தேவை யான பெண்கள் குழுக்களை அமைத்து அவர்களுக்கு பயிற்சிகள் கொடுத்து திட்டங்களைத் தயார் செய்து நடைமுறைப் படுத்த உதவிகள் புரிதல்.
	(8) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் பயனாளிகளுக்குத் தேவை யான தரம் வாய்ந்த சொத்துக் களை உருவாக்குதல், கருவிகள் வழங்கல்.
	(9) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் ஊரக பெண்கள் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் பயனாளிகளால் தயாரிக்கப்பட்ட பொருட்களை நல்ல விலைக்கு விற்பதற்கு வேண்டிய உதவிகள்/ ஏற்பாடுகள் புரிதல்.
	(10) பயனாளிகள் குறிப்பிட்ட பணி களுக்குத் தேவையான உள்ள மைப்பு வசதிகளைச் செய்து கொடுத்தல்.
	(11) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் மற்றும் ஊரக பெண்கள் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் பயனாளிகளின் நலனுக்காக மற்ற திட்டங்களிலிருந்தும் பயன்பெறும் அளவில் திட்ட ஒருங்கிணைப்பு செய்தல்.
	(12) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், மற்றும் ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் சுய வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டப் பணிகள் செம்மையாக செயல்பட கண் காணித்தல் மற்றும் மேற் பார்வையிடல்.
	(13) மாவட்ட ஊராட்சிகளுக்கு இத் திட்டப் பணிகள் தொடர்பான காலாண்டு அறிக்கை அனுப்புதல்.
	(14) பயனாளிகளுக்கான திட்டங்களை மதிப்பீடு செய்வதில் உதவி புரிதல்.
2. கிராம கைவினைஞர்களுக்கு நவீன கருவிகள் வழங்கும் திட்டம்.	(1) இத்திட்ட உதவிக்காக தகுதி வாய்ந்த கைவினைஞர் பயனாளி களை தெரிவு செய்து அவர் களுக்குத் தேவையான நவீன கருவிகளை சிற்றூராட்சிகள் மூலம் வழங்குதல்.

	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
3.	ஊதிய வேலை வாய்ப்புத்திட்டம் (ஹ.வே.வா.திட்டம் / ஜ.வே.வா.மு.திட்டம்/ வே.வா.உ.திட்டம்)	(1) ஊராட்சி ஒன்றிய நிதியத்துடன் தேவையான திட்டங்களைத் தயாரித்தல். (2) சிற்றூராட்சிகளால் ஆதரவு தரப்படும் திட்டங்களை ஆய்வு செய்து தொழில் நுட்ப இசைவு வழங்குதல். (3) செயல் திட்டங்களுக்கும், திட்டங் களுக்கும் தேவையான கருவி களைக் கொள்முதல் செய்து வழங்குதல். (4) செயல் திட்டங்களையும், திட்டங் களையும் நிறைவேற்றவதற்குச் சிற்றூராட்சி களுக்குத் தொழில் நுட்ப உதவிகள் அளித்தல். (5) வேலை வாய்ப்புப் பதிவேடுகளை பணிகளின் தரம், ஏற்படுத்தப்பட்ட சொத்துக்கள், ஊராட்சி ஒன்றியங் களாலும், ஊராட்சிகளாலும் உருவாக்கப்பட்ட வேலை நாட்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தல். (6) காலாண்டு அறிக்கைகளையும் பயனீட்டுச் சான்றிதழ்களையும் பெற்று அவற்றினை மாவட்ட ஊராட்சிகளுக்கு அளித்தல்.
4.	மில்லியன் கிணறுகள் திட்டம் (MWS)	(1) மில்லியன் கிணறுகள் திட்டம் மற்றும் சிறு பாசன திட்டத்திற்குத் தேவையான தகுதி வாய்ந்த பயனாளிகளுக்குச் சிற்றூராட்சி கள் மூலம் தெரிவு செய்தல். அத்துடன் பயனாளிகள் உதவி யுடன் கிணறுகள் தோண்டுதல். (2) செலவு தொகை வழங்கல். பணியினை மேற்பார்வையிடல் மற்றும் பணி முடிந்ததற்கான சான்றிதழ் வழங்குதல். (3) சிறு பாசன கிணறுகளுக்கு மின் இணைப்பு அளிப்பதற்கான திட்டங்களை தயாரித்தல், வங்கிகள் மூலம் நிதி உதவி பெறவும் கடன் வழங்கவும் ஆவன செய்தல். நீரிறைக்கும் விசைக் குழாய்களை அமைப்–பதற்குத் தேவையானவற்றைக் கொள்முதல் செய்து வழங்குதல். (4) மின் இணைப்பிற்காக தமிழ்நாடு மின் வாரியத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
		(5) திட்டப்பணிகள் குறித்து மேற் பார்வையிட்டு அதன் முன்னேற்றம் பற்றி மாவட்ட ஊராட்சிக்கு அறிக்கை அனுப்புதல்.
5.	நிலைவளர்ச்சிக்கான திட்டங்கள் (வறட்சிக்கு இலக்காகும் திட்டம் மே.தொ மே.தி மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்)	(1) இச்செயல் திட்டங்களின் கீழ் திட்டங்களை உருவாக்குவதற்கு மாவட்ட ஊராட்சியிடமிருந்து தொழில் நுட்பப்பணிக்கான ஏற்பினையும் நிதி ஒதுக்கீடு ஏற்பினை பெறுதல்.
		(2) சிற்றூராட்சிகளின் நெருங்கிய ஒத்துழைப்போடு திட்டங்களை செயற்படுத்துதல்.
		(3) அப்பகுதிக்கான திட்டங்கள் செயல்திட்டங்கள் ஆகியவற்றுடன் வறுமை ஒழிப்புத் திட்டங்களையும் ஒருங்கிணைத்தல்.
		(4) திட்டம் நடைபெறும் பகுதிகளில் சுற்றுப்பற சூழ்நிலை மற்றும் உயிரின வாழ்க்கை தொடர்பான புள்ளி விவரங்களை சேகரித்துக் பராமரித்தல்.
		(5) திட்டப்பணிகளின் தரம், தன்மை பற்றி மேற் பார்வையிடல்.
		(6) திட்டப்பணிகளை மேற்பார்வை யிட்டு மாவட்ட ஊராட்சிக்கு அறிக்கை அனுப்புதல்.
6	பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம்	பரவலாக்கப்பட்ட மாவட்டத்திட்டப் பணிளை ஊராட்சிகள் மூலம் செய்தல்.

III. மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள் (அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டம் ஆகிய திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்தல்.	1. மாவட்ட அளவில் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்ஒட்டுமொத்த திட்டமிடுதலும், யுக்தானுசாரமும் 2. சிற்றூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியம் அளவில் திட்டமிடுதலில் தொழில்நுட்ப உதவி வழங்கல் 3. இத்திடங்களின் கீழ்வரும் பணிகளின் தன்மையினை ஆராய்ந்து நிதி ஒதுக்கீடு செய்தல் மற்றும் வங்கிகளுக்கு மானியம் வழங்கல் தொடர்பான பணிகளை கவனித்தல்.

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
(ஆ) பத்து லட்சம் (மில்லியன்) கிணறுகள் திட்டம் (MWS) (இ) கிராம கைவினைஞர்களுக்கான நவீன கருவிகள் வழங்கும் திட்டம் (ஈ) ஊதிய வேலைவாய்ப்புத் திட்டங்கள் (ஐ.வே.வா.தி) ஐ.வே.மு.தி, வே.உ.தி). (உ) நிலவளர்ச்சிக்கான திட்டங்கள்(ITDP WGDP/ DPAP/ HADP) மற்றும் மாவட்ட பரவலாக்கல்பட்ட திட்டம் (DDP)	
(2) வறுமை ஒழிப்புத்திட்டங்களை கண்காணித்தல், ஆய்வு செய்தல் மற்றும் கணிப்பாய்வு செய்தல்	1. வறுமை ஒழிப்புத்திட்டப் பணிகளை அவ்வப்போது கண்காணித்து, ஆய்வு செய்து கணிப்பாய்வு செய்தல். 2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் விதி எண்.114 (2)ன் படி சிற்றூராட்சிகளின் கீழ் வராத மாவட்டத்தில் செயல்–படுத்தப் பட்டு வரும் அனைத்து துறைப்பணிகளையும் ஆய்வு செய்தல்.

நிர்வாகச் சிக்கல்கள்

09. அண்மையில் பஞ்சாயத்து சட்டம் (1994 ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம்) நிறைவேற்றப்பட்ட பிறகு சட்டப்படியான இரண்டு அமைப்புகள் அதாவது மாவட்ட ஊராட்சி மற்றும் மாவட்டத் திட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளன. இதில் மாவட்ட ஊராட்சி ஏற்கனவே அமைக்கப்பட்டு விட்டது. மாவட்டத்திட்டக்குழு அமைப்பதற்கான விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி கூடிய விரைவில் மாவட்ட திட்டக்குழு அமைக்கப்படும். இவ்விரு அமைப்புகளுடன் 1958 ம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மாவட்ட வளர்ச்சி மன்றமும் உள்ளது. 1975ம் ஆண்டு சங்கங்களின் பதிவுச்சட்டப்படி எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் ஏற்படுத்தப்பட்டன. எனவே மாவட்ட அளவில் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்க, நடைமுறைப்படுத்த, ஆய்வு செய்வதற்கு என மாவட்ட நிலையில் நான்கு அமைப்புகள் உள்ளன. இவற்றுள் சில நிறுவனங்கள் அமைப்பில் ஒற்றுமை உள்ளது. அவற்றின் பணிகளும் ஒன்றுக்கொன்று பிணைந்திருக்கின்றன. மாவட்ட ஊராட்சியின் பணிகளும் மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் பணிகளும் ஒன்றுபோல் உள்ளன. எனவே ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் ஒரே விதமான பணிகளை செய்ய வேண்டிய நிலையிருப்பதனால் மாவட்ட வளர்ச்சிப்பாதையில் தடைக்கல்லாக அமையலாம். மாவட்ட ஊராட்சிகளே வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றுமுள்ள வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொண்டு மாவட்டத்திலுள்ள மற்ற வளர்ச்சிப் பணிகளையும் கண்காணிக்க வேண்டும் என்று மாநிலத்திட்டக்குழு பரிந்துரை செய்துள்ளது. மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் பணிகளை மாவட்ட ஊராட்சிகள் மேற்கொள்வதால் மாவட்ட வளர்ச்சி மன்றம் என்ற ஒரு அமைப்பு தேவையில்லை. எனவே 1958ம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்ற சட்டத்தினை நீக்குவதன் வாயிலாக மாவட்ட வளர்ச்சி மன்றத்தினை கலைத்து விட மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிறது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தற்போது செய்து வரும் வறுமை ஒழிப்புத் திட்ட செயல்பாட்டினை மாவட்ட ஊராட்சிகள் செய்ய வேண்டும் என்று மாநிலத் திட்டக் குழு ஏற்கனவே பரிந்துரை செய்துள்ளதால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையை கலைத்துவிட்டு அதிலுள்ள பணியாளர்கள் சொத்துக்கள் மற்றும் கடன்களை (Assets and Liabilities) மாவட்ட ஊராட்சிக்கு மாறுதல் செய்ய மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிறது.

நிதிச் சிக்கல்கள்

10. மாவட்ட வளர்ச்சி மன்றம் கலைக்கப்பட வேண்டும் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மாவட்ட ஊராட்சியுடன் இணைக்கப்படவேண்டும் என்று மாநிலத்திட்டக்குழு ஏற்கனவே பரிந்துரை செய்துள்ள நிலையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கான மைய மற்றும் மாநில அரசும் ஒதுக்கீடு செய்யும் நிதி அனைத்தும் மாவட்ட ஊராட்சி மூலம் பெறப்பட வேண்டும். கணக்குகள் பராமரிப்பு மற்றும் செலவுத்தணிக்கை தொடர்பாக அரசு விளக்கமான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட வேண்டும். மாநில சட்ட மன்றத்தின் முன் வைப்பதற்கு ஏதுவாக மாவட்ட ஊராட்சிகள் ஆண்டு அறிக்கையினை அரசுக்கு அனுப்ப வேண்டுமென்பதற்கு ஊராட்சிகள் சட்டத்தின் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆண்டுக்கணக்கு மற்றும் ஆண்டு அறிக்கை தயார் செய்து மாவட்ட ஊராட்சிகளின் கணக்குகளை முறையாக உள்ளாட்சி நிதித்தணிக்கை (Local Fund Audit) மூலம் தணிக்கை செய்வதற்கும் மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிறது.

11. பல்வேறு திட்டப்பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டினை மைய அரசு மாநில அரசு மூலம் அல்லாமல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு நேரடியாக அனுப்பி வருகிறது. சுயாட்சி கொள்கை அடிப்படையில் மாநில அரசு மூலமாகவே மைய அரசு நிதி ஒதுக்கீட்டினை செய்வது தான் முறையானதாகும். வறுமை ஒழிப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்குச் தேவையான மைய மற்றும் மாநில அரசின் உதவியும், பங்கும் பணத்தினை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாவட்ட ஊராட்சிகள் மூலம் வழங்க வேண்டும்.

சட்டச்சிக்கல்கள்

12. 1958ம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்றம் சட்டத்தை நீக்குவதற்கும் தமிழ்நாடு பதிவுச்சங்கங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை கலைப்பதற்கும் மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிறது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் விதி எண் 241(1)ன் படி மாவட்ட திட்டக் குழுவினை கூடிய விரைவில் அமைக்கவும் பரிந்துரை செய்கிறது. மேலும் கிராமம், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவில் மாவட்ட திட்டம் தயாரிக்கும் பணியில் உதவி செய்வதற்காக தகுதி வாய்ந்த தொழில் நுட்ப பிரிவு ஒன்றை அமைப்பதற்கும் பரிந்துரை செய்கிறது. சட்டமுறை விதிமுறைகள் படி ஊராட்சிகள் சிற்றூர்களுக்கான திட்டங்களை வகுத்து மேல்மட்ட அளவில் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி திட்டங்களுடன் இணைக்கப்பட்டு மாவட்ட திட்ட குழுவிடம் சமர்பிக்கப்படவேண்டும். பரவலாக்கம் மற்றும் பரவலாக்கப்பட்ட திட்ட முறைகளைப் பின்பற்றுவதற்கு 241(1)ன் சட்டப்பிரிவு அமல்படுத்தப்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

தொடக்க மற்றும் இடை நிலைப் பள்ளிகள் உள்ளடங்கலாக கல்வி

(இனம் - 17)

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 45–ஆவது பிரிவுக்கூறின்படி இச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து, அதாவது, 1960–ஆம் ஆண்டிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டுமென அரசு நிர்ணயித்துள்ளது. குறிப்பாக, 5 வயது முடிந்ததும் பள்ளியில் சேர்ந்து தொடர்ந்து எட்டு ஆண்டுகளுக்கு, அதாவது, எட்டாம் வகுப்புவரை கல்வி அளிக்க இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், நாடு விடுதலை பெற்று 50 ஆண்டுகள் நிறைவு பெற உள்ள நிலையிலும் இந்த நோக்கம் நிறைவு பெறா நிலையே நிலவுகிறது. அனைத்திந்திய அளவில் இம்முக்கியத்துவத்தின் குறைபாடு நன்கு அறியப்படுகிறது. தமிழ் நாட்டில், தொடக்கக் கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல் என்பதைப் பொறுத்தவரையில் இந்த இடைவெளியானது பொதுவில் பெருமளவு தரத்திலும், குறிப்பாகப் பெண்களைப் பொறுத்தவரையில் அளவிலும், தரத்திலும், அமைந்துள்ளது. (6–11 வயதுப் பெண்கள் பிரிவுக்கு 5% மற்றும் 11–14 வயது பிரிவுக்கு 11%). வட்டாரத்தில், சில குடியிருப்பிடங்கள் தொடக்கக் கல்விக்கு வாய்ப்பில்லாமல் அல்லது குறைந்த வாய்ப்புடன் உள்ளன. இந்த இடைவெளியானது, பெரும் எண்ணிக்கையில் பள்ளிகள் கட்டப்பட்டு, கடந்த பத்தாண்டுகளில் 5704 கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்ட நிலையிலும் நீடிக்கிறது. தொடக்கக் கல்வி அளிப்பதிலும், பிற குறைந்த அளவு அடிப்படை வசதிகள் செய்து தருவதிலும், மாநில அரசுக்குரிய கடமையும், பொறுப்பும் பற்றி அண்மையில் 1996–ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது. தொடக்கக் கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல் என்பது திட்டத்தின் முதன்மை நோக்கமாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், இதனை, இயன்ற அளவு குறுகிய காலத்தில், அதாவது, ஒன்பதாவது திட்டக் காலத்திற்குள் நிறைவு செய்யப்படவும் வேண்டும்.

02. தொடக்கக் கல்வியில் தமிழ்நாட்டில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி சுருக்கமாகத் தொகுத்துரைக்கலாம். இப்போது, இம்மாநிலத்தில் 30471 தொடக்கப் பள்ளிகளும் 5549 ஆதாரப் பள்ளிகளும் உள்ளன. ஒவ்வொரு கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளும் 500 பேருக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்டுள்ள ஒவ்வொரு குடியிருப்பிலும், பள்ளிக்குச் செல்லும் வயதிலுள்ள குழந்தைகளுக்கு எளிதான வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதற்கென தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கலாம். இவ்வாறாக, 99.6% குடியிருப்பிடங்களில் முன்னரே தொடக்கப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் 204 குடியிருப்பிடங்களுக்கு மட்டுமே தொடக்கப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளன. பள்ளியில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை, 6–11 வயதுக்குட்பட்டவர்களில் 100.31% மற்றும் 11–14 வயதுக்குட் பட்டவர்களில் 99.12% ஆகும். (பள்ளியில் சேர்ந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை அந்தந்த வயதுத் தொகுதிகளில் உள்ளவர்களில் பள்ளிக்குச் செல்லும் மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையை, உள்ளபடியாகப் பள்ளியில் சேர்க்கப் பட்டவர்களின் எண்ணிக்கையால் வகுப்பதன் அடிப்படையில் கணக்கிடப் பட்டுள்ளது) தொடக்கப்பள்ளி மற்றும் நடுத்தரப் பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் மொத்த எண்ணிக்கையானது 88.94 லட்சங்களாகும்.

03. தொடக்கக் கல்விக்கு, 1996–97இல் ஒதுக்கப்பட்ட நிதியானது. 1232.22 கோடி ரூபாய்களாகும். இது, கல்விக்கென மாநில அரசுக்கு ஏற்படும் செலவில் கணிசமான அளவாகும். பள்ளியில் சேர்க்கப்பட்டவர்களின் கணக்குபடி அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்கப்பட்ட நிலையினை இம்மாநிலம் அடைந்து விட்டதாகக் கூறப்பட்டாலும், பள்ளியில் சேர்க்கப்படாமல் விடுபட்டவர்கள், பள்ளியில் குறைந்த எண்ணிக்கையில் பெண்கள் அனுமதி, ஆசிரியர்கள் பற்றாக் குறை முதலியவை தொடக்கக் கல்வியின் தரத்தையும், பயனுடைமையையும் குறைத்துவிட்டன. எனவே, இனிவரும் ஆண்டுகளில், தொடக்கக் கல்வியின் செயலெல்லையானது, (1) 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்துத் தொடர்ந்து படிக்க வைத்தல் (2) குறைந்தபட்ச அளவு கல்வியளிக்க கல்வித் தரத்தைப் போதிய அளவில் மேம்படுத்துதல் (3) பள்ளியில் சேர்த்து தொடர்ந்து படிக்கவைக்கப்படும் பெண்களின் எண்ணிக்கையை உயர்த்துவதில் முன்னேற்றம் காணல் என்பனவாக வலியுறுத்தப்பெற வேண்டும்.

04. இந்நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டில் இக்கல்வி நிலையங்கள் தொடங்கப்பட்டபோது, தொடக்கக் கல்வி அளிப்பதென்பதானது, பெரும்பாலும் உள்ளாட்சி அமைப்புகளளின் பொறுப்பாகவே இருந்தது. உள்ளாட்சிக் கழகங்களும், மாவட்டக் கழகங்களும் நிறுவப்பட்டு, தொடக்கப் பள்ளிகளையும், நடுத்தரப் பள்ளிகளையும், உயர் நிலைப் பள்ளிகளையும் பராமரித்து வந்தன. 1958–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மாவட்டக் கழகங்கள் நீக்கப்பட்ட பின்னர் ஊர் மற்றும் வட்டார நிலையில் பஞ்சாயத்து ஆட்சி கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டன. இடைநிலைக் கல்வி, அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டது. தொடக்கக் கல்வி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு (வட்டாரங்கள்) மாற்றப்பட்டது. 1958–க்கும் 1981க்கும் இடையில், புதிய தொடக்கப்பள்ளி தொடங்குதல், ஆசிரியர் நியமனம் மற்றும் மாற்றம், பள்ளிகளின் மேற்பார்வை முதலியவை, ஊராட்சி ஒன்றியம் மற்றும் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பொறுப்பாகவே இருந்தது. மாநிலத்தில், தொடக்கக் கல்வியை மேம்படுத்துவதில் ஊராட்சி ஒன்றியத் தலைவரும் ஊராட்சிகளின் தலைவர்களும் முக்கிய பங்கு வகித்தனர்.

05. 1981–க்கும், 1994–க்கும் இடையில், தொடக்கக் கல்வியானது முப்பெரும் அமைப்பு மாற்றங்களையடைந்தது. அதாவது (அ) மாநில அளவில் தனி இயக்ககம் உருவாக்கம் (ஆ) மாவட்ட அளவில் மேற்பார்வைப்பணி மாற்றம் (இ) ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அனைவரும் அரசுப் பணியாளர்களாக மாற்றம். 1981–இல் அரசு பெரும் கொள்கை முடிவை எடுத்தது. அதன்படி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரும் அரசுப் பணியாளர்களாயினர். (அ.ஆ.நிலை எண்.857 கல்வித்துறை நாள் : 23.5.81) எனினும், தொடக்கப்பள்ளிக் கட்டடங்களின் கட்டுமான மற்றும் பராமரிப்புப் பொறுப்பானது ஊராட்சி ஒன்றியத்திடமே தங்கிவிட்டது. ஊராட்சி ஒன்றிய நிலையில், உதவித்தொடக்கக் கல்வி அலுவலர் ஒருவர் அமர்த்தப்பட்டு, அவரிடம் அவருடைய அதிகார எல்லைக்குட்பட்ட தொடக்கக் கல்விப் பள்ளிகளைப் பராமரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மேற்பார்வை, ஆய்வு மற்றும் கண்காணிப்புக்கென 1994–ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், மாவட்ட நிலையில் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். தொடக்கக் கல்விக்கென, கொள்கைகள் மற்றும் வளர்ச்சித் திட்ட முறைப்படுத்தல் மற்றும் செயற்படுத்தலுக்காக 1986இல் தொடக்கக் கல்வி இயக்ககம் ஒன்று உருவாக்கப்பட்டது.

06. உலக வங்கி நிதிபெற்ற மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டத்தின் மதிப்பீட்டுக் குழுவால் அண்மையில், இம்முறைமையில் (1994ஆம் ஆண்டு மேத்திங்கள்) எடுத்துகாட்டப்பட்டுள்ள தொடர்ந்திருக்கக் கூடிய சில வலுவற்ற இனங்கள் குறித்துக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும். உட்பிரிவின் திறன் மற்றும் பயனுடைமையில் உள்ள முதன்மைத் தடைகள் வருமாறு: (அ) பள்ளியில் ஒருபோதும் சேராமல் உள்ள குழந்தைகளின் பெரும் எண்ணிக்கையும், தொடர்ந்து இருந்து வருகின்ற எழுத்தறிவின்மையின் உச்ச நிலையும் சுட்டிக்காட்டுகின்ற வாய்ப்புக்குறைவு. (ஆ) உயர் மற்றும் விடுபாடு வீதங்களால் எதிரொலிக்கப்படும் உள்ளாற்றல் திறன் குறைபாடு. (இ) கற்றல் சாதனைக் குறைவளவால் அறியப்பட்ட ஏற்கவியலாத தரக்குறைவு (ஈ) பால்பாகுபாடு, சாதி மற்றும் பண்படாதவர்களின் சேர்க்கை காரணமாகக் கல்வி பயிலுவதில் உள்ள பாதகங்களின் குறிப்பிடத்தக்க நிதி மாறுபாடுகளால் தெளிவாக விளங்குகின்ற சமத்துவமின்மை. (உ) தேசிய, மாநில மற்றும் மாவட்டயளவில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை நிதி மற்றும் வலுவற்ற மேலாண்மையால் காட்சியளிக்கும் உட்பிரிவு வற்புறுத்தல்கள்.

07. எழுபத்து மூன்றாவது அரசமைப்புச் சட்டத்திருத்தமானது, தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வி (இனம் – 17) யை உள்ளடக்கிய 29 இனங்கள் தொடர்பில் பஞ்சாயத் ராஜ் கல்வி நிறுவனத்திற்கு அதிகாரங்களையும், பொறுப்புகளையும் அளிக்கவேண்டுமென வலியுறுத்துகிறது. 1994–ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம், தனியார் பராமரிக்கும் ஆதாரப் பள்ளிகளுக்கு மானியம் அளிப்பது உள்பட, ஆதாரப் பள்ளிகளின் தொடக்கம், பராமரிப்பு மற்றும் விரிவாக்கம், மேம்பாடு ஆகியவற்றிற்குரிய பொறுப்பினை ஊராட்சி ஒன்றியத்திற்கு அளித்துள்ளது. (பிரிவு 112, இனம் 2) ஆனால், இச்சட்டமானது, தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட பள்ளி ஆசிரியர்களை அரசுப்பணியாளர்களாகக் கருதுகிறது (பிரிவு 109). 1981–க்கும், 1994க்கும் இடையில் மாநிலத்தில் தொடக்கக் கல்வி மேலாண்மையில் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் அடிப்படையிலும், மேலே குறிப்பிடப்பட்ட அரசியலமைப்பு மற்றும் சட்டப்படியான வழிவகைகளின் படியும் பஞ்சாயத் ராஜ் நிறுவனத்திடம் அதிகாரங்களை ஒப்படைக்க மாநிலத் திட்ட ஆணையம் கருதியது. தொடக்கப் பள்ளிகளை நிருவகிப்பதில் சமுதாயத்தின் பங்கு இன்றியமையாதது. தங்களுடைய குழந்தைகள் கல்வி பெறுவதற்கு, இப்பள்ளிகளை மேலாண்மை செய்ய ஊராட்சியே மிகச்சிறந்த உள்ளூர் மற்றும் பொதுவுடைமை நிறுவனமாகும். இப்போதுகூட, தொடக்கப்பள்ளி மற்றும் ஆதாரப்பள்ளிக் கட்டடங்களின் கட்டுமானத்திற்கும் பராமரிப்புக்கும் ஊராட்சி ஒன்றியங்களே பொறுப்பாகும்.

08. தொடக்க மற்றும் ஆதாரப்பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கையானது ஏறக்குறைய 1.75 லட்சம் ஆகும். அவர்கள் அரசுப்பணியாளர்களாகவே தொடர உள்ளனர். அரசுப் பணியாளர்களாக உள்ள இப்போதைய ஆசிரியர்களால் துய்க்கப்பட்டு வரும் சம்பளம் மற்றும் சலுகைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அதே வேளையில், அவர்கள் வட்டாரம் மற்றும் ஊர்நிலையில் மக்களாட்சித் தத்துவப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பஞ்சாயத் ராஜ் நிலையத்திற்குப் பதில் சொல்லக் பொருப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஊராட்சி ஒன்றிய அவை நடத்தும் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ளல் வேண்டும். மாவட்ட நிலையில், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், தொடக்கக் கல்வி தொடர்பான அனைத்துப் பொருள்களிலும் மாவட்ட ஊராட்சிகளுக்கு/கருத்துரை பதிலுரை வழங்க வேண்டும். தொடக்கக் கல்வி இயக்குநர் கல்வி தொடர்பான பொருள்களிலும் பஞ்சாயத் ராஜ் நிறுவனங்கள் வாயிலாகத் தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் ஊராட்சிகளுக்குத் தொடர்ந்து வழிகாட்டுவார்.

09. மேற்படி பின்னணியில், தொடக்க மற்றும் ஆதாரக் கல்வி தொடர்பில் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் பின்வரும் அதிகாரங்களை ஒப்படைக்க மாநிலத்திட்ட ஆணையம் பரிந்துரைத்துள்ளது. உயர்நிலை / மேல்நிலைக் கல்வியானது, பள்ளிமுறையில் பயிற்சியளிக்கப்படுவதால் (பல மாநிலங்களில் கல்லூரிகள் மேல்நிலைக் கல்வியைப் பயிற்றுவிக்கின்றன). அரசின் இப்போதைய இடைநிலைக் கல்வி ஏற்பாடும், மேலாண்மையும் தொடரலாமென மாநிலத் திட்ட ஆணையம் பரிந்துரைக்கிறது.

I ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
(1)	(2)
1. புதிய பள்ளிகளைத் தொடங்குதலும் கல்வி வசதிகளை அளித்தலும்.	(அ) பள்ளி வயது சிறுவர்களை மதிப்பிடுவதற்குச் ஊராட்சி ஆய்வு மேற்கொள்ளல்.
	(ஆ) பள்ளி வயது சிறுவர்களை முழு அளவில் சேர்ப்பதற்கான இயக்கம் நடத்துதல்.
	(இ) தொடக்கப் பள்ளியைத் துவங்கவும், ஊராட்சியிலுள்ள பள்ளியைத் ஆதாரநிலைப் பள்ளி அல்லது இடை நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கும் ஊராட்சி ஒன்றியத்திற்குப் பரிந்துரைத்தல்.
	(ஈ) சிறப்புப் பள்ளிகள்/உள்ளுறை பள்ளிகள் மற்றும் விடுதிகளைத் திறப்ப தற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குப் பரிந்துரைத்தல்.
	(உ) பள்ளி வரைபடம் தயாரிக்கவும் பள்ளிகளின் அமைவிடத்தை மாற்றி அமைப்பதற்கான இடத்தைக் காட்டு வதிலும் ஊராட்சி ஒன்றியத்துக்கு உதவுதல்.
	(ஊ) ஆசிரியர் சமுதாயத் தொடர்புகளில் நலமார்ந்த இணக்கமான உறவுகளை ஏற்படுத்த உறுதி செய்தல்.
	(எ) படிப்பை இடையில் நிறுத்துவோரின் எண்ணிக்கையை குறைக்க பெற்றோர் களுக்கு தக்க அறிவுரை வழங்கி குழந்தைகளை தொடர்ந்து பள்ளிக்கு அனுப்பச் செய்யதல்.

(1)		(2)	
		(ஏ)	ஆதாரப் பள்ளிகளிலும், தொடக்கப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வருகையை மேற் பார்வையிட்டு ஆசிரியர்களின் முறை யான வருகையை உறுதி செய்ய ஊராட்சி ஒன்றியம்/உதவிக் கல்வி அலுவலருடன் இணைந்து தொடர் நடவடிக்கை எடுத்தல்.
2.	மாநில / மைய அரசின் ஆதரவு பெற்ற மாணவர் நலத்திட்டங்களைச் செயற்படுத்துதல்.	(அ)	கற்பதற்கு உதவும் பொருள்கள், புத்தகங்கள், சீருடை, காலணி, மற்றும்பிற பொருள்களையும் மாணவர்களுக்கு வழங்க உதவுதல்.
		(ஆ)	கரும்பலகை இயக்கம், மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டங்கள் போன்ற கல்வி திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி முறைகளை செயற்படுத்த உதவுதல்.
3.	கல்வி கட்டுமான உள்ளமைப்புகளை பராமரித்தல்	(அ)	பள்ளிக் கட்டடங்கள், குடிநீர்வசதி,விளையாட்டுத் திடல்கள் (அறைகலன்),கழிவறைகள் போன்ற பருபொருள் கட்டுமானங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.
4.	பள்ளி நிருவாகம்	(அ)	ஊராட்சி தலைவரைத் தலைவராகவும் தொகுதிஉறுப்பினர்கள் தொடக்கப் பள்ளி ஆதாரப்பள்ளித் தலைமை ஆசிரியர் / தலைமை ஆசிரியை ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட ஊராட்சிக் கல்வி குழு ஒன்றை உருவாக்கி ஊராட்சி அளவில் கல்வியை வளர்த்தல்.

II ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
(1)		(2)	
1.	பள்ளிகளை நிருவகித்தல்	(அ)	பள்ளிகளின் அமைவிடதைக் கண்டறியும் பணியையும், அரசின் கோட்பாடுகளுக்கேற்ப (குடியிருப்புப் பகுதியிலமைந்த மக்கள் தொகை மற்றும் குடியிருப்புப் பகுதிக்கும் பள்ளிக்கும் இடையேயான தொலைவு) புதிய பள்ளிகளைத் திறப்பதற்கு / பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு முடிவெடுக்கு முன் பணியையும் மேற்கொள்ளுதல்.
		(ஆ)	தொடக்கப் ஆதாரப் பள்ளிகளின் செயற்பாடுகளை ஆய்வு செய்தல்.
		(இ)	பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கும் கற்பதற்கான பொருள்கள், புத்தகங்கள், சீருடை, காலணி போன்றவை வழங்குவதை ஒருங் கிணைந்தல்.
		(ஈ)	முழு அளவில் சிறுவர்களை குறிப்பாக சிறுமிகளை சேர்ப்பதற்கும் படிப்பைப் பாதியில் நிறுத்துவோர்களின் எண்ணிக் கையைக் குறைக்கவும், இயக்கம் நடத்துதல்.

(1)	(2)
	(உ) ஆசிரியர்களின் வருகையையும், பள்ளி களின் திறமையான செயல்பாடு களையும் உறுதி செய்யும் வகையில் ஊராட்சி அனுப்பும் முறையீடு அறிக்கையை ஆய்தல்.
	(ஊ) பள்ளி உள்ளமைப்புகளின் கட்டுமானத் திற்காகச் ஊராட்சிகளுக்குத் தொழில் நுட்ப மற்றும் நிதியுதவி ஆதரவுக்கு வழிவகை செய்தல்.
	(எ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கை களைக் கவனிப்பதற்காக, சட்டத்தில் குறிப்பிடப் பெற்ற நிலையான கல்விக் குழு ஒன்றை அமைத்தல்.

III மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு	
(1)	(2)	
1. ஆரம்பக்கல்வியை விரிவுபடுத்தி அதன் தரத்தை மேம்படுத்தல்.	(அ)	(i) தரத்திலும், அளவிலும் மாநிலம்/சிறந்த மாவட்டங்களுடன் ஒப்பு நோக்கு தகுநிலைக்கு மாவட்டத் திற்கான கல்வி மேம்பாட்டுத் திட்ட மிடுதலைக் கருத்தில் கொள்ளுதல். காலமுறைப் படி முன்னேற்றத்தை மறுஆய்வு செய்ய கல்வி மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தல்.
		(ii) பள்ளி செல்லும் வயதுடையோரின் பெருக்கம் மற்றும் பெருகி வரும் குடியிருப்புகளின் எண்ணிக்கை ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தேவைப்படும் பள்ளிகள் மற்றும் ஆசிரியர்கள் பற்றி மதிப்பீடு செய்த பின்னர் தொடக்க நிலைப்பள்ளி களுக்கான மாவட்ட அளவிலான திட்டத்தைத் தயாரித்தல்.
	(ஆ)	குறிப்பாக மக்கள் தொகையில், கல்வியறிவு இல்லாத பிரிவினர்/பகுதியினர் இடையே கல்வியைப் பரப்புவதற்கும் உயர் நிலைகளை அடைவதற்கும் அரசுக்கு நடைமுறைத் திறன்கள், கருத்துரைகள் பற்றி அறிவுறுத்துதல்.
	(இ)	கல்வி மேம்பாட்டிற்கான விரிவான வளஆதாரங்களுக்கு நடைமுறைத் திறன் மீது சமுதாய பங்களிப்பு வாயிலாக குறிப்பாக, முதலீட்டுப் பணிகளுக்கும், கற்பித்தல் தளவாடங் களுக்கும் மாவட்ட அளவில் வள ஆதாரங்களை உயர்த்துவதற்கு ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அறிவுரை வழங்குதல்.
	(ஈ)	கல்வித் தரம் தொடர்பில் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் செயலாக்கத்தைக் கண்காணித்து மதிப்பிடல்.

(1)		(2)	
		(உ)	பள்ளிகளில் அனைவரையும் குறிப்பாக பெண்களை சேர்த்தல் மற்றும் படிப்பைப் இடையில் நிறுத்துபவர்களின் எண்ணிக் கையை குறைத்தல் ஆகியவை தொடர்பான இயக்கங்கள், கருத்தரங் கங்கள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தல்.
2.	பள்ளிகளை நிருவகித்தல்	(அ)	பள்ளிகளின் செயல்பாட்டை மேம் படுத்துவதற்கு மாநில ஆரம்பக் கல்வித் துறையை ஒருங்கிணைத்தல்.
		(ஆ)	மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தைச் செயற்படுத்த உதவுதல்.
3.	தடைகளை நீக்குதல்	(அ)	குழந்தைகளின் படிப்பை இடையில் நிறுத்திவிட வலியுறுத்தும் நெருக்கடி நிலையைத் தொடர்ந்து ஆராய்வதுடன், அத்தகைய நெருக்கடிகளின் செல் வாக்கைக் குறைக்கப் பொருளாதார, சமூக மேம்பாட்டுத் திட்டங்களை, திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல்.

நிருவாகச் சிக்கல்கள்

10. மாநிலத் திட்டக்குழு பரிந்துரைத்தவாறு தொடக்கக் கல்வி தொடர்புடைய அதிகாரங்களை பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதானது பல நிருவாக மாற்றல்களை உள்ளாக்கும். 35.000க்கும் மேற்ப்பட்ட (கல்வி) நிறுவனங்களையும் (ஆரம்ப மற்றும் தொடக்கப் பள்ளிகள்) சற்றொப்ப 1.75 இலட்சம் ஆசிரியர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டையும் மாற்றம் செய்வது என்பது ஒரு பெருமுடிவாகும். கல்வி நிறுவனர்களும், ஆசிரியர்களும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்குப் பதில் சொல்லும் பொறுப்புடையவர்களாகி விடுவர். இந்நாள் வரையிலும், தொடக்கக் கல்வித் துறையின் அலுவலர்களின் பழமரபின்படி அவர்கள் கண்காணிக்கப் பெற்றனர். தொடக்க மற்றும் ஆரம்ப பள்ளிகளின் செயல்பாட்டை ஆய்வு செய்யவும் மேற்பார்வையிடவும் ஊராட்சி நிருவாக அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்க மாநில திட்டக்குழு பரிந்துரை செய்கிறது.

11. ஊராட்சிகள் தொடக்க மற்றும் ஆரம்ப பள்ளிகளின் நடைமுறைகளை மேற்பார்வை செய்து காணப்படும் குறைப்பாடுகளை ஊராட்சி ஒன்றியத்திற்கும். உதவி தொடக்க கல்வி அலுவலர்க்கும் தெரியபடுத்துதல் வேண்டும். ஊராட்சிகளிடமிருந்து பெறப்பட்ட மேற்பார்வை அறிக்கைகளையும் மற்றும் மேற்படி ஒன்றியத்தில் நடைமுறைப் படுத்தப்படும் கல்வித் திட்டங்களின் செயல்பாடுகளையும் ஊராட்சி ஒன்றிய அவை மறுஆய்வு செய்யும். உதவி தொடக்கக் கல்வி அலுவலர் மேற்படி அவை நடத்தும் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு ஊராட்சிகளிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி அவைக்கு தெரிவிக்க வேண்டும். மாவட்ட ஊராட்சி மாவட்ட அளவில் செயல்படும் ஆரம்ப மற்றும் தொடக்கக் கல்வி திட்ட செயல்பாடுகள் மற்றும் அது குறித்த குறைகளை ஆய்வு செய்யும். மாவட்ட ஊராட்சி மாவட்ட அளவில் புதிய பள்ளிகளை துவங்கவும், இருக்கும் பள்ளிகளை மாற்றி அமைக்கவும் மற்றும் ஆரம்ப மற்றும் தொடக்கக் கல்வி வளர்ச்சி குறித்த பிற கருத்துருக்களை அரசுக்கு பரிந்துரை செய்யும்.

12. மாநிலத் திட்டக்குழுப் பரிந்துரைகளின் இப்பகுதியில், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்காக இயங்கும் தொடக்க மற்றும் ஆரம்ப பள்ளிகள், தங்கும் விடுதிகளின் மேலாண்மைக் கூறுகள் சேர்க்கப்படவில்லை. இப்பொருள்கள் நலிவுற்ற பிரிவினரின், குறிப்பாக ஆதி திராவிட மற்றும் பழங்குடியினரின் நலம் குறித்த பகுதியில் (அட்டவணை IVஇன் இனம் 27) கலாந்தாயப்படும்.

நிதிச் சிக்கல்கள்

13. குடிநீர் வசதிகளுடனும், கழிவறை ஆகியவற்றுடனும், பள்ளிக்கட்டங்கள் கட்டப்பெறுவதற்கும், அக்கட்டடங்களைப் பேணுவதற்கும் கணிசமான செலவாகும். புதிய கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், விடுதிகள், கழிப்பறைகள் போன்றவற்றைக் கட்டும் பணி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட மாவட்டத் திட்டம் ஆகிய வளர்ச்சித் திட்டங்களின் கீழ் எடுத்துக்கொள்ளலாம். பேணுவதற்கான மானியங்கள் அரசால் அளிக்கப்பட வேண்டும். பள்ளிக் கட்டடங்களை பேணுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பேணுகை மானியங்களை கணிப்பதற்குரிய அளவுகோல்கள், தொகையளவு ஆகியவை மீதான பரிந்துரைகளை மாநில நிதி ஆணையம் வழங்கியிருக்குமென கருதப்படுகிறது.

சட்டச் சிக்கல்கள்

14. கல்வியை பொருத்த வரையில், முதல்கட்டமாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி ஆகிய அமைப்புகளை ஊக்கமுடன் ஈடுபடுத்தி, தொடக்க மற்றும் ஆரம்ப பள்ளிகளின் நடைமுறைகளை ஆய்வு மற்றும் மேற்பார்வை செய்யவும், ஆரம்ப மற்றும் தொடக்க கல்வி வளர்ச்சித் திட்ட பணிகளை ஆய்வு செய்யவும் ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்க நாம் முதற்கட்டமாக பரிந்துறை செய்துள்ளோம். இரண்டாம் கட்டமாக (இரண்டு ஆண்டுகளுக்கு பின்) ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கலாம்.

தொழில் நுட்ப பயிற்சி மற்றும் தொழிற் கல்வியும்

(இனம் - 18)

01. தொழில் நுட்பப் பயிற்சியானது மூன்று வெவ்வேறு நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொழில் கல்லூரிகளும்/தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களும் முதல் இரண்டு நிலைகளுக்குரியன. அங்கே முறையே தொழில் நுட்பக் கல்விக்கான பட்டமும், பட்டயக் கல்விப் படிப்பும் அமையப் பெற்றுள்ளன. தொழிற் பயிற்சி நிறுவனங்கள் (தொ.ப.நி) தொழிற் பள்ளிகள் (தொ.ப.) மேல்நிலை வகுப்புகளில் (+2 நிலை) வாழ்க்கைத் தொழில் முறைப் பாடங்கள் ஆகியன மூன்றாம் நிலைக்குறியன. வெவ்வெறு வகையான தொழில்களையும் கைத்திறத் தொழில்களையும், தொழிற் பயிற்சி நிறுவனங்களிலும், தொழிற் பள்ளிகளிலும் பயிலும் வகையில் தொழில் நுட்பப் பயிற்சித் திட்டம் அமைக்கப்பெற்றுள்ளது. இந்தப் பகுதியில் கல்லூரிகளிலும் தொழில்நுட்பப் கல்வி நிறுவனங்களாலும் அளிக்கப்படும் தொழில் நுட்பக் கல்வி உட்பட மேல்நிலைக் கல்வியும் தொழில்கல்வியும் கருதப்பட மாட்டாது. தொழிற் பயிற்சி நிறுவனங்களாலும், தொழிற் பள்ளிகளாலும், மேல்நிலைப் பள்ளிகளாலும் அளிப்பதற்காக அமைக்கப்பட்ட தொழில் நுட்பப் பயிற்சியே மூன்றாம் நிலையாகக் கருதப் பெறும்.

0.2 16, 188 பேருக்குக் கல்வி அளிக்கும் திறனுடைய 52 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. 36 பொறியியல் தொழில்களுக்கும், 15 பொறியியல் அல்லாத தொழில்களுக்கும் இத்தகைய தொழிற் பயிற்சி நிறுவனங்கள் பாடத்திட்டங்களைக் கொண்டுள்ளன. 44, 344 பேருக்குக் கல்வி அளிக்கும் திறனுடைய அரசால் ஏற்பளிக்கப் பெற்ற 438 தனியார் சுய நிதித் தொழிற் பயிற்சி நிறுவனங்களும் உள்ளன. மேலும், இத்தகைய தொழிற் பயிற்சி நிறுவனங்கள் தவிர 5112 இருக்கைகளை உடைய 115 தனியார் தொழிற் பள்ளிகள் (இவற்றுள் 50 பள்ளிகள் அரசின் உதவியைப் பெறுபவை) உள்ளன. 9 பாடத்திட்டங்களுடன் கூடிய 3 மேம்பட்ட தொழிற் பயிற்சி மையங்களும் உள்ளன. இதுவரை 9729 கைத்திறத் தொழிற் பயிற்சியாளர்கள் இந்த மையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர். தொழில் பழகுநர் பயிற்சித் திட்டத்தின் கீழ் 1444 தொழில் நிறுவனங்களில் 15,000க்கும் அதிகமான கைத்திறத் தேர்ச்சி பெற்ற பயிற்சி பெற்ற மனித ஆற்றார்வத் தொழில் பழகுநர் பயிற்சி பெற்றுள்ளனர்.

தொழிற் பயிற்சி நிறுவனங்கள் / பள்ளிகள்

	தொழிற் பயிற்சி நிறுவனங்கள் / பள்ளிகள்	எண்ணிக்கை	திறன்
1.	மாநில அரசு	52	16,188
2.	தனியார் (சுய நிதியுடையவை)	438	44,344
3.	தனியார் மற்றும் அரசு உதவி பெற்றவை	115	5,112

03. மேல்நிலைப் பள்ளிகளில் வாழ்க்கைத் தொழிற் கல்வி பயிற்றுவிக்கப் பெறுகிறது. வேளாண்மை, மனையியல், வணிகவியல், தொழில், பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல், பொது சுகாதாரம் போன்ற துறைகளுக்கான பல்வகைப் பாடத்திட்டங்களைக் கொண்ட 66 வாழ்க்கைத் தொழிற் பாடத்திட்டங்கள் அளிக்கப்படுகின்றன. வாழ்க்கைத் தொழிற்கல்வியை 1377 பள்ளிகள் அளிக்கின்றன. சற்றொப்ப 1.04 இலட்சம் மாணவர் வாழ்க்கைத் தொழிற் பாடங்களைப் பயிலுகின்றனர் ; இவ்வெண்ணிக்கை மேல் நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் 16 விழுக்காடு ஆகும்.

04. தொழிற் பயிற்சி நிறுவனங்கள் வாழ்க்கைத் தொழிற் கல்வி பள்ளி பாடங்கள் ஆகியன இம்மாநிலத்தின் பல்வேறு தொழில்களுக்கான வெவ்வேறு வகை தொழில் மற்றும் கைத்திறத் தொழில்களில் திறன் வாய்ந்த மனித

இயங்கு ஆற்றலையும் அளிப்பதில் பங்கேற்கின்றன. தவிரவும் திறன் வாய்ந்த பணியாளர் தாமே சொந்தமாகத தொழிலைமைத்துக் கொள்கின்றனர். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பயிற்சி நிறுவனங்களும் தொழிற்பள்ளிகளும் நிறுவப்பெற்றுள்ளன. வாழ்க்கைக் தொழிற் பாடங்களும், தொடங்கப் பெற்றுள்ளன. இவை உள்ளாட்சிக்குட்பட்ட ஊரக நடவடிக்கைகள் அல்லவென்று மாநிலதிட்டக் குழு கருதப்பட்டவற்றுள் ஒன்றாகும். எனவே பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் கட்டுபாட்டிற்கு துவக்குதல், பராமரித்தல் மேலாண்மை ஆகியவற்றை மாற்றுவது இயலக்கூடியதன்று அல்லது தேவையுமன்று. இருப்பினும் தொழில் நுட்ப கல்வி நிகழ் திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் சிறப்பாக நடைபெற ஆலோசனை வழங்குதல், மேற்பார்வையிடுதல் மற்றும் ஒருங்கிணைந்த ஆய்வு மேற்கொள்ளல் போன்ற பணிகளை உள்ளூராட்சி மன்ற அமைப்புகள் மேற்கொள்ளலாம். உள்ளூர் மனித ஆற்றலைக் குறிப்பிடுவதும் அவர்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சி/ வாழ்க்கைத் தொழில் பயிற்சி ஆகியவற்றை உரிய நிறுவனங்கள்/மையங்கள்/பள்ளிகள் இவற்றுடன் இணைப்பதும் அடிப்படையில் எளிதாக இருக்கலாம். மேலும், மாவட்டத்தின் தேவைகளுக்கேற்ப தனித்திறன் வாய்ந்த மனித ஆற்றல் தேவைகளுக்காகத் திட்டமிடுதல், திட்டங்களைச் சீராய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் வாழ்க்கைத் தொழிற்கல்வி பயிற்சிக்கான நடைமுறை திட்டங்கள் தொழில் பழகுநர் பயிற்சிகள் ஆகியவை மாவட்ட ஊராட்சிகளால் மேற்கொள்ளப்பெற வேண்டும்.

05. இந்த பின்னணியில் அறிவுரை, மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றிற்கான அதிகாரங்களை பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் 3 படிநிலைகளுக்காகப் பின்வருமாறு ஒப்படைக்க வேண்டுமெனப் பரிந்துரைக்கப் பெறுகின்றன.

I. ஊராட்சிகள்

தொடர் எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	தொழில் நுட்பம் மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிகளுக்குப் பொருத்தமான ஊரக மனித வள ஆற்றலைக் கண்டறிதல்.	1. தொடர்புடைய ஊராட்சிகளுக்காகத் தகுந்தவாறு குறிப்பிட்ட தொழில் மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சியின் பாட திடடதேவைகளைக் குறிப்பிடுதல். 2. ஊரக இளைஞர்களிடையே தொழிற்கல்வி பயிற்சி மையங்கள் பள்ளிகள் மற்றும் தொழில்கள் குறித்து தகவல்களைப் பரப்புதல் 3. தொழிற்கல்வி பாடத்திட்டங்களில் இணைத்தலும் மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஊக்குவித்தலும், வசதி ஏற்படுத்தலும்.
2.	தொழிற்பயிற்சி நிறுவனங்கள் / தொழிற்பள்ளிகளை நிறுவுதலும், பேணுதலும்	1. அரசு/தனியார் தொழிற்பயிற்சி நிலையம்/தொழிற்பள்ளி நிறுவிட உதவிபுரிதல், மற்றும் ஊராட்சிகளில் உள்ள மேல்நிலை பள்ளிகளில் வாழ்க்கைக்கான தொழிற்கல்வி பாடத் திட்டங்கள் தொடங்களை பரிந்துரை செய்தல்.

II. ஊராட்சி ஒன்றியம்

தொடர் எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	ஊரக இளைஞர்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சி அளித்தல்	1. ஒருபுறம் தொழிற்பயிற்சி நிறுவனம், தொழிற்பள்ளிகள் மறுபுறம் ஊராட்சிகள் இவற்றிற்கிடையே தொழிற் பயிற்சிப் பாடங்களில் தகுந்த ஊரக இளைஞர்களைச் சேர்ப்பதற்குத் தொடர்புபடுத்துதல் 2. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பல்வேறு தொழில் / தொழில் முறை நிறுவனங்களுக்குத் தேவைப்படும் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற மனித ஆற்றலுக்கான திட்டத்தை வரைதல்
2.	தொழிற்பயிற்சி நிலையங்கள் தொழிற்பள்ளிகள் ஆகியவற்றை நிறுவுதல்	1. புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் தொழிற்பள்ளிகள் நிறுவுவதற்குத் தேவைப்படுவனவற்றை மதிப்பீடு செய்தல், அம்மதிப்பீட்டை தகுதி வாய்ந்த அதிகாரக் குழுமத்திடமும் மாவட்ட ஊராட்சியிடமும் பரிந்துரைத்தல் 2. அந்த பகுதியலமைந்த மேல்நிலைப் பள்ளிகள் பங்கேற்கத் தேவையான வாழ்க்கைத் தொழிற் கல்விக்கான தொழில்கள்/ பாடங்களைக் குறிப்பிட்டுக் காட்டுதல் 3. ஊராட்சிப் பகுதியில் நடைபெற்று வரும் தொழிற் பயிற்சி நிலையங்கள்/ தொழிற் பள்ளிகளில் கட்டாயமாக இடம்பெறக் கூடிய பகுதி மற்றும் கைத் தொழில்களுக்கான பயிற்சி கல்வி பற்றிக் குறிப்பிட்டுக் காட்டுதல்.

III. மாவட்ட ஊராட்சி

தொடர் எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற மனித ஆற்றலுக்குத் தேவையான திட்டம் வகுத்தல்	1. மாவட்டத்தில் நடைபெற்றுவரும் பல்வகை தொழில்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பயிற்சி பெற்ற மனித ஆற்றல் கைத்திறத் தொழில்கள் குறித்து பயிற்சிக்கான திட்டம் வகுத்தலை மேற்கொள்ளுதல். 2. மாவட்டத்தில் சுய வேலைவாய்ப்பு நோக்கங்களுக்காகத் தொழில் நுட்பப் பயிற்சி ஆற்றல் தேவைகளை மேற் கொள்ளுதல்
2.	தொழிற்பயிற்சியையும் வாழ்க்கை தொழில் கல்வியையும் சீராய்வு செய்தலும் கண்காணித்தலும்	1. கல்வி தொடர்பிலான நிலைக்குழு வாயிலாகத் தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வியின் கீழ் செயற்படுத்தப்பட்ட பல்வேறு நிகழ் அமைதிட்டங்கள்/ செயல்

தொடர் எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
		திட்டங்களைக் கால முறைப்படி சீராய்வு செய்வதனை மேற் கொள்ளுதல்.
		2. மாவட்டத்தில் தற்போது நடை பெற்றுவரும் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் செயற் பாடுகளைக் குறிப்பாக தொழில் பயிற்சி நிறுவனங்களில், தொழிற் பயிற்சி பள்ளிகளிலும் இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கண் காணித்தல்

சிக்கல்கள் / பின் விளைவுகள்

06. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடிப்படையில் நிருவாகமல்லாத, நிதி அல்லாத அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று மாநிலத் திட்டக் குழு பரிந்துரைத்துள்ளது. இவ்வதிகாரங்கள் முக்கியமாகத் தொழிற்பயிற்சி பெற்ற மனித ஆற்றல் திட்டமிடுதல் ஆகியவற்றுக்கானதாகும். தொழில் நுட்பப் பயிற்சியையும், வாழ்க்கைத் தொழிற்கல்வியையும் சீராய்வு செய்தல் மற்றும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களால் நடத்தப் பெறும் புதிதாகப் நிறுவப்பட வேண்டிய தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், மையங்கள், மற்றும் நிறுவனங்களின் தேவை குறித்து ஆராய்தல் ஆகியனவாகும். எனவே தற்போதுள்ள நிர்வாக, நிதி மற்றும் சட்டப்படியான அமைப்பில் எந்தவிதமாறுதலும் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

வயது வந்தோர் மற்றும் முறைசாராக் கல்வி

(இனம் - 19)

01. 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி எழுத்தறிவு வீதம் என்ற ஆய்வெல்லையில் தமிழ்நாடு கேரளத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது எழுத்தறிவு பெற்ற மாநிலமாக (ஏழு வயது மற்றும் அதற்கு மேல் வயது உள்ள மாநில மக்கள் தொகையில் 63.7%) உள்ளது. ஆண்களின் எழுத்தறிவு வீதம் 74% ஆகவும் பெண்களின் எழுத்தறிவு வீதம் 51% ஆகவும் உள்ளது. மேற்கூறிய புள்ளி விபரங்கள் மாநிலத்தின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 36% (7 வயது மற்றும் அதற்கு மேல்) எழுத்தறிவில்லாதவர்களாக உள்ளனர் என்பதைக் காட்டுகின்றது.

02. தமிழ்நாட்டில் 7 ஆண்டு மற்றும் அதற்கு மேலும் வயது உள்ளவர்களின் எழுத்தறிவு வீதத்தில் பாலின இடைவெளி, அனைத்திந்திய வீதத்திற்கு (–) 24 எதிராக (–) 23 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், பள்ளிகளில் 6–10 ஆண்டுகள் வயதுடைய குழந்தைகள் 1992–93ஆம் ஆண்டைய நிலையின்படி 10.30 இலட்சங்களாக இருக்கின்றனர். நகர்ப்புறப் பகுதிகளில் மாணவர்களின் சேர்க்கை மற்றும் இடையில் நின்றுவிடுவோரது பாலின இடைவெளி பெண்கள் வீதம் ஆண்கள் வீதத்தை விட முறையே (–) 25 மற்றும் (–) 1 ஆக உள்ளன. ஆதி திராவிட, ஆதி திராவிட பழங்குடி வகுப்பினர் போன்ற வசதியற்ற பிரிவினர் பொருத்தவரை சேர்க்கையின் பாலின இடைவெளி ஆதி திராவிட வகுப்பினர் (–) 15 ஆகவும் ஆதிதிராவிடப் பழங்குடி வகுப்பினர் (–) 23 ஆகவும் (பெண் வீதத்தில் ஆண் வீதத்தைக் கழிக்க) உள்ளது.

03. மாநிலத்தின் சராசரி எழுத்தறிவு தேசீய சராசரியைக் காட்டிலும் அதிகமாக இருந்தபோதிலும், தேசீயச் சராசரியை விட குறைவாக எழுத்தறிவு வீதமுடைய மாவட்டங்களும் உள்ளன. எழுத்தறிவு வீதம் தருமபுரி மாவட்டத்தில் 46% ஆகவும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 82% ஆகவும் வேறுபடுகின்றன. தென்னார்க்காடு வள்ளலார், திருவண்ணாமலை சம்புவராயர், தருமபுரி, சேலம் மற்றும் பெரியார் ஆகிய 5 மாவட்டங்களும் குறைந்த எழுத்தறிவு பெற்ற பகுதிகளாக அடுத்தடுத்து அமைந்துள்ளன. பெருமளவு குறைந்த எழுத்தறிவுள்ளவையாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்கள் உள்ளன. வேறுவகையில் குறிப்பிட்டால் 40–60% எழுத்தறிவு வீதத்தில் 7 மாவட்டங்களும், 60–80% எழுத்தறிவு வீதத்தில் 12 மாவட்டங்களும், சென்னை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 2 மாவட்டங்களும் 80% க்கும் மேலாக முதன்மையான எழுத்தறிவு பெற்ற மாவட்டங்களாக உள்ளன. இவை எழுத்தறிவு வீதங்களில் ஏற்றத்தாழ்வு மண்டலங்களை காட்டுவதாகவுள்ளன. இவ்வாறு குறைவான எழுத்தறிவு பெற்றுள்ள மாவட்டங்கள் முழு எழுத்தறிவு என்ற இலக்கினை எட்டமுயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

திட்ட விபரங்கள்

04. குறைந்தளவு எழுத்தறிவு என்ற கஷ்டமான நிலையை முழு மற்றும் தொடர் கல்வி இயக்கங்கள் போன்ற சிறப்புத் திட்டங்கள் வாயிலாக சமாளித்து முழுஎழுத்தறிவு அடைதல் வேண்டும். இத்திட்டங்கள் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட எழுத்தறிவு மன்றங்களால் செயற்படுத்தப் படுகின்றன. இதற்காகுகும் செலவு மைய, மாநில அரசுகளால் 2:1 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. 15–30 ஆண்டுகள் வயது தொகுதியைச் சேர்ந்த எழுத்தறிவு இல்லாதவர்கள் அனைவரையும் ஓராண்டு கால அளவுக்குள் எழுத்தறிவு பெற்றவர்களாக்குவதே முழு எழுத்தறிவு இயக்கத்தின் (மு.எ.இ) முக்கிய குறிக்கோளாகும். புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களுக்குத் தொடர் கல்வி அளிப்பதற்காகவும், ஆரம்பகட்ட எழுத்தறிவு நிலை பெற்ற அவர்களின் திறன்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும், கல்வி தொடர்திட்ட இயக்கம் 1995–96 முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. கிராம நிலையில் நூலகங்களைத் துவக்கி 9–14 அகவைத் தொகுதியில் உள்ளவர் களுக்காக கட்டமைக்கப்பட்ட முறைசாராக் கல்வி அளிப்பதனால் முறையான கல்விப் பாதையில் கலக்க அவர்களைத் திரும்பி அழைத்துவருதல், வட்டாரயளவில் குடும்ப அறிவுரை வழங்குதல் போன்றவை தொடர்கல்வி எழுத்தறிவு இயக்கத்தின் சிறப்பியல்புகளாகும். இதுவரை மொத்தத்தில் முழு எழுத்தறிவு இயக்கத்தின் கீழ் ரூ.44.43 கோடியும், தொடர் கல்வி திட்ட இயக்கத்தின் கீழ் ரூ.16.78 கோடியும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதுவரையில் 76 இலக்கம் படிப்பறிவு இல்லாதவர்களும். 56 இலக்கம் இடையில் படிப்பைக் கைவிட்டவர்களும், புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களும் முறையே முழு எழுத்தறிவு இயக்கத்தின் கீழ், தொடர் கல்வி திட்ட இயக்கத்தின் கீழ்ச் சேர்க்கப் பட்டுள்ளனர்.

05. கிராம கள ஒருங்கிணைப்பாளர் அதாவது, கிராம நிருவாக அலுவலர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், ஊராட்சி எழுத்தாளர்கள் பொது வினியோகப் பணியார்கள் மற்றும் அவர்களைப் போன்றவர்கள், கல்லாதவர்களுடன் தனித்தனியாக தொடர்பு கொண்டு அவர்களிடம் கல்வி பயிலும் எண்ணத்தை ஏற்படுத்தவும், அணிகளாகப் பிரித்துக் கொள்வதுடன், அவர்களுக்காகத் தன்னார்வப் பயிற்றுநர்களை ஏற்பாடு செய்து அவர்களைச் சந்தித்து எழுத்தறிவு வகுப்புகளை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். தேசீய எழுத்தறிவுக் குழுவால் குறிப்பிடப்பெற்றவாறு ஆரம்ப நிலைப்பாடங்களை 6 திங்கள் காலயளவில் மூன்று நிலைகளில் கற்று கொடுக்க வேண்டும். மாவட்ட நிலையில் மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளரும், மத்தியத் திட்ட ஒருங்கிணைப்பாளரும், வட்டார நிலையில் வட்டார, நகராட்சி, பேரூராட்சி திட்ட ஒருங்கிணைப்பாளர்களும் உதவித்திட்ட ஒருங்கிணைப்பாளர்களும், ஊர் நிலையில், ஊர் தொகுதி ஒருங்கிணைப் பாளர்களும், கூட்டுநர்களும் பலநிலைகளிலும் மாவட்ட முழு எழுத்தறிவு இயக்கத்தை அமைத்து நடத்தி கண்காணிப்புப் பணியை மேற்கொள்ள பணிக்கப் பெற்றுள்ளனர். இதை தவிர, மாவட்டச் செயற்பாட்டுக் குழு, பயிற்சி மற்றும் பாடத்திட்டம், இயங்குதிட்டம், ஊக்குவித்தல், செய்தி தெரிவித்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுக் குழுக்கள், மாவட்ட நிலை துணை குழுக்கள், ஊராட்சி ஒன்றியம்/நகராட்சி குழு, கிராம/ தொகுதிக்குழு ஆகிய குழுக்கள் அவர்களுடைய அதிகார எல்லைக்குள் முழு எழுத்தயறிவு இயக்கம், தொடர் கல்வி இயக்கங்களை ஒருங்கிணைப்பதற்காகவும் அவற்றின் நடவடிக்கைகளை நிருவகிக்கவும், உருவாக்கப் பெற்றுள்ளன. மாவட்டத் தலைவர் மாவட்ட முழு எழுத்தறிவு இயக்கத்தின் தலைவராக இருப்பினும், மாவட்டத்தின் முழு எழுத்தறிவு இயக்கம் / தொடர் கல்வி இயக்கத்தின் செயற்பாட்டிற்கு முழு பொறுப்புடையவர் ஆவார். பல மாவட்டங்களில் முழு எழுத்தறிவு இயக்கம் நிறைவேற்றப்பட்டு விட்டன. ஊரக மற்றும் புறநகர்ப் பகுதிகளில் புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களின் தொடர் கல்வியின் பொருட்டு தொடர் கல்வி எழுத்தறிவு இயக்கமானது தொடங்கப்பட்டுள்ளது.

06. தன்னார்வ கல்வி பணித் திட்டம் என்பது மாநில அரசின் ஆதரவு பெற்ற மதுவிலக்குக் கொள்கை பரப்பு இயக்கத்துடன் இணைந்த முறைசாராக் கல்வித் திட்டமாகும். இது 1993–94 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருவதாகும். இத்திட்டத்தினால் இதுவரை சுமார் 41,295 வேலையற்ற இளைஞர்கள் பயன்பெற்றனர். 24.90 கோடி ரூபாய்கள் இதற்காக செலவிடப்பட்டுள்ளது.

07. சிறப்பு முறைசாராக் கல்வித் திட்டத்திற்கு மைய மாநில அரசுகள் 2:1 என்ற விகிதத்தில் நிதியுதவி அளிக்கின்றன. காமராசர், வ.உ. சிதம்பரனார், வடாற்க்காடு அம்பேத்கார், மாவட்டங்களிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணியாற்றும் குழந்தைகள் மற்றும் சென்னை நகரத்தின் குடிசைகளில் உள்ள குழதைகளுக்காக ஆண்டிற்கு ரூ.70.80 இலட்சங்கள் மதிப்பீட்டில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுவருகின்றன. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 17557 இடையில் படிப்பை நிறுத்தியவர்கள் மற்றும் இதுவரை கல்வியைத் தொடங்காதவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

08. மேற்குறிப்பிட்ட திட்டத்துடன் சேர்த்து மலைவாழ் மக்களுக்காக முக்கியமாக கொல்லிமலை, ஏற்காடு மலை, கல்ராயன்மலை, ஜவ்வாது மலை, பச்சைமலை போன்ற இடங்களில் வாழும் பழங்குடியினர் பயன்பெறுவதற்காகச் சிறப்புத் திட்டமொன்று 92–93ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 6லிருந்து 14 வயது வரையுள்ள 2000 குழந்தைகள் படிப்பை விட்டுவிடாமல் இருப்பதற்கும், எழுத்தறிவற்ற 2000 முதியோர் எழுத்தறிவு பெறுவதற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதல் நிலையில் 4176 இடையில் படிப்பை விட்டு விட்டவர்களும், இதுவரை எழுத்தறிவு பெறத் தொடங்காதவர்களும் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

09. சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் 1992 ஆண்டில் பதிவு செய்யப் பெற்ற ஒரு சங்கத்தின் வாயிலாக மாநிலத்தில் முழு எழுத்தறிவு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு அது மாவட்ட எழுத்தறிவு மன்றம் என அழைக்கப் பெற்றது (அறிவொளி இயக்கம்) இம்மன்றமானது மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரை (ஊராட்ச்சி வளர்ச்சி) உறுப்பினர் செயலராகவும் கொண்டு இம்மன்றம் அலுவலக அமைப்பில் முக்கியத்துவம் வாய்ந்துள்ளது.

10. முழு எழுத்தறிவு இயக்கம் என்பது மாபெரும் இயக்கம் என்பதால் அதன் வெற்றிக்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாததாகும். வட்டார மொழியறிவு, தகவல் மற்றும் முழுயளவில் சமுதாயத்தில் பங்கேற்பு ஆகியவை அமையப்பெற்ற ஊரக உள்ளாட்சி அமைப்பே கல்வியை வளர்க்க சிறந்த முகமையாகும். மாவட்ட எழுத்தறிவு மன்றமானது அலுவல் சார்ந்த ஆதிக்க அமைப்பிலிருந்து விடுபட்டு மக்கள் சார்ந்த அமைப்பாக மாற்றப்பட வேண்டும் என்பது பணிக்குழுவின் கண்ணோட்டமாகும். எனவே, உடனடி நடவடிக்கையாக, மாவட்ட ஊராட்சித் தலைவரை மாவட்டக் எழுத்தறிவு மன்றத் தலைவராகவும் அனைத்து ஊராட்சி ஒன்றியத் தலைவரையும், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சித் தலைவர்களையும் அதன் உறுப்பினர்களாக்க வேண்டும் எனப் பரிந்துரைக்கப் படுகிறது. மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலரானவர், இதன் உறுப்பினர், செயலாளராக இருப்பார். இம்மன்றத்திற்குத் தொழில்நுட்ப உள்ளீட்டை அளிப்பதற்கு வேண்டப்படும் தேவையான மாவட்ட நிலை அலுவலர்களையும் கூட மேற் குறிப்பிட்ட மன்றத்தின் உறுப்பினர்களாக்கப் பெறலாம். மாவட்ட எழுத்தறிவு மன்ற ஆட்சி குழுவில் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம் பெறும் வகையில் மாவட்ட எழுத்தறிவு மன்றத்தின் துணை விதிகள் மாற்றப்பெற வேண்டும்.

I ஊராட்சி

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
(1)		(2)	
1.	பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மையங்கள் தொடங்குதல்	(அ)	படிப்பை இடையில் நிறுத்தி விட்டவர்களையும் (6–14) கல்வி பயிலத் தொடங்காதவர்களையும் (15–35) கணக்கெடுக்க ஊராட்சியில் ஆய்வு மேற்கொள்ளுதல்.
		(ஆ)	பள்ளி சாராக் கல்வி மையங்களில், வட்டங்களில், தொடர் கல்வி நிலையங்களில் படிப்பை இடையில் நிறுத்தி விட்டவர்களையும், கல்வி பயிலத் தொடங்காதவர்களையும் முழுயளவில் சேர்ப்பதற்கான இயக்கம் நடத்துதல்.
		(இ)	கற்றறிந்தவர்கள், தன்னார்வப் பயிற்றுநர்கள், ஆசிரியர், பயிற்சி அளிப்பவர்கள், அமைப்பாளர்களையும் பள்ளிசாரக் கல்வி வட்டங்கள், மையங்கள் ஆகியவைகளையும் கண்டறிதல்.
		(ஈ)	படிப்பை இடையில் நிறுத்தி விட்டவர்களை/கல்வி பயிலத் துவங்காத சிறுவர்களை முறைசாராக் கல்வி நிலையங்களுக்கு அனுப்புவதற்காக பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்கல்.
		(உ)	பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டங்களின் செயலாக் கத்தைக் கண்காணித்தல்.
2.	கல்வி உள்ளமைப்பை நிருவகித்தல்	(அ)	ஊராட்சிக் கல்வி குழு வாயிலாக பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மையங்களின் கட்டுமான கட்டட உள்அமைப்புகளை பராமரித்தல்.
		(ஆ)	தொடர்கல்வி இயக்கத்தின் கீழ் உள்ள பள்ளிசாராக் கல்வி மையங்கள், வட்டநிலையங்கள் மற்றும் கிராம நூலகங்களையும் பேணுதல்.

II ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
(1)	(2)
1. பள்ளிசாராக் கல்வி மையங்களை/ தொடர் கல்வி நிலையங்களை நிருவகித்தல்.	(அ) தொடர் கல்விக்காக பள்ளிசாராக்கல்வி மையங்களில் /தொடர் கல்வி நிலையங்களில் படிப்பை இடையில் விட்டுவிட்டவர்களையும், கல்வி பயிலத்தொடங்காத வர்களையும் முழு அளவில்சேர்ப்பதற்கு ஊராட்சிகள் வாயிலாக இயக்கங்கள் நடத்துதல்.
	(ஆ) தொடர் கல்வி இயக்கத்தின் கீழ்புதிய பள்ளி சாராக் கல்வி மையங் களையும், கிராம அளவிலான நூலகங் களையும் மேம்படுத்தல் மற்றும் ஏற்கனவே கல்வி கற்றவர்களில் (படிப்பை இடையில் விட்டுவிட்டவர்கள் முதலியோர்) மீண்டு கல்லாத நிலைக்குத் திரும்புவதை தவிர்ப்பதற்குத் தொடர் கல்வி நிறுவனங்களின் விரிவான அமைப்பைப் வலுப்படுத்தல்.
	(இ) ஊராட்சிகள் வாயிலாகப் பள்ளிசாரா கல்வி மையங்களுக்கு, தொடர் கல்வி நிலையங்களுக்கு கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான பொருள்களைக் கொள்முதல் செய்து பிரித்து அளித்தல்.
	(ஈ) ப.சா.க. மையங்களின் / தொடர் கல்வி நிலையங்களின் மற்றும் கிராமப்புற நூலகங்களின் (தொடர் கல்வியறிவு இயக்கம்) செயற்பாட்டை மேற் பார்வையிடல்.
	(உ) பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மையக் கட்டடங்களின் கட்டு மானத்தை மேற்கொள்வதுடன் பரா மரிப்பிற்காக அதனை ஊராட்சி களுக்கு மாற்றம் செய்தல்.
2. பணியாளர் நிருவாகம்	(அ) முழு எழுத்தறிவு இயக்கத் திட்டங்கள் உள்பட வட்டார நிலையிலான பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மேற்பார்வை யாளர்கள், உதவித்திட்ட ஒருங்கிணைப் பாளர்கள் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் முதலானோர்களை மேற்பார்வையிடல்.
	(இ) தன்னார்வப் பயிற்றுநர்கள், ஆசிரியர் பயிற்சியளிப்பவர்கள், அமைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் முதலானோர் களுக்கு நேரடியாக அல்லது ஊராட்சி மூலமாக மதிப்பூதியம் வழங்கல்.
3. திட்டச் செயலாக்கத்தை மறு ஆய்வு செய்தல்	(அ) திட்டங்களின் செயலாக்கத்தை கல்வி மீதான நிலைக்குழு வாயிலாகப் காலமுறைப்படி ஆய்வு மேற்கொள்ளல்.

III மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
(1)	(2)
1. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வியைத் திட்டமிடலும்,கண்காணித்தலும்	(அ) மாவட்டத்தில் முழுஅளவில் கல்வியறிவை எய்துவதற்கு தற்போதைய நிலை அறிக்கையையும், எதிர்கால திட்டங் களையும் தயாரித்தல். மேலும், கல்விமுன்னேற்றத்தையும் கல்வி பரப்ப ஆதரவு திரட்டினதையும் மறு ஆய்வுசெய்வ தற்குக் காலமுறைப்படி மாநாடுகளுக்கு ஏற்பாடு செய்தல்.
	(ஆ) பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்ட செயலாக்கத்தை கல்வி மீதான அதன் நிலைக்குழு மற்றும் அல்லது பிறவழிகளின் வாயிலாகக் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்.
	(இ) பள்ளிசாராக் கல்வி மையங்களின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித்துறையுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதுடன், ஊராட்சிகளிட மிருந்து, ஊராட்சி ஒன்றியங்களிட மிருந்து பெறப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல்.

நிருவாகச் சிக்கல்கள்

11. முழு எழுத்தறிவு இயக்ககம், கல்வி மேம்பாட்டுத் திட்ட இயக்கம், கல்வியறிவு பெற்ற தொண்டர் பணித் திட்டம், தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலையில் பணியாற்றும் குழந்தைச் சிறார்களுக்கான முறைச்சாரக் கல்வித் திட்டம், பழங்குடியினருக்கான சிறப்புத் திட்டம், வித்தியாபீடம், அரசல்லாத அமைப்புகள் நடத்தும் உதவி பெறும் முறைச்சாராக் கல்வி மையங்கள் ஆகிய பல்வேறு வயது வந்தோர் முறைச்சாராக் கல்வித் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயற்பட்டு வருகின்றன. நாட்டில் வேறு சில மாநிலங்களில் உள்ளது போல அரசு சார்பற்ற நிருவனங்கள் மேற் கண்டவை போன்ற சிறப்பான திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி திட்டப் பயன்களின் தாக்கத்தை தமிழ் நாட்டில் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளனர். இதனை மேலும் உத்வேகப்படுத்தும் பொருட்டு அரசும் சில தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 1976ஆம் ஆண்டில் வயதுவந்தோர் மற்றும் முறைச்சாராக் கல்வி இயக்ககம் அமைக்கப்பட்டது. அதற்குபின் 1979–ஆம் ஆண்டில் வட்டார, கிராம அளவில் ஆதாரப் பணியாளர்கள் எவருமின்றி மாவட்டங்களில் முதியோர் மற்றும் முறை சாராக் கல்வித் திட்டங்கள் செயற்படுவதைக் கவனிப்பதற்காக ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட முதியோர் கல்வி அலுவலர் ஒருவரை நியமனம் செய்ததன் மூலம் மாவட்ட அளவில் இத்துறை வலுப்பெற்றுள்ளது.

12. முழு எழுத்தறிவு இயக்கம், தொடர் கல்வி திட்ட இயக்கங்கள் மாவட்ட எழுத்தறிவு மன்றங்களின் மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தலைவராகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் வாயிலாகவும், வட்டாரநிலையில் முழு எழுத்தறிவு இயக்கத்தைக் கட்டுப்படுத்து வதற்கும் கண்காணிப்பதற்கும் வட்டாரதிட்ட ஒருங்கிணைப்பாளர், மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியோரைக் கொண்ட வட்டார நிலைக்குழு உள்ளது.

13. ஒருங்கிணைப்பாளர், வருவாய் ஆய்வாளர், ஊரக நல அலுவலர்கள், வேளாண்மை, வேளாண்மை பொறியியல் துறைகளிலிருந்தும் பிரதி நிதிகளை வட்டார நிலையில் இத்தகைய திட்டங்களில் ஈடுபடுத்தி வட்டார நிலைக் குழுவின் ஒருங்கிணைப்பு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர். கிராம நிலையில் கிராம நிருவாக அலுவலர்கள், மதிய உணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், ஊராட்சி எழுத்தர்கள், பொது வினியோக திட்ட பணியாளர்கள் ஆகியோர் கிராம ஒருங்கிணைப்பாளர்களாகவும் திட்டத்தின் செயற்பாட்டுப் பணியில் ஈடுபாடுடைய கிராம நிலைக் கல்விக் குழுக்களின் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

14. தற்போதைய முழு எழுத்தறிவு இயக்கம், தொடர் கல்வி திட்ட இயக்கம் இதர கல்வியறிவு திட்டங்களுக்கு போதுமான நிதி அளிக்கப்பட்டிருந்தும் வட்டார நிலையில் இத்திட்டத்திற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக அமைப்புகளின் ஒத்துழைப்பு இல்லாததாலும் முழுநேர முதியோர் கல்வி அமைப்பு இல்லாததாலும் எதிர்பார்த்த அளவிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு குழுக்கள் இத்திட்டங்களின் உண்மையான பயனை போதுமான அளவில் அடையவில்லை. எனவே ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளை இத்திட்டத்தில் ஈடுபடுத்தி மேற்கண்ட குறைபாடுகளை களையலாம். அதாவது கிராம நிலையில் ஏற்படுத்தப்படும் அனைத்து கிராம நிலைக்கல்வி குழுக்களுக்கும் கிராம ஊராட்சி தலைவர்களை தலைவர்களாக, நியமனம் செய்தல் வேண்டும். அதுபோலவே மாவட்டங்களில் செயற்படுத்தப் பெறும் வயது வந்தோர் மற்றும் முறைசாராக் கல்வித் திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட மாவட்டக் கல்வியறிவு மன்றத்திற்கும், பிற மாவட்ட நிலைக் கல்வி குழுக்களுக்கும் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், தலைவர்களாகவும், மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலர்கள் உறுப்பினர் சபை கூட்டுநர்களாகவும் இருப்பர். இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட வட்டார அளவில் நிரந்தர வயது வந்தோர் கல்வி இயந்திரம் ஒன்றினை உருவாக்கி உதவி முதியோர் கல்வி அலுவலர் ஒருவரை நியமித்து இத்திட்டத்திக்கு நிர்வாக ஆதரவு ஏற்படுத்தி தரவேண்டும். மாநில அளவில் முழு எழுத்தறிவு இயக்கம் மற்றும் தொடர் கல்வி இயக்கம் ஆகியவற்றை செயல்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள மாநில அளவிலான கல்வி பரப்பு அதிகாரக்குழுவில் உறுப்பினராக மாவட்ட ஊராட்சி தலைவர்கள் மக்கள் பிரதிநிதியாக கலந்து கொண்டு செயலாற்றுவர்.

நிதிச் சிக்கல்கள்

15. 1996–97 ஆம் ஆண்டு திட்டத்தில் முதியோர் மற்றும் முறைசாராக் கல்விக்கென ரூ. 24.15 இலட்சங்கள் திட்டம் சாரா இனத்திலும் ; ரூ.448.46 இலட்சங்கள் திட்ட செலவினமாகவும் ; ரூ 232.01 இலட்சங்கள் மைய அரசு பொருப்பேற்கும் (100 சதவிதிதம்) திட்டத்திலும் மற்றும் ரூ, 42.52 இலட்சங்கள் (50:50) மாநில மைய அரசு பொருப்பேற்கும் திட்டத்திலுமாக மொத்தம் ரூ. 725.88 இலட்சங்கள் ஒதுக்கீட்டுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இதில் பெருவாரியான தொகை திட்ட ஒருங்கிணைப்பாளர், ஆசிரியர், தன்னார்வளர் பயிற்றுளர் அமைப்பாளர்கள்/ மேற்பார்கையாளர்களுக்கும் ஊதியம்/மதிப்பூதியமாக வழங்கிட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில திட்டக்குழுவின் உபகுழுவானது மேற்கண்ட பணியாளர்களுக்கான ஊதியங்களை உள்ளாட்சி அமைப்புகள் வழங்கிட வேண்டுமென்று பரிந்துரைக்கின்றது. எனவே முறைசாராக் கல்வி திட்டம் சிறப்பாக செயல் பட வேண்டுமெனில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இதற்கான நிதி ஆதாரங்களை அளிக்கும் பொருட்டு ஒரு முறையான மானிய உதவி வழங்கும் வகையினை ஏற்படுத்திட வேண்டும் என்று விரும்புகின்றது. மாநில நிதி ஆணையம் முறை சாராக் கல்வி திட்டம் உட்பட கல்வி திட்டங்களுக்காக மானியம் வழங்கும் பொருட்டு தேவையான வழிகாட்டு முறைகளை வகுத்து பரிந்துறைத்திருக்குமென நம்பப்படுகிறது.

சட்டச் சிக்கல்கள்

16. மைய அரசு வெளியிட்ட வழிகாட்டு நெறி முறைகளுக்கு கிணங்க, தமிழக அரசு ஆணை எண் 745, கல்வி (V II) நாள் 20.8.1992–ன் படி தமிழ்நாடு எழுத்தறிவு அதிகாரக்குழு என்ற அமைப்பினை ஏற்படுத்தியது. இக்குழுமம் ஒரு மன்றத்தினையும், ஒரு செயற்குழுவையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மாறிவரும் சூழலில் இவ்வாணையத்தில் மாவட்ட ஊராட்சி தலைவர்களுக்கும், ஒரு சில ஊராட்சி ஒன்றிய தலைவர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளித்திடும் வகையில் மேலே குறிப்பிட்ட அரசு ஆணையில் தேவையான திருத்தங்களை செய்திட வேண்டுமென மாநிலத்திட்டக் குழு பரிந்துரைக்கின்றது.

17. மாவட்ட அளவில் முழு எழுத்தறிவு திட்டமானது சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியாளரை தலைவராக கொண்டு செயல்பட்டு வரும் மாவட்ட எழுத்தறிவு மன்றங்களால் செயற்படுத்தப் படுகின்றன. இந்த மாவட்ட எழுத்தறிவு மன்றங்களில் மாவட்ட ஊராட்சி தலைவரை தலைவராகவும், மாவட்ட திட்டகுழுவின் தலைவரை இணைத் தலைவராகவும் ஊராட்சி மற்றும் நகர்புற ஊராட்சி அமைப்புகளின் மற்றும் அரசு சார்பற்ற அமைப்புகள் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் இம்மாவட்ட எழுத்தறிவு மன்றங்களின் / ஆட்சி மன்றகுழுக்களில் நியமித்திடும் வகையில் தேவையான மாற்றங்கள் உள் விதிகளில் செய்திட வேண்டுமென பரிந்துரைக்கிறது. மாவட்ட முதியோர் கல்வி அலுவலர் இம்மன்றத்தின் உறுப்பினர் – செயலராக நியமிக்கப் பட வேண்டுமெனவும் பரிந்துரைக்கிறது.

நூலகங்கள்

(இனம் - 20)

1. 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பொது நூலகத்துறையின் வாயிலாக இம்மாநிலத்தில் நூலகப் பணிக்கு வழிவகை செய்யப் பெற்றுள்ளது. மாநிலத்தில் பொது நூலகங்களை நிறுவுவதற்கும், ஊரகங்களிலும், புறநகர்ப்பகுதிகளிலும் நூலகங்களை அமைப்பதற்கும் வழிவகை" செய்வதற்காக இயற்றப்பட்ட இச்சட்டம்தெரிவிக்கின்றது. சென்னை நகரத்திற்கு என ஒன்றையும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று வீதமும் உள்ளாட்சி நூலக ஆணைக்குழுக்களை நிறுவுவதற்கு இச்சட்டம் வழிவகை செய்கிறது. முதன்மை மற்றும்கிளை நூலகங்களை அதன் அதிகார வரம்பெல்லைக்குள் அமைப்பது உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவின் பொறுப்பாகும். 19 மாவட்ட மைய நூலகங்களும், 1545 கிளை நூலகங்களும் 9 நடமாடும் நூலகங்களும். 1069 பகுதி நேர நூலகங்களும் இம் மாநிலத்தில் உள்ளன. மாநில மைய நூலகமாக கன்னிமாரா பொது நூலகம் அறிவிக்கப் பெற்றுள்ள நூலகங்களிலும். உள்ளாட்சி நூலக ஆணைக்குழுக்களிலுமாக 3440 பேர் பணியாற்றுகின்றனர். நூலகங்களுக்கு 1996–97 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 14.64 கோடி ரூபாய்களாகும் ; இதில் திட்ட முதலீடான 28.90 இலட்சம் ரூபாய்களும் அடங்கும்.

02. சொத்துவரி அல்லது வீட்டு வரி இவற்றின் மீதான 3 விழுக்காடு வீதம் மேல்வரி வடிவத்தில் நூலக வரி விதிப்பதற்கு மேற்குறிப்பிட்ட சட்டம் வழிவகை செய்கிறது (இவ்வீதம் 5 விழுக்காடாக திருத்தப்பட்டு, இப்போது 10 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது). இவ்வரியினை உள்ளாட்சி அமைப்புகள் திரட்டி திரட்டப்பெற்ற தொகையை மாவட்ட உள்ளூர் நூலக ஆணைக்குழுவிற்குத் திருப்பிச் செலுத்தி விடுகின்றன. "மாவட்டத்தில் திரட்டப்பட்ட வரிகளுக்குக் குறையாத அளவிலான" தொகைக்கு நிகரான மானியத்தை மாநில அரசும் வழங்குகின்றது. உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவானது நூலக நிதியம் ஒன்றைப் பராமரித்து வருகின்றது. இதில் வரியும் அரசு மானியமும் ஒன்றாக்கப்பட்டு இச்சட்டத்தின் படி அமைக்கப்பட்ட நூலகங்களுக்காகும் செலவினங்கள் மேற்கொள்ளப் பெறுகின்றன. 1994–95 ஆம் ஆண்டிலும் 1995–96 ஆம் ஆண்டிலும் திரட்டப்பட்ட வரி முறையே 6.12, 7.82 கோடி ரூபாய்களாகும். 1996 ஆம் ஆண்டு செப்படம்பர்த் திங்களன்று வரை திரட்டப் பெற வேண்டிய கணக்கிடப் பெற்ற நிலுவை வரி 23.57 கோடி ரூபாய்களாகும் என அறியப் பெறுகின்றது. தவிரவும் நூலகங்களையும், படிப்பகங்களையும் கட்டுவதற்கு முறையே 1994–95 ஆம் ஆண்டிலும் 1995–96 ஆம் ஆண்டிலும் பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டப் பணிகளின் வாயிலாக 110.28 இலட்சம் ரூபாய்கள், மற்றும் ரூ. 97.98 இலட்சம் அளிக்கப் பெற்றிருக்கின்றன.

03. இச்சட்டத்தின் படி அமைக்கப் பெற்ற உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவானது பரவலான அடிப்படையை உடையது ஒன்றாகும். இதில் ஊரக மற்றும் நகர் உள்ளாட்சி அமைப்புகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளர்களும் பங்கேற்க வழிவகை செய்யப் பெற்றுள்ளது. மேற்குறிப்பிடப் பெற்ற இச்சட்டத்தின், பிரிவு 5(3) – இன் படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவில் (1) பொது நூலகங்களின் இயக்குநரால் நியமிக்கப் பெறும் 10உறுப்பினர்கள் (5 பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் மற்றும் 3 நூலகத்தைச் சார்ந்த அலுவலர்கள்) (2)ம ாவட்டக் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர். (3) மாவட்டத்திலுள்ள ஊராட்சிகளின் தலைவர்களால் ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு உறுப்பினர் வீதம் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள். (4) ஒவ்வொரு நகராட்சிக் குழுவிற்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டு மாவட்டத்திலுள்ள நகராட்சிக் குழுக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள். (5) உள்ளாட்சி நூலக ஆணைக் குழு ஒவ்வொன்றும் தனது உறுப்பினர்களுள் ஒருவரை அதன் தலைவராகத் தெரிவு செய்ய வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது.

04. பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்குக் குறிப்பிட்ட அதிகாரங்களை அளிப்பது தொடர்பில் எழுபத்து மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் 29 பொருண்மைகளைக் (11ஆவது அட்டவணை) குறிப்பிட்டுள்ளது. இவ்வினங்களுள் (இனம் எண்.20) நூலகமும் ஒன்றாகும். 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் பிரிவு 111 (எ) வின் படி, "படிப்பகங்களைத் திறப்பது மற்றும் அவற்றைப் பராமரிப்பது" ஆகிய பணிகள் ஊராட்சிகளால் மேற்கொள்ளப் பெற வேண்டுமென ஒப்படைக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் மூன்று படிநிலை அமைப்பிடம் பின்வரும் பொறுப்புகள் ஒப்படைக்கப் பெற வேண்டுமெனப் பரிந்துரைக்கப் பெற்றுள்ளது. மாநிலத் திட்ட குழு தற்போதைய ஏற்பாடுகள் குறித்துக் கவனத்தில் கொண்டுள்ளது; மேலும் அவ்வேற்பாடுகளுக்குக் குறுக்கீடு இல்லாமல் தொடர்ந்து இந்நிலை நீடிக்க வேண்டுமெனக் கருத்துக் கொண்டுள்ளது. முதல் நிலையில் உள்ளாட்சி நூலக அதிகாரக் குழுக்களால் நூலகங்கள் ஏற்படுத்தப்படாத, நூலகப் பணி அமையாத ஊர்களில் நூலகங்களைத் திறப்பதற்கு ஊராட்சிகளுக்கு அதிகாரமளிக்கப்படலாம். மேலும் ஊராட்சிகளால் தற்போது இயக்கப்பட்டு வரும் நூலகத் அமைப்புகளை இரண்டாண்டுகளுக்குப் பின்னர் ஊர்களிலிருந்து மாவட்ட அளவில் மேற் கொள்வதற்கான அதிகாரங்களை மாவட்ட திட்டக்குழுவுடன் கலந்தாய்ந்து முடிவு செய்யப் பெறும்.

I. ஊராட்சி

தொடர் எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	நூலகங்களைத் திறத்தல்	1. ஊராட்சியில் புதிய நூலகங்களைத் திறத்தல்.
2.	பொது நூலகங்களை இயக்குதலும் பராமரித்தலும்	i). வளர்ச்சித் திட்டங்கள் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன் படுத்தி படிப்பகங்களையும் நூலகக் கட்டங்களையும் கட்டுதல். ii) ஊராட்சியில் இயங்கி வரும் உள்ளூர் நூலக ஆணைக்குழு நூலகங்களை எடுத்துக் கொள்ளுதல் iii) அரசு மானியத்திற்கு ஈடாக நூலக வரியுடன் சேர்த்து நூலகத்தைப் பரா மரித்து இயக்குதல்.
3.	நூலக வரியைத் தண்டல் செய்து திருப்பிச் செலுத்துதல்	i) அரசால் குறிப்பிடப்பட்டவாறான நூலக வரியைத் திரட்டுதல், அதனை மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவிற்குத் திருப்பிச் செலுத்துதல். ii) நூலகத்தை இயக்குவதற்காகவும் பராமரிப்பதற்காகவும் நூலகவரியையும் மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவிலிருந்து அதற்கு ஈடான மானியத்தையும் பெறுதல்.

II. ஊராட்சி ஒன்றியம்

தொடர் எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	நூலகங்களைத் திறத்தல்	i) நூலகங்கள் இல்லாத ஊர்களில் நூலகங்களை நிறுவுவதற்கான விரி வான திட்டங்களைத் தயாரிப்பதில் உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவிற்கு உதவுதல் ii) உரிய வளர்ச்சித் திட்டங்களின் கீழ் நூலகக் கட்டடத்தையும் படிப்பகங் களையும் கட்டுவதற்காகச் ஊராட்சிகளுக்கு நிதியுதவியையும் தொழில் நுட்ப உதவிகளையும் அளித்தல்.
2	மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவில் பங்கேற்றல்	i) மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவில் உறுப்பினராக (உறுப்பினர்களாக) ஆவதற்கு ஊராட்சி ஒன்றியப் பகுதியலமைந்த ஒன்று அல்லது அதற்குமேல் பல சிற்றூராட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல்.

III. மாவட்ட ஊராட்சி

தொடர் எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	மாவட்டத்திலுள்ள நூலகங்களின் மேம்பாடு	i) மாவட்டத்தில் புதிய நூலகங்களை திறப்பதற்கும், நூலக பணிக்களுக்கான திட்டங்களை செயற்படுத்துவதற்கும் மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவிற்கு அறிவுரை வழங்குதல் ii) மக்களிடையே படிக்கும் வழக்கத்தை வளர்ப்பதற்கும் நூலகத்தைப் பயன் படுத்துவது குறித்து பரப்புவதற்கும் இயக்கத்தை ஏற்படுத்துதல் iii) மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவில் உறுப்பினராவதற்கு மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஒருவரை தேர்ந்தெடுத்தல். iv) முதியோர் கல்வி, அனைவருக்கும் எழுத்தறிவு மற்றும் முறைசாராச் கல்வி திட்டம் ஆகியவற்றை பொது நூலகப் பணிகளுடன் ஒருங்கிணைப்பது பற்றி அறிவுறுத்துதல்.
2.	நூலகத் திட்டங்களைச் சீராய்வு செய்தல்	i) நூலக நடவடிக்கைகளுக்காக அரசு மானியம் பெற ஊராட்சிகளுக்கு வசதி செய்து தருதல் ii) பின்வரும் அரசின் திட்டங்களை ஆய்வு செய்தல் அ) புதிய நூலகங்கள் திறப்பு

தொடர் எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
		ஆ) நூலகங்கள் படிப்பகங்கள் கட்டுதல் மற்றும் iii) நூலகங்களுக்கான அரசு மானியங் களைப் பெறுதல் ஆகிய அரசு திட்டங்களை மறுபார்வையிடும் பணியை மேற் கொள்ளுதல்

நிர்வாகச் சிக்கல்கள்

05. 1982 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் வரையில் உள்ளூர் நூலக ஆணைக் குழுவின் கட்டுப்பாட்டிலுள்ள நூலகங்கள் அவற்றிற்கென தாமே பணியாளர்களை நியமித்திருந்தன; அப்பணியாளர்களுக்கான சம்பளமும் படிகளும் பிற ஆதாயங்களும் மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவின் நிதியிலிருந்து வழங்கப்பெற்றன. 3.5.1982 ஆம் நாளும் 820 நிலை எண்ணும் பெற்ற கல்வி அறிவியல் தொழில் நுட்பவியல்துறை ஆணையின்படி உள்ளூர் நூலக ஆணைக்குழுவின் பணியாளர்களின் பணிகள் கல்வித்துறையுடன் இணைக்கப்பட்டதாக அரசு ஆணையிடப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் கல்வித் துறையிலுள்ள ஆசிரியர்களையும், மருத்துவம் குடும்ப நலத்துறையின் குறிப்பிட்ட நலப் பணியாளர்களையும் அரசுப் பணியாளர்களாக அரசு இதே ஆண்டில் (1982) அறிவித்தமையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 108, 109 ஆகிய பிரிவுகளுக்கிணங்க ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர் உட்பட ஆசிரியர்களும், அடிப்படை பணியாளர்களும் ஊராட்சி ஒன்றியக் குழுவின் பொது சுகாதார நிறுவனங்களில் பணியாற்றும் நலப்பணி உதவியாளர்கள், துணை செவிலியர், பேறுகால உதவியாளர்கள், மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோரும் முழுநேர அரசுப் பணியாளர்களாகக் கருதப்படுவர், அவர்களின் பணிவரையறைகளை முறைப்படுத்தும் விதிகளும் அரசுப் பணியாளர்களுக்கு உள்ள விதிகளேயாகும். தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் இதைப் போன்றதொரு பாதுகாப்பினை உள்ளூர் நூலக ஆணைக்குழு பணியாளர்களுக்கு அளிக்கவில்லை. இந்த பிண்ணனியில், ஊராட்சியிலுள்ள உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவின் கீழமைந்து இயங்கும் நூலகங்கள் ஊராட்சிகளால் சிறந்த முறையில் கவனிக்கப்பட்டு நிருவகிக்கப்பட வேண்டும் என மாநிலத் திட்ட குழு கருதுகிறது. எனவே 1982 ஆம் ஆண்டில் கல்வித் துறையுடன் இணைக்கப்பட்டுள்ள பணியாளர்களை ஊராட்சிகளுக்கு அயல் பணியில் மாறுதல் செய்யப்பட வேண்டும் என்பதுடன் 3.5.1982 ஆம் நாளிட்ட 802 நிலை எண் பெற்ற கல்வி அறிவியல் தொழில் நுட்பவியல் துறை அரசாணையில் கருதப்பட்டவாறு அவர்களுடைய சம்பளங்களும் பணிவரைமுறைகளும் ஒழுங்குப்படுத்தப்பட வேண்டுவதாகும். இத்தகைய பணியாளர்கள் ஓய்வு பெறும் போது ஊராட்சிகள் நூலகப் பணிகளைக் கவனிப்பதற்கென தாமே சொந்தமாகப் பணியாளர்களை நியமித்து கொள்வதற்குத் தேர்வுரிமையைப் பெற வேண்டும். இது தொடர்பில் தேவைப்படும் அரசு முறை வழிகாட்டல்களை வெளியிட இயலும். மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுக்களின் பணியாளர்களைப் பொறுத்த வரையில், பொது நூலக இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து பணியாற்றி வர வேண்டும். இவ்வுண்மைகளின் அடிப்படையில் நூலகங்களில் பணியாற்றி வரும் இணைக்கப்பட்ட பணியாளர்களின் பணி வரையறைகள் பாதுகாக்கப்பட வேண்டும்; அவர்களுடைய பதவி உயர்வு / மாறுதல்கள் ஆகியவையும் அரசு வழிகாட்டல்களின் பேரில் வரையறுக்கப்பட வேண்டும்.

06. 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் சடடமும் விதிகளும் தெரிவு செய்யப் பெறுவதற்கும் நியமிக்கப் பெறுவதற்கும் உரிய பலதரப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழுவை அமைப்பதனைக் குறிப்பிடுகின்றன. நியமண உறுப்பினர்களின் எண்ணிக்கையானது தேர்ந் தெடுக்கபட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமான தாகும். மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 5ஆம் பிரிவிற்கு அ) ஊரக மற்றும் புறநகர் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களுக்கும் போதுமான அளவில் உறுப்பினர் நிலை அளிப்பது. ஆ) மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவின் திறமையான மோலாண்மையின் பொருட்டு மாவட்ட ஊராட்சிகளின் உறுப்பினர்களுக்கும் மாவட்டத் தலைமையிட நகராட்சிகள் / மாநகராட்சி மன்றங்களின உறுப்பினர்களுக்கும் போதுமான பிரதிநிதித்துவம் அளிப்பது ஆகிய மாறுதல்களைச் செய்வது பொருத்தமானதாக இருக்கும். ஊரக புறநகர் உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் உள்ளாட்சி நூலக ஆணைக்குழுக்களில் அதிக அளவில் பிரதிநிதித்துவம் அளிப்பதன் வாயிலாக பஞ்சாயததுராஜ் நிறுவனங்கள் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் பயன்படும் வகையில் கொண்டு வர இயலும். இந்த வகையில் நூலகங்களிடம் செய்கடமைகளை உரியவாறு ஒப்படைத்தால் சிறந்த முறையில் நிறைவேற்றப்படும் என மாநிலத் திட்ட குழு கருதுகிறது.

07. இம்மாநிலத்தில் மக்களனைவரும் எழுத்தறிவு பெறும் இயக்கத்தை மாநில அரசு தொடங்கியுள்ளது. முதியோர் கல்வி, முறைசாராக் கல்வி ஆகியவற்றின் துணையுடன் முறைசாராக் கல்வியானது தொடக்கக் கல்வி பயிலுவதிலிருந்து எவரும் விடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் நலத்திட்டங்களின் கீழ் பெரும் எண்ணிக்கையில் மாணவர்களைக் கொண்டு செயற்படுத்தத் திட்டமிடப் பெற்றுள்ளது. இத்தகைய முயற்சிகள் ஊர்களிலுள்ள பொது நூலகங்களின் தகுந்த ஆதரவுடன் செயற்படுவது அவசியமாகும். இந்தச் சூழலில் தமிழ்நாடு பொது நூலகங்கள் சட்டம் முழுவதுமாகத் திருத்தப்பட வேண்டியுள்ளது; அல்லது புதுச்சட்டம் இயற்றப்பட வேண்டியுள்ளது.

நிதிச் சிக்கல்கள்

08. நூலக நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்காக, உள்ளாட்சி அமைப்புகளால் நூலக வரி விதிப்பிற்கும், மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவில் வரிகளைச் பொதுச் சேர்மத்தில் சேமிப்பதற்கும் மேற்குறிப்பிட்ட சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின் படி நூலக வரிக்குக் குறையாத அளவு தொகையை மானியமாக அரசு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. ஊராட்சிகளால் மாவட்ட அளவில் பொதுச்சேர்மத்தில் வைக்கப்பட்ட வரியானது பொது நூலகங்களைத் தொடங்குவதற்கும் பராமரிப்பதற்கும், ஊராட்சிகளுக்கிடையில் விகிதப்படி பங்கீட்டுக் கொடுப்பது பொருத்தமானதும் பயனுள்ளதும் ஆகும். மேலும், மாவட்ட ஊராட்சி மூலமாக ஊராட்சிகளிடமிருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் நூலக வளர்ச்சிக்காக அரசு மானியங்கள் மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுக்களால் ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட வேண்டும்; மாவட்ட ஊராட்சியானது மாவட்டங்களிலுள்ள ஊராட்சிகளுக்குத் தகுந்த நூலக மானியங்களை வழங்குவதற்குப் பரிந்துரைக்கும் ஊக்கத்துணையாகச் செயற்படும்.

சட்டச் சிக்கல்கள்

09. தமிழ்நாடு பொது நூலக ஆணைக்குழு சட்டம் 50 ஆண்டுகாலப் பழமையானது, அத்துடன் இன்றைய தேவைகளுக்கு ஈடுசெய்யும் வகையில் மாற்றங்களுக்கு உட்பட வேண்டியதாகிறது. பஞ்சாயத்து ராஜ் நிறுவன அமைப்புகள் தோன்றியதன் காரணமாக, மாநிலத்திலுள்ள பொது நூலகங்களின் வளர்ச்சிக்காகவும் மாநிலத்தில் முழு அளவிலான எழுத்தறிவு மேம்பாட்டிற்காகவும், முழுவதுமாக ஆய்ந்தறிந்த திருத்தங்களைச் செய்ய வேண்டும் அல்லது புதுச்சட்டமாவது இயற்றப்பட வேண்டும் என மாநிலத் திட்டம் குழு பரிந்துரைக்கிறது.

பண்பாடுகள் மேம்படுத்தும் நிகழ்ச்சிகள்

இனம் - 21

01. நமது பண்டைய மரபுரிமையைப் பேணிக் காப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும் கலைகள் கைத்திறத் தொழில்கள் மற்றும் பண்பாட்டை ஊக்குவிப்பதற்கும் 1984 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத்துறை தோற்றுவிக்கப்பட்டது. பல தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் ஒரு சில தனியார் நிறுவனங்கள் தவிர தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மற்றும் ஜவகர் பாலர் இல்லம் போன்ற அரசுச் சார்பு நிறுவனங்கள், பல துறைகளில் கலை மற்றும் பண்பாட்டைப் பேணும் பணிக்குத் தங்களின் பங்கை அளிக்கின்றன. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும், பண்பாட்டை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அரிய கலை வடிவங்களைப் பாதுகாக்கவும், கலைத் திறமை மிக்கவர்களை ஊக்குவிக்கவும் மாவட்டக் கலை மன்றங்கள் நிறுவப் பெற்றுள்ளன. இம்மன்றங்கள் பள்ளி நிலையில் தொடங்கி தொழில் முறை சாரா மற்றும் தொழில் முறைக் கலைஞர்கள் மூலம் கலை – பண்பாட்டு முன்னேற்றத்திற்கும் கலை மேம்பாடு தொடர்பிலான நடவடிக்கைகளுக்கும் இணைப்பு அமைப்பாகச் செயல் படுகின்றன. மேலும், இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு மற்றும் ஜவகர் பாலர் இல்லம் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் ஒரு மையமாக மாவட்டத்தில் இம்மாவட்டக் கலை மன்றங்கள் செயல்படுகின்றன. இம்மன்றத்திற்கு மாவட்டாட்சியர் தலைவராகவும், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் உறுப்பினர் செயலராகவும் உள்ளனர்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்

02. தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தின் முக்கிய நோக்கங்களாவன.

இந்திய மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், நலிந்த கலைஞர்களுக்குத் திங்கள் தோறும் நிதியுதவி ஒப்பளிப்புச் செய்தல், மறைந்த புகழ் மிக்க கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்ப பராமரிப்பு நிதியுதவி ஒப்பளிப்பு செய்தல், தமிழ் நாட்டின் பல்வேறு கலை நிறுவனங்களின் வாயிலாகச் செயல்திறமிக்க புத்திளம் கலைஞர்களின் நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகை செய்து ஊக்குவித்தல், பல்வேறு வகைகளில் கலைத்துறையில் ஆற்றிய அரிய பணிகளுக்காகக் கலைஞர்களுக்கு "கலைமாமணி" என்ற மாநில விருது வழங்கல், தமிழ் இலக்கிய காட்சிகளைத் தீட்டிக் காட்டும் தமிழ் நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றுவதற்காகத் தொழில் முறையிலான நாடகக் குழுக்களுக்கும் மானியம் வழங்கல், தமிழில் கலை மற்றும் பண்பாடு குறித்த அரிய நூல்களை வெளியிடுவதற்கு மானியம் ஒப்பளிப்புச் செய்தல், தமிழ் கலைத் துறையிலுள்ள மேதைகளை நினைவு கூர்வதற்காக விழா எடுக்கும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மானியங்களை அளித்தல், பழங்கலைகளின் அரிய கலை வடிவங்களை அழிவதிலிருந்து படியெடுத்துக் காத்தல், ஏற்பளிக்கப்பெற்ற கலைஞர்கள் வாயிலாக இசையின் அரிய தன்மைகளை ஒலிப்பதிவு செய்தல், தமிழ்நாட்டின் திரைப்படத் தொலைக்காட்சி நிறுவனங்களிலும் சென்னை மற்றும் மதுரையிலுள்ள அரசு இசைப் பயிற்சி மையங்களிலும் பயிலும் வறுமை நிலையிலுள்ள மாணவர்களுக்குப் படிப்புதவிக் தொகை அளித்தல் ஆகியனவாகும்.

1994–95 மற்றும் 1995–96 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு முறையே ரூ. 68.27 இலட்சங்களும் ரூ. 37.93 இலட்சங்களும் செலவாகியுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழு

03. போட்டி விளையாட்டுகளில் பொருத்தமான அமைப்பொன்றை உருவாக்குவதன் மூலம் இளைஞர்களின் ஆர்வத்திற்கு உறுதுணையாக இருக்கவும், அவர்களின் பேரார்வத்தை நிறைவேற்றுவதற்குப் பணி புரியவும் விளையாட்டு மற்றும் இளைஞர் பணி இயக்கத்தையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தையும் இணைத்து 1992 ஆம் ஆண்டில் (18.7.92) தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழு

தோற்றுவிக்கப்பட்டது. தேசியப் பணித் திட்டங்கள், இளைஞர் விடுதிகள், நேரு யுவ கேந்திரங்கள், இளைஞர்களுக்கான நடவடிக்கைகள் முதலியன போன்ற மைய அரசால் தொடங்கப்பட்ட திட்டங்களும் இவ்வாணைக் குழுவால் செயல்படுத்தப்படுகின்றன.

ஆணைக்குழு நிறுவப்பட்டதற்கான நோக்கங்கள் வருமாறு :

i) போட்டி விளையாட்டுக்களுக்கான நடவடிக்கைகளையும் போட்டி முகாம்களையும் நடத்தத் திட்டமிடுதல், மேம்படுத்துதல் மற்றும் தரப்படுத்துதல்.

ii) விளையாட்டு அரங்கம், விளையாடுமிடம் மற்றும் துணைக் கட்டடம் முதலியன போன்ற வசதிகளுக்காகவும் போட்டி விளையாட்டுகளுக்கான உள்ளமைப்புகளுக்காகவும் திட்டமிடுதல் அடைதல், கட்டுமானம் நிறுவி பேணுதல்

iii) குழுப் போட்டி விளையாட்டுகள், பயிற்சியளிக்கும் முகாம்கள், விளையாட்டுப் போட்டிக் காட்சிகள் மற்றும் ஏனைய போட்டி விளையாட்டு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்து வசதிகளை அளித்தல்

iv) போட்டி விளையாட்டுகள் மற்றும் விளையாட்டுக்குரிய நிறுவனங்களை/போட்டி விளையாட்டுக்குரிய கட்டடத் தொகுதிகளை நிறுவி நிருவகித்தல்.

v) போட்டி விளையாட்டுக்களில் சிறப்பாக விளங்குவதற்காக இளைஞர்களுக்கு நிதியுதவியளிக்க வகை செய்தல்; வறிய நிலையிலுள்ள தலைசிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களுக்கும் நிதியுதவி வழங்கல்: ஊக்கத் தொகை வழங்குதல்: இத்துறையால் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளான தேசிய/தென்மண்டல/மாநிலங்களுக்கிடையேயான வெற்றி வீரனுக்கான போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டுக் கழகங்களுக்கும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காகச் சில தனி நபர்களுக்கும் கூட மானியங்களை ஒப்பளித்தல் ஆகிய நடவடிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப் பெறுகின்றன. இவை நீங்கலாக விளையாட்டுப் பள்ளிகள் (ஆண்கள்) மற்றும் ஆண், பெண் இருவருக்குமான விளையாட்டு விடுதிகள் ஆகியன தமிழ்நாடு விளையாட்டுப் ஆணைக்குழுவின் உள்ளீட்டெல்லையின் கீழ் வருகின்றன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழுவுக்கு 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 359.77 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு

04. "தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு" 1992 – ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. காட்சி மற்றும் கலைகளின் செயலெல்லையில் நடவடிக்கைகளை மேம்படுத்தவும். புது தில்லியிலுள்ள லலிதகலா அகாதமியுடன் இணைந்து செயல்படவும், நாட்டின் கலாச்சார ஒற்றுமையை அதன் வாயிலாக மேம்படுத்துவதும் இந்நிறுவனத்தின் பணிகளாகும்.

05. கல்வியையும், ஆராய்ச்சியையும் மேம்படுத்துதல், கலை தொடர்பான வெளியீடுகள், கலைஞர்களுக்கும் கலைக் கழகங்களுக்குமிடையே ஒற்றுமையை வளர்த்தல், அமைப்பு நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல், மாவட்டக் கலை மையங்களை நிறுவுதல், மாநாடுகள், கருத்தரங்கங்கள், கண்காட்சிகள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்தல், ஓவியம், சிற்பம் மற்றும் கட்டடக் கலைத் துறைகளிலுள்ள தகுதியுடைய கலைஞர்களுக்கு படிப்புதவித் தொகைகளையும் பரிசுகளையும் வழங்குதல், ஆகியன ஓவிய நுண்கலைக்குழுவின் பல்வேறு நடவடிக்கைகளாகும். 1995 – 96 ஆம் ஆண்டில் மாநில அரசும் புது தில்லியிலுள்ள லலித கலைக்கழகமும் இந்நிறுவனத்திற்கு முறையே 5.50 இலட்ச ரூபாய்களையும் 10 இலட்ச ரூபாய்களையும் வழங்கியுள்ளது.

06. மாநிலத் திட்டக் குழுவால் கலை, பண்பாடு மற்றும் போட்டி விளையாட்டுகள் தொடர்பில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் 3 படி நிலை அமைப்புகளிடம் பின்வரும் பொறுப்புகளை ஒப்படைக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

கலைத் தொடர்பான நடிவடிக்கைகள்

I. ஊராட்சி

தொ. எண். (1)	நடவடிக்கை (2)	அதிகார ஒப்படைப்பு (3)
1.	கலை தொடர்பான நடவடிக்கைகளை மேம்படுத்துதல்	1) கிராமத்தில் விளையாட்டுக்கள், திருவிழாக்கள் மற்றும் கலை நிகழ்சிகளுக்குஏற்பாடு செய்தல்
		2) நாட்டுப்புறக் கலைக்குழு, நாடக, நடன குழுக்கள் போன்றவை வாயிலாகக் கல்வி அறிவு, சிறு குடும்ப அளவு, தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை விருத்தி செய்தல்.
		3) அவல நிலையிலுள்ள கலைஞர்களைக் கண்டறிந்து உதவிக்கு ஏற்பாடு செய்தல்.
		4) கிராமப்புறத்தில் விளையாட்டுத் திடலை உருவாக்கி பேணுதலும் விளையாட்டுப் பொருள்களுக்கு வகை செய்தலும்.
		5) கிராம அளவில் கலாச்சார நடவடிக்கைகளையும் போட்டிவிளையாட்டுக்களையும் விருத்தி செய்தல். கிராம நிலையில் விளையாட்டு வளாகங்கள். நாடக சபை மற்றும் பிற கட்டட வளாகங்கள் உள்ளமைப்பு களையும்ஒருங்கிணைப்பு செய்தல்.
		6) கிராமத்தில் கைவினைப் பொருட்கள் அருங்காட்சி யகத்தை நிறுவி அதனைப் பேணுதல். கலைஞர்கள் இசை மேதைகள், நடனக் கலைஞர்கள் இலக்கிய வல்லுநர்கள் பட்டியல் தயாரித்தல்

II. ஊராட்சி ஒன்றியம்

தொ. எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	கலாச்சார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்	1) உள்ளூர் கலாச்சார நிறுவனங்கள் மற்றும் சிற்றூராட்சிகளின் உதவியுடன் போட்டி விளையாட்டுகளுக்கும் கலாச்சார விழா சந்திப்புகளுக்கும் திட்டமிட்டு ஏற்பாடு செய்தல்.
		2) ஊராட்சிகளின் உதவியுடன் உள்ளூர் திருவிழாக்களுக்கு ஏற்பாடு செய்தல்.
		3) கிராம நிலையில் கலாச்சார நடவடிக்கைகளையும், விளையாட்டுக்களையும் அபிவிருத்தி செய்ய விளையாட்டு வளாகங்கங்கள் நாடக சபைகள் ஏனைய உள்ளமைப்புகள் ஆகியவற்றை நிறுவுதல்

III. மாவட்ட ஊராட்சி

தொ. எண்.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	காலச்சார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்	1) சித்திரம் வரைதல், ஓவியம் தீட்டும் போட்டிகள், பயிற்சியளிக்கும் முகாம்கள், கண் காட்சிகள், பந்தயங்கள், குழுப்போட்டி விளையாட்டுகள், இளைஞர்களுக்கான விழாச்சந்தைகள் மற்றும் திருவிழாக்கள், போன்ற நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை முறையே இயல், இசை, நாடக மன்றம், ஓவிய நுண்கலைக் குழு மற்றும் விளையாட்டுப் மேம்பாட்டு ஆணைக்குழு ஆகியவற்றின் உதவியுடன் மாவட்டங்களில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்வதற்கு வழிகாட்டல், ஊக்குவித்தல் மற்றும் ஒருங்கிணைப்பு செய்தல்
		2) தகுதியுடைய தலைசிறந்த கலைஞர்கள்/ கைவினைஞர்கள்/கைத்திற விற்பன்னர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்குச் சிறப்பு செய்து பரிசுகள் வழங்கல், மாவட்டத்தில் உள்ள புகழ் பெற்ற கலைஞர்கள்/பாடகர்கள்/கை வினைஞர்கள் கைத்திற விற்பன்னர்கள் ஆகியோரைப் பற்றிய குறிப்பு பட்டியலொன்றைத் தயாரித்துப் பேணுதல்.

தொ.எ.	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
		3) ஊராட்சிகளில் போட்டி விளையாட்டுகளின் தரத்தை மேம்படுத்துவதற்குத் திட்டமிடுதலும் அதற்கு தேவையான கட்டட உள்ளமைப்புகான வசதிகளைச் செய்து தருதலும்.

நிருவாகச் சிக்கல்கள்

07. மாவட்ட ஊராட்சி/ஊராட்சி ஒன்றியம்/ஊராட்சி நிலையில் கலாச்சார நடவடிக்கைகளைக் கவனிப்பதற்குத் தனியே களப்பணியாளர்கள் கிடையாது. கலை மற்றும் பண்பாட்டை மேம்படுத்துவதற்கும் அரிய கலை வடிவங்களைப் பாதுகாக்கவும் தேர்ச்சித் திறம் பெற்ற கலைஞர்களை ஊக்குவிக்கவும் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டக் கலை மன்றங்கள் மட்டுமே அண்மையில் (1996) தோற்றுவிக்கப்பட்டன. மாவட்டாட்சியரும் தமிழ்வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநரும் முறையே மாவட்டக் கலை மன்றங்களின் தலைவராகவும் உறுப்பினர் செயலராகவும் செயல்படுகின்றனர். இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு மற்றும் சவகர் சிறுவர் இல்லம் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் மாவட்டத்தில் ஒரு மையமாகச் செயல்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதே போன்று, மாவட்ட விளையாட்டு ஆணைக்குழுவும் மாவட்ட தலைமையிடங்களில் குறைந்த அளவுப் பணியாளர்களையேக் கொண்டுள்ளது.

08. மாநிலத் திட்டக்குழு அடிப்படையில் நிருவாகத்திற்குரியதல்லாத அதிகாரங்களை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பதற்குப் பரிந்துரைக்கிறது. எனவே, கலாச்சார நடவடிக்கைகளைக் கவனிப்பதற்குரிய பல்வேறு துறைகளின் அலுவலக அமைப்பு மற்றும் அலுவலக நடைமுறை அமைப்பில் அதிகக் குழப்பம் இருப்பதற்கில்லை.

நிதிச் சிக்கல்கள்

09. திட்டமிடல், மேற்பார்வை மற்றும் ஊராட்சிகள் கால முறையாக ஏற்பாடு செய்யும்/அமைக்கும் கலாச்சார விழாக்கள்/நடவடிக்கைகள், போட்டி விளையாட்டு நிகழ்வுகள்/சந்திப்புகள் மற்றும் அவற்றை ஒருங்கிணைக்கும் தன்மை முதலியன மாவட்ட ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியக் குழுக் களுக்கும் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களாகும். இந்நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் நிதிகளை, மாவட்ட ஊராட்சி/ ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாநில அளவிலான பிற அரசு துறைகள்/முகமைகள் வாயிலாக மாநில அரசால் ஊராட்சிகளுக்கு ஒதுக்கப் பெறுதல் வேண்டும்.

சட்டச் சிக்கல்கள்

10. ஊராட்சிகளுக்கு மான்யம் வழங்க வகை செய்தல் தவிர பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு நிருவாக/ நிதி அதிகாரங்களை மாற்றுவதற்கு/ஒப்படைப்பதற்கு ஏதும் பரிந்துரை இல்லாததால் சட்டச் சிக்கல்கள் எழவில்லை. இருப்பினும், மாவட்டக் கலை மன்றங்கள் மற்றும் மாவட்ட விளையாட்டு ஆணைக்குழு வாயிலாக முறையே கலாச்சார விழாக்களை/விளையாட்டுக்களை நடத்துவதற்குச் ஊராட்சிகளுக்கு மானியம் அளிப்பதற்குக் குறிப்பாக அரசாணை தேவைப்படும். எனவே ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மேற்படி அதிகாரம் ஒப்படைக்கப்பெறும் நோத்தில் இது குறித்து பரீசீலிக்கலாம்.

சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்

(இனம் - 22)

01. அங்காடிகள் சந்தை மற்றும் திருவிழாக்கள் ஊராட்சிகளின் ஆட்சி பகுதியில் இருந்ததென்பதை தன்னுரிமையுடைய உள்ளாட்சிகளின் வளர்ச்சியின் சரித்திரப் பின்னணி என்ற அத்தியாத்தின் மூலமாக அறிய முடிகிறது. சுதந்திரத்திற்கு பிந்திய கால கட்டத்தில் சிறப்பங்காடிகள், பொருளங்காடிகள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் வளர்ந்தன. இதன் பின்னணியில் உள்ளாட்சிகளின் பங்கானது அங்காடிகளைத் திறப்பது மற்றும் பராமரிப்பதுடன் நிறுத்தப்பட்டது. இப்பகுதியில். உள்ளாட்சிகளுக்கு அதிகார ஒப்படைப்பு சம்பந்தமாக சொல்வதற்கு முன்னதாக அங்காடிகள் மற்றும் சந்தை குறித்து விளக்குவோம்.

1. அங்காடி

02. ஒவ்வொரு ஊரிலும் ஏதோ ஒரு வகையான அங்காடி இயங்கும். அதில் காய்கறி, பழங்கள், மளிகைப்பொருள்கள், ஆட்டிறைச்சி மற்றும் இதர பொருட்கள் விறகப்படும். பொதுவாக அங்காடிகள் வாரத்திற்கு ஒரு முறை இயங்கும். ஆனால் சில சமயங்களில் வாரம் இருமுறையோ அல்லது அன்றாடமோ கூட நடைபெறுகிறது. எது எப்படியிருந்தாலும், வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் வசதிகள் குறைவாகவே இருக்கும். மக்கள் தரையில் கடை பரப்பி அமர்ந்திருப்பார்கள். அவர்கள் வெய்யிலிலும், மழையிலும் அவதிப்படுவர். அந்த இடம் பெரும்பாலும் தூய்மையின்றி இருக்கும். சாலைகளின் ஓரம், சாலைகளின் சந்திப்பு மற்றும் அவை போன்ற பிற இ டங்களே அங்காடிகள் நடத்தப் பயன்படும் இடங்களாகும். சில கிராமங்களில் கால்நடை மற்றும் கோழிகள் விற்கும் காலமுறைச் சந்தைகள் நடத்தப்படுகின்றன. இம்மாதிரி சந்தைகள் திறந்த வெளி நிலங்களில் வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் குறைந்த வசதியுடன் இயங்குகின்றன

03. எனவே வாங்குபவர்களுக்கும் – விற்பவர்களுக்கும் நல்ல வசதியுடன் கூடிய ஏற்ற இடங்களை ஏற்பாடு செய்வது ஊராட்சிகளின் கடமையாகும். வெயில், மழை மற்றும் காற்று ஆகியவற்றிலிருந்து போதிய அளவில் பாதுகாத்து அங்காடிகளை சுத்தமாக வைக்க வேண்டும். விற்பனையாளர்கள் இந்த வசதிகளுக்காகக் கட்டணம் செலுத்த வேண்டும். எனவே, இந்நன்மையானது இருசாரருக்கும் இலாபகரமானதாக இருக்கும். உள்ளாட்சிகளுக்கு கட்டணமும், விற்பவர்களுக்கு வசதிகளும் கிடைக்கும். எனவே உள்ளாட்சிகள், விற்பனை வாய்ப்புள்ள இடங்களில் புதிய அங்காடிகளைத் தொடங்குவதோடு அல்லாமல் தற்போதுள்ள அங்காடிகளை மேம்படுத்தி பராமரிக்க வேண்டும்.

04. இதுபோன்று எந்த சந்தையும் இல்லாத ஊராட்சிகளும் இருக்கலாம். இதற்கு, அந்த ஊரில் ஒரு சந்தைக்கான தேவை ஏதும் இல்லை என்பது பொருளல்ல. இது, மக்கள் தங்கள் கிராமத்தில் கடை எதுவும் இல்லாததால் அன்மையில் உள்ள ஒரு சந்தைக்கு செல்வதையே காட்டுகிறது. பொதுவான மக்கள் தொகை வளர்ச்சிக்கும் ஊரின் வளமைக்கும் ஊருக்கொரு சந்தை அவசியமாகிறது. இத்தகைய ஊர்களில் புதிய சந்தைகளைத் தொடங்குதல் ஊராட்சியினுடைய பொறுப்பில் இருக்க வேண்டும். இது முதலில் ஆதாயமானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நாளடைவில் இது நிச்சயம் ஆதாயமானதாக இருக்கும். ஊரில் ஒரு ஒழுங்குப்படுத்தப்பட்ட அல்லது கூட்டுறவு சந்தை இருக்கலாம் இந்த விதமான இடங்களில் ஊராட்சிகளின் பங்கு குறைவாக இருக்கிறது. ஊராட்சிகள் சிறப்பான சந்தைகள் வளர்ச்சியினை எளிதாக்கும் முகமையாகும். கிராம சந்தையை பொருத்தவரை, சந்தைகளை ஏற்படுத்தவும் அவற்றை பராமரிக்கவும் இதன் காரணமாக அவற்றிலிருந்து வருவாய் பெறுதற்கும் உரிய அதிகாரமானது ஊராட்சியினுடையதாகும். எனவே, ஊராட்சி ஒன்றியம் இத்தகைய சந்தைகள் ஆரம்பிப்பதும் பராமரிப்பதும் ஊராட்சி சந்தைகளுக்கு இணையனதாக இருக்கும். 1.4.1991 நிலவரப்படி, 1992ன் ஊரக வளர்ச்சி இயக்குநர் மதிப்பீடு படி தமிழ்நாட்டில் 1166 கிராமச் சந்தைகள் இருப்பதையும் மக்களின் வளர்ந்து வரும் தேவையை நிறைவு செய்ய மேலும் 1133 கிராம சந்தைகள் தேவைப்படுகின்றன என்பதையும் தெரிவிக்கிறது.

கூட்டுறவு சந்தைகள்

05. தஞ்சாவூர், திருவாரூர் பன்னீர் செல்வம், நாகப்பட்டினம் காயிதே மில்லத், நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மாநிலம் முழுவதும தமிழ்நாடு கூட்டுறவு அங்காடி இணையத்துடன் இணைக்கப்பட்ட 113 தொடக்க நிலை கூட்டுறவு அங்காடி சங்கங்கள் இருக்கின்றன. தமிழ்நாடு கூட்டுறவு சந்தை இணையம், பருத்தி, நெல், மிளகாய், சூரியகாந்தி விதைகள், கொத்த மல்லி, உளுந்து முதலிய வேளாண் உற்பத்திப் பொருட்களை கொள்முதல் செய்கிறது. தமிழ்நாட்டில் தேசீய வேளாண்மை கூட்டுறவு சந்தைகள் இணையத்தின் வரையறுக்கப்பட்ட செயல்பாட்டிற்கு துணை புரியும் ஒரு முகவாராக இது செயல்படுகிறது. கூட்டுறவு அங்காடி சங்கங்கள் வேளாண்மை உறுப்பினர்கள் வேளாண் பொருட்கள் நியாயமான விலையில் விற்பனை செய்ய உதவுகிறது. 1995 – 96 ல் ரூ. 728.98 கோடி மதிப்புள்ள வேளாண் விளை பொருள் விற்பனையானதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. கூட்டுறவு அங்காடி சங்கங்களின் பங்குகளில் ஒன்று விற்பனையுடன் கடனை இணைப்பது. இந்த சங்கங்களின் பங்குகளில் ஒன்று விற்பனையுடன் கடனை இணைப்பது. இந்த சங்கங்கள் விவசாய உறுப்பினர்கள் நியாயமான விலை பெறுவதற்கு வேளாண் விளை பொருட்களுக்கு அடமானக் கடனுக்கும் ஏற்பாடு செய்கிறது. 1994–95ல் ரூ. 698.82 இலட்சங்கள் கடனாக தரப்பட்டிருந்தது. இந்த சநதைகளில் கையாளும் பொருட்களின் அளவு உயர்ந்து கொண்டிருக்கிறது. (1992 – 93ல் 38948 மெ. டன்னாக இருந்தது 1994 – 95ல் 61.022 மெ. டன்னானது).

வேளாண்மை சந்தை

06. வேளாண்மை விற்பனைத் துறையானது, உழவர்களின் விளை பொருட்களை உரிமம் பெற்றவர்களிடம் சரியான எடையில் செய்யவும், விற்ற பொருட்களுக்கு உடன் நல்ல பணம் கிடைக்கவும் உதவி புரிந்து வருகிறது. இதன் மூலம் உழவர்கள், இடைத்தரகர்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். இது தொடர்பாக 1987 ஆம் ஆண்டைய "தமிழ்நாடு வேளாண்மை விற்பனை ஒழுங்குபடுத்துதல் சட்டம்" எனும் ஒரு சட்டத்தை அரசு இயற்றியது. இதன்படி, அனைத்து விற்பனை குழுக்களிலும் வேளாண் விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டு விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் முறையான வியாபாரம் நடைபெற வழி வகுக்கப்பட்டுள்ளது. கீழகாணும் திட்டங்களை வேளாண் விளைபொருள் விற்பனை துறைய செயல்படுத்துகிறது.

1. ஒழுங்கு முறை விற்பனை கூடங்களைத் தொடங்கி பராமரித்து வருதல்.

2. பணம் தேவைப்படும் உழவர்களுக்கு "அடகுக்கடன்" வசதி செய்து தருதல்.

3. வேளாண் மற்றும் தோட்டப் பொருள்களுக்கு அக்மார்க் தரம் வழங்குதல்

4. வேளாண் பொருட்களை வணிக முறைத் தரம்பிரித்து வழங்குதல்.

07. மேற்படி பணிகளை செய்யும் பொருட்டு மாவட்ட அளவில் விற்பனைக் குழுக்கள் உள்ளன. அவ்விற்பனைக் குழுக்கள் கட்டுப்பாட்டில் 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 15 துணை விற்பனைக் கூடங்கள், 44 சோதனைச் சாவடிகள், 96 வணிக முறை தரம் பிரிப்பு மையங்கள், 11 பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் 1 புகையிலை தரம் பிரிப்பு மையம் ஆகியவை இயங்கி வருகின்றன. இவ்விற்பனைக் கூடங்களுக்கான வரத்து 1991 – 92 ஆம் ஆண்டு 4.68 இலட்சம் டன்னிலிருந்து 1995 – 96ல் 8.67 இலட்சம் டன்னாக உயர்ந்தது. வசூலிக்கப்படும் 1 விழுக்காடு அங்காடிக் கட்டணமானது விற்பனைக் கூடங்களில் வசதியை மேம்படுத்த உதவுகிறது.

2. சந்தையும், திருவிழாக் கடைகளும்

08. பொதுவாக ஒவ்வொரு ஊராட்சியிலும் பலதரப்பட்ட சமூக மற்றும் சமய சார்புடைய விழாக் காட்சிக் கடைகளும் திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன. ஊராட்சிகள், அடிப்படை வசதிகளாகிய நீர், சுகாதாரம், மின்சாரம் மற்றும் மருத்துவ வசதி ஆகியவற்றைச் செய்து தருவதின் மூலம் விழாக்காட்சி கடைகளை நடைமுறை படுத்த வேண்டும். மேற்படி வசதிகளை பொதுமக்களுக்கு செய்து தருவதற்காக ஊராட்சிகள், சந்தை மற்றும்

விழாக்கள் நடத்துவதை தங்கள் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். விழாக் காட்சிக் கடைகளும் திருவிழாக்களும் நடத்த பின்பற்றப்படும் பண்பாட்டிற்கு ஊராட்சிகள் இடையூறு ஏற்படுத்தக் கூடாது. மாவட்ட ஊராட்சிகள் மேற்படி விழாக்களுக்கு பின்பற்றப்படும் தொன்று தொட்டு வரும் பண்பாட்டினை ஆவணப்படுத்த வேண்டும். இவ்விழாக்காலங்களில் பல ஊர்களிலிருந்து அதிக மக்கள் கூடுவார்கள். பெரும் எண்ணிக்கையிலான வணிகர்கள் தங்கள் பொருட்களை விற்பனை செய்ய வருவர். வணிகர்கள் தங்கள் கடைகளை திறப்பர். பலதரப்பட்ட திண்பண்டக் கடைகள். காபி மற்றும் தேனீர் கடை இயங்கும். ஏதாவது ஒரு வகையில் கட்டுப்பாடு இல்லையெனில் பல பிரச்சனைகள் எழும். வியாபாரிகள் எந்த ஒரு ஒழுங்கையும் கடைப்பிடிக்காமல் ஆங்காங்கே கடையை திறப்பார்கள். மக்கள் கிடைக்குமிடங்களிலெல்லாம் சுகாதாரா கேடு விளைவிப்பர். விற்கப்படும் உணவு பொருட்கள் சுத்தமின்றி இருக்கும். இதனால் அபாயகரமான தொற்று நோய்கள் பரவும். இதுபோன்ற நிலைகளில் நல்ல தரமான வாழ்க்கை வாழ்பவர்களுக்கு உடல் நலக்கேடு மற்றும் சுத்தமின்மை தவிர்க்க முடியதாதாகி விடும். எனவே எல்லா மக்களும் மகிழ்ச்சியுடன் சந்தை மற்றும் விழாக்களில் கலந்து கொள்ளும் வகையில் இது போன்ற விரும்பத்தகாத விளைவுகளை வருமுன் தடுக்க தேவையான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்.

சட்ட ஏற்பாடுகள்

09. அங்காடி மற்றும் சந்தைகளைப் பொறுத்த வரையில உள்ளாட்சி நிறுவனங்களின் பணி, அதிகாரம், பொறுப்பு ஆகியவை பற்றி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ல வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பொருட்கள் பற்றிய பிரிவுகள் விபரம் வருமாறு :–

1. பிரிவு 111 கிராமப் பஞ்சாயத்துக்கள், பொது அங்காடி மற்றும் சந்தைகள் தொடங்குவது, பராமரிப்பு மற்றும் திருவிழாக்கள் தொடர்பான கட்டுப்பாடு குறித்து விளக்குகிறது.

2. பிரிவு 112 (ஜி) மற்றும் (ஜெ) ஊராட்சிக்குத் தொடர்புடைய பொது அங்காடி தொடங்குவது பற்றி விளக்குகிறது.

3. பிரிவு 147 (1) மற்றும் (2) பொது அங்காடி தொடங்க இடம் மற்றும் முற்றம் வழங்குதல் மற்றும் கட்டணம் வசூலித்தல் பற்றி விளக்குகிறது.

4. பிரிவு 148 (1) 150, 151 தனி அங்காடிகளுக்கு உரிமம் வழங்குவது மற்றும் ரத்து செய்யும் அதிகாரம் பெற்று விளங்குகிறது.

5. பிரிவு 148 (2) (4) மற்றும் (5) வாடகை கட்டணங்கள் மற்றும் உரிமம் வழங்க வரையறைகள் செய்தல் மற்றும் கட்டணங்கள் நீக்கம் பற்றி விளங்குகிறது.

6. பிரிவு 149 தனியார் அங்காடிகளின் தகராறுகள் மற்றும் உரிமம் தொடர்பில் அரசின் அதிகாரம்.

7. விதி 153 (1) (2) தனியார் நிலங்களை கையகப்படுத்தி அதற்குரிய இழப்பீட்டுத் தொகையினை உரிமையாளருக்கு வழங்குவதற்கும் அந்த இடங்களில் பொது அங்காடிகள் திறப்பதற்கும் உள்ள அதிகாரம் பற்றி இவ்விதி விளக்குகிறது.

8. விதி 154 (எ) மற்றும் (பி) தங்குவதற்கு மற்றும் பொருள்கள் இறக்குவதற்கு இடம் ஒதுக்குதல் மற்றும் வண்டிகள் நிறுத்துமிடம் முதலியவைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் சில இடங்களைப் பயன்படுத்தத் தடை செய்தல் பற்றி விளக்குகிறது.

9. விதி 186 மற்றும் 187 கட்டணம் மற்றும் வரவு சம்பந்தமாக விளக்குகிறது.

10. விதி 224 எடை கற்கள் மற்றும் அளவைகளை சோதனையிடுவது பற்றி விளக்குகிறது.

11. விதி 245 சட்டத்தை மீறுபவர்கள் மீது விதிக்கப்படும் தண்டங்கள் குறித்து விளக்குகிறது.

10. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவற்றுக்கு வழங்க பரிந்துரைக்கப்படும் அதிகாரங்கள் வருமாறு :

I. ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. அங்காடிகள் நடத்துவதற்கு உரிய இடங்களை தேர்வு செய்தல்	1. அங்காடிகள் மற்றும் சந்தைகள் நடத்துவதற்கு நடத்துவதற்கு உரிய இடங்களை தேர்வு செய்தல் மற்றும் அங்காடிகள் கட்டுதல்.
	2. பொது அங்காடிகளை திறந்து மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
	3. அங்காடி வளாகங்கள், ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் ஆகிய வற்றை மேம்படுத்துதல்.
2. சந்தைகள் மற்றும் விழாக்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்தல்	1. பிற அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்க கூடியதென குறிப்பாக அறிவிக்கை செய்யப்பட்ட சந்தைகள் மற்றும் திருவிழாக்கள் நீங்கலான அனைத்து அங்காடி மற்றும் சந்தைகளை கட்டுப் பாட்டில் வைத்திருத்தல்.
3. முறைப்படுத்தல், கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் கண்காணித்தல், மற்றும் கட்டணங்கள்	1. கடைகள், அங்காடிகள் மற்றும் திருவிழாக் கடைகள், திருவிழாக்கள் நடத்துவதற்குரிய உரிமம் வழங்குவதற்குரிய வரையறைகள் விதித்தல். வரையறை மீறல் காரணமாக உரிமத்தினை ரத்து செய்யும் ஆணை.
	2. அங்காடிகள் நடத்துவதற்குரிய முகவர், மற்றும் இடைத்தரகர்களுக்கான உரிமம் வழங்குதல்.
	3. கீழ்காணும் இனங்களுக்கான கட்டணங்கள் நிர்ணயித்தல் மற்றும் வசூலித்தல்.
	அ. ஊராட்சியில் பொது அங்காடிகளை நடத்துவதற்கு.
	ஆ. கடைகள் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் ஆகியவை உபயோகிக்க.
	இ. கால்நடை. கோழி, விலங்கு மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் விற்பனை செய்ய.

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
	4. கீழ்காணும் சட்ட மீறல்களுக்கு தண்டனை வழங்கவும், அபராதம் விதிக்கவும் வகை செய்யப் பட்டுள்ளது. அதாவது உரிமம்பெறாமல் கடைகள் திறப்பது. பொருட்கள் / ஆடு, மாடுகள் விற்பது, அனுமதி பெறாமல் அங்காடி மற்றும் சந்தைகள் நடத்துவது.

I. ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. அங்காடிகள் நடத்துவதற்கு உரிய இடங்களை தேர்வு செய்தல் மற்றும் மேம்படுத்தல்	1. கிராம பஞ்சாயத்தின் ஒப்புதலுடன் ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் மற்றும் சந்தைகள் நடத்துவதற்குரிய இடங்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் அதனை அறிவிக்கைப் செய்தல்.
	2. ஊராட்சி ஒன்றிய பொது அங்காடிகளை திறப்பது, மேம்படுத்துவது மற்றும் பராமரிப்பது.
2. சந்தைகள் மற்றும் விழாக்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்து கண்காணித்தல்	1. அங்காடிகள் நடத்துவதற்குரிய உரிமம் வழவங்குவதற்கு சட்ட திட்டங்களை தயாரித்தல் மற்றும் வரையறை மீறல் காரணமாக உரிமத்தினை ரத்து செய்தல்
	2. தனியார் அங்காடிகள் நடத்துவதற்கு முகவர் மற்றும் இடைத் தரகர்களுக்கும் உரிமம் வழங்குதல்.
	3. கீழ்க்காணும் இனங்களில் ஊராட்சி ஒன்றிய அங்காடிகளுக்கு கட்டணங்கள் நிர்ணயித்தல் மற்றும் வசூலித்தல். அ. பொருட்களை விற்பனைக்கு விளம்பரப் படுத்த. ஆ. கடைகள், வாகனம் நிறுத்துமிடம் பயன்படுத்த. இ. கால்நடை, கோழி மற்றும் பொருட்கள் விற்பனை செய்ய.
	4. சட்ட மீறல்களுக்காக தண்டம் விதித்தல் மற்றும் தண்டம் வசூலித்தல், அதாவது உரிமம் இல்லாமல் கடை திறப்பது அனுமதி இல்லாமல் பொருட்களை மற்றும் விலங்குகளை விற்பனை செய்தல்.

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
		5.	பொருள்களை நியாய விலைக்கு விற்பதையும் பொருட்களின் தரத்தை பராமரிப்பதையும் நடைமுறைப்படுத்தல்.
3.	சந்தை மற்றும் விழாக்கள்	1.	முக்கிய இடங்களில் சந்தை மற்றும் விழாக்கள் நடத்துதல்
		2.	ஊராட்சி ஒன்றிய சந்தைகள் மற்றும் விழாக்களை ஒழுங்குபடுத்திநடத்துதல், கட்டணங்கள் நிர்ணயித்தல் மற்றும் வசூலித்தல்.
		3.	நடைமுறைகளுக்கான விதிமுறைகளை வரைதல், விதிமுறை மீறல்களுக்கான அபராதத்தை நிர்ணயித்து வசூலித்தல்.

III. மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
4.	அங்காடிகள் நடத்துவதற்கு இடங்களை தேர்வு செய்தல் மற்றும் அங்காடி கட்டுதல்	1.	உள்ளூர் அங்காடிகள் மேம்பாட்டினை ஆய்வு செய்தல், முன்னேற்றத்திற்கான வழிவகைகையை ஆய்தல் மற்றும் கருத்துரு ஆய்வு முடிவுகளை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு தெரிவுபடுத்துதல்
		2.	மாவட்டத்திலுள்ள கிராமம் மற்றும் நகர்ப் புறங்களில் உள்ள அங்காடிகளை இணைக்கும் வகையில் மாவட்ட திட்டமிடும் குழுவினை ஏற்பாடு செய்தல்.
		3.	அடிப்படை வசதிகள் முறையே குடிநீர், கழிவு நீர், கட்டிடம் ஆகியவை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல்.
		4.	உரிமம் வழங்குவதற்குரிய சட்ட திட்டங்களுக்கு வேண்டிய ஆலோசனை வழங்குதல்.
		5.	ஊராட்சி அங்காடி மற்றும் ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் எல்லை நிர்ணயிப்பதில் ஆலோசனை வழங்குதல்
		6.	புதியதாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் கூட்டுறவு விற்பனை அங்காடி ஆகியவை தொடங்க அரசுக்கு ஆலோசனை வழங்குதல்
2.	சந்தை மற்றும் விழாக்கள்	1.	ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சந்தை மந்றும் விழாக்கள் பற்றி அறிக்கை வெளியிடுதல். அரசுக்கு ஆலோசனை வழங்குதல். மாநில அளவில் முக்கியத்துவம் வாய்ந்த அங்காடிகளை குறிப்பிட்டு அதனை திறம்பட நடத்துவது.

நிர்வாக மற்றும் சட்ட சிக்கல்கள்

11. மாநிலத் திட்டக்குழுவின் ஆலோசனைக் குழு இப்பணிக்காக எந்தவொரு பணியாளர்களையும் அரசு தரப்பிலிருந்து உள்ளாட்சிகளுக்கு மாற்றுவது அவசியம் இல்லை எனப் பரிந்துரைக்கிறது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994. மூன்று அடுக்குமுறை ஊராட்சி அமைப்புகளுக்கு போதிய அதிகாரம் மற்றும் சட்ட வடிவம் அளிக்கிறது. இச்சட்டம் பொது மற்றும் தனியார் அங்காடிமற்றும் சந்தை தொடங்கவும், நடத்தவும் உரிமம் வழங்குதல், உரிமம் ரத்து செய்வது என்பது குறித்து மூன்று நிலை உள்ளாட்சிகளுக்கும் தனித்தனியாக அதிகாரம் வழங்குகிறது. மேலும் இச்சட்டம் உரிமம் ரத்து செய்தல், அபாரதம் விதித்தல் குறித்தும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. எனவே அங்காடிமற்றம் சந்தைகள் சம்பந்தமாக எந்தவொரு சட்ட மாற்றமோ அல்லது திருத்தமோ அவசியமில்லை. இருப்பினும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் ஆகியவை பட்டியலிட்டு (ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சிகளின் ஆலோசனையின் பேரில்) அரசுக்கு அனுப்பி அதனை வெளியிடுவதற்கு தகுதியுள்ள அதிகாரி அல்லது மாவட்ட ஊராட்சிக்கு அதிகாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதுபோன்று ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் மற்றும் சந்தைகள் பட்டியலிட்டு அறிவிப்பு வழங்க தகுதியுள்ள அதிகாரி வசம் ஒப்படைக்க வேண்டும். இந்த அறிவிப்பு அங்காடிகளை / சந்தைகளை எவ்வாறு திறம்பட மாவட்ட ஊராட்சி நடத்தலாம் என்பதனையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

இயக்குநர், வேளாண்மை விற்பனைத்துறை நடத்தும் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் "மேலாண்மைக் குழு' வில் அந்த எல்லைக்குட்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர்களை பதவி காரணமான உறுப்பினராக நியமிக்கலாம். மாவட்ட அளவில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் "மேலாண்மைக் குழு" வில் மாவட்ட ஊராட்சி தலைவரை பதவி காரணமாக உறுப்பினராக நியமிக்கலாம். இதற்காக தமிழ்நாடு வேளாண் உற்பத்தி (ஒழுங்குமுறை மற்றும் விற்பனை) சட்டத்தினை திருத்தலாம்.

நிதிச் சிக்கல்கள்

12. சந்தை மற்றும் விழாக்கள் நடத்துவதற்கு, புதிய பொது அங்காடிகளைத் தொடங்குவதற்கும் ஏற்கெனவே உள்ள அங்காடிகளைப் பராமரிப்பதற்கும், ஊராட்சி நிறுவனங்களால் வசூலிக்கப்படும் கட்டணம் மட்டும் போதுமானதாக இருக்காது. அரசு நிதி உதவி அளித்தால் அதில் உள்ளாட்சி நிறுவனங்களுள் நிதி ஆதாரம் பெறும். ஆனால் கட்டணங்கள் விகிதத்தினை உயர்த்தி அதிகப்படியான நிதி ஆதாரங்களை பெருக்குதல் உரிய நடவடிக்கையாக இருக்கும். அங்காடிக் குழுக்கள் (மார்கடிங் கமிட்டி) மற்றுமொரு நிலையான நிதி ஆதாரமாகும். அங்காடி குழுக்கள் அதிகப்படியான நிதி ஆதாரங்கள் உள்ளனவாக உள்ளன. அதனை உரிய முறையில் பயன்படுத்தி தற்போதுள்ள அங்காடிகளின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றவும் புதிய அங்காடிகள் துவங்கவும் செய்யலாம். உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் மாவட்ட அங்காடி குழுக்கள் இடையே பேச்சுவார்த்தை நடத்தி அங்காடிகளை வளப்படுத்துவதில் மாவட்ட ஊராட்சிகள் சிறப்பாக பணியாற்ற முடியும்.

மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் உள்ளடங்கலாக சுகாதாரம் மற்றும் துப்புரவு

(இனம் - 23)

01. மனிதவள ஆற்றல் வளர்ச்சி. நாடுவாழ் மக்கள் தொகையின் தரமுடைய வாழ்க்கை மேம்பாடு ஆகியவற்றிற்கான இன்றியமையாததொரு உள்ளீடாக நலவாழ்வு உள்ளது. தமிழ் நாட்டில், கடந்த சில பத்தாண்டுகளின் போது, மக்களுக்கு நலவாழ்வு வசதிகளை அளிப்பது, நகர்ப்புற, ஊரகப் பகுதிகளில் நலவாழ்வு உள்ளமைப்புகளை மேம்படுத்துவது ஆகியவை தொடர்பாக உறுதி வாய்ந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவாக மாநில மக்களின் நலவாழ்வு நிலையில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டினை உருவாக்கி இருக்கின்றது. தெரிவு செய்யப்பட்ட பின்வரும் நலவாழ்வு குறியீடுகள் இவற்றை சுட்டிக் காட்டுகின்றன. பின்வரும் குறியீடுகளில் தமிழ் நாட்டை அகில இந்திய நிலையில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நல்ல நிலையில் உள்ளது தெரிய வருகின்றது.

தொடர் எண்	குறியீடுகள்	தமிழ்நாடு	அகில இந்தியா
1.	தோராய பிறப்பு வீதம் (1994) (1000 மக்கள் தொகைக்கு)	19	28.6
2.	தோராய இறப்பு வீதம் (1994) (1000 மக்கள் தொகைக்கு)	7.9	9.2
3.	எதிர்பார்க்கும் வாழ்நாள் (1991)		
		(ஆண்டுகளில்)	
	ஆண்கள்	57.4	55.9
	பெண்கள்	58.5	55.9
	மொத்தம்	60.8	59.1
4.	சிசு இறப்பு வீதம் (சி.இ.வீ) (1994) (1000 பிறப்பிற்கு)	59	73
5.	பேறுகால இறப்பு வீதம் (பே.இ.வீ) (1994) (உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளுக்கு)	0.8	4.37
6.	இப்போது இருக்கும் பார்வை யற்றவர்களின் வீதம் 10,000 பேருக்கு)	149	165
7.	இப்போது இருக்கும் தொழு நோயாளர்களின் வீதம் (1992–93)	2.09	
	(1000 பேருக்கு) (1995–96)	1.6	1.2
8.	இப்போது இருக்கும் எண்புருக்கி நோயாளர்களின் வீதம் (1992–93) (1 இலட்சம் மனிதர்களுக்கு)	703	467
9.	நடைமுறையில் இருக்கும் மலேரியா வீதம் (1992–93) (1 இலட்சம் மனிதர்களுக்கு)	576	3324

மேற்கூறிய சாதனைகள் பல்வேறு இடைநிகழ்வுகள் காரணமாக அமைந்தவைகளாகும்.

செயற்திட்டங்கள்

02. துணை சுகாதார நிலையமானது, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் கிராமங்களுக்கும் இடையே ஒரு இணைப்பாகச் செயற்படும் வகையில், ஊரக நலவாழ்வுப் பணிகளை அளிப்பதற்கான முக்கிய அமைப்பாக தொடக்க நலவாழ்வு நிலையம் உள்ளது. சமுதாய சுகாதார நிலையம், திறமையான தகவல் பெறும் ஆதரவுடன் சிறப்புச் சேவைகளை அளித்து வருகின்றது. மருந்தகங்களுடன், இந்நிலையங்களின் பின்னல் தொடரமைப்பு, ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் இணைந்து, பொது நலவாழ்வு, குடும்ப நலத் திட்டங்கள், தாய் – சேய் கவனிப்புச் சேவைகள் ஆகியவற்றில் தடுப்பு, மேம்பாட்டு, நோய்க்குப்பின் தருகின்ற மறுவாழ்வு சேவைகளை அளிக்கின்றன. கல்லூரி இணைந்த மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டத்தலைமை மருத்துவமனைகள் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் சிறப்பான மருத்துவ கவனிப்புச் சேவைகளை அளிக்கின்றன. மேலும் மாவட்ட தலைமையிட, வட்ட மருத்துவமனைகள் நோய்த் தடுப்புக்கான முதல் தகவல்பெறும் பிரிவுகளாகவும் செயல்படுகின்றன.

03. இப்பொது நலவாழ்வு செயல்பாடுகளில், யானைக்கால் நோய் (பைலேரியா), அம்மை நோய், வாந்திபேதி, மலேரியா, மூளைக்காய்ச்சல் (சப்பானிய என்சிபாலிடிஸ்), தொழுநோய் போன்ற நோய்களுக்கான நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் போன்றவை அடங்கும். தனிப்பட்ட தொகுதியினருக்காகவும், மலைவாழ் மக்கள், தொடக்கக் கல்வி பெறும் குழந்தைகளுக்கான பள்ளி நலவாழ்வுத் திட்டங்கள், கருவுற்றிருக்கும் பெண்கள் மற்றும் இளஞ்சிறார்கள் ஆகிய எல்லோருக்குமான நாடு தழுவிய தடுப்பூசி திட்டம் போன்ற திட்டங்களும் உள்ளன. இன்றியமையாத மருந்துகளை வழங்குதல், பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்தல் (பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்கள்), நலவாழ்வுக் கல்வி, நலவாழ்வுப் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல், துப்புரவுப்பணி, உணவில் கலப்படம் செய்வதைத் தடுத்தல் மற்றும் பொது நலவாழ்வுச் சட்டத்தை செயற்படுத்துதல் போன்ற நலவாழ்வு தொடர்புடைய பிற நடவடிக்கைகளையும் நிறைவேற்றப் பெறுகின்றன. உலக வங்கி உதவியுடன் சிசு உயிர்காப்பு மற்றும் பாதுகாப்பான தாய்மைப்பேறு திட்டம், உடல்நீர் வறட்சி போக்கும் திட்டம், அயோடின் சத்து குறைவினால் ஏற்படும் நோய்க் கட்டுபாட்டுத் திட்டம், காசநோய் தடுப்பு, எய்ட்ஸ் கட்டுப்பாடு மற்றும் கண்ணொளி இழப்பு தடுத்தல் போன்ற மைய அரசால் ஏற்றி நடத்தப் பெறும் திட்டங்களும் உள்ளடங்குவதாகும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் 19500 சமுதாய ஊட்டச்சத்து மையங்கள் இயங்குகின்றன. அவை தாய் – சேய் நலப்பணிகளையும் ஆற்றி வருகின்றன.

04. சேலம், தென்னார்க்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில், ஊரக பகுதிகளில் உள்ள மக்களின் நலவாழ்வு தகு நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக, 1981 முதல் டானிடா உதவியுடன் இரு கட்டங்களாக நலவாழ்வு கவனிப்புத் திட்டமொன்று செயல்படுத்தப் பட்டது. தாய் – சேய் நல கவனிப்பு உள்ளிட்ட தரமான குடும்ப நலவாழ்வுப் பணிகளை விரிவுபடுத்தி, மேம்படுத்தும் நோக்கத்துடன், சென்னையிலும் அதன் புறர்நகர்ப் பகுதிகளிலும், 2 மாநகராட்சிகளிலும், 21 நகராட்சிகளுலும் குடிசை வாழ் மக்கள் மற்றும் குறைந்த வருவாய்த் பிரிவினர் ஆகியோரின் நலவாழ்வுக்காக உலக வங்கி உதவியுடன் இந்திய மக்கள் தொகைத் திட்டம்–5–ஐ, 1988 முதல் செயல்படுத்தப் பட்டது. மாவட்டத் தலைமை மற்றும் வட்ட மருத்துவமனைகளில் தாய் – சேய் நலப்பிரிவுகளை மேம்படுத்துவதற்காக இதன் நிதிகள் பயன்படுத்தப் பெறுகின்றன.

05. கல்லூரி இணைந்த மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மற்றும் வட்டார மருத்துவமனைகள், மருந்தகங்கள் ஆகியவை மூலம் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி, இயற்கை வைத்தியம், யோகாசனம் போன்ற இந்திய முறை மருத்துவத்தின் கீழ் நலவாழ்வு காப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

நலவாழ்வு கவனிப்பு நிலையங்கள்

06. 8682 துணை சுகாதார மையங்கள், 68 சமுதாய சுகாதார நிலையங்கள் உட்பட 1419 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 24 அரசு மருந்தகங்கள், 73 வட்டாரம் சாரா மருத்துவமனைகள், 134 வட்டார மருத்துவமனைகள், 22 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள், 20 மாவட்ட காசநோய் மையங்கள், 102 தொழுநோய் கட்டுப்பாட்டு மையங்கள் ஆகியவற்றோடு நலவாழ்வுக் கவனிப்பு நிலையங்களைக் கொண்டுள்ளதொடு, விரிவான செயல்முறைத் திட்டத்தைத்

தமிழ்நாடு பெற்றுள்ளது. மேலும் 9 மருத்துவ கல்லூரிகள், ஒரு பல் மருத்துவ கல்லூரி, மற்றும் 35 மருத்துவ கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகளும் இம்மாநிலத்தில் உள்ளன. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களையும், சமுதாய சுகாதார நிலையங்களையும், துணை சுகாதார நிலையங்களையும் தொடர்புடைய வரையறைகளை நிறைவு செய்கின்ற வகையில், அதாவது சமவெளிப் பகுதிகளில் 30,000 மக்கள் தொகைக்கும் மலைப் பகுதிகளில் 20,000 மக்கள் தொகைக்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம், சமவெளிப் பகுதிகளில் 5000 மக்கள் தொகைக்கும் மலைப்பகுதிகளில் 3000 மக்கள் தொகைக்கும் ஒரு துணை சுகாதார நிலையம், ஒரு லட்ச மக்கள் தொகைக்கு ஒரு சமுதாய சுகாதார நிலையத்தையும் நிறுவியுள்ளது.

மாநில அரசின் நிதி ஆதரவு

07. நலவாழ்வுக்கான திட்ட, திட்டஞ்சாரா செலவு (மாநில மற்றும் மைய அரசு ஏற்று நடத்தும் திட்டம் ஆகிய இரண்டையும் சேர்த்து) விவரம் பின்வருமாறு :

	1994-95 உள்ளபடியான செலவுகள்	1995-96 திருத்திய மதிப்பீடு	1996-97 திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு
		(ரூபாய் இலட்சத்தில்)	
நலவாழ்வு (நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகள் இரண்டும்)	39832.85	46766.39	51157.43
அதில் ஊரக நலவாழ்வு சேவைகள்	28353.35	31602.78	32809.87
அதில்			
அ) சுகாதார துணை நிலையங்கள்	1925.07	2144.90	2348.45
ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்கள்	5666.77	6597.96	7213.91
இ) நோய்களைத் தடுத்தலும் கட்டுப்படுத்துதலும்	4010.65	4969.12	5413.84

பண்முகப்படுத்தப்பட்ட மாவட்டத் திட்டத்தின் கீழ் நலவாழ்வுக்கும், துப்புரவுப் பணிக்குமான கூடுதல் நிதி ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு :

	நலவாழ்வுக்கு	மொத்த ஒதுக்கீடு	விழுக்காடு
		(ரூபாய் இலட்சத்தில்)	
1993 – 94	40.63	2000.00	2.03
1994 – 95	100.14	4000.00	2.55
1995 – 96	இல்லை	5000.00	–

பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள்

08. நலவாழ்வு பயன் கிடைக்கக் கூடிய ஒன்றாக மட்டும் இல்லாமல் மக்களின் தேவைகளைச் சமாளிப்பதற்கு அணுகத்தக்க வகையிலும், இயலும் நிலையோடு இருக்கவும், ஏற்கத்தக்க வகையிலும் பொருத்தமுடையதாக அது இருக்க வேண்டும். ஒருங்கிணைந்த சிறப்பானதொரு தொடக்க நலவாழ்வுக்குரிய கவனிப்பு முறைகளாக முழு அளவிலான தொழில் நுட்ப ஆதரவுடன் செயற்பாட்டுடன் இணைக்கப்பெற்ற இரண்டாவதான மற்றும் மூன்றாவதான கவனமுறை வெளிப்படுவதிலிருந்து பரவலாக்கப்படுவது ஒரு வழிகாட்டுக் கொள்கையாக இருக்கும். 73ஆவது, 74ஆவது அரசியலமைப்புச் சட்ட திருத்தம் 29 வகைகளில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு அதிகாரங்களையும், பொறுப்புகளையும் ஒப்படைப்பது குறித்து கருதுகின்றது. அவற்றுள் நலவாழ்வு மற்றும் துப்புரவு ஆகியன முக்கியமானதொரு பணியாகும். மேற்கூறிய அரசியலமைப்புத் திருத்தங்களில் 11ஆவது மற்றும் 12ஆவது அட்டவணையின் கீழ் ஊராட்சிகளுக்கு மாற்றப்படும், செய்கடமைகள் தொடர்பான நல்வாழ்வுப் பொருண்மைகள் பின்வருமாறு கூறுகின்றது.

அட்டவணை : 11

1. மருத்துவமனைகள், தொடக்க சுகாதார நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் உள்ளடங்கலாக நல்வாழ்வும் துப்புரவும்.

2. குடும்ப நலம்

அட்டவணை : 12

1. பொது நலவாழ்வு, துப்புரவு, துப்புரவுப் பணி மற்றும் திட கழிவுப் பொருள்கள் மேலாண்மை.

2. பிறப்பு, இறப்பு பதிவு உள்ளிட்ட பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்கள்.

09. 1994 ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 3 அடுக்கு நிலை பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் சில செய்கடமைகள் குறித்து எடுத்துரைக்கின்றது.

அவையாவன :

(1) ஊராட்சியானது, தனது நிதி வரம்பிற்குள் வடிகால்களைக் கட்டுவதற்காகவும் (ஊராட்சி கழிவு அல்லாத) வடிகால் நீரை தீர்வு செய்வதற் காகவும், தெருக்களை சுத்தம் செய்வதற்காகவும், குப்பை கூளக் குவியல்களை அகற்றுவதற்கும் ஊராட்சியின் ஏனைய பிற துப்புரவு வரையறை மேம்பாட்டிற் காகவும், பொது கழிப்பிட வசதிக்காகவும் நியாயமான ஒதுக்கீடுகளைச் செய்தல் வேண்டும். (பிரிவு 110 இ, ஈ, உ மற்றும் ஏ).

(2) ஒரு ஊராட்சியானது சமூகக் கல்வி அளிப்பதற்கான நிலையங்களைத் திறந்து பேணுவதற்கும், பொதுப் பயன்பாட்டிற்கான கட்டடப்பணிகளுக்கும், நலவாழ்வுக்கான ஏனைய பிறவற்றுக்கும், கிராமத்தில் குடியிருப்பவர்களின் வசதிகளுக்கும் நிதி ஒதுக்கம் செய்ய வேண்டும். (பிரிவு 111 ஐ மற்றும் ஓ).

(3) ஊராட்சி ஒன்றியம் தனது நிதி வரம்பிற்குள் மருந்தகங்கள், தாய் – சேய் நலநிலையங்கள் ஆகியவற்றை அமைத்துப் பேணுவதற்காகவும், ஊரக மருத்துவ அலுவலகத்திற்கு ஊக்குதவி அளிப்பதற்காகவும், தாய் சேவையைப் பேணுவதற்கும், குடும்பக் கட்டுப்பாடு பயிற்சி ஆகியவற்றில் தாய்மார்களுக்கு ஆலோசனையும் உதவியும் வழங்கிடவும், அம்மை குத்து போன்ற பணியிலமர்த்தியும், கொள்ளை நோய் அல்லது மலேரியா தொடர்புடைய தணிப்பு நடவடிக்கைகளுக்கும் நியாயமான அளவுக்கு ஒதுக்கீடு செய்தல் வேண்டும் (பிரிவு 112, ஆ, இ, ஈ, ஊ).

(4) ஊராட்சி ஒன்றியம், அரசால் அல்லது சட்டஞ்சார்ந்த அமைப்பு ஒன்றினால் அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்குள் பிற முகமையால் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், செயற் திட்டங்கள் மற்றும் ஏனைய பிற செயற்பாடுகள் ஆகியவற்றை குறித்து மறு ஆய்வு செய்யும். (பிரிவு 114, (2)).

(5) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மருந்துகங்களையும், குழந்தை நல நிலையங்களையும், அத்தகைய வகையிலான பிற நிலையங்களையும் பொதுவாக நிறுவியும் பேணியும் வரலாம் (பிரிவு 118).

6. ஊராட்சி ஒன்றியம் அம்மை குத்துவதை நடைமுறைப் படுத்துதல் வேண்டும். ஊராட்சி ஒன்றியம் முழுவதும் மறுபடியும் அம்மை குத்துவதை நடைமுறைப் படுத்தலாம் (பிரிவு 141).

(7) ஏதேனுமொரு இடத்தில் குடியிருப்பவர் சிற்றம்மை அல்லது வாந்தி – பேதி நோயில் அவதிக்குள்ளானால் சுணக்கமின்றி ஆணையாளருக்கு அல்லது கிராம நிர்வாகி அலுவலருக்கு அது குறித்துத் தெரிவிக்கப்படுதல் வேண்டும். (பிரிவு 142).

(8) ஏதேனுமொரு குளம், குட்டை, கிணறு, துளை, நீரோடை, அணை, கரை அல்லது பிற இடம் எவற்றிற்கேனும் போதிய அளவுக்குச் செப்பனிட, பாதுகாக்க, அடைக்க வேண்டியிருப்பின் ஊராட்சி ஒன்றியத்தின் அல்லது ஊராட்சியின் ஆணையாளரின் அல்லது செயல் தலைவரின் ஏற்புடன் அவற்றை நிறைவு செய்து தருமாறு, நீக்குமாறு, பாதுகாக்குமாறு அல்லது அடைக்குமாறு உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பலாம். (பிரிவு 143).

(9) மேற்காணும் சட்டத்தின் 101 முதல் 106 வரையுள்ள பிரிவுகளின் வழிவகையானது ஊராட்சிகளை நிறுவுதல், ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரது பணி வரையறைகள், பொது அலுவலர்களின் நியமனம், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் அலுவலர்களையும், பணியாளர்களையும் மாற்றுவதற்குரிய ஆய்வாளரின் அதிகாரங்கள், மாவட்ட ஊராட்சிகளின் அலுவலர்களையும், பணியாளர்களையும் மாற்றுவதற்குரிய அரசின் அதிகாரிகள், தமிழ்நாடு பொது நலவாழ்வுச் சட்டம், 1939 இல் (பிரிவு 107) கூறப்படுகின்றவை எப்படியிருந்த போதிலும் அவர்களைத் தண்டிப்பதற்குரிய அதிகாரங்கள் ஊராட்சிகளின் பொது நலவாழ்வு அமைப்புகளுக்கும் பொருந்துமென குறிப்பிடுகின்றது.

(10) ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் பொது நலவாழ்வுப் பணியமைப்புகளிலுள்ள நலவாழ்வு உதவியாளர்கள், துணைச் செவிலியர்கள், பேறுகால மற்றும் மகப்பேறு உதவியாளர்கள், அரசுப் பணியாளர்களாக இருப்பர். (பிரிவு 109).

(11) அத்துடன், (அ) உடல்நலம் மற்றும் நலவாழ்வு மீதான நிலைக்குழுவை அமைத்தல் (பிரிவு 97 (i), (ஆ) தனது சொந்த நிதியில் இருந்து மக்களின் உடல்நலத்தை ஊராட்சி ஒன்றியம் மேம்படுத்துதல் (பிரிவு 115) ; நிலங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றிலிருந்து மாசு படிந்த அல்லது தேவையற்ற செடிகளை அகற்ற ஆணையர்/செயல் அலுவலர் ஏற்பாடு செய்தல் (பிரிவு 114) ; நலவாழ்வு மற்றும் துப்புரவு ஆகியவை தொடர்பாக சட்டத்தின் வழிவகைகளை சிறிது மாற்றஞ் செய்தமைக்கான தண்டனை (பிரிவு 245 இன் இணைப்பு II, III) ஆகியவற்றிற்கு வகை செய்கின்றது.

(10) மக்களுக்குரிய நலவாழ்வுக் கவனிப்பின் சேவையில் அடையும் மேற்கூறிய பின்னணியில் மருத்துவ நிறுவனங்களின் செயல்முறைத் திட்டம், நலவாழ்வுத் துறையில் முதலீடு ஆகியவற்றின் வாயிலாகத் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 இல் கூறப்பட்டுள்ள மூன்றடுக்கு பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கான செயற்கடமைகளையும், அதிகாரங்களையும் கண்ணுறுகையில் இப்போதைய மருத்துவ நிலையங்களையும், செயற் திட்டங்களையும், பணியாளர்களையும், ஏற்புடைய நிலைகளில், சமுதாயப் பங்களிப்பில் தீவிர ஈடுபாட்டுடன், பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளோடு இணைக்கப்பட்டால் தான் மேம்பட்ட மனித வளர்ச்சியை எய்த இயலுமென மாநிலத் திட்டக் குழு பிரிவு கருதுகின்றது. ஆகையினால் மூன்றடுக்கு பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கிடையில் பல்வேறுப்பட்ட நலவாழ்வுச் செயற்பாடுகள் தொடர்புடைய கீழ்க்காணும் அதிகாரங்களையும் செயற் கடமைகளையும் ஒப்படைக்க மாநில திட்டக் குழு பிரிவு பரிந்துரைக்கின்றது.

I ஊராட்சி

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு	
(1)		(2)	
1.	நோய்களைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும்	(அ)	கிராம நலவாழ்வுக்குழு அமைத்து அதில் ஊராட்சித் தலைவரை தலைவராகவும், ஊராட்சியின் பகுதி உறுப்பினர்கள், கிராம சுகாதார வழி செவிலியர்கள்,மரபு மருத்துவச் செவிலியர்கள் மற்றும் பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் சேர்த்து, ஊராட்சியில் சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ளச் செய்ய வேண்டும்.
		(ஆ)	அப்பகுதியில் பரவலாக இருக்கும் நோய், தொற்றுநோய்கள், கொள்ளை நோய்கள் ஆகியவற்றைக் கண்டறி வதுடன் அதற்கான மருத்துவ தீர்வு காணும் நடவடிக்கைகளை, சுகாதார, ஊராட்சி அதிகாரிகள் மேற்கொள்ளப் பெற வேண்டும்.
		(இ)	கொள்ளை நோயை முறியடிப்பது தொடர்பில் பயனுள்ளதும், போதிய அளவினதுமான கண்காணிப்பைத் தொடர்ந்து மேற்கொண்டு வருதல்.
		(ஈ)	பெரியம்மை, வாந்திபேதி ஆகிய வற்றைத் தடுக்க தடுப்பூசி குத்தும் பணியினை காலமுறைப்படி மேற் கொள்ளுதல்.
		(உ)	இன்றியமையாத மருந்துகளை துணை சுகாதார நிலையங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கிடைக்கச் செய்தல்.
2.	நோய் குணப்படுத்துதல் மற்றும் புனரமைப்புப் பணிகள்	(அ)	கிராம வாசிகளுக்கு புனரமைப்பு சேவைகள் எளிதாகக் கிடைக்கும்படி செய்தல்.
		(ஆ)	கிராம நலவாழ்வு செவிலியர்கள் மற்றும் பலநோக்கு சுகாதாரப் பணியாட்கள் அவர்கள் பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று வர ஊக்க மளித்தல்.
		(இ)	ஊராட்சியில் உள்ள சுகாதார துணை நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றின் பணிகளுக்கான பரப்பை அதிகரித்தல்.
		(ஈ)	மாவட்ட பயிற்சிக் குழுக்கள் வாயிலாக தொண்டுநிறுவன நலச் செவிலியர்கள் பலநோக்குச் சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோருக்குகாலமுறைப்படி பயிற்சியும் அடிப்படை விவரங்களும் அளிப்பதன் வாயிலாக நலப்பணிகளின் தரத்தை மேம்படுத்துதல்.
		(உ)	சுகாதார துணை நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளமைப்பு வசதிகளை மேம் படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
		(ஊ)	நாட்டு மருந்துகள் பயன்படுத்து வதையும் இந்திய முறை மருத்துவர் களின் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்வதையும் ஊக்குவித்தல்.

(1)		(2)
3.	நோய்த் தடைக்காப்பு, தாய் – சேய் நலன் காப்புப் பணிகள்	(அ) கருவுறக் கூடிய வயதுடைய பெண்களின் விவரங்களைப் பதிவு செய்து பராமரித்தல், மற்றும் கருவுற்றப் பெண்களின் விவரங்களை பதிவு செய்துள்ளமையை உறுதி செய்தல்.
		(ஆ) கருவுற்ற பெண்களுக்குக் காலமுறைப் படி மருத்துவப் பரிசோதனை செய்யப் படுவதை நலப்பணி பதிவுருக்களைப் பராமரித்து வருவதன் மூலம் உறுதி செய்வதுடன் எடை அதிகரித்தலைக் கண்காணித்தல்.
		(இ) பேறுகால கருவுற்ற பெண்களுக்கு அம்மைகுத்து உட்பட பேறு காலத்திற்கு முந்திய முறைப்படியான மருத்துவ கவனிப்பை உறுதி செய்தல்.
		(ஈ) சுகாதார துணை நிலையங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், ரணம் இல்லாமலும், தூய்மையுடனும் சுத்தமான முறையில் மகப்பேறு நடைபெறுவதை உறுதி செய்தல்.
		(உ) சுகாதார துணை நிலையங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உள்ளமைப்பை மேம்படுத்துதல்.
		(ஊ) சிக்கலான பேறுகால நிலையிலுள்ள கருவுற்ற பெண்களுக்கு முதல் நிலை கவனிப்பு எனும் அளவிற்கு சரியான நேரத்தில் கவனிக்கும் நிலைக்கு உயர்த்துதல்.
		(எ) பேறுகாலத்திற்குப் பின்னர் தாய் மார்களைக் கவனிப்பதுடன் குறைந்த எடையில் பிறந்த குழந்தைகளுக்கான கவனிப்பையும் உறுதி செய்தல்.
		(ஏ) பெண்கள் மற்றும் இளஞ்சிறார்களின் உடல் நல நிலை குறித்த ஆவணங்கள் தயாரித்தல்.
		(ஐ) பேறுகால இறப்பு வீதமும் இளஞ்சிறார் இறப்பு வீதமும் உயர்ந்திருப்பதற்கான காரணங்களைக் கண்டறிவதுடன், அவற்றைச் சரிசெய்வதற்கான நட வடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
		(ஒ) தொண்டு நிறுவனச் செவிலியர், சமூக நலப்பணியாளர்கள், மரபு வழி மருத்துவச் செவிலியர் ஆகியோருக்கு பயிற்சி அளிப்பதற்கான அமைப்பை உருவாக்குதல்.
		(ஒ) மரபு அறிவு நுட்பத்தை பயன்படுத்து தலை ஊக்குவித்தல்.
		(ஔ) நோய்த் தடைக்காப்பு திட்டத்தின் கீழ் குழந்தைகள் அனைவரும் தடைக்காப்புப் பெறுவதை உறுதிப்படுத்துதல்.
		(அ.அ) கிராம அளவில் உடல் நல இயக்கங்களை நடத்துதல்.

(1)		(2)	
4.	பள்ளிக் குழந்தைகளுக்கான உடல் நலத்திட்டம்	(அ)	ஆரம்ப, தொடக்கப் பள்ளிக் குழந்தைகள் உடல் நலம் தொடர்ந்து கவனிக்கப்படுகிறதா என்பதையும் அவர்களுடைய உடல் நலம் குறித்த அட்டைகளைப் பராமரிப்பதையும் அவர்களுடைய நோய்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்வதையும் உறுதி செய்தல்.
		(ஆ)	தடுக்கக் கூடிய நோய்களை எதிர்க்க தடைக்காப்புத் திட்டத்தை அமைத்தல்.
		(இ)	உடல் நலம், சத்துணவு, மக்கட் தொகைக் கல்வி ஆகியவற்றை பள்ளிகளில் மாணவர்களுக்குச் சொல்லித் தருவதற்கு ஊக்கமளித்தல்.
		(ஈ)	உடல் நலக்குழு காலமுறைப்படி பள்ளிகளுக்குச் செல்லுதலை உறுதிப் படுத்தல்.
		(உ)	பள்ளிகளில் நல சூழ்நிலையை உறுதிப்படுத்துதல்.
5.	வயது வந்த பெண்களுக்கான உடல் நலத் தேவைகள்	(அ)	வயது வந்த பெண்களுக்கான உடல் நலப் பதிவுகளை வைத்திருத்தல், சத்துணவுப் பற்றாக்குறை மற்றும் உடல் நலக் குறைபாடுகள் குறித்துத் தெளிவாக கண்டறிவதுடன் அவற்றிற் கான சிகிச்சையளிக்கவும் ஏற்பாடுசெய்தல்.
		(ஆ)	வயது வந்த பெண்களிடையே உடல் நலம், சத்துணவுக் கல்வியை அதிகரிக்கச் செய்தல்.
6.	உடல் நலத்தை உயர்த்துதல்	(அ)	கிடைக்கக் கூடிய உடல் நலக் கவனிப்பு பணிகள் குறித்த தகவலை மக்களுக்கு பரவச் செய்வதுடன் கிராம உடல்நல முகாம்களை நடத்தச் செய்தல்.
		(ஆ)	உள்ளூரில் கிடைக்கக் கூடிய சத்துணவு குறித்து நடை முறைப் பயிற்சிகளை ஊக்கு விப்பதுடன் பொது நோய்களுக்கு வீடுகளிலேயே கை மருந்துகள் மூலம் நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதை ஊக்குவித்தல்.
		(இ)	காலமுறையாக தொண்டு நிறுவன செவிலியர்கள் மற்றும் உடல் நலப் பணியாளர்களுக்கிடையே ஆய்வுக் கூட்டங்களை நடத்துவதுடன், கிராமங்களில் பயனுள்ள உடல் நலப்பணிகளை மேம்படுத்துதல்.
7.	பிறப்பு இறப்புப் பதிவுகள்	(அ)	1969 ஆம் ஆண்டின் 35ஆவது மையச் சட்டத்தில் வழிவகை செய்யப் பட்டுள்ளவாறும், பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டத்தின்படியும் 1977ஆம் ஆண்டு தமிழ்நாடு பிறப்புகள், இறப்புகள் ஒழுங்குமுறை விதிகளின் படியும், பிறப்பு இறப்புகள் அனைத்தையும் பதிவு செய்தல்.
		(ஆ)	இளஞ்சிறார் இறப்பு வீதம், பேறுகால இறப்பு வீதம், இறந்து பிறக்கும் குழந்தைகள் வீதம் மற்றும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு வீதம் ஆகிய தகவல்களைத் திரட்டி, ஊராட்சி ஒன்றியத்திற்கும் நலவாழ்வுத் துறை அலுவலர்களுக்கும் அறிக்கை அளித்தல்.

(1)		(2)	
8.	உணவு கலப்படத்தை தடுத்தல்	(அ)	1954 ஆம் ஆண்டு உணவு கலப்படத் தடுப்புச் சட்டக் கூறுகளை நடைமுறைப்படுத்துவதுடன் சரி செய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற் கொள்ளுதல்.
9.	துப்புரவு	(அ)	கிராமத் தொட்டிகளிலும், கிணறுகளிலும் குளோரின் கொண்டு தூய்மைப் படுத்துதல்.
		(ஆ)	பொதுக் கழிப்பிடங்களைக் கட்டுதலும் பராமரித்தலும்.
		(இ)	ஊராட்சிக் கிராமங்களில் தனியார் கழிப்பிடங்கள் சுத்தம் செய்யப்படுவதை உறுதிப்படுத்துதல்.
		(ஈ)	வடிகால் நீரை அகற்ற வடிகால்களை கட்டுதலும், பராமரித்தலும்.
		(உ)	தெருக்களைச் சுத்தம் செய்தல், பயன்படுத்தப்படாத கிணறுகளில் போடப்பட்டிருக்கும் குப்பைகளை அகற்றுதல், குளங்கள், சிறுகுட்டைகள், பள்ளங்கள், குழிகள் அல்லது உட்குழிகள் ஆகியவற்றில் தூர் எடுத்தல் ஆகியவற்றைச் செய்வதன் மூலம் சுற்றுப்புற சூழலை. நலவியலை வளர்ச்சியடையச் செய்தல் மற்றும் கிராமத்தில் துப்புரவு நிலைமைகளை மேம்படுத்துதல்.
		(ஊ)	குடிநீர் ஆதாரங்களை தூய்மைக்கேடு அடையாமல் பாதுகாத்தல்.
		(எ)	1939ம் ஆண்டு பொது உடல்நலச் சட்டத்தில் வழிவகை செய்துள்ளவாறு வடிகால் மற்றும் துப்புரவு வசதிகளை ஏற்படுத்தித் தருதல்.
		(ஏ)	திடக்கழிவு மேலாண்மைக்கு வழிகளை ஏற்பாடு செய்தல்.

II ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை (1)		அதிகார ஒப்படைப்பு (2)	
1.	நோய்களைத் தடுத்தலும் கட்டுப்படுத்துதலும்	(அ)	கொள்ளை நோய் தடுப்பு அமைப்பை நிறுவுதலும், அதனைக் கண்காணிப் பதுடன் நோய்தீரவழி வகைகளைக் கண்டறிதல்.
		(ஆ)	கிராம நிலையில் நோயைக் கட்டுப் படுத்த எடுத்த நடவடிக்கைகள் மீதான விளைவுகளை மதிப்பீடு செய்தல்.
		(இ)	கொள்ளை நோயைக் கட்டுப்படுத்த தன்னார்வ தொண்டு நல நிறுவனங்களின் ஆதரவை பரவலாகத் திரட்டுதல்.
		(ஈ)	காலமுறைப்படி அம்மைக் குத்தும் திட்டத்தைச் ஊராட்சிகள் மூலம் நடத்துதல்.

(1)		(2)	
		(உ)	ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், மருத்துவ மனைகள், மருந்தகங்கள் ஆகிய வற்றில் மருத்துவர்கள், மருத்துவத்தைச் சார்ந்த பணியாளர்கள் இருப்பதை உறுதிப்படுத்துதல்.
		(ஊ)	துணை சுகாதார நிலையங்களிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், மருந்துகள், வாகனங்கள், மருத்துவக் கருவிகள் ஆகிவற்றின் பராமரிப்பு, உள்ளமைப்பு வசதிகள் போன்றவற்றை அளிப்பதற்கு உறுதி செய்தல்.
		(ஊ)	மாநில மற்றும் மைய அரசுகளின் நிதியுதவியினால் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும், நடைமுறை களையும் கண்காணித்தல்.
2.	நோய் தீர்த்தலும், மறுவாழ்வுப் பணிகளும்	(அ)	அரசு வழிக்காட்டிகளின் படி சுகாதார மையங்களையும், மருந்தகங்களையும், அமைத்தலும் பராமரித்தலும்.
		(ஆ)	அம்மைக் குத்துபவர்களுக்கு பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு அளித்தல்.
3.	நோய் தடைக்காப்பு, தாய் – சேய் நலக்காப்புப் பணிகள்	(அ)	ஊராட்சி அளவில் தாய், சேய் நல விவரங்களைப் பராமரித்து வருவதுடன் தாய், சேய் நலப் பணிகளை மேம் படுத்துவது தொடர்பில் ஊராட்சிகளுக்கும், மருத்துவ முகமைகளுக்கும் அறிவுரை வழங்குதல்.
		(ஆ)	ஊராட்சியில் மகப்பேறுக்கு முன்னரும், பின்னரும் நலப்பணி நடவடிக்கைகளுக்கு உதவுதல்.
		(இ)	ஊராட்சிகள் மூலமாக தடைக்காப்பு முகாம்களை நடத்துதல்.
		(ஈ)	மரபு வழி மகப்பேறு செவிலியர்களுக்கும், மருத்துவ அலுவலர்களுக்கும் பயிற்சி நடத்துதல்.
		(உ)	காலமுறைப்படி தாய், சேய் நலக்காப்பு, நோய் தடைக்காப்பு திட்டங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை ஆய்வு செய்வதுடன் கண்காணித்தல்.
		(ஊ)	தாய், சேய் மையங்களை அமைப்பதற்கும், பராமரிப்பதற்கும் தொழில்நுட்ப உதவி, நிதியுதவி ஆகியவற்றிற்கு வழிவகை செய்தல்.
4.	பள்ளிக் குழந்தைகள் நலத்திட்டங்கள்	(அ)	ஆரம்ப, தொடக்க, இடைநிலை மற்றும் மேனிலைப் பள்ளி மாணவர்களுக்கு முறையான உடல்நல மதிப்பீடு செய்வதை உறுதிப்படுத்துவதுடன் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கவும் தொடர்ந்து உடல்நலத்தைச் சரிபார்ப்ப தற்கும் ஏற்பாடு செய்தல்.

(1)		(2)	
		(ஆ)	ஊராட்சி ஒன்றிய அளவில் மாணவர் களின் உடல்நலத் தகுதியை ஆரம்ப நிலைப்பள்ளி முதல் மேனிலை நிலைப் பள்ளி வரையுள்ள மாணவர்களின் உடல் நல விவரங்களின் அடிப்படையில், புள்ளி விவரங்களை வைத்து வருவதுடன் மாவட்ட ஊராட்சிக்கும், ஊராட்சிக்கும் உரியவாறு தகவல் அளித்தல்.
		(இ)	தடுக்கப்படக் கூடிய நோய்களுக்கு எதிராக தடுப்பூசி மற்றும் அம்மைக் குத்துதல் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல்.
		(ஈ)	உடல்நலம், சத்துணவு, குடும்பநலம் ஆகியவை குறித்து ஆரம்ப மற்றும் தொடக்க பள்ளிகளில் அறியச் செய் வதற்கானவற்றை ஊக்குவிப்பதுடன் அதனை முன்னேற்றமடையவும் செய்தல்.
		(உ)	மருத்துவ அலுவலர், பள்ளி உடல் நலச் செவிலியர் மற்றும் உடல்நல மேற் பார்வையாளர் ஆகியோர் அடங்கிய நலக்குழு காலமுறைப்படி தொடர்ந்து பள்ளிக்கு வருவதை உறுதிப் படுத்துதல்.
		(எ)	பள்ளிகளில் நல சூழ்நிலையை மேம்படுத்துதல்.
5.	வயது வந்த பெண்களுக்கான உடல் நலத் தேவைகள்	(அ)	வயது வந்த பெண்களிடையே உடல் நல விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கால முறைப்படி அவர்களுடைய உடல்நலம் மற்றும் சத்துணவு தகுதி நிலையைத் தெளிவாகக் கண்டறிய ஊராட்சிகளுக்கு உதவி செய்தல்.
6.	உடல்நலப் பணியாளர்கள்	(அ)	துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மகப்பேறு நிலையங்கள் ஆகியவற்றில் உடல்நலக் களப் பணியாளர்களின் வேலைகளை மேற்பார்வையிடுதல்.
		(ஆ)	மருத்துவ அலுவலர்கள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர் கள் ஆகியோர் மீதான நிருவாகக் கட்டுப்பாட்டை நடைமுறைப் படுத்துதல்.
7	பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைப் பதிவு செய்தல்	(அ)	கிராம அளவிலான பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்களை பதிவு செய்வதற்காக சட்டத்தையும் விதிகளையும் நடை முறைக்குக் கொண்டு வருதல்.
		(ஆ)	பிறப்புகள் மற்றும் இறப்புகள் குறித்து விவரங்களைத் தொகுப்பதுடன் இளஞ் சிறார் இறப்பு வீதம், பேறுகால இறப்பு வீதம், இறந்து பிறந்த குழந்தைகள் வீதம், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பு வீதம் ஆகியவற்றையும் பகுத் தாய்ந்து, அறிக்கையினை மாவட்ட ஊராட்சி மற்றும் ஏனைய முகவர் களுக்கு அறிக்கை அனுப்புதல்.

(1)		(2)
8. உணவு கலப்படத்தைத் தடுத்தல்	(அ)	1954 ஆம் ஆண்டு உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின் வழிவகைகள் செயற்படுத்தப்படுவதைக் கண்காணித்தல்.
9. துப்புரவு	(அ)	வடிகால், பொதுகழிப்பிடங்கள் போன்ற வற்றின் கட்டுமானப் பணிக்காகவும், பராமரிப்பிற்காகவும், நிதி உதவியையும், தொழில் நுட்ப உதவியையும் ஊராட்சிகளுக்கு அளிக்க உதவுதல்.
	(ஆ)	துப்புரவு, வடிகால், தூய்மையான சுற்றுப்புறச்சூழல், நலவியல் ஆகிய வற்றிற்கான நடவடிக்கைகளை கண் காணிக்கவும், கிராம துப்புரவுப் பணிகளையும் மேற்பார்வையிடுதல்.
	(இ)	ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் திட்டக்கழிவை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் மேலாண்மை செய்தல்.

III மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை (1)		அதிகார ஒப்படைப்பு (2)
1. மக்கள் நலத்திட்டம்	(அ)	ஆண்டுக்குரிய நல்வாழ்வு திட்ட அறிக்கை தயாரித்து, அதனை மாநிலத்திலும், நாட்டிலும் சிறந்த ஒன்றுடன் ஒப்பிடல்.
	(ஆ)	ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களால் செயல்படுத்துவதற்குக் கருத்துத் தெரிவிக்கப்பட்ட திட்டத்துடன் சேர்த்து முன்னேற்றத்திற்கான குறிப்பிட்டுக் காட்டும் ஆண்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.
	(இ)	நான்கு திங்களுக்கு ஒருமுறை, நலவாழ்வு மேம்பாடு மற்றும் மறுஆய்வுக் கூட்டங்களை நடத்துதல்.
	(ஈ)	ஊராட்சிகளுக்கு, ஊராட்சி ஒன்றி யங்களுக்கு மாவட்டத்தில் மேல் நிலைக்கு உயர்த்தப்படுவதற்கான வசதிகளுக்காக திட்டமிடுதல் / தொழில் நுட்பத்தில் வழிகாட்டுதல்.
2. நோய்த் தடுப்பு கட்டுப்பாடு மற்றும் நல்வாழ்வுப் பணிகள்	(அ)	திட்டங்கள்/நடைமுறைத் திட்டங்கள்/செயல்திட்டங்கள் செயற் படுத்தப் பெறுவது குறித்து நலவாழ்வு நிலைக் குழுவின் வாயிலாகக் கண்காணித்து, மறுஆய்வு செய்து மேற்பார்வையிடுதல்.
	(ஆ)	நோய்க் கட்டுப்பாடு அளவில் பெரிய, நுண்ணிய மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

(1)		(2)	
		(இ)	மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களை மேம்படுத்து வதற்கு வலிமை படுத்துதல் தொடர்பான அறிவுரை களை அரசுக்கு வழங்குதல்.
		(ஈ)	அரசு மருத்துவமனைகளுக்கும், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், துணை சுகாதார நிலையங்களுக்கும், மருந்துகளும், கருவிகளும், மருத்துவப் பொருள்களும் வழங்கப்படுவதைக் கண்காணித்தல்.
		(உ)	மாவட்ட நல்வாழ்வுத் தகவல் மேலாண்மை முறையை மேம் படுத்துதல், மேலும் மாவட்டதிட்டக் குழுவிற்கும், அரசுக்கும் வட்டார நலத்திட்டங்களில் உதவி புரிதல்.
		(ஊ)	மாவட்ட அளவில் மனிதவள மேம்பாடு, வாழ்க்கைத் தர அட்டவணை தயாரித்தல்.
		(எ)	நல்வாழ்வு மேம்பாட்டு நடவடிக்கைகளில் உட்பிரிவு மற்றும் துறைகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்.
3.	தொற்று நோய்த் தடுப்பு தாய் – சேய் நலப்பணிகள்	(அ)	ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பிறப்பு வீதம், இறப்பு வீதம், பேறுகாலத்தில் இறப்பு வீதம், இளஞ்சிறார் இறப்பு வீதம், இறந்து பிறக்கும் குழந்தைகள் இறப்பு வீதம், 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பு வீதம் குறித்த புள்ளி விவரங் களைத் திரட்டுதல், மாவட்ட அளவிலான புள்ளி விவரங்களை மாநில அரசுக்கும் மற்ற முகமைகளுக்கும் கிடைக்கச் செய்தல். அதிக அளவு இளஞ்சிறார் இறப்பு வீதம், பேறுகால இறப்பு வீதம் ஆகியவற்றிற்கான உரிய காரணங்களையும் பகுத்தாய்ந்து, ஊராட்சிஒன்றியங்கள் சரியான நடவடிக்கை எடுக்க உதவுதல்.
		(ஆ)	தாய் – சேய் நலவாழ்வு மையங்களை கண்காணித்தல்.
4.	பள்ளி நலவாழ்வுத் திட்டம்	(அ)	பள்ளி நலவாழ்வுத் திட்ட செயற்பாட்டை கண்காணித்து மறுஆய்வு செய்தல். மேலும், அரசுக்கு விவரங்களை அளிப்பதுடன் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிற்கு அறிவுரை வழங்குதல்.
5.	வயது வந்த பெண்களுக்கு நலவாழ்வு	(அ)	வயது வந்த பெண்களுக்காக நலவாழ்வு ஊட்டச்சத்து பற்றி அறியச் செய்வதிலும், ஊராட்சி ஒன்றியங்களில் தகவல்களையும், நலவாழ்வு விழிப் புணர்வை ஏற்படுத்து வதிலும் உதவி புரிதல்.

(1)		(2)	
6.	நல வாழ்வு பணியாளர்	(அ)	ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள நலவாழ்வு பணியாளர்களுக்கு ஆள் எடுப்பு செய்வதற்கும், பதவியில் அமர்த்துவதற்கும் வசதி செய்தல்.
		(ஆ)	பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு நலவாழ்வு துறைப் பணியாளர்களை அயல் பணியில் பரவலாக அமர்த்துவது, மாறுதல் செய்வது குறித்து அரசுக்கு அறிவுரை வழங்குதல்.
7.	பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்களைப் பதிவு செய்தல்	(அ)	மாவட்டத்திற்கான பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்களைத் தொகுத்தல், மற்றும் நலவாழ்வு விவரங்களின் உருவாக்கம், பயன்பாடு குறித்து ஊராட்சி ஒன்றியங் களுக்கும், ஊராட்சிகளுக்கும் அறிவுரை வழங்குதல்.
8.	உணவு கலப்படத்தைத் தடுத்தல்	(அ)	மாவட்டத்தில் உள்ள உணவு பகுப்பு ஆய்வு கூடங்களின் செயற்பாடுகுறித்து மறுஆய்வு செய்வதுடன் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் ஏதும் எடுக்க வேண்டியிருப்பின் அது தொடர்பில் அரசுக்கு அறிவுரை வழங்குதல்.
		(ஆ)	பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களில் ஊரகத் துப்புரவையையும், சுற்றுச் சூழலையும் மேம்படுத்த வசதிகள் செய்து தருதல்.

நிருவாகச் சிக்கல்கள்

11. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டப்பிரிவு 109இன் படி ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் தகுதி, அரசுப் பணியாளர்களாக ஆக்கப் பெற்று பாதுகாக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் பொது நலவாழ்வு பணியமைப்பில் உள்ளவர்களான உதவியாளர்கள், துணை செவிலியர்கள், பேறுகால உதவியாளர் மற்றும் மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோரின் பணிமுறைமைகளை வரன்முறைப்படுத்தி, விதிகளை தோற்றுவிக்க, அரசுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

12. மாநில திட்டக்குழு பிரிவு பின்வரும் பரிந்துரைகளைச் செய்துள்ளது. ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தை கவனிப்பதற்கான அதிகாரம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியத்திற்கு பொறுப்பானவராக இருப்பதுடன் பதில் சொல்லும் பொறுப்பும் பெற்றவர். எனவே, ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம், பேறுகால சுகாதார நிலையம் மற்றும் சமுதாய சுகாதார நிலையங்கள் உள்ளாட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் மாவட்ட நிலையில் பொது நலவாழ்வுத் துறையின் அலுவலர்கள், மாவட்ட ஊராட்சி சீராய்வு கூட்டங்களில் கலந்து கொண்டு மாவட்ட ஊராட்சிகளுக்கும் பொறுப்பாவார்கள். ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். இதன் காரணமாக துணைச் சுகாதார நிலையங்கள் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களை கண்காணித்தும், மருத்துவர்கள் இருப்பதையும், உறுதிப்படுத்துதல் வேண்டும். நிர்வாக முறையிலும், நுட்ப முறையிலும் மருத்துவர்கள் தொடர்ந்து அரசுப் பணியாளர்களாக இருக்கவும் அவர்களுக்கு ஊதியங்கள் அரசின் மூலம் வழங்கப்பட்டு, ஆரம்ப சுகாதார நிலையங்களில் அயற்பணியாக பணி அமர்த்தப்படலாம். அந்தப் பணி அறிக்கைகள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்களின் தலைமை மருத்துவ

அலுவலர், ஊராட்சி ஒன்றியங்களின் ஆய்வுக் கூட்டங்களில் பங்கு பெற வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களின் ஆய்வுப் பணிகள், அரசின் வட்டார தலைமை மருத்துவமனைகள் மற்றும் வட்டாரம் சாரா மருத்துவமனைகளின் செயல்களையும் கொண்டிருக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் நடத்தப்படும் ஆய்வு கூட்டங்கள் முறையாக நடைபெற வேண்டும். பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு அலுவலகத்தின், மாவட்ட அளவிலுள்ள துணை இயக்குநர், மாவட்ட ஊராட்சி ஆய்வு கூட்டங்களில் பங்கேற்கவும், அதற்கு பொறுப்பு வகிக்கவும் வேண்டும். மேலும், அரசு சுகாதார நிலையங்களின் இயக்குநர் மற்றும் தலைமை மருத்துவ அலுவலர், ஊராட்சி ஒன்றியங்களின் ஆய்வு கூட்டங்களில் பங்கேற்க வேண்டும்.

13. கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், பிரிவு வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பிற பல்வேறு நிலைகளில் உள்ள அலுவலர்கள், அவர் தம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் நலப்பணிகள் குறித்து பாராட்ட வேண்டி, பொது நலம் மற்றும் துப்புரவு குறித்து பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

14. பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களை உள்ளாட்சி அமைப்பிற்கு முழுப் பொறுப்பாக்க வேண்டுமென்று மாநில திட்டக்குழு பிரிவு கருதுகிறது. இந்நோக்கத்தை அடையும் பொருட்டு, பணியமைப்புக் கொள்கையைக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக உருவாக்க வேண்டும். மேலும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்குத் தனியானதொரு பணி நிலைப் பிரிவினரைத் தோற்றுவிப்பதும் மிகவும் அவசியமாகிறது. ஏற்கனவே அரசுப் பணியாளர்களாக பாதுகாக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்களின் சம்பளம், பணி வரையறைகள் மற்றும் பதவி உயர்வுகள் ஆகியன அரசு விதிகளின் படி முறைப்படுத்தப்படும். மாவட்டத்திலிருந்து கிராம நிலை வரை நலவாழ்வு பணியாளரை முழுநேர அரசுப் பணியாளர்களாக்கியதிலிருந்து, இவ்விரு குடியாட்சி நிறுவனங்களும் கடமையாற்றும் பொறுப்புடையதாக்குவதற்கு நிருவாகக் கட்டுப்பாட்டுக்குரிய அதிகாரங்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மாவட்ட ஊராட்சிகளுக்கும் ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு, மேற்காணும் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு தொடர்புடைய அரசாணைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப் பெற வேண்டும். மேலும், எதிர்காலத்தில் ஏற்படும் அனைத்துப் காலியிடங்களும் நிரப்பப்படுவதற்கு அரசு விதிமுறைகளின் படி, உள்ளாட்சி அமைப்புகளுக்கான நலவாழ்வு பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியங்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவ்வாறாக ஊராட்சி ஒன்றிய நிலையில், (அ) அரசுப் பணியாளர்கள் மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய பணியாளர் என்று நலவாழ்வு பணியாளர்களில் இரு பணி நிலைப்பிரிவினர் உள்ளனர். இந்த இரட்டை அமைப்பானது, சில காலங்களுக்கு தொடரப்பட்டு, பிற்காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் நல்வாழ்வு பணியாளர் என்ற ஒரு பணி நிலைப்பிரிவு மட்டும் இருக்கும்.

15. மாவட்ட நிலையில் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சியின் நிலைக்குழுவும், உள்ளூர் அறிவுரைக் குழுவும் செயல்பட்டு வருகின்ற அனைத்து நடவடிக்கைகளை கூட்டுவிப்பதிலும், ஒருங்கிணைப்பதிலும், முக்கியப் பங்காற்றுகின்றன. ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சியில் உள்ள நிலைக்குழு மற்றும் ஆலோசனைக்குழு, அவற்றின் உள்ளூர் அறிவுரைக் குழுவாகவும் , ஊராட்சிக்கு கிராமசபா, ஒரு உள்ளூர் அறிவுரை குழுவாகவும் ஊராட்சிக்கு கிராம சபா, ஓர் உள்ளூர் அறிவுரை குழுவாகவும் அமைக்கப்பட்டு செயல்படும். அத்தகைய ஒன்றுக்கொன்றான வலுப்பெருக்கமும், ஒருங்கிணைக்கப்பெற்ற மேலாண்மையும் பொது மக்களின் சுகாதார தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் சிறப்பாகச் செயலாற்ற முடியும்.

நிதிச் சிக்கல்கள்

16. ஊராட்சி மன்றங்களினால் நலவாழ்வு மையம், மருந்தக கட்டிடங்கள், தளவாடங்கள், வாகனங்கள் பேணுதல் செலவினமும் மற்றும் பழுது பார்த்தல், புதுப்பித்தல் பணிகள் ஆகியவையும் மேற்கொள்ளும். ஊராட்சி ஒன்றியத்தின் சட்டரீதியான கடமை என்னவென்றால், மகப்பேறு மையங்கள் மற்றும் மருந்தகங்களையும் உள்ளீட்டு ஆரம்பிப்பது, பேணுதல் என்ற பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எப்படியாயினும், ஊராட்சி ஒன்றியமானது பணிப்பெண்களுக்கு வழங்கப்பட வேண்டிய தேவைப்படும் சம்பளத்தை அரசிடமிருந்து மூன்றில் இரண்டு பாகம் மானிய உதவியாக பெறுகிறது. (ஓராண்டுக்கு ரூ.2.60 கோடியாகும்). மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கில் அரசின் ஒப்படைப்பு ரூ.1.30 கோடியாகும். ஊரக உள்ளாட்சி மன்றங்களின் மூலம் மகப்பேறு மையங்கள மற்றும் இதர நலவாழ்வு திட்டங்கள் பராமரிப்பதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி மன்றங்களுக்கு இம்மையங்களை மாறுதல் செய்தால், நிதியானது செயல்முறைப்படுத்தவும், பராமரிக்கவும், ஊராட்சி ஒன்றியங்களின் முடிவுக்கு விடப்படும்.

17. மேலே தெரிவித்த ஆலோசனைக்கேற்ப மருந்தகங்கள் பராமரிப்பு தொடர்பான அதிகாரம் ஒப்படைக்கப்படும். அரசானது ஊராட்சி ஒன்றியங்களுக்கு மொத்த பராமரிப்புச் செலவையும் மானியமாக வழங்கும். தற்பொழுது ஒப்பந்த அடிப்படையில் நடைபெற்று வரும் ஊரக மருந்தகங்கள் தனியார் மயமாக்கப்பட்டு, உள்ளூரில் விருப்பம் தெரிவிக்கும் மருத்துவர்கள், வசதிகளை பயன்படுத்த அனுமதியளிக்கப் படும். கிராமங்களில் மருந்தகங்களை தொடங்கி நடத்த விரும்பும் தனியார் மருத்துவர்களுக்கு ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் வசதிகள் செய்து கொடுக்கும். ஊராட்சி ஒன்றியங்கள் நீண்டகால இத்தகைய அடிப்படையில் தனி மருத்துவமனைகள் கட்டுவதற்கு இட வசதி அளிக்கலாம். அதற்கு மருத்துவர்கள் கிராமத்தில் உள்ள மக்களுக்கு இலவச சிகிச்சை அளிக்க வேண்டும்.

சட்டச் சிக்கல்கள்

18. மேற்கூறிய பத்திகளில் உள்ளவாறு, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டமானது விரிவாக திருத்தம் செய்யப்பட்டு, பரிந்துரைகள் சேர்த்துக் கொள்ளப்படும். பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் பொது நலவாழ்வு மற்றும் துப்புரவிற்கு மிகுந்த கடமை என்பதால், தமிழ்நாடு பொது நலவாழ்வுச் சட்டம் மற்றும் உணவு கலப்படத்தை தடுத்தல் சட்டத்தை திருத்துவது இன்றியமையாமையாகும். பின்னால் குறிப்பிடப்படும் சட்டமானது இந்திய அரசினால், சட்டம் இயற்றப்பட்டுள்ளதால், உரிய திருத்தங்களுக்கு மைய அரசை அணுக வேண்டும்.

குடும்ப நல வாழ்வு

(இனம் - 24)

பிறப்பு வீதம், இறப்பு வீதம், சிசு மரண வீதம், செத்துப் பிறந்த குழந்தைகளின் பிறப்பு வீதம், பேறுகால மரண விகிதம் மற்றும் குழந்தை பெறும் விகிதத்தைக் குறைக்கக் கூடிய அளவிற்குத் தாய்சேய் நலத்தை மேம்படுத்துவதே குடும்பநலத் திட்டத்தின் முதன் நோக்கமாகும். இச்சாதனைகளின் அளவை அகில இந்தியாவுடன் ஒப்பிடப்படுமிடத்து, தழிழ் நாட்டின் சாதனையானது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

	குறியீடுகள்	தமிழ்நாடு	அகில இந்தியா
01	**பொதுக்குறியீடுகள்**		
1.1.	உத்தேச பிறப்பு வீதம் (1994) (1000 மக்கள் தொகைக்கு)	19	28.6
1.2.	உத்தேச இறப்பு வீதம் (1994) (1000 மக்கள் தொகைக்கு)	7.9	9.2
1.3	சிசு இறப்பு வீதம் (1994) (1000 பிறப்புகளுக்கு)	59	73
1.4.	பேறுகால இறப்பு வீதம் (1994) (1000 உயிருடனான பிறப்புகளுக்கு)	0.8	4.37
1.5.	குழந்தை பெறும் விகிதம்	2.2	3.6
1.6.	தம்பதியர் பாதுகாப்பு வீதம் (31.3.1995)	57%	51%
02	**மகப்பேறு கால கவனிப்பு குறியீடுகள் 1992 – 93**		
2.1.	பேறுகாலத்திற்குமுன் மருத்துவக் கவனிப்பைப் பெறும் கருவுற்ற பெண்களின் விழுக்காடு	94.2	62.3
2.2	(இரண ஜன்னி) தடுப்பூசி மருந்து இரண்டு முறை பெறும் கருவுற்ற பெண்களின் விழுக்காடு	90.1	53.8
2.3.	இரும்புச் சத்து / ஃபோலிக் அமில மாத்திரைகள் பெறுவோரின் விழுக்காடு	84.1.	50.5
2.4	மருத்துவ நிலையங்களில் மகவு ஈன்றவர்கள் விழுக்காடு	63.4	25.5
2.5.	மருத்துவத் தொழில் பயின்றவர்கள் / பயிற்சி பெற்றவர்கள் துணையுடன் மேற்கொள்ளப் பெற்ற மகப்பேறு விழுக்காடு	71.2	34.2

02. தமிழ்நாட்டில் 1973 இல் 30.0 ஆக இருந்த பிறப்பு வீதமானது 1979 இல் 28.9 ஆக குறைந்ததுடன், 1984 வரை ஏறக்குறைய அதே நிலையில் நீடிக்கவும் செய்தது. மேலும் அதன் பிறகு வேகமாக குறைந்து 1994 இல் 19.0–ஐ நெருங்கி விட்டது. அகில இந்தியப் பிறப்பு வீதமானது 1994இல் 28.6 ஆகும். கேரளாவில் மட்டும் பிறப்பு வீதம் குறைவு. அதிக விழுக்காட்டில் ஏழ்மை நிலையில் உள்ளவர்களைக் கொண்ட, ஏறக்குறைய 58 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட தமிழ்நாடு, நிகர மாற்றீடு வீத அளவை அடைந்து நிலைத்த மக்கள் தொகை அளவை நோக்கி நடைபோடுகிறது. சிறிய குடும்பத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்ற மனமாற்றம்,

கருத்தடையினைப் பரவலாக ஏற்றுக் கொண்டமை, சிறு குடும்பம் குறித்த நிலை பற்றிய செய்தியை பரவச் செய்தமை. பிறப்பு இடைவெளி, திருமண வயதை 21 ஆக உயர்த்தப்பட்டமை, எழுத்தறிவு பெற்ற பெண்கள் வீதம் (1971–இல் 28.86 % ஆக இருந்தது. 1991ல் 52.29% . இது 82.4% அளவில் உள்ள கேரளத்திற்கு அடுத்த நிலையது), பள்ளிகளிலிருந்து நிறுத்தப்படும் பெண்களின் எண்ணிக்கை குறைப்பு, பெண்களின் சமுதாய நிலை மற்றும் பாதுகாப்பு பற்றிய வலியுறுத்தல் முதலியன போன்ற பல்வேறு காரணக் கூறுகளின் சேர்க்கையே தமிழ்நாட்டில் தோராய பிறப்பு வீதக் குறைவுக்கு காரணமாகும்.

03. திருமண வயதை உயர்த்துவது, குழந்தை பெறும் விகிதத்தில் பாராட்டத்தக்க விளைவினை ஏற்படுத்தியுள்ளது (ஒரு பெண்ணுக்குரிய குழந்தைகளின் எண்ணிக்கையில்). பதிவாளரின் அண்மைக் காலப்புள்ளி விவரங்களின் படி, இந்தியாவின் சராசரி குழந்தை பெறும் விகிதமானது 3.6, குறைந்த பட்சமாக கேரளம் 1.9. அதற்கு அடுத்தப்படியாகத் தமிழ்நாட்டில் 2.2. தமிழ்நாட்டின் வெற்றிக்கு இரு பெரும் காரணக் கூறுகள் தமது பங்கினை ஆற்றியுள்ளன. அதாவது (1) ஆற்றல்மிக்க சமூக மற்றும் அரசியல் ஒப்பிய பொறுப்பு (2) சிறந்த தொழில் நுட்ப மற்றும் நிருவாக அமைப்பு.

04. தமிழ்நாட்டில் இளங்குழந்தைகள் இறப்பு வீதமானது 1971 – இலிருந்து 1981க்குள் 113 / 1000 – இலிருந்து 91/1000 ஆக அதாவது ஆண்டொன்றுக்கு 2.2 / 1000 வீதம் குறைந்தது. அடுத்த பத்தாண்டுகளில் இந்த வீழ்ச்சியின் வேகம், அதாவது 1991ல் 57/1000 ஆக முறையே ஆண்டொன்றுக்கு ரூ.3.4/1000 வீதம் அதிகரிக்கப்பட்டது. பிந்திய பத்தாண்டில் இவ்வீழ்ச்சியின் வேகத்திற்கு பல்வேறு ஆக்கக் கூறுகள் காரணமாயின. அதாவது மருத்துவ துணை செவிலியர்களின் முனைப்பான பயிற்சி, அப்பயிற்சியை அளிக்க குறிப்பிட்ட பொது சுகாதார மையங்களிலுள்ள, ஊரக சுகாதாரப் பயிற்சி நிலையங்களின் பணியமைவு, வட்டார நிலைகளில் தாய் சேய் நல விடுதிகள் மீதான நடவடிக்கைகள் யாவற்றையும் கண்காணிக்க முதன்மை சுகாதார செவிலியர் பணியிடம் உருவாக்கம், பேறுகாலத்திற்கு முந்தைய பாதுகாப்பு சிறப்பு பயிற்சி, மகப்பேற்றுக்குரிய கருவி கலப் பெட்டிகளுக்கு வகை செய்தல், நாடு தழுவிய தடுப்பூசி திட்டம், ஊட்டச்சத்து "அ" மற்றும் இரும்புச் சத்து / போலிக் ஆயில் மாத்திரைகள் வழங்குவதற்கு வழி வகை செய்தல் போன்ற பலவகை ஆக்கக் கூறுகளே காரணங்களாகும்.

1981 இல் பேறு காலத்திற்குப் பிந்தைய இறப்பு வீதமானது 29 / 1000 இலிருந்து 1991இல் 14 / 1000 ஆக குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அடைந்துள்ளது.

திட்டங்களும் நிறுவனங்களும்

05. ஆரம்ப சுகாதார மையங்களும், துணை சுகாதார மையங்களும் குடும்ப நலத்திட்டத்தின் முக்கிய கூறுகள் ஆகும். 8682 துணை சுகாதார மையங்களும், 68 சமுதாய சுகாதார மையங்கள் உள்ளடங்கிய 1419 ஆரம்ப சுகாதார நிலையங்களும் உள்ளன. கருத்தடை அறுவை சிகிச்சை வசதியும் அது தவிர கருவுற்றுள்ள தாய்களுக்கும், பிறந்த இளங்குழந்தைகளுக்கும், தொற்று நோய்களினின்று தடைக்காப்பளித்தல் வாயிலாகப் பேறு காலத்திற்கு முந்தைய மற்றும் பேறு காலத்திற்குப் பிந்தைய மருத்துவ வசதி நல்கும், பேறு காலத்திற்கு பிந்தைய குடும்ப நல அறுவை சிகிச்சை நிலையங்கள் உள்ளன. தற்போது இம்மாநிலத்தில் 1258 படுக்கைகளுடன் கூடிய 105 பேறு காலத்திற்கு பிந்தைய குடும்ப நல அறுவை சிகிச்சை நிலையங்கள் செயல்படுகின்றன. (இதில் அரசு நிறுவனங்களால் 97 மையங்களும், உள்ளாட்சி அமைப்புகளால் 4 நிலையங்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் 4 நிலையங்களும் நடத்தப்படுகின்றன).

06. குடும்ப நலத்தின் துணைத்திட்டமான, மருத்துவ முறையிலான சட்டபூர்வக் கருச்சிதைவு திட்டத்தில், அதிக விழுக்காட்டு அளவிலான பெண்கள், மருத்துவ முறையிலான கருக்கலைப்புச் சிகிச்சையைப் பெறுகின்றனர். தற்போது மாநிலத்தில் 711 நிறுவனங்கள் (அரசின் கீழ் 450, உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் 4, தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கீழ் 36 மற்றும் தனியார் முகவரமைப்புகளின் கீழ் 221) சட்ட பூர்வ கருச்சிதைவுப் பணி ஆற்றி வருகின்றன.

07. செய்தி, கல்வி மற்றும் தகவலளிப்புத் (செ.க.த.) திட்டங்கள், குறிப்பிட்ட இயக்குப் பிரிவுகளுக்காகத் தயாரிக்கப்படுகின்றன. செய்தி, கல்வி மற்றும் தகவலளிப்பு நடவடிக்கைகளுக்காக கிராமங்களில் மகளிர் மன்றங்கள் அமைக்கப்படுகின்றன. செய்தி, கல்வி மற்றும் தகவலளிப்பு பணிக்காக மாவட்ட ஆட்சியர்களுக்கு மைய அரசின் நிதியுதவி ஒப்பளிக்கப்படுகிறது. செய்தி, கல்வி தகவலளிப்பு பிரிவானது, சுகாதாரத் துறையின் களப்பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கிறது.

08. 382 ஊரகக் குடும்ப நல அலுவலகங்கள், 65 நகர்ப்புறக் குடும்ப நல அலுவலகங்கள், 19 மாவட்ட குடும்ப நல அலுவலகங்கள் மற்றும் 1 நகரக் குடும்ப நல மையமும் உள்ளன.

எதிர்காலத்தில் முனைப்பிற்குரிய பகுதிகள்

09. குடும்ப நலத்திட்டத்தின் மொத்தச் சாதனைகள் முற்றிலும் கணிசமான அளவில் இருந்த போதிலும், ஊரக இளங் குழந்தைகள் இறப்பு வீதம் மற்றும் பேறு கால இறப்பு வீதம், பிறந்த குழந்தைகளின் இறப்பு வீதம் நமது கவனத்தை ஈர்க்கின்றன. இக்கூறுகள் ஊரகப் பகுதிகளில் குடும்ப நலத்திற்கும், தாய் சேய் நல காப்பிற்கும் வலுவூட்டுவதற்குரிய முயற்சிகளை நாம் மேற்கொள்வது மிகவும் தேவையென உணர்த்துகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் அதாவது 1991 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டின் இளம் சிறார் இறப்பு வீதமானது, ஏறக்குறைய 1000க்கு 58 என்ற அளவில் நிலையாக இருந்து வருகிறது. ஊரக இளஞ்சிறார் இறப்பு வீதம், தருமபுரி மாவட்டத்தில் மிக அதிகமாக 1000 உயிருடனான பிறப்புகளுக்கு 98.1 வீதமும், மதுரையில் 84.4ம், சேலத்தில் 80.1ம் மற்றும் இராமநாதபுரத்தில் 78.1 என்றும் மாவட்ட வாரியான புள்ளி விவரங்கள் புலப்படுத்துகின்றன. 1995இல் தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் பேறுகால இறப்பு வீதமானது, 1000க்கு 1.9 என்றுள்ளது. இவ்விறப்பு வீதம் நீலகிரியில் 4.5 அளவும் அதைத் தொடர்ந்து பெரம்பலூரில் 3.6, பசும்பொன் மற்றும் திருச்சியில் 3.3 என்றும் உள்ளது. ஊரகப் பகுதிகளில், இறந்து பிறந்த குழந்தைகள் வீதமானது, 1000 பிள்ளைப் பேறுக்கு 18.9 ஆக உள்ளது. பிறந்த குழந்தைகள் இறப்பின் காரணமாக ஊரகப் பகுதிகளில் இளஞ்சிறார் இறப்பு வீதமும் பேறுகால இறப்பு வீதமும் அதிக அளவில் உள்ளது. பேறுகால வலியையும், இறப்பையும் குறிப்பிடத்தக்க அளவில் குறைப்பதில் மகப்பேற்றுக்கு முந்தைய பாதுகாப்பானது முக்கிய பங்கு வகிக்கிறது. கருவுற்ற பெண்களுக்கு மருத்துவ பாதுகாப்புடன் சரியான திட்டமிட்ட உணவு குறித்தும், இரும்பு சத்து, ஃபோலிக் அமில மாத்திரைகளை உட்கொள்வது குறித்தும் அறிவுரை வழங்குவது பயனுள்ளதாகும். இது குறை எடையுடன் குழந்தைப் பிறப்பு நிகழ்வுகளைக் குறைப்பதற்கு உதவுவதுடன் பிறக்கும் முன் இறத்தல், பிறந்ததும் இறந்து விடுதல் ஆகியனவும் இளஞ்சிறார் இறப்பு வீதமும் குறையவும் உதவும்.

மாநில அரசின் நிதி ஆதரவு :-

10. கடந்த மூன்றாண்டுகளில் குடும்ப நல வாழ்வுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சங்களில்)

		1994 - 95 உள்ளபடியான செலவு	1995 - 96 திருத்திய மதிப்பீடு	1996 - 97 திருத்திய வரவு செலவு மதிப்பீடு
குடும்பநலம் (மொத்தம்)		11062.07	11309.64	10494.29
இதில்				
அ)	ஊரகக் குடும்ப நலப் பணிகளுக்கு	4330.80	5738.90	5635.23

		1994 - 95 உள்ளபடியான செலவு	1995 - 96 திருத்திய மதிப்பீடு	1996 - 97 திருத்திய வரவு செலவு மதிப்பீடு
ஆ)	தாய் சேய் நலம்	1602.13	573.65	594.93
இ)	இழப்பீடு	715.76	775.71	770.21
ஈ)	மக்கள் கல்வி	92.76	100.78	92.16
உ)	மற்றவை	4320.62	4120.60	3401.76

பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள்

11. பரவலாக்கப்பட்ட திட்டமிடுதலின் போது தனி மாவட்டங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கேற்ப, மைய அரசு ஆதரவு பெற்ற குடும் நலத்திட்டங்களை போதுமான அளவில் எளிதாக்கி மாநிலத்திட்டத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

73/74வது அரசிலமைப்புச் சட்ட திருத்தமானது, பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு 29 இனங்களுக்கான அதிகாரங்களையும், பொறுப்புகளையும் ஒப்படைப்பது குறித்து வலியுறுத்துகிறது. அவற்றுள் 24–வது இனம் "குடும்ப நல வாழ்வு" என்பதாகும்.

12. குடும்ப நலவாழ்வு தொடர்பில் 3 அடுக்கு நிலையான பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் சில செயற்பாடுகளை, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பின்வருமாறு சுருக்கமாகத் தெரிவிக்கிறது.

அ) மருந்தகங்கள், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல நிலையங்கள் ஆகியவற்றை நிறுவிப் பேணுவதற்கும், நகர்ப்புற மருத்துவர்களுக்கு ஊக்காதரவுத் தொகைகளை வழங்குவதற்கும், செவிலித்தாய் தொண்டு பராமரிப்பிற்கும், தாய்மார்களுக்குக் குடும்பநல வாழ்வு பற்றிய அறிவுரைகளை வழங்கியும் உதவி செய்வதுடன். அம்மை குத்துபவர்களுக்கானப் பயிற்சியும் வேலை வாய்ப்பு அளிப்பது தொடர்பிலான பணிகளை மேற்கொள்வதற்கும், ஊராட்சி ஒன்றிய குழுவானது அதன் நிதிவரம்பிற்குள் தக்க ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும். (பிரிவு 112, ஆ, இ, ஈ).

ஆ) ஊராட்சி ஒன்றியக்குழு அரசால் அல்லது ஏதாவதொரு சட்டப்படியான அமைப்பில் அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்குள் பிற முகமையால் நிறைவேற்றப்படும் திட்டங்கள், செயல் பிற நடவடிக்கைகளை ஆய்வு செய்யலாம். (பிரிவு 114 (2))

இ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், பொது மருந்தகங்கள், குழந்தை, நல மையங்கள் மற்றும் அத்தகைய பிறவகை நிறுவனங்களை நிறுவிப் பேணலாம்.

ஈ) ஊராட்சி ஒன்றியக்குழு, அம்மை குத்திக் கொள்வதை வலியுறுத்துவடன் ஊராட்சி ஒன்றியம் முழுவதும் மறுமுறை அம்மை குத்துவதற்கும் கட்டாயப்படுத்தலாம்.

உ) ஊராட்சி ஒன்றியக் குழுக்களில் பணியாற்றும் பொதுச் சுகாதார பணியமைப்பில் உள்ள சுகாதார உதவியாளர்கள். துணைச் செவிலியர்கள். பேறு கால உதவியாளர்கள். மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோரை அரசுப் பணியாளர்களாக்க இச்சட்டம் வகை செய்கிறது. (பிரிவு – 109).

13. குடும்ப நல வாழ்வு திட்டத்தின் மேற்காணும் சாதனைகள், சுகாதார மையங்கள் மற்றும் நிறுவனங்கள் இவற்றோடு நன்கு நிறுவப்பட்ட சிறந்த பின்னலமைப்பு, எதிர்காலத் தேவைக்காக ஊரக பகுதிகளில் தாய் சேய் நல பாதுகாப்பு நடவடிக்கைகளை மீண்டும் சீரமைப்புச் செய்வதற்கான எதிர்காலத் தேவை இவற்றின் பின்னணியிலும், மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் உள்ளடங்கிய வகைமுறைகளின் படி குடும்ப நல வாழ்வுத் திட்டத்தைப் பயனுள்ளவாறு செயற்படுத்தி வெற்றி பெறுவதையும் கருத்திற் கொண்டும், மூன்று அடுக்கு நிலையிலுள்ள பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களிடையே பின்வரும் அதிகாரங்களையும் செயல்பாடுகளையும் ஒப்படைப்பதற்கு மாநிலதிட்டக்குழு பிரிவு கருதுகிறது.

I. ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. தாய், சேய் நல காப்பு பணிகள்	1) பிறப்பு வீதம், இறப்பு வீதம், சிசு இறப்பு வீதம், பேறுகால இறப்பு வீதம் தொடர்பிலான முக்கிய புள்ளி விவரங்களைப் பதிவு செய்வதுடன் அவற்றைப் பராமரித்தல் (இவ்விவரங்களை கிராம நிர்வாக அலுவலர் ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும்) மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு அறிக்கை அளித்தல்.
	2) பொதுவாக இறப்பு வீதம் அதிக அளவிலுள்ள பகுதி குறிப்பாக பெண் குழந்தைகள் இறப்பு வீதம் அதிக அளவிலுள்ள பகுதிகளையும், பேறுகால இறப்பு வீதம், இறந்து பிறக்கும் குழந்தைகள் வீதம் மற்றும் பிறந்தவுடன் இறக்கும் குழந்தைகள் வீதம் ஆகியவற்றையும் கண் டறிந்து அதற்கான காரணங்களை ஆராய்ந்து சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
	3) கருவுற்ற பெண்களின் சுகாதாரப் பதிவுருக்களைப் பேணுவதில் உதவி செய்தல், சிக்கலான பேறுகாலப் பிரச்சனைகளுக்குரிய கருவுற்ற பெண்களுக்கு உதவி செய்யும் பொருட்டு மகப்பேறு மையங்களுக்கும், துணை சுகாதார நிலையங்களுக்கும் உதவி செய்தல்.
	4) பேறுகாலத்திற்கு முந்தைய, பிந்தைய பாதுகாப்பு, பேறுகாலப் பாதுகாப்பு, சுகப்பிரசவம் செய்வதற்கான நடைமுறை ஆகியவற்றை பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்கள் மேற்கொள்வதை உறுதி செய்தல்.
	5) கருவுற்றிருக்கும் பெண்களுக்கும் பின்வரும் ஆண்டுகளில் கருத்தரிக்கும் நிலையிலுள்ள பெண்களுக்கும் மருத்துவ வசதி அளிப்பதற்கு இயலும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஆதரவைப் பரவலாக்குதல்.
	6) முதல் ஆறு மாதங்களுக்கு ஆண், பெண் இளஞ்சிறார்களுக்குத் தாய்ப்பால் அளித்தல் தொடர்பாக அறிவுரை வழங்குவதில் உதவி செய்தல்.
	7) தொற்று நோய்க்காப்பு அளிப்பதுடன் கூடிய தாய் சேய் நலம், வைட்டமின் அ, இரும்பு / அயோடின் சத்துக்குறைவை கட்டுப்படுத்துதல், வெறிநாய்க்கடி தடுப்பு மருந்து, உடல் நீர் வறட்சி போக்கும் மருத்துவச் சிகிச்சை ஆகியவற்றிற்கும் அடிப்படை குறுக்கீடுகளுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்துவதற்கு உதவி செய்தல்.

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு	
	8)	கிராம நல செவிலியர்கள், சமுதாய நலப் பணியாளர்கள் மற்றும் மரபு வழி செவிலியர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல்.
	9)	தாய் சேய் நல மருத்துவப் பணிகளுக்காக கிராம அலுவலர்களுடன் ஊரக குடும்ப நலச் செயலக அலுவலர்களுடனும் சேர்ந்து காலமுறையான மறு ஆய்வை நடத்துதல்.
2. குடும்பக் கட்டுப்பாடு	1)	குடும்ப நலத்திற்குத் தகுதியுடைய தம்பதிகளை ஊக்கப்படுத்தி குறிப்பாக இனப்பெருக்கத்திற்கும், கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தவும் ஆண்களைப் பொறுப்பேற்க ஊக்கப்படுத்துதல்.
	2)	உரிய கருத்தடைச் சாதனங்கள் கிடைக்கச் செய்வதையும், வழங்கு வதையும் உறுதி செய்தல்.
	3)	கால முறையான குடும் நலத் திட்டம் / குடும்ப நல முகாம்களுக்கு ஏற்பாடு செய்தல்.
3. தகவல், கல்வி மற்றும் தகவல் அளிப்பு	1)	கருத்தடை, அவை கிடைக்கும் தன்மை மற்றும் தாய் சேய் நலக் காப்பு பணிகள் ஆகியவை பற்றிய தகவலைப் பரப்புதல்
	2)	இலக்கு நிர்ணயிக்கப்பட்ட குழுக் களுடன் கலந்து சமுதாய நலப் பணியாளர்கள், தொண்டு நிறுவன நலச் செவிலியர்கள் மற்றும் மருத்துவத் துறை துணை செவிலியர்களையும் சேர்த்துத் திறம்பட தகவல் பரப்புதல்.
	3)	குடும்ப நல முறைகள், திருமணத்திற் குரிய வயது, குழந்தை பிறப்புக்கான இடைவெளி, தாய்ப்பாலூட்டல், சிறிய குடும்ப அளவு, பேறுகாலத்துக்கு முந்தைய உரிய பாதுகாப்பு தொடர்பிலும், கருவுற்ற பெண் களுக்கும், பாலூட்டும் பெண்களுக் குமான சத்துணவு, பாது காப்பற்ற கருச்சிதைவுகள் தொடர்பில் பேறுகால நல இ ன்னல்கள் முதலானவைகளின் தொடர்பிலும் அறிவுரை நடவடிக்கைகளுக்கும் செயல் முறை திட்டங்களுக்கும் ஏற்பாடு செய்தல்.
	4)	பால்வினை நோய்கள், ஹெச்.ஐ.வீ., எய்ட்ஸ் ஆகியவற்றின் மீதான கல்வி சார்ந்த தகவல் முகாம்களுக்கு ஏற்பாடு செய்தல்.

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
	5) கருவுறும் மற்றும் பின்னாளில் கருவுறக்கூடிய வயதிலுள்ள பெண் களுக்கு அறிவுரை வழங்க மகளிர் மன்றங்களையும் மகளிர் குழுக்களையும் உருவாக்குதல்.

I. ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	தாய் சேய் நல காப்புப் பணிகள்	1) ஊராட்சி நிலையில் புள்ளி விவரங்களைத் தொகுப்பதுடன் தாய் சேய் நலக் காப்பு மீதான புள்ளி விவரங்களின் அடிப்படையிலும் பேணி வருதல்.
		2) தொற்று நோய்த் தடைக்காப்பு முகாம்களையும் குடும்ப நல மேம்பாட்டு இயக்கங்களையும் அமைத்தலில் ஊராட்சிக்கு உதவுதல்.
		3) சிற்றூராட்சியில் குடும்பநலம் மற்றும் தாய் சேய் நலக் காப்பு நடவடிக்கை களுக்கு உதவுதல், ஒருங்கிணைத்தல், மேற்பார்வையிட்டுக் கண்காணித்தல்.
		4) குடும்ப நலத்திட்ட நடவடிக்கை களுக்காக மகப்பேறு மையங்கள், பேறுகாலத்துக்கு பிந்தைய அறுவை சிகிச்சை நிலையங்கள், துணை சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுவிப் பேணுதல்.
2.	குடும்ப நலத் திட்டம்	1) மருத்துவ மையங்களுக்கு/ஊராட்சிகளுக்கு, மருந்துகள், கருவிகள் மற்றும் குடும்ப நலத் திட்ட துணைக் கருவிகளுக்கு வழிவகை செய்தல்.
		2) "மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்திற்குரிய நிலைக்குழு வாயிலாக குடும்பநலத்திட்டப் பணிகளையும் இயக்கத்தையும் கண்காணித்து மறு ஆய்வு செய்தல்.
3.	செய்தி, கல்வி மற்றும் தகவல் அளிப்பு	1) ஊராட்சியின் கல்வி மற்றும் தகவல் அளிப்பு நடவடிக்கைகளில், கிடைக்கக் கூடிய தாய் சேய் நலக் காப்பு மற்றும் குடும்ப நலப் பணிகள் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்குத் தேவையான உதவிகளைச் செய்தல்.
		2) தாய் சேய் நலப் பணிகள், குடும்ப நலத் திட்டம், பால்வினை நோய்கள் மற்றும் எய்ட்ஸ் கட்டுபாட்டுத் திட்டம் ஆகியவற்றின் மீதான அறிவுரை வழங்கும் நடவடிக்கை களுக்குத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஆதரவைத் திரட்டுதல்.

III. மாவட்ட ஊராட்சி

	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
2.	குடும்ப நலம் தொடர்பில் மாவட்டம் முழுவதிலுமான கண்ணோட்டம்	1) மாவட்டத்திலுள்ள குடும்ப நலத் திட்டத்தின் நிலை குறித்த தகுதி அறிக்கையைத் தயாரிப்பதுடன் அதனை மாநிலத்தில் / நாட்டில் உள்ள சிறந்த திட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தல்.
		2) திட்டத்திலுள்ள குறைகளைக் கண்டறிவதுடன் அவற்றை நீக்க ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் தொடர்புடைய ஏனைய அனைத்து நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் திரட்டுதல்.
		3) வட்டார வளங்களையும், துணை வரவு – செலவுத் திட்ட ஆதரவையும் உயர்த்துவதற்கு ஊக்கமளித்தல்.
		4) காலமுறையிலான சீராய்வுக் கூட்டங்களை நடத்துவதுடன் செய்யப் பெற்ற பணிகளின் தர மதிப்பீட்டிற்கான பட்டியலைப் பராமரிப்பதுடன் நடவடிக்கை மேற்கொள்வதற்காக பலருடன் இணைந்து திட்டமொன்றைத் தீட்டுதல்.
		5) ஆதரவு மற்றும் கருத்துக்களைப் பெற நடவடிக்கை எடுத்தல், நலிவுற்ற பிரிவினர்களுக்கான தாய் – சேய் நலக் காப்பு மற்றும் குடும்ப நலம் மீதான விரிவான நடவடிக்கைகளுக்கும், பணிகளின் மீதான சமூகத் தணிக்கைக்கும், குறிப்பாக தேர்ந் தெடுக்கப்பட்ட மகளிர் காப்பாளர்களிடமிருந்து உதவி பெறுதல்.
2.	பேறுகால நலக் காப்புப் பணிகள்	1) தாய் சேய் நலம் தொடர்பில் மாவட்ட நிலையில் அடிப்படை விவரக் குறிப்பொன்றை உருவாக்குவதுடன் மேலாண்மைத் தகவல் அமைப்பு முறையை மேம்படுத்துதல்.
		2) "நலவாழ்வு மற்றும் குடும்ப நலத்தின்" மீது நிலைக்குழு வாயிலாக மாவட்டத்தில் அனைத்து திட்டங்களையும் செயல் முறைகளையும் தாய் சேய் நலக் காப்பு மற்றும் குடும்ப நலத்திட்ட நடவடிக்கைகளையும் கண்காணித்து மறு ஆய்வு செய்தல்.
		3) குறைபாடுகளை அறிவதற்கு ஊராட்சி ஒன்றியத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் செயல் விளைவுகளை மதிப்பிட்டு குறைகளைக் கண்டறிந்து அவற்றைச் சரி செய்வதற்கான வழி வகைகளைக் கூறுதல்.

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
	4)	மருந்து சரக்குகள் மற்றும் தடுப்பூசி மருந்துகளை சேமித்து வைப்பதற்கான வசதிகளை மேம்படுத்தவும், சுகாதார நிலையங்களுக்கு மருந்துச் சரக்குகள் மற்றும் உள்ளமைப்பு வசதிகளைக் கிடைக்கச் செய்யவும் அரசுக்கு அறிவுறுத்தல்.
	5)	சுகாதாரப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியையும், புத்தறிவுப் பயிற்சியையும் கால முறையாக ஆய்வு செய்து அதனை மேம்படுத்துவதற்கு கருத்து தெரிவித்தல்.
	6)	சுகாதார நிலையங்கள், பேறு காலத்திற்கு பிந்தைய அறுவை சிகிச்சை நிலையங்கள் மற்றும் ஊரகக் குடும்ப நல செயலகம் ஆகியவற்றின் செயல் பாடுகளை மேற் பார்வையிடல்.
3. குடும்ப நலம்	1)	ஊராட்சி ஒன்றிய நிலையிலுள்ள மையங்களுக்கு மருந்துகள், கருவிகள் மற்றும் குடும்ப நலச் சாதனங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.
	2)	குடும்ப நலத்திட்ட நடிவடிக்கைகளைச் செயற்படுத்துவதில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவுதல்.
	3)	மாவட்டங்களில் செயற்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் ஆய்வு செய்வதற்காக மாவட்ட ஊராட்சிக்கு மாவட்ட குடும்ப நல நிலையம் அறிக்கை அளித்தல்.
	4)	குடும்ப நலத்திட்ட இயக்கங்களிலும் செயல்பாடுகளிலும் தனியார் மருத்துவர் களையும் மருத்துவ நிலையங்களையும் அரசிதழ் பதிவுறா பணியாளர்களையும் சேர்த்துக் கொள்ளுதல்.
4. செய்தி, கல்வி மற்றும் தகவல் அளிப்பு	1)	குடும்ப நலச் செய்தி, கல்வி மற்றும் தகவல் அளிப்பைப் பரவச் செய்வதில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவுதல்
	2)	குடும்ப நலத்திட்டத்திற்குரிய கல்வி சார்ந்த மற்றும் தகவல் அளிப்பு உபகரணங்களைத் தயாரிப்பதில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவுதல்.
	3)	குடும்ப நலத்திட்ட நடைமுறை திறனைச் செயல்படுத்துவதற்கு கருத்தரங்கு களுக்கும் நேரிடையாகத் தொடர்பு கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்தல்

நிருவாகச் சிக்கல்கள்

14. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 109 (1) மற்றும் (2) ஆவது பிரிவானது, ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொது சுகாதார நிறுவனங்களில் உள்ள அனைத்து சுகாதார உதவியாளர்கள், உதவி செவிலியர்கள், பேறுகால மற்றும் மகப்பேறு உதவியாளர்களின் தகுநிலையை அவர்களை முழு நேர அரசுப் பணியாளர்களாக அறிவித்ததால் பாதுகாக்கிறது. மேலும் இப்பணியாளர்களின் பணிவரையறைகளை முறைப்படுத்தும் வழிகளை அரசு ஏற்படுத்தலாமென்றும் அது தெரிவிக்கிறது.

15. மாநில திட்டக்குழு பிரிவு பின்வரும் பரிந்துரைகளைச் செய்கிறது :– மாவட்டத்தில் குடும்ப நல நடவடிக்கைகள் அனைத்தையும் நிருவகிப்பதற்கான முழுப் பொறுப்புடன் மாவட்ட குடும்ப நல செயலகத்திட்டம் ஒப்படைக்கப் பெற வேண்டும். ஊரகக் குடும்ப நல செயலகம், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள். தாய் சேய் நல நிலையங்கள், சமுதாய நல நிலையங்கள், பேறுகாலத்திற்கு பிந்தைய அறுவை சிகிச்சை நிலையங்கள் ஆகியவை ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் பெற வேண்டும். மாவட்ட நிலையில், மாவட்டக் குடும்ப நலச் செயலகத்தின் அலுவலர்களும், சுகாதாரப் பணியாளர்களும், மாவட்ட ஊராட்சி ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும். இவர்கள், மாவட்ட ஊராட்சிக்குப் பொறுப்புடையவர்கள் ஆவார்கள். பேறு காலத்திற்கு பிந்தைய அறுவை சிகிச்சை மற்றும் குடும்ப நலப்பணிகளை நிருவகிப்பதற்கான அதிகாரங்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவிடம் ஒப்படைக்கப் பெற வேண்டும். இந்நேர்வில், ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஊரகக் குடும்ப நல அலுவலகம் மற்றும் பேறுகாலத்திற்கு பிந்தைய அறுவை சிகிச்சை நிலையங்களிலுள்ள பணியாளர்கள், ஊராட்சி ஒன்றியத்திற்குப் பொறுப்புடையவர்களாகவும் கடமைப்பட்டிருப்பவர்களாகவும் வேண்டும்.

16. பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களை உள்ளாட்சி அமைப்பிற்கு முழுப் பொறுப்பாக்க வேண்டுமென்று மாநிலதிட்டக்குழு பிரிவு கருதுகிறது. இந்நோக்கத்தை அடையும் பொருட்டு, பணியமைப்புக் கொள்கையைக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக உருவாக்க வேண்டும்; மேலும் பஞ்சாயத்துராஜ் அமைப்புக்குத் தனியானதொரு பணி நிலைப் பிரிவிரைத் தோற்றுவிப்பதும் மிகவும் அவசியமாகிறது. ஏற்கனவே அரசுப்பணியாளர்களாக பாதுகாக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்களின் சம்பளம், பணி வரையறைகள் மற்றும் பதவி உயர்வுகள் ஆகியன அரசு விதிகளின் படி முறைப்படுத்தப்படும். மாவட்டத்திலிருந்து கிராம நிலை வரை குடும்ப நல திட்டப் பணியாளரை முழுநேர அரசுப் பணியாளர்களாக்கியதிலிருந்து, இவ்விரு குடியாட்சி நிறுவனங்களும் கடமையாற்றும் பொறுப்புடையதாக்குவதற்கு நிருவாகக் கட்டுபாட்டுக்குரிய அதிகாரங்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மாவட்ட ஊராட்சிகளுக்கும் ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு, மேற்காணும் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு தொடர்புடைய அரசாணைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப் பெற வேண்டும். மேலும், எதிர்காலத்தில் ஏற்படும் அனைத்துக் காலியிடங்களும் நிரப்பப்படுவதற்கு அரசு விதிமுறைகளின் படி, உள்ளாட்சி அமைப்புகளுக்கான குடும்ப நலத்திட்ட பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியங்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவ்வாறாக ஊராட்சி ஒன்றிய நிலையில், (அ) அரசுப் பணியாளர்கள் மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய பணியாளர் என்று குடும்ப நலப் பணியாளர்களில் இரு பணி நிலைப் பிரிவினர் உள்ளனர். இந்த இரட்டை அமைப்பானது, சில காலங்களுக்கு தொடரப்பட்டு, பிற்காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் நலவாழ்வு மற்றும் குடும்ப நல பணியாளர் என்ற ஒரு பணி நிலைப்பிரிவு மட்டும் இருக்கும். இப்பரிந்துரை, அதே முறையில் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களிலுள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கும் இருக்கும்.

17. மாவட்ட நிலையில் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சியின் நிலைக்குழுவும், உள்ளூர் அறிவுரைக் குழுவும் செயல்பட்டு வருகின்ற அனைத்து நடவடிக்கைகளை கூட்டுவிப்பதிலும், ஒருங்கிணைப்பதிலும் முக்கியப் பங்காற்றுகின்றன. ஊராட்சி, மற்றும் மாவட்ட ஊராட்சியில் உள்ள நிலைக்குழு மற்றும் ஆலோசனைக் குழு, அவற்றின் உள்ளூர் அறிவுரைக் குழுவாகவும், சிற்றூராட்சிக்கு, கிராமசபா, ஒரு உள்ளூர் அறிவுரை குழுவாகவும் அமைக்கப்பட்டு செயல்படும். அத்தகைய ஒன்றுக்கொன்றான வலுப்பெருக்கமும், ஒருங்கிணைக்கப் பெற்ற மேலாண்மையும் பொது மக்களின் சுகாதார தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் சிறப்பாகச் செயலாற்ற முடியும்.

நிதிச்சிக்கல்கள்

18. மைய அரசின் ஆதரவுடன் நடத்தப்படும் குடும்ப நலத்திட்டத்தின் கீழ், மாவட்ட குடும்ப நல செயலகம், தாதியர் பயிற்சி, ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள ஊரக குடும்ப நலத்திட்ட மையங்கள், பேறு காலத்திற்கு பிந்தைய அறுவை சிகிச்சை நிலையங்கள், உள்ளாட்சி அமைப்புகளாலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும் நடத்தப்படும் ஊரக குடும்ப நல மையங்கள், கருத்தடை அறுவை சிகிச்சை கருத்தடைச் சாதனங்கள், பேறுகாலத்திற்கு பிந்தைய அறுவை சிகிச்சை பயிற்சி மற்றும் தகவல் கல்வி தொடர்பு நடவடிக்கைகளுக்கான உதவிக்கும் மைய அரசின் உதவியானது வழிவகை செய்கிறது. எனவே இ ம்மையங்களைப் பேணுவதற்கான செலவினம், கருவிகள் மற்றும் ஊர்திகளை அளித்தல், பழுது பார்ப்பு மற்றும் புதுப்பிக்கும் பணிகள் ஆகியவற்றிற்கும் பயிற்சிக்குரிய செலவினங்களை உள்ளாட்சி அமைப்புகளால் ஏற்கப் பெற வேண்டும். மகப்பேறு மையங்களையும் மருந்தகங்களையும் தொடங்கி, பேணுவதற்கு சட்டப்படியான பணிகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களால் பேணப்பட்டு வரும் மகப்பேறு மையங்கள் அரசால் எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும். இருப்பினும், ஊராட்சி ஒன்றியங்கள், பணிப்பெண்களுக்கு வழங்க வேண்டிய சம்பளத்தையும் 3ல் 2 பங்கு நிதியுதவியையும், இந்நோக்கத்திற்காக (ஆண்டு தோறும் ரூ.2.60 கோடிகள்) அரசால் அளிக்கப்படும் மானியம் வாயிலாகச் செலவு செய்து கொள்ளுமாறு வேண்டப் பெறுகின்றன. எஞ்சியுள்ள 3இல் 1 பகுதியின் மீதான அரசுக்குரிய பொறுப்பு ரூ. 1.30 கோடிகளாகும். மகப்பேறு நிலையங்கள், இதர குடும்ப நலத் திட்டங்களின் பேணுகை ஆகியவைகளை உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப் பெற வேண்டும். மகப்பேறு நிலையங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுகையில், செயற்பாடு மற்றும் பேணுகைக்கான நிதி ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிற்கு விட்டுவிடப் பெற வேண்டும்.

சட்டச்சிக்கல்கள்

19. குடும்ப நலம் மற்றும் தாய் சேய் நலம் போன்றவை தொடர்பில் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்காக மேலே உள்ள பத்திகளில் குறிப்பிட்டவாறான பரிந்துரைகளைச் சேர்ப்பதற்கு 1994 ஆம் ஆண்டு தமிழ்நாட்டு ஊராட்சிகள் சட்டத்திற்கு திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

(இனம் - 25)

01. 73–ஆவது / 74–ஆவது அரசியலமைப்பு சட்டத் திருத்தமானது 29 இனங்களிலான அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பஞ்சாயத் ராஜ் நிறுவனங்களிடம் ஒப்படைக்க வகை செய்கிறது. அதில் 25–ஆவது இனமானது பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்குத் தொடர்புடையது. 25–ஆவது இனத்தில் பெண்களின் ஏழ்மை அகற்றும் திட்டங்கள், பெண்கள் நலம், குழந்தைகள் நலம், பெண் தொழிலாளர் நலம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவை இடம் பெறுகின்றன. ஏழ்மை அகற்றும் திட்டமான 16–ஆவது இனத்திலும் பெண்களுக்கான திட்டங்கள் இடம் பெற்றிருப்பதால், அவை இதில் சேர்க்கப்படவில்லை. இந்த இனத்தில் பெண்கள் நலம், குழந்தைகள் நலம், பெண் தொழிலாளர் நலம் மற்றும் ஊட்டச்சத்து பற்றிக் கவனிப்போம்.

அ. குழந்தைகள் நலம்

I. ஊட்டச் சத்து

02. தமிழ்நாட்டில் செயற்படுத்தப்படும் ஊட்டச்சத்து திட்டமானது குழந்தைகள், கருவுற்ற மற்றும் பாலூட்டு பெண்களின் உடல்நிலையையும் ஊட்டச்சத்தினையும் மேம் படுத்தவும், இறந்து பிறக்கும் குழந்தைகள் வீதம் மற்றும் பேறுகால இறப்பு வீதத்தை குறைக்கவும், வயதானவர்களின் ஊட்டச்சத்துக் குறைபாடினைச் சரி செய்யவும் ஏற்படுத்தப்பட்டது. (i) தமிழ்நாடு அரசு ஊட்டச்சத்துணவுத் திட்டம் (ஊச.தி) (ii) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத்திட்டம் (த.ஒ.ஊ.தி) மற்றும் (iii) ஒருங்கிணைந்த குழந்தைகள் முன்னேற்றப் பணிகள் திட்டம் (ஒ.கு.மு.தி) எனும் முப்பெருந் திட்டங்கள் இதில் அடங்கியுள்ளன. இம்மாநிலத்தில் சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி ஆணைக் குழு உதவியுடன் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் எனும் பெயரில் வெளிநாட்டு நிதி உதவித் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டங்களின் கீழ் அமைந்த மையங்கள் மற்றும் சேவை பெற்றவர்கள் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

திட்டம்	மையங்களின் எண்ணிக்கை	குழந்தைகள்	கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்கள்	ஓய்வூதியம் பெறும் முதியோர்	மொத்தம்
I. சத்துணவுத் திட்டம்					
1. குழந்தை நலம் ம.உதி நிலையங்கள்					
அ. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (குநமை)	10085	5.74	1.65	–	7.39
ஆ. தமிழ்நாடு ஒருங் – கிணைந்த சத்துணவுத் திட்டம் (குநமை)	18342	6.55	–	1.08	7.63
இ. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ம.உ.தி நகர்புற (குநமை)	882	0.38	–	–	0.38

திட்டம்	மையங்களின் எண்ணிக்கை	குழந்தைகள்	கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்கள்	ஓய்வூதியம் பெறும் முதியோர்	மொத்தம்
2. பள்ளி ம.உ.தி மையங்கள்					
அ. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ம.உ.தி நிலையங்கள்–ஊரகம்	37438	56.00	–	–	56.00
ஆ. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ம.உ.தி பள்ளி மையங்கள்– நகர்புறம்	2079	4.68	–	–	4.68
மொத்தம் ம.உ.தி	68826	73.35	1.65	1.08	76.09
3. த.நா.ஒ.ஊ.ச.தி–துணை ஊட்டச்சத்து மற்றும் பல பணிகள்	19482	3.58	2.86	–	6.44

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (ஒ.கு.மே.தி)

03. வறுமை பாதிப்புக்குள்ளான குழந்தைகள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு மிக முக்கியமானதொரு கட்டத்தில் ஊட்டசத்துக் குறைபாட்டுப் பிரச்சினையைத் தீர்வு செய்ய ஒருங்கிணைந்த முறையில் தொண்டு செய்வதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் 1975–76இல் அறிமுகப் படுத்தப்பட்டது. இப்போதைய நிலையில், தமிழ்நாட்டில் 2 மலைப்புற மற்றும் நகர்ப்புறத் திட்டங்கள் உள்ளிட்ட 111 திட்டங்கள் உள்ளன. இந்த 111 திட்டங்களில், 47 திட்டங்கள் சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி ஆணைக்குழுமத்தின் (SIDA) உதவியுடன் நிறைவேற்றப்படுகின்றன. கு.ஒ.வ.தி –இன் கீழ் உள்ள செறிவுத் திட்டமானது, கூடுதல் ஊட்டச்சத்து, முன்பருவப் பள்ளிக்கல்வி, உடல் நலப் பரிசோதனை, நோய்த் தடைக்காப்பு, ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வுக் கல்வி, மற்றும் தொடர்புடைய சேவைகளை உள்ளடக்கியதாகும். சிடா–ஒ.கு.வ.தி, 1989–இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது இப்போது செங்கை எம்.ஜி.ஆர், புதுக்கோட்டை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 47 வட்டாரங்களில் செயற்படுகிறது. இத்திட்டமானது ஒ.கு.வ.தி – இன் கீழ் தொண்டாற்றலை மேம்படுத்தவும் கூடுதல் உள்ளீட்டளவு வாயிலாக இதனை உயர்த்தவும் வகை செய்கிறது. சிடா – ஒ.கு.வதி. இன் செயல் திட்டத்தின் முக்கிய ஆக்கக்கூறுகள் பயிற்சி, அங்கன்வாடி நிலையங்களுக்கு மூலப் பொருள்களுக்கு வகை செய்தல், வருவாய் உருவாக்க நடவடிக்கைகள், மேலாண்மைத் தகவல் திட்டம், புதிய கட்டடங்கள் கட்டுமானம், சிறுமியருக்கான திட்டங்கள் முதலியன உள்ளிட்ட நிலையான ஒ.கு.வ.தி செறிவுத் திட்டங்களுக்குத் துணை நிற்பதற்காகும். ஒ.கு.வ.தி மற்றும் சிடா – ஒ.கு.வ.தி – இன் கீழ் 6 திங்கள் முதல் 6 வயதுக்குட்பட்ட 6 இலட்சம் குழந்தைகளும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் 1.5 இலட்சம் பெண்களும் பயன்பெற்றுள்ளனர்.

2. ஊட்டச்சத்து மதிய உணவுத் திட்டம் (மஉதி)

04. ம.உ.தி மூன்று ஆக்கக் கூறுகளைக் கொண்டது. முதலாவது ஆக்கக் கூறானது, 2 முதல் 4 வரையுள்ள வயதுடைய குழந்தைகளின் முன் பருவபள்ளிக்கல்வியை உள்ளடக்கியது. இது, குழந்தைகளின்

ஊட்டச்சத்து, கல்வி மற்றும் உடல்நலம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. 29,309 எண்ணிக்கையிலுள்ள பள்ளி பருவத்திற்கு முந்திய குழந்தைகள் நிலையங்கள் (ஒ.கு.வ.தி மற்றும் த.நா.ஒ.ஊ.தி) கீழ் 12.67 இலட்சம் குழந்தைகளைப் பயனடையச் செய்துள்ளன. இரண்டாவது ஆக்கக்கூறானது, பள்ளிகளிலுள்ள 39517 நிலையங்கள் வாயிலாக ஒன்று முதல் பத்தாவது வகுப்பு வரையில் படிக்கும் 5 முதல் 14 வயதுவரையிலுள்ள 60.68 இலட்சம் குழந்தைகளைப் பயனடையச் செய்துள்ளது. மூன்றாவது ஆக்கக்கூறானது, 1.08 இலட்சம் முதியோர் ஓய்வூதியர், முன்னாள் படைவீரர் மற்றும் தமிழ்நாடு அரசிடமிருந்து முதியோர் ஓய்வூதியம் பெறத்தக்கவர்களுக்குப் பயனளிக்கக் கூடியதாக உள்ளது. மற்ற பிற திட்டங்கள், பள்ளிப்பருவத்திற்கு முந்திய / பள்ளிக் குழந்தைகளுக்கு இருவாரத்திற்கொருமுறை முட்டைகள் வழங்குவதையும், முட்டை உட்கொள்ளாத குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவதையும் உள்ளடக்கியன வாகும்.

3. தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் (த.நா.ஒ.ச.தி II)

05. உலக வங்கியின் உதவியுடன் கூடிய த.நா.ஒ.ச.தி கிராம அளவில் 6 வயதுள்ள குழந்தைகளையும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்களையும் கவனித்துக் கொள்வதன் மூலம் தாய்சேய் ஊட்டம், சுகாதாரம் மற்றும் பள்ளி முன்பருவக் கல்வி அளிக்கும் பணியை நிறைவேற்றிவருகிறது. இத்திட்டம் 1990–இல் தொடங்கப்பட்டது. இது 1997 டிசம்பர் திங்கள் வரை தொடருவதுடன், 25 சுகாதார மாவட்டங்களிலுள்ள 318 வட்டாரங்களுக்கு 5 படி நிலைகளில் பயனளிக்கும். குழந்தைகள் வாழ்வு, சுகாதாரம் மற்றும் வளர்ச்சி, கடுமையான மற்றும் மிதமான ஊட்டக்குறைவு நிகழ்வைத் தடுத்தல், குறிப்பிட்ட தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல், குறிப்பிட்ட ஊட்டக்குறைவு நோய்த் தடுப்பு மருத்துவத்திற்கு வகை செய்தல், 3 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்குப் பயனுள்ள முன்பருவக் கல்வித் திட்டம், தாய்மார்களின் பேறுகாலத்திற்கு முந்திய, பேறுகாலத்திய, பேறு காலத்திற்குப் பிந்திய பேணுகை, நலவாழ்வு மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, தொடக்கத்திலிருந்து சமுதாயப் பங்கேற்பு, மனித ஆற்றலுக்கு வகை செய்தல் முதலியவற்றை இத்திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் 19482 சமுதாயச் சத்துணவு மையங்களின் வாயிலாக, 0–36 திங்கள் வயதுள்ள 3.58 இலட்சம் குழந்தைகளையும், 2.86 இலட்சம் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களையும் பயனடையச் செய்துள்ளது. ம.உ.தி–இன் கீழ் இயங்கும் பள்ளிப்பருவத்திற்கு முந்திய வயதுள்ள குழந்தைகளுக்கான 18342 குழந்தைகள் நல நிலையங்கள், 3–6 வயதுள்ள 6.55 இலட்சம் குழந்தைகளுக்கும் 1.08 இலட்சம் ஓய்வுதியம் பெறும் முதியோர்களுக்கும் பயனளிக்கும் திட்டத்தின் எல்லைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

4. இந்திய அரசின் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டம்.

06. மைய அரசு உதவியுடன் நடைபெறும் இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களிலுள்ள குறிப்பிட்ட 89 வட்டாரங்களில் உள்ள தொடக்கக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிப்பதற்காக, மைய அரசு இலவசமாக அரிசி வழங்குகிறது. இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் படிப்படியான முறையில் விரிவு படுத்தப்படும். 1996–97 இல் 16 மாவட்டங்களில் 96 வட்டாரங்கள் செயலெல்லைக்குட்படுத்தப்படும். அரிசி ஒதுக்கீடானது, 10 திட்டங்களுக்கு, 2.79 இலட்சம் குவிண்டால் அளவுக்கு இருக்கும்.

5. கருவுற்ற பெண்களுக்கு உணவளித்தல்.

07. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டிஅம்மையார் நினைவு உதவித் திட்டத்தின் கீழ் ரூ.300/-ஐ (இப்போது ரூ.500) உதவித் தொகையாகப் பெறும் கருவுற்ற பெண்கள், 6.12.95 முதல் 4 திங்கள் காலஅளவுக்கு சத்துணவு மையங்களில் நாள்தோறும் இலவச மதிய உணவு பெறத்தகுதியுடையவராவர். இத்திட்டத்தின் கீழ் சற்றொப்ப 2 இலட்சம் கருவுற்ற பெண்கள் பயனடைகின்றனர்.

பசிப்பிணி போக்கும் திட்டம்

08. ஏழ்மையால் ஏற்படும் பசிக்கொடுமையை ஒழிக்கும் நோக்குடன் பசிப்பிணி போக்கும் திட்டம் ஒன்றினை அரசு புதிதாக மேற்கொண்டுள்ளது. 1996–97 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் முதற்கட்டமாக, ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் 7 வட்டாரங்களைத் தெரிந்தெடுத்து, அவற்றில் ஏழ்மை அகற்றும் திட்டம் பற்றி விரிவாகப் பகுப்பாய்வு செய்யும் பணியினை 7 கல்வி நிலையங்கள்/பல்கலைக்கழகங்கள் மேற் கொண்டுள்ளன. ஏழ்மைக் குறியீடுகள், நிலம், கால்நடை, மற்ற சொத்துக்கள் இல்லாத குடும்பங்கள், கல்வியறிவற்ற பெண்கள், சிசு மரண வீதம் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

II ஏனைய குழந்தை நலத் திட்டங்கள்

09. சமூக நலத் துறையின் கீழ் குழந்தைகள் நலத்திற்காகச் செயற்படுத்தப்பட்டுள்ள இத்திட்டங்கள், அனாதை இல்லங்கள், பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகம், கவனிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்கான குடில்கள் ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பெண்சிசுக் கொலைத் தடுப்பு மற்றும் ஒழிப்பு மற்றும் பெண் குழந்தை நலம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். நிலையங்கள் மற்றும் அதில் சேவை பெற்றவர்கள் விவரம் வருமாறு :

நிலையங்கள்	எண்ணிக்கை	சேவை பெற்றோர்
அனாதை இல்லங்கள்	25	5650
குழந்தை காப்பகங்கள் (ச.ந. துறையால்)	117	2340
குழந்தைகள் காப்பகங்கள்		
(ச.ந. வாரியத்தால்)	789	
	906	
	905	
குடில்கள்	176	4400
பெண் குழந்தை நலம்		8000

ஆ. பெண்கள் நலம்

10. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களின், விதவைகளின், ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட பெண்களின் மறுவாழ்வுக்கான பொருளாதார மற்றும் நலத் திட்டங்கள் பின்வரும் அமைப்புகளின் வாயிலாக நிறைவேற்றப்படுகின்றன.

நிலையங்கள்	எண்ணிக்கை	சேவை பெற்றோர்
கூட்டுறவுச் சங்கங்கள்	177	31920
பயிற்சி மையங்கள்	49	775
உற்பத்தி மையங்கள்	6	
சேவை இல்லங்கள்	6	
தொண்டு முகமைகளால் நடத்தப்படும்		
சேவை இல்லங்கள்	3	200
ஆசிரியர் பயிற்சி நிறுவனம்	1	60
பணிபுரியும் பெண்கள் விடுதிகள்	7	390
மகளிர் மன்றங்கள்	11520	

11. மேற்குறிப்பிடப்பட்டவற்றுடன், திருமணம், படிப்பைத் தொடருதல், தன்வேலை வாய்ப்பு முயற்சிகள் முதலியவற்றில் ஏற்படும் சிக்கலான சூழ்நிலைகளில் நிதியுதவி அளிக்கும் பல்வேறு திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றது. இத்திட்டங்களின் கீழ் பயன்பெறும் பெண்களின் விவரம் வருமாறு :

	திட்டம்	பயன்பெற்ற பெண்கள்
1.	வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பெண்களுக்கான நிதியுதவி	10000
2.	வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கருவுற்ற பெண்களுக்கான பண உதவி	29100
3.	விதவை மறுமணம்	196
4.	அனாதைப் பெண்களுக்குத் திருமண உதவித்தொகை	65
5.	ஏழை விதவைகளின் மகள்களுக்குத் திருமண உதவித்தொகை	1050
6.	கலப்புத் திருமண உதவித்தொகை	554
7.	ஆதரவற்ற பெண்களுக்கு / விதவைகளுக்கு இலவசமாகத் தையல் பொறிகள் வழங்குதல்	1000
8.	ஏழை விதவைகளின் பள்ளிக் குழந்தைகளுக்கு பாட புத்தகங்களும் நோட்டுப் புத்தங்கங்களும் இலவசமாக வழங்குதல்	4000

12. தமிழ்நாட்டிலுள்ள மகளிரை மேம்படுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகமானது, அது தொடங்கப்பட்ட 1983–ஆம் ஆண்டிலிருந்து, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 70342 பெண்களுக்கு உதவி செய்துள்ளது. உலக நிதியிலிருந்து வேளாண்மைக்காக நிதியுதவி பெற்று, 1989–ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இது பெண்கள் குழுக்களை அமைப்பதன் வாயிலாக வேளாண்மை, தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, எண்ணெய் வித்துக்கள், கால்நடைப் பராமரிப்பு அல்லது குடிசை மற்றும் ஊரகத் தொழில்கள் முதலிய வருவாய் உருவாக்க நடவடிக்கைகளில் உதவியளிக்கப்பட்ட தருமபுரி, சேலம், தென்னார்க்காடு, விழுப்புரம், மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களைச் சார்ந்த 55503 பெண்களுக்குப் பயனளித்துள்ளது. இத்திட்டத்தை, மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது. இது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக மகளிர் மற்றும் குழந்தை வளர்ச்சித் திட்டம், பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், சிறப்பு உள்ளடக்கத் திட்டம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம் முதலியவற்றுடன் ஒருங்கிணைக்கப்படும். இக்கழகத்தால் நடத்தப்பட்ட வாழ்க்கைத் தொழில் பயிற்சித் திட்டத்தால் 1992–93 ஆம் ஆண்டில் 335 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

13. 1981–ஆம் ஆண்டில் 63.43 இலட்சமாக இருந்த பெண் பணியாளர்களின் எண்ணிக்கையானது (மொத்த பணியாளர்களில் 26.52%), 1991இல் 82.37 இலட்சமாக (29.89%) உயர்ந்துள்ளது. இதே கால அளவில், கூட்டிணைவுத் துறையில் நியமிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கையானது, 32.47 இலட்சத்திலிருந்து 50.19 இலட்சமாக உயர்ந்துள்ளது.

மாநில அரசின் நிதியுதவி

14. பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விவரம் வருமாறு :

		1994–95 உள்ளபடியான செலவு	1995–96 திருத்தப்பட்ட மதிப்பீடு	1996–97 திருத்தப்பட்ட வ. செ. மதிப்பீடு
		(ரூ. இலட்சத்தில்)		
1.	சத்துணவு	36028.02	38214.44	39548.34
	(அ) த.நா.ஒ.தி II	163.81	1051.33	1690.62
	(ஆ) ஒ.கு.வ.தி	1819.82	2034.62	2108.40
	(இ) பிற சிறப்பு சத்துணவு திட்டம்	83.98	–	–
	(ஈ) மதிய உணவு	27981.38	28816.00	29290.83
2.	குழந்தைகள் நலம்	509.36	434.57	458.66
3.	பெண்கள் நலம்	2444.15	2594.59	4912.17

சாதனைகளும், குறைபாடுகளும்

15. கடந்த காலச் சாதனைகளைக் கணக்கில் கொள்கையில், தமிழ்நாட்டில் 1981–இல் 91/1000 ஆக இருந்த இளங்குழந்தை இறப்பு வீதமானது, 1991–இல் 57/1000 ஆகவும். இதே கால அளவில், பிறப்புக்குப் பிந்திய இறப்பு வீதமானது, 29/1000- இலிருந்து 14/1000 ஆகவும் குறைந்துள்ளது. தேசிய ஊட்டச்சத்து கண்காணிப்பு அலுவலகப் புள்ளி விவரமானது 1975–76 ஆம் ஆண்டில் 12.6% ஆக இருந்த ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கிடையேயான ஊட்டக் குறைவு, 1988–90 இல் 42% ஆகக் குறைந்ததுடன். இதே கால அளவில், இயல்பான ஊட்ட அளவுடன் கூடிய குழந்தைகளின் விழுக்காடு, 6.2–இலிருந்து 8.0 ஆக உயர்ந்துள்ள தென்பதையும் காட்டுகிறது. குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைவு நோய் குறைவையும் போக்கி உள்ளது. குறிப்பாக, 1975–76 இல் 2.9%, ஆக இருந்த கண்களில் வெண்புள்ளிகள் விழும் போக்கானது, 1988–90 இல் 0.6% ஆகக் குறைந்துள்ளது. இதே கால அளவில், உடல் மெலியும் (நோஞ்சான்) போக்கானது 0.6% இலிருந்து 0.2% ஆகக் குறைந்துள்ளது. மொத்த சாதனையளவானது, குறிப்பிடத்தக்க அளவில் இருந்தாலும். போதிய அளவில் கவனிக்கப்பட வேண்டிய சில பகுதிகளும் உள்ளன. கடந்த நான்காண்டுகளில், அதாவது, 1991–ஆம் ஆண்டிலிருந்து. தமிழ்நாட்டில் இளங்குழந்தை இறப்பு வீதமானது ஏறத்தாழ 58/1000 எனும் நிலையிலேயே நீடிக்கிறது. மாவட்ட வாரியான புள்ளிவிவரப்படி ஊரகப் பகுதிகளில் இளங்குழந்தை இறப்பு வீதமானது பின்வருமாறு வேறுபடுகிறது. தருமபுரியில் உயர் அளவாக, 1000 பிறந்த குழந்தைகளில் 98.1 %, சேலத்தில் 80.1%, இராமநாதபுரத்தில் 78.1% , ஊரகப் பேறுகால இறப்பு வீதமானது, 1995–இல் தமிழ்நாட்டில் 1.9 / 1000 ஆக இருந்தாலும், நீலகிரியில் உயர் அளவாக 4.5 ஆகவும், அதற்கடுத்தபடியாக பெரம்பலூரில் 3.6 ஆகவும், பசும்பொன் மற்றும் திருச்சியில் 3.3 ஆகவும் உள்ளது. ஊரகப் பகுதியில் இறந்து பிறந்த குழந்தைகளின் வீதமானது 1000 பிள்ளைப்பேற்றில் 18.9 ஆகும். ஊரகப் பகுதியில் குழந்தை இறப்பு வீதம், மற்றும் பேறுகால இறப்பு வீதம் –இன் உயர்வீதமானது குழந்தை பிறந்த ஒரு மாதத்திற்குள் நிகழும் இறப்பின் காரணமாக ஏற்பட்டதாகும்.

16. 0–5 வயதுள்ள குழந்தைகளில் 40% மற்றும் கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்களில் 70% ஊட்டக்குறைவு ரத்த சோகை நோயினால் அவதியுறுகின்றனர் என்பதை அறிக்கைகள் தெளிவுபடுத்துகின்றன. 1992–ஆம் ஆண்டை தேசிய குடும்ப நல மதிப்பீடானது நான்கு வயதுக் குழந்தைகளில் 47% குழந்தைகள் அவர்களுடைய வயதுக்குக் குறைவான எடையுடனும் 13% குழந்தைகள் மிகக் குறைவான எடையுடனும் உள்ளனர் எனக் குறிப்பிடுகிறது. குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் மொத்த விழுக்காடானது 25.30% எனும் நிலையிலேயே நீடிக்கிறது. நுண்ஊட்ட சத்துக்குறைவுப் பிரச்சினையாது இப்போதும் தொடர்வது உணரப்படுகிறது. தமிழ்நாட்டில் "ஏ" உயிர்ச் சத்துக் குறைவானது, பள்ளிப்பருவத்திய ஒரு விழுக்காடு குழந்தைகளையும், 5–12 வயதுள்ள 2.7% குழந்தைகளையும் நோய் வாய்ப்படுத்துகிறது.

எதிர்கால முனைப்புப் பகுதிகள்

17. குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் உரிய திட்டங்கள் பிரிக்கப்படக் கூடியதல்லாததால், குழந்தைகள் நலம், பெண்கள் நலம் ஆகியவற்றில் பெருமளவு பயன்களைப் பெற இரண்டையும் ஒருங்கிணைத்து திறமிகு பிள்ளைப்பேறு முறையுடன் கூடிய சமநிலைச் செறிவுத் திட்டம் ஒன்று இன்றியமையாததாகிறது. பெண்சிசக் கொலையை வேருடன் அழிக்கவும் செறிவுத் திட்டம் ஒன்றினை உருவாக்கவும் விடாமுயற்சியுடன் கூடிய முனைப்பு தேவை. காப்பகங்கள், அனாதை இல்லங்கள், பணிபுரியும் பெண்கள் விடுதிகள் மற்றும் பிற நிலையங்கள் தேவைப்படும் அடிப்படையில் இருக்க வேண்டும். சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பு நடவடிக்கைகள், குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புடன் இணைக்கப்பட வேண்டும். வருவாய் பெருக்க நடவடிக்கைகள், தன்வேலைவாய்ப்பு முயற்சி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி, தொழில் முனைவோருக்கான தங்கள் திறமையை மேம்படுத்திக் கொள்ளல், பயிற்சித் திறமைகளை உயர்த்திக் கொள்ளுதல், தங்களுடைய உரிமைகள் பற்றியும் பெண்கள் நிலைபற்றிய மன மாற்றங்களைப் பற்றியும் விழிப்பு நிலையை அதிகரித்துக் கொள்ளல் ஆகியவற்றுக்கான அரிய வாய்ப்புகள் பெண்களுக்குத் தேவை. குறைந்த வருவாயுடைய மற்றும் ஏழ்மைக் குடும்பங்களைச் சார்ந்த கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள், பெண்கள் ஆகியோருக்கு இப்போதுள்ள திட்டங்களைத் தேவையான அளவுக்குப் பயனுடையதாகவும், கைக்கொள்ளக் கூடியதாகவும் செய்து, மறுவாழ்வுப் பணிகளின் தரத்தை மேம்படுத்த வலியுறுத்தல், இன்றியமையாததாகும். இம்மாநிலமானது மகளிர் மன்றங்கள் மற்றும் மதிய உணவு மையங்கள் போன்ற நன்கு நிலை நாட்டப்பட்ட உள்ளமைப்புகளை உடையது. இவற்றைப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் தேவைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஆற்றலும் நம்பிக்கையும் கொண்ட நடவடிக்கைகளில் ஈடுபடச்செய்தல் என்ற அளவில் ஊரக நிலையில் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதில் விரைந்த மற்றும் உறுதியான பங்குவகிக்க மறுகட்டமைப்பு செய்யப்பட்டு வலிவூட்டப்பட வேண்டும். அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மகளிர் குழுக்கள் திட்டச் செயற்பாட்டில் முனைப்புடன் ஈடுபடுவதோடன்றியும் செயலாக்கத் திட்டங்களை உருவாக்குவதிலும் பங்கேற்க வேண்டும்.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்

18. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், மகளிர் மற்றும் குழந்தை மேம்பாடு தொடர்பில், 3 படி நிலை பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் செயற்பாடுகள் சிலவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது.

(அ) ஊராட்சி ஒன்றியக் குழு, தன் நிதியின் வரம்புக்குள், தாய் சேய் நல மையங்களை நிறுவிப் பேணவும் செவிலித் தாய் பணியைப் பேணவும் தகுந்த ஒதுக்கீட்டினைச் கொள்ளலாம். (பிரிவு 112)

(ஆ) அரசால் அல்லது எதாவதொரு சட்டமுறையிலான அமைப்பால் அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்குள் பிறமுகமையால் நிறைவேற்றப்படும் திட்டங்கள், செயல் திட்டங்கள், பிற நடவடிக்கைகள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியக் குழு மறு ஆய்வு செய்யலாம்.

(இ) பொது மருந்தகங்கள், குழந்தை நல மையங்கள் மற்றும் அதைப் போன்ற பிற வகையான நிறுவனங்களை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் நிறுவிப் பேணலாம். (பிரிவு 118)

(ஈ) மாவட்ட ஊராட்சியும் ஊராட்சி ஒன்றியக் குழுவும், ஏதாவதொரு நிறுவனத்தின் மேலாண்மையை அல்லது நிறைவேற்றுவதற்குரிய அல்லது பேணுவதற்குரிய எதாவதொரு பணியை அல்லது நடைமுறைப்படுத்து வதற்குரிய எதாவதொரு அதிகாரத்தை அல்லது கிராமத்திற்குள் அல்லது வெளியே நிறைவேற்றுவதற்குரிய அரவலை ஊராட்சிக்கு அதன் இசைவுடன் மாற்றலாம். (பிரிவு 119(2))

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகார ஒப்படைப்பு

19. சமூகத்தில் நலிந்த பிரிவினர் ஊட்டமளிக்கக்கூடிய தேவைகளை நிறைவேற்றுதல், குழந்தைகளின் உடல் மற்றும்மன ஆற்றலை மேம்படுத்துதல், தங்களின் சொந்த மேம்பாட்டிலும், தங்களின் சமூகப் பொருளாதார தகுநிலையை உயர்த்துவதிலும் பங்கேற்க பெண்களுக்கு உரிமையளித்தல் ஆகியவற்றிக்கான இலக்கிற்கு திட்டங்களைச் செயற்படுத்துவதற்குப் திறனார்ந்த பயனுள்ள ஒப்படைப்பு முறை தேவைப்படுவதால், இச்சூழலில், பன்முகப்படுத்தப்பட்ட திட்டமிடல் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

20. மேலே குறிப்பிட பெற்ற பின்னணியில் மகளிர் மற்றும் குழந்தை நலம் திட்டங்கள் வாயிலாகவும் நிறுவனங்கள் வாயிலாகவும் ஆற்றியுள்ள சேவைகள் மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள வழிவகைகள் வெளிப்படுத்தப் பட்டவற்றாலும் தாய் சேய் நலக் காப்புக்கு ஆதரவான பிற சட்டங்கள் அடிப்படையிலும் (அ) ஊட்டச்சத்து, குழந்தை நலம் மற்றும் மகளிர் நலம் ஆகியவற்றின் மீதான திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்துதலை உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கப் படவேண்டும். தொழில் நுட்ப வழிகாட்டல் அளித்தல் துறையின் பங்காக இருக்க வேண்டும்; (ஆ) திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்; (இ) ஊரகப் பொறுப்பாளர்களின் பணிவரையறைகள் அரசு விதிகளின்படி காக்கப் பெறவேண்டும். ஆனால் அவர்கள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டின் கீழ் அவைகளுக்குப் பதில் சொல்லும் பொறுப்புடையவராகச் செயற்பட வேண்டும் என்று மாநிலத்திட்டக் குழு பிரிவு பரிந்துரை செய்கிறது. 3 படி நிலை அமைப்புகளுக்கு ஒப்படைப்பதற்காகப் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளின் பங்கீடு கீழே சுருக்கமாக அளிக்கப் பட்டுள்ளன.

I ஊராட்சி

நடவடிக்கை (1)		அதிகார ஒப்படைப்பு (2)
1. ஊட்டச்சத்து ஒப்படைப்புப் பணிகள்	(i)	ஊட்டச்சத்துக் குறைவினால்ஏற்படும் சோகை, நுண்ணுயிர் ஊட்டத்துக்குறைவு, முன் கழுத்து கழலை போன்ற ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள பெண்கள், மகளிர், சிறுவர்களைக் கண்டறிவதற்கு ஊட்டச் சத்துப் பணியாளர்களுக்கு உதவுதல்.
	(ii)	பல்வேறு ஊட்டச்சத்து திட்டங்களுக்குப் பயனாளர்களைத் தெரிவு செய்ய உதவுதல்.
	(iii)	மாநில அரசின் நிதி ஆதவுடன் மையங் களை நடத்திப் பேணுதல்
	(iv)	மதிய உணவு மையங்களுக்கு காய்கறி களையும் பிற பொருள்களையும் வழங்கு வதற்காக உள்ளூர் சமுதாய ஆதரவை ஊக்குவித்தல்.
	(v)	ஒவ்வொரு ஊட்டச்சத்து மதிய உணவுத் திட்ட மையத்திற்கும் வட்டாரக் குழுவை அமைத்து மதிய உணவு மையங்களின் மேம்பாட்டு நடவடிக்கைகளில் மகளிர் மற்றும் பெற்றோர்கள் குழுக்களைப் பங்கேற்க ஈடுபடச் செய்யல்.
	(vi)	குழந்தையின் வளர்ச்சியைக் கண்காணித்தல். பெண்களின் பேறுகாலத்திற்கு முந்தைய/பிந்தைய காப்பு, மிகவும் எடை குறைவாகப் பிறந்த குழந்தைகளின் காப்பு, கடுமையாகவும் மிதமாகவும் சத்துக்குறைவால், பாதிக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பிலான நடவடிக்கைகளில் ஊட்டச்சத்து பணியாளர்களுக்கு உதவுவதற்கு ஊராட்சியின் பெண் உறுப்பினர்களை ஈடுபடச் செய்தல்.
2. ஊட்டச்சத்துத் திட்டத்தின் துணை மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள்	(i)	தன்னார்வ நிறுவனங்களின் ஆதரவைத்திரட்டுதல், மகளிர் பிரிவுகளையும் தாய்மார்களுக்கான குழுக்களையும் அமைத்தல், முறையானகூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து. திட்ட நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல் ஆகியவற்றில் ஊராட்சியின் பெண் உறுப்பினர்களையும் ஈடுபடுத்துதல்.

(1)		(2)	
		(ii)	பொதுவாக மக்கள் தொகையின் குறிப்பாக மகளிர் மற்றும் குழந்தைகளின் ஊட்டச் சத்து தகுநிலை மீதான புள்ளி விவரங்களைத் திரட்டுவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் ஊட்டச்சத்துப் பணியாளர் களுக்கு உதவுதல்.
3.	குழந்தை நல மையங்கள் மற்றும் பிற மதிய உணவு மையங்களை நிறுவி நடத்துதலும் பேணுதலும்	(i)	அங்கன் வாடி சமுதாய சுதாதார மையங்களுக்கும் மதிய உணவுத் திட்ட மையங்களுக்கும் மனைகளைத் தெரிவு செய்வதில் உதவுதல்.
		(ii)	பண்ட அறைகள், குடிநீர் வசதி கழிப்பிட வசதிகள் விளையாட்டுத் திடல்கள் மற்றும் வீட்டுப்பயன்பாட்டுக் காய்கறித் தோட்டங்கள் ஆகியவற்றுடன் கூடிய முறையான கட்டடங்களைக் கட்டுவதற்கு சமுதாய ஆதரவைத் திரட்டுதல்.
		(iii)	இம் மையங்களின் இயக்கத்தையும் பேணலையும் மேற்பார்வையிடுவதில் சிற்றூராட்சியின் பெண் உறுப்பினர்களை ஈடுபடச் செய்தல்
4.	ஊட்டச்சத்தும் நலவாழ்வுக் கல்வியும்	(i)	உரிய திட்ட உணவுப் பழக்கங்களைப் பொது மக்கள் அறிவதற்காகத் தகவல் களை பரப்புதல்.
		(ii)	பின்வருவனவற்றின் மீதான ஆலோசனை நடவடிக்கைகளில் தன்னார்வ நிறுவனங் களின் மற்றும் மகளிர் பிரிவுகளின் ஆதரவைத் திரட்டல்.
		(அ)	இளஞ்சிறாருக்கு உணவூட்டும் பயிற்சிகள்
		(ஆ)	குழந்தைக்கான இடைவெளியும் சிறு குடும்ப நிலையும்
		(இ)	தாய்ப்பால் அளித்தல்
		(ஈ)	இளம் பெண்களுக்கு ஊட்டச்சத்துச் தேவைகள்
5.	குழந்தை நலம்	(i)	கவனமும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளைக் கண்டறிய உதவுதல்.
		(ii)	பணிபுரியும் இடத்திற்கு அருகில் குழந்தை காப்பகங்களையும் பகலில் பாதுகாக்கும் மையங்களை அமைப்பதிலும் அனாதை விடுதிகளை அமைப்பதிலும் உதவுதல்.
		(iii)	பெண் சிசுக் கொலைக்கானக் காரணங் களை அறிவதிலும் அதனை அழிப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளிலும் சமூக நலப் பணித் துறைப் பணியாளருக்கு உதவுதல்.
		(iv)	குழந்தை நல நடவடிக்கைகளில் அரசுச் சார்பற்ற அமைப்புகள், மகளிர் மன்றங்கள் மற்றும் பிற மகளிர் பிரிவுகள் ஆகியன பங்கேற்பதற்கு உதவுதலும் ஈடுபடச் செய்தலும்.
		(v)	குழந்தைத் தொழிலாளரைக் கண்டறி வதற்கும் அம்முறையை நீக்குவதற்கும் அரசு முகமைகளுக்கம் அரசுச் சார்பற்ற அமைப்புகளுக்கும் உதவுதல்.

(1)		(2)
6. மகளிர் நலம், மகளிர் சமூக பொருளாதார மேம்பாடு	(i)	மகளிர் நலத்திற்குக் கிடைக்கக் கூடிய அரசு திட்டங்களைப் பற்றிய தகவல்களைப் பரப்புதல்.
	(ii)	நிதி மற்றும் தொழில் நுட்ப உதவி பெறக்கூடிய பெண் பயனாளர்களைக் கண்டறிவதுடன் அவர்களைத் தெரிவு செய்வதில் சமூக நலத் துறைப் பணியளா ருக்கு உதவுதல்.
	(iii)	பெண்களிடையே சுய உதவிப் பிரிவு களையும், சேமிப்புச் சங்கங்களையும் உருவாக்குவதில் உதவுதல்.
	(iv)	சமுதாய ஆதரவையும் சீதனம் மற்றும் பெண்களுக்கெதிரான கொடுமைகள் போன்ற சமூகக் கேடுகளை ஒழிப்பதற்கு அரசு சாரா அமைப்புகளின் ஆதரவையும் திரட்டுதல். மற்றும்.
	(v)	பல்வேறு நலம் மற்றும் மகளிருக்கான பொருளாதார நடவடிக்கைகளிலும் பங்கேற்பதற்கு மகளிர் மன்றங் களை ஈடுபடுத்தி அவைகளைச் செயல்திற முடையவைகளாக்குதல்

II ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை (1)		அதிகார ஒப்படைப்பு (2)
1. ஊட்டச்சத்து ஒப்படைப்புப் பணிகள்	(i)	ஊட்டச் சத்துக் குறைபாடுகளுடன் உள்ள குழந்தைகளையும் மகளிரையும் கண்டறி வதிலும் பயனாளர்களைத் தெரிவு செய்வதிலும் ஊராட்சிக்கு உதவுதல்.
	(ii)	மதிய உணவு மையங்களை இயக்கிப் பேணும் செயல்பாடுகளில் ஊராட்சிகளின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடல்.
2. ஊட்டச்சத்துத் திட்டங்களின் துணை மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள்	(i)	ஊராட்சியிடமிருந்து விவரங்களைத்திரட்டி ஆவணங்களை மாவட்ட ஊராட்சிக்குஅனுப்புதல் பொதுவாக மக்கள் தொகையின் குறிப்பாக மகளிர் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து தகு நிலையின் மீதான மதிப்பீட்டறிக்கை களைத் திரட்டுதல்.
	(ii)	மாநில மைய அரசுகளின் நிதியுதவி பெறும் ஊட்டச்சத்து திட்டங்களின் செயலாக்கத்தை மறு ஆய்வு செய்தல்.
	(iii)	திட்டங்களின் அனைத்துச் செயற்பாடுகளில் அரசல்லாத அமைப்புகளையும் மகளிர் பிரிவுகளையும் ஈடுபடுத்துதல்
	(iv)	ஊராட்சியின் செயற்பாடுகளான குழந்தை காப்பு. முன் பருவக் கல்வி நடவடிக்கைகள் மற்றும் மையங்களிலுள்ள குழந்தைகளின் பிற கல்வித் தேவைகள் ஆகியவற்றில் உதவுதல்.
3. குழந்தை நல மையங்களையும் மதிய உணவு மையங்களையும் நிறுவி இயக்குதலும், பேணுதலும்	(i)	மையங்களுக்கான கட்டிடங்களைக் கட்டுவதிலும் உள்ளமைப்பு வசதிகளை அளிப்பதிலும் உதவுதல்.

(1)		(2)	
		(ii)	குடிநீர் வழங்கலுக்கு வகை செய்தல் மற்றும் மையங்களிலுள்ள பிற வசதிகளை மேற்பார்வையிடல்.
		(iii)	ஊராட்சிகளால் குழந்தை மற்றும் மதிய உணவு திட்டமையங்களை நிறுவுவதற்குத் தொழில்நுட்ப உதவி மற்றும் நிதியுதவி வழங்குதல்.
4.	ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வுக் கல்வி	(i)	மக்கள் செய்தி வாயில்கள் போன்ற தகவல் தெரிவிக்கும் சாதனங்களைப் பயன் படுத்தியும், பாடல்கள், சுவரொட்டிகள் மற்றும் நாட்டுப்புறத் தகவல் அமைப்புகள், புகழ்பெற்ற கலைகள் குறித்த வெளியீடுகளை துண்டு தயாரித்து வழங்குதல், நல்வாழ்வு மற்றும் ஊட்டச்சத்துப் பணியாளர்களுடனும் மருத்துவத் தொழிலுக்குரியவர்களுடனும் நேருக்கு நேர் தகவல் தொடர்புகள் வைத்திருத்தல் களாலும் செய்திகளைப் பரப்புதலில் ஊராட்சி உதவுதல்.
		(ii)	காலமுறையான இயக்கங்களுக்கு ஏற்பாடு செய்துவதுடன் ஊட்டச்சத்து மற்றும் நலவாழ்வுக் கல்வி தொடர்பிலானவற்றைத் தெரிவிக்க மருத்துவமனைகள், கல்வி நிலையங்களை ஈடுபடச் செய்தல்.
5.	குழந்தை நலம்	(i)	குழந்தைத் தொழிலாளர், பெண் சிசுக் கொலை, குழந்தைகளுக்குத் தேவைப் படும் கவனமும் பாதுகாப்பும் போன்ற புள்ளிவிவர ஆவணத்தை தொகுத்தல்.
		(ii)	பின்வருவனவற்றில் ஊராட்சிக்கும் அரசு சாரா அமைப்புகளுக்கும் உதவுதல் :
		(அ)	குழந்தைக் காப்பகங்கள், பகல் நேரக் கவனிப்பு மையங்கள் மற்றும் அனாதை விடுதிகள் ஆகியவற்றை அமைத்தல்
		(ஆ)	கைவிடப்பட்டக் குழந்தைகளுக்கான மையங்களை அமைத்தல்.
		(iii)	குழந்தை நலத்திற்கான நிறுவனங்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடல்.
6.	மகளிர் நலம் : மகளிர் சமூகப் பொருளாதார மேம்பாடு	(i)	மகளிர் நலத்திற்குக் கிடைக்கக்கூடிய அரசுத்திட்டங்கள் பற்றிய தகவலைப் பரப்புவதில் ஊராட்சிக்கு உதவுதல்.
		(ii)	நிதி மற்றும் தொழில்நுட்ப உதவித் திட்டங்களுக்கானப் பெண் பயனாளர் களைத் தெரிவு செய்யப் பெறுவதைக் கண்காணித்தல்.
		(iii)	மகளிருக்கான வருவாயைப் பெருக்கும் நடவடிக்கைகளைக் கண்டறிவதிலும் பயிற்சிக்கும், தேவையான ஆதரவுக்கும் ஏற்பாடு செய்வதிலும் ஊராட்சிக்கு, அரசல்லாத அமைப்புகளுக்கு, சுய உதவிப் பிரிவுகளுக்கு, மகளிர் பிரிவுகளுக்கு உதவுதல்.

(1)	(2)
	(iv) சீதனம், பாலினப் பாகுபாடு, மகளிருக் கெதிரான கொடுமைகள் போன்ற சமூகக் கேடுகளை ஒழிப்பதில் உதவுதல், சமூக ஆதரவைப் பெருக்குதல். குடும்ப ஆலோசனை மையங்களை நிறுவுவதில் உதவுதல்.
	(v) ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மாநில மற்றும் இந்திய அரசின் ஆதரவுடன் மகளிருக்கென செயற்படுத்தப்படும் அனைத்துத் திட்டப் பணிகளையும், திட்டங்களையும் மறுஆய்வு செய்தல்.

III மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை (1)		அதிகார ஒப்படைப்பு (2)
1.	மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டிற்குத் திட்டமிடுதல்	(i) ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து ஆதார மூலமாக எண்பிக்கப்பட்ட புள்ளி விவரங்களைத் திரட்டி மகளிர் மற்றும் குழந்தையின் ஊட்டச்சத்து தகுநிலை, குழந்தைகளின் சமூக நிலை, மகளிரின் சமூகப் பொருளாதார நிலை, ஒருமுகப் படுத்தப் பெற்ற மற்றும் ஒருமுகப்படுத்தப் பெறாத துறைகளின் மகளிரின் உழைப்பு ஆகியவற்றின் மீது ஆண்டு தகுநிலை அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை மாநிலத்திலும் நாட்டிலும் மிகச்சிறந்த வற்றுடன் ஒப்பிடுதல்.
		(ii) மாவட்டத்தில் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டிற்கான ஆண்டுத் திட்டத்தைத் தயாரித்து அது குறித்து அரசுக்கு அறிவுரை கூறல்.
		(iii) மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டங்கள், செயல்முறைத் திட்டங்கள் ஆகியவற்றை மறுஆய்வு செய்தல்.
2.	ஊட்டச்சத்து ஒப்படைப்புப்	(i) ஊராட்சி ஒன்றியத்தின் செயல்பாடு களையும் நடவடிக்கைகளையும் கண் காணித்தல், மேற்பார்வையிட்டுக் கண்காணித்தல்
		(ii) ஊட்டச்சத்துத் திட்டத்திற்கானப் பொருள் களின் முறையான கொள்முதலையும் பகிர்வினையும், மாநில மற்றும் மைய அரசின் நிதியுதவி பெறும் ஊட்டச்சத்து திட்டங்களின் செயலாக்கத்தையும் மறு ஆய்வு செய்தல்.
4	குழந்தை நல மையங்களையும் மதிய உணவு மையங்களையும் நிறுவி இயக்குதலும், பேணுதலும்	(i) மையங்களின் முறையான செயலாக்கத்தையும் பேணுகையையும் மறுஆய்வு செய்தல்.
		(ii) மையங்களை நிறுவி பேணுதலுக்காகத் தொழில் நுட்ப மற்றும் நிதியுதவி அளித்தல்.
5.	ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வுக் கல்வி	(i) தகவல் பரப்புதலிலும் நல்வாழ்வு, ஊட்டச்சத்து, கல்வி, நீர் வழங்கல், ஊரகவளர்ச்சி முதலியவற்றை உள்ளடக்கிய துறை களின் நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பை உறுதி செய்வதிலும் ஊராட்சிஒன்றியத்திற்கு உதவியளித்து மேற் பார்வையிடுதல்.

(1)		(2)
	(ii)	மாவட்ட நிலையில் மருத்துவமனை களையும் கல்வி நிலையங்களையும் ஊட்டச்சத்து மற்றும் நலவாழ்வுக் கல்வியில் ஈடுபடுத்துதல்.
6. குழந்தை நலம்	(i)	குழந்தைத் தொழிலாளர் பெண் சிசுக்கொலை, குழந்தைக்குத் தேவைப் படும் காப்பும் பாதுகாப்பும் ஆகியவற்றின் மீது ஆவணவடிவில் அடிப்படை விவரங் களைத் திரட்டுதல், மாநில அரசின் ஆலோசனைக்குரிய ஆண்டுத் தகுநிலை அறிக்கைகளைத் தயாரித்தல்.
	(ii)	பல்வேறு குழந்தை நலத்திட்டங்களின் மீதான செயல் விளைவு ஆராய்வினை நடத்துதல்.
	(iii)	வருமான உருவாக்கம் மற்றும் சுயவேலை வாய்ப்பு நடவடிக்கைகளுக்குக் கடன் பெறுவதில் உள்ள தடைகளை அகற்ற நடவடிக்கைகள் எடுத்தல்.
	(iv)	மகளிர் மற்றும் குழந்தை தொடர்பில் சமூகக்கேடுகளை ஒழிப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவியளித்தல்.
	(v)	உதவிக்கரம் தேடும் மற்றும் துன்பப்படும் மகளிருக்கான நிறுவனங்களை நிறுவுவதில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவுதல்.

நிருவாக, நிதி மற்றும் சட்டச்சிக்கல்கள்

21. மாநிலத் திட்டக்குழு பிரிவின் பரிந்துரைகளின்படி, குழந்தை நலமையங்கள், சமுதாய ஊட்டச்சத்து மையம், மதிய உணவு மையங்கள் மற்றும் குழந்தை நலம் மற்றும் மகளிர் நலத்திற்கான பிற நிறுவனங்கள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் பெற வேண்டும். இது, பள்ளி வளாகம் ஒன்றிலோ அல்லது வேறெங்காவது நடத்தப்பெறுகின்றன என்பதைப் பொருட்படுத்தாமல், மதிய உணவு மையங்கள் ஊராட்சிகளின் பொறுப்பில் இருக்கவேண்டும். மதிய உணவுத் திட்ட மையங்களின் செயற்பாட்டில் தொடர்பறாமலிருக்கும் பொருட்டு, பொருள்களின் கொள்முதல் மற்றும் பகிர்வினைக் கையாளுவதற்குத் நடைமுறையிலிருந்து வரும் நிருவாக ஏற்பாடானது, தற்போது உள்ளவாறே தொடரப்பட வேண்டும்.

22. மதிய உணவு திட்டத்திற்கான உணவு வகைகளின் கொள்முதல் மற்றும் பகிர்வு தற்போதைய நடைமுறையிலுள்ளவாறே தொடர்ந்து தமிழ்நாடு உணவு பொருள் வழங்கு கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பெறும். மதிய உணவுத் திட்ட மையங்களின் இயக்கம் மற்றும் பேணுகையை ஊராட்சி களுக்கும் அவற்றை மேற்பார்வையிடும் பணி ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அளிக்கப்பெறவேண்டும். ஊராட்சிகளுக்கான நிதிமானியம் அளிக்கப் பெறவேண்டும். அத்துடன் மதிய உணவுத் திட்ட பணியாளர்களுக்குரிய சம்பளங்கள் ஊராட்சிகளால் வழங்கப்பட வேண்டும்.

23. சமூக மேம்பாட்டின் கண்ணோட்டத்திலிருந்து, குழந்தை நலமையங்கள், "மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு மையங்கள்" ஆகச் செயற்படு வேண்டுவது தவிர ஊட்டச்சத்து செயல்முறைத் திட்டங்களில் இம்மையங்கள், நல்வாழ்வு, காப்பு, குடும்பநலம், முன்பருவக் கல்வி, பொழுதுபோக்கு, வாழ்க்கைத் தொழில் பயிற்சி, எழுத்தறிவு, போட்டி விளையாட்டுகள் மற்றும் வயது வந்தோருக்கான எழுத்தறிவு போன்ற பிற நடவடிக்கைகளில் அவை ஈடுபட வேண்டும்.

24. எஞ்சிய நலப்பணிகளில், மகளிர் மன்றங்களைச் ஊராட்சிகளுடன் இணைக்கப் பெறுவது பொருத்தமானதாகும். தற்போது 11520 மன்றங்கள் உள்ளன. அவற்றின் செயற்பாடுகளுக்காக ஆண்டுதோறும் கிட்டத்தட்ட ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மன்றங்கள், மகளிர் மற்றும் குழந்தைகளின் தேவைகளுக்குரிய தர மேம்பாட்டிலும், ஏற்பிலும் கவனத்தை ஒருமிக்கச் செலுத்தி ஆற்றல்மிக்க மற்றும் உறுதியான பங்கெடுப்பிற்கு முடுக்கி விடப்பட வேண்டும்.

உடல் ஊனமுற்றோர், மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் உள்ளிட்ட சமூக நலன்

(இனம் - 26)

01. 73/74 ஆவது அரசியலமைப்பு சட்டத்திருத்தமானது பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு 29 இனங்களுக்கான அதிகாரங்களையும் பொறுப்புகளையும் ஒப்படைப்பது பற்றி தெரிவிக்கின்றது; அதில் இனம் 26 உடல் ஊனமுற்றோர் – மனநலங் குன்றியோர் நலம் உள்ளிட்ட சமூக நலன் குறித்துக் கருகின்றது.இந்த இனம் முடமானோர், அனாதை குழந்தைகள், தத்தெடுத்த குழந்தைகள் ஆகியோரின் நலன், முதியோர் நலன், வெறிமயக்க மருந்தூட்டல் தடுப்பு, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு, இளங்குற்றவாளி நீதி நிருவாகம், மதிய உணவுத் திட்டம் மற்றும் சமூகக் கேடுகளுக்கு எதிராக விழிப்பூட்டல் ஆகியவற்றை உள்ளடக்குவதாகும்.

ஊனமுற்றோர் மறுவாழ்வு

02 1991 ஆவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 11.13 இலக்கம் ஊனமுற்றோர் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஊனமுற்றோருக்காகச் சற்றொப்ப 217 சிறப்புப் பள்ளிகள் உள்ளன. அதில் 23 பள்ளிகள் – பார்வையற்றவர்களுக்காக 11 பள்ளிகள், கேட்புத் திறனை இழந்தவர்களுக்காக 10, மனநலங் குன்றியோருக்கு 1, அங்கக்கோணல் சார்ந்த மிகவும் ஊனமுற்றோருக்கு 1 – அரசால் நடத்தப்பெறுகின்றன. மொத்தத்தில் இச்சிறப்புக் கல்வி வசதியை 8726 குழந்தைகள் பயன்படுத்திக் கொள்கின்றனர். மேலும், கேட்புத் திறனற்ற குழந்தைகளுக்காக 20 மாவட்டங்களில் 23 முன்பருவக் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிறப்புப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்காகப் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பெறுகின்றன. உடல் ஊனமுற்றோர் சட்டப்படி நிறுவப்பெற்ற பயிற்சி மையங்கள் வாயிலாக சில தொழில்களில் பயிற்சி பெறுகின்றனர். பயிற்சி பெற்றவர்களுக்காக அரசு தொழில் நிறுவனங்களில், அரசுடைமை நிறுவனங்களில், தனியார் நிறுவனங்களில் தொழில் பழகுனராகப் பணிவாய்ப்பு அளிக்கப் பெறுகின்றது. முட்டுக்காட்டில் நவீனப் பயிற்சி மற்றும் உற்பத்திப் பட்டறையொன்று உள்ளது. இது மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், மடக்கும் குச்சிகள் மற்றும் ஏனைய பிற எஃகுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றது. அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் உடல் ஊனமுற்றவர்க்கு இலவசப் பயணச் சலுகை அளிக்கப்பெறுகின்றது. அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மிகவும் உடல் ஊனமுற்றவர்களில் 100 பேர்களின் தேவைக்காகச் செயற்கை உறுப்பு சார்பு நிலையமொன்று மதுரையில் அமைக்கப்பட்டுள்ளது. அது கல்வி, மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்பியல் சிகிச்சை மற்றும் உபகரணங்கள் போன்றவற்றை அளிக்கின்றது. செங்கல்பட்டில் உள்ள மாவட்ட மறுவாழ்வு நிலையம் இந்தியாவில் நிறுவப்பெற்ற 12 திட்டங்களில் ஒன்றாகும். உடல் ஊனமுற்றவர்களை அது கண்டறிந்தும் அவர்களின் தேவையை மதிப்பிட்டும் மறுவாழ்வு உதவி அளிக்கின்றது. மண்டல அரசு பார்வையற்றோர் அச்சகம் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்குத் தேவையான பார்வையற்றோர் கல்வி முறை சார்ந்த நூலை அச்சிட்டு வழங்குகின்றது. பார்வையற்ற பெண்கள் தங்குவதற்கென பூந்தமல்லியில் தங்கும் வசதியுடன் கூடிய அரசு மறுவாழ்வு இல்லத்தில் சுண்ண எழுதுகோல் தூண்டுகள் செய்யவும், நெசவு நெய்யவும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அங்கு செய்யப்படும் உற்பத்திப் பொருள்கள் மருத்துவ மனைகளுக்கும், பள்ளிகளுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

03. மேலும், விரிவானதொரு போலியோ தடுப்பு மற்றும் போலியோவுக்குப் பலியானவர்களின் மறுவாழ்வு தொடர்பில் 1989 முதற்கொண்டு, வளர்ச்சிப் படிநிலை முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இப்போது 1995–96 வரை, வளர்ச்சிப் படிநிலையில், 310 வட்டாரங்கள் தெரிவு செய்யப்பட்டு, சற்றொப்ப 6,60,91 போலியோவிற்குப் பலியானவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. விரிவான மருத்துவ மதிப்பீடு முகாம்கள் இவ்வட்டாரங்களில் நடத்தப்பெற்றன. மருத்துவ உதவி, மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்பியல் சிகிச்சை, மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், உதவி உபகரணங்கள், ஊன்று கட்டைகள் போன்றவற்றை இலவசமாக வழங்குதல், இடைக்காலத்திற்குரிய பள்ளிகளிலும் சிறப்புப் பள்ளிகளிலும் சேர்த்தல், படிப்புதவித் தொகை அளித்தல், வாழ்க்கைத் தொழிற்கல்வி பயிற்சி அளித்தல் வேலையில் அமர்த்துதல்,

சுய வேலை வாய்ப்புக்கான வங்கிக் கடன் மற்றும் அரசு உதவி, அகவை முதிர்வு ஓய்வூதியம் ஒப்பளிப்புச் செய்தல் மற்றும் போலியோவுக்குப் பலியானோர் ஒவ்வொருவருக்கும் தேவையைப் பொருத்து பேணுகைப் படி ஒப்பளிப்புச் செய்தல் போன்ற பல்வேறு பயன்களைப் பெறுவதற்குப் போலியோவுக்குப் பலியானோர் மதிப்பீடு செய்யப்படுகின்றனர். நலவாழ்வுத் துறையானது போலியோ தடுப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகின்றது.

சமூகப் பாதுகாப்பு:

04. இளஞ்சிறார் மற்றும் சீரற்ற குழுக்கள், ஆகியோருக்காக அரசால் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் திட்டங்களில் தடுப்பு, சரி செய்தல் மற்றும் மறுவாழ்வுச் சேவைகள் ஆகியன அடங்கப்பெறும். 1986 ஆம் ஆண்டின் இளஞ்சிறார் நீதிச் சட்டம், 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு)ச் சட்டம் ஆகியவற்றின் வழிவகையின் கீழ் கவனிப்பு, சிகிச்சை, பாதுகாப்பு, கல்வியியல் மற்றும் தொழில் பயிற்சி, மேற்கூறிய சட்டங்களின் வழிவகையின் கீழ் வருகின்ற குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் மறுவாழ்வு அளித்தல் போன்றவற்றை அளிப்பதற்காக தங்குமிடத்தோடு இணைந்த நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 11 கூர்நோக்கு இல்லங்கள், 10 இளஞ்சிறார் சிறப்பு இல்லங்கள், 6 பாதுகாப்பு விழிப்புப் பணி இல்லங்கள் மற்றும் 3 பிற்காப்பு நிறுவனங்கள், அரசாலும், 15 இல்லங்கள் தனியார் நிறுவனங்களாலும் நடத்தப் பெற்று வருகின்றன. இந்நிறுவனங்கள் கல்வியியல் பயிற்சியும் ஏனைய பிற வகைப் பயிற்சியையும் அளிக்கின்றன.

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு:

05. பெரும்பாலான மாநிலங்கள் பிச்சை எடுப்பு தடைச் சட்டத்தை நிறைவேற்றி உள்ளன. பிற மாநிலங்களில், நகராட்சி மற்றும் காவல்துறைச் சட்டங்களில் பிச்சை எடுத்தலுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளன. மறுவாழ்வு ஏற்பாடாகப் பிச்சை எடுப்பவர்கள் கண்டறியப்பட்டு, இந்திய அரசிடம் இருந்தும், மாநில அரசிடமிருந்தும் உதவி மானியம் பெற்று தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப் பெறுகின்ற பிச்சைக்காரர் இல்லங்களில் உள்ள பணி நிலையங்களில் தொழிற் பயிற்சிக்காகக் கொண்டு செல்லப்படுகின்றனர். இளஞ்சிறார் பிச்சையெடுப்பதனை ஒழிப்பதற்கான இத்திட்டம், குழந்தை காப்பகங்கள், முன்பருவப் பள்ளி மையம், முறைசாராக் கல்வி/எழுத்தறிவு இயக்கம், கல்வியியல் எழுத்தறிவு, கல்வியியல்/ தொழிலியல் பயிற்சி, அரசு சாரா அமைப்புகள் மூலமாக மனமகிழ் வசதிகள் போன்ற சேவைகளை அளிப்பதற்காக ஒப்பளிப்புச் செய்யப் பெற்றதாகும்.

முதியோர் நலம்:

06. உயிருடனிருப்போர் அதிகரித்திருப்பதுடன் முதியவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கிணங்க 65 ஆண்டுகளும் அதற்கு மேலுமுள்ள முதியவர் மக்கள் தொகையானது 1981 மக்கள் தொகைக் கணக்குடன் ஒப்பிடுகையில் 6.51 விழுக்காட்டிற்கும் அதிகமாக 8.32 விழுக்காடாக உள்ளது. தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் இயக்கப்படும் முதியோர் இல்லங்கள் மூத்த குடிமக்களுக்குத் தங்குமிடங்களை அளிக்கின்றன. இப்போது, முதியோருக்குத் தங்குமிடம், உணவு அளித்தல், நலவாழ்வு கவனம் ஆகியவற்றை அளிப்பதற்காக 10 முதியோர் இல்லங்கள் இயங்கிவருகின்றன. பிழைப்பாதாரம் இல்லாத, உறவினர்கள் இல்லாத முதியோருக்கு முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1962இல் இருந்து ஓய்வூதியம் அளிக்கப் பெறுகிறது. முதியோர்களான இந்த ஓய்வூதியதாரர்கள் மதிய உணவு மையங்களில் மதிய உணவு பெறுகின்றனர்.

குழந்தைகளைத் தத்தெடுத்தல்:

07. நீதிப் பேராணை விண்ணப்பம் (கு–1) 1171)/82 இல் உச்ச நீதிமன்றமளித்த கட்டளைகளையடுத்து, மாநில அளவிலான முகமையொன்று 1991 இல் அமைக்கப் பெற்றது. புள்ளிவிவரங்களைச் சேகரித்தல், நாட்டிடையே தத்தெடுக்கவேண்டி இந்திய அரசால் ஏற்பளிக்கப்பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பத்தைச் செயல் முறைக்குள்ளாக்குதல், ஆய்வு மேற்கொள்ளுதல்,

நாட்டிடையே தத்தெடுத்துக் கொள்ள வேண்டி ஏற்பளிக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுத் தத்தெடுத்தலை ஏற்று நடத்தும் முகமைகள் ஆகியவற்றின் பட்டியலைக் காலத்துக்கு ஏற்ற புத்தம் புதிய நிலைக்குக் கொணர்தல். ஏற்பளிக்கப்பெற்ற நிறுவனங்களால் அனுப்பப்பெறுகின்ற முன்னேற்ற அறிக்கைகளை மறுஆய்வு செய்தல். ஏற்பளிக்கப்பட்ட அமைப்புகளால் பேணப்படுகின்ற ஆவணங்களைச் சரிபார்த்தல் மற்றும் மைய முகமையில் வேண்டக்கூடும் தகவலை வழங்குதல் போன்ற தத்தெடுப்பு தொடர்புடைய அனைத்துப் பொருண்மைகளுக்கும் பொறுப்புடையதாக இருக்கும்.

அரசின் நிதியளிப்பு ஆதரவு

08. இத்திட்டங்களுக்காகக் கடந்த மூன்றாண்டுகளின்போது ஒதுக்கப்பட்ட நிதிகளின் விவரம் பின்வருமாறு

(ரூபாய் இலட்சத்தில்)

	கணக்குத் தலைப்பு	1994–95 உள்ளபடியானது	1995–96 திருத்திய மதிப்பீடு	1996–97 திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு
1.	ஊனமுற்றோர் நலன்	919.98	943.95	1014.15
2.	வயதான, ஏலாத மற்றும் ஆதரவற்றோர் நலன்	413.91	467.65	498.76
3.	சீர்திருத்தப் பணிகள்	542.74	649.32	721.68
4.	ஏனைய சமூகப் பாதுகாப்பு மற்றும் முதியோர் ஓய்வூதியதாரர்களின் நலன்	5540.14	7428.60	7432.90

பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள்

09. கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் பயிற்சி வசதிகளில் ஊனமுற்றோர் தங்களை தற்சார்புடைய வராகவும், பொருளாதாரத்தில் பிறரின் ஆதரவைப் பெறாமலும் ஆக்கிக்கொள்ள வேண்டி பயிற்சி வசதிகள் அளித்தல் போன்றவற்றை வலுப்படுத்துவதில் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. இச்சமுதாயம் அத்தகையத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியது இன்றியமையாததெனவும், நிருவாக இயந்திரம் மாவட்ட ஊராட்சிக்குரிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை அளிக்க வேண்டுமெனவும் மாநிலத் திட்ட குழுவின் குழு பிரிவு கருதுகின்றது. இந்நோக்கங்களைக் கருத்திற்கொண்டு, பின்வரும் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் 3 படி நிலை அமைப்புகளிடம் ஒப்படைக்க மாநிலத் திட்டக் குழுவின் குழு பிரிவு பரிந்துரைக்கின்றது.

I. ஊராட்சி

நடவடிக்கை	ஒப்படைப்புக்குரிய அதிகாரங்கள்
1. ஊனமுற்றோர் நலன் அ. ஊனங்களைத் தடுத்தல் மற்றும் விரைந்து கண்டுபிடித்தல்	அ) ஊனமுற்றோர்களின் தொகையைக் கணக்கெடுத்து ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்புதல் ஆ) நலவாழ்வு மற்றும் ஊனமுற்றோர் துறையின் செயற்பாடுகளை ஒருங்கிணைந்து முடமாவதைத் தடுக்கும் ஏற்பாடுகளில் உதவி செய்தல்.

நடவடிக்கை		ஒப்படைப்புக்குரிய அதிகாரங்கள்
		இ) அரசு சாரா அமைப்புகளின் உதவியுடன் "அபாயமிக்க" மற்றும் "உயர் அபாயமிக்க" நேர்வுகளைக் கண்டறிந்து குறைகளை ஆண்டுக்கொரு முறை களைந்து குழந்தைகளுக்கும் தடைகாப்பு ஏற்பாடு செய்ய உதவுதல்.
		ஈ) முடமாவதற்கான காரணங்களைப் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குதல் தடுப்பு மற்றும் ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் இதன் பொருட்டு அறிவிப்பு முறையான தகவலைப் பயன்படுத்திக் கொள்ளுதல்
ஆ.	கல்வியியல் வசதிகள்	அ) பதினாறும் அதற்கும் மேற்பட்ட வயதுப் பிரிவில் உள்ள எழுத்தறிவற்ற ஊனமுற்ற குழந்தைகளுக்குச் செயலாக்க எழுத்தறிவு வழங்கிட உதவுதல், ஊரகப் பகுதிகளில் கிடைக்கக் கூடிய மனித ஆற்றலைக் கொண்டு ஏற்புடைய தொடர்பினை அவர்களுக்கு வழங்கிய பின்னர் முறைசாராக் கல்வி அளித்திட உதவுதல்.
		ஆ) பாடப்புத்தகங்களையும், நோட்டு புத்தகங்களையும், சீருடைகளையும், உதவித் தொகையினையும், இலவசப் பேருந்து பயண அட்டை களையும் ஏனைய பிற பொருட்களையும் உரிய நேரத்தில் வழங்கிட ஆவண செய்தல்.
		இ) காது கேளாதவர்களுக்காவும், மனநலங்குன்றிய மற்றும் இசிப்பு நோய்க்கு ஆட்பட்ட குழந்தைகளுக்காகச் சிறப்புப் பள்ளிகளையும் / நிறுவனங்களையும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அமைத்திட வேண்டி ஊக்கப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளல்; உரிய முறைப்படியான உள்கட்டமைப்பு வசதிகளை அளித்திட உறுதிசெய்யும் வகையில் அத்தகைய பள்ளிகளை உருவாக்கிட அரசுக்கு உதவுதல்.
		(ஈ) வாழ்க்கைத் தொழில் பயிற்சி வசதிகளுடன் ஊனமுற்ற குழந்தைகளுக்குரிய சிறப்புப் பள்ளிகள் கருவிகளைப் பெற முயற்சியெடுத்தல்.
(இ)	வேலைவாய்ப்பு வசதிகள்	(அ) அரசு சாரா அமைப்புகளின் உதவியுடன் பயிற்சி மற்றும் திறன் அளிப்புத் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்து பொருத்தமான வேலைகளை முடமானோர் பெறுவதற்கு உதவிசெய்தல்.
		ஆ) சுய வேலைவாய்ப்பு முயற்சிகளில் உதவி செய்தல்; இம்முயற்சிகளுக்குக் கடன் பெறுவதற்காக முடமானோருக்கு உதவி செய்தல்; பெட்டிக் கடைகளையும் பிறகடைகளையும் பெறுவதற்கு அவர்களுக்கு உதவி செய்தல்.
ஈ)	பிறநல மற்றும் மறுவாழ்வு	அ) உதவியும் துணைக் கருவிகளும் தேவைப்படும் ஊனமுற்றோரைக் கண்டறிந்து உதவி செய்தல்; அதனைப் பகிர்ந்தளித்திடவும் உதவி செய்தல்.

நடவடிக்கை	ஒப்படைப்புக்குரிய அதிகாரங்கள்
	(ஆ) மனநலங் குன்றியவர்களைப் பாதுகாத்து மறுவாழ்வு அளித்திட சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளல்.
	(இ) சலுகை விலையில் முன்னுரிமை அடிப்படையில் வீட்டிற்கான நிலங்களை ஒதுக்கீடு செய்தலையும் தொழில் மையங்களையும் அமைப்பதற்கான உறுதி செய்தல்.
	(ஈ) அடையாள அட்டைகள் வழங்கிட உதவி செய்தல், இலவசப் பேருந்து அனுமதிச்சீட்டு மற்றும் ஏனைய பிற பணிகளைப் பெறுவதில் உதவிசெய்தல்.
	(உ) நலவாழ்வு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கையில் அரசு சாரா அமைப்புகளிடம் ஆதாரம் திரட்டுதல்.
	ஊ) விளையாட்டுப் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்து கிராம அளவில் விளையாட்டு நடவடிக்கைகளில் ஊனமுற்றோரை ஊக்கப்படுத்த ஏற்பாடு செய்தல்.
2. முதியோர் நலவாழ்வு	அ) 60 ஆண்டுக்கு மேற்பட்டோரின் மக்கள் தொகையை எடுத்து வயதான ஊனமுற்றோரைக் கண்டறிந்து கிராம அளவில் ஆவணங்களைப் பேணுதல்.
	ஆ) வயதான மக்கள் முதியோர் ஓய்வுதியம் பெறவும் அரசால் வழங்கப் பெறுகின்ற இலவசப் பொருள்களைப் பெறவும் உதவுதல்.
	இ) முதியவர்களுக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சியளிக்க முயற்சிகளை மேற்கொண்டு சுய வேலைவாய்ப்பு முயற்சிகள் உள்ளிட்ட ஏற்றுக் கொள்ளத்தக்க செயற்பாட்டில் அவர்களை ஈடுபடச்செய்தல்.
	ஈ) அடையாள அட்டைகளை அவர்களுக்கு வழங்குதல்.
	உ) முதியோரை கவனித்துக் கொள்ளுதல் தொடர்பில் தகவலளிப்பு முறைகள் வாயிலாக மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்குதல்.
	ஊ) முதியோர்க்குப் பகல் நேரக் கவனிப்பு நிலையங்களை அமைத்திட உதவுதல்.
3. வெறிமயக்க மருந்து, வெறிய நச்சுத்தன்மை ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல்.	அ) தகவல் அளிப்பு மற்றும் ஏனைய பிற தகவலளிப்பு முறைகள் வாயிலாக வெறிமயக்க மருந்து, வெறிய நச்சுத் தன்மை ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதால் கேடு விளைவதைப் பற்றி மக்களிடையே மாணவர்களிடையே எடுத்துக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்; இதற்காக அரசு சார்பற்ற நிறுவனங்களை ஈடுபடுத்துதல்.

நடவடிக்கை		ஒப்படைப்புக்குரிய அதிகாரங்கள்
		ஆ) நோயினை விரைவாகக் கண்டறிதல், தடைபடுத்துதல் கல்வி மற்றும் தீய பழக்கத்திற்கு இனி ஆகாதவாறு சார்புடைய மறுவாழ்வு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு உதவி செய்தல்.
		இ) அற்ப காரியங்களில் முனைந்து ஈடுபடுவதைத் தடுக்க நடவடிக்கையெடுத்தல்.
		ஈ) கெட்ட பழக்கத்திற்கு அடிமையாக்கும் மற்றும் மட்டுமிஞ்சிய குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டவர்களின் சிகிச்சைக்கு நல்வாழ்வுப் பணியாளர்களை ஈடுபாடு கொள்ளச் செய்தல்.
		உ) வெறியூட்டும் மருந்து பற்றி சிக்கல்களைக் குழந்தைகளிடையே கையாள ஆசிரியர்களைத் தக்கவாறு அறிவுறுத்துதல்
		ஊ) ஆண்களிடையே குடிப்பழக்கத்தை ஒழிப்பதில் கடமையாற்றுகிற மகளிர் அமைப்புகளுக்கும், ஊரகப் பெண்களுக்கும் உதவுதல்.
		எ) அரசு சாரா அமைப்புகளால் குடும்பக் கலந்தாய்வு மையங்களை அமைப்பதில் உதவி செய்தல் மற்றும் செயல் நோக்கமளித்தல் கலந்தாய்தல், சிகிச்சையளித்தல், தொடர் கவனிப்பு, தீய பழக்கத்திற்கு ஆளாகி நலம் பெற்றவர்களைச் சமூகத்தோடு மீண்டும் ஒருங் கிணைத்தல் ஆகியவற்றிற்கான திட்டங்களை தீட்டுதல்.
4.	பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு	அ) அனைத்து வயதுப் பிரிவிலும் உள்ள பிச்சைக் காரர்களைக் கண்டறிதல்.
		ஆ) பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கை களில் உதவி செய்தல்.
		இ) இளஞ்சிறார் பிச்சையெடுத்தலை ஒழிப்பது தொடர்புடைய சேவைகளை வழங்குவதில் உதவி செய்தல்.
5.	இளஞ்சிறார்களுக்கும் ஒழுக்கக் கேடு வாய்ந்த பெண்களுக்கும்	அ) இளஞ்சிறார் நல்வாழ்வு வாரியத்திற்கும், இளஞ்சிறார் நீதிமன்றத்திற்கும் வழக்குகளை மறுவாழ்வு அளித்தல். அனுப்பு வைக்க உதவுதல்.
		ஆ) குழந்தைகளுக்குக் கல்வி புகட்டவும் அவர்கள் குற்றம் செய்வதில் இருந்து தடுப்பதற்கும் அரசு சாரா அமைப்புகளுக்கு ஆதரவு திரட்டுதல்.
		இ) ஒழுக்கக் கேடு வாய்ந்த பெண்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கையிலும், விழிப்புணர்வினை உண்டு பண்ணுவதிலும் உதவி செய்தல்; அரசு சாராத அமைப்புகளின் ஆதரவைத் திரட்டுதல்.

II. ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	ஊனமுற்றோர் நலன்	
அ)	தடுத்தல் மற்றும் இயலாமையை விரைந்து கண்டறிதல்	அ) நலிவுற்றோரின் புள்ளி விவரங்களை ஊராட்சிகளிடமிருந்து சேகரித்து, இயலாமை நிகழ்வுக்கான காரணங்கள் குறித்த அறிக்கைகள் மீது ஆய்வு செய்தல் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்புதல். ஆ) இயலாமையைக் கண்டறிவதற்கான ஏற்பாடுகளில் ஊராட்சிக்கு உதவி செய்தல் மற்றும் நல வாழ்வு, ஊட்டச்சத்து மற்றும் ஊனமுற்றோர் நலவாழ்வுத் துறைகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்; மேற் பார்வையிடல் பணியினையும் ஏற்றல். இ) ஊராட்சியின் விழிப்புணர்வு உண்டு பண்ணும் ஏற்பாடுகளுக்கு உதவி செய்தல்.
ஆ)	கல்வி வசதிகள்	அ) சிறப்பு பள்ளிகளை நிறுவுவதில் கல்வி ஒருங்கிணைப்பு, முறைசாராக்கல்வி, தொழில் சார்ந்த பயிற்சி, உள்கட்டமைப்பு வசதிகள் போன்ற கல்வியியல் வசதிகளை வழங்குவதில் ஊராட்சியின் செயற்பாடுகளுக்கு இயலக்கூடிய அனைத்து உதவிகளையும் வழங்குதல், மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல். ஆ) ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம், அரசு சாரா அமைப்புகள் துறை அலுவலர்கள் ஆகியவற்றின் சார்பாளர்களுடன் காலமுறையில் கூட்டங்களை நடத்துதல்; குறைபாடுகளைக் கண்டறிந்து, சீர் செய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
இ)	வேலைவாய்ப்பு வசதிகள்	அ) பயிற்சியிலும் திறன் பயிற்சித் திட்டங்களிலும் உதவி செய்தல், அரசு சாராத அமைப்புகளின் ஆதரவினைத் திரட்டுதல், பொருத்தமுடைய வேலைவாய்ப்பினைப் பெற உதவிசெய்தல்; வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பதிவு செய்ய உதவி செய்தல். ஆ) சுய வேலைவாய்ப்பு முயற்சிகளில் உதவி செய்தல், கடன் வசதிகளைப் பெறுவதிலும் தொடர்புடையவராக இருத்தல். இ) வேலைவாய்ப்பு தொடர்புடைய 1995 ஆம் ஆண்டுச் சட்டத்தின் (சமவாய்ப்புகள் உரிமைகளைப் பாதுகாப்பதில் மற்றும் முழுமையாக பங்கு கொள்ளுதல்) ஊனமுற்றோருக்குரிய கூட்ட வகையுரையை நிறைவேற்றுவதில் கண்காணிப்புச் செய்தல். ஈ) தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளர்களுடனும் அலுவலர்களுடனும் வேலைவாய்ப்பு வசதிகளை வழங்குவதில் ஏற்படும் இடையூறுகளைக் கண்டறிய வேண்டி காலமுறையில் மறு ஆய்வுக் கூட்டங்களை நடத்துதல்.

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
ஈ)	நல்வாழ்வு மற்றும் மறுவாழ்வு அளித்தல் நடவடிக்கைகள்	அ) ஊனமுற்றோருக்கு உதவிகளையும் துணைக்கருவிகளையும் அளிப்பதனைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்.
		ஆ) மனநலங்குன்றியோரின் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றுக்கான இடையீட்டைக் கண்டறிய ஊராட்சிக்கு உதவி செய்தல்.
		இ) முடமானோர் எளிதே செல்லுவதற்காக தடை நீக்கும் முயற்சிகளால் உதவி செய்தல்.
		ஈ) இயலாதோரின் நல்வாழ்வு மற்றும் மறுவாழ்வு ஏற்பாடுகள் தொடர்புடைய இயலாதோரின் (சம வாய்ப்புகள், உரிமைகள் மற்றும் முழுமையாகப் பங்கு' பெறுதல் ஆகியவற்றைப் பாதுகாத்தல்) சட்டம், 1995 – இல் சொல்லப்பட்ட சட்ட வகையுரைகளை நிறைவேற்றுவதை உறுதி செய்தல்.
		உ) வீட்டுக்கான, நிலங்களை சலுகை விலைகளில் முன்னுரிமை மயளித்து ஒதுக்கீடு செய்ய உதவுதல்.
		ஊ) ஊனமுற்றோருக்கு அடையாள அட்டைகள் வழங்குவதை உறுதி செய்தல்; அரசு வழங்கும் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ள உதவி செய்தல்.
		எ) ஊராட்சி ஒன்றிய அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்.
		ஏ) மறுஆய்வுக் கூட்டங்களைக் காலமுறையாக நடத்தி அதில் காணும் முன்னேற்றங்களுக்கான பரிந்துரைகளை மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல்.
2.	மறுவாழ்வு மற்றும் சாலையோர குழந்தைகளின் நலன்.	அ) கிராம நிலையில் இருந்து புள்ளிவிவரங்களைச் சேகரித்து ஊராட்சி ஒன்றிய அளவில் பதிவுரு ஒன்றினைப் பேணி அதனை மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல்.
		ஆ) ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருவருக்கும் இரவுப் பாதுகாப்பிடத்தையும் பகல் கவனிப்பு மையங்களையும் அமைத்து, சாலையோர வேலை செய்யும் குழந்தைகள் மறுவாழ்வுக்கு ஊராட்சி மேற்கொள்ளும் முயற்சிகளில் உதவி செய்தல்.
3.	முதியோர் நலன்	அ) ஊராட்சியிடமிருந்து முதியோர்களின் புள்ளி விவரங்களைத் திரட்டி அவற்றை மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல்.
		ஆ) ஓய்வூதியம் மற்றும் பிறவசதிகள், அடையாள அட்டைகள் மற்றும் தொழில் பயிற்சி ஆகியவற்றை முதியோர் பெறுவதில் ஊராட்சிக்கு உதவி செய்தல்.
		இ) முதியோர் இல்லங்களின் செயற்பாடுகளை மறுஆய்வு செய்தல்.

	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
4.	வெறிமயக்க மருந்துகளையும் வெறிய விளைவுகளையும்	அ) வெறிமயக்க மருந்து மற்றும் வெறிய விளைவு ஆகியவற்றால் ஏற்படும் கொடுமைகளைப் பற்றி தடுத்தல். விழிப்புணர்வு உண்டு பண்ணுவதில் ஊராட்சிக்கு உதவி செய்தல்.
		ஆ) வெறிமயக்க மருந்தின் கெட்ட பழக்கத்திற்கு அடிமை யானவர்களைக் கையாளுகின்ற நல்வாழ்வுப் பணியாளர்களுக்கு, வெறிமயக்க மருந்தின் கெட்ட பழக்கத்திற்கு அடிமைப்பட்ட குழந்தைகளுக்குக் கல்விபுகட்டும் ஆசிரியரை மேம்படுத்துவற்கு, வெறிமயக்க மருந்தால் கெட்ட பழக்கத்திற்கு அடிமைப்பட்ட வர்களுக்குக் கல்வி புகட்டுவதற்குரிய சமூகப் பணியாளர் களுக்கு/கல்விபுகட்டு கின்றவர்களுக்குப் பயிற்சி மாதிரிகளை மேம்படுத்துவதில் புத்துணர்ச்சித் திட்டங்களில் ஊராட்சிக்கு உதவி செய்தல்.
		இ) துறைகளிடையே குடிப்பழக்கத்தை ஒழிப்பதில் மகளிர் அமைப்புகளுக்கும் மகளிருக்கும் உதவி செய்தல்.
		ஈ) குடும்பக் கலந்தாய்வு நிலையங்களை உருவாக்குவதில் உதவி செய்தல்.
5.	இளஞ்சிறார்களுக்கும் ஒழுக்கக்கேடு வாய்ந்த பெண்களுக்கும் மறுவாழ்வு அளித்தல்.	அ) இளஞ்சிறார்களை மனிதநேயத்துடன் காவல் பணியாளர்கள் அணுகுவதை உறுதி செய்தல்.
		ஆ) அரசு சார்பற்ற அமைப்புகள் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுதல், அவர்கள் குற்றம் இழைப்பதி லிருந்தும் தடுத்தல் ஆகியவற்றிற்கு ஆதரவு திரட்டுதல்.
		இ) கூர்நோக்கு இல்லங்கள், பாதுகாப்பு இல்லங்கள். விழிப்புப்பணி இல்லங்கள், இளஞ்சிறார் இல்லங்கள், மற்றும் பிற்காப்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்திறனை மேற் பார்வையிடுதல்.
		ஈ) சமூகநலப் பணியாளர்களின் உதவியுடன் அறநெறி போதனை மற்றும் சுய முன்னேற்ற வகுப்பு ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்தல்.
		உ) இளங்குற்றவாளிக்கு நீதிவழங்கும் நடை முறையில் ஈடுபட்டிருக்கும் அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்குப் பயிற்சி அளிப்பதில் உதவி செய்தல்.
		ஊ) இளங்குற்றவாளிகள் தொடர்புடைய ஆண்டறிக் கைகள் மற்றும் புள்ளி விவரங்கள் ஆகியவற்றை தொகுப்பதில் உதவி செய்தல். அவற்றை மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்புதல்.

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
	ஏ) சிறையிலிருந்து வெளிவந்தவர்களைப் பொது மக்களிடையே இயல்பான மனிதர்களைப் போன்றுநடத்த விழிப்புணர்வினை உருவாக்குதல்.
	ஏ) திட்டங்களைச் செயற்படுத்துவதில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய வேண்டியும் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டியும் மறு ஆய்வுக் கூட்டங்களை காலமுறையாக நடத்துதல்.

III. மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. சமூக நலன், ஊனமுற்றோர் மறுவாழ்வு, மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை ஒட்டுமொத்தமாக மாவட்டத்தில் மேற்பார்வையிடல்	அ) மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் பதிவான புள்ளி விவரம், ஊனமுற்றோர் சாலையோர வேலை செய்யும் குழந்தைகள், முதியோர், பிச்சைக்காரர்கள், வெறி மயக்க மருந்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சீரற்ற நடத்தையுடைய பெண்கள் போன்றோர் மீதான கணக்கெடுப்பு மற்றும் ஊராட்சி / ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து பெறப்படும் ஆய்வு அறிக்கைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஆய்வறிக்கை களைத் தயாரித்தல்.
	ஆ) உள்ளூர் வள ஆதாரங்கள் மற்றும் துணை வரவு – செலவு ஆதரவு ஆகியவற்றை உயர்த்த ஊக்கப்படுத்துதல்.
	இ) மறுஆய்வுக் கருத்தரங்களைக் காலமுறையாக நடத்துதல் மற்றும் தரமான சேவை செய்தமையை மதிப்பீடு செய்வதற்கான தக்கதொரு பட்டியலொன்றினைப் பேணுதல், திட்டமிட்ட நடவடிக்கைத் திட்டவரைவொன்றினைத் தயாரித்தல் மற்றம் தொடர் நடவடிக்கை எடுத்தல்.
	ஈ) இடைவெளிகளைக் கண்டறிந்து அதனை நிறைவு செய்திட வேண்டி ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஏனைய பிறரின் ஒத்துழைப்பினைத் திரட்டுதல்.
	உ) ஆதரவினையும், கருத்துக்களையும் வேண்ட, குறிப்பாகப் பணிகளைப் பயன்படுத்துவது மீது செயற்பாடுகளையும் சமூகத் தணிக்கைகளையும் தேர்ந்தெடுக்கப்பெற்ற பெண் சார்பாளர் களிடமிருந்து உதவியைப் பெறுதல்.
2. மறுவாழ்வு மற்றும் ஊனமுற்றோர் நல்வாழ்வு	அ) மாவட்ட நிலையில் புள்ளிவிவர அடித்தள ஊனமுற்றோர் நல்வாழ்வுமொன்றினை உருவாக் மேலாண்மைத் தகவல் அளிப்பு முறையொன்றினை மேம்படுத்துதல்.
	ஆ) நல்வாழ்வு மீதான நிலைக்குழு வாயிலாகக் கல்வியியல் மற்றும் வேலை வாய்ப்பு, நல்வாழ்வு மற்றம் மறுவாழ்வு ஏற்பாடுகள்,

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
	இயலாமையைத் தடைசெய்தல் மற்றும் விரைந்து கண்டுபிடித்தல், விழிப்புணர்வினை உண்டு பண்ணுதல் போன்றவை தொடர்பான அனைத்துத் திட்டங்களையும் செயற்திட்டங்களையும் கண் காணித்தல் மற்றும் மறுஆய்வு செய்தல்.
	இ) செயற்திட்டங்களின் செயல்விளைகளையும், குறைபாடு களையும், கண்டறிந்து அவற்றை மதிப்பீடு செய்து சரியான நடவடிக்கை யெடுக்கவேண்டி கருத்துரைத்தல்.
	ஈ) மறுஆய்வுக் கூட்டங்களைக் காலமுறையாக நடத்துதல், மதிப்பீட்டு அறிக்கைகளை ஆராய்தல் மற்றும் இடையிட்ட தடைகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டி கருத்துரைத்தல்.
	உ) ஊனமுற்றோருக்கு அளிக்கப்பட்ட சலுகை வசதிகளையும், நிறுவனங்களுக்கான உள் கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்திட வேண்டி அரசிற்குக் கருத்துரைத்தல்.
	ஊ) பணியாளர்களுக்கும் சமூக நலப்பணியாளர் களுக்கும் தரப்பட்ட பயிற்சியினையும் அடிப்படைப் பயிற்சிகளையும் காலமுறையாக மறுஆய்வு செய்தல். மேம்படுத்துவதற்கான கருத்துக்கணிதல்.
3. மறுவாழ்வு மற்றும் சாலையோர வேலையிலிருக்கும் குழந்தைகளின் நலம்	அ) ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மாவட்ட அளவில் தகவலைத் திரட்டுவதன் வாயிலாக ஆதரவற்ற மற்றும் வேலையிலிருக்கும் குழந்தைகளின் சூழ்நிலையை பகுப்பாய்வு செய்தல்.
	ஆ) மறுவாழ்வு நடவடிக்கைகளை கண்காணித்து மறுஆய்வு செய்தல், இரவுத் தங்குமிடங்களையும், பகல் கவனிப்பு நிலையங்களையும் உரியவாறு செயல் படுவதனை உறுதி செய்தல்; உள்கட்டமைப்பு வசதியளிப்பதனை உறுதி செய்தல்.
	இ) மறுஆய்வுக் கூட்டங்களைக் காலமுறையாக நடத்தி, குறைபாடுகளைக் கண்டறிந்து ஏற்புடைய இடையீடுகளைப் போக்க கருத்துரைத்தல்.
4. முதியோர் நலம்	அ) முதியோர் மற்றும் வயதான ஆதரவற்றவர் போன்றோரின் விவரங்களை புள்ளிவிவர அடிப்படையில் உருவாக்குதல்.
	ஆ) முதியோர் இல்லங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்து, மறுஆய்வு செய்து, மதிப்பீட்டு முன்னேற்றம் காண கருத்துரைத்தல்.
	இ) முதியோர்களுக்குரிய ஓய்வூதியமும், துணிகளும் உரிய நேரத்தில் அளிக்கப் பெறுவதை உறுதிசெய்தல்.
	ஈ) குறைபாடுகளைக் கண்டறியவும் சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மறு ஆய்வுக் கூட்டங்களைக் காலமுறையாக நடத்துதல்.

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
5.	வெறிமயக்க மருந்துகளையும் வெறிய விளைவுகளையும் தடுத்தல்	அ) வெறிமயக்க மருந்து காரணமாகக் கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகாதிருத்தல் மற்றும் வெறிய விளைவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் ஆகியவை தொடர்பில் உணர்வூட்டும் இயக்கங்களை நடத்த ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவி செய்தல்.
		ஆ) வெறிமயக்க மருந்துக்கு அடிமைப்பட்ட மற்றும் வெறிய விளைவுக்கு ஆட்பட்டவர் களுக்கான மறுவாழ்வு ஏற்பாடுகளில் ஊராட்சி ஒன்றிய நிலையில் கலந்துரையாடு வதையும், ஆதரவளிப்பதையும் கண் காணித்தல்.
		இ) வெறிமயக்க மருந்துப் பழக்கத்திலிருந்து விடுபட்டோர் நிலையங்களையும், பிற்காப்பு இல்லங்களையும் அமைப்பதில் உதவி செய்தல்.
		ஈ) வெறிய விளைவு மற்றும் வெறிமயக்க மருந்துகளுக்கு ஆட்பட்டோருக்குச் சிகிச்சை அளிப்பதில் மாவட்ட அளவில் மருத்துவ மனைகளை ஈடுபடச் செய்தல்.
		உ) வெறி மயக்க மருந்துகளைத் தவறாகப் பயன்படுத்துகின்றவர்கள் மற்றும் தவறிழைப்பவர்கள் ஆகியோரைக் காட்டிலும் வெறிமயக்க மருந்துகளுக்கு அதிகமாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பாதுகாக்க நீதித் துறையையும் காவல் துறையையும் திற நுட்பப்படுத்துதல்.
		ஊ) வெறி மயக்க மருந்துகளில் முனைந்து ஈடுபடுவதைத் தடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்.
		எ) வெறிமயக்க மருந்துகளை வாணிகம் செய்வதைத் தடைசெய்ய கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளில் உதவி செய்தல்.
		ஏ) குடும்ப கலந்தாய்வு நிலையங்களை அமைப்பதில் உதவி செய்தல்.
6.	பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு	அ) பிச்சை எடுப்பதைத் தடைசெய்யும் சட்டக் கூறுகளை நிறைவேற்றுவதில் உதவி செய்தல்.
		ஆ) பிச்சைக்காரர்கள் மற்றும் இளஞ்சிறார் பிச்சைக்காரர்கள் ஆகியோருக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளைக் கண் காணித்தல்.
7.	இளஞ்சிறார்களுக்கும் ஒழுக்கக் கேடு வாய்ந்த பெண்களுக்கும் மறுவாழ்வு அளித்தல்	அ) 1986ஆம் ஆண்டு இளைஞர் நீதிச் ஒழுக்கக்கேடு வாய்ந்த சட்டத்தின் கூறுகளை ஊராட்சி நிலையிலும். மறுவாழ்வு அளித்தல் ஊராட்சி ஒன்றிய நிலையிலும் செயற் படுத்துவதைக் கண்காணித்தல்.

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
	ஆ) இளைஞர்கள் மற்றும் ஒழுக்கக்கேடு வாய்ந்த பெண்கள் ஆகியோருக்கு மறுவாழ்வு அளித்தல் மற்றும் பிற்காப்புச் சேவைகள் தொடர்பான ஊராட்சி ஒன்றியச் செயற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் மறுஆய்வு செய்தல்.
	இ) இளைஞர் நீதி நிருவாகத்தற்கான மானியத் தொகையைப் பெறுவதில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவிசெய்தல்.
	ஈ) கல்வி, நல்வாழ்வு, சமூகம், ஒழுக்கஞ்சார்ந்த மற்றும் ஒழுக்கவியல் சார்ந்த கூறுகளை வலியுறுத்துகின்ற கல்வியியல் திட்டங்களை உறுதிப்படுத்துதல்.
	உ) ஊராட்சி ஒன்றியத்துடன் மறுஆய்வுக் கூட்டங்களை காலமுறையாக நடத்தி, குறைபாடுகளைக் கண்டறிந்து சரியான செயற்பாடுகள் குறித்துக் கருத்துரைத்தல்.
8. பணியாளர் மேலாண்மையும் திட்டங்களைச் செயற்படுத்துதலும்	அ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 7 இனங்கள் திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடர்புடைய அனைத்துத் திட்டங்களையும் செயற்படுத்த வேண்டி மாவட்ட ஊராட்சிகளிடம் அதிகாரம் வழங்கப்படுதல் வேண்டும். (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திற்குத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென இப்பரிந்துரைகள் குறிக்கின்றன.) அவ்வாறு திருத்தங்கள் மேற்கொள்ளும் வரை மறுஆய்வு மற்றும் கண்காணிப்பு அதிகாரங்களை மாவட்ட ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.
	ஆ) மாவட்ட நிலையிலும் அதற்குக் கீழும் இத்திட்டங்களை நிறைவேற்றுகின்ற பணியாளர்கள் மாவட்ட ஊராட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வருவார்கள்.

நிருவாக, நிதி மற்றும் சட்டச் சிக்கல்கள்

10. ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான மாவட்ட அலுவலகப் பணியாளர்கள் நிறைவாகவும், முற்றிலும் உள்ளாட்சி அரசுக்குப் பொறுப்புடையவர்களாகவும் இருக்க வேண்டுமென மாநிலத் திட்டக்குழுவின் குழு பிரிவு கருதுகின்றது. மாவட்ட நிலையில் உள்ள பணியாளர்கள் முழுநேர பணியாளர்களாக இருக்கின்ற வரையில், நிருவாக முறையில், இந்த மக்களாட்சி அமைப்புகளுக்கு அவர்களைப் பொறுப்புடைய வர்களாக்க மாவட்ட ஊராட்சிகளுக்கு அதிகாரங்களை ஒப்படைப்புச் செய்தல் வேண்டும்.

11. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு மறுஆய்வு மற்றும் மேற்பார்வையிடல் செய்கடமைகளில் அதிகாரமளிக்க மாநிலத்திட்டக்குழு பிரிவு பரிந்துரைக்கின்றது. பெண்கள், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோரின் நலன்களுக்காகப் பல்வேறு திட்டங்களைச் சமூக நலத்துறை நிறைவேற்றுகின்றது. மாவட்ட அளவில், ஊனமடைந்தோர் மறுவாழ்வுக்கு மாவட்ட சமூக நல அலுவலரும், மாவட்ட அலுவலரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பொறுப்புடையவர்களாவர். அவர்கள் மாவட்ட ஊராட்சிகளில் நடைபெறும் மறு ஆய்வு கூட்டங்களில் பங்கேற்க வேண்டும். அதனைப் போன்று, மாவட்ட நிலைக்குக் கீழ்நிலையில் உள்ள சமூகநலத் துறை அலுவலர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் / ஊராட்சியின் பரிந்துரைகள் மீதான தொடர் நடவடிக்கைகளை

மேற்கொள்ளுதல் வேண்டும். குழந்தைப்பருவத்தில் ஊனமடைவதை அளவீடு ஒன்றின் மூலம் கண்டுபிடிப்பது குழந்தைகள் மையப் (அங்கன்வாடி) பணியாளர்களின் கடமைகளில் ஒன்றாகும். குழந்தைகள் மையப் பணியாளரின் இச்செய்கடமையை குழந்தைகள் மையப் பணியாளர்கள் ஊராட்சிக்குப் பொறுப்புடையவர்களாக இருக்க வேண்டுவதை ஊராட்சி உறுதிசெய்தல் வேண்டும்.

12. சமூக நலத்தின் கீழ் வட்டாரம் ஒன்றுக்கு முக்கியசேவிகா ஒருவரும் கிராமசேவிகா இருவரும் உள்ளனர். சமூக நல இயக்ககம் பிரிக்கப்படுவதற்கு முன்னர் ஊனமுற்றோர் மறுவாழ்வு தொடர்புடைய வேலையை இவர்கள் கவனித்து வந்தனர். இப்போது, மகளிர் நலம், குழந்தைகள் நலம் தொடர்புடைய செயற்பாடுகளை மட்டுமே இவர்கள் நிறைவேற்றுகின்றனர். ஊனமுற்றோர் மறுவாழ்வுகளான செயற்பாடுகளை முக்கியசேவிகாவும், கிராமசேவிகாவும் நிறைவேற்றுவதனை ஊராட்சி ஒன்றியம் உறுதிசெய்தல் வேண்டும்.

13. மாவட்ட மறுவாழ்வு அலுவலங்கள் வாயிலாக ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான திட்டங்கள் செயற்படுத்தப்படுவதனை மாவட்ட ஊராட்சிகள் மறுஆய்வு செய்து கண்காணித்தல் வேண்டும். மாவட்ட அளவில் உள்ள முடமானோருக்கான பல்வேறு சிறப்புப் பள்ளிகளின் இயக்கம் மற்றும் பேணுகை ஆகியவற்றையும் மாவட்ட ஊராட்சிகள் மறுஆய்வு செய்யலாம்.

14. அனைத்து மாநில / பொதுப் பணிகளிலும், அரசு, உள்ளாட்சி அமைப்புகள் போன்ற அனைத்து வகைப்பட்ட கல்வியியல் நிறுவனங்களிலும் மற்றும் கருவிகள் மற்றும் துணைக் கருவிகள் ஆகியவற்றிற்கான பயனாளர்களைத் தெரிவு செய்வதிலும் ஊனமுற்றோருக்காக 3 விழுக்காடு காலியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதை இந்த மாவட்டக்குழு கண்காணிக்கும். இம்மாவட்டக்குழு கல்வி, வேலைவாய்ப்பு, கடன் ஒப்பளிப்பு, மறுவாழ்வு போன்றவற்றிற்குத் தொடர்புடைய பல்வேறு துறைகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதில் முக்கிய பங்கு ஆற்றுகின்றது. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி போன்ற பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் ஒவ்வொரு நிலையிலும் அறிவுரைஞர் குழு அமைக்கப்பெறலாம். 1995ஆம் ஆண்டு முடமானவர்கள் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுமையாகப் பங்கேற்றல்) சட்டத்தில், உள்ள கூறுகள் செயற்படுத்தப்படுவதையும் இது உறுதிசெய்து கொள்ளல் வேண்டும்.

15. இல்லங்களின் செயற்பாடுகளையும், இல்லப் பணியாளர்கள், இளைஞர் நல வாரியம் மற்றும் இளைஞர் வழிகாட்டுக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் மறுஆய்வுக் கூட்டங்களையும் இம்மாவட்ட ஊராட்சி கண்காணிக்கும். கல்வி, தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு, ஊட்டச்சத்து மற்றும் இளைஞர்கள். ஒழுக்கக்கேடு வாய்ந்த பெண்கள், சாலையோர வேலை செய்யும் குழந்தைகள், பிச்சைக்காரர்கள் மற்றும் இல்லத்திலிருந்து விடுவிக்கப் பெற்றவர்கள் ஆகியோரின் மறுவாழ்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறைகளுடன் இம்மாவட்ட ஊராட்சிகள் தொடர்பினை அளிக்க வேண்டும்.

நலிவுற்ற பிரிவினர்களின் நலம் மற்றும் குறிப்பாக பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர்

(இனம் - 27)

01. 1991 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 558.59 இலட்சமாகும். அதில் ஆதி திராவிடர் மக்கள் தொகை 107.12 இலட்சமும், பழங்குடியினர் மக்கள் தொகை 5.74 இலட்சமும். கணக்குப்படி பார்த்தமையில் முறையே 19.18 விழுக்காடும், 1.03 விழுக்காடும் ஆக அமைகின்றன. ஆதிதிராவிடர்.பழங்குடியினரை மேம்படுத்தி வளர்ச்சியடைய கல்வி வாய்ப்புகளுக்கு மாநில அரசானது கணக்கற்ற திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. படிப்புதவித் தொகை, கல்விக் கடன், சீருடைகள், பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள் வழங்குதல், தொடக்கநிலை, இடைநிலை, மேல் இடைநிலை ஆகிய நிலைகளில் தனித்த பள்ளிகளை நடத்துதல். உள்ளுறைப்பள்ளிகள், சிறப்புப் பயிற்சி வசதிகள், இலவசமாக விடுதிகளை நடத்துதல் ஆகிய பலவித நடவடிக்கைகள் தமிழ்நாட்டில் தற்பொழுது நடைமுறையில் உள்ளன. இம்மாநிலத்தில் ஆதிதிராவிடர் இனத்தை மேம்படுத்துவதற்காகச் செய்றபட்டுவரும் பன்முகப்படுத்தப்பட்ட திட்ட நடவடிக்கைகளிலும் பல்வேறு பொதுத் துறைகளின் கீழ் அதாவது கல்வி, வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவு, தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு, ஊரக வளர்ச்சி முதலியனவற்றில் செயற்படுத்தப்பெறும் கூடுதல் திட்டங்களிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையினரால் செயற்படுத்தப்படும் திட்டங்களினாலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆதாயம் பெறுகின்றனர்.

02. 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி சமூகத்திலுள்ள அனைத்துப் பிரிவினர்களுக்கும் சம நீதிப் பெற சட்டமியற்றப்பட்டு உறுதி செய்யப்பட்டது. இச்சட்டம், தமிழ்நாட்டில் முறையாகவும், பயனுள்ளதாகவும் நிர்வகிக்கப்பட 25 நடமாடும் கண்காணிப்புக் குழுக்கள், 4 சிறப்பு குற்றவியல் அமர்வு நீதிமன்றங்கள் மற்றும் 8 குற்ற வழக்குத் தொடர்வு கண்காணிப்புக் குழுக்கள் இயங்கி வருகின்றன.

03. தமிழ்நாட்டில், 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டமானது தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டுவருகிறது. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் மறுவாழ்வு பெறுவதற்கு, பின்வரும் பயன்கள் விரிவாக்கப்பட்டுள்ளன : 1. வீட்டு மனைகள் மற்றும் பயிரிடும் நிலங்கள் வழங்குதல். 2. கறவை மாடுகள், கோழி வளர்ப்பு, உழவு மாடுகள் முதலியவற்றை வழங்குதல். 3. செயற்கை வைரம்பட்டை தீட்டுதல், கல் உடைக்கும் கருவிகள் வேளாண்மைக் கருவிகள் முதலியன வழங்குதல்.

04. 2.38 இலட்சம் மாணவர்கள் 1017 ஆதி திராவிடர்கள் பள்ளிகளிலும், 224 பழங்குடியினர் பள்ளிகளும் படிக்கின்றனர். கல்வித் துறை, உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் தனியார் மேலாண்மை முதலியவற்றால் நடத்தப்படும் பள்ளிகளில் ஆதி திராவிடர் குழந்தைகள் 25.17 இலட்சமும், பழங்குடியினர் குழந்தைகள் 1.12 இலட்சமும் பயிலுகின்றனர். பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றிற்குச் செல்லும் மாணவர்களுக்கு விடுதி வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

தற்போது ஆதி திராவிடர் வகுப்பின மாணவர்களுக்கு 968 விடுதிகளும், பழங்குடியினர் மாணவர்களுக்கு 26 விடுதிகளும் உள்ளன.

05. 1988–89 ஆம் ஆண்டுவரை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகமானது 78,673 வீடுகளை ஆதி திராவிடர்களுக்கு கட்டியுள்ளது. 1989 லிருந்து 1996 வரை 2,56,528 வீடுகள் ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்ட நிதியுதவியைக் கொண்டு ஊரக வளர்ச்சித் துறையால் கட்டப்பட்டுள்ளது.

06. 15.2.1974 அன்று துவக்கப்பட்ட ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் முக்கிய நோக்கமானது, ஆதி திராவிடர் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தப்படுத்துவதாகும். கழகத்தின் முக்கிய

நோக்கங்கள் என்னவென்றால்: (i) தமிழ்நாடு மாநிலத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுத்தல்; (ii) ஆதி திராவிடர்களுக்கான விடுதிகள், பள்ளிகள் சமூகக் கூடங்கள், பால்வாடிகள் முதலியவற்றிற்குக் கட்டிடங்கள் கட்டித் தருதல். (iii) ஆதி திராவிடர்கள் பயனடைவதற்காகப் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தி ஏழ்மை நிலைக்கு மேல் அவர்களை உயர்த்துதல்; (iv) ஆதி திராவிடர்களை மேம்படுத்துவதற்காக எந்தவொரு குறிப்பிட்ட பணி தொடர்பிலும் அரசால் அவ்வப்போது கழகத்திடம் ஒப்படைக்கப்பெறும் பணிகளை மேற்கொள்ளுதல்

மாநில நிதி ஆதரவு

07. மாநில அரசானது சென்ற மூன்றாண்டு காலத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திற்கு பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

திட்டம்	1994-95 ஆம் ஆண்டு உள்ளபடியானச் செலவு	1995-96 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு மதிப்பீடு	1996-97 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு
(1)	(2)	(3)	(4)
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (மொத்தம்) அவற்றில்	18259.79	(ரூபாய் இலட்சத்தில்) 22066.26	24757.36
(அ) ஆதி திராவிடர்			
1. கல்வி	7205.39	8944.62	9585.57
2. பொருளாதார வளர்ச்சி	103.40	175.54	177.84
3. நல்வாழ்வு மற்றும் வீட்டுவசதி	3931.38	6594.85	7040.60
4. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உள்ளடங்கிய பகுதித் திட்டத்தின்படி சிறப்பு மைய அரசு உதவி.	3816.24	3174.85	4616.83
(ஆ) பழங்குடியினர்			
1. கல்வி	519.03	598.92	625.56
2. பொருளாதார வளர்ச்சி	3.44	4.46	4.59
3. நல்வாழ்வு மற்றும் வீட்டுவசதி	42.20	41.63	28.44
4. பழங்குடியினர் பகுதி உபத் திட்டம்	734.12	693.13	694.00
(இ) இதரச் செலவினங்கள் (ஒன்று சேர்ந்து)	1904.59	1838.26	1983.93

08. 1993–94 ஆம் ஆண்டு காலத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் நலனுக்கு ரூ.102.65 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி அமைப்புகள் :

09. கல்வி, வீட்டு வசதிகள் மற்றும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் அளிக்கப்பெறுவதற்கு மேற்கொள்ளப்பெற்ற முயற்சிகளன்றியும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்கள் அதிக அளவில் மேம்பாடு அடைய அளவிலும் தரத்திலும் சேர்ந்து மேலும் செய்யப்பட வேண்டியவை அதிகம் உள்ளன. இப்பிரிவு வகுப்பினர்களின் பிரச்சினைகள் சிக்கல்களானவை என்பதால் நிருவாக இயந்திரம் மட்டும் போதாது என்பதுடன் இதற்குப் ஊராட்சி அமைப்புகளின் முழு ஆதரவும் முயற்சியும் இருந்தாலன்றி சமூக நீதி இலக்கை தகுந்த காலவரம்பிற்குள் எய்துவதற்கான நம்பிக்கை ஏற்படாது. மாவட்ட நிலையில் மொத்தச் செயலாக்களவு திட்டமிடுதலும் கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய நிலைகளிலும் திட்டச் செயலாக்கம் இருக்க வேண்டும். மாவட்ட அளவில் ஏற்படக்கூடிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் தேவைகள் மாவட்டத்திட்டமிடும் குழுவின் வாயிலாக அதாவது இயக்ககம், கழகம் ஆகிய இரு அமைப்புகளான மாநில அளவிலான அரசமைப்பு எனும் இயந்திரங்களால் தீட்டப்பெறும் திட்டங்களில் எதிரொலிக்க வேண்டும்.

10. அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் 73 மற்றும் 74, ஊராட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்படும் அதிகாரங்கள் பொறுப்புகள் ஆகியவற்றைக் தெரிவிப்பதுடன் அதிலுள்ள 29 இனங்களுக்கான இனம் 27 ஆனது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றைக் குறிப்பிடுவதாகும். ஆதி திராவிடர், பழங்குடியினர், அடிமைத் தொழிலாளர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர் ஆகியோருக்குப் பயனுள்ள நலப் பணிகளையும் மறுவாழ்வு பணிகளையும் அளிக்கும் நோக்குடன் மாநிலத் திட்டகுழு பிரிவானது ஊராட்சி அமைப்புகளின் 3படி நிலை அமைப்புகளிடையே பின்வரும் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் ஒப்படைப்பதற்குப் பரிந்துரைக்கிறது.

I. ஊராட்சி

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி	(i) அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் எழுத்தறிவு மற்றும் மேம்பாடு கல்வி நிலைகளை மதிப்பீடு செய்து புள்ளி விவரங்களை ஆவணமாகத் தொகுத்து ஊராட்சி ஒன்றியத் திற்கு அனுப்புதல்.
		(ii) பல்வேறு ஊக்கங்களை அளித்து கல்வியை இடையில் நிறுத்தி விடுபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நடவடிக்கை களில் உதவுதல்.
		(iii) பள்ளிக் குழந்தைகளின் நல்வாழ்வுத் தேவைகளை அளிக்க ஊரக அளவில் செயற்பட்டு வரும் திட்டங்களுக்கு உதவுதல்.
		(iv) குறைந்த விழுக்காடு மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்தல்.
		(v) மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதை, உறுதி செய்தல், பழங்குடியினர் மாணவி களுக்கிடையே குறைந்த எழுத்தறிவு பெற்றவர்களிடையே எழுத்தறிவில் முன்னேற்றமடையச் செய்தல்.

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
	(vi)	பள்ளிகள், உள்ளுறை பள்ளிகள் போன்றவற்றிற்குத் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிவறைகள், குடிநீர் வழங்குதல், வகுப்பறைகள், அறைகலன்கள், கற்பிப்பு உதவிப் பொருள்கள், அறிவியல் பரிசோதனைச் சாலைகள், தளவாடங்கள் ஆகிய அடிப்படைச் சாதனங்களையும் உள்ளமைப்பு வசதிகளையும் அளிக்க ஏற்பாடு செய்ய உறுதியளித்தல்.
	(vii)	வாழ்க்கை தொழில் பயிற்சியளிப்பதற்காக ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களைக் கண்டறிந்து அப்பட்டியலை ஊராட்சி ஒன்றியத்திற்கும், உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல்.
	(viii)	பள்ளிகள் அல்லது விடுதிகளைத் திறத்தல், பள்ளிகளை மேல்நிலைத் தகுதி பெறச் செய்தல், பள்ளி மற்றும் விடுதி கட்டிடங்கள் கட்டுதல் போன்ற தேவைகளைக் கண்டறிதல், ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலருக்கு அதனைத் தெரிவித்தல்.
2. வீட்டு வசதிகள் மற்றும் வீட்டு மனைகளுக்கு நிலத்தைக் கையகப்படுத்துதல்	(i)	வீட்டு மனைகள், வீடுகள் ஒதுக்கீடு செய்வது, ஆதி திராவிடர் குடியிருப் பிடங்களுக்குத் தேவையான அடிப்படைச் சாதனங்களுக்கு வழிவகை செய்தல் தொடர்பில் ஏற்கனவே உள்ள நிலையில் இருப்புக் கணக்கு எடுத்தல். இதில் ஏற்படும் தேவையின் இடைவெளி குறித்துக் கண்டறிந்து அத்தகவலை ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்புதல்.
	(ii)	ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு நீர் வழங்குதல், துப்புரவு, மின்சாரம், சாலைகள் அமைத்தல் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்ய உறுதியளித்தல்.
	(iii)	வீட்டுமனைகளுக்கான இடங்களைக் கண்டறிவதிலும் அரசு ஆதரவு / ஊக்க உதவித்தொகை வழங்கும் வீடுகளைக் கட்டுவதிலும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவுதல்.
3. பொருளாதார வளர்ச்சி	(i)	ஊக்குதவித் தொகை மற்றும் கடன் பெறுவதற்காக பயனாளர்களைத் தேர்ந்தெடுக்க உதவுதல்.
	(ii)	சுய வேலைவாய்ப்பு, தனிநபர் தொழில் முனைவோர் மற்றும் குழு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கான உதவியின் கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரிடையே குடும்பங்களைக் கண்டறிவதில் உதவுதல்.
	(iii)	சிறப்புக் கூறுகளடங்கிய திட்டத்தின் கீழ் பகுதித் திட்டங்களைச் செயற்படுத்துவதில் உதவுதல், ஆதி திராவிடர்

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
			பயனடைவதற்காக இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை பயன்படுத்தப்பட்டதை உறுதி செய்தல்; திட்டங்களின் முன்னேற்றத்தைக் காலமுறைப்படி மறு ஆய்வு செய்தல்.
4.	தீண்டாமையை ஒழித்தல் மற்றும்	(i)	பின்வரும் வேறுபாடு காணும் ஆதி திராவிடர் மற்றும் நடைமுறை வழக்கத்தில் தகுந்த பழங்குடியினர் எதிரான அட்டூழி நடவடிக்கைக்கு காவல்துறைக்கு புகார் யங்களை அடக்குதல் செய்ய வேண்டும். பொது குடிநீர் ஆதாரம், சுடுகாடு, கிராம தேநீரகத்தில் தனியாக பாத்திரங்களை பயன்படுத்துதல், வழிபாட்டுத் தலங்களில் செல்லுதல், முடிதிருத்துபவர், சலவை யாளர் பணிகளைச் செய்ய மறுத்தல், திருமண ஊர்வலம் செல்ல தடைசெய்தல்.
		(ii)	1955ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989ஆம் ஆண்டு பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம் ஆகியவற்றை வட்டார மொழியில் மொழி பெயர்த்து அப்படிகளைப் பகிர்ந்தளிக்க உதவுதல்.
		(iii)	தீண்டாமையை ஒழிப்பதற்கு சமூக ஆதரவைத் திரட்டுதல்.
		(iv)	நில உச்சவரம்பு விதிகளின்கீழ் தா.வ. / தா.ப.யினருக்கு வழங்கப்பட்ட நிலங்கள் உடைமையாக்கப் பெறுவதை உறுதி செய்ய உதவுதல்.
		(v)	மதிப்பற்ற மரபுத் தொழில்களான பிணத்தை எடுத்துச் செல்லல், முரசு அடித்தல், புதைக் குழியைத் தோண்டுதல் முதலியவற்றை ஆதி திராவிடர்களை வற்புறுத்திச் செய்யாமல் இருப்பதை உறுதி செய்தல்.
		(vi)	சிறு வனவிளைப் பொருள்கள், விறகு முதலியன திரட்டு பவர்களான பழங்குடியினரை வன அலுவலர்கள் தொந்தரவு செய்யாமலிருப்பதை உறுதிப்படுத்த உதவுதல்.
5.	கொத்தடிமை தொழிலாளர்களின் மறுவாழ்வு	(i)	கிராமத்திலுள்ள கொத்தடிமை தொழிலாளர்களின் எண்ணிக்கையை மதிப்பீடு செய்ய நடவடிக்கை மேற் கொள்ளுதல்.
		(ii)	1976ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம் கட்டாயமாக்கப்படுவதை உறுதி செய்தல்.
6.	துப்புரவாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ளவர் களுக்கான மறுவாழ்வு	(i)	தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் துப்புரவாளர்கள் அவரைச் சார்ந்துள்ள வர்களைக் கண்டறிய ஆய்வு நடவடிக்கை களை மேற்கொள்ளுதல்.

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
	(ii)	மனித கழிவுகளைத் தாமே சுமந்து அகன்றுகின்ற பணியிலிருந்து அவர்களை விடுவிப்பதிலும். பல்வேறு வகையான நடவடிக்கைகளுக்கு அவர்களுக்கு நிதியுதவியுடன் மறுவாழ்வு அளித்தலை உறதிப்படுத்துவதிலும் உதவுதல்.

II. ஊராட்சி ஒன்றியம்

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1. ஆதிதிராவிடர் மற்றும் மற்றும் பழங்குடியினர் கல்வி மேம்பாடு	(i)	கிராம ஊராட்சியிலிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் களுக்கிடையே உள்ள கல்வி நிலைப்பற்றிய மதிப்பீட்டு அறிக்கைகளைத் திரட்டி அவற்றை ஒருங்கிணைத்து மாவட்ட ஊராட்சிக்கு அனுப்பி வைத்தல்.
	(ii)	குறித்த காலத்தில் பாடநூல்கள். சீருடைகள். படிப்பு உதவித்தொகை வழங்குதல், மாணவர்கள், தலைமை யாசிரியர்கள் ஆகியோருக்கு ஊக்கத் தொகைகள் வழங்குதல், மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல், மேற்கண்ட ஏற்பாடு செய்தலை மேற்பார்வையிடவும், கண்காணித்தலும் செய்தல்.
	(iii)	மாணவர்களின் முன்னேற்றத்தைப் பார்வையிட்டு, அவர்களுடைய கல்வித் தரத்தை மேம்படுத்துதல், அனைத்து நிலைகளிலும் கல்வியின் தரத்தை மேம்படுத்துதலைக் கண்காணித்தல்.
	(iv)	பள்ளிகள், உள்ளுறை பள்ளிகள் மற்றும் விடுதிகள் ஆகியவற்றிற்கு அடிப்படைச் சாதனங்களையும் உள்ளமைப்பு வசதிகளையும் அளிப்பதைக் கண் காணித்தலும் மேற்பார்வையிடுதலும்.
	(v)	காலமுறைப்படி மறுஆய்வுக் கூட்டங்களை நடத்தி, இடைவெளியைக் கண்டறிந்து சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனை தெரிவித்தல்.
2. விட்டு வசதிகள் மற்றும் வீட்டு மனைகளுக்கு நிலத்தைக் கையகப்படுத்துதல்	(i)	அரசு நடத்தப்பெறும் /ஊக்குதவித் தொகை வழங்கும் / ஆதரவு திட்டங் களின் கீழ் வீடுகளைக் கட்டும்பணியை மேற்கொள்ளுதல்.
	(ii)	வீட்டுமனைகள் வழங்கல், வசதி மற்றும் சாதனங்கள் ஆகியவற்றை அளிக்க பல்வேறு துறைகளால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் சீராய்வு செய்து ஒருங்கிணைத்தல்.
3. பொருளாதார வளர்ச்சி	(i)	பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவித்தொகை மற்றும் கடன் வசதிகளுக்கு வழிவகை செய்வதை உறுதி

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
		செய்வதுடன் அவற்றை மேற்பார்வையிடுதல்,சுயவேலை வாய்ப்பிற்கு வட்டார / ஒருங்கிணைந்த பழங்குடியினர் திட்ட அளவில் உதவி செய்தல்.
	(ii)	குடும்ப அடிப்படையிலான நடவடிக்கைகளுக்கும் உள்ளமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்குமாக பழங்குடியினர் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.
	(iii)	சுயவேலை வாய்ப்பு, கூலி அடிப்படையிலான வேலைவாய்ப்பு, ஊரக துப்புரவுத் திட்டங்கள் முதலியவற்றிற்கும் நிதியைப் பயன்படுத்துவதற்கும் தா.வ./தா.ப. உறுப்பினர்களுக்கான திட்டச் செயலாக்கத்தை மேற்பார்வையிடுதல்.
	(iv)	காலமுறைப்படி சீராய்வுக் கூட்டங்களை, நடத்தி குறைகளைக் கண்டறிந்து அவற்றைச் சரிசெய்வதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளுதல்.
4. பயிற்சியும் மற்றும் வேலைவாய்ப்பும்	(i)	வட்டார நிலையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குப் பயிற்சி திட்டங்களுக்கும், சிறப்புப் பயிற்சிகளுக்கும் உதவுதல்.
	(ii)	பயிற்சித் திட்டங்களின் செயல்விளைவுகளை மதிப்பீடு செய்ய காலமுறைப் படி சீராய்வுக் கூட்டங்களை நடத்துதல்.
5. தீண்டாமையை ஒழித்தல் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எதிரான அட்டூழியங்களை அடக்குதல்	(i)	1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் குறித்த விழிப்புணர்ச்சி முகாம்களை அமைத்தல்.
	(ii)	ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2ஆம் நாள் 'தீண்டாமை ஒழிப்பு வாரம்' கொண்டாடுவதை உறுதி செய்தல்.
	(iii)	துயருற்றவர்களுக்குச் சட்ட உதவி கிடைக்க உதவி செய்தல்.
	(iv)	1989ஆம் ஆண்டு பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டத்திற்குப் பரவலான விளம்பரம் அளிக்க ஏற்பாடு செய்தல்.
6. கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்வு	(i)	ஊராட்சியிலிருந்து கொத்தடிமைத் தொழிலாளர் பற்றிய மதிப்பீட்டு அறிக்கையைத் திரட்டி, ஒருங்கிணைத்து, மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல்.
	(ii)	1976ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டத்தின்படி மறுவாழ்வு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் மற்றும் ஊராட்சிக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்தல்.

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
7.	துப்புரவாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ள வர்களுக்கான மறுவாழ்வு	(i)	கிராம நிலையில் மறுவாழ்வு நடவடிக்கைகள் செயற்படுத்தப் படுவதை மேற்பார்வை யிடுதல் மற்றும் கண்காணித்தல்.
		(ii)	துப்புரவாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் தடையின்றி ஆதாயங்கள் கிடைக்கப் பெறுவதை மதிப்பிட மறுஆய்வுக் கூட்டங்களை நடத்துதல்.

III. மாவட்ட ஊராட்சி

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திற்கு திட்டமிடல்	(i)	ஆதி திராவிடர், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் துப்புரவாளர்கள் ஆகியோருக்குத் தொடர்புள்ள ஆவன விவரங்கள், மதிப்பீடுகள், புலனாய்வு, அறிக்கைகள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து திரட்டுவதுடன், ஆண்டறிக்கையையும் தயாரித்தல்.
		(ii)	ஆதி திராவிடர், பழங்குடியினர், கொத்தடிமை தொழிலாளர்கள் மற்றும் துப்புரவாளர்கள் ஆகியோரின் நலனிற்கு ஆண்டு தகுதி நிலை அறிக்கையைத் தயாரித்தல்.
		(iii)	ஊராட்சி / ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றிற்கு திட்டம் / தொழில்நுட்பம் தொடர்பான வழிக்காட்டுதல்களை அளித்தல்.
		(iv)	ஆதி திராவிடர், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள், துப்புரவாளர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் பணிகள் மீதான ஆய்விற்காகவும் சமுதாய நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளர்களிடமிருந்து கருத்துக்களையும் உதவிகளையும் பெறுவதற்காக வேண்டிக் கேட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
		(V)	ஆதி திராவிடர், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான மேலாண்மைத் தகவல் அமைப்பு முறையை மாவட்ட அளவிலான அடிப்படை விவரங்களின் பேரில் உருவாக்குதலும் அதனை மேம்படுத்துதலும்.
2.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி மேம்பாடு	(i)	ஆதி திராவிடர், பழங்குடியினரின் கல்வித் தகுதிநிலைப் பற்றிய ஆண்டறிக்கைகளைத் தயாரித்தல்.
		(ii)	ஆதி திராவிடர், பழங்குடியினருக்கான கல்வி வசதிகளுக்கு வழிவகை செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்தல்.

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
		(iii)	காலமுறைப்படி சீராய்வுக் கூட்டங்களை நடத்தி இடைவெளியைக் கண்டறிந்து அவற்றைச் சரிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
3.	வீட்டுவசதிகள் மற்றும் வீட்டுமனைகளுக்கு நிலத்தைக் கையகப்படுத்துதல்	(i)	ஆதி திராவிடர், பழங்குடியினருக்கும் வீடு மற்றும் வீட்டுமனை வசதிகள் அளிக்கப்பெறுவதையும், அவர்கள் குடியிருப்பிட மிடங்களில் அடிப்படை வசதிகள் செய்து தருவதையும் கண்காணித்தல்.
		(ii)	வசதிகளையும் சாதனங்களையும் அளிப்பதில் பல்வேறு துறைகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுவதைக் கண்காணித்தல்.
4.	பொருளாதார வளர்ச்சி	(i)	ஆதி திராவிடர், பழங்குடியினர், நாகரிகம் குறைந்த பழங்குடிகள் ஆகியோருக்கான பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வேலைவாய்ப்பு வசதிகள் ஆகியன அளிக்கப் பெறுவதைக் கண்காணித்தல்/மற்றும் செயலுரிமை வரையறுப்பதற்கான ஏற்பாடுகளுக்கு உதவி செய்தல்.
		(ii)	மேம்பாட்டுப் பிரிவுகளின் வகுத்தமைக்கக்கூடிய அனைத் –திற்குமான சிறப்பு கூறுகளடங்கிய திட்டத்தைச் செயற்படுத்துவதைக் கண்காணித்தல்.
		(iii)	காலமுறைப்படி சீராய்வு கூட்டங்களைக் கூட்டிக் குறைகளைக் கண்டறிந்து அவற்றைச் சரிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
5.	பயிற்சியும் மற்றும் வேலைவாய்ப்பும்	(i)	பயிற்சித் திட்டங்கள், சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றைச் செயற்படுத்துவதைக் கண்காணித்தல்.
6.	தீண்டாமையை ஒழித்தல் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எதிரான அட்டூழியங்களை அடக்குதல்.	(i)	ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு எதிரான தீண்டாமையை அழித்தல், அட்டூழி யங்களை அடக்குதல் ஆகியவை தொடர்பில் ஊராட்சி ஒன்றியம் மேற்கொள்ளும் நடவடிக்கை –களைக் கண்காணித்தல்.
		(ii)	மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து சீராய்வுக் கூட்டங்களை கூட்டி சரி செய்வதற்கான நடவடிக்கைக்குக் கருத்துக் கூறுதல்.
7.	கொத்தடிமை தொழிலாளர்களின் மறுவாழ்வு	(i)	ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்று ஒருங்கிணைத்து அரசுக்கு அனுப்பி வைத்தல்.
		(ii)	1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டத்தின்படி மறுவாழ்வு நடவடிக்கைகளைச் செயற்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதுடன் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவி செய்தல்.

	நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
		(iii)	சீராய்வுக் கூட்டங்களை நடத்தி இடைவெளியைக் கண்டறிந்து சரிசெய்யும் நடவடிக்கை குறித்து ஆலோசனை கூறுதல்.
8.	துப்புரவாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ளவர் களுக்கான மறுவாழ்வு	(i)	ஊராட்சி ஒன்றிய நிலையில் துப்புரவாளர்கள் நலம் மற்றும் மறுவாழ்வு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.

நிருவாகம், நிதி மற்றும் சட்டச் சிக்கல்கள்

11. தற்பொழுது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் திட்டங்களை, மாவட்ட நிலையில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் செயற்படுத்தி வருகின்றனர். மாநில நிலையில் தனி இயக்ககமும் மற்றும் கழகமும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நல சமூகப் பொருளாதார வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களை மேற்கொள்கின்றன. மாநில அளவிலான அமைப்பானது அதாவது இயக்ககமும், கழகமும் சேர்ந்து ஊரகப்பகுதிகளிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் தேவைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டுவனவாகும். ஊராட்சி அமைப்புகளானது திட்டங்களைச் செயற்படுத்தும் பொழுது தொழில்நுட்ப உதவிகளை இயக்ககத்தாலும், நிதியுதவி கழகத்தாலும் அளிக்கப்பெறவேண்டும். இருந்தபோதிலும், எந்தவொரு காரணத்திற்காக வேனும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திட்டங்களை மாவட்டத்தில் நிருவாகத்துறையால் அல்லது கழகத்தால் மாநில அளவில் செயற்படுத்தப்படுவதற்காகத் தக்கவைத்துக் கொள்ளப்பட்டிருந்தால் இத்திட்டங்கள் பற்றிய முழு விவரங்களும் மாவட்ட ஊராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் அளிக்கப்பெறவேண்டும். மேலும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 114 (2) இன் கீழ் ஊராட்சி ஒன்றியங்கள் இத்திட்டங்களை கால முறைப்படி சீராய்வு செய்வதற்கான அதிகாரங்களைப் பெற்றிருக்கவும் வேண்டும். ஆண்டு முழுவதும் அமைதியும் நல்லிணக்கமும் இருந்து வரும் இத்தகைய ஊராட்சிகளுக்கு கூடுதல் வளர்ச்சி உதவி என்ற வகையில் ஆண்டு ஊக்க உதவித்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படலாம். 1989 ஆம் ஆண்டு பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் வேண்டப்படும் தேவையின்றி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான அட்டூழியங்கள் நடைபெறாமலும் வேறுபாடு காட்டப்படாமலும் இருக்குமிடத்தும் இத்தகைய ஆண்டு ஊக்குதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்படலாம்.

12. இவைகளை செயற்படுத்துவதற்குக் கவனம் செலுத்தப்பட்ட வேண்டுவதுடன், தொடர்புள்ள சமூகங்களின் நம்பிக்கையை உயர்த்துவதற்காக சிறப்புக்கூறு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித்திட்டம் ஆகியவைகளின் ஒதுக்கீடுகளை குறிப்பிட்டு வைத்திருக்கப்படவேண்டும். அவ்வொதுக்கீட்டை சரிக்கட்டுதல் செய்ய வேண்டியிருப்பின் ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் பழங்குடியினர் ஆகிய சமூக சார்பாளர்களின் இசைவுடன் செய்யப்பட வேண்டும்.

13. ஒன்பதாவது திட்டம் முடிவுறும் முன்னர் இந்த பொருள் பற்றி அரசு மறு ஆய்வு செய்ய வேண்டும்.

பொது விநியோக முறை

(இனம் - 28)

01. இன்றியமையாப் பொருட்கள் எளிதில் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்தவும், வாங்கத்தக்க விலைகளில் அத்தகையப் பொருட்களைப் பெறுவதில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு ஏற்பட்டுள்ள துயரைப் போக்கவும், பொதுப் பகிர்வு முறையைத் திறம்படவும், தடங்கலின்றியும் செயல்படுத்த அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. பொது விநியோக முறையானது எல்லோரது தேவைகளையும் அவர்களின் எதிர்பார்ப்புகளையும், விருப்பங்களையும் நிறைவு செய்வதாக இருக்கவேண்டும்.

02. பொது விநியோக முறையானது பொருட்கள் எப்போதும் கிடைக்கக்கூடிய தன்மை, எளிதில் பெறக்கூடிய தன்மை ஏற்றுக்கொள்ளக்கூடிய தரம், வாங்க இயலக்கூடிய தன்மை ஆகிய நான்கு காரணக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இம்மாநிலத்தில் பொது விநியோக முறையின் விரிவான அமைப்புப் பணியில் 22,959 நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன. அவற்றில் 17,206 கடைகள் ஊரகப் பகுதிகளிலும், 5753 கடைகள் நகர்ப்புறங்களிலும் இருக்கின்றன. 21,881 கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், நகர்ப்புறங்களில் 1078 கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்படுகின்றன. வருவாய் கிராமம் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு நியாய விலைக் கடை உள்ளது. மாநில அரசின் அளவுகோளின்படி வளம்பெறத்தக்கதொரு நியாய விலைக் கடையானது குறைந்தது 800 குடும்ப அட்டைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். இருப்பினும், நெடுந்தொலைவிலுள்ள பகுதிகளில் வசிக்கும் குடும்ப அட்டை தாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 15,000–க்கு மேற்பட்ட கடைகள் ஒவ்வொன்றும் 800–க்கும் குறைவான குடும்ப அட்டைகளுடன் செயல்படுகின்றன. இதனால் ஏற்படும் இழப்பினை அரசும், தொடர்புடைய கூட்டுறவுச் சங்கங்களும் பகிர்ந்து கொள்கின்றன.

03 மேற்கூறிய விரிவான அமைப்புப் பணிகள் தவிர, இரு கடைகளுக்கிடைய உள்ள தொலைவு 3 கிலோ மீட்டருக்கும் கூடுதலாக இருக்குமிடங்களில், பகுதி நேர நியாயவிலைக் கடை ஒன்றினைத் திறக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தினை கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அரசு வழங்கியுள்ளது. அவ்வாறு பகுதிநேரக் கடை ஒன்றினைத் திறப்பதற்கு அக்கடை நடத்துவதற்கான கட்டிடத்தை வாடகையின்றி பெற வேண்டும். மேலும், இக்கடைக்காகத் தனியாக விற்பனையாளரை நியமிக்கக்கூடாது. அருகில் இருக்கும் கடையில் உள்ள விற்பனையாளரே இப்பகுதி நேரக் கடையையும் கவனித்துக் கொள்வார். இம்முறையில் 1,783 பகுதி நேரக் கடைகள் மாநிலத்தில் தற்போது செயல்படுகின்றன.

04. அணுகமுடியாத மலைப்பகுதிகளிலும் மற்றும் தொலைதூரத்திலும் வசிக்கும் பொதுமக்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு 30 நடமாடும் நியாய விலைக் கடைகள் கீழ்காணும் மாவட்டங்களில் செயல்படுகின்றன. திருநெல்வேலி கட்டபொம்மன் (2), திண்டுக்கல் அண்ணா (2). வட ஆற்காடு அம்பேத்துகர் (3), பெரியார் (2), நீலகிரி (6), திருச்சிராப்பள்ளி (1), சேலம் (5), தருமபுரி (1), கோயம்புத்தூர் (5), திருவண்ணாமலை சம்புவராயர் (1), விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் (2). முன்னோடி திட்டமாக, தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் தானே முன்வந்து பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஒன்றினை அரசு தொடங்கியுள்ளது. இதன்படி, பொது விநியோக முறையின் கீழ் பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் சில்லறைக் கடைகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்ப்பணியாற்றும் மகளிர் அல்லது கிராமப்பகுதிகளில் மகளிர் – குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டங்களின் கீழ் மகளிரால் தொடங்கப்பட்டுள்ளது. 31.5.96 – ஆம் நாள் நிலவரப்படி இத்தகைய 135 துணை சில்லறை விற்பனைக்கடைகள் இயங்கி வருகின்றன. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் (5), வட ஆற்காடு அத்பேத்துகர் (12), திருவண்ணாமலை சம்புவராயர் (10), தருமபுரி (10), சேலம் (8), பெரியார் (1), நீலகிரி (4), தென்னாற்காடு வள்ளலார் (4), விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் (7), நாகப்பட்டினம் காயிதேமில்லத்து (10), திருச்சிராப்பள்ளி (8), புதுக்கோட்டை (5), மதுரை (21), இராமநாதபுரம் (6), காமராஜர் (2), பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் (4), திருநெல்வேலி கட்டபொம்மன் (8), கன்னியாகுமரி (10).

05. அரிசி. கோதுமை. மைதா. ரவை. சர்க்கரை. மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருட்கள், குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்குப் பொது விநியோக முறையின் கீழ் முறையாக வழங்கப்படுகின்றன. மாநில அரசுக்கு மத்திய அரசு பாமாலின் ஒதுக்கீடு செய்யும்போதெல்லாம் பொது மக்களுக்கு பாமாலின் வழங்கப்படுகிறது.

06. பொது விநியோக முறை இயங்குவதில் உள்ள நான்கு நிலைகள் பின்வருமாறு :

(அ) சட்டப்படியான செய்கடமைகள் (உணவுப் பொருள் வழங்கல் ஆணையரால் செயலாக்கப்படுகின்றன) ;

(ஆ) மொத்த விற்பனை செய்கடமைகள் (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் செயலாக்கப்படுகின்றன) ;

(இ) சில்லறை விற்பனைச் செய்கடமைகள் (கூட்டுறவுச் சங்கங்களாலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் செயலாக்கப்படுகின்றன) ;

(ஈ) சட்டப்படி அல்லாத கண்காணிப்பு / மேற்பார்வை செய்கடமைகள் (மாவட்ட ஆட்சியர்களால் அமைக்கப்பட்ட உள்ளூர் குழுக்களால் செயலாக்கப் படுகின்றன).

இந்திய அரசமைப்புச்சட்டத்தின் 73, 74 ஆவது திருத்தங்களில் 11/12 ஆம் விவர அட்டவணைகளின் கீழ் சொல்லியுள்ளவாறு, பொது விநியோக முறையில் அதிகாரங்களைக் கிராமப்பகுதிகளுக்கும். நகர்ப்பகுதிகளுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்துக் கொடுப்பது குறித்து அரசு கருதிப்பார்த்து. சட்டப்படி அல்லாத கண்காணிப்புச் செய்கடமையை மட்டும் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. கிராமப்பகுதியிலுள்ள பெரும்பான்மையான கடைகள் இழப்பில் இயங்குகின்றன. இதற்கு அரசு உதவித்தொகை கிடைக்கிறது என்றாலும் பல நேரங்களில், பல ஆண்டுகளுக்குப் பின்னரே இவ்வுதவித்தொகையானது சில நேரங்களில் வழங்கப்படுகிறது. மேலும், வங்கிகளிடமிருந்து ரொக்கக் கடனுதவி பெற்ற வணிக நடவடிக்கையாகவே இக்கடைகள் இயங்கி வருகின்றன. சட்டப்படியான செய்கடமைகள் மற்றும் மொத்த விற்பனை தொடர்பான செய்கடமைகள், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத் திறனுக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள் என்று அரசு கருதுகிறது. எனவே, சட்டப்படி அல்லாத கண்காணிப்பு / மேற்பார்வைப் பணிகளை மட்டும் உள்ளாட்சி அமைப்புகளிடம் பிரித்துக் கொடுக்க குறிப்பான அரசாணை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை எண் 84, கூட்டுறவு. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, (உரு1) நாள் 4.4.96.

07. பொது விநியோக முறையினை சீரமைத்துத் திறம்படவும் சிக்கனத்துடனும் செயற்படுத்த மாநில அரசு குழு ஒன்றினை அமைத்துள்ளது. குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் மக்களை இலக்காகக்கொண்டு பொது விநியோக முறையைச் சீரமைக்க மத்திய அரசு கருதியுள்ளது. வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் மக்களையும் மற்றும் ஏனைய மக்களையும் இரு பிரிவாகக் கருதி இரண்டுவித விலைகளில் விநியோக முறையில் பொருட்களை வழங்கவும் அரசு கருதி வருகின்றது. குறிப்பிட்ட பிரிவினரை இலக்காகவும் மற்றும் இருவித விலைகளும் திருத்திய கொள்கையாக அரசு அறிவிக்கும் நேரத்தில், குறிப்பிட்ட பிரிவினர்களை பகுப்பாய்ந்து அறிவது தேவையான ஒன்றாகும்.

08. மாநில திட்டக்குழு பிரிவின் நோக்கில் பொதுப் பகிர்வு முறையின் செயல்பாடு ஒரு பொருளாதார நடவடிக்கை என்பதால். அதே வேலைகளைக் கையாலும் அமைப்புகள் சிறப்பாக செய்ய முடியும். சேவை நோக்கோடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஊராட்சிகள், சமூக அரசியல் அமைப்புகளாகும். கூட்டுறவுச் சங்கங்கள் ஊராட்சிகளைப் போல மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையாகும். ஊராட்சிகளைப் போல் அல்லாமல் கூட்டுறவுச் சங்கங்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. பெரிய அளவிலும், நெடுங்காலமாகவும் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. இவ்விதமாக, அதன் நிகரப்பயனானது, மாநில திட்டக்குழு பிரிவின் கருத்தில் கூட்டுறவுச் சங்கங்களுடான இப்போதைய ஏற்பாடுகளைத் தொடர வேண்டும் என்றுள்ளது.

9. இருந்தபோதிலும், பொது விநியோக முறையானது அனைவருக்கும் வாய்ப்பளிக்கத் தக்கவாறு இருக்க வேண்டும். இயங்கும் ஆற்றலுடையதாகவும், தெளிவாகத் தெரிகின்றதாகவும் அது இருக்க வேண்டும். ஊராட்சி அமைப்புகள் நேரடியாகவும், குடும்ப அமைப்புகளையும் அவர்களுக்குரிய இன்றியமையாப் பொருள்களின் தேவைகளையும் மிகவும் அறிந்ததாய் இருக்க வேண்டும். ஆகையால், மேலே சொல்லப்பட்ட நோக்கங்களை எய்தவும், அதன் செயற்பாட்டில் உள்ள நேர்மையில் பொதுமக்களின் தன்னம்பிக்கையானது மேம்படவும் பொது விநியோக முறையானது செயலாக்கமுடைய ஊராட்சி அமைப்புகளுடன் இணைக்கப்படுதல் வேண்டும். இத்தேவையில் கவனம் செலுத்தி, இம்மாநிலத்தில் உள்ள பொது விநியோக முறையின் தகுநிலையினையும், இப்பொருண்மை குறித்த சட்டஞ்சார்ந்த வழிவகைகளையும் கருத்திற்கொண்டு ஆய்ந்ததில் பின்வரும் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு முறைப்படி உரிமையாக்கலாமென மாநிலத் திட்டக்குழு பிரிவு கருத்துரை அளிக்கின்றது.

I. ஊராட்சி

நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1. பொது விநியோக முறைக்கான இலக்குத் தொகுதியை அடையாளம் காணல்.	(அ) அரசு அறுதியிட்ட அளவுகோளின்படி வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பத் தினரைக் கண்டறிந்து, அப்பட்டியலைப் பெற்று கிராம சபையால் அதற்கு உரியவாறு ஏற்பளித்தல் / பின்னேற்பு அளித்தல்.
2. பொது விநியோக முறைத் திட்டத்தின் கீழ் எளிதில் கிடைக்கும் தன்மை மற்றும் இன்றியமையாப் பொருள்களின் நடமாட்டம், தேவை ஆகியவற்றை மதிப்பிடுதல்.	(அ) பொருள்களின் இருப்பு விவரம், விலை விவரம், விநியோக அளவு (மாதத்திற்கு ஒருவருக்கு), பொருள்கள் வழங்கக் கூடிய காலங்கள் போன்ற விவரங்களை மக்கள் அறியும் வண்ணம் தெரியப்படுத்துதல். (ஆ) இன்றியமையாப் பொருள்கள் எப்போதும் கிடைக்கச் செய்யவும் அதனை கொண்டு செல்வதில் ஆய்வு செய்து ஒருங்கிணைத்தல். பொருட்களின் கூடுதல் தேவையை உள்ளூர் மக்களின் தேவைக்கேற்ப கண்டு உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தல்.
3. நியாய விலைக்கடைகளை நடத்துதல் மற்றும் பராமரித்தல்	(அ) ஊராட்சிகள் முன் வரும் போதெல்லாம் பகுதிநேர நியாய விலைக் கடைகளை நடத்துதல் மற்றும் பராமரித்தல். (ஆ) புதிய நியாய விலைக்கடைகள் அமைக்க உள்ள பகுதியைத் தேர்ந் தெடுக்க உதவுதல்.
4. போக்குவரத்து, சேமித்து வைத்தல் மற்றும் விநியோக முறை	(அ) புதிய குடும்ப அட்டைகள் வழங்க உதவுதல் ; போலி குடும்ப அட்டைகளை அடையாளங் கண்டு அதனை ஒழித்தல்.
5. பொது மக்கள் நம்பிக்கையை உயர்த்துதல் மற்றும் குறைதீர்த்தல்	(அ) கிராம அளவில் பொதுப் பகிர்வு முறை விசாரணைக் குழு அமைத்தல், நியாய விலைக்கடைகளை சோதனை செய்தல், ஒழுங்கீனங்களையும் முறை கேடுகளையும் வட்டார வழங்கல் அலுவலகம் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திடம் அறிவித்தல்.

6.	வறுமையை நீக்கும் திட்டங்களுடன் பொது விநியோக முறையை தொடர்பு படுத்துதல் (ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், தீவிரமான ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை உறுதித் திட்டம் முதலியன)	(அ) தேவைப்படும் உணவு தானியங்களின் அளவினை மதிப்பிட உதவுதல்.
		(ஆ) உணவு தானியங்களை பயனடைவோர் களுக்கு பிரித்து வழங்க உதவுதல்.
		(இ) பயனடைவோர்களுக்கு பிரித்து அளிக்க வேண்டிய உணவு தானியங்களின் அளவினையும், தரத்தையும் கவனித்து கொள்ளுதல்.
		(ஈ) ஒழுங்கீனங்களையும், முறைகேடு களையும் கண்டுபிடித்தால் அதனை சரி செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
7.	நுகர்வோர் பாதுகாப்பும் கல்வியும்	(அ) நுகர்வோர் உரிமைகளைப் பற்றி அச்சிட்ட வெளியீடுகளை வழங்குதல் மற்றும் காட்சிக்கு வைத்தல்.

II. ஊராட்சி ஒன்றியம்

	நடவடிக்கை	அதிகார ஒப்படைப்பு
1.	பொது விநியோக முறைக்கான இலக்குத் தொகுதியை அடையாளம் காணல்.	(அ) ஊராட்சியின் பணியான வறுமை கோட்டின் கீழ் வாழும் மக்களை அடையாளம் காணுவதில் வழி காட்டியாகவும் ஒருங்கிணைப்பு பணியும் புரிதல்.
2.	பொது விநியோக முறைத் திட்டத்தின் கீழ் எளிதில் கிடைக்ககூடிய தன்மை மற்றும் இன்றியமையாப் பொருள்களின் நடமாட்டம், தேவை ஆகியவற்றை மதிப்பிடுதல்.	(அ) இன்றியமையாப் பொருட்களை கொண்டு செல்லுதல் மற்றும் அதனை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் எப்போதும் கிடைக்கச் செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் உதவி செய்தல்.
		(ஆ) ஊராட்சிகளுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களை உறுதிப் படுத்துதல் வேண்டும். அப்பொருட்கள் கிடைத்திடவும் மற்றும் அதனை கொண்டு செல்ல அதற்குரிய அதிகாரிகளை கண்டு பின்பற்றுதல்.
3.	நியாய விலைக்கடைகளை நடத்துதல் மற்றும் பராமரித்தல்	ஒன்றும் இல்லை
4.	போக்குவரத்து, சேமித்து வைத்தல் மற்றும் விநியோக முறை	(அ) புதிய நியாய விலைக்கடைகளை இதன் அதிகார எல்லையில் திறக்க ஒருங்கிணைப்பு நல்கி உதவுதல்.
		(ஆ) சேமிப்பு கிடங்குகளை நிறுவுவதற்கு உரிய இடத்தினையும் அதற்குரிய நிலத்தினையும் தேர்தெடுக்க உதவுதல்.

		(இ) ஊராட்சிகள் புதிய குடும்ப அட்டை வழங்குவதற்கும் மற்றும் போலி குடும்ப அட்டைகளை நீக்கவும் வழிகாட்டுதல்.
5.	பொது மக்கள் நம்பிக்கையை உயர்த்துதல் மற்றும் அவர்களின் மனக்குறையைத் தீர்த்தல்	(அ) நிர்ணயிக்கப்பட்ட கொள்கையின்படி பொதுப் பகிர்வு முறை சுமூகமாக நடைபெறுகின்றதா என்பதை குறிப்பிட்ட காலங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்வதற்கு பொது விநியோக முறைக் குழு அமைத்தல், ஊராட்சி ஒன்றியத்திற்கு பொது விநியோக முறை சம்பந்த மாக வழங்கும் பொருள்களின் விவரங் களை வட்டார வழங்கல் அலுவலகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் பிற அலுவலகங்கள் கொடுக்கும்.
		(ஆ) குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை ஊராட்சி மூலம் பெறும் அறிக்கையை ஆய்வு செய்து அதன் மேல் நடவடிக்கை எடுத்தல்.
6.	வறுமையை நீக்கும் திட்டங்களுடன் பொது விநியோக முறையை தொடர்பு படுத்துதல் (ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், தீவிரமான ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை உறுதித் திட்டம் முதலியன)	(அ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், தீவிரமான ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை உறுதித் திட்டம் முதலியன திட்டங்களுக்கு கூலியின் ஒரு பகுதியாக வழங்கக்கூடிய உணவு தானியங்களின் தேவை விவரங்களைக் ஊராட்சிகளிடம் இருந்து சேகரித்தல்.
		(ஆ) ஊராட்சிகளுக்குத் தேவையான அளவில் உணவு தானியங்களை வழங்கல் மற்றும் பங்கீடு செய்தலை உறுதிப் படுத்துதல்.
		(இ) பயனடைவோர்களுக்கு கொடுக்கக் கூடிய உணவு தானியங்களைக் கொண்டு செல்லுதல் மற்றும் பங்கீடு செய்வதைக் கண்காணித்தல்.
7.	நுகர்வோர் பாதுகாப்பும் கல்வியும்	(அ) நுகர்வோர் உரிமைகளை ஊக்குவிக்கும் பணியில் ஊராட்சிகளுக்கு உதவி செய்தல்.

III. மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை		அதிகார ஒப்படைப்பு
1.	பொது விநியோக முறை திட்டத்தின் கீழ் இன்றியமையாப் பொருள்கள் எளிதில் கிடைக்கச் செய்தலும், நடமாட்டமும், தேவையை மதிப்பிடுதலும், நியாய விலைக் கடைகளை நடத்துதலும் பராமரித்தலும், போக்குவரத்து, சேமித்து வைத்தல் மற்றும் வழங்கு முறை, பொதுமக்களின்	(அ) மாவட்டத்தில் உணவுப் பொருள்களை வழங்குதல், எளிதில் கிடைத்திடல், பகிர்வு போன்ற ஏற்பாடுகளை மறு ஆய்வு செய்தல்.
		(ஆ) இருப்பு வைத்தல், போக்குவரத்து வசதிகள் உள்ளிட்டப் பொதுப் பகிர்வு முறையின் செயற்பாடுகளை மறு

	நம்பிக்கையை உயர்த்துதலும் மோசக்குறைவைப் போக்குவதும், வறுமையை நீக்கும் திட்டங்களுடன் பொதுப் பகிர்வு முறையைச் சேர்த்தல்	ஆய்வு செய்தல்.
		(இ) ஊராட்சி ஒன்றியங்கள் அளிக்கும் அறிக்கைகளின் அடிப்படையில் நியாய விலைக்கடைகளில் இன்றியமையாப் பொருள்கள் எளிதில் கிடைக்கச் செய்தலை மாவட்ட வழங்கு அலுவலர், கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து மாவட்டங்களுக்குள் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு இன்றியமையாப் பொருள்கள் எளிதில் செல்லுவதை உறுதி செய்தல்.
		(ஈ) நுகர்வோரின் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்காக மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுதல்.
2	உள்ளூர் உணவு தானிய உற்பத்தியின் மதிப்பை உயர்த்த நீண்ட காலத் திட்டமிடலும் மாவட்ட அளவிலான உணவைப் பாதுகாத்தலை உறுதிப்படுத்துதலும்.	(அ) மாவட்டத்தில் பற்றாக்குறையை விஞ்சி உணவு தானிய உற்பத்தியை மேம்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயல் படுத்துதல்.
		(ஆ) பொது உரிமை நலக்குழுவால் உணவு தானியங்களை கையிருப்பில் வைத்துக் கொள்வதற்கான திட்டங்களை உருவாக்குதல்.

நிருவாகச் சிக்கல்கள் :

10. உணவு தானியங்களை உரிய நேரத்திலும், செயலாக்கமுடனும் பயனுறுதியுடனும் எடுத்துச் செல்லவும், இருப்பு வைக்கவும், பகிர்ந்தளிக்கவும் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம், மாவட்ட வழங்கு அலுவலகங்கள் மற்றும் தமிழ்நாடு பண்டசாலைக் கழகம் ஆகியவற்றுடன் மாவட்ட ஊராட்சிகள் சிறந்த தொடர்பினை கூட்டுறவு அமைப்புகள் வளர்த்துக் கொள்வது தேவையானதாகும். ஊராட்சி ஒன்றிய அளவில், இதுபோன்ற ஒருங்கிணைப்பினை வட்ட வழங்கு அலுவலருடனும் பிற முகமைகளின் பணித் துறையைச் சார்ந்தவர்களுடனும் பொது விநியோக முறை தடங்களின்றி செயற்படுவதை உறுதிப்படுத்த வேண்டியதும் தேவையானதாகும். ஊராட்சி அளவில், பகுதி நேர நியாய விலைக் கடை களை நடத்திட ஒருவர் கூட இல்லாது இருக்கின்ற அத்தகைய நியாய விலைக் கடைகளைக் ஊராட்சிக்கு மாற்றம் செய்வதும் தேவையானதாகும். அதுபோன்ற நேர்வுகளில் கூட்டுறவு முன்னிலைப் பாட்டினைத் திரும்பப் பெற்றுக் கொள்வது பொருத்தமானதாகும். ஊராட்சியானது அதன் பணியாளரையும் அவ்விடத்தில் அமர்த்திக் கொள்ளலாம். ஆகையினால், கூட்டுறவு அமைப்புகளால் செயற்படுத்தப்பட்டு வரும் பகுதி நேரக் கடைகளை (1783) ஊராட்சிகள், அவர்கள் முன்வருவாரேயாயின், எடுத்துக் கொள்ளலாம். பகுதி நேரக் கடைகளுக்குக் கூட்டுறவு அமைப்புகள் தெரிப்பட்ட விற்பனையாளர்களை அமர்த்திக் கொள்ள இயலாதென்பதால், அத்தகைய கடையை இயக்கும் ஊராட்சிக்கு நிர்வாக வசதிக் குறைவுகளை ஏற்படுத்தாது என்பதுடன் எளிதில் அணுகத்தக்க தன்மையினையும் மேம்படுத்தும்.

11. பொது மக்கள் நம்பிக்கையை மனதில் பதியச் செய்யும் வகையிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்பு கிடங்கில் இருந்து நியாய விலைக்கடைகளுக்கு பொருட்கள் கொண்டு செல்லும் பொழுது ஏற்பட க்கூடிய ஒழுக்குகளைத் தவிர்க்கவும், நண்பகல் உணவு மையங்களில் இப்போது செய்யப்படுவதனைப் போன்று

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திங்கள் தேவை பட்டியைப் பெற்றும், ஏற்புடைய போக்குவரத்து வழித்தடங்களை மேம்படுத்தியும், நியாய விலைக் கடைகளில் பொருள்களை வழங்க வேண்டுமெனக் கருத்துரைக்கப் பெறுகிறது.

12. மத்திய அரசு பொறுப்பேற்றுப் பங்கு கொள்ளும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், தீவிர ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை உறுதி அளிக்கும் திட்டம் மற்றும் இதனைப் போன்ற பிற வேலை வாய்ப்புப் பெருக்க திட்டம் ஆகியவற்றின் கீழ் தொழிலாளர்களின் கூலியில் ஒரு பகுதியாக உணவு தானியங்கள் வழங்கப்படுவது அடிப்படையான ஆக்கக்கூறாகும். இத்தகைய வேலை வாய்ப்புப் பெருக்க திட்டங்களை ஊராட்சி அமைப்புகள் நிறைவேற்றுவதற்குரியதாகும். இந்த விதமாக, உள்ளூர் நியாய விலைக் கடைகளில் இருந்து உணவு தானியங்களை தொழிலாளர்களுக்கு வழங்க ஊராட்சிகள் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

நிதிச் சிக்கல்கள்

13. கூட்டுறவு சங்கங்களால் நடத்தப் பெறும், நட்டத்தில் இயங்கும் கிராம நியாய விலைக் கடைகளுக்கும், நகர்ப்புற நியாய விலைக் கடைகளுக்கும் ஊக்குதவித் தொகை அளிக்க அரசு ஒப்பளிப்புச் செய்கின்றது. 1994 –95 ஆம் ஆண்டுக்காக, கிராம நியாய விலைக் கடைகளுக்காக ஊக்குதவித் தொகையாக ரூ.7.13 கோடி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. 1995 –96 ஆம் ஆண்டின் போது 1991 –92 முதல் 1993 –94 ஆம் ஆண்டுகளுக்காக ஊரக நியாய விலைக் கடைகளுக்காகவும், 1990–91 முதல் 1994–95 ஆம் ஆண்டுகளுக்காக நகர்ப்புற நியாய விலைக் கடை களுக்காகவும் ஊக்குதவி நிலுவைத் தொகையாக ரூ.15 கோடியை அரசு விடுவித்துள்ளது. 1995–96 ஆம் ஆண்டுக்கான ரூ.11.07 கோடி ஊக்குதவித் தொகையை ஒப்பளிப்புச் செய்வதற்கான கருத்துரு அரசின் தீவிர ஆய்வில் உள்ளது. இப்பகுதி நேர நியாய விலைக் கடைகள் ஊராட்சிகளுக்கு மாற்றப்படும் போது, கூட்டுறவு அமைப்புகளுக்கு இப்போது அனுமதிக்கப்படும் ஊக்குதவிகளை ஊராட்சிகளுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

14. கூட்டுறவு அமைப்புகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவை வாயிலாக இன்றியமையாப் பொருள்களை உரியவாறு விற்பனை செய்ய இப்போது அனுமதிப்பது ஊராட்சிகளுக்கும் பொருந்துவதாகும்.

சட்டச் சிக்கல்கள்

15. அதிகாரங்களை ஊராட்சிகளுக்கு மாற்றப்படும் நேர்வில் இன்றியமையாப் பொருள்கள் சட்டமும், அதன் கீழ் வெளியிடப்பெற்ற பொருள் வாரியான அறிவிக்கைகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஒப்பந்த இனங்களின் குறிப்புத் தொகுதியும் சங்க அமைப்பு விதிகளும் இன்றியமையாப் பொருள்களைப் பகிர்ந்தளித்துச் செயலாட்சி செய்வதைத் தடை செய்யாது. கிராம ஊராட்சிகள் உரிய சில்லறை விற்பனை உரிமத்தை இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ் பெறுதல் வேண்டும். மூன்று உரிமங்களை (அ) உணவு தானியங்கள் (ஆ) சர்க்கரை (இ) மண்ணெண்ணெய் ஆகியவற்றிற்கு, பெறுதல் வேண்டும்.

16. நியாய விலைக் கடைக்கான கண்காணிப்புக் குழுவை அமைப்பது தொடர்பில் 8–8–1995 ஆம் நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 289 (நிலை) எண்ணிட்ட அரசாணையைத் திருத்தியமைத்தல் வேண்டும். கண்காணிப்புக் குழுவின் செய்கடமைகள் அனைத்தையும் அரசாணையில் குறிப்பிடப் பெற்றவாறு கடையளவில் நடைமுறைப் படுத்த ஊராட்சிக்கு அரசு அதிகாரமளித்தல் வேண்டும். மாவட்ட அளவிலான நுகர்வோர் பாதுகாப்புக் குழு ஒன்றினை 5–11–96 ஆம் நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 616 (நிலை) எண்ணிட்ட அரசாணையில் அமைக்கப்பட்டுள்ள போதிலும், பொதுப் பகிர்வு முறையானது தடங்கலின்றி செயற்படுவதனை மறு ஆய்வு செய்வதற்கு ஊராட்சி ஒன்றிய, மாவட்ட அளவிலான குழுவினை அமைத்திட தனி அரசாணை வெளியிடுவது இன்றியமையாததாகும். ஊராட்சி ஒன்றிய, மாவட்ட அளவிலான அத்தகைய குழுவுக்குத் தொடர்புடைய தலைவர் தலைமை ஏற்கலாம். மாவட்ட ஊராட்சித் தலைவரை மாவட்ட அளவிலான நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் ஒரு உறுப்பினராக நியமிக்கலாம்.

17. 1986 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் 7ஆவது பிரிவின் கீழ், மாவட்ட ஊராட்சிகளின் இரு தலைவர்களை மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுவில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படலாம். மாவட்ட அளவில், மாவட்ட ஊராட்சியின் தலைவரை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவில் ஒரு உறுப்பினராக எடுத்துக் கொள்ளலாம்.

சமூகச் சொத்துக்களைப் பேணுதல்

(இனம் - 29)

01. தமிழ்நாடு 1994 ஆண்டு ஊராட்சிகள் சட்டம் 257 வது பிரிவு தெரிவிப்பதாவது : "அரசு ஒரு ஊராட்சிக்கு அல்லது இந்தச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட பிற குழு எதற்கும், பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்கள் தாயரிப்பது பொறுத்த அதிகாரங்களையும் பொறுப்புகளையும் மற்றும் நான்காம் இணைப்புப் பட்டியலில் இடப்பட்ட 29 பொருட்கள் தொடர்பானவைகள் உள்ளடங்கலாக பொறுப்புகளை நிறைவேற்றலாம்". இந்த 29 இனங்களுள் கடைசியாக வருவது "சமூகச் சொத்துக்களைப் பேணுதல்" என்பதாகும்.

02. சமூகச் சொத்துக்களை ஊராட்சிகள் பேணுதல் தொடர்பாக ஊராட்சிகள் சட்டத்தில் பல பிரிவுகள் உள்ளன. இச்சட்டத்தின் 116 (ii) வது பிரிவின் படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியத்தின் சம்மதத்துடன் ஒத்துக்கொள்ளும் வரையரைகளுக்கு உட்பட்டு எந்தப் பணியின் பேணுதலையும் அதனிடம் ஒப்படைக்கலாம். சமூகச் சொத்துக்கள் மற்றும் அதனைப் பேணுதல் தொடர்பான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

(1) சிறு பாசனம்

அரசு ஏதேனும் ஓர் பாசன வேலையினை ஏதேனும் சிற்றூராட்சிக்கோ அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கோ ஏதேனும் ஓர் பாசன வேலையினை பாதுகாத்து பராமரிப்பதற்கும், பாசன மேலாண்மைக்கு மாற்றுவதற்கும் அல்லது நீரினை சீராகப் பகிர்ந்தளிப்பதற்கும் அதிகாரத்தினை மாற்றி வழங்கலாம். மேலும் சிற்றூராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியம் சில வரையரைகளுக்கு உட்பட்டோ அல்லது கிராமத்தின் பாசன வளங்களை குடி மராமத்து செய்யவும் கட்டுப்படுத்தி செயல்படுத்தவும் மற்றும் கட்டணங்கள் விதிக்கவும் மற்றும் சில அடிப்படை நோக்கங்களுக்காவும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் அமைப்புச் சட்டத்தின் 133 (1) மற்றும் (2) பிரிவுகள்)

(2) மீன்வளம்

1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 132 ஆனது சிற்றூராட்சிக்கு மீன்வளம் குறித்து அதிகாரம் வழங்கியுள்ளது. அதன் விபரமாவது: "கிராமக் குடிமக்களின் பொது நன்மைக்காக நிர்வகிக்கப்படும் அல்லது பழக்கவழக்கப் படி அவர்கள் உடமையானதாக கருதப்படும், மீன்பிடிக்கும் உரிமை உள்பட, சொத்து அல்லது வருமானம் அல்லது ஊர் நிலத்தைப் பொதுவாக அனுபவிப்பவருடைய உரிமை வருமானம் அல்லது குறிப்பிட்ட நிலத்தை அனுபவிப்பருடைய உரிமை. வருமானம் அல்லது ஒரு குறிப்பிட்ட நீர்ப்பாசன ஆதாரத்தில் உள்ள நிலத்தை அனுபவிப்பவர்களுடைய உரிமை, வருமானம் ஆகிய இவைகள், அரசு அதற்கென ஒரு அறிக்கை வெளியிட்டால் ஊராட்சியை சேரும். இதனை ஊராட்சி, அதன் மக்களுக்கும் அல்லது உடமையாளர்களுக்கும் நன்மை பயக்கும் படி நிர்வகித்து வரவேண்டும்". 133 (3) வது சட்டப் பிரிவில் நீர்பாசன பராமரிப்பு வேலை சிற்றூராட்சிக்கு மாற்றப்படும் பொழுது அதில் மீன் பிடிக்கும் உரிமையும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

(3) குடிநீர்

குறைந்தபட்ச தேவை திட்டத்தில் ஊரக குடிநீர் வழங்கல் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும். தமிழ்நாடு 1994–ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் 110 (g) பிரிவில் சிற்றூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் குளிக்க மற்றும் துவைக்கும் நோக்கங்களுக்கென நீர் நிலையங்களை உருவாக்க அதிகாரம் வழங்கியுள்ளது. ஆனால் குடிநீர் வளங்களை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் திட்டங்கள் பற்றி எதுவும் குறிப்பிடப் படவில்லை. ஆனால் இந்தக் கூறில் உள்ள எதுவும் பாசனம் அல்லாத நோக்கங்களுக்கு நீர் வழங்கு கைக்கும் கழிவு நீருக்கும் பொருந்தாது. (பிரிவு 111 மற்றும் 115). வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் வறட்சிக்கு இலக்காகும் திட்டங்கள் கீழ் செயல்படுத்தப்படும் ஊரக குடிநீர் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதுவரையில் உள்ளாட்சி அமைப்புகள் நேரடியாக ஊரக குடிநீர் திட்டங்களை செயற்படுத்த அனுமதிக்கப்பட வில்லை. கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பினை 1982ம் ஆண்டிலிருந்து ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள தொழில் நுட்ப பிரிவு கைப்பம்பு மற்றும் விசைப்பம்புகளை பராமரிப்பதற்கான தொழில் நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது.

(4) சாலைகள் மற்றும் இதர வகை போக்குவரத்துகள்

சாலைகள் பராமரிப்பு மற்றும் மேம்படுத்துதல் என்பது கிராம வளர்ச்சிக்கான கட்டமைப்பில் முக்கிய பங்காற்றுகின்றன. புதிய சாலைகள் உருவாக்குவது தொடர்பாக. தற்பொழுதுள்ள நிலை என்னவெனில் தேசிய நெடுஞ் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், முக்கிய மாவட்டச் சாலைகள், ஏனைய மாவட்டச் சாலைகள் மற்றும் சிறப்புச் சாலைத் திட்டங்களான கரும்பு வயல் சாலைகள், வெளிநாட்டு நிதியுதவியுடன் அமைக்கப்படும் சாலைத் திட்டங்கள் ஆகியவை மாநில நெடுஞ்சாலைத் துறையினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மேற்கண்ட சாலைகள் யாவும் மாநில நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள், இணைப்புச் சாலைகள், ஊரகச் சாலைகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ்வரும் சாலைத் திட்டங்கள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்து செய்து வருகின்றன.

மாநிலச் சாலைகளின் நீளத்தில் 52 விழுக்காடு சாலைகள் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. தமிழ் நாடு 1994ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளால் சாலை வசதிகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளை சிற்றூராட்சிகள் பராமரிக்க போதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொறுத்தமான சட்டப் பிரிவுகள் பின்வருமாறு :

ஊராட்சி

(i) மேற்படி சட்டத்தின் 110–வது பிரிவு வகை முறைகளுக்கும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு தமது நிதிவரம்பிற்குள் பின்வரும் வேலைகளைப் பொறுத்தவரையில் ஊராட்சி தேவைக்கேற்ப நிறைவேற்றுவதற்கென நியாயமான வரை முறையைச் செய்து கொள்ள வேண்டியது.

(அ) எல்லா கிராமச் சாலைகளையும் அதாவது ஒரு கிராமத்திலுள்ள (தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட நெடுஞ்சாலைகள் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர்த்து) எல்லாச் சாலைகளையும் அத்தகைய சாலைகளின் எல்லாப் பாலங்கள், சிறுபாலங்கள், சாலை அணைகள், தரைப்பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுதல், பழுது பார்த்தல், பராமரித்தல்.

(ஆ) கட்டிடம் உள்ள பகுதிகளிலும் பொதுச் சாலைகளிலும், பொது இடங்களிலும் தெரு விளக்குகள் அமைத்தல்.

(இ) வடிகால்களைக் கட்டுமானம் செய்தால் மற்றும் (கழிவுநீர் உள்ளிட்டதல்லாது) வடிகால் நீரையும், மாசுக்களையும் அகற்றிவிடுதல்.

(ii) சட்டப் பிரிவு 125–ல் சில பொதுச் சாலைகள் மற்றும் சில சாலைகள் தவிர்த்து அமைப்பதற்கு சிற்றூராட்சிகள் உரிமை பெற்றுள்ளன. அவ்வகைப்பாட்டினை கீழே காண்க.

கிராமத்திலுள்ள எல்லாப் பொதுச் சாலைகளும் (அரசாங்கத்தால், தேசீய நெடுஞ்சாலைகள் வழிகள் அல்லது மாநில நெடுஞ்சாலைகள் அல்லது மாவட்ட நெடுஞ்சாலைகள் அல்லது ஊராட்சி ஒன்றிய சாலைகள் என்ற வகைப் படுத்தியுள்ளவற்றைத் தவிர்த்து) அவற்றை சேர்த்து எல்லா நடைமேடைகள், கற்கள் மற்றும் இதர தளவாடங்கள் அதன் பொருட்டு ஏற்படுத்தியுள்ள எல்லாக் கட்டுமானங்கள், தளவாடங்கள் மற்றும் இதர சாமான்களுடன் அந்த சாலைகளிலும் அவற்றின் பக்கத்திலும் அல்லது அடியில் உள்ள எல்லாப் புதை சாக்கடைகள், சாக்கடைகள், சாக்கடைக் கட்டுமானங்கள், குடைவுகள், மதகுகள் அவற்றை சார்ந்த எல்லாக் கட்டுமானங்கள், தளவாடங்கள், பொருள்களுடன், அவை ஊராட்சி செலவிலோ வேறு வகையிலோ கட்டப்பட்டிருந்தாலும் கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டவையாகும்.

ஊராட்சி ஒன்றியம்

சட்டத்தின் 112–வது பிரிவில், ஊராட்சி ஒன்றியத்திற்கு அதன் வரம்பிற்குள்ளான நிதியினைக் கொண்டு பொறுப்புடன் கூடிய சில வசதிகளை செய்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. அவைகள்

ஊராட்சிகள் ஒன்றியச் சாலைகள் என்று வகைப்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எல்லாப் பொதுச் சாலைகள், அச்சாலைகளின் எல்லாப் பாலங்கள், சிறு பாலாங்கள், சாலை அணைகள், தரைப்பாலங்கள் ஆகியவற்றை கட்டுதலும், பழுது பார்த்தலும் மற்றும் பராமரித்தலும். ஊராட்சிகள் சட்டம் 126–வது பிரிவு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொதுச் சாலைகளை தனது உரிமையாக்கிக் கொண்டு பராமரிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

அரசின் சார்பாக பராமரித்தல்

சட்டப்பிரிவு 127–ல் மாநில அரசு, சிற்றூராட்சிகள், அரசின் சார்பாக சாலைகளை கீழ் கண்டபடி பராமரித்துக் கொள்ளவும் அதன் செலவினை ஏற்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. (அ) இத்தகைய சாலையின் வடிகால் அமைப்பின் நீர் வடிமானத்திற்கும், அதனை பேணுவதற்குமாக (ஆ) அத்தகைய சாலையின் ஓரத்தில் அல்லது அவற்றின் அடியில் உள்ள வடிகால்களுக்கு வழிவகை செய்வதற்கும், அவற்றைப் பேணுவதற்கும் மற்றும் பழுது பார்ப்பதற்குமாக. (இ) அத்தகைய சாலையுடன் சேர்ந்துள்ள நடைபாதைகளுக்கு வழிவகை செய்வதற்கும் அவற்றை பேணுவதற்கும் மற்றும் பழுது பார்ப்பதற்குமாக வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

(5) பொதுவான இடுகாடு மற்றும் சுடுகாடு

பொது இடுகாடு மற்றும் சுடுகாட்டினை, சாதி, இனம் மற்றும் சமயப் பாகுபாடின்றி ஊராட்சிகள் பராமரித்து வரலாம் என்பதற்கு தமிழ்நாடு 1994–ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 116(1) சான்றாக அமைந்துள்ளது.

(6) நூலகங்கள் மற்றும் படிப்பகங்கள்

தமிழ்நாடு 1948–ம் ஆண்டு நூலகங்களின் சட்டப்படி மாநில பொது நூலகத் துறையினரால் நூலக வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. முக்கிய மற்றும் கிளை நூலகங்களை, அந்தந்த எல்லைக்குள் ஏற்படுத்தி பராமரிப்பது உள்ளூர் நூலக அதிகாரிகளின் பொறுப்பாகும். இருப்பினும், தமிழ்நாடு 1994–ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் 111 (ஏ) – பிரிவு சிற்றூராட்சிகள் மூலம் படிப்பகங்களை ஏற்படுத்தி அவற்றினை நடத்தி வருவதற்கும் வழி வகை செய்துள்ளது.

(7) பள்ளிக் கட்டிடங்கள்

ஊராட்சிச் சட்டப் பிரிவு 108–ன் படி ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட ஆசிரியர்கள், மற்றும் அலுவலக உதவியாளர்கள் அரசுப் பணியாளர்களாவார்கள். 112–வது சட்டப் பிரிவின்படி தொடக்க பள்ளிகளை புதியதாக தொடங்கவும், பேணவும், விரிவாக்கவும், மேம்படுத்தவும், தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு மான்யம் வழங்குவது உட்பட அனைத்துப் பணிகளையும் ஊராட்சிகளிடம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் முதன்மை மற்றும் தொடக்கப் பள்ளிகளை பராமரித்து பேணுவதற்கு அதிகாரம் பெற்றுள்ளன.

(8) சுகாதாரம், துப்புரவு மற்றும் குடும்ப நலன்

மக்கள் நலன் பேணும் பணியில் உள்ளாட்சி அமைப்புகள் முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது. மருந்தகங்கள் ஏற்படுத்தல் அவற்றைப் பராமரித்தல் கிராம மருத்துவத் தொழில் புரிவோருக்கு உதவித்தொகை அளித்தல். மேலும் தாய்–சேய் நலவிடுதிகள் ஏற்படுத்தி நடத்துதல், 'தாய்' சேவைப் பணி நடத்துதல், குடும்ப கட்டுப்பாடு திட்டத்தில் தாய்மார்களுக்கு அறிவுரையும் உதவியும் அளித்தல் தொடர்பான பணிகளுக்கு சட்டப் பிரிவு 112 மற்றும் 118 வழி வகுத்துள்ளன.

(9) காடுகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 120வது பிரிவின் படி அந்தந்த கிராமத்திலுள்ள ஒதுக்கப்படாத எல்லாக் காடுகளும் ஊராட்சியிடம் ஒப்படைக்கப்படுவதுடன் அத்தகைய கிராமத்தின் நன்மைக்காக அதனால் பரிபாலிக்கப்படவும் வேண்டும்.

(10) புறம்போக்கு நிலங்கள்

பிரிவு 134ன் படி புறம்போக்கு நிலங்களான முறையே மேய்ச்சல் நிலங்கள், கதிரடிக்கும் களங்கள், சுடுகாடுகள் அல்லது இடுகாடுகள், கால் நடைத் தொழுவங்கள், வண்டிப் பேட்டைகள், தோப்புகள் ஊராட்சியின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்புறம் போக்கு நிலங்களை ஒழுங்கு செய்யும் அதிகாரமும் ஊராட்சிக்கு உண்டு. இவ்வாறாக இத்தகைய சமூகச் சொத்துக்களை பேணும் அதிகாரங்களை ஊராட்சிகள் பெற்றுள்ளன.

(11) பொதுச் சந்தைகள்

பொது மக்களின் உபயோகத்திற்காக பொதுச் சந்தைகளை உள்ளாட்சி அமைப்புகள் நிர்வகிக்கலாம். அத்தகைய பொதுச் சந்தைகளில் உள்ள கடைகள், வண்டி நிறுத்துமிடங்களுக்கான கட்டணததை சிற்றூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் வசூல் செய்யலாம்.

(12) வர்த்தகச் சொத்துகள்

மேலே குறிப்பிட்டுள்ள சமூகச் சொத்துக்கள் தவிர அறக்கட்டளை/வர்த்தகச் சொத்துக்களான கட்டிடங்கள், வணிக வளாகங்கள், பொருட்காட்சிகள் நடத்தும் இடங்கள், பொதுச் சந்தைக்கான இடங்கள் ஆகியவற்றை பராமரிக்கவும், மேம்படுத்தவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் உள்ளன. இக்கட்டிடங் களுக்கான வாடகை, தீர்வை, உபயோகிப்பாளர் கட்டணம் ஆகியவற்றை உள்ளாட்சி அமைப்புகள் நிர்ணயம் செய்ய வேண்டும். இக்கட்டிடங்களின் விற்பனை, குத்தகை மற்றும் சொத்து பரிமாற்றம் தொடர்பான பணிகளையும் உள்ளாட்சி அமைப்புகள் கவனிக்க வேண்டும்.

(13) பிறவகை பொதுச் சொத்துக்களைப் பேணுதல்

சில அடிப்படை வசதிகளையும், சொத்துகளையும் உள்ளாட்சி அமைப்புகள் பேணிப்பராமரிப்பதற்கு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 110 வழி செய்கிறது. உள்ளாட்சி அமைப்புகளால் பேணப்பட்டு வரும் பிற சொத்துக்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) கிராமச் சாலைகள், அச்சாலைகளிலுள்ள எல்லாப் பாலங்கள், சிறுபாலங்கள், சாலை அணைகள், தரைப்பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுதலும், பழுது பார்த்தலும், பேணுதலும்.

(2) பொதுச் சாலைகளுக்கும், கட்டிடங்கள் இருக்கும் பகுதிகளுக்கு அப்பால் உள்ள பொதுவிடங்களுக்கும் விளக்குகள் அமைத்தல்.

(3) வடிகால்களைப் பராமரித்தல், வடிகால் நீரையும், மாசுக்களையும் அகற்றிவிடுதல்.

(4) பொதுக் கழிப்பிடங்களை துப்புரவாக்க ஏற்பாடுகள் செய்தல்.

(5) குளங்கள், குட்டைகள், நீர்வரத்து வாய்க்கால்கள் ஆகியவற்றைப் பராமரித்து குளிக்க, துவைக்க தேவையான நீரை வழங்க ஏற்பாடு செய்தல்.

(6) பொதுச் சந்தைகளைப் பேணுதல்.

(7) பொதுமக்களுக்கான இறங்குமிடங்களையும், நிற்குமிடங்களையும், வண்டி நிலையங்களையும், பொது கால்நடை தொழுவங்களையும் பேணுதல்.

(8) பொது இறைச்சிக் கொட்டகைகளைப் பேணுதல்.

(9) வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிக் கருவிகளும், விளையாட்டு வெளிகளும், பூங்காக்கள், விளையாட்டு மன்றங்கள், உடற்பயிற்சி நிலையங்கள், பொருட்காட்சி நடத்தும் இடங்கள் ஆகியவற்றைப் பேணுதல்.

(10) எழுத்தறிவிக்கும் நிலையங்கள், சமூகக் கல்வி புகுட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிலையங்களைப் பேணுதல்.

(11) ஏழை விடுதிகள், அனாதை இல்லங்கள், சாவடிகள், கால்நடை நிவாரண நிலையங்கள் பேணுதல்.

(12) பேருந்து நிலையங்கள், வண்டிகள் நிறுத்துமிடங்கள், காலியிடங்கள் பேணுதல்.

(13) தச்சுப்பட்டறை, கொல்லுப்பட்டறை பேணுதல்.

(14) சாலை ஓரங்களிலுள்ள நிழல் தரும் மரங்களைப் பேணிப் பாதுகாத்தல்.

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களால் பேணப்பட்டு வரும் சமூக சொத்துக்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1-4-91 அன்று உள்ளாட்சி அமைப்புகளால் பேணப்பட்டு வரும் சமூகச் சொத்துகள்

வ.எண்.	சமூகச் சொத்து விவரம்	எண்ணிக்கை
(1)	(2)	(3)
	I. குடிநீர் வசதி	
1.	மேல்நிலைத் தொட்டிகள்	21,502
2.	கைப்பம்புகள்	1,06,091
3.	விசைப்பம்புகள்	18,842
4.	குடிநீர் கிணறுகள்	7,327
5.	மற்றவை	118,507
	II. சாலை விவரங்கள்	
	(அ) ஊராட்சியின் பொறுப்பில் உள்ளவை	
		எண்ணிக்கை **நீளம் (கி.மீ)**
1.	தார்சாலைகள்	3,486 4112.14
2.	மெட்டல் சாலை – ஓரடுக்கு	11,628 14,058,27
3.	மெட்டல் சாலைகள் – ஈரடுக்கு	3113 3887.61
4.	முரம்பு சாலைகள்	17,706 19,298.48
5.	இணைப்பு சாலைகள்	6593 8198.88
6.	சுடுகாடு, இடுகாடு சாலைகள்	10,199 7579.95
	(ஆ) ஊராட்சி ஒன்றியம் பொறுப்பில் உள்ளவை	
1.	சிமிண்ட் சாலைகள்	122 183.72
2.	தார் சாலைகள்	2099 3618.09
3.	மெட்டல் சாலைகள் (ஓரடுக்கு)	8118 14,154.40
4.	மெட்டல் சாலைகள் (ஈரடுக்கு)	2599 4397.67
5.	முரம்பு சாலைகள்	4926 8209.52

வ.எண்.	சமூகச் சொத்து விவரம்	எண்ணிக்கை
(1)	(2)	(3)
	III. கட்டிடங்கள்	
		எண்ணிக்கை
1.	தொகுப்பு வீடுகள்	351,862
2.	பள்ளிக்கட்டிடங்கள்	31,057
3.	ஊராட்சி மன்ற கட்டிடம்	8,352
4.	சமுதாயக் கூடம்	11,974
5.	மருத்துவமனை கட்டிடம்	1,717
6.	பேருந்து நிழற்குடை	5,531
7.	சிறுபாலங்கள்	38,236
	IV. மருத்துவம் மற்றும் சுகாதாரம்	
1.	ஆரம்ப சுகாதார நிலையம்	1,160
2.	துணை சுகாதார நிலையம்	1,773
3.	மகப்பேறு குழந்தை நலநிலையம்	3,200
4.	கழிப்பறைகள்	10,191
	V. கால்நடை பராமரிப்பு	
1.	கால்நடை மருந்தகங்கள்	953
2.	கால்நடை துணைநிலையங்கள்	1,494
3.	வழிகாட்டும் கிராம நிலையங்கள்	206
4.	மீன்குஞ்சு நிலையங்கள்	168
	VI. வருவாய் தரும் சொத்து விவரம்	
1.	திருமண மண்டபம்	188
2.	அங்காமகள்	1166
3.	பேருந்து நிலையம்	494
4.	இறைச்சி தொட்டிகள்	374
5.	ஊராட்சி ஒன்றிய தச்சுப்பட்டறை	121
6.	ஊராட்சி ஒன்றிய கொல்லுப்பட்டறை	77
	VII. எரிசக்தி வளங்கள்	
1.	கரிமவாயு கலன்கள்	76,536
2.	சூளா அடுப்புகள்	352,359
3.	சூரிய அடுப்புகள்	523
4.	காற்றாலைகள்	247

வ.எண்.	சமூகச் சொத்து விவரம்	எண்ணிக்கை
(1)	(2)	(3)
	VIII. சமூகக் காடுகள்	
		பரப்பு (ஹெக்டேரில்)
1.	சமூகக் காடுகள்	18,656.81
2.	பழக்கன்று நடும் திட்டம்	1689.97
3.	வேளாண் காடுகள்	1224.25
4.	விறகிற்காக மரம் நடும் திட்டம்	4288.31
	IX. சத்துணவு மையங்கள்	
		எண்ணிக்கை
1.	சத்துணவு மையங்கள்	18,767
2.	சத்துணவு மையங்களுக்கான குடிதண்ணீர் வசதி	18,527
3.	சமையல் பாத்திரங்கள்	24,485
	X. சிறுபாசனம்	
1.	ஜீவன் தாரா கிணறுகள்	6,987
2.	சிறுபாசன குளங்கள்	11,429
3.	உபயோகத்தில் உள்ள பாசனக் கிணறுகள்	3,808
4.	கசிவு நீர் குட்டைகள்	4,750
5.	சீர் செய்யப்பட்ட நீர்வரத்து கால்வாய்கள்	2,710
	XI. தெரு விளக்குகள்	
1.	மின்வசதிகள்	13,207
2.	குமிழ் விளக்குகள்	44,561
3.	குழல் விளக்குகள்	853,463
4.	சோடியம் விளக்குகள்	8,763
5.	ஆதி திராவிட தொகுப்பு வீடுகளுக்கும், குடிசைகளுக்கும் மின் விளக்குகள்	245,037

மேலே உள்ள தகவல்கள் தமிழ்நாடு அரசு, ஊரக வளர்ச்சி இயக்ககம் தயாரித்துள்ள "தமிழக ஊரகப் பகுதி அடிப்படை வசதிகள்" கையேட்டிலிருந்து எடுக்கப்பட்டன.

03. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிலைகளையும் கருத்தில் கொண்டு மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு சமூகச் சொத்துக்கள் பேணுதல் தொடர்பான கீழ்க்கண்ட அதிகாரங்கள் மற்றும் பணிகள் வழங்க மாநில திட்டக் குழுப்பிரிவு பரிந்துரை செய்கிறது.

I ஊராட்சி

நடவடிக்கை (1)		அதிகார ஒப்படைப்பு (2)
1. சமூகச் சொத்துக்களை தெரிவு செய்தல்	(அ)	சிற்றூராட்சியின் ஆளுகையில் உள்ள பல்வேறு சமூகச் சொத்துக்களை தெரிவு செய்து பதிவு செய்தல்.
	(ஆ)	சிற்றூராட்சி சொத்துக்கள் பேணுதலுக்காக அவற்றை மதிப்பீடு செய்துபோதுமான நிதி ஒதுக்கீடு செய்தல்.
	(இ)	சிற்றூராட்சிகளுக்கு சொந்தமான கட்டிடங்கள், வணிக வளாகங்கள், நிலம், பொருட்காட்சி இடம், சந்தைகள் இவற்றைப் பேணிப் பராமரித்து பாதுகாக்க தேவையான மானியம் உருவாக்கி செம்மையாகச் செயற்படுத்தல்.
	(ஈ)	வணிக மற்றும் பிற சொத்துக் களுக்கான வரி, வாடகை, உபயோகிப் போர் கட்டணம் நிர்ணயித்தல்.
	(உ)	சிற்றூராட்சியின் சொத்துக்களை விற்க, குத்தகைக்குவிட, மாறுதல் செய்ய உரிமை.
	(ஊ)	வரி, வாடகை, உபயோகிப்பவர் தீர்வை வசூலித்தல்.
	(எ)	சமூக சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தல், ஆக்கிரமிப்பு, இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருத்தல், அவ்வாறு நடந்தால் தேவையான நேரத்தில் அதற்கான தண்டனை வழங்குதல்.
	(ஏ)	சமூக சொத்துக்களை மேம்படுத்தவும் பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களையும், நன்கொடை களையும் பெறுதல்.

II ஊராட்சி

நடவடிக்கை (1)		அதிகார ஒப்படைப்பு (2)
1. சமூகச் சொத்துக்கள் மேம்பாடு மற்றும் பேணுதல்.	(அ)	மாவட்ட ஊராட்சியின் சொத்துக்களை பராமரிக்க வேண்டி அவற்றைமதிப்பீடு செய்து தேவையான நிதி வழங்க ஏற்பாடு செய்தல்.
	(ஆ)	ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொந்தமான கட்டிடங்கள், வணிக வளாகங்கள், நிலம், பொருட்காட்சி இடம், சந்தைகள், இவைகளைப் பேணிப் பராமரித்து, பாதுகாக்க தேவையான மானியம் உருவாக்கி செம்மையாக செயற்படுத்தல்.
	(இ)	வணிக மற்றும் பிற சொத்துக் களுக்கான வரி, வாடகை, உபயோகி போர் கட்டணம் நிர்ணயித்தல்.

(1)	(2)
	(ஈ) ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான சொத்துக்களை விற்க, குத்தகைக்கு விட, மாறுதல் செய்ய உரிமை.
	(உ) வரி, வாடகை, உபயோகிப்போர் கட்டணம் வசூலித்தல்.
	(ஊ) சமூக சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தல், ஆக்கிரமிப்பு, இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருத்தல். அவ்வாறு நடந்தால் தேவையான நேரத்தில் அதற்கான தண்டனை வழங்கல்.
	(எ) சமூக சொத்துக்களை மேம்படுத்தவும், பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களையும், நன்கொடை களையும் பெறுதல்.

III மாவட்ட ஊராட்சி

நடவடிக்கை (1)	அதிகார ஒப்படைப்பு (2)	
1. சமூகச் சொத்துக்கள் மேம்பாடு மற்றும் பேணுதல்	(அ)	மாவட்ட ஊராட்சி சொத்துக்களைப் பராமரிக்க வேண்டி அவற்றை மதிப்பீடு செய்து தேவையான நிதி வழங்க ஏற்பாடு செய்தல்.
	(ஆ)	மாவட்ட ஊராட்சிகளுக்கு சொந்தமான கட்டிடங்கள், வணிக வளாகங்கள், நிலம், பொருட்காட்சி இடம், சந்தைகள் இவற்றைப் பேணிப் பாதுகாக்க தேவையான மானியம் உருவாக்கி செம்மையாக செயற்படுத்தல்.
	(இ)	வணிக மற்றும் இதர சொத்துக் களுக்கான வரி, வாடகை, உபயோகிப் போர் கட்டணம் நிர்ணயித்தல்.
	(ஈ)	சொத்துக்கள் விற்பனை, குத்தகை மாறுதல் செய்வதற்கான உரிமை.
	(உ)	வரி, வாடகை, உபயோகிப்போர் கட்டணம் வசூலித்தல்.
	(ஊ)	சொத்துக்களை தவறாகப் பயன் படுத்தல். ஆக்கிரமிப்பு, இழப்பீடு ஏற்படாமல் விழிப்புடன் இருத்தல்.
	(எ)	மாவட்ட ஊராட்சியின் பொறுப்பிலுள்ள சொத்துக்களை மேம்படுத்தவும், பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்குதல், நன் கொடைகள் பெறுதல்.
	(ஏ)	சமூக சொத்துக்களான சத்துணவு மையங்கள், பூங்காகள், போக்குவரத்து திடல்கள் ஆகியவற்றை நிறுவி பராமரிக்க தொண்டு நிறுவனங் களையும், நிதி நிறுவனங்களையும் ஈடுபடுத்தல்.

நிதிச்சிக்கல்கள்

04. உள்ளாட்சி அமைப்புகளான சிற்றூராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் மாவட்ட ஊராட்சிகளும் மக்கள் நலன் கருதி கட்டாயம் மற்றும் விருப்பத்திற்குட்பட்டும் செய்ய வேண்டிய சில கடமைகள் உள்ளன என்பதனை அறிந்தோம். அவ்வாறான கடமைகளைச் செய்யும் போது ஏராளமான சமூக சொத்துக்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய நிலை உள்ளது. இப்பணிகளை செய்வதற்காகவும் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளவும். உள்ளாட்சி அமைப்புகள் அரசிடமிருந்து மானியம் பெறுகின்றன. அரசு மானியம் மட்டுமல்லாது சொந்தவரி விதிப்பின் மூலமாகவும் உள்ளாட்சி அமைப்புகள் தங்களது நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

அரசு வழங்கும் மானியம் மற்றும் ஊராட்சி சட்டத்தில் அதற்கான விதிமுறைகள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வ.எண்.	மானியத்தின் பெயர்	ஊராட்சிகள் சட்டத்திலுள்ள பிரிவு எண்.
(1)	(2)	(3)
1.	உள்ளூர்தீர்வை	த.நா.ஊ. சட்டம் 167வது பிரிவு
2.	உள்ளூர்தீர்வை மேல்வரி	– do – 168
3.	சொத்துரிமை மாற்றத்தின் மீது தீர்வை	– do – 175
4.	கேளிக்கை வரி	த.நா.உள்ளாட்சி நிதி சட்டம், 1961 தமிழ்நாடு சட்டம் 62/1961
5.	கிராம வீட்டு வரி	த.நா.ஊராட்சி சட்டப் பிரிவுகள் 171 & 172
6.	சிறு உள்ளூர் வருமானம் (சந்தை கட்டணம், உரிமம், தொழில் வரி, வாகன வரி, மீன் குத்தகை)	
7.	உள்ளூர்தீர்வை மேல்வரி நிகர் மானியம்	– do – 168 & 180
8.	உள்ளூர் சாலை மானியம்	– do – 182
9.	கிராம வீட்டுவரி நிகர் மானியம்	– do – 183
10.	சமூகக் கல்வி மானியம்	நிகரில்லா மானியம்
11.	பெண்கள் & குழந்தைகள் மானியம்	
12.	கிராமபணி மானியம்	
	(அ) குடிநீர்	
	(ஆ) இணைப்புச் சாலைகள்	
	(இ) பள்ளிக்கட்டிடம்	
13.	உள்ளூர் பாசன மானியம்	
14.	கால் நடை பராமரிப்பு மானியம்	
15.	தாய் சேய் நிலையங்களை பேணுவதற்கான மானியம்	
16.	மருந்தகங்கள் பராமரிப்பு மானியம்	அரசாணை எண்.51 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் :7–1–77 & 1168 சு. & கு.ந. துறை, நாள் : 15–7–83.

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலமைகளை ஆய்வு செய்யும் போது பெரும் பாலானவற்றின் நிதிநிலமை மிகவும் மோசமாக உள்ளது என்பது தெரியவரும். போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான சொத்துக்களும், பிற திட்ட உதவிகளின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாறுதல் செய்யப்பட்ட சொத்துக்களும் போதிய பராமரிப்பின்றி செயலிழந்த நிலையில் உள்ளன. இத்தகைய சொத்துக்கள் அவசியம் நல்ல முறையில் பேணப்பட வேண்டும். மேலும் பராமரிப்பு மானியங்கள் அரசின் விருப்பம் போல் தான் கொடுக்கப்படும். கட்டாயமாகவும் கேட்டுப் பெறமுடியாத நிலை. இந்நிலைகளை கருத்தில் கொண்டு சமூகச் சொத்துக்களைப் பராமரிக்க வழங்கப்படும் மானியங்களை அதிகரிக்க வேண்டும் என்று மாநில திட்டக்குழுப் பிரிவு பரிந்துரை செய்கிறது. சமூக சொத்துக்களை சரி செய்யவும் நல்ல விதமாக பராமரிக்கவும் ஒரு குறிப்பிட்ட தொகையினை வழங்கலாம் என்றும் பரிந்துரை செய்கிறது. மேலும், வரிவிதிப்பின் மூலமாகவும் உள்ளாட்சி அமைப்புகள் தங்களது நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். புதிதாக சமூக சொத்துக்களை உருவாக்குவதிலும் ஏற்கனவே உள்ள சொத்துக்களான பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், போக்குவரத்து தீவுகள் போன்றவற்றை நல்ல முறையில் பேணி பாதுகாத்து பராமரிக்கவும் தொண்டு நிறுவனங்களையும் நிதி மற்றும் வங்கி நிறுவனங்களையும் ஈடுபடுத்த வேண்டும்.

நிர்வாகம் மற்றும் சட்டம் சம்பந்தப்பட்ட சிக்கல்கள்

05. (அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை மூலம் உருவாக்கப்படும் சொத்துக்கள் போதுமான குடி தண்ணீர் வசதி, மின்சாரம், சாலை வசதிகள் உள்ளதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அச் சொத்துக்கள் பொது மக்களின் உபயோகத்திற்கு ஏற்றதாக இருக்கும். இவ்வாறாக உருவாக்கப்படும் சொத்துக்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருங்கால பேணுதலுக்காக மாற்றப்பட வேண்டும்.

(ஆ) சொத்தக்களை உருவாக்கும் போது உள்ளாட்சி அமைப்புகளின் கருத்துக்களையும் கேட்டறிய வேண்டும். தனியார் இடமாக இருந்தால் நில உரிமையாளரிடமிருந்து நன்கொடைப் பத்திரம் எழுதி வாங்க வேண்டும்.

(இ) மக்களது ஈடுபாட்டினை ஏற்படுத்தும் பொருட்டும் உள்ளாட்சி அமைப்புகளின் வருமானத்தை பெருக்குவதற்காகவும் பொது சொத்துக்கள் போன்ற சமுதாயக் கூடம், திருமணமண்டபம் போன்றவற்றை உபயோகிக்கம் போது குறைந்த அளவு வாடகை வசூல் செய்யலாம்.

(ஈ) சொத்துக்கள் உருவாக்க, உபயோகிக்க, பராமரிக்க உபயோகிப்பாளர் குழுக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

(உ) சமூக சொத்துக்களை நல்ல முறையில் பராமரிப்பதற்கான ஒரு எழுச்சியினை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேணடும். அத்துடன் பொதுச் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தவோ, ஆக்கிரமிப்பு செய்யவோ, சேதப்படுத்தவோ இழப்பு ஏற்படுத்தவோ இல்லாத வகையில் கண்காணிக்க வேண்டும்.

(ஊ) சொத்து உருவாக்கும் பதிவேடுகள் எல்லா நிலையிலும் சரியான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். அலுவலர்கள் ஆய்வு செய்யும் போது சொத்துக்கள் பராமரிப்பு பதிவேடுகளையும் ஆய்வு செய்ய வேண்டும்.

(எ) சிறப்புத் திட்டங்களான மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களும் சமூக சொத்துக்களாக கருதி உள்ளாடசி அமைப்புகளிடம் ஒப்படைத்து பராமரிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவை தொடர்பில் அதிகாரங்களை ஒப்படை செய்வதற்கான பரிந்துரைகளின் வழிகாட்டும் குறிப்பு

இயல் . V

திட்டங்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகார ஒப்படைப்பு குறித்த பரிந்துரைகளின் வழிகாட்டும் குறிப்பு

நான்காவது இயலில், மூன்றடுக்கு பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கான அதிகாரங்களை ஒப்படைப்பு செய்வது குறித்து விரிவாக ஆராயப்பெற்றது. இந்த இயலில் அதன் தாக்கம் மற்றும் இயங்குமுறை, சிறப்பாகத் திட்டச் செயலாக்கம், ஆய்வு, மேற்பார்வை மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் தொடர்பு ஆகியவை குறித்து ஆய்ந்து பார்க்கப்பட்டு உரிய பரிந்துரைகளின் உயர்கருத்தொன்றும் உருவாக்கித் தரப்பட்டுள்ளது. குழு தனது பரிந்துரைகளை அளிக்க வரும்போது அரசியலமைப்புச் சட்டத் திருத்தக் கூறுகள், 1994 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி சட்டம், ஒன்பதாவது திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் அணுகுமுறைகள் ஆகியன உதவியாய் இருந்தன.

5.2. பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதி ஆகியவற்றுக்கான, சிறப்பாக ஒன்பதாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 29 இனங்கள் தொடர்பில், செயற் திட்டங்களைத் தீட்டுதல் மற்றும் செயற்படுத்துதல் போன்றவை தன்னாட்சி நிறுவனங்களாகச் செயற்பட இயலும் வகையில் மாநிலச் சட்டமன்றம் சட்டத்தின் மூலம் ஊராட்சிகளுக்கு ஒப்படைப்பு செய்வதற்குரியதும் இன்றியமையாததுமாகிய அத்தகைய அதிகாரங்கள் மற்றும் அலுவல்கள் போன்றவற்றினை அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் விதி கூறு 243–எ தெளிவாகக் குறிப்பிடுகின்றது. இவ்விதிக்கூறு, இந்த 29 இனங்கள்/செயற்பாடுகள் தொடர்பில் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்களை அளிக்க 1994 ஆம் ஆண்டின் ஊராட்சி சட்டத்தில் (பிரிவு 257 மற்றும் அட்டவணை – IV) வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் 1994 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி சட்டப் பிரிவு 114 (2) மற்றும் 163 (2) (ஆ) முறையே ஊராட்சி ஒன்றியத்திடமும் மாவட்ட ஊராட்சியிடமும் அரசால் அல்லது அப்பகுதிக்குரிய பிற ஏதேனுமொரு முகமையால் திட்டங்களின் , செயற் திட்டங்களின், நடைமுறைத் திட்டங்களின் செயலாக்கத்தினை ஆய்வு செய்வதற்குரிய அதிகாரங்களை வழங்கியமை குறித்து இக்குழு கருத்திற்கொண்டுள்ளது. இவ் விதிக்கூறுகள் குறித்து இங்கே குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்.

பிரிவு 114 (2)

வட்டார ஊராட்சி மன்றமானது, அரசால் அவ்வாறு அறிவிக்கை செய்யப்பட்டிருக்குமாயின், அரசு அல்லது சட்டப்படியமைந்த அமைப்பு அல்லது வட்டார ஊராட்சிக்குள் உள்ள பிற முகமை எதனாலோ செயற்படுத்தப்பட்ட செயற் திட்டங்களையும், மற்றும் பிற செயல்பாடுகளையும் ஆய்வு செய்யலாம்.

பிரிவு 163

2. குறிப்பாக. பின்வரும் அலுவல்களை ஆற்ற வேண்டியது மாவட்ட ஊராட்சியின் கடமையாகும்.

அ) மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிகள், வட்டார ஊராட்சி மன்றங்கள் செயல்படுத்தும் எல்லா வளர்ச்சி திட்டங்கள் அவைகள் செய்து வரும் இதர எல்லா சேவைப் பணிகள் பற்றியும் மற்றும் மாவட்டத்தில் உள்ள அரசின் நிர்வாக கட்டுபாட்டில் உள்ள இதர நிறுவனங்கள் அனைத்தும் செயலாக்கும் வளர்ச்சி பணிகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

ஆ) மேற்சொன்ன பணிகள் மற்றும் வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பாக அரசு ஊராட்சி, வட்டார ஊராட்சி மன்றங்கள் மற்றும் துறை முகவரமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.

5.3 இக்குழு, முதலில் இப்போதுள்ள ஏற்பாடுகளையும் 29 இனங்கள் தொடர்புடைய திட்டங்கள் குறித்துத் தனித்

தெளிவாகவும் ஆராய்ந்து மேற்கூறிய அணுகுமுறையை ஈடுபடுத்திக் கொண்டு எத்தகைய செய்கடமைகளையும் செயற்பாடுகளையும் அரசு அமைப்புகளால் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கு மாற்றப்படுதல் வேண்டும் என்பது குறித்து முடிவு செய்தது. அடுத்தபடியாக, மூன்றடுக்கு பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளிடையே (ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி) செய்கடமைகளையும் செயற்பாடுகளையும் அவற்றுக்கிடையே பகுத்தறிவுடன் அரசு அமைப்புகளால் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கு மாற்றக் கருதப்பட்டுள்ளவை குறித்து அது முடிவு செய்தது. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி போன்றவைகள் அவைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள திட்டங்களையும், செயற் திட்டங்களையும், திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பில் அமைந்த பொறுப்புகளைத் தெளிவாகக் குறிப்பிட இயலும் வகையில் இக்குழுவின் பரிந்துரைகள் ஒவ்வொரு திட்டங்கள்,செயற்திட்டங்கள் தொடர்பில் கண்டறியப்பட்டும், அமைப்புத் தொடர்புகளைச் சுட்டிக் காட்டியும் இங்கே விளக்கப்பட்டுள்ளது.

5.4. எங்களது பரிந்துரைகளின் தன்மைகளை எளிதாகக் கண்டறிந்திட வேண்டி 12 குறிமான முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு திட்டத் தொடர்பிலும் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மாவட்ட ஊராட்சி ஆகிய ஒவ்வொன்றின் தனித் தனிப் பங்கு குறித்தும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. அறிக்கைகளின் விவரிக்கப்பட்டுள்ள 12 குறியான முறைகள் வருமாறு.

அ	–	அறிவுரை வழங்குதல்	உ	–	உதவுதல்
ஒ	–	ஒருங்கிணைப்பு	நி	–	நிறுவுதலும் அமைத்தலும்
செ	–	செயல்படுத்துதல்	க	–	உதவி செய்வதற்குரியவர்களைக் கண்டறிதல்
பா	–	பார்வையிடல்	பே	–	மேலாண்மையும் பேணுகையும்
தி	–	திட்டமிடுதல்	ஆ	–	ஆய்வு
மே	–	மேற்பார்வையிடல்	எ	–	எடுத்துக்கொள்ளல்

அ. அறிவுரை வழங்குதல்

இது அரசுக்காக அல்லது நிறைவேற்றும் துறைகளுக்காக மற்றும் முகமைகளுக்காக, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கீழ்நிலை அடுக்குக்காக அறிவுரை வழங்கும் கடமையைப் பெற்றிருக்கும் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பின் உள்ளார்ந்த பண்புகளைக் குறிப்பிலுணர்த்துகிறது.

உ. உதவுதல்

இது, தொடர்புடைய ஊரக உள்ளாட்சி அமைப்பு அரசுக்கு அல்லது நிறைவேற்றும் முகமைக்கு அல்லது மேலடுக்கு/கீழடுக்கு/உள்ளாட்சி அமைப்புகளுக்கு திட்டங்களை நிறைவேற்றுவதில்/செயற்படுத்துவதில்/மேற்பார்வை செய்வதில் உள்ளார்ந்த பண்புகளைக் குறிப்பிலுணர்த்துகிறது.

ஒ. ஒருங்கிணைப்பு

இது, ஏற்புடைய நிறைவேற்றும் முகமைக்கு பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் திட்டங்களைச் செயற்படுத்துவதிலும், நிறுவனங்களின் செயற்பாடுகளிலும் பிறவற்றுடன் கலந்தறிந்து ஒருங்கிணைப்புகள் செய்வதைக் குறித்துக் காட்டுகின்றது.

நி. நிறுவுதலும் அமைத்தலும்

ஏற்புடைய செயற்பாடுகளின் கீழ் நிறுவனத்தை/மையத்தை/நிறுவி அமைப்பதற்கு அதிகாரம் பெற்றிருக்கும் தொடர்புடைய ஊராட்சியின் நிலைகுறித்துக் குறிப்பிடுகின்றது.

செ. செயற்படுத்துதல்

செயற்திட்டத்தை செயல்படுத்துவதற்கு அதிகாரம் பெற்றிருக்கின்ற தொடர்புடைய பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களைக் குறித்துக் காட்டுகின்றது.

க. உதவி செய்வதற்குரியவர்களைக் கண்டறிதல்

குறிப்பிட்டதொரு செயற்திட்டத்தின்/நடைமுறைத் திட்டத்தின்/திட்டங்களின் கீழ் உதவி செய்வதற்குரியவர்களை நிலையங்களை/நிறுவனங்களைக் கண்டறிவதற்கு அதிகாரம் பெற்றிருக்கும் தொடர்புடைய ஊராட்சிகளின் உள்ளார்ந்த பண்புகளைக் குறிப்பிலுணர்த்துகின்றது.

ப. பார்வையிடல்

அரசின் சட்டபூர்வமான அமைப்பில் அரசின் பிற முகமை அல்லது கீழடுக்கு நிலை ஊராட்சிகளின் வேலைகள் மற்றும் நடைமுறை/செயற்திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்கு அதிகாரம் பெற்றிருக்கும் ஏற்புடைய ஊராட்சி குறித்து குறிப்பிடுகின்றது.

பே. மேலாண்மையும் பேணுகையும்

தனது கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனத்தையும் மையத்தையும் மேலாண்மை செய்யவும் பேணவும் தொடர்புடைய ஊராட்சிக்கு இது அதிகாரமளிக்கின்றது.

நி. நிட்டமிடல்

தொடர்புடைய திட்டங்களுக்காகத் தனது பகுதிக்கெனத் திட்டமிடுவதற்கு அதிகாரங்களைப் பெற்றிருக்கும் தொடர்புடைய ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இவை அதிகாரமளிக்கின்றன.

ஆ. ஆய்வு

செயற்திட்டங்களின் நடைமுறைத்திட்டங்களின் மற்றும் நிறுவனங்களின் மையங்களின் துணை மையங்களின் செயலாக்கங்களை ஆய்வு செய்வதற்கு அதிகாரங்களைப் பெற்றிருக்கும் உள்ளாட்சி அமைப்புக்கு இது பொருந்தும்.

மே. மேற்பார்வை

தொடர்புடைய பகுதிகளில் செயற்படுத்தப்பட்ட நடைமுறைத் திட்டங்கள்/செயற்திட்டங்களை மேற்பார்வை செய்வதற்கு ஊராட்சிகள் அதிகாரம் பெற்றிருக்கின்றன.

எ. எடுத்துக்கொள்ளுதல்

நிலையங்களையும் மையங்களையும் எடுத்துக் கொள்வதற்கு அதிகாரங்களைப் பெற்றிருக்கின்ற தொடர்புடைய பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் உள்ளார்ந்த பண்புகளை குறிப்பிலுணர்த்துகின்றது.

5.5. திட்டங்கள் மற்றும் ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் போன்றவற்றுக்கு மேலே விளக்கப் பெற்ற 29 இனங்களுக்கான 12 குறிமான முறைகள். தொடர்புடைய அமைப்பு இணைப்புகள் ஆகியவை மீதான இக்குழுவின் பரிந்துரைகள் பின்வரும் அட்டவணையில் சுருக்கத் தரப்பட்டுள்ளன.

அட்டவணை I

நடவடிக்கையின் தன்மை	ஒப்படைக்கப்படுவதற்குக் கண்டறியப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை (கட்டம் 1இல் உள்ளவாறு)		
(1)	ஊராட்சி (2)	ஊராட்சி ஒன்றியம் (3)	மாவட்ட ஊராட்சி (4)
அ	05	15	25
உ	38	19	09
ஒ	04	10	22
நி	–	09	–
செ	71	148	06
க	223	29	05
பா	02	67	24
பே	02	03	06
தி	05	45	184
ஆ	02	101	299
மே	13	124	90
ச	01	–	–
மொத்தம்	366	570	670

அட்டவணை II

நிலையங்கள் தன்மை	இணைப்பதற்கெனக் கண்டறியப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை (கட்டம் எண் 1)		
(1)	ஊராட்சி (2)	ஊராட்சி ஒன்றியம் (3)	மாவட்ட ஊராட்சி (4)
அ	10	03	02
உ	13	04	05
ஒ	09	27	32
நி	11	12	08
செ	03	09	–
பா	08	15	05
பே	20	24	06
தி	–	05	32
ஆ	03	33	118
மே	05	33	18
ச	07	30	02
மொத்தம்	89	195	228

5.5.1. வேளாண்மை பற்றிய விரிவாக்கம் உள்ளடங்கலாக வேளாண்மை

(இனம் - 1)

இம் மாநிலத்தில் வேளாண்மை மற்றும் தோட்டக் கலை போன்றவற்றின் வளர்ச்சிக்காக வேளாண்மை, தோட்டக் கலைத் துறைகளால் ஐம்பதுக்கும் மேற்பட்ட திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. வேளாண் பகுதிக்குரிய அனைத்துச் செயற்பாடுகளுக்கும் மாவட்டத்தில் வேளாண் இணை இயக்குநர் பொறுப்புடையவராவர். அண்மையில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு நிகழ்ந்த தேர்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மூன்றடுக்கு நிலைகளைக் கொண்ட உள்ளாட்சி அமைப்புகளை 114 (2) மற்றும் 163 (26) ஆகிய பிரிவுகளின் கீழ் பல்வேறு திட்டங்களில் ஈடுபட வைப்பது தவிர்க்க முடியாததாகும். பயிர் மகசூல் மதிப்பீடு செய்வதில், பயன்பெறுவதற்குரிய விவசாயிகளைக் கண்டறிதல், இடுபொருள்களைப் பகிர்வு செய்தல், புதிய தொழில் நுட்பத்தை எடுத்துக்கொள்வதற்காக விவசாயிகளுக்கு செயல் நோக்கமளித்தல் மற்றும் பயிர் ஈட்டுறுதி, இழப்பினை அறிவித்தல் மற்றும் இயற்கை இடர் காரணமான துயர் துடைப்புப் பணிகளில் உதவி செய்தல் போன்றவற்றில் ஊராட்சியானது உதவிடலாமெனக் கருதப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியம் அவர்களின் எல்லையிலமைந்த அனைத்து ஊராட்சிகளின் ஒருங்கிணைப்புடன் பயிர் மகசூல் மதிப்பீடு, புள்ளி விவரத்தை சேகரித்தல், பொருத்தமான பயிர் முறையை பின்பற்றிட அறிவுரை வழங்குதல், செயல்முறை விளக்க ஏற்பாடு இடுபொருள்களின் தேவையை மதிப்பிடுதல், கடனளிப்பு முறைமையைத் தயாரித்து கண்காணித்தல் மற்றும் விரிவாக்க முறை ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யலாம். மாவட்ட ஊராட்சியிடம், இடுபொருள்கள் உரிய காலத்தில் கிடைத்திடச் செய்தல், கடன் முறை மற்றும் ஊக்குதவித் தொகைத் திட்டங்களை அறிவார்ந்த முறையில் விளக்கி உச்ச நிலைக்கு எடுத்துச் செல்வதற்கான நோக்கம் ஆகியவை குறித்து அரசுக்கு அறிவுரை வழங்குதல், துயர் துடைப்புப் பணிகளை மேற்பார்வையிடல், மாவட்ட வேளாண் திட்டத்தை வரைதல் போன்றவற்றுடன் அதிகாரங்களை ஒப்படைக்கலாம். மாவட்டத்திலுள்ள வேளாண் திட்டங்கள் அனைத்தையும் ஆய்வு செய்ய 163 (2 ஆ) பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும். அலுவல் முகமைகள், திட்டங்கள் பற்றிய முழு விவரக் குறிப்புகளை அளிக்கவும், ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் வகைசெய்யப்படுதல் வேண்டும்.

வேளாண்மை தொடர்புடைய பல்வேறு செயற் திட்டங்களின் செயற்பாடுகளுடன் இணைக்கப்பட்ட நிலையங்கள் 12 உள்ளன. வேளாண்மைத் துறையானது ஊராட்சியுடனும், ஊராட்சி ஒன்றியத்துடனும், விவசாயிகளுடனும் நெருக்கமான தொடர்புடையதாய் இருக்கின்றது. கடன் வழங்கு முறையின் கீழ் தொடக்க வேளாண் கடன் வங்கியுடனும், மைய நிலவள வங்கியுடனும் நேரடியாகத் தொடர்பு பெற்றிருக்கின்றனர். பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு அதிகாரத்தை முன்மொழியப்படும் போது பல்வேறு வேளாண் திட்டங்களைத் செயல்படுத்துவதில் உள்ளாட்சி அமைப்புகள் அரசு நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் ஆகியவற்றுக்கிடையே ஒருங்கிணைந்து செயற்படுதல் வேண்டும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண் (1)	திட்டங்கள் செயல்திட்டங்கள் (2)	ஊராட்சி (3)	ஊராட்சி ஒன்றியம் (4)	மாவட்ட ஊராட்சி (5)
1.	வேளாண் திட்டமிடல்	தி	தி	தி, அ, ஒ
2.	பயிர் மகசூல் போட்டி	உ	க	க, அ
3	ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டுத் திட்டம் – (அரிசி)	க	செ	ஆ, ஒ

(1)	(2)	(3)	(4)	(5)
4.	நெல், சிறு தானியங்கள், பயிறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் பருத்தி போன்றவற்றைப் பெருக்கிப் பகிர்வு செய்தல்	க	செ	ஆ, ஒ
5.	பயிர் மற்றும் செடிப் பாதுகாப்பு	க	உ,தி	ஆ, ஒ
6.	விதைச் சோதனை	க	உ	அ
7	காய்கறி விதைகளைக் கொள்முதல் செய்து பகிர்வு செய்தல்	க	உ	ஆ,ஒ
8.	வேளாண் விதை கிடங்குகள் கட்டுதல்	–	–	அ
9.	சமுதாய கதிரடித் தளம்	க	தி	ஆ, அ, தி
10.	ஊக்குதவி வீதங்களில் நெல், பசுந்தாள் உரம் பசுந்நீலமான பாசி வகை ஆகியவற்றைப் பகிர்ந்தளித்தல்	க	செ	ஆ
11.	தரிசு நில வளர்ச்சிக்கான சிறப்பு செயற் திட்டம்	உ	உ	தி
12.	கழிநீரை,குப்பைகூளங்களைப் பயன்படுத்தி உள்ளூர் உரவள ஆதாரத்தைப் பெருக்குதல்	உ	செ	தி, ஆ
13.	சிறிய மரத் தொட்டிகளையும் உரங்களையும், விதைகளையும் பகிர்வு செய்தல்	க	பா	ஆ, ஒ
14.	புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு உதவியளித்தல்	க	பா	ஆ, ஒ
15.	ஒருங்கிணைந்த நோய் பூச்சிக் கட்டுபாட்டுத் தொழில் நுணுக் கத்தை மக்களிடையே பரவச் செய்தல்.	உ	தி	ஒ
16.	தென்னங் கன்றுகளைப் பள்ளிக் குழந்தைகளுக்குப் பகிர்ந்தளித்தல்	செ	தி	தி, ஆ
17.	தென்னங்கன்று பயிரிட்டு வளர்ப்போருக்கு நுட்பப் பாசனத்திற்காக உதவி யளித்தல்.	க	தி	ஒ

(1)	(2)	(3)	(4)	(5)
18.	சோயா அவரை பயிர் செய்வதை பரவச் செய்தல்	செ	தி	ஒ
19.	விவசாயிகள் பயிற்சி நிலையங்கள்	க	பா	ஆ, ஒ
20.	தோட்டக் கலைப் பயிற்சி நிலையம்	க	பா	ஒ
21.	வேளாண் தொழில் நுட்பவியல் பெண் விவசாயி களுக்கு பயிற்சியளித்தல்	க	பா	ஆ, ஒ
22.	நெற்பயிருக்குப் பின்னர் பருப்பு வகைகளை பயிரிட மேம்பட்ட செயல்முறையைப் பரவச்செய்தல்	உ	உ	–
23.	மண்மற்றும் நீர் ஆகியவற்றை பேணும் நடவடிக்கைகளை பரப்புதல்	உ	உ	–
24.	மேம்பட்ட வேளாண் துறைக் கருவிகளைப் பகிர்வு செய்தல்	க	பா	ஆ, ஒ
25.	சிறு விவசாயிகள்/குறு விவசாயிகள் பயிர் ஈட்டுறுதித் திட்ட உதவியளித்தல்	க	பா	ஆ, ஒ
26.	சிறிய. மற்றும் குறு விவசாயிகளுக்கு உரமானியம்	க	பா	ஆ, ஒ
27.	கலப்பு உரக்குழிகளை அமைத்தல்	செ	தி	தி
28.	ஊரகக் கிடங்குகளைக் கட்டுதல்	–	தி	தி
29.	புள்ளிவிவரங்களை மேம்படுத்துதல்	உ	உ	–
30.	தோட்டக் கலைச் செயற்திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை வழங்குதல்	செ	தி	தி
31.	தீவிர பருத்தி வளர்ச்சி திட்டம்	உ.க	பா	ஒ
32.	எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி திட்டம்	உ. க	பா	ஒ
33.	தேசீய பயறுவகைகள் வளர்ச்சி திட்டம்	உ. க	பா	ஒ

வரைவு செயல்பாட்டு அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

வ.எண் (1)	அரசு துறைகள் /நிறுவனங்கள்/ மையங்கள் (2)	வரைவு தி (3)	வரைவு தி ஒன்றியம் (4)	மாவட்ட வரைவு தி (5)
1	வேளாண்மை இயக்குநர்			
	(அ) மாவட்ட அளவில் (வே.இ.இ)	–	–	ஒ
	(ஆ) வட்ட அளவில் (வே.உ.இ)	–	பா	உ
	(இ) வட்டார அளவில் (வே.வ.அ)	அ	ஒ	–
2.	தோட்டக் கலை இயக்குநர்			
	(அ) மாவட்ட அளவில் (தோ.கூ.இ)	–	–	ஒ
	(ஆ) வட்ட அளவில் (உ.தோ.அ/வ.வ.அ)	–	ஒ	ஆ
3.	புள்ளியியல் இயக்ககம்			
	(அ) மாவட்ட அளவில் (பு.உ.இ)	–	அ	ஒ
	(ஆ) கோட்ட அளவில் (மா.பு.அ)	பா	ஒ	–
	(இ) வட்டார அளவில் (வ.பு.ஆ)	அ	ஒ	ஆ
4.	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்	–	–	ஒ
5.	தமிழ்நாடு வேளாண் தொழில்கள்	–	–	ஒ
6.	தமிழ்நாடு தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியாளர்கள் நிறுவனம் (டான்ஹோப்)	–	–	ஒ
7.	தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி	–	–	ஒ
8.	மத்திய நிலவள வங்கி	–	ஒ	ஒ
9	தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணி கூட்டுறவு இணையம்	–	ஒ	ஒ
10.	தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம்	–	ஒ	ஒ
11.	மண் சோதனை ஆய்வகம்	அ	அ	–
12	மண் ஆய்வு மற்றும் நிலப் பயன்பாட்டு அமைப்பு	அ	அ	–

5.5.2. நிலச் சீர்திருத்தத்தையும் நிலத் தொகுப்பினையும் செயற்படுத்துதல்

(இனம் - (2அ))

நிலச் சீர்திருத்தங்கள் கால அளவுக்குப் பாதுகாப்பு அளித்தல், வாடகைகளை அறுதியிடல், நில உரிமையளிப்பு போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டதாகும். இப்போது வருவாய்த் துறையானது அனைத்து நிலத்திற்கும் காப்பாளராகும். மேலும் நிலத் தீர்வுகளுடன் தொடர்புடையதாகவும் அது உள்ளது. நில உச்சவரம்பில் உள்ள மிகைப்பட்ட நிலங்களைத் தேவைப்படும் நிலமற்ற குடும்பங்களுக்குப் பகிர்வு செய்வதில் ஊராட்சி உதவிடலாம். அவை குடிமுறை வாடகை உரிமைகளைப் பெற்று ஒழுங்குப்படுத்துதல் நில ஆவணங்களை மேம்படுத்துதல் போன்றவற்றில் வருவாய் துறை நிருவாகத்திற்கு உதவிடலாம். ஊராட்சி ஒன்றியம் நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் நில தொகுப்பு போன்ற திட்டங்களை ஒருங்கிணைந்து மேற்பார்வை செய்யும். மாவட்ட ஊராட்சிக்கு மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து மேற்பார்வையிடவும், நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் நில தொகுப்பு தொடர்புடைய அனைத்துச் செயற்பாடுகளையும் 163 (2ஆ) பிரிவின் கீழ் மறு ஆய்வு செய்யவும் அதிகாரமளிக்கப் பெறலாம்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள் செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	பகிர்வு உபரி நிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நில உச்சவரம்புகளைச் செயலாக்குதல்	உ	மே, ஒ	ஆ, மே, ஒ
2.	நில ஆவணங்களை இப்போதைய நிலைக்குக் கொணர்தல்	உ	ஒ	மே, ஆ
3.	பிற நிலச் சீர்திருத்தக் கூட்டங்களைச் செயலாக்குதல்	க	மே, ஒ	ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் /நிறுவனங்கள்/ மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	நில வருவாய்த் துறை (நில ஆவணங்களை இப்போதைய நிலைக்கு கொணர்தல்தொடர்பில் திட்டங்களைச் செயற்படுத்துகின்ற வட்ட ஆட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர்.)	உ	மே, ஒ	ஆ, ஒ
2.	அதிகாரம் பெற்ற அலுவலர் (நிலச் சீர்திருத்தம்)	உ	மே, ஒ	ஆ, ஒ
3.	நில அளவை உதவி இயக்குநர்	உ	–	ஆ, உ
4.	சார் பதிவாளர் நில துணைப் பதிவாளர்	உ	ஒ	ஆ

5.5.3 நில மேம்பாடு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் நீர்ப் பிடிப்பு மேம்பாடு

(இனம் - (2ஆ)

பின்வரும் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயற்படுத்தப்படுகின்றன. அதாவது (i) வறட்சி சார்புள்ள பகுதித் திட்டம் (ii) மழை பெய்யும் பகுதிகளுக்கான தேசீய நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம், உலக வங்கி நிதியுதவுயுடன் ஒருங்கிணைந்த நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம், டானிடா உதவியுடன் விரிவான நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் போன்றவை.

மேற்கூறிய திட்டங்களின் கீழ் அரசு சாரா அமைப்புகளும், ஆர்வமிக்க விவசாயிகளும் கூட்டாண்மை அமைப்புகளும், தனிப்பட்ட தொழில் முனைவோர்களும் நிதியுதவியை/உதவியை/உதவி மானியத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். நீர்ப்பிரி முகடு மேம்பாடு மற்றும் வேளாண்மை அணுகுமுறையைத் திட்டமிடுவதற்கும் மேம்படுத்துவதற்குமாக உள்ளூர் மக்களின் மேம்பாடும், உள்ளூர் அமைப்பு சார்ந்த ஆதரவும் மிகவும் இன்றியமையாததாகும். எனவே, மேற்கூறிய செயற் திட்டங்களுக்கான பயனாளர்களைக் கண்டறியும் பொறுப்புகளை ஊராட்சிகளுக்கு இப்போது ஒப்படைப்பது இயலக்கூடியதாகும்.

வறட்சிப் பகுதித் திட்டம் மழை பெய்யும் பகுதிகளுக்கான தேசிய நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் செயலாக்கத்தினை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைத்து, முன்னேற்றம் குறித்து மாவட்ட ஊராட்சி ஆய்வு செய்தல் வேண்டும். இத்திட்டங்களை உருவாக்குதல் ஆய்வு போன்றவற்றை 163 (2ஆ) பிரிவின் கீழ் மாவட்ட ஊராட்சியால் கவனிக்கப் பெறலாம்.

இப்போது, 2 நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டங்கள் வறட்சிப் பகுதித் திட்ட அலகுகள், மழை பெய்யும் பகுதிகளுக்கான தேசீய நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்ட அலகுகள் ஆகியவை முறையே 80 மற்றும் 84 வட்டாரங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவை மீதான செயற்பாடுகளை ஊராட்சி ஒன்றியம் வட்டார அளவில் உள்ள அலகுகளை மாவட்ட ஊராட்சிகளும் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். மாவட்ட ஊராட்சியானது மேற்பார்வையிடும் அமைப்பாகச் செயற்பட்டு, ஊராட்சி ஒன்றியத்திற்கு வழி காட்டியாகவும், தொடர்புடைய அவர்களின் மாவட்டத்தில் திட்டத் தயாரிப்பு. ஆய்வு செய்தல் மாநில அரசுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல் வேண்டும். நீர்பிரிமுகடு பயனீட்டாளர் உதவிக் குழுத் தொகுதியானது பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளால் மேம்படுத்தப்பட்டு உதவி செய்யப்படலாம், ஏற்றமடையச் செய்யலாம்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள்/ செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	வறட்சி பகுதித் திட்டம் (மைய அரசு ஏற்று நடத்தும் திட்டம் 50 : 50)	க	செ, ஆ	தி, ஆ
2.	ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம்	க	உ, ஆ	தி, ஆ
3.	ஒருங்கிணைந்த நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம்	க	உ, ஆ	தி, ஆ
4.	மழைபெய்யும் பகுதிகளுக்கான தேசீய நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம்	க	செ, ஆ	தி, ஆ
5.	விரிவான நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம்	க	உ, ஆ	தி, ஆ
6.	மண் வள அட்டைத் திட்டம்	க	உ, ஆ	தி, ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் /நிறுவனங்கள்/ மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	80 வட்டார அளவில் வறட்சிப் பகுதித் திட்ட அலகுகள்	–	எ, செ	மே
2.	84 வட்டார அளவில் மழை பெய்யும் பகுதிகளுக்கான தேசிய நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம்	–	எ, செ	மே
3.	நீர் பயன் கொள்வோர் தனது உதவித் தொகுதிகள்	–	ஒ	தி

5.5.4 சிறு பாசனம் மற்றும் நீர் மேலாண்மை

(இனம் - 3)

சிறு பாசனம் மற்றும் நீர் மேலாண்மை ஆகிய துறைகளில் திட்டமிடுவதிலும் மேம்பாடுசார்ந்த வாயிலிலும் உள்ளூர் மக்களை ஈடுபடச் செய்து அமைப்பு சார்ந்த ஆதரவளிப்பது மிகவும் இன்றியமையாததாகும். உதவி செய்வதற்குரிய பயனாளர்களாகக் கண்டறியும் பொறுப்பினை ஊராட்சிகளிடம் ஒப்படைக்கலாம்.

ஊராட்சி ஒன்றியதிடம் 114 (2) பிரிவின் கீழ் செயலாக்கம், மேற்பார்வை, ஆய்வு போன்றவற்றையும் சிறு பாசனம் மற்றும் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட நுண் பாசனத் திட்டம் ஆகியவற்றில் மாவட்டத் தொலைநோக்குத் திட்டத் தயாரிப்பில் மாவட்ட ஊராட்சிக்கு உதவி செய்வதையும் ஒப்படை செய்யலாம்.

மாவட்ட ஊராட்சி 163 (2ஆ) பிரிவின் கீழ் திட்டமிடல், மேற்பார்வை, ஆய்வு செய்வதுடன் தொடர்புடைய மண்டல தலைமைப் பொறியாளருடன் ஒருங்கிணைந்து உதவி செய்யலாம். மேலும், ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டுதோறும் பாசன நன்மையை விடுவிப்பதற்குரிய அறிவுரைகளையும் பரிந்துரைகளையும் வழங்கலாம்.

மாவட்ட ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் ஊராட்சியை நீர்வள மையம்/பொதுப் பணித் துறை மண்டலப் பொறியாளர்கள் அரசு நில மற்றும் மேற்பரப்பு ஆதாரப் புள்ளி விவர மையம், வேளாண் பொறியியல் துறை மற்றும் மாநில, மைய அரசு அலுவலர்களுடன் இணைந்து முக்கிய பணியாற்றும்.

ஊராட்சி ஒன்றியம் அனைத்து வகையிலும் உதவியளிப்பதற்கு உரியவைகளைத் கண்டறிவதில் ஊராட்சி உதவுவதுடன் தமது ஆட்சி எல்லையில் கிடைக்கக்கூடிய நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்து பேணுவதில் உதவி செய்யும்.

மாவட்ட ஊராட்சியானது மேற்பார்வை செய்யும் ஒரு அமைப்பாகவும், ஊராட்சியிலும் ஊராட்சி ஒன்றியத்திலும் செயற்படுத்தப்படும் திட்டங்களின்/செயற் திட்டங்களின் செயல் நிறைவேற்றத்தை ஆய்வு செய்யும். மேலும் திட்டச் செயலாக்கத்தையும் ஆய்வு செய்யும். அத்துடன். திட்டம் தயாரிப்பு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியங்களைப் பெறுதல். விவசாயிகளுக்கான ஊக்குதவி மேலாண்மை, கூட்டாண்மைக் கழக அமைப்புகள், வங்கி தலைவர்களிடமிருந்து கடன் பெறல் போன்றவற்றில் மாவட்ட ஊராட்சியானது வழிகாட்டியாக இருப்பதுடன் ஒருங்கிணைப்புப் பணியையும் செய்யும். மேலும் மாவட்ட ஊராட்சியானது தொடர்புடைய தமது பகுதிகளில் உள்ள விவசாய சங்கங்களுக்கும், வேளாண் மன்றங்களுக்கும் உதவி செய்யும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள்/ செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
	சிறுபாசனம் மற்றும் பாசன பகுதி மேம்பாடு			
1.	ஊராட்சி ஒன்றியத்திடமுள்ள 100 ஏக்கருக்கும் குறைவான பாசனப் பரப்புள்ள பாசனக் குளங்களை தரப்படுத்தி மேம்படுத்துதல்	க	செ, மே	ஆ, அ
2.	ஊரகப் பகுதிகளில் உள்ள சிறு பாசனக் குளங்களை மேம்படுத்துவதற்கான சிறப்புத் திட்டம்	க, செ	உ, செ	அ, மே, ஆ
3.	முன்னாள் ஜமின் குளங்களைச் சீராக்கம் செய்தல்	க,செ	செ	தி, ஆ
4.	தூரெடுத்தல் மற்றும் சீராக்கம் செய்தல்	க,செ	செ	ஆ, மே
5.	சிறுபாசனத் சிறப்புத் திட்டம் (முன்னாள் ஜமின் குளங்கள்) மற்றும் பொதுப்பணித்துறை குளங்கள்	–	மே, ஆ	தி, ஆ, அ
6.	நிலநீர் கண்டுபிடிப்பு	க	உ	ஆ
7.	குழாய் கிணறுத் திட்டங்கள்	க	செ	ஆ
8.	தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) கடனுதவியுடன் சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களைச் செயற்படுத்துதல்	க, உ	மே. ஆ	தி, ஆ
9.	மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பாசன வசதிகளான குளங்களைக் கட்டுதல்	க, உ, ஒ	செ, தி, மே	ஆ, அ, ஆ
10.	பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (த.ப.மே.தி) பண்ணை மேம்பாட்டில் பணிகள் சுழற்சி முறையால் நீர் வழங்குதல்	க, ஒ, உ	செ, தி, மே, ஆ	பா, மே, அ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் / நிறுவனங்கள் / மையங்கள் /	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	நீர்வள ஆதார அமைப்பு / பொதுப்பணித்துறை	–	–	உ.,ஒ.
2.	அரசு நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர்வள புள்ளிவிவர நிலையம்	–	–	உ.,ஒ.
3.	மண்டலத் தலைமைப் பொறியாளர் – திருச்சி மண்டலம் – பொள்ளாச்சி மண்டலம் – மதுரை மண்டலம்.	–	–	உ.ஒ.
4.	வேளாண் பொறியியல் துறை–சிறு பாசனம்	–	–	உ.ஒ
5.	ஆற்று சமவெளித் திட்டம் (பாசன பகுதி மேம்பாட்டுத் திட்டம்) – வேளாண் பொறியியல் துறை	–	–	உ.ஒ
6.	நீர் பயன்பாட்டாளர் தொகுதி	உ	ஒ.ஆ.	தி.ஆ

5.5.5. கால்நடை பராமரிப்பு, பால் பண்ணை மற்றும் கோழிப்பண்ணை

(இனம் - 4)

கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிவளர்ப்பு ஆகியவற்றின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், குன்றுப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பகுதித் திட்டம், ஆதி திராவிடர் நல்வாழ்வு திட்டங்கள் போன்ற சில சிறப்புத் திட்டங்கள் பால்வள மேம்பாட்டுத் துறையால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தோடு தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டம், வேளாண் மனித வள ஆற்றல் மேம்பாட்டுத் திட்டம், ஆடு வளர்ப்புத் திட்டம், டானிடாவின் கீழான கால்நடை மேம்பாட்டுத் திட்டம் போன்றவை பிற நாட்டு உதவியுடன் கால்நடை பராமரிப்புத் துறையில் செயற்படுத்தப்படுகின்றன. கால்நடை பராமரிப்புத் துறையானது கால்நடை நிலையங்கள், செயற்கை கருவூட்டல் நிலையங்கள் கால்நடை கிளை நிலையங்கள், மருந்தகங்கள் மற்றும் மருத்துவ மனைகள், கோழியின விரிவாக்க நிலையங்கள், கோழிக்குஞ்சு பொறிப்பு நிலையம் போன்றவற்றை கால்நடை பராமரிப்புத் துறையானது பேணிவருகின்றது. ஊராட்சியானது மாட்டுக் கொட்டில்கள், வண்டி நிலையங்கள், பொதுவான மாடு கிடைக்கும் இடம், பொது இறைச்சிக் கொட்டில்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு பேணி வருகின்றது. கால்நடை துயர் தணிப்புக்காக நியாயமான நிதியொதுக்கத்தை ஊராட்சி ஒன்றியம் செய்து, கிளை நிலையங்களின் செயற்பாடு மற்றும் பேணுகை ஆகியவற்றை எடுத்துத் கொள்ளும். மேலும் ஊராட்சி ஒன்றியம் கால்நடைதுணை நிலையங்களை அமைத்து இப்போதுள்ள கால்நடை பணிகளுக்கான துணை நிலையங்களைப் பேணி வரும். இத்திட்டங்கள் 114 (2) பிரிவின் கீழான ஆய்வு, மேற்பார்வை மற்றும் மறு ஆய்வு ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியம் எடுத்துக் கொள்ளும். மாவட்ட ஊராட்சியானது மாவட்டத்தில் உள்ள கால்நடை பராமரிப்பு, பால்வளம், மற்றும் கோழி வளர்ப்புப் போன்ற திட்டங்கள் அனைத்தையும் 163 (2ஆ) பிரிவின் கீழ் திட்டமிடல், மேற்பார்வையிடல், ஆய்வு செய்தல் போன்றவற்றை செய்யும். அலுவலர்கள் துறை வாரியாக அவர்களால் நடத்தப்பட்டு வருகின்ற செயற் திட்டத்தின் / திட்டத்தை குறித்த விவரங்களை முழுவதுமாக வழங்குவதுடன் மாவட்ட ஊராட்சியால் கூட்டப் பெறும் மேற்கூறிய ஆய்வுக் கூட்டங்களில் கலந்துகொள்ளும்.

கால்நடைப் பராமரிப்பு, பால்பண்ணை, மற்றும் கோழி வளர்ப்புத் திட்டங்கள் ஆகியவற்றைப் பேணிக் காப்பதற்கு நிறுவனங்கள் பெருமளவு உள்ளன. ஊராட்சியானது விவசாயிகள் பயிற்சி நிலையத்தை அமைக்கும். கால்நடை பராமரிப்பு மற்றும் அத்தொடர்பிலான நிறுவனங்களை ஊராட்சி ஒன்றியம் எடுத்துக்கொண்டு பேணிவரும் திட்ட உருவாக்கம், ஆய்வு, மற்றும் பல்வேறு நிலையங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்களை மாவட்ட ஊராட்சியானது ஒருங்கிணைக்கும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள்/ செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	கால்நடை துணை நிலையம் மருந்தகம் / மருத்துவமனை (மா.தி.)	–	செ, பா.	மே. ஆ.
2.	அயல்நாட்டு கால் நடைகளைப் பெறுதல் (மா.தி.)	க.	செ, மே	ஆ
3.	உள்நாட்டு இனப்பெருக்கக் கால்நடைகள் / எருமைகள் மேம்பாடு (மா.தி.)	க	ஆ	தி, ஆ
4.	காளைமாடுகளின் வழிதோன்றல் பரிசோதனை திட்டம் (மா.தி.)	–	ஆ	ஆ
5.	ஈனாத கன்று உற்பத்தித் திட்டம் (மா.தி)	–	ஆ	ஆ
6.	துணை நிலையங்களில் செயற்கை கருவூட்டல் (வெ.உ.தி.)	க	செ, பா, மே	ஆ
7.	ஒ.ஊ.வ.திட்டத்தின் கீழ் உறை விந்து வசதிகள்	க	செ	மே. ஆ
8.	கிராம / மாவட்ட அளவில் கால்நடை மற்றும் கோழி காட்சிகளை நடத்துதல் (மா.தி.)	செ.	மே	செ, ஆ
9.	இறைச்சித் கொட்டில்களைப் பேணுதல் (மை.அ.உ.தி.)	செ.	செ.	மே, ஆ
10.	ஆடு வளர்ப்புக்காக சிறு / குறு வேளாண் தொழிலாளருக்கான உதவி திட்டம் (சி.ப.தி.)	க	செ	மே, ஆ
11	பன்றி வளர்ச்சி (மா.தி.)	க	செ	மே, ஆ
12.	தீவனம் மற்றும் விதை உற்பத்திப் பண்ணை (மா.தி)	க	செ	மே, ஆ
13.	விலங்குகளையும் பறவைகளையும் பகிர்வு செய்தல் (மா.தி.)	க	செ.பா	மே. ஆ
14.	ஐந்தாண்டுக்கு ஒருமுறையான கால்நடைகளைக் கணக்கெடுப்பு (ம.பொ.தி.)	–	–	மே. ஆ

தொடர் எண்	திட்டங்கள்/ செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
15.	கோழி வளர்ப்புப் பின்புறத்தில் முயல் வளர்போருகான உதவி (ம.பொ.தி.)	க,செ.	செ	மே, ஆ
16.	புல்நில வளர்ப்பு உதவி (மா.தி)	க.	செ.	ஆ
17.	பால்வள கூட்டுறவுகள் (மை.ஏ.தி.)	உ.	ஆ.	ஆ
18.	ஒருங்கிணைந்த பால்வள மேம்பாட்டுத் திட்டம் (மை.ஏ.தி.)	–	ஆ.	ஆ
19.	தரமான பால்தரும் விலங்குகளை வழங்குதல் (ஒ.ஊ.வ.தி.)	க	ஆ	ஆ
20.	ம.ப.மே.திட்டத்தின் கீழான திட்டங்கள் (மா.தி.)	க.	பா, மே, ஆ.	ஆ
21.	மே.தொ.ம.மேம்பாட்டுத் திட்டத்தின் கீழான திட்டங்கள் (மா.தி.)	க.	ஆ, மே, ஆ	ஆ
22.	சி.ப.தி மற்றும் ஒ.ம.மே.திட்டத்தின் கீழான திட்டங்கள்	க	பா, மே, ஆ	ஆ
23.	திட்டங்கள் தெரிந்தெடுக்கப் பெற்ற பகுதிகளில் மாடுகளுக்கும் எருமைகளுக்கும் ஊசிபோடுதல் (மா.தி.)	க.	மே, ஆ.	தி, ஆ.
24.	புதுக்கோட்டை மாவட்டத்தில் டானிடா நிதியுதவியின் கால் நடை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் த.வே.வ. திட்டம். (வெ.உ.தி.)	–	ஆ	ஆ
25.	ஐ. பொ. குழு உதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம் (வெ.உ.தி.)	–	ஆ.	ஆ.
26.	கோழியின் சேய் நோய்நாடு துயிலகம் அமைத்தல்	க	மே, ஆ	தி. ஆ
27.	வான்கோழிப் பண்ணை அமைத்தல்	க.	மே, ஆ	தி, ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் / நிறுவனங்கள் / மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	விலங்கு நோய் புலனாய்வு அலகு	–	ஆ.	ஆ.
2.	செயற்கை கருவூட்டல் நிலையம்	–	எ, பே.	ஆ.
3.	மாவட்ட கால்நடைப் பண்ணை	–	–	தி, ஆ.
4.	கால்நடை ஆராய்ச்சி நிலையம்	–	–	தி, ஆ.
5.	நோய் நோய்நாடல் ஆய்வகம் மற்றும் கொல்லை பற்றிய ஆய்வகம்	–	–	ஆ
6.	ஊரக கால்நடை அலகு	–	எ, பே.	ஆ
7	கால்நடை நல்வாழ்வு துறை நிலையம்	–	எ, பே.	ஆ, மே
8.	கால்நடை நடமாடும் அலகு / மருந்தகங்கள்	–	எ, பே.	ஆ, மே
9.	தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கின அறிவியல் பல்கலைக்கழகம்	–	–	ஒ.
10.	பல்கலைக் கழகமைய ஆய்வகம்	–	–	ஆ.
11.	ஏவியன் நோய்நாடல்	–	–	ஆ.
12.	விலங்குத் தீவனப் பகுப்பாய்வு ஆய்வகம்	–	–	ஆ.
13.	பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்	–	எ, பே.	ஆ, மே
14.	விவசாயிகள் பயிற்சி நிலையம்	நி.	பே.	ஆ, மே
15.	கிரிஸ்சி விக்யான் கேந்திரம்	நி.	பே.	ஆ, மே
16.	கோழி ஆராய்ச்சி நிலையம்	–	எ, பே.	ஆ, மே
17.	கோழி விரிவாக்க மையம்	–	எ, பே	ஆ, மே
18.	பல்கலைக் கழகப் பால்பண்ணை	–	எ, பே	ஆ, மே
19.	பால் பண்ணை மற்றும் உணவுத் தொழில் நுட்பவியல் கழகம்	–	–	ஆ, மே
20.	வாத்து ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையங்கள்	–	எ, பே.	ஆ, மே
21.	ஆடு ஆராய்ச்சி நிலையம், மேச்சேரி	–	எ, பே.	ஆ, மே
22.	ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்	–	எ, பே.	ஆ, மே

5.5.6 மீன் வளம்

(இனம் - 5)

மீன் வள நடவடிக்கைகளின் மேம்பாட்டிற்கான இருபது திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதனால் மீன் உற்பத்தியும் ஊரக வேலை வாய்ப்பு வசதிகளும் கிடைக்கப்பெற்றன. மீன் வளர்ப்பு மற்றும் மீன் வளம் போன்றவற்றிற்காக கிராமக் குட்டைகளையும் குளங்களையும், மேம்படுத்தி, குத்தகைக்கு விடவேண்டி ஊராட்சிகளுக்கு அதிகாரமளிக்கலாம். மேலும், பல்வேறு நலத் திட்டங்களின் கீழ் அரசு உதவி பெறுவதற்காகத் தக்கவர்களைக் கண்டறியலாம். ஊராட்சியானது மீன் நிலையங்களை ஆரோக்கியமான நிலையில் அமைக்கலாம். இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களின் இழப்பையும் சேதத்தையும் மதிப்பீடு செய்து துயர்தணிப்பு நடவடிக்கைகளில் ஊராட்சியானது உதவி செய்யலாம். ஊராட்சி ஒன்றியம் 114(2)–ஆவது பிரிவின் கீழ் ஆய்வு செய்ய அதிகாரம் பெற்றிருந்து தனது எல்லைக்குள் உள்நாட்டு மற்றும் கடல் மீன் வளங்கள் போன்ற பல்வேறு திட்டங்களில் மீன் வளர்ப்பு, பயிற்சி, ஆகியவற்றிற்குரியவர்களைக் கண்டறிதல் தொடர்பாக அனைத்து திட்டங்களையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றலாம். மாவட்ட ஊராட்சியானது செயல்படுகின்ற பல்வேறு திட்டங்களை 163 (2.ஆ) பிரிவின் கீழ் திட்டமிட்டு மறு ஆய்வு செய்ய பங்கினை இயல்பாகப் பெற்றிருக்கிறது. மாவட்ட ஊராட்சியின் தலைவர், மீன் விவசாயிகள் வளர்ச்சி முகமையில் / உவர் நீர் மீன் வளர்ச்சி முகமையில் ஒரு உறுப்பினராக இருப்பார். மீன்துறை துணை இயக்குநர் மாவட்ட ஊராட்சியில் எடுத்துக்கொள்வதற்குரிய இத்துறைச்சார்புடைய ஆய்வினைக் கவனிப்பார்.

மீன் வள நடவடிக்கையின் செங்கடமைகளைக் கவனிப்பதற்கு எட்டு அமைப்புகள் உள்ளன. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை/உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மாவட்ட ஊராட்சிகளின் மேற்பார்வையின் கீழும் மறு ஆய்வு செய்வதற்கும் கொண்டு வரலாம். மாவட்ட ஊராட்சியானது இம் முகமைகளின் ஒட்டுமொத்த செய்கடமைகளை அமைத்து, மேலாண்மையிட்டு, கண்காணிக்கலாம். மாவட்ட ஊராட்சியானது பல்வேறு முகமைகளின், பயிற்சி மையங்களின் செயற்பாடுகளைத் திட்டமிடுவதிலும் மறு ஆய்வு செய்வதிலும் இயல்பான பங்கிணைப் கீழே குறிப்பிடப்வாறு பெற்றிருக்கிறது.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	மீன் வளர்போர் மேம்பாட்டு முகமை வாயிலாக உள்நாட்டு மீன்வள மேம்பாடு	க, செ.	க, ஆ	தி, ஆ, மே
2.	உள்நாட்டு நீரில் மீன் வளச் சுரண்டல் மற்றும் விற்பனை	க	அ, க.	தி, ஆ
3.	நன்னீர் இறால் தொழிற்சாலையை அமைத்தல்	க	அ.	தி, ஆ
4.	இறால் நிலையத்தை அமைத்தல்	க	அ.	தி, ஆ
5.	உவர் நீர் மீனவர் மேம்பாட்டு முகமைகளை அமைத்தல்	க,செ.	க.	தி, ஆ

தொடர் எண்	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
6.	கடற்கரையோரப் பகுதிகளில் இறங்குமுகத்தை அமைத்தல்	–	செ.	ஆ.
7.	பற்றாக்குறைக் காலத்தில் கடல் மீனவர்களுக்கான இடருதவித் திட்டம்	–	–	–
8	கடற்கரையோர மீன்பிடி கிராமங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்	–	செ.	தி. ஆ
9	மீனவர்களுக்கான இலவச வீட்டுவசதித் திட்டம் (மா.தி.)	க.	செ.	தி. ஆ
10.	மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான நிலத்தைக் கையகப் படுத்துவதற்கான நிதியுதவி	உ	உ	தி. அ
11.	அண்மைக்கால மீன்பிடித் தொழில் நுட்பவியலில் மீனவர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் மீனவர்களுக்கு உதவித் தொகை அளித்தல்	க	செ	தி. ஆ.
12.	மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான நிதியுதவி	உ	உ	உ, தி.
13.	மீன்காட்சியகத்தை நிறுவுதல்	–	–	தி.
14.	செயற்கை மற்றும் பருத்தியாலான வலைகள், பொறிகள், பிற துணைக் கருவிகள் போன்றவற்றை மீனவர்களுக்கு வழங்குதல்	க.	செ.	ஆ.
15.	கொள்கலன்களையும் மூன்று சக்கர வண்டிகளையும் வாங்க மீனவர்களுக்கு நிதியுதவி அளித்தல்	க.	செ.	ஆ.
16	மீனவர்களின் கட்டுமரத் துண்டுகளுக்கு வேதியியல் சார்பான செயற்பாடுகள்	க.	செ.	ஆ.
17.	கடலறிக்காத திட்டங்களுக்கான உதவியளித்தல்	உ.	தி.	தி. ஆ.
18.	மீன்பிடி பகுதிகளில் கிளைச் சாலைகளை அமைத்தல்	க.	செ.	மே. ஆ.
19.	மீனவர்களின் தொகுதி காப்பீட்டுறுதித் திட்டம் (மா.தி.)	க.	செ.	ஆ.
20.	மீனவர் சேமிப்பு மற்றும் இடருதவித் திட்டம்	க.	செ.	ஆ.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் / நிறுவனங்கள் / மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	மீனவர்கள் மேம்பாட்டு முகமை	உ	உ	ஆ
2.	உவர் நீர் மீனவர்கள் மேம்பாட்டு முகமை	உ	உ	ஆ
3.	தமிழ்நாடு மீனவர்கள் மேம்பாட்டுக் கழகம்	–	–	ஆ
4.	மீன்துறை உதவி இயக்குநர் (வட்டாரம்)	–	–	ஆ
5.	மீன்துறை துணை இயக்குநர் இணை இயக்குநர் (வட்டாரம்)	–	–	ஆ
6.	மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்	உ	ஆ	தி, ஆ
7.	மீனவர் பயிற்சி நிலையங்கள்	–	–	ஆ
8.	தமிழ்நாடு மீனவர் தலைமை கூட்டுறவு இணையம்	–	–	ஆ

5.5.7. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் (இனம் - 6)

சமூகக் காடு மற்றும் பண்ணைக்காடு துறையின் கீழ் வனத் துறையால் பதினேழு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசு திட்டங்களின் கீழ் உதவி அளிக்கக் கூடியவர்களை ஊராட்சிகள் கண்டறிந்து தெரிவு செய்யலாம். சமூகக் காடு திட்டங்களுக்கான சமுதாய தரிசு நிலங்களை கண்டறிவது போன்ற செயற்பாடுகளை ஊராட்சி கவனித்து வரலாம். ஊராட்சி ஒன்றியம் சாலையோரங்களிலும், இருப்பூர்த்தித் துறை நிலங்களிலும், பொது இடங்களிலும் செடிகளை நடுவது உள்ளிட்ட சமூகக் காடு திட்டங்களைச் செயற்படுத்தலாம். மேலும் ஊராட்சி ஒன்றியம் சமூகக் காடுகள் திட்டங்களுக்கான விதைகளையும், செடிகளையும் உற்பத்தி செய்து அளிக்க ஏற்பாடு செய்யலாம். திட்டச் செயற்பாட்டிற்காக ஊராட்சிகளுக்குரிய நிதிகளை ஊராட்சி ஒன்றியம் மூலம் வழங்கலாம். மாவட்ட ஊராட்சியானது இப்பொருள் மீது திட்டமிடல் மற்றும் அறிவுரையளிப்பு ஆகியவற்றில் முக்கிய பங்காற்றும். 114(2) மற்றும் 163 (2ஆ) ஆகிய பிரிவுகளின் கீழ் ஊராட்சி ஒன்றியத்தாலும், மாவட்ட ஊராட்சியாலும் மேற்கொள்ளப்படும் ஆய்வுக் கூட்டங்களில் முறையே அரசு அலுவலரும் மாவட்ட வன அலுவலரும் கலந்து கொள்வர்.

சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் திட்டங்களை கவனிப்பதற்கான நிறுவனங்கள் குறைந்த அளவில் உள்ளன. எரிபொருள் மற்றும் தீவன பயிர்கள் சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள் திட்டங்களின் கீழ் நேரடியாகக் தொடர்பு கொண்டுள்ளன. நெடுஞ்சாலைத் துறையால் செயற்படுத்தப்படும் காடு வளர்ப்புத் திட்டம், மாவட்ட ஊராட்சியால் மறு ஆய்வு செய்யப்படும். மாவட்ட ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியம் அரசு முகமைகளால் செயற்படுத்தப்பட்டு வருகின்ற அனைத்துத் திட்டங்களையும் ஆய்வு செய்யும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	சமூக மற்றும் பண்ணைக்காடுகள் திட்டம் (மா.தி.)	க.	செ.	தி. மே. ஆ
2.	மலைத்தோட்டக் கூழ்மரம் (மா.தி)	க.	செ.	தி. மே. ஆ
3.	தமிழ்நாடு வேளாண்மை சார்ந்த மேம்பாட்டுத் திட்ட சமூகக் காடுகள் (வெ.உ.தி.)	க.	செ. ஆ,	தி. மே, ஆ
4.	பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அரசுத் துறைகளுக்கும் தோட்டப் பயிர்களுக்காக விதைகளையும் செடிகளையும் இலவசமாக வழங்குதல் (மா.தி.)	க. செ,	க.செ,	தி. மே. ஆ
5.	மூங்கில் பண்ணைகளை அமைத்தல் (மா.தி.)	க.	க.	ஆ.
6.	சமூக தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் (மா.தி.)	செ.	மே	தி. ஆ.
7.	ஊசியிலைக் காட்டுப் பயிர்கள் (மா.தி.)	–	–	ஆ
8.	மரம் பயிரிடுதல் (மா.தி.)	–	செ.	ஆ.
9.	பழங்குடிப் பகுதிகளில் பயிர்களை வளர்த்தல் (மா.தி.)	க.	செ.	ஆ.
10.	பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்களைக் கட்டுதல் வனச் சாலைகளை அமைத்தல் (மா.தி.)	க	செ.	மே. ஆ
11.	மக்கள் நாற்றங்கால்களை நிறுவுதல் (மா.தி.)	க.	மே	தி. ஆ.
12.	உயிர்சார்ந்த தலையீடுகளிலிருந்து வனங்களைப் பாதுகாப்பதற்காக உள் கட்டமைப்பு மேம்பாடு	–	ஆ	தி. ஆ.

தொடர் எண்	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
13.	சூழலியல் மற்றும் சுற்றுப்புறம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுகளை உருவாக்குதல்	–	ஆ	தி, ஆ.
14.	அரிய மரவடை, மரவடை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான உதவி	–	ஆ	தி, ஆ.
15.	ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் வெளிநாட்டு உதவித் திட்டம் ஆகியவற்றின் கீழ் சமூகக்காடுகள் திட்டம் (மை.ஏ.தி.)	க.	செ.	தி, மே, ஆ
16.	வேளாண்மைத் துறையின் தேசீயத் தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பண்ணைக் காடுகள் திட்டம்	க.	செ.	தி, மே, ஆ
17	ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி அதிகாரத்தில் உள்ள சாலைகளில் நிழல்தரும் மரங்களை அமைத்து பேணுதல் திட்டம்	செ.	செ.	ஆ.

ஊரக உள்ளாட்சி
அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள்/நிறுவனங்கள்/ மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	மாவட்ட வன அலுவலர்	பா.	ஒ.	தி, ஆ.
2.	வட்டார வளர்ச்சி அலுவலர்	பா.	ஆ.	தி, ஆ.
3.	கோட்டத் பொறியாளர்கள் நெடுஞ்சாலைத் துறை	பே	பா, மே	ஆ.
4.	சமூகக் காடுகள் நாற்றங்கால்	எ	பா, ஆ.	தி.

5.5.8. சிறு காடுகளின் உற்பத்திப் பொருள்கள் (இனம் - 7)

சிறுதிற வன உற்பத்திப் பொருளமைப்பை ஊராட்சிகளில் உள்ள பழங்குடிப் பகுதிகளில் மேம்படுத்தவும் வளர்க்கவும் இயலும் பொருட்டு அப்பணியை எடுத்துக்கொண்டு வனத் துறையின் நெருங்கிய ஒருங்கிணைப்போடு செயலாக்குவதற்குரியவர்களைத் கண்டறிந்து அதிகாரப் ஒப்படைப்பு செய்தல் வேண்டும். சிறுதிறவன உற்பத்திப் பொருட்களை தம்பகுதியில் கொள்முதல் செய்முதல் செய்வதற்குரிய குடும்பத்தினர்களின் பட்டியலை கண்டறிந்து, பெருமளவு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் ஒருங்கிணைந்து விற்பனை செய்வதற்கான அதிகாரத்தினை ஊராட்சிகள் பெற்றிருத்தல் வேண்டும். இத்திட்டங்களின் செயலாக்கத்தினை ஊராட்சி ஒன்றியம் சிறப்புற மேற்பார்வையிட வேண்டும். வனச்சரகர்கள் திட்டத்தின் காலமுறையான முன்னேற்றத்தினை தெரியப்படுத்துதல் வேண்டும். இத்திட்டங்களின் செயற்பாடுகளை 163 (2ஆ)–வது பிரிவின் கீழ் மாவட்ட ஊராட்சி ஆய்வு செய்து சிறு திற வனப்பொருள்கள் மேம்பாடு, கொள்முதல் செய்தல், விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவை குறித்துத் திட்டமிடுதல் வேண்டும். அத்தகைய ஆய்வுக் கூட்டங்களில் மாவட்ட வன அலுவலர் கலந்துகொண்டு திட்டங்களின் முழு விவரங்களை மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்குதல் வேண்டும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்டம்–2 ஊரகப் பகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் புளி, வேம்பு, சீக்காய், கசப்புக்காய், கரி இழைகள், பழம் கொடுக்கும் மரங்கள் போன்ற சிறுதிற வன விளைபொருள்களை பயிர்செய்யக் கருதப்பட்டுள்ளது. 1996–97 இல், 750 ஹெக்டேர் ரூ.72.58 இலக்கம் முதலீட்டுடன் நிறைவேற்றப்பட உள்ளது. கீழே உள்ள திட்ட–3 வனப் பகுதிகளில் குடியிருக்கும் மலைவாழ் மக்களின் பொருளாதார நிலையும் தரமான வாழ்க்கையும் மேம்படுத்திடக் கருதப்பட்டுள்ளது. 1996–97ல் ரூ.47.74 இலக்கம் முதலீட்டுடன் சிறுதிற வன உற்பத்தித் பயிர் வகைகளின் கீழ் 390 ஹெக்டேரில் கொண்டுவரப்படவுள்ளது. 4ஆவது திட்டமானது மருத்துவஞ்சார்ந்த செடிகள் உள்ளிட்ட மரஞ்சாராத வனப்பொருள் உற்பத்தியை பேணி மேம்படுத்தப்படவுள்ளது. 1996–97ல் ரூ.9 இலக்கம் மதிப்பில் 750 ஹெக்டேர் பேணப்படவுள்ளது.

மாவட்ட வன அலுவலர் சிறுதிற வன உற்பத்தியைக் கொள்முதல் செய்வதிலும் பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக விற்பனை செய்வதிலும் ஊராட்சிகளுக்கு உதவி செய்வார். சிறுதிற வன உற்பத்தி நடவடிக்கைகளில் மாவட்ட ஊராட்சிகள் மாவட்ட வன அலுவலுருடன் கலந்து ஒருங்கிணைக்கும். பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஆய்வு செய்யவும், அவைகளின் செயற்பாடுகளை மேம்படுத்திட உதவி செய்யவும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும். இத்திட்டம் முழுமையும் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளருடன் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொண்டு மாவட்ட ஊராட்சியால் மறுஆய்வு செய்யப்படுதல் வேண்டும். முழுமையான விவரங்களை மாவட்ட ஊராட்சிகளுக்கு அளிக்கவும் வேண்டும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள்/ செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	தேன், மரப்பட்டைகள், புளி, ஏலக்காய், மூங்கில் ஆகியவை போன்ற சிறிய வன உற்பத்திப் பொருள்களை முறைப்படுத்துதல் (மா.தி.)	க.செ.	மே, செ	தி, ஆ, மே
2.	வனத்துறையின் சிறுதிற வன உற்பத்திப் பொருள் மேம்பாட்டுத் திட்டம் (மா.தி.)	க, செ.	மே, செ.	தி, ஆ, மே.
3.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலவாழ்வுத் துறையின் துணைத் திட்டத்தின் கீழ் சிறுதிற வனப்பொருள் உற்பத்தி மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தை வனத் துறையால் செயல்படுத்துதல் (மா.தி.)	க. செ.	மே,	தி, ஆ.
4.	மருத்துவச் செடிகள் உள்ளிட்ட சிறுதிற வன உற்பத்திப் பொருள்களை எழுப்புதல்	க. செ.	மே	தி, ஆ.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் / நிறுவனங்கள் / மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	பெரிய வகை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (மிக பெரிய பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள்)	அ	ஆ	ஆ
2.	மாவட்ட வன அலுவலர் (மா.வ.அ.)	அ	ஒ	ஒ

5.5.9. உணவைப் பதப்படுத்தும் தொழில் உள்ளிட்ட சிறுதொழில்கள்

(இனம் - 8)

இப்போது சிறுதொழில் நிறுவனங்கள் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களை மாவட்டத் தொழில் மையங்கள் செயல்படுத்தி வருகின்றன. உள்ளாற்றலுடை தொழில் முனைவோரைக கண்டறிவதிலும், பயிற்சியளித்தல், இடுபொருள் வழங்குதல், விற்பனை ஆதரவு மற்றும் ஊக்குதவியளித்தல் போன்றவற்றிக்கு உதவி செய்வதற்குரியவர்கள் மற்றும் தொழில் முனைவோர் ஆகியோரைக் கண்டறிவதிலும் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மாவட்டத் தொழில் மையங்களுக்கு உதவி செய்யும். ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் ஊரகக் கைவினைஞர்களைக் கண்டறிந்து குடிசைத் தொழில்கள் மேம்பாட்டிற்காக அவர்களுக்கு உதவி செய்யும். 2 திட்டங்களைச் செயல்படுத்துவதில், அதாவது வேலையற்ற இளைஞர்களுக்கான தலைமை அமைச்சரின் வேலைவாய்ப்புத் திட்டம், தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் பெருமளவு பங்காற்றுகின்றன. மாவட்டத் தொழில் மையங்கள் மாவட்ட ஊராட்சிக்கு அறிவிப்புச் செய்து மேற்கூறிய செய்கடமைகளில் ஊராட்சியோடும், ஊராட்சி மன்றத்தோடும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. துறை வாரியாகச் செயற்படுகின்ற திட்டங்களையும், செயற் திட்டங்களையும் ஆய்வு செய்திட வேண்டி 114 (2) மற்றும் 163 (2ஆ) ஆகிய பிரிவுகளின் கீழ் ஊராட்சிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளன. மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்கள் பல்வேறு துறை தொடர்புடைய மேலாளர்களால் உதவியளிக்கப்பட்டு மாவட்ட ஊராட்சியால் நிகழ்த்துவதற்குரிய திட்டங்களின் ஆய்வுக் கூட்டங்களில் பங்கேற்று அவர்களால் செயற்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பான முழுமையான விவரங்களை அவர்களுக்கு அளிப்பர். இந்த மூன்றடுக்கு முறை அமைப்புசார்ந்த தொடர்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	தொழிற்பேட்டைகளையும் வளர்ச்சி நிலையங்களையும் அமைத்தல்	–	–	தி. ஆ.
2.	தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்	க, அ.	அ, ஒ.	மே. ஆ.
3.	பிற்பட்ட பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைத்தல்	க.	க, மே	ஆ.
4.	பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு திட்டம் போன்ற மைய அரசால் ஏற்று நடத்தும் திட்டங்களைச் செயல்படுத்துதல்	க	செ, மே	க, மே. ஆ.

தொடர் எண்	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
5.	சிறுதொழில் நிறுவனங்களுக்கு கடன் மற்றும் நிதியுதவி அளித்தல்	உ	க, உ.	க, ஆ
6.	சிறுதொழில் நிறுவனங்களுக்குச் சிறப்புக் கடன்கள் (தொழில் நிறுவனங்களுக்கு அரசு உதவியளித்தல்)	–	–	–
7.	தமிழ்நாட்டில் உள்ள சிறு உப்புத் தயாரிப்பாளர்களுக்கு உதவியளித்தல்	க.	செ.	தி, ஆ.
8.	தொழில் இயக்குநரால் கட்டுப்படுத்தப்படும் பிற குழுவினருக்குக் கடன்கள்	க.	ஒ.	ஆ.
9.	பொது வசதிகளை அமைத்தல்	–	–	தி, ஆ.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் / நிறுவனங்கள் / மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	மாவட்டத் தொழில் மையம்	–	–	ஒ, ஆ.
2.	தரக் கட்டுப்பாடு நிலையம், கோயம்புத்தூர்	–	–	ஆ.
3.	மையச் சோதனை ஆய்வகம், காக்கலூர்	–	–	ஆ.
4.	நவீன கருவி அறை மற்றும் பயிற்சி நிலைய வசதிகள், கோயம்புத்தூர்	–	–	ஆ.
5.	சவ்வரிசி ஆராய்ச்சி ஆய்வகத்திற்கு சோதனை வசதிகள், சேலம்	–	–	ஆ.
6.	நீர் இறைப்பிகள், இயந்திரங்கள் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிலையம், கோயம்புத்தூர்	–	–	ஆ.
7.	தொழிற்பேட்டைகளில் தொழில்நுட்ப தகவல் பிரிவு	–	ஒ	தி, ஆ.

5.5.10. கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில்கள்

(இனம் - 9)

கதர் மற்றும் கிராமத் தொழில் துறையை முறைப்படுத்தி, வளர்ச்சித் திட்டங்களில் நிதியுதவி அளித்து கதர் மற்றும் கிராமத் தொழில்களை மேம்பாடையச் செய்வதே இதன் நோக்கமாகும். கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், பட்டு வளர்ப்பு, மாவட்டத் தொழில் மையம், கைவினைப் பொருள்கள் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு பனைப் பொருள்கள் மேம்பாட்டு வாரியம், பனை பொருள் மற்றும் நாரியற் பொருள்கள் விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை தொடர்புடைய உதவி இயக்குநர்கள் மாவட்ட ஊராட்சியில் ஆய்வு செய்யப்படுவர். மேற்கண்ட நிறுவனங்களுடன் இணைந்த களப்பணியாளரின் உதவியுடன் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் கிராம அளவில் உள்ளடங்கிய தகுதியுள்ளவர்களையும் பயிற்சி செய்திறனுக்கான பயனாளர்களையும் கண்டறியும். கீழே குறிப்பிடப்பெற்ற சில திட்டங்களை ஊராட்சி ஒன்றியம் செயலாக்கும். மாவட்ட ஊராட்சியானது, கதர் – கிராமத் தொழில்கள் வாரியம் மற்றும் பிற அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் மூலப் பொருள்கள் மற்றும் விற்பனை ஆகியன கிடைத்திட வகை செய்யும். மேலும், பொதுவாகக் குடிசைத்தொழில்களை மேம்பாடையச் செய்து வளர்ப்பதற்கான வசதிகளுக்கு வழிவகை செய்யும்.

கதர் – கிராமத் தொழில்கள் வாரியத்தாலும் அரசு நிறுவனங்களாலும் செயற்படுத்தப்படுகின்ற திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய 114 (2) மற்றும் 163 (2ஆ) ஆகிய பரிந்துரைகளின் கீழ் ஊராட்சிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளன. பிண்ணவை அத்தகைய திட்டங்கள் குறித்து மாவட்ட ஊராட்சிகளுக்கு முழுமையாகத் தகவலளிக்க வேண்டும். இந்நிறுவனங்களின் மூத்த அலுவலர்கள் மாவட்ட ஊராட்சியால் அழைக்கப்படும் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் வேண்டும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும்
ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள் / செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	கதர் துணி விற்பனை மீதான விற்பனை தள்ளுபடி (மா.தி)	---	மே	ஆ
2.	கதர் மேம்பாட்டிற்கான புதிய திட்டம்	க.	செ.	தி,ஆ
3.	கதர் செலவுக்கான தறிகளை நவீனப்படுத்தும் திட்டங்கள்	க.	செ.	தி,ஆ
4.	அகர்பத்தி பயிற்சி மற்றும் உற்பத்தி அலகுக்காக தமிழ்நாடு கதர் – கிராமத் தொழில்கள் வாரியத்திற்கான உதவி	---	---	ஆ

தொடர் எண்	திட்டங்கள் / செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
5.	தேனீ வளர்க்கும் பெட்டிகளை ஆதி திராவிடப் பழங்குடியினருக்கு வழங்குதல் (மா. தி.)	க.	செ.	தி,ஆ
6.	கதர் பட்டு நெசவாளர்களுக்கு, ஜகார்டு பெட்டி வழங்குவதற்கான திட்டங்கள் (மா. தி)	க.	செ.	ஆ
7.	நூற்புக்கதிர் கொண்ட கை ராட்டிகளில் கதர் நூற்புக்கான திட்டங்கள் (மா. தி)	க.	செ	ஆ
8.	பதனீர் எடுக்க பனை மரம் ஏறுவதற்கான கருவி வழங்கும் திட்டம் (மா. தி)	க, செ	மே	தி,ஆ
9.	படிப்புக்கான கருவிகளை இலவசமாக வழங்கும் திட்டம்	க,செ	மே	தி,ஆ
10.	கதர் பட்டு நெசவாளர்களுக்கு வடிவமைப்பு அட்டைகளையும் ஜங்குகள் வழங்குவதற்கான திட்டம் (மா.தி)	க.	செ,மே	தி,ஆ
11.	மேற்கு தொடர்ச்சி மலைத் திட்டத்தின் கீழ் கிராமத் தொழில் மேம்பாட்டுக்கான திட்டம் (மை.ஏ.ந.தி)	க.	செ. மே.பா.	தி,ஆ
12.	நீலகிரியில் தேனீ வளர்ப்பு கிராமத் தொழில் மேம்பாட்டுத் திட்டம் (மை. ஏ.ந.தி)	க	செ,மே	தி,ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் / நிறுவனங்கள் / மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	தமிழ்நாடு கதர் –கிராமத் தொழில்கள் வாரியம்	ஒ	மே	தி,ஆ
2.	தமிழ்நாடு பனைப்பொருள் மேம்பாட்டு வாரியம்	ஒ	மே	தி,ஆ
3.	தமிழ்நாடு பணை வாரியத் பொருள் விற்பனை இணையம்	ஒ	மே	தி,ஆ
4.	மாவட்ட ஊரக உறுதி வளர்ச்சி முகமை	ஒ	ஒ	தி,ஆ
5.	தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் மேம்பாட்டுக் கழகம்	ஒ	ஒ	தி,ஆ
6.	தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம்	ஒ	ஒ	ஆ
7.	மாவட்டத் தொழில் மையம்	ஒ	ஒ	ஆ

5.5.11. ஊரக வீட்டுவசதி

(இனம் - 10)

ஊரக வீட்டுவசதி எனும் பொருண்மை (1) வீட்டுமனை மற்றும் (2) வீட்டுவசதி ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாகும். அளிப்புப் பகுதியில் பின்வருவன முகமைகளாக உள்ளன.

1. ஊரக வளாச்சி இயக்கம்

இந்திரா நினைவு குடியிருப்பத் திட்டம் மற்றும் ஜவஹர் வேலைவாய்ப்பத் திட்டம் ஆகியவற்றின் கீழ் ஆதி திராவிட வகுப்பினருக்கு / ஆதி திராவிடப் பழங்குடியினருக்கு இலவச வீட்டு வசதியை அவைகள் அளிக்கின்றன.

2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) இது கடன் மற்றும் ஊக்குதவித் தொகை ஆகியவற்றை அளிக்கின்றது.

3. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதிக் கழகம் (தாட்கோ) 1989 வரை ஆதி திராவிட வகுப்பினருக்கு உதவி அளித்து வந்தது. அதன் பிறகு ஊரக வளர்ச்சித் துறையுடன் இணைக்கப்பட்டது.

4. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காகவும் மற்றும் வருமானமுள்ள பிற வகுப்பினருக்காகவும் வீட்டுமனை மற்றும் சீராக்கத் திட்டத்தை மேற்கொண்டு குடியிருப்பு வீடுகளை/அடுக்குமாடி வீடுகளைக் கட்டித் தருகின்றது.

5. மீன்துறையின் மீனவர் வீட்டு வசதி

6. கைத்தறித் துறையால் நிறைவேற்றப்படும் கைத்தறி நெசவாளர்கள் வீட்டு வசதி திட்டம்

7. வீட்டுவசதித் துறையின் ஆசிரியர் வீட்டு வசதி

8. காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் காவலர் வீட்டு வசதி

9. ஆதி திராவிடர் மற்றும் ஆதிதிராவிடப் பழங்குடியினர் நலம், பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலம் ஆகிய துறை ஆகிய துறைகளுக்கான வீட்டுமனை ஒதுக்கீடுகள்.

கண்டறியப்பட்ட எட்டு திட்டங்களில் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் பல்வேறு வகையில் செயல்படுகின்றன. மேலும் அமைப்புச் சார்ந்த தொடர்புகள் பின்வரும் அட்டவணையில் வரையறுக்கப்பட்டு உள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் 114 (2) ஆவது பிரிவின் கீழும், மாவட்ட ஊராட்சிகள் 163 (26) – வது பிரிவின் கீழும் முன்னேற்றங்கள் குறித்துக் காலமுறையாக ஆய்வு செய்திட அதிகாரம் பெற்றுள்ளன. தொடர்புடைய அலுவலரின் அத்தகைய கூட்டங்களில் கலந்து கொண்டு ஊராட்சி அமைப்புகளுக்கு விவரங்களை முழுமையாக அளிக்க வேண்டும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு
தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள் / செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	ஆதி திராவிடர்/பழங்குடியினர் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கான வீட்டுமனை ஒதுக்கீடு	க	க,பா,மே	தி,ஆ

தொடர் எண்	திட்டங்கள் / செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
2.	தமிழ்நாடு ஊரக வீட்டுவசதித் திட்டம்	க,செ	பா,மே,ஆ	தி,ஆ
3.	ஊரகப் பகுதிகளில் இருப்பிடத்தை மேம்படுத்துவதற்கான திட்டம்	க,செ	பா,ஆ,மே	தி,ஆ
4.	இந்திர நினைவு குடியிருப்புத் திட்டம்	க,செ	ஆ,மே.பா	தி,ம
5.	ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிடப் பழங்குடியினர் ஆகியோருக்கான வீட்டு வசதித் திட்டம்	க,செ	பா, ஆ, மே	தி,ஆ
6.	பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கான வீட்டு வசதித் திட்டங்கள்	க,செ	பா,ஆ,மே	தி,ஆ
7.	மீனவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்	க	பா,ஆ,மே	தி,ஆ
8.	கைத்தறி நெசவாளர்களுக்கான வீட்டுவசதித்திட்டம்	க,செ	பா,ஆ,மே	தி,ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் அமைப்பு சார்ந்த தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் / நிறுவனங்கள்/ மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	கட்டடமயம்			எ,பே
2.	கூட்டுறவுச் சங்கங்களின் இணை/ துணைப் பதிவாளர்/வீட்டுவசதி		ஒ	ஒ,ஆ
3.	மாவட்ட வருவாய் நிருவாகம்		ஒ	ஒ
4.	கோட்ட மோலாளர் (தாட்கோ)		ஆ	ஒ,ஆ

5.5.12. குடிநீர்

(இனம் எண் - 11)

மாநில அரசிடம் உள்ள உச்ச ஒப்பிய பொறுப்புகளைக் கவனத்திற்கொண்டு செயலாக்கம், ஆய்வு, மேற்பார்வை, திட்டமிடல் மற்றும் மறு ஆய்வு போன்றவற்றை பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு மாற்றப் பெறுவதற்குரிய இப்போது செய்பாட்டில் உள்ள திட்டங்களை மாநிலத் திட்டக் குழு பிரிவு கண்டறிந்துள்ளது. ஊராட்சிகளுக்கு முழுவதும் உரியதான நீர் வழங்கு திட்டங்களைப் பொருத்த நேர்வில் அத்தகைய திட்டங்களைக் கண்டறிந்து, உருவாக்கஞ் செய்து, செயல்படுத்தி பேணி வருதல் வேண்டும். ஊரக வீட்டு உரிமையாளர்களிடமிருந்து நீர் கட்டணங்களை வசூல் செய்வதற்கு ஊராட்சிகளுக்கு அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொறுப்பு நீர்வளங்கள் ஒரு ஊராட்சிக்கு மேற்பட்ட பகுதிகளை உள்ளடக்கியிருக்கும் போது தொடங்குகிறது. அத்தகைய நீர் வழங்கு அதிகாரங்களை 114 (2) ஆவது பிரிவின் கீழ் செயற்படுத்தவும், பார்வையிடவும் ஆய்வு செய்யப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களால் கண்காணிக்கப்படுதல் வேண்டும். கைநீர் இறைப்பிகளும், மின்நீர் இறைப்பிகளும் ஊராட்சி ஒன்றியங்களின் பேணுகையில் இருத்தல் வேண்டும். மாவட்ட ஊராட்சிகள் ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கிய பகுதிகளில் வளங்களைக் கண்டறிவதுடனில்லாமல் 163 (26) ஆவது பிரிவின்கீழ் செயற்குறிப்புகளை உருவாக்கி, திட்டங்களை வெற்றிகரமாகச் செயலாக்குவதற்கான நிதி ஆதாரங்களை எழுப்புவதுடன் முன்னேற்றம் குறித்து மறு ஆய்வு செய்யப்படுதல் வேண்டும். மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டிலிருந்து நீர் வழங்கும் தொழில் நுட்பப் பிரிவை மாவட்ட ஊராட்சிகள் எடுத்துக் கொள்ளும். கீழ்காணும் திட்டங்களின் செயலாக்கம், அமைப்பு சார்ந்த தொடர்புகள் ஆகியன பரிந்துரைக்கப் பெறுகின்றன. திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் மறு ஆய்வு ஆகியவை தொடர்பான அதிகாரங்களையும் ஒப்படைக்கலாம்.

தொடர் எண்	திட்டங்கள் / செயற் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றிய மன்றம்	மாவட்ட ஊராட்சி
1.	தன்னிறைவுத் திட்டம் – ஊரக உறைவிடங்கள் உள்ளடங்காத பகுதிக்கான ஊரக நீர் வழங்கு திட்டம்	க	செ,மே,பா	தி,ஆ,மே
2.	தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டம் – நீர் வழங்கு பகுதி		க,ஆ	தி,ஆ,மே
3.	வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான ஊராட்சி ஒன்றியங்க–ளுக்கான நலன்கள்	க	செ,பா	ஆ,மே
4.	மிகையாகப் பாதிக்க்கப்பட்ட பகுதிகளில் குழாய் மூலம் நீர் வழங்கு முனைப்பு திட்டம்	க	செ,பா	தி,ஆ,மே
5.	குறைந்தபட்ச தேவைகள் திட்டத்தின் கீழ் உவர் நீரினை முனைப்பாக கட்டுப்படுத்தி உப்புத் தண்மையால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட உறைவிடங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்	க	செ,பா,மே	தி,ஆ,மே

தொடர் எண்	திட்டங்கள் / செயற் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றிய மன்றம்	மாவட்ட ஊராட்சி
6.	இயந்திரங்கள் மூலம் உப்புத்தன்மையை அகற்றி விரைவாக குடிநீர் வழங்கும் செயற்திட்டம்	க	செ.பா	தி.ஆ.மே
7.	ஊரகப் பகுதிகளில சிறப்பு நீர் வழங்கு திட்டங்கள்	க	செ,பா,மே	தி.ஆ,
8.	விரைவான ஊரக நீர் வழங்கு திட்டம்	க	செ,பா,மே	தி,ம,

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான

அமைப்பு சார்ந்த தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் / நிறுவனங்கள் மையங்கள்/	ஊராட்சி	ஊராட்சி ஒன்றிய மன்றம்	மாவட்ட ஊராட்சி
1.	தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (மாவட்ட நிலை அலகு)		ஒ	ஒ.ஆ,தி
2.	மாவட்ட அளவிலான மின் இறைப்பி தொழில் நுட்ப அலகு		மே,ஆ	எ,ஆ

5.5.13. விறகு மற்றும் தீவனம்

(இனம் - 12)

ஊரகப் பகுதி எரிபொருள் மற்றும் தீவனம் ஆகியவற்றின் மேம்பாட்டிற்க்காக 10 பெருந்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. எரிபொருள் மரம் வளர்ப்பு, தரம் தாழ்ந்த சமூகக் காடுகளை காடாக மாற்றுதல், காப்புக் காடுகளுக்கு வெளியில் உள்ள தரம் தாழ்ந்த காடுகளையும், சமூகத் தரிசு நிலங்களையும் மீண்டும் காடுகளாக்குதல் ஆகியவற்றிற்கு உதவி செய்வதற்குரியவர்களை கண்டறிதலை ஊராட்சி மேற்கொள்ளும். அத்துடன் விறகுகள் மற்றும் தீவனச் செடிகள் ஆகியவற்றை வளர்ப்பதற்கான நாற்றங்கால் செயற்பாடுகளையும் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கலாம். தீவனம், தீவன நாற்றுகள், கன்றுகள் ஆகியவற்றை வழங்குதல் தொடர்பான திட்டத்தை ஊராட்சிகள் கவனித்துக் கொள்ளலாம். ஊராட்சி ஒன்றியங்கள் ஊரக எரிபொருள், தீவனத் திட்டம் ஆகியவற்றை ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளை உள்ளடக்கி, தேவைப்படுமிடங்களிலும் இணைப்பு மற்றும் வட்டாரப் பகுதிகள் பகுதியிலும் ஊரக விறகுகள், தீவனத் திட்டத்தை அமைத்துக் கொள்ளலாம். இத்திட்டங்கள் குறித்து ஊராட்சி ஒன்றியங்கள் 114 (2) ஆவது பிரிவின் கீழ் பார்வையிடல், மேற்பார்வை மற்றும் மறு ஆய்வு ஆகியவற்றை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். மாவட்ட ஊராட்சியானது வேளாண்மை மீதான நிலைக்குழு வாயிலாக இத்திட்டங்களை 163 (2ஆ) ஆவது பிரிவின் கீழ் அடிப்படையில் ஒருங்கிணைப்பு மற்றும் ஆய்வு போன்ற பணிகளை மேற்கொள்ளும். மாவட்ட ஊராட்சிகள் எரிபொருள், தீவனம், எரிவாயு, மேம்பட்ட எரி அடுப்பு மற்றும் சூரிய சமைகலம் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கான அறிவுரைகளை ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், அரசுக்கும் வழங்குவது இன்றியமையாததாகும். செயல் நிர்வாகத்திறனுக்காக ஊராட்சி ஒன்றியம் மேற்கொள்ளும் ஆய்வில் தொடர்புடைய கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநரும் வனத்துறையின் அலுவலரும் கலந்து கொள்வர். மாவட்ட ஊராட்சியைப் பொருத்த நேர்வில் ஆய்வுக் கூட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநரும், மாவட்ட வன அலுவலரும் கலந்துகொள்வர்.

எரிபொருள் மற்றும் தீவனச் செயற்பாட்டுத் திட்டங்களைப் பார்த்துக் கொள்வதற்கான நிறுவனங்கள் குறைந்தளவு எண்ணிக்கையில் மட்டுமே உள்ளன. விறகுக் கட்டை மற்றும் தீவனச் செடி நாற்றங்கால்கள் ஆகியன சமூகக் காடு திட்டங்களின் ஒரு பகுதியாக உள்ளன. இந்நாற்றங்கால்கள் சமூகக் தரிசு நிலங்களிலும் நேரடியாகவோ அல்லது விவசாயிகள் வாயிலாகவே ஊராட்சிகளாலும், ஊராட்சி ஒன்றியங்களாலும் அமைக்கப் பெறுகின்றன. நாற்றங்கால் மேலாண்மை தொடர்புடைய செய்கடமைகளை மாவட்ட ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும். கால்நடைப் பராமரிப்புத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் 7 தீவன அலகுகள் உள்ளன. இந்த அலகுகளின் செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றியமும் மாவட்ட ஊராட்சியும் ஆய்வு செய்யும். தீவனம் மற்றும் எரிபொருள் பயிர்கள் ஆகியவற்றைத் தொடர்புடைய தமது பகுதிகளில் குறையாது பார்த்துக் கொள்ளத்திட்டமிடும் பணியை மாவட்ட ஊராட்சியால் எடுத்துக் கொள்ளப்படும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள் / செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	வனத்துறையின் ஊரக எரிபொருள், விறகு பயிரிடுதல் திட்டம் (மா. தி)	க.	செ.பா.மே	தி. ஆ
2.	வனத்துறையின் தரந்தாழ்ந்த காடுகளை மீன் வளர்ச்சி தீவனம், எரிபொருள் பயிரிடும் திட்டம் (மா.தி)	க,செ	செ, பா	தி,ஆ

தொடர் எண்	திட்டங்கள் / செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
3.	எரிபொருள் மற்றும் தீவனம் ஆகியவற்றை சமுகத் தரிசு நிலைகளில், குளங்களில் பாசனப் பகுதிகளில் பயிரிடுதல் (வெ.உ.தி, மா.தி, ம.பொ.தி.)	க,செ	செ, பா மே	தி,ஆ
4.	இமாலாயப் பகுதிகள் அல்லாத ஏனைய இடங்களில் விறகு மரம் மற்றும் கால்நடை தீவனக் காடுகளை வளர்க்கும் திட்டம் (ம.பொ.தி)	க,செ	செ, பா,மே	தி,ஆ
5.	தீவன மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கி நிதியுதவியின் கீழ் செயல்படும் தமிழ் நாடு வேளாண் வளர்ச்சித் திட்டம் (வெ.உ.தி)	க	செ, பா	தி,ஆ
6.	கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டம்		ஆ	தி,ஆ
7.	தீவன சிறு தொட்டிகளையும் வேர் நாற்று முனைகளையும் வழங்குதல் (ம.தி, ம.பொ.தி)	க,செ	தி,ஆ	தி,ஆ,மே
8.	தேசியத் தரிசுநில மேம்பாட்டு வாரியத்தால் நிதியுதவி பெறப்பட்டு வனத்துறையின் கீழான தீவன மேம்பாட்டுத் திட்டம் (ம.பொ.தி)	க	செ,பா,மே	தி,ஆ,மே
9.	ஊரக வளர்ச்சித் துறையின் எரிவாயு தேசிய வளர்ச்சி திட்டம் (ம.பொ.தி)	க	செ.பா,தி	அ,தி,ஆ
10.	ஊரக வளர்ச்சித் துறையின் நவீன எரி அடுப்பிற்கான தேசியத் திட்டம்	க	செ,பா,தி	அ, தி,ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் / நிறுவனங்கள் / மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	எரி விறகு மற்றும் தீவன பயிர் பண்ணைகள்	நி.	பா,ஆ	தி.ஆ
2.	தீவனம், விதை உற்பத்தி அலகுகள் (படப்பை, திருநெல்வேலி, ஈச்சான்கோட்டை புதுக்கோட்டை, செட்டிநாடு, ஒசூர் சின்னசேலம்)		ஆ	தி.ஆ,மே

5.5.14. சாலைகள், சிறு பாலங்கள், பாலங்கள், நீர்வழிகள் மற்றும் பிற தொடர்பு வழிகள்

(இனம் - 13)

சற்றேரக்குறைய 19 சாலைத் திட்டங்கள் செயல்பாட்டில் இருந்து வருகின்றன. உருவாக்குவதற்குரிய / மேம்படுத்துவதற்குரிய சாலைகளைக் கண்டறியும் பணியை ஊராட்சிகள் மேற்கொள்ளலாம். ஊராட்சி ஒன்றியம் சாலை வேலைகள், சிலவற்றை செயற்படுத்தி பிற மாவட்டச் சாலைகள், மாவட்ட பெருஞ்சாலைகள், மேம்படுத்துவதற்காக/உருவாக்குவதற்காக எடுத்துக் கொள்ளுதற்குரிய அரசு நெடுஞ்சாலைப் பணிகள் ஆகியவை குறித்து நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணி துறைக்கு ஆலோசனை வழங்கலாம். இச்செயற் திட்டங்களை பார்வையிடல், மேற்பார்வையிடல் மற்றும் ஆய்வு செய்தல் போன்றவற்றிற்காக ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்துக் கொள்ளுதல் நலம் பயக்கும். 163 (2ஆ) ஆவது பிரிவின் கீழ் இச்செயற்திட்டங்களின் நிகழ்வுகளை (1) நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை (2) கிழக்குக் கடற்கரைப் சாலைகள் மற்றும் ஊரகச் சாலைகள் துறை ஆகியவற்றின் மூலம் அடிப்படையில் திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் ஆய்வு ஆகியவற்றில் மாவட்ட ஊராட்சிகள் பங்காற்றும். சாலைகளை வகைப்படுத்தும் அதிகாரம் அரசிடம் இருந்துவருகின்ற நிலையில் இந்நிகழ்வுகளை மாவட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்கப் பெறலாம்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

I. ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் வரும் சாலைப் பணிகள்

தொடர் எண்	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சாலைப் பணிகள் மற்றும் சிறப்பு முனைப்பிலான ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் (மா. தி)	க	செ,பா,மே	தி,ஆ
2.	கோட்ட வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சாலைப் பணிகள் (மா.தி)	க	செ,பா,மே	தி,ஆ
3.	வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் சாலைப் பணிகள் (மா. தி)	க	செ.பா,மே	தி,ஆ
4.	இணைப்புச் சாலைப் பணிகள் (மா.தி)	--	க,செ	தி
5.	நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழான சாலைப் பணிகள் (மா.பொ.தி)	க	செ,பா,மே	தி,ஆ
6.	சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டங்களின் கீழான சாலைப் பணிகள்	க	செ,பா,மே	தி,ஆ

II. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின்கீழ் வரும் சாலைப் பணிகள்

தொடர் எண்	திட்டங்கள் / செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	மாநில நெடுஞ்சாலைகள்	உ	ஒ,ஆ	ஒ,செ,தி
2.	மாவட்டச் சாலைகள்	உ	ஒ,ஆ	ஒ,செ,தி
3.	ஏணைய மாவட்டச் சாலைகள்	உ	ஒ,ஆ	ஒ,செ,தி
4.	பிற சாலைகள்	உ	ஒ,ஆ	ஒ,செ,தி
5.	ஊரகச் சாலைகளுக்குச் சாலையிடும் சிறப்பு சாலைகள் திட்டம்	உ	ஒ,ஆ	ஒ,செ,தி
6.	தமிழ்நாடு வேளாண்மை திட்டத்தின் கீழ் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான சாலைத் திட்டங்கள்	உ	ஒ,ஆ	ஒ,செ,தி
7.	வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டிற்கான தேசிய வங்கி (நபார்டு) கடனுதவியுடன் ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல்	உ	ஒ,ஆ	ஒ,செ,தி
8.	வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டிற்கான தேசிய வங்கி கடனுடதவியுடன் பேரூந்து சாலை வழித்தடங்களை மேம்படுத்துதல்	உ	ஒ,ஆ	ஒ,செ,
9.	வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டிற்கான தேசிய வங்கி (நபார்டு) கடனுதவியுடன் மாவட்ட மற்றும் பிற சாலைகளை மேம்படுத்துதல்	உ	ஒ,ஆ	ஒ,செ,தி
10.	தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அங்காடி மையங்களுக்கான ஊரகச் சாலைகள்	உ	ஒ,ஆ	ஒ,செ,தி
11.	பழங்குடியினர் வாழுகின்ற பகுதிகளில் சாலைகள் அமைத்தல்	க	செ,பா,மே	தி,ஆ
12.	ஊரகச் சாலைகள் செயற்திட்ட சிறப்புப் பகுதித்திட்டம்	க	செ,பா,மே	தி,ஆ
13.	மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலைப் பணிகளை மேம்படுத்துதல்.	க	செ,மே,பா	தி,ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	திட்டங்கள் / செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை	அ	செ	ஒ
2.	கிழக்கு கடற்கரை சாலைகள் மற்றும் ஊரகச் சாலைத் துறை	அ	ஒ	ஆ

5.5.15 மின்சார விநியோகம் உள்ளடங்கலாக ஊரக மின் இணைப்பு

(இனம் - 14)

தமிழ்நாடு மின்சார வாரியம் மின்மாற்றி மற்றும் மின் கம்பங்கள் ஆகியவற்றுக்கான புதிய அமைவிடங்களைக் கண்டறிவதில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களின் உதவியை பெறுகின்றன. தமிழ்நாடு மின்சார வாரியத்தால் செயற்படுத்தப்படும் அனைத்து வளர்ச்சி மற்றும் நலவாழ்வுத் திட்டங்களை கண்காணிப்பதற்குரிய ஆய்வு அதிகாரங்களை ஊராட்சி ஒன்றியங்கள் பெற்றுள்ளன. மாவட்ட ஊராட்சியானது அரசு மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகிய இரண்டுக்கும் அறிவுரை வழங்கும் பங்கினை ஆற்றுவதுடன் மாவட்ட அளவிலான மின் ஆற்றல் குறித்து திட்டமிடும் பணியையும் நிறைவேற்றுகின்றது. இப்போது தமிழ்நாடு மின்சார வாரியம் ஊராட்சி பகுதிகளில் தெரு விளக்கு பயனீட்டாரை பேணி வருகின்றது. ஆயினும், தெரு விளக்குகளின் மின் பயனீட்டளவு, நீர் வழங்குதல் ஆகியவற்றுக்கான செலவுகள் தனது சொந்த நிதியாதரங்களிலிருந்து ஊராட்சிகளால் ஏற்கப் பெறுகின்றன. ஊராட்சிகள் தெரு விளக்குகளைப் பேணி வருவதுடன் ஊராட்சித்தில் செயல்திறத்தோடு பங்காற்றுகின்றன. வேளாண்மைக்குரிய மின் இறைப்பிகளுக்கு மின் இணைப்பு அளித்தல், ஒரு குடிசைக்கு தெரு விளக்கு வசதி ஆகிய திட்டங்களின் கீழ் உதவி செய்வதற்குரியர்களைக் கண்டறிவது ஊராட்சியின் கடமையாக இருக்கும். ஊராட்சி ஒன்றியமும், மாவட்ட ஊராட்சியும் 114 (2) மற்றும் 163 (2ஆ) ஆகிய பிரிவுகளின் கீழ் செயற்திட்டங்களை ஆய்வு செய்து கீழே குறிப்பிட்டுள்ளவாறு முக்கிய பங்காற்றுகின்றது. அமைப்புச் சார்ந்த தொடர்புகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	தெரு விளக்குப் பேணுகை	செ	உ.மே.ஆ	தி. ஆ
2.	ஒரு குடிசைக்கு ஒரு மின்விளக்கு அளிக்கும் திட்டம்	க	செ. மே. ஆ	தி. ஆ
3.	வேளாண் இறைப்பிகளுக்கு மின்சாரம் வழங்குதல்	உ	ஆ	தி. ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவன தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் / நிறுவனங்கள் / மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	தமிழ்நாடு மின்சார வாரியம்		ஒ.ஆ	தி.மே.பா.ம
2.	ஊரக மின்மயமாக்கம்		ஒ	தி

5.5.16 மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்

(இனம் - 15)

வழக்கத்திற்கு மாறான எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்திப் பெருக்கும் பொருட்டு, உதவி பெற வேண்டியவர் பற்றியும் சூரிய ஒளி, காற்றுத்திறன், சாண எரிவாயு, ஆகியவற்றின் மூலம் இயங்கும் சக்திக்கான ஆற்றல் வளங்கள் அமைந்திருக்கக்கூடிய இடங்களைப் பற்றியும் கண்டறிவதற்கு சிற்றூராட்சிகளுக்கு அதிகாரமளிக்கப்பட வேண்டும். ஊரக வளர்ச்சித்துறை மற்றும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை ஆகியவற்றின் நெருங்கிய ஒத்துழைப்புடன் ஊராட்சி ஒன்றியங்கள் இப்பணியை எடுத்துக் கொண்டு செயற்படுத்துவதற்கு அதிகாரங்கள் பெற இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியம் இத்திட்டங்களை 114 (2) ஆவது பிரிவின் கீழ் ஆய்வு செய்து கண்காணிக்க வேண்டும். இத்திட்டங்களின் மேம்பாட்டிற்காகத் திட்டங்களின் செயலாக்கத்தையும், தொலை நோக்குத் திட்ட வடிவத்தையும் 163 (2ஆ) ஆவது பிரிவின் கீழ் மாவட்ட ஊராட்சியானது. திட்டமிட்டு ஆய்வு செய்ய வேண்டும். மாவட்ட நிலை அலுவலர்கள், அத்தகைய ஆய்வுகளிலும் கலந்துரையாடல்களிலும் கலந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையானது, திட்டங்களின் செயலாக்கத்தில் சிற்றூராட்சி களுக்கு உதவி செய்யும். மாவட்ட ஊராட்சி, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் அலுவலர்களுடன் கலந்தாய்ந்து ஒத்துழைப்பு அளிக்கும். ஊராட்சி ஒன்றிய ஆணையர்களால் ஆய்வு செய்யக் கூடிய செயலாக்கத்தை மேம்படுத்துவதற்காக இத்திட்டங்களை ஆய்வு செய்வதற்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு அதிகாரமளிக்கப்படலாம்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள் / செயல் திட்டம்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	காற்றுசக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் கருவிகள் நிறுவுதல்	—	—	ஆ
2.	சூரிய அடுப்பு, சூரிய ஆற்றல் மின் நீரேற்றம் முறை, மற்றும் சூரிய சக்தி மூலம் நீரைக் கொதிக்க வைக்கும் முறை ஆகியவற்றை மேம்படுத்துவதற்குரிய திட்டங்கள்	க	செ	தி, ஆ
3.	எரிவாயு (சாண எரிவாயு) கலன்கள் (தனிப்பட்டவர்கள் மற்றும் சமுதாய நலனுக்காக நிறுவுதல்)	க	செ	தி, ஆ
4.	ஊரக வளர்ச்சித் துறையின் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டம் (ம.பொ.தி)	க	செ	தி, ஆ
5.	சாண எரிவாயு வளர்ச்சி தேசியத் திட்டங்கள் (ஊ.வ.துறை, ம.பொ.தி)	க	செ	தி, ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவன தொடர்புகள்

தொ. எண்.	அரசுத்துறைகள் / நிறுவனங்கள்/மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை	உ	செ	ஒ, ஆ
2.	ஊரக வளர்ச்சித் துறை	உ	செ	ஒ, ஆ

5.5.17 வறுமை ஒழிப்புத் திட்டம்

(இனம் எண் - 16)

01. வறுமை ஒழிப்புத் திட்டத்தின் குறிக்கோளானது, (அ) ஏழை என்று கண்டறியப்பட்டவர்களுக்குக் கடன் – மானியத் தொகை உருவி மற்றும் (ஆ) சமுதாய உடமையை உருவாக்கும் திட்டங்கள் என்ற இருவகையிலான திட்டங்கள் வாயிலாக ஏழை மக்களுக்கு வேலை அளிப்பதால் கூடுதல் வருவாயை உருவாக்குவதாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் (ஒ.ஊ.வ.தி.), ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (ஜ.வே.வா.தி.) மற்றும் ஊரகப் பகுதிகளில் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாடு. சுயதொழில் செய்ய கிராம இளைஞர்களுக்கான பயிற்சி திட்டம் போன்ற சில தொடர்புடைய திட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்களின் பெரும் ஆக்கக் கூறுகளாக அமைந்தன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் குறிக்கோளானது, கடன் – மானியத் தொகையை அளிப்பதன் வாயிலாக வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் வருவாயை மேம்படுத்துவதாகும். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டமானது, ஊரகப் பகுதியிலுள்ள வேளாண் தொழிலாளர்களுக்கும் தேர்ச்சித் திறனற்ற பணியாளர்களுக்கும் வளமற்ற காலத்தின் போது, முக்கியமாக வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்காகத் திட்டமிடப்பட்டது. ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் முதலியவை உள்ளிட்ட வறுமை ஒழிப்புத் திட்டமும், இத்திட்டங்களின் கீழ் எடுத்துக் கொள்ளப் பெறவுள்ள பணிகளும் உள்ளூர் மக்கள் உணர்ந்து கண்டறிந்த தேவைகளை உறுதி செய்வதாக அமைய வேண்டும். ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப் பெறும் பணிகள், ஊரக பகுதிகளில் வளமற்ற காலத்தின்போது வேலை வாய்ப்புக்களைப் பொதுவாக உருவாக்குவதாகும். மேலும், சமுதாய உடைமைகளை உருவாக்கும் தன்மையில், உள்ளூர் மக்களின் பங்கேற்பும் ஈடுபாடும் பணியின் தரத்தை மேம்படுத்தி நிலைத்து நிற்கக் கூடிய உடமைகளைத் தோற்றுவிக்கும்.

02. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் முதலானவைகளில் செயற்பாடு தொடர்பில், ஒரு முக்கிய கூறானது, உதவி பெறுவதற்குரிய ஏழை மக்களைக் கண்டறிவதாகும். மக்களிடம் நெருக்கமாக உள்ள ஊராட்சியிடமும் கிராம சபாவிடமும் சரியான பயனாளர்களை தெரிவு செய்வதை ஒப்படைப்பதே சிறந்ததாகும். இத்திட்டங்களிலிருந்து பெருமளவிலான பயனைப் பெறவும் அவர்களின் உள்ளார்ந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும், செயற்பாட்டு அளவில் இத் திட்டங்கள் திட்டமிடப்படுவதுடன் ஒருங்கிணைந்த முறையில் செயற்படுத்துவப்படுவதும் இங்கு இன்றியமையாததாகும்; உள்ளூர் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் குறிப்பிடக்கூடிய நடவடிக்கைகள் கொள்ளப்படும் தன்மையானது தீர்மானிக்க வேண்டும். இக்கண்ணோட்டத்துடன், ஊராட்சியின் திட்டமிடலையும் செயல்பாட்டையும் ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைத்தலானது, உடமைக்கான அமைவிடத்திற்கு உரிய மனையைத் தெரிவு செய்வதிலும் எதிர்கால பேணுகை முதலியனவற்றுக்கும் உதவிகரமாக இருக்கும்.

ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழும் பிரிவு 163 (2 ஆ) இன் கீழ் ஏனைய வறுமை ஒழிப்பு திட்டத்தின் கீழும் எடுத்துக் கொள்ளப்படும் பணிகளின் ஆய்வு மேற்பார்வை, ஆய்வு ஆகிய பணிகளை மாவட்ட ஊராட்சி மேற்கொள்ளலாம்.

03. கீழ்க்காணும் அட்டவணையானது, சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி நிலையில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளின் விளக்கத்தை அளிக்கிறது.

04. தற்போது, வறுமை ஒழிப்புத் திட்டம் 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட ஒரு முகமையான மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வாயிலாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட நிலையில் குடியாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னாட்சி நிறுவனமான ஒரு மாவட்ட ஊராட்சியின் தோற்றம் மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதிலும் செயற்படுத்துவதிலும் மாவட்ட ஊரக வளர்ச்சியின் முகமையின் பங்கினை மறுஆய்வு செய்வதனை இன்றியமையாத தாக்குகிறது. எனவே, மாநிலத் திட்டக்குழு தெரிவிக்கும் கருத்துரை என்னவெனில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் அனைத்துச் செயற்பாடுகளும் மண்டல விரிவாக்கப் பயிற்சி மையம், ஊரகப் பகுதிகளில் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு பிரிவுகள் மாவட்ட நிலையிலுள்ள தச்சு வேலை/கருமான் பிரிவுகள் போன்ற நிறுவனங்களையும் மாவட்ட நிலையில் மாவட்ட ஊராட்சியால் எடுத்துக் கொள்ளப் பெறலாம்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள்/ செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
அ. ஊரக வளர்ச்சி				
1.	வறட்சிக்கு இலக்காகும் திட்டம் (ம.பொ.தி)	க	தி.	பா. ஆ. மே
2.	சுயவேலை வாய்ப்பில் ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி (ம.பொ.தி)	க	தி. செ	ஆ. மே
3.	ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (ம.பொ.தி)	க	தி. செ	ஆ. மே
4.	ஊரகப் பகுதிகளில் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாடு (ம.பொ.தி)	க	தி. செ	ஆ. மே
5.	பரவலாக்கப்பட்ட திட்டத்திற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவியளித்தல் (ம.பொ.தி)	க	தி. செ	ஆ. மே. பா
6.	ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (ம.பொ.தி)	க	தி. செ	ஆ. மே. பா
7.	தெரிவு செய்யப்பட்ட பின் தங்கிய மாவட்டங்களில் சிறப்பு முனைப்பிலான ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தை செயறபடுத்துதல் (ம.பொ.தி)	க,செ	தி. செ	ஆ. மே. பா
8.	ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சிறப்பான புதிய திட்டத்தைச் செயற்படுத்துதல் (ம.பொ.தி)	க,செ	தி. செ	ஆ. மே. பா
9.	பத்தாவது நிதிக்குழுப் பரிந்துரைகளின் கீழ் உள்ளாட்சி மன்றங்களுக்கான மானியங்கள். (மா.தி)	க	தி. செ	ஆ. மே. பா
10.	இந்திரா அவாஸ் யோஜனா (ம.பொ.தி)	க.செ	தி. செ	ஆ. மே. பா
11.	பத்துலட்சம் கிணறுகள் தோண்டும் திட்டம் (ம.பொ.தி)	க	தி. செ	ஆ. மே. பா
12.	உள்ளாட்சிமன்றங்களால் மேற்கொள்ளப் படும் உள்ளமைப்புகள் மேம்பாடு. (மா.தி)	க	தி. செ	ஆ. மே. பா
13.	மாவட்டங்களின் வள ஆதாரங்களுக்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவியளித்தல்(மா.தி)	க	தி. செ	ஆ. மே. பா
14.	வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் (ம.பொ.தி)	க	தி. செ	ஆ. மே. பா
15.	சிறப்பம்ச திட்டம் (ம.பொ.தி)			
	அ) ஊரக இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு பயிற்சியளிக்கும் திட்டம்	க.செ	தி. செ	ஆ. மே. பா
	ஆ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம்			

தொ. எண்.	திட்டங்கள்/ செயல்முறைத் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
	இ) வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டம் ஈ) பத்து இலட்சம் கிணறுகள் திட்டம் உ) இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம்	க,செ	தி, செ	ஆ, மே
16.	நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல் (மா.தி)	க	தி, செ	ஆ, மே, பா
ஆ.	சமுதாய வளர்ச்சித் திட்டம்			
17.	உள்ளாட்சி மன்றங்களுக்குச் சமூகக் கல்வி மானியம்,	அ,க,தி,செ	ஆ, மே	ஆ, மே, பா
18.	ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாகக் கால்நடை பராமரிப்புத் திட்டங்களைச்செயற்படுத்துதல்.	க	செ,மே,பா	ஆ, மே, பா
19.	ஆசிரியைகளுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்காக உள்ளாட்சி மன்றங் களுக்கு மானியம் அளித்தல்.	அ	தி, செ, பா	ஆ, மே, பா
20.	டானிடா உதவியுடன் தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டத்தில் ஒருங் கிணைந்த ஊரக துப்புரவு மற்றும் நீர் வழங்கல் திட்டம்	க	தி, செ, பா	ஆ, மே, பா
21.	ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாகச் செயற் படுத்துதப்படும் நீர் வழங்கு திட்டங்கள்	க	தி, செ	ஆ, மே, பா
22.	கட்டணக் கழிப்பிடங்களைக் கட்டுவதற்குச் ஊராட்சி களுக்கு உதவியளித்தல்.	க	தி, செ	ஆ, மே, பா
23.	மைய ஊரகத் துப்புரவு திட்டம்	க	தி, செ	ஆ, மே
24.	சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ், பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்ட இணைப்பு செயலாக்கத்திற்கு உதவி.	க	தி, செ	ஆ, மே, பா
25.	மலைவாழ் மக்கள் துணைத் திட்டத்தின் கீழ் சமுதாய வானொலிப் பெட்டிவழங்குதல்	க	தி, செ	ஆ, மே, பா
26.	கல்ராயன்/ஜவ்வாது மற்றும் ஏலகிரி குன்றுகளில் மலைவாழ் மக்களுக்குக் வட்டார தொகுதிகளை அமைத்தல்.	க	தி, செ	ஆ, மே, பா
27.	தனிநபர் மற்றும் சமுதாய நலனுக்காக சாண எரிவாயு கலன்கள் அமைத்தல்.	க	தி, செ	ஆ, மே
28.	மேம்படுத்தப்பட்ட சூளை அடுப்புத் திட்டத்தின் மீதான செயல்முறை விளக்க தேசியத் திட்டம்.	க	தி, செ	ஆ, மே, பா

ஊரக உள்ளாட்சி அமைப்புளுக்கான நிறுவன தொடர்புகள்

தொ. எண்.	அரசுகள் துறைகள்/ நிறுவனங்கள் / மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (மா. ஊ. வ. மு.)	–	–	எ
2.	மண்டல விரிவாக்கப் பயிற்சி மையம் (ம.வி.ப. மை)	–	–	மே
3.	தொழிற் பயிற்சி நிலையம் (தொ.ப.நி.) (குறிப்பிட்ட தொழில்களுக்கு "டிரைசெம்" திட்டத்தின் கீழ் பயிற்சியளித்தல்)	–	மே	மே
4.	ஊரகப் பகுதிகள் பிரிவுகளில் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாடு திட்ட அலகுகள்	செ	மே	மே
5.	தச்சுவேலைப் பிரிவுகள்	–	பே,ஆ,மே	ஆ, மே
6.	கருமார் பிரிவுகள்.	–	பே,ஆ,மே	ஆ, மே.

5.5. 18 தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகள் உள்ளடங்கலாகக் கல்வி

(இனம் - 17)

துறைத் தலைமை அலுவலர்கள் மூலம் தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் 19 திட்டங்களை பஞ்சாயத்து ஆட்சி அமைப்பிடம் ஒப்படைக்கலாம் என மாநில திட்டக் குழு தீர்மானித்துள்ளது. பயனாளர்களை தெரிவு செய்யும் பணியினையும், கல்வி கற்பதற்கான பொருட்களான பாடப்புத்தகங்கள், சீருடைகள் மற்றும் காலணிகள் வினியோகிப்பதையும் சிற்றூராட்சியிடம் ஒப்படைக்கலாம். மாவட்ட தொடக்க கல்வி திட்டம், கரும்பலகை திட்டம் செயல்பாடு ஆகியவற்றையும் ஒப்படைக்கலாம். துறைத் தலைமை அலுவலகங்கள் மூலம் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் பள்ளிக் கட்டிடங்களின் கட்டுமானப் பணி ஆகியவை குறித்து மேற்பார்வை செய்வது, ஆய்வு செயவது, அலோசனை வழங்குவது போன்ற பணிகளை ஊராட்சி ஒன்றியத்திடம் வழங்கலாம். கல்விப் பணிகள் மேலும் சிறப்பாக செயல்படுத்துவதற்கு ஏதுவாக மேற்பார்வையிடல், ஆய்வு செய்தல், மற்றும் அறிவுரை வழங்கல் போன்ற பணிகளை மாவட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்கலாம்.

நிறுவன தொடர்புகள் :-

தொடக்க மற்றும் ஆரம்பப் பள்ளிகள் போன்ற கல்வி நிறுவனங்களின் மேலாண்மை மற்றும் பராமரிப்பு பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்துக் கொள்ளலாம். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 114(2) ன் படி அப்பள்ளிகளை பார்வையிடல், மேற்பார்வையிடல், ஆய்வு செய்தல் போன்ற பணிகளை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கலாம். அந்தந்த மாவட்டங்களில் தொடக்க மற்றும் ஆரம்ப பள்ளிகளின் செயல் திறனை ஆய்வு செய்வதற்கான பணியினை சட்டப்பிரிவு 163 (2) (ஆ) ன் கீழ் மாவட்ட ஊராட்சியிடம் வழங்கலாம்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள் / செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	6 – 11 வயதுள்ள மாணவர்களைக் கூடுதலாகச் சேர்த்தல்	க,மே	செ, ஆ	தி, ஆ
2.	11 – 14 வயதுள்ள மாணவர்களைக் கூடுதலாகச் சேர்த்தல்	க. மே	செ, ஆ	தி. ஆ
3.	நடுநிலைப்பள்ளிகளுக்கு பட்டதாரி தலைமை ஆசிரியர்கள்	க	ஆ,அ	அ,தி,ஆ
4.	ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு தேவையான கட்டிடங்கள் கட்டுதல்	செ	செ,மே	அ,தி,ஆ
5.	சிறப்பு நலநிதியிலிருந்து பள்ளி கட்டிடங்கள் கட்டுதல்	செ	செ,மே	அ, ஆ
6.	அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல்	க	மே	அ, ஆ
7.	ஊரகப் பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்	செ	செ,மே	அ,தி, ஆ
8.	மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம்	மே	செ,ஆ,மே	அ, தி, ஆ

தொடர் எண்	திட்டங்கள் / செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
9.	பள்ளி செல்லும் சிறார்களுக்கு இலவசமாக காலணிகள் வழங்குதல்	க.	செ	ஆ
10.	கிராம அளவில் திட்டமிடுவதன் மூலம் 100 சதவீதம் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான திட்டம்	க,மே	செ, ஆ	அ, தி, ஆ
11.	கரும்பலகை திட்டம் செயற்படுத்தல்	க.	செ,மே	ஆ
12.	தொடக்க ஆரம்ப பள்ளிகளுக்கு குறைந்த அளவு அறைக்கலன்கள் விளையாட்டுப் பொருள்கள், மின் விசை வழங்குதல்	தி,செ	அ,மே	அ, ஆ
13.	தொடக்க, ஆரம்ப பள்ளிகளுக்கு ஒலிநாடா பெட்டி வழங்குதல்	மே	ஆ	ஆ
14.	மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் வழங்குதல் ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு கூறு திட்டம் உட்பட	க,அ	ஆ	ஆ
15.	மாணவ, மாணவியருக்கு பள்ளிச் சீருடை வழங்குதல் ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு கூறு திட்டம் உட்பட	க	மே, ஆ	தி, ஆ
16.	நடுநிலைப்பள்ளிகளுக்கு தமிழ் ஆசிரியர்கள் பதவியிடங்கள்	மே	அ,ஆ	அ,தி,ஆ
17.	கல்வித் தரம் அபிவிருத்தி நிதி			ஆ
18.	UNICEF நிதி உதவியுடன் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான நிறுவனம் (SCERT) செயல்படுத்தும் தொடக்க கல்வி திட்டம்		ஆ	அ,தி,ஆ
19.	பத்தாம் நிதிக்குழு பரிந்துரையின்படி கல்வ நிருவாகத் தரத்தை உயர்த்துதல்			ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	அரசுதுறைகள் / நிறுவனங்கள் மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	தொடக்கப் பள்ளிகள்	ஆ,மே,செ	எ,மே,செ	ஆ,தி
2.	ஆரம்பப்பள்ளிகள்	ஆ,மே,செ	எ,மே,செ	ஆ, தி

5.5.19 தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் தொழில் கல்வி

(இனம் - 18)

சார் துறைகளால் தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வரும் பின்வரும் நான்கு திட்டங்களையும் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் பங்குகினையும் அதாவது, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் போன்றவற்றை மாநிலத் திட்டக் குழு கண்டறிந்துள்ளது. (1) தொழிற் பயிற்சிப் பள்ளிகளைப் பலப்படுத்துதல். (2) நடைமுறையிலுள்ள தொழிற் பயிற்சிப்பள்ளிகளை நவீனமயமாக்கல், (3) மகளிர்க்கெனப் புதிய தொழிற் பயிற்சிப்பள்ளிகளைத் துவக்குதல் மற்றும் (4) தொழில்களை வகைப்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொள்ளும்.

தொடர்புடைய சிற்றூராட்சி, தங்களுக்குப் பொருத்தமுடைய குறிப்பிட்ட தொழில்களில் தேவையான பயிற்சியை அறிந்துகொள்வதற்காகக் சிற்றூராட்சிக்கு அதிகாரமளிக்கப்படலாம். புதிய தொழிற்பயிற்சி நிலையங்களை நிறுவுவதற்கான தேவையை மதிப்பிடுவதற்கும், ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான திட்டத்திற்குப் பெறும் தொழில் நுட்ப ஆற்றலுடன் கூட, தொழிற் பயிற்சி நிறுவனங்களில் கற்பிப்பதற்குத் தேவையான தொழில்களை அறிந்து கொள்ளல் ஆகிய பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப் பெறலாம். 163 (2ஆ) ஆவது பிரிவின் கீழ்; மாவட்டத்தில் செயல்படும் திட்டமிடும் பயிற்சிகளையும் செயல்முறைத் திட்டங்களை / திட்டங்களை ஆய்வு செய்வதையும் மாவட்ட ஊராட்சி மேற்கொள்ளலாம். பின்வரும் அட்டவணையானது, திட்டச் செயற்பாட்டின் பொறுப்புகளையும் ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேவையான நிறுவன இணைவுகளையும் காட்டுகிறது.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள்/செயல் முறைத் திட்டம்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றிம்	மாவட்ட ஊராட்சி
1.	தொழிற்பயிற்சிப் பள்ளிகளை பலப்படுத்துதல்	–	தி	தி, ஆ
2.	தற்போதுள்ள தொழிற் பயிற்சிப் பள்ளிகளை நவீனமயமாக்கல்	–	தி	தி, ஆ
3.	மகளிருக்குப் புதிய தொழிற் பயிற்சிப் பள்ளிகளைத் துவங்குதல்.	அ	அ, க	தி, ஆ
4.	தொழில்களை வகைப்படுத்தல்	க	க	தி. ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொ. எண்.	அரசு துறைகள் நிறுவனங்கள்/மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	அரசுத் தொழிற் பயிற்சி நிலையங்கள்	–	–	ஆ
2.	தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள்	–	–	ஆ
3.	நிதியுதவி பெறும் தொழிற் பயிற்சிப் பள்ளிகள்	–	–	ஆ
4.	மேனிலைப் பள்ளிகள் (வாழ்க்கைத் தொழில்)	–	–	–

5.5.20 வயது வந்தோர் மற்றும் முறைசாராக் கல்வி

(இனம் - 19)

தற்போது அரசால் செயற்படுத்தப்பட்டு வரும் பின்வரும் 9 திட்டங்களைப் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் மூன்று அடுக்கு நிலை அமைப்புகளிடம் ஒப்படைக்கலாம். பல்வேறு பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி நிகழ்ச்சிகளுக்காக உதவி செய்யக் கூடியவர்களைக் கண்டறிவது சிற்றூராட்சிகளின் பொறுப்பாகும். தங்கள் பகுதிகளில் செயற்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்வதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கு அதிகாரம் அளிக்கப்படலாம். அதே சமயம், மாவட்ட அளவிலான பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி நிகழ்ச்சிகளின் திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பொறுப்புக்களை மாவட்ட ஊராட்சி எடுத்துக் கொள்ளலாம்.

(கல்வி) நிலையங்கள் / மையங்கள்

பல்வேறு பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மையங்கள் கண்டறியப்பட்டு பின்வரும் அட்டவணையில் காட்டப்பெற்றுள்ளன. அதே சமயம் சிற்றூராட்சிகள் இம்மையங்களை நிருவகித்துப் பேணலாம். இம்மையங்களின் செயலாக்கத்தை 114(2) ஆவது பிரிவின் கீழ் இம்மையங்களின் செயல் நிறைவேற்றங்களை மேற் பார்வையிடுவதற்கும் ஆய்வு செய்வதற்குமுள்ள பொறுப்புக்களை ஊராட்சி ஒன்றியக் குழுவுக்கு ஒப்படைக்கப் பெறலாம். மாவட்ட ஊராட்சியானது, 163 (2 ஆ) ஆவது பிரிவின் கீழ் இம்மையங்களின் செயலாக்கத்தை ஆய்வு செய்யலாம்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள் / செயல்முறைத் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	கிராம நலப்பணியாளர் வாயிலாக வயது வந்தோர் எழுத்தறிவுத் திட்டத்தைச் செயற்படுத்தல்.	க	மே, ஆ	தி, ஆ
2.	வயது வந்தோர் எழுத்தறிவுத் திட்டம்	க	மே,ஆ	தி,ஆ
3.	'டானிடா' உதவி புரியும் மீனவர்களுக்கான வயது வந்தோர் எழுத்தறிவுத் மக்கள் கல்வி திட்டம்.	க	மே,ஆ	தி,ஆ
4.	(ஜன சிக்ஷன்) நிலையம் தொடர் கல்வி	க	மே,ஆ	தி,ஆ.
5.	பள்ளி சாராக் கல்வி பள்ளி நிலை	க	மே,ஆ	தி,ஆ
6.	படிப்பைப் இடையில் நிறுத்தியவர்களுக்கும், பள்ளிக் கல்வியைத் தொடங்கப்	க	மே,ஆ	தி,ஆ
	பெறாதவர்களுக்கும் நலனடைவதற்கான பள்ளி சாராக் கல்வித் திட்டம்.	க	மே,ஆ	தி,ஆ
7.	எழுத்தறிவு பெற்றவருக்கான மேல் நிலைக் கல்வி பெறும் திட்டம்.	க	மே,ஆ	தி,ஆ
8.	அறிவொளி இயக்கம் வாயிலாகக் கல்வி அறியாமையை முழுமையாக அகற்றுவதற்கான சிறப்புத் திட்டம்.	க	மே,ஆ	தி,ஆ
9.	பழங்குடியினர் பகுதியில் வயது வந்தோர் கல்வியறிவுத் திட்டம்.	க	மே,ஆ	தி,ஆ

ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொ. எண்.	திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	பழங்குடியினருக்கான பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மையங்கள்.	பே	மே, ஆ	ஆ
2.	மீனவர்களுக்கான வயது வந்தோர் எழுத்தறிவு மையங்கள்.	பே	மே, ஆ	ஆ
3.	ஊரகப் பணியாளர்கள் வாயிலாக வயது வந்தோர் எழுத்தறிவு மையங்களைச் செயற்படுத்தல்.	பே	மே, ஆ	ஆ
4.	அறிவொளி இயக்க மையங்கள்.	பே	மே,ஆ	ஆ
5.	மக்கள் கல்வி (ஜன ஷிக்ஷன்) நிலையம்.	பே	மே, ஆ	ஆ
6.	மதுவிலக்கு இயக்க மையங்களுடன் இணைந்த பள்ளி சாராக் கல்வி.	பே	மே, ஆ	ஆ
7.	பள்ளி நிலையிலான பள்ளி சாராக் கல்வி மையங்கள்.	பே	மே, ஆ	ஆ
8.	படிப்பை இடையில் நிறுத்தியவர் களுக்கும், பள்ளிப் படிப்பைத் தொடங்காதவர்களுக்கும் நலனடைவதற்கான பள்ளி சாரா மையங்கள்.	பே	மே, ஆ	ஆ
9.	எழுத்தறிவு பெற்றவர்களுக்கான மேல் நிலைக் கல்வி திட்ட இயக்க மையங்கள்.	பே	மே, ஆ	ஆ
10.	மொத்த எழுத்தறிவுடைமை இயக்க மையங்கள்.	பே	மே, ஆ	ஆ

5.5.21 நூலகங்கள்

(இனம் - 20)

நூலகங்களால் தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் பின்வரும் நான்கு திட்டங்களை மாநிலத் திட்டக்குழு கண்டறிந்ததுடன் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய பங்கின் வகையையும் குறிப்பிடுகின்றது. (1) புதிய நூலகங்களைத் திறப்பதற்கு வட்டார நூலக ஆணைக் குழுவிற்கு மானியம் அளித்தல் (2) நலிவடைந்த வட்டார நூலக ஆணைக் குழுக்கள் புத்தகங்களை வாங்குவதற்கு உதவியளித்தல், (3) வட்டார நூலக ஆணைக்குழுவை மேம்படுத்தல், (4) படிக்கும் அறைகள் மற்றும் நூலகக் கட்டடங்களைக் கட்டுமானம் செய்தல்.

புதிய நூலகங்களைத் திறத்தலின் மீதான திட்டத்தைச் ஊராட்சிகள் செயற்படுத்தி மாவட்ட நூலக ஆணைக்குழுவிடமிருந்து நூலக வரியையும் மானியங்களையும் பெற்றும் பிறமேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் கிடைக்கப் பெறும் நிதிகளைப் பயன்படுத்தி படிக்கும் அறைகளையும் நூலகக் கட்டடங்களையும் கட்டவேண்டும். நூலகங்களைத் திறப்பது தொடர்பில் திட்டமிடுதலிலும் தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிக்கு வகை செய்தலிலும் வட்டார நூலக ஆணைக்குழுக்களுக்கு உதவும் பொறுப்புகள் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப் பெறலாம். அதே சமயத்தில் மாவட்ட ஊராட்சிகள் 163 (2 ஆ) ஆவது பிரிவின் கீழ் திட்டங்களை ஆய்வு செய்வதுடன். அறிவுரை கூறும் பங்கையும் கொண்டிருக்கலாம். பின்வரும் பணிகளும் நிறுவன இணைவுகளும் பரிந்துரைக்கப்படுகின்றன.

திட்டங்களின் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள் / செயல்முறைத் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	வட்டார நூலக ஆணைக் குழுக்களின் மூலம் புதிய நூலகங்களைத் திறப்பதற்கான மானியம்.	செ	பா,மே	அ, ஆ, தி
2.	படிக்கும் அறைகளையும் நூலகங்களையும் கட்டுதல்.	செ	அ	அ
3.	நலிவடைந்த வட்டார நூலக ஆணைக்குழுக்களுக்கு நூல்களை வாங்குவதற்கு உதவி செய்தல்.	–	ஆ	தி, ஆ
4.	வட்டார நூலக ஆணைக் குழுக்களை மேம்படுத்துதல்.	–	–	தி, ஆ

உள்ளாட்சி மன்றங்களுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொ. எண்.	அரசு /நிறுவனங்கள்/ மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	மாவட்ட மைய நூலகம்	–	–	ஆ
2.	கிளை நூலகம்	நி, எ, பே	மே, பா	–
3.	நடமாடும் நூலகம் எடுத்துக்	–	நி, எ, பே	ஆ
4.	பகுதிநேர நூலகம்	நி, எ, பே	மே, பா	ஆ

5.5.22 பண்பாடுகள் மேம்படுத்தும் நிகழ்ச்சிகள்

(இனம் - 21)

மாநிலமானது தற்போது பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. இத்திட்டங்களைப் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் மூன்று அடுக்கு நிலைகளில் முறையாக ஒழுங்கு படுத்தப்படலாம். விளையாட்டுப் போட்டிகள், விழாக்கள் மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்தும் பொறுப்புக்களை ஊராட்சியிடம் ஒப்படைக்கலாம். அது, இடர்பாட்டிலுள்ள நலிவடைந்த கலைஞர்களை அறிந்து கொள்வதற்கும் அவர்களுக்கு உதவி செய்வற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலாச்சார சந்திப்புகளுக்குத் திட்டமிட்டு நடத்துதலையும் விளையாட்டு வளாகங்கள், நாடக சுவடிக்கள் மற்றும் பிற உள்ளமைப்பு வசதிகளையும் கிராம நிலையில் நிறுவுதல் போன்ற பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளலாம். மாவட்ட ஊராட்சியானது, தலை சிறந்த கலைஞர்களையும், விளையாட்டு வீரர்களையும் மரியாதை செய்வதுடன் பண்பாட்டு நடவடிக்கைகளையும் விளையாட்டு நிகழ்ச்சிகளையும் நடத்துவதில் வழிகாட்டி ஒருங்கிணைக்கும் பொறுப்புக்களை எடுத்துக் கொள்ளலாம். மாவட்ட ஊராட்சி 163 (2 ஆ) ஆவது பிரிவின் கீழ் முன்னேற்றத்தை ஆய்வு செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருக்கலாம். நிறுவன தொடர்புகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள்/ செயல் திட்டம்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு உதவியளித்தல்	–	–	தி, ஆ
2.	ஜவகர் சிறுவர் இல்லத்திற்கு உதவியளித்தல்	–	ஆ	ஆ
3.	தற்பொழுது நலிந்த நிலையிலுள்ள சிறந்த கலைஞர்களுக்கு நிதியுதவி	க	செ, மே	ஆ
4.	புதிய கலைப் பள்ளிகளுக்கு ஊக்கமளித்தல்	–	க, தி, பே	க, செ
5.	மாவட்டக் கலைக் கூடங்களையும் கலை மன்றங்களையும் நிறுவுதல்	–	–	தி,ஆ
6.	இசைப் பள்ளியை நிறுவுதல்	–	–	க, ஆ
7.	விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு நிதியுதவி விளையாட்டு வளாகங்களை நிறுவுவதுடன் "இளமை" மிகவும் இளமையாக இருப்பர்களைத் தேர்ந்தெடுத்து விளையாட்டு கற்றுக் கொடுத்தல் உள்ளடங்கிய திட்டங்கள்	க	க	தி, பே, ஆ

ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கான நிறுவன தொடர்புகள்

தொ. எண்.	அரசுதுறைகள் / நிறுவனங்கள் / மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	ஜவகர் சிறுவர் இல்லம்	–	–	ஆ
2.	மாவட்டக் கலைக்கூடங்களும் மன்றங்களும்	–	–	ஆ
3.	மாவட்ட இசைப்பள்ளிகள்	–	–	ஆ
4.	விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் செயற்படுத்தப்படும் மாவட்ட விளையாட்டுத் திட்ட மேம்பாட்டுப் பகுதி மையங்கள்	–	–	தி, ஆ
5.	விளையாட்டுப் பள்ளிகளும் விளையாட்டு விடுதிகளும்	–	தி,	தி, ஆ
6.	விளையாட்டுத் திடல்கள் / விளையாடுமிடங்கள்	நி, பே, ஒ	ஆ	ஆ
7.	கைவினைப் பொருள்கள் அருங்காட்சியகம்	–	நி	ஆ
8.	நாடக சபாக்கள்	நி	நி	ஆ

5.5.23 சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்

(இனம் - 22)

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சித் சட்டமானது. ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கும் கிராம அங்காடியையும் சந்தையையும் அமைத்துக் கொள்ளவும் முறைப்படுத்திக் கொள்ளவும் வகை செய்துள்ளது. இருப்பினும், மாவட்ட ஊராட்சியானது புதிய நிறுவனம் என்பதால் அங்காடி, சந்தை ஆகியவை தொடர்பில் சில அதிகாரங்களை அதற்கு ஒப்படைக்கலாம். மேலும், ஊராட்சித் தலைவரையும் ஊராட்சி ஒன்றியத் தலைவரையும் ஒழுங்குமுறை அங்காடியின் செயற்குழுவில் அலுவல் வழி உறுப்பினராக்கலாம். மாவட்ட ஊராட்சித் தலைவரை மாவட்ட அளவிலான அங்காடிகளின் அலுவல் வழி உறுப்பினராகவும் ஆக்கலாம்.

அதிகாரம் தொடர்பில், ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் ஒத்த அதிகாரங்களைக் கொண்டிருந்த போதிலும் அவற்றின் செயலாக்கப் பரப்பும் அளவும் வேறுபடுகின்றன. அவை நீங்கலாக, ஊராட்சி ஒன்றியக் குழுவிற்குச் ஊராட்சி அங்காடிகள் மற்றும் சந்தைகள் ஆகியவற்றை ஆய்வு செய்யவும் அறிவுரை வழங்கவும் உரிமை உள்ளது.

தற்போது, தனியார், பொது அங்காடிக்கும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குமிடையே நேரடித் தொடர்பு உள்ளது. ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் நேரிடையாக விழாக்ககளை ஏற்பாடு செய்கின்றன. இருப்பினும், தொடக்க கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களும் தொடர்புடைய தங்கள் துறைத் தலைமைகளின் கீழ் தனித்து இயங்குகின்றன. எனவே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவை மேற்காணும் விற்பனை நிறுவனங்களுடன் இணைந்து செயற்படலாம்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை, மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள் /செயல் முறைத் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	பொது அங்காடிகள்	தி, க, செ, பா	க, தி, செ, பா	அ, ஆ
2.	தனியார் அங்காடிகள்	தி, க, பா	க, தி, பா, ஒ	அ, ஆ
3.	ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்	ஒ, உ	ஒ, அ	அ
4.	தொடக்க கூட்டுறவு அங்காடி	ஒ, உ	ஒ, அ	அ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவன தொடர்புகள்

தொ. எண்.	அரசு நிறுவனங்கள் / மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	ஒழுங்கு முறை விற்பனைக்குழு	உ	உ	——
2.	மாவட்ட விற்பனை வாரியம்	அ	ஒ	அ
3.	தொடக்க விற்பனைச் சங்கங்கள்	உ	ஒ.	செ, ஆ
4.	டான் காஃப்	ஆ	ஒ.	—

5.5.24. மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் உள்ளடங்கலாக சுகாதாரம் மறறும் துப்புரவும் (இனம் - 23)

துணை சுகாதார மையங்கள், தொடக்க சுகாதார மையங்கள், சமூக சுகாதார மையங்கள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள் வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் சார்ந்த பின்னல் தொடரமைப்பு, பொது நல வாழ்வு, குடும்ப நல திட்டங்கள், தாய்சேய் கவனிப்பு சேவைகள் ஆகிய பணிகளை ஒருங்கிணைத்து, தடுப்பு, மேம்பாட்டு, நோய்களுக்கு பின் தருகின்ற மறுவாழ்வு சேவைகளை அளிக்கின்றன. நலவாழ்வு மையம், மருந்தக கட்டிடங்கள், தளவாடங்கள், வாகனங்கள் பேணுதல் செலவினம் மற்றம் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் பணிகள் ஆகியவற்றை ஊராட்சி மன்றங்களில் மேற்கொள்ளப்படலாம். சுகாதார நிலைய பணியாளர்கள், ஊராட்சி முதல் மாவட்ட ஊராட்சியங்களுக்கு பொறுப்பானவராக இருப்பதுடன், பதில் சொல்லும் பொறுப்பும் பெற்றவர் ஆவார்கள். பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு அலுவலகத்தின் மாவட்ட அளவிலுள்ள துணை இயக்குநர், மாவட்ட ஊராட்சி ஆய்வு கூட்டங்களில் பங்கேற்கவும், அதற்கு பொறுப்பு வகிக்கவும் வேண்டும். மேலும் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு அலுவலகத்தின் உதவி இயக்குனர் மற்றும் தலைமை மருத்துவ அலுவலர், ஊராட்சி ஒன்றியங்களின் ஆய்வு கூடங்களில் பங்கேற்க வேண்டும். இதனால் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புக்கு தனியானதொரு பணி நிலை பிரிவினரை தோற்றுவிப்பது பொருத்தமானதாகும். பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தன்னாட்சி நிறுவனங்களுக்கு முழுமையான பொறுப்புடையவர் ஆவார்கள். மேலும் எதிர்காலத்தில் ஏற்படும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான நலவாழ்வு பணியாளர்களின் காலியிடங்களை நிரப்புவதற்கு, உள்ளாட்சி ஒன்றியங்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

நோய்த்தடுப்பு குறித்த திட்டங்களை பொறுத்தவரை ஊராட்சிகள், அவை தம் பகுதிகளில் பரவலாக இருக்கும் தொற்று நோய்கள், கொள்ளை நோய்கள் ஆகியவற்றை கண்டறிவதுடன் அதற்கான மருத்துவ தீர்வு காண நடவடிக்கைகளை சுகாதார ஊராட்சி அதிகாரிகள் மேற்கொள்ளப் படுவதை உறுதிப்படுத்துவதில் முனைப்பான பங்கெடுக்கலாம். ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள், கொள்ளை நோய் தடுப்புக்கான மருத்துவ தீர்வு காணும் நடவடிக்கைகளை மேற்பார்வை இடலாம். ஊராட்சிகள், பெரியம்மை, வாந்தி பேதி ஆகியவற்றை தடுக்க, ஊசி குத்தும் பணிகளை காலமுறைப்படி மேற்கொள்ளலாம். பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், இன்றியமையாத மருந்துகளை துணை சுகாதார மையங்களிலும், ஆரம்ப சுகாதார மையங்களிலும் கிடைக்கச் செய்தலை உறுதிப்படுத்தலாம். அனைத்து சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்கள், பயன்தரக்கூடியதாக பணியாற்றும் பொருட்டு, அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டி, உள்ளாட்சி அமைப்புகள், துணை சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களின் உள்ளமைப்பு வசதிகளை பராமரிக்கவும் மேம்படுத்தவும் வேண்டும். நாட்டு மருந்துகள் பயன்படுத்துவதையும் இந்திய முறை மருத்துவர்களின் சேவைகளை பயன்படுத்திக் கொள்வதையும் ஊக்குவிக்கும் பொருட்டு பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் இந்திய முறை சிகிச்சையினை விளம்பரபடுத்தலாம்.

கருவுற்ற பெண்களுக்கு கால முறைப்படி மருத்துவ பரிசோதனை செய்யப்படுவதை, நலப்பணி பதிவுருக்களை பராமரித்து வருவதன் மூலம் உறுதி செய்வதுடன், பேறுகால வீதம், இளஞ்சிரார் இறப்பு வீதம் உயர்ந்திருப்பதற்கான காரணங்களை கண்டறிவதுடன், அவற்றை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். பள்ளி குழந்தைகளுக்கான உடல்நல திட்டத்தை பொறுத்த மட்டில், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், நலவாழ்வு அலுவலர்களுடன் ஒருங்கிணைத்து, பள்ளிக் குழந்தைகளின் உடல்நலத்தை தொடர்ந்து கவனித்தும், அவர்களுடைய உடல் நலம் குறித்த அட்டையை பராமரித்தும், அவர்களுடைய நோய்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும். பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், கிடைக்கக்கூடிய உடல் நலக் கவனிப்பு பணிகள் குறித்த தகவலை, மக்களுக்கு பரவச் செய்வதுடன், உடல் நல முகாம்களை நடத்தச் செய்யலாம். ஊராட்சிகள், பிறப்பு இறப்புகள் அனைத்தையும் பதிவு செய்வதிலும், மேலும் இளஞ்சிறார்

இறப்பு வீதம், பேறுகால இறப்பு வீதம், இறந்து பிறக்கும் குழந்தைகள் வீதம் மற்றும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு வீதம் ஆகிய தகவல்களை திரட்டுவதிலும் முதன்மை பணியாற்றலாம். ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் பிறப்பு இறப்பு விவரங்களை தொகுக்கலாம். தமிழ்நாடு பஞ்சாயத்து ஊராட்சி உள்ள பிரிவு 114 (2) மற்றும் 163 (2ஆ) ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அரசு நிறுவனங்கள், துறைவாரியாக நடைபெற்று வரும் திட்டங்களின் முழு விவரங்களையும், மாவட்ட ஊராட்சிகளுக்கு அளிக்கலாம். முதுநிலை அலுவலர்கள், ஆய்வு கூட்டங்களில் பங்கேற்க வேண்டும்.

ஆரம்ப சுகாதார மையங்கள், துணை சுகாதார மையங்கள், மகப்பேறு மையங்கள், சமுதாய சுகாதார மையங்களை பஞ்சாயத்து அமைப்புகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும். இதன் காரணமாக துணை சுகாதார மையங்களை, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள், ஆரம்ப சுகாதார மையங்களின் மீது மேற்பார்வையிட்டும் மருத்துவர்கள் இருப்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். அரசு வட்ட தலைமை மருத்துவமனைகள் இருப்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். அரசு வட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகளின் செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள், முறைப்படி ஆய்வு செய்தல் வேண்டும். பேறு கால மையங்களை பராமரித்தலை உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டும். கிராமப்புற மக்களின் நலவாழ்வு கவனிப்பு தேவைகளை மேம்படுத்த வேண்டி பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் ஒவ்வொருநிலையிலும் உள்ளூர் ஆலோசனைக்குழு அமைக்கப்படலாம். உள்ளூரில் சேவை செய்ய விருப்பம் தெரிவிக்கும் மருத்துவர்கள், தற்பொழுது ஒப்பந்த அடிப்படையில் இயங்கும் ஊரக மருந்தகங்களின் வசதிகளை பயன்படுத்த வேண்டி, தனியார் மயமாக்கப்பட வேண்டும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொடர் எண்	திட்டங்கள் / செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	மாவட்ட / வட்ட தலைமை மருத்துவமனை களின் மேம்பாடு (மா. தி)		மே, ஆ	தி, ஆ
2.	தேசிய திட்டங்களான டி.பி. கட்டுப்பாடு, மலேரியா ஒழிப்பு, எய்ட்ஸ், கட்டுப்படுத்தல், எளிதில் காற்று, நீர்மூலம் பரவும் நோய்கள் கட்டுப்பாடு, தொழுநோய் கட்டுப்பாடு போன்ற திட்டங்களை மேற்பார்வையிடுதல் (ம.தி./ம.பொ.தி)	க,உ	செ,மே,ஆ	தி, ஆ
3.	மலைப்பகுதிகளில் மருந்தகங்கள் திறத்தல்	க,உ	செ,மே,ஆ	தி, ஆ
4.	எளிதில் செல்ல முடியாத இடங்களுக்கு நடமாடும் மருத்துவப் பிரிவுகளில் சென்று மருத்துவ உதவி வழங்குதல் (மா. தி)	க, உ	செ,மே,ஆ	தி,ஆ
5.	நோய் கட்டுப்பாடு/தடுப்பு வழிகளில் மக்களை ஈடுபடுத்தல் (மா. தி)	க,உ	செ,மே, ஆ	தி, ஆ

தொடர் எண்	திட்டங்கள் / செயல்திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
6.	மாவட்ட அளவில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி முறை மருத்துவத்தை பரப்புதல் (மா.தி)			தி, ஆ
7.	அரசு மருத்துவமனைகள்/ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கு மருந்துகள்/ அறுவை சிகிச்சை கருவிகள் வழங்கலை மேற்பார்வையிடல் (மா. தி)		மே	ஆ
8.	மருத்துவமனை கழிவுகளை பாதுகாப்பாக வெளியேற்ற உதவுதல் (மா.தி)			ஆ
9.	கண் சிகிச்சை முகாம், குடும்ப நல முகாம் நடத்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தல் (மா. தி,/ ம.அ. / பொ.தி)	க	பே	பே
10.	ஆரம்ப சுகாதாரநிலையம் / மகப்பேறு மருத்துவமனை கட்டுதல் / மேற்பார்வை பராமரிப்பு (மா. தி)	செ	செ,மே	தி, ஆ
11.	சுத்தமான சூழ்நிலை, நோய் தடுப்பு கடடுப்பாடு முறையற்ற மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல் (மா. தி)	செ,உ	உ, மே	உ,பே
12.	பலநோக்கு மருத்துவபணியாளர் களுக்கான பயிற்சிகள் நடத்த உதவுதல் (மா. தி)	க	செ	தி, ஆ
13.	போலியோ, டிப்தீரீயா போன்ற நோய்கள் சிறு குழந்தைகளுக்கு வராமல் தடுக்க தடுப்பூசி போட உதவி செய்தல்	செ,க,உ	மே, ஆ, செ	மே,தி
14.	மகப்பேறு மற்றும் குழந்தை நல மருத்துவமனைகளை மேற்பார்வையிடல் (மா. தி)	செ	உ,அ,ஆ	–
15.	பள்ளிக்கால உடல் நலத்திட்டம் (மா.தி)	செ	செ,மே	ஆ, அ
16.	முக்கிய புள்ளி விவரங்கள் பதிவு செய்தல் மேம்பாடு (மா.தி)	செ	செ.	செ,அ
17.	உணவு கலப்படத் தடுப்பு (மா.தி. ம.பொ.தி)	செ	மே	ஆ
18.	துப்புரவுப் பணிகள் (மா.தி)	மே,செ	மே,உ	தி, ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான
நிறுவனத் தொடர்புகள்

தொடர் எண்	அரசு துறைகள் / நிறுவனங்கள் மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி
1.	சுகாதார துணை நிலையங்கள்	உ	எ,பே	ஆ
2.	ஆரம்ப சுகாதார நிலையங்கள்		எ,பே	ஆ
3.	சமுதாய நல மன்றங்கள்		எ,பே	ஆ
4.	அரசு மருந்தகங்கள் மற்றும் நடமாடும் மருத்துவ மருந்தகம்		நி,ஆ	ஆ
5.	வட்ட மருத்துவமனை மற்றும் வட்டமல்லாத மருத்துவமனை		ஆ,மே	ஆ
6.	மகப்பேறு நிலையங்கள்		பே	ஆ
7.	மருந்தகங்கள்	நி	நி	ஆ
8.	உள்ளூர் ஆலோசனைக் குழு	நி	நி	நி

5.5.25 குடும்ப நல் வாழ்வு

(இனம் - 24)

குடும்ப நலத் திட்டத்தின் கீழ், தாய் சேய் நலத்தை மேம்படுத்துவதற்காக ஏராளமான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அத்திட்டங்களால் பிறப்பு வீதம், இறப்பு வீதம், இளம் சிறார் இறப்பு வீதம், தாய்மார்கள் இறப்பு வீதம் மற்றும் மொத்தக் கருத்தரிப்பு வீதம் ஆகியவற்றைப் பெறப்படுகின்றன. இத்திட்டங்களைச் செயற் படுத்துவதற்கு மைய அரசின் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இந்நிலையங்களைப் பேணுவதற்கான செலவினம், தளவாடங்கள் மற்றும் ஊர்திகளை வழங்கல், பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள், மற்றும் பயிற்சி ஆகியவற்றுக்கான செலவினங்கள் உள்ளாட்சி மன்றங்களால் ஏற்கப் பெறுகின்றன. ஊராட்சி ஒன்றியக்குழுக்களுக்கு 114 (2) ஆவது பிரிவின் கீழ் ஆய்வு செய்வதற்குரிய அதிகாரங்களையும் தாய் சேய் நலகாப்பு மற்றும் குடும்ப நலக்காப்புப் பணிகளை நிருவகிப்பதற்கான அதிகாரங்களையும் ஒப்படைக்கப் பெற வேண்டும். இதில், ஆரம்பச் சுகாதார நிலையங்கள், குடும்ப நலச்செயலகங்கள் மற்றும் பிற ஆராய்வு மையங்கள் ஆகியவற்றிலுள்ள பணியாளர் நேர்வில், ஊராட்சி ஒன்றியத்திற்குப் பொறுப்பாகவும் பதில் சொல்லும் பொறுப்புடையவராகவும் இருக்க வேண்டும். மாவட்டக் குடும்பநலச் செயலகத்திற்கு, மாவட்டத்தில் உள்ள குடும்ப நலச் செயற்பாடுகள் அனைத்தையும் நிருவகிப்பதற்குரிய முழுப்பொறுப்பையும் ஒப்படைக்கலாம். மாவட்ட நிலையிலான மாவட்டக் குடும்ப நலச்செயலகத்தின் அலுவலர்களும் சுகாதாரப் பணியாளர்களும் 163 (2ஆ) ஆவது பிரிவின் கீழ் மாவட்ட ஊராட்சிகள் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும். மேலும், மாவட்ட ஊராட்சிகளுக்குப் பொறுப்பாக இருப்பார். மாவட்ட ஊராட்சிகள் குறைபாடுகளை அறிந்து சரியான நடவடிக்கைகளைப் பற்றிக் கருத்து தெரிவிக்கவேண்டும். பஞ்சாயத்துஆட்சி நிறுவனங்கள், தாய் சேய் நலக்காப்பின் மீது, அறிவுரை வழங்கும் நடவடிக்கைகளிலும் செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளைப் பரப்புவதிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஆதரவைத் திரட்ட வேண்டும்.

ஊரகக் குடும்ப நலச் செயலகம், ஆரம்பச் சுகாதார நிலையங்கள், துணைச் சுகாதார நிலையங்கள், மகப்பேறு நலநிலையங்கள், சமுதாய நலநிலையங்கள், பிண ஆராய்வு நிலையங்கள் முதலியனவற்றை ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வர வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களிடம் மகப்பேறு நிலையங்களையும் மருந்தகங்களையும் திறந்து பேணுவதற்குரிய சட்டப்படியான கடமைகளை ஒப்படைக்கப் பெறலாம். வட்டார அறிவுரைக் குழுக்களை பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் ஒவ்வொரு நிலையிலும அமைக்கப் பெறலாம். மாவட்ட ஊராட்சிகள், மாவட்டக்குடும்ப நலச்செயலகத்தின் பேணுகையையும் ஆய்வையும் செய்யும். ஊராட்சி ஒன்றியங்களிடம் மகப்பேறு நிலையங்களையும், மருந்தகங்களையும் திறந்து பேணுவதற்குரிய சட்டப்படியான கடமைகளை ஒப்படைக்கப் பெறவேண்டும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	குடும்ப நல நிலையங்களை அமைத்துப் பேணுகை (மா.தி) (ம. அ. பொ. தி)	உ, க	செ, மே	தி, ஆ, மே
2.	மண்டலக் குடும்ப நலப் பயிற்சி மையம் / மாவட்டக் குடும்ப நலச் செயலகம் அமைத்தல். (மா.தி) (ம. அ. பொ. தி)	---	ஆ	ஆ, மே

தொ. எண்.	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
3.	குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட நிகழ்ச்சிகளில் உள்ளாட்சி மன்றங்களையும் / அரசு அல்லாத தொண்டு நிறுவனங்களையும் ஈடுபடுத்தல். (மா.தி) (ம. அ. பொ. தி)	பே	பே, ஆ	பே, ஆ
4.	குடும்ப நலத்தில் பணியாளர்களுக்குப் பயிற்சி.(ம. அ. பொ. தி)	செ	செ, ஆ	ஆ
5.	குடும்ப நலத்தில் மக்கள் கல்வியை நடத்த உதவுதல் / பெண் அறுவைச் சிகிச்சை, கருத்தடை வளையப் பிரிவு முதலியவற்றுக்காக ஈட்டுத்தொகை ஒப்பளிப்பு. (மா.தி) (ம.அ.பெ.தி)	செ	செ, ஆ	பே, ஆ
6.	"சிறு குடும்பம்' பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.	செ	ஆ	பே, தி
7.	தாய் சேய் நலப்பணிகள்	செ, க	செ	ஆ, தி, மே

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொ. எண்.	அரசுதுறைகள் /நிறுவனங்கள் மையங்கள்	சிற்றூராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	துணைச் சுகாதார நிலையங்கள்	--	எ, பே	---
2.	ஆரம்பச் சுகாதார நிலையங்கள்	--	எ, பே	ஆ
3.	சமுதாய நல நிலையங்கள்	--	எ, பே	ஆ
4.	பிண ஆராய்வு நிலையங்கள்	--	எ, பே	ஆ
5.	ஊரகக் குடும்ப நலச் செயலகம்	--	எ, பே	---
6.	மாவட்டக் குடும்ப நலச் செயலகம்	--	---	பே
7.	மகப்பேறு நிலையங்களும் மருந்தகங்களும்	--	எ, பே	---
8.	வட்டார அறிவுரைக்குழு	நி	நி	நி

5.5.26 மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

(இனம் - 25)

வாழ்க்கைத் தொழிற் பயிற்சி பெறுவதற்குரிய ஏழைப் பெண்கள், பாடப் புத்தகங்களைப் பெறுவதற்குரிய ஏழைக் கைம்பெண்களின் குழந்தைகள் மற்றும் திருமணத்திற்காக உதவி பெறுவதற்குரிய ஏழைக் கைம்பெண்களின் மகள்கள் / அனாதைப் பெண்களையும், மகளிர் குழந்தைகள் ஆகியோரின் நலனுக்காகக் கருதப்பட்ட இதர நலத்திட்டங்கள் அனைத்தையும் சிற்றூராட்சிகள் அறிந்து மேற்கொள்ள வேண்டும். பள்ளிகள் / ஒ.கு.மே. திட்டமையங்கள் / த.நா.ஒ.ச. திட்டம் ஆகியவற்றில் செயற்படுத்தப்பட்டு வரும் நண்பகல் உணவு தொடர்பிலான திட்டங்களைச் ஊராட்சிகள் கவனித்து கொள்வது சிறந்ததாகும். ஊராட்சி ஒன்றியங்கள் 114 (2) ஆவது பிரிவின் படி கண்காணிப்பையும் ஆய்வையும் எடுத்துக் கொள்ள வேண்டும். திட்டச் செயலாக்கத்திற்குப் பிரிவு 163 (2ஆ) இன்படி மாவட்ட ஊராட்சிகள் திட்டமிடுவதிலும், ஆய்வு செய்வதிலும் பங்கேற்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கும், மையங்களுக்கு பண்டக அறைகளுடன் கூடிய முறையான கட்டடங்களைக் கட்டுதல், நீர் வழங்கல், கழிப்பிட வசதிகள், விளையாட்டுத் திடல்கள் மற்றும் வீட்டுப் பயன்பாட்டுக் காய்கறித் தோட்டங்கள் முதலானவை போன்ற உள்ளமைப்பு வசதிகளை அளிப்பதற்கு உள்ளாட்சி மன்றங்கள் சமுதாய ஆதரவைத் திரட்டலாம்.

மகளிர் மற்றும் குழந்தை நலத்திற்காக பெரும் எண்ணிக்கையிலான நிறுவனங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. குழந்தை நலமையங்கள், சமுதாய ஊட்டச்சத்து மையங்கள், நண்பகல் உணவு மையங்கள மற்றும் குழந்தை நலம் மற்றும் மகளிர் நலத்திற்கான பிற நிறுவனங்கள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பெற வேண்டும். நண்பகல் உணவுத் திட்டங்கள் குறித்து, இத்திட்டத்திற்கு உணவு பொருள் இனங்களைக் கொள்முதல் செய்து பகிர்வு செய்யும் தற்போதைய நடைமுறையான, தமிழ்நாடு உணவு பொருள் கழகத்தால் வழங்கப்படும் நடைமுறையே தொடரும். நண்பகல் உணவு மையங்களின் செயல்பாடும் பேணுகையும் ஊராட்சிகளுக்கு அளிக்கப்பெறும். ஊராட்சி ஒன்றியங்கள் கண்காணிக்கும் பங்கை மேற்கொள்ளும். மகளிர் மன்றங்கள் ஊராட்சிகளுடன் இணைக்கப்படும். மகளிர் மற்றும் குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கியலும் வகையிலும், தரத்தை உயர்த்தும் வகையிலும் தமது கவனம் முழுவதையும் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் மீது செலுத்துவதில் ஆற்றலும் பயனும் மிக்க பங்கினை இம்மன்றங்கள் ஏற்கும் வகையில் மீள் நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்யவேண்டும். மாவட்ட ஊராட்சியானது, ஆய்வு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	சிற்றூராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	சத்துணவு மையங்களை நிறுவுதல், நிருவகித்தல், மற்றும் மேற்பார்வையிடல் (மா.தி)	செ	பா, மே	ஆ
2.	ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டம் / துணை ஊட்டச்சத்து திட்டம் (மா.அ.பொ.தி)	செ, உ	பா, மே	ஆ

தொ. எண்.	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
3.	பள்ளிகள் / ஒ.கு.மே.தி மையங்கள் / தமிழ்நாடு ஒருங்கிணைந்த திட்டம் முதலியவற்றில் செயற்படுத்தப்பட்டு வரும் நண்பகல் உணவு திட்டம் (மா.அ.பொ.தி) வெளிநாடு உதவி திட்டம்	செ, உ	பா, மே	ஆ
4.	குழந்தைகளுக்கான பால்வாடிகள் குழந்தை காப்பகம் திறத்தல் (மா.தி)	செ, உ	பா, மே	ஆ
5.	ஸ்வீடன் நாட்டு உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத் தொகுப்புகளில் குழந்தை நல மையங்களைக் கட்டுதல்.	----	செ, மே	ஆ
6.	சத்துணவுத் திட்டத்தைக் கண்காணித்தலும், மதிப்பிடலும்.	----	----	ஆ
7.	சிசுக் கொலையை அறவே ஒழித்தல், கைவிடப்பட்ட பெண் குழந்தைகளைப் பாதுகாத்து வளர்த்தல் ஆகியவை மீதான திட்டம். (மா.தி)	க	செ, ஆ	ஆ
8.	மகளிர் பணி மையங்களையும் பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட உற்பத்திப் பிரிவுகளையும் மேற்பார்வையிடுதல். (மா.தி)	உ	செ, ஆ	ஆ
9.	உழைக்கும் மகளிர் விடுதிகளை மேற்பார்வையிடல். (மா.தி)	---	பா, மே	தி, ஆ
10.	தொழிற்பயிற்சிக்காக ஏழைப் பெண்களுக்கு உதவியளித்தல், ஏழைக் கைம்பெண்களின் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள் அளித்தல். ஏழைக் கைம் பெண்களின் மகள்களுக்கு / அனாதைப் பெண்களுக்கு திருமண உதவி போன்ற பல்வேறு பெண்கள் நலத்திட்டங்களை மேற்பார்வையிடுதல். (மா. தி)	க	மே	தி, ஆ
11.	மகளிர் மன்றங்கள் மீதான திட்டங்களும் அதன் மீதான பொருளாதார நடவடிக்கைகளும். (மா.தி)	செ, க	செ, பா	தி, ஆ
12.	பணிபுரியும் மற்றும் நோய் வாய்ப்பட்டிருக்கும் தாய்மார்களின் குழந்தைகளுக்கானக் காப்பகங்களை மேற்பார்வையிடல். (மா.தி. ம. அ. பொ. தி)	செ	பா, மே	தி, ஆ

தொ. எண்.	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
13.	பெண்களுக்கான வழிகாட்டும் நிலையம் (மா. தி).	–	பா, மே	தி, ஆ
14.	மாவட்டங்களிலுள்ள பெண்களுக்கானத் தொண்டு இல்லங்களை மேற்பார்வையிடல். (மா. தி).	–	பா, மே	தி, ஆ
15.	பெண்களுக்காகக் ஒதுக்கப்பட்டுள்ள அனைத்து நலத்திட்டங்கள்.	க	செ,மே	தி, ஆ
16.	மகளிர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வையிடுதல். (மா.தி)	––	மே	தி, ஆ
17.	அனாதை இல்லங்களின் செயல்பாட்டை மேற்பார்வையிடல்.	––	மே	தி, ஆ
18.	வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு ரொக்க (மா.தி)	க	செ, மே	ஆ
19.	வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள பெண்களுக்குத் திருமண நிதியுதவி.	க	செ, மே	ஆ
20.	பெண் குழந்தை நலத்திற்கான உதவித்திட்டங்கள்.	க	செ, மே	தி, ஆ
21.	ஆதரவற்ற கைம்பெண்களுக்கு / கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்கல். (மா.தி)	க	செ, மே	தி, ஆ
22.	ஏழைக்கைம் பெண்களின் மகள்களுக்குத் திருமண முன்பணம்.	க	செ, மே	ஆ
23.	திட்டத்தின்கீழ் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (வெ.உ.தி)	––	மே, பா	ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொ. எண்.	அரசுதுறைகள் /நிறுவனங்கள் மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	குழந்தை நலமையங்கள்	எ, பே	மே	ஆ
2.	சமுதாய சத்துணவு மையங்கள்	எ, பே	மே	ஆ
3.	சத்துணவு மையங்கள்	எ, பே	மே	ஆ
4.	மகளிர் மன்றங்கள்	மே	மே	ஆ
5.	குழந்தையர் காப்பகங்கள்	பே	மே	ஆ
6.	அனாதை இல்லங்கள்	–––	நி	ஆ

5.5.27 உடல் ஊனமுற்றோர் மற்றும் மன நலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் உள்ளிட்ட சமூகநலன்

(இனம் - 26)

இயலாதோர், அனாதைக் குழந்தைகள், குழந்தையைத் தத்தெடுத்தல், அகவை முதிர்ந்தோர் நலம், போதை மருந்து பயன்படுத்துவதைத் தடுத்தல், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு, இளங்குற்றவாளிகள் நீதி நிர்வாகம், மதிய உணவுத் திட்டம் மற்றும் சமூகக் கொடுமைகளுக்கு எதிரான விழிப்புணர்வு ஆகிய நலன்களை இவ்வினம் உள்ளடக்கியுள்ளது. உடல் ஊனமுற்றோர்களுக்கு விரிவான மறுவாழ்வுச் சேவைகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளன. சிறப்புக் கல்விக்கு வகை செய்தல், வாழ்க்கைத் தொழில் பயிற்சி, பணிகளில் அமர்த்தல், சுயவேலை வாய்ப்புக்கு உதவி, துணைக் கருவிகளை இலவசமாக வழங்கல் முதலியன இதில் அடங்கும். பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், ஊனமுற்றோர்களைத் தற்சார்புடையவராகவும் பொருளாதாரத்தில் தனித்து விளங்கக்கூடியவராகவும் ஆக்குவதற்காகக் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி வசதிகளைப் பலப்படுத்துவதில் முக்கியப் பங்கைக் கொண்டிருக்க வேண்டும். கல்வி வசதிகளை மேம்படுத்தும் பொருட்டுச் ஊராட்சிகள் ஊனமுற்ற குழந்தைகளைக் கண்டறிய வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களானது பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள், சீருடைகள், படிப்புதவித் தொகைகள், இலவசப்பேருந்து அனுமதிச் சீட்டுக்கள், மற்றும் பிற பொருள்களை குறித்த காலத்தில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவும் வேண்டும். ஊராட்சிகள் ஊனமுற்றோர்களையும் அவர்களுக்குத் தேவையான உதவிகள் துணைக் கருவிகள், மற்றும் உதவியை அறிந்து கொள்வதில் செயல் திறமுடைய பங்கை வகிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் ஊராட்சிகளும் பொருளாயக் கடனுதவி துணைக் கருவிகள் ஆகியவற்றை வழங்குதலைக் கண்காணித்தல், ஆய்வு செய்தல் மேற்பார்வையிடுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும். முதியோர் நலம் தொடர்பில், ஊராட்சிகள் 60 வயதுக்கு மேற்பட்டவர்களைப் பற்றி கணக்கெடுத்து, ஆதரவற்ற முதியோரைக் கண்டறிவதுடன், முதியோர் ஓய்வூதியம் பெறுவதில் வயது முதிர்ந்தோர்க்கு உதவவும் வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள், அரசால் இலவசமாக வழங்கப்படும் இனங்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வயது முதிர்ந்தோர்க்குப் பகல் நேரக் காப்பகங்களை அமைப்பதில் அவை உதவ வேண்டும். ஊராட்சி ஒன்றியம் பிரிவு 114 (2) இன் கீழ், முதியோர் இல்லங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்ய வேண்டும். மாவட்ட ஊராட்சிகள் முதியோர் இல்லங்களின் செயல்பாடுகளை மதிப்பிட்டு மேம்பாட்டிற்குரிய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது தொடர்பில், ஊராட்சிகள் பிச்சைக்காரர்களில் அனைத்து வயதுப் பிரிவினர்களையும் கண்டறிவதில் முதன்மைப் பங்காற்றுவதுடன் அவர்களின் மறுவாழ்வு நடவடிக்கைகளிலும் உதவ வேண்டும். ஊராட்சி ஒன்றியம், அனாதைக் குழந்தைகளுக்காக எடுக்கப்படும் மறுவாழ்வு நடவடிக்கைகள் தொடர்பில் அரசுச் சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவைத் திரட்ட வேண்டும். மாவட்ட ஊராட்சி, காலமுறையான ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, குறைபாடுகளை அறிந்து அதற்குத் தக்கவாறு அறிவுறுத்த வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள், மகளிர் பணித்துறையைச் சார்ந்தவர்களுக்கும் குடிப்பழக்கத்தை ஒழிப்பதில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கும் உதவி புரியலாம். இளங்குற்றவாளிகளுக்கான சீர்திருத்த நிலையங்கள், பராமரிப்பு, சிகிச்சை, காப்பு, கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி, கடமை தவறிய சிறுவர் மற்றும் பெண்கள் மறுவாழ்வு ஆகியவற்றை அளிக்க வகை செய்கின்றன. மாவட்ட ஊராட்சிகள், 163 (2ஆ) ஆவது பிரிவின் கீழ் இளைஞர் சீர்திருத்த நிறுவனங்களின் செயல்பாட்டைக் கண்காணித்து ஆய்வு செய்யும்.

மாவட்ட நிலையில், மாவட்டச் சமூக நல அலுவலரும் ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு மாவட்ட அலுவலரும் திட்டங்களின் செயலாக்கத்திற்குப் பொறுப்புடையவராவார்கள். மாவட்ட ஊராட்சிகளின் ஆய்வுக் கூட்டங்களில் அவர்கள் கலந்து கொள்ள வேண்டும். அதே போன்று மாவட்ட நிலைக்குக் கீழுள்ள சமூக நலத்துறையின் அலுவலர்கள், ஊராட்சி ஒன்றிய நிலையிலுள்ள ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொண்டு ஊராட்சி ஒன்றிய , ஊராட்சியின் பரிந்துரைகள் மீது தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்ட நிலையில் ஊனமுற்றோருக்கானப் பல்வேறு சிறப்புப் பள்ளிகளின் இயக்கத்தையும் பராமரிப்பையும் மாவட்ட ஊராட்சிகள் ஆய்வு செய்யலாம். அரசு / பொதுப்பணிகளிலும் அரசு மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் போன்ற அனைத்து வகையான மேலாண்மைகளிலும் பொருளாயக் கடனுதவி மற்றும் துணைக் கருவிகளைப் பெறுவதற்குரிய பயனாளர்களைத் தெரிவு செய்வதிலும் ஊனமுற்றோருக்கான 3 விழுக்காடுக் காலியிடங்களின் ஒதுக்கீட்டையும் மாவட்டக் குழு கண்காணிக்கும். மாவட்ட ஊராட்சியானது, கல்வி, வேலைவாய்ப்பு, கடன் ஒப்பளிப்பு, மறுவாழ்வு முதலியன

தொடர்பில் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும். ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி நிலைகளில், தங்கள் பகுதிகளில் திட்டச் செயலாக்கத்தை ஒருங்கிணைக்க அறிவுரைக் குழுவை அமைத்துக் கொள்ளலாம்.

மாவட்ட ஊராட்சிகள், சமூக சேவை நிலையங்களின் செயல்பாட்டைக் கண்காணித்து ஆய்வு செய்யும். இதில், சமூக சேவை நிலையங்களின் பணியாளர்கள், இளங்குற்றவாளிகளுக்கான நல வாரியங்கள் மற்றும் இளங்குற்றவாளிகளுக்கான வழிகாட்டும் மைய உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	பார்வையற்ற / ஊனமுற்றவர்க ளுக்கான மறுவாழ்வு இல்லத்தின் செயற்பாட்டை மேற்பார்வையிடல். (மா.தி)	உ	செ, மே	தி, ஆ
2.	உடல் ஊனமுற்றவர்களுக்கு நடத்தப்படும் பள்ளிகளை / விடுதிகளை மேற்பார்வையிடல். (மா.தி)	உ	செ, மே	தி, ஆ
3.	உடல் ஊனமுற்ற பள்ளி மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை. (மா.தி)	க	செ, மே	தி, ஆ
4.	கல்வி நிறுவனங்களிலும் அரசுத் துறைகளிலும் உடல் ஊனமுற்றவர்களுக்கான இட ஒதுக்கீட்டுச் செயற்பாட்டை மேற்பார்வையிடல். (மா.தி)	–	ஆ	ஆ
5.	ஒருங்கிணைந்த இளம்பிள்ளைவாத ஒழிப்புத் திட்டத்திற்கான உதவி (மா.தி)	உ, க	மே, ஆ	ஆ
6.	உடல் ஊனமுற்ற / மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் மறுவாழ்வு தொண்டு நிறுவனங்களின் உதவி. (மா.தி)	க	க, செ, மே	தி, ஆ
7.	தொ.ப. பள்ளிகளில் சீர்திருத்த பள்ளிகளிலிருந்து விடுவிக்கப்பட்ட இளங் குற்றவாளிகளுக்கானப் பயிற்சித் திட்டம். (மா.தி)	க	செ, மே	ஆ
8.	இளங்குற்றவாளிகளுக்கான சமூக சரிப்படுத்தல்களின் தடுப்பு மற்றும் கட்டுப் பாட்டிற்கானத் திட்டங்கள். (மா.தி. ம.பொ.தி)	க	செ, மே	தி, ஆ

தொ. எண்.	திட்டங்கள் / செயல் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
9.	சீர்திருத்த நிலையங்கள், கண்காணிப்பு நிறுவனங்கள், மற்றும் அரசு ஏற்புப்பெற்ற பள்ளிகள் ஆகியவற்றின் செயற்பாட்டிற் கானத் திட்டங்கள்.	---	பா, ஆ	தி, ஆ
10.	குடிப்பழக்கத்தின் தீமைகளைப் பரப்புவதற்காகப் பெண்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்கானத் திட்டங்கள். (மா. தி)	க	செ, மே	தி, ஆ
11.	முதியோர் இல்லம் செயற்படுதல் மீதான திட்டம்.	--	பா, மே	தி, ஆ
12.	உடல் ஊனமுற்றோர்களுக்கான (பார்வையின்மை, காதுகேளாமை மற்றும் வாய் பேசாமை) புதிய பள்ளிகளைத் தொடங்குதல். (மா.தி)	--	செ, பா	ஆ
13.	வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்த பார்வையற்ற வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பின்மைப் படி வழங்கல் (மா.தி)	க	செ, பா	ஆ
14.	பார்வையற்ற மாணவர்களுக்கு எழுத்தர் உதவி. (மா. தி)	க	செ, மே	ஆ
15.	உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குப் படிப்புதவித் தொகை. (மா. தி)	க	செ, மே	ஆ
16.	ஊரகப் பகுதிகளில் செயல்படும் சமுக நல நிறுவனங்களுக்குரிய திட்டங்கள். (மா. தி)	--	க, மே	ஆ

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவனத் தொடர்புகள்

தொ. எண்.	அரசுத்துறைகள் /நிறுவனங்கள் மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	சிறப்புப் பள்ளிகள்	–	எ	ஆ
2.	இளங்குழந்தையர் பள்ளிகள் காப்பகங்கள்	பா	எ	ஆ
3.	கவனிப்பு இல்லங்கள்	–	மே, பா	ஆ
4.	சிறப்பு / இளங்குறற்வாளிகள் இல்லங்கள்	–	மே, பா	ஆ
5.	பாதுகாப்புக்குரிய / கண்காணிப்பு இல்லங்கள்	–	மே, பா	ஆ
6.	பிற்காப்பு நிறுவனங்கள்	–	மே, பா	ஆ
7.	மாவட்டக்குழு	–	–	நி
8.	அறிவுரைக்குழு	–	நி	நி

5.5.28 நலிவுற்ற பிரிவினர்களின் நலம் மற்றும் குறிப்பாக பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர்

(இனம் - 27)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்களுக்குப் பயன்படும் அனைத்துத் திட்டங்களையும் 3 வகையாகப் பிரிக்கலாம். அதாவது (1) கல்வி, (2) பொருளாதார மேம்பாடு மற்றும் (3) வீட்டுவசதி ஆகியனவாகும். படிப்புதவித்தொகை, பயிற்சிக்கால உதவித்தொகை, பாடப்புத்தங்கள் மற்றும் சீருடைகள் வழங்கல் ஆகியன இக்கல்வித் திட்டத்தில் அடங்கும். பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வியில் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல் இத்திட்டங்களின் பகுதியாக அமையும். ஊராட்சிகள், பயன் பெறுதற்குரிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின் மாணவர்களுக்கு உதவுவதிலும் கண்டறிதலும் உதவி செய்யும். செயற்பாட்டு முறையானது பொதுக் கல்விமுறையைப் பின்பற்றியதாக இருக்க வேண்டும். பொதுக் கல்வியில், தொடக்கநிலைப் பள்ளிகளும் கல்வியும், ஊராட்சி ஒன்றியத்தால் பேணப்படுவதற்கும் நிருவகிப்பதற்கும் ஆக மாற்றம் செய்யப்பட இருக்கின்றன. மாவட்ட ஊராட்சியானது, திட்டமிடல், ஆய்வு மற்றும் மேற்பார்வையிடல் ஆகிய கடமைகளை நிறைவேற்றும். பள்ளிகள் மற்றும் விடுதிகளின் கட்டுமானப் பணிகள், ஊராட்சி ஒன்றியத்திடம் முழுமையாக ஒப்படைக்கப் பெற வேண்டும். விடுதி மேலாண்மையை நடைமுறையிலுள்ள முறைப்படி தொடரலாம். பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் ஆண்டுக்குப் ஆண்டு மாறுபடும். இருப்பினும், கலப்பை, காளைகளை வாங்குவதற்கும் பால்பண்ணைக் கூட்டுறவு, சிறு தொழில்களையும் தொழில்நுட்பத் தொழில்களையும் தொடங்குவதும் உதவிகளில் அடங்கும். இத்திட்டங்களை ஊராட்சி ஒன்றியத்தால் முழுமையாக செயற்படுத்த முடியும். இதற்காக உதவிக்குரிய நபர்களை அறிதல் ஊராட்சிகளின் பொறுப்பாகும். திட்டமிடல், மேற்பார்வையிடல் மற்றும் ஆய்வுப் பணிகளை மாவட்ட ஊராட்சிகளால் கவனிக்கப்படும். வீடு கட்டுதலையும் வசதிகளை அளித்தலையும் (அடிப்படை வசதிகளையும் பிறவற்றையும்) ஊராட்சி ஒன்றியத்தால் கவனிக்கப்பெறும். பயனாளர்கள் அறிதலை ஊராட்சியால் மேற்கொள்ளப்பெறும். ஆய்வு செய்யும் பணிகளை மாவட்ட ஊராட்சிகளின் ஆட்சி பகுதியலிருக்கும். 114 (2) மற்றும் 163 (2ஆ) பிரிவுகளின் கீழான திட்டங்கள் மற்றும் நிறுவன செயலாக்கத்தின் ஆய்வை (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) வட்டாசியரும் மாவட்ட ஆதி திராவிட நல அலுவலரும் முறையே ஊராட்சி ஒன்றியமும் மாவட்ட ஊராட்சியிலும் கவனிப்பார்கள்.

அடிப்படையில், 4 வகையான கல்வி நிறுவனங்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்களின் கல்வி மற்றும் அதன் தொடர்பான தேவைகளைப் பூர்த்தி செய்ய உள்ளன. ஊராட்சி ஒன்றியமானது நடைமுறையில் உள்ள மற்றும் புதிய தொடக்க, ஆரம்ப நிலைப் பள்ளிகளையும் தங்கிப்படிப்போர் பள்ளிகளையும் எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்று பரிந்துரைக்கப்படுகிறது. இடைநிலைப்பள்ளிகளும் விடுதிகளும் அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து இருக்கலாம். மாவட்ட ஊராட்சியானது, திட்டமிடுதலையும் மேற்பார்வை செய்யும் அதிகாரத்தின் பங்கையும் வகிக்கும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள்/ செயல்முறைத் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நடத்தப்படும் பள்ளிகளையும் விடுதிகளையும் மேற்பார்வையிடல். (மா.தி)	செ	செ	தி, மே

தொ. எண்.	திட்டங்கள்/ செயல்முறைத் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
2.	தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நலனுக்காகச் செயற்படுத்தப்பட்டு வரும் பிற நலத் திட்டங்களை மேற்பார்வையிடல். (மா.தி)	உ	ஆ	தி, மே
3.	3 முதல் 6 வரையிலான வகுப்பில் படிக்கும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவி களிடையே கல்வியறிவை மேம்படுத்த உள்ள சிறப்பு ஊக்கத் திட்டத்தை மேற்பார்வையிடல்.	க	ஆ	தி,மே
4.	ஆதிதிராவிட மாணவர்கள் கல்லூரிப் படிப்பைத் தொடர்வதற்கு முதலமைச்சர் தகுதி விருது. (மா. தி)	க	ஆ	தி,மே
5.	தொழில்நுட்பத்தில் பயிற்சி பெற்ற நபர்களுக்கு உதவி. (மா. தி)	க	ஆ	தி,மே
6.	இடுகாட்டிற்கும் சுடுகாட்டிற்கும் நடை பாதைகள் அமைத்தல். (மா.தி)	செ	செ	தி,மே
7.	பல்வேறு திட்டங்கள் மற்றும் வீடு மேம்பாட்டின் கீழ், வீடுகள் கட்டல், வீட்டுமனைகளுக்கு வகை செய்யும் திட்டங்கள்.	க	செ	தி,மே
8.	பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீடுகளுக்கம் மின்வசதி அளித்தல். (மா.தி)	க	ஆ	தி,மே
9.	சமூக நலத் துறையால் செயற்படுத்தப்படும் கலப்புத் திருமணத்திற்குப் பரிசு. (மா. தி)	க	செ, ஆ	தி,மே
10.	சிறு வியபாரிகளுக்கு உதவி (மா. தி)	க	செ, ஆ	தி,மே
11.	தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ள கல்விச் சலுகைகளை (புத்தகங்கள், சீருடைகள் படிப்புதவித் தொகைகள் முதலியன). மேற் பார்வையிடல். (மா. தி)	க	ஆ,செ	தி,மே
12.	சமுதாயக்கூடம் மற்றும் துணிவெளுக்கு மிடங்கள் முதலியவற்றைக் கட்டுதல். (மா.தி)	செ	உ, ஆ	தி,மே
13.	1955 ஆம் ஆண்டு குடிமுறைக்குரிய உரிமைகளை வலிந்து செயற் படுத்துதல். (மா. அ. பொ. தி)	செ	ஆ	தி,மே

தொ. எண்.	திட்டங்கள்/ செயல்முறைத் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
14.	பொதுமக்களிடம் தீண்டாமைக் கொடுமை களைப் பரப்புதல் (மா.தி)	செ	ஆ	தி.மே
15.	கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளித்தல் (மா.தி)	க	செ	தி,மே,ஆ
16.	துப்புறவுப் பணியாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்துள்ளோர் களுக்கும் மறுவாழ்வு அளித்தல். (மா.தி)	க	செ	தி,மே,ஆ
17.	ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் களுக்குப் பயிற்சித் திட்டமும் சிறப்புப் பயிற்சி யளித்தலும். (மா.அ.பொ. தி)	க	உ,ஆ	தி,மே
18.	ஆதிதிராவிடர் மற்றம் பழங் குடியினர் குடியிருப்பு களுக்குக் குடிநீர் வழங்கல். (மா. தி)	க	செ,ஆ	தி,மே

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிறுவன தொடர்புகள்

தொ. எண்.	அரசு துறைகள் / நிறுவனங்கள் மையங்கள்	சிற்றூராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	தொடக்க மற்றும் ஆரம்ப நிலைப் பள்ளிகள்	பா	நி,ஆ,எ	தி,மே
2.	இடைநிலைப்பள்ளிகள்	---	பா,மே	தி, ஆ
3.	குடியிருப்பு பள்ளிகள்	பா	நி,ஆ,எ	தி,மே
4.	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான விடுதிகள்	பா	ஆ	தி,மே

5.5.29. பொது விநியோக முறை

(இனம் - 28)

அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை, மைதா மற்றும் மண்ணெண்ணை ஆகியன கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக (நியாய விலைக் கடைகள்) பொது விநியோக முறையின் கீழ் முறையாக வழங்கப்படுகின்றன. குறியிலக்கிடப்பட்ட புதிய பொது விநியோக முறை ஒன்று, எதிர்க்காலத்தில் முக்கியமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களின் பயன்பாட்டிற்காகச் செயல்முறைக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. உணவுக்கு உத்திரவாதம் அளிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த இன்றியமையாப் பண்டங்களுக்கு அரசு உதவித் தொகை அளித்து வருகிறது. நியாயவிலைக் கடைகள் குறைபாடுகள் ஏதுமின்றி முறையாக நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டுச் ஊராட்சிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களும் பொது விநியோக முறையின் செயலாக்கத்தை ஆய்வு செய்வதுடன் நியாய விலைக் கடைகளிலும், கிடங்குகளிலும் தேவையான பண்டங்கள் கூடிய வகையில் திட்டமிட வேண்டும். நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்புத் திட்டத்தை உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் நுகர்வோர் பிரிவுகள் வாயிலாகச் செயற்படுத்துவதில் மாவட்ட ஊராட்சிகள் தலையாய பங்கு வகிக்க வேண்டும். பிரிவு 114 (2)இன் கீழ் ஊராட்சி ஒன்றியக்குழுவால் நடத்தப் பெறும் ஆய்வுகளில் (பொது விநியோக முறைக்கான) கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் கலந்து கொள்ள வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளரும் தமிழ்நாடு உணவு பொருள் வழங்கும் கழகப் மண்டல மேலாளரும், பிரிவு 163 (2ஆ) இன் கீழ் பொது விநியோக முறை மற்றும் அதைச் சார்ந்தவற்றின் தொடர்பில் திட்டமிடலுக்கும் ஆய்வுக்கும் மாவட்ட ஊராட்சிகளுக்கு அறிக்கை அளிக்க வேண்டும். நடமாடும் நியாய விலைக்கடைகள் செயற்படுமிடங்களில் ஊராட்சிகள் பகுதி நேர நியாய விலைக்கடைகளும் எடுத்துக் கொண்டு நியாய விலைக்கடைகளை நடத்த வேண்டும். ஊராட்சிகளால் நியாய விலைக் கடைகளும் நேரடிக் கொள்முதல் மையங்களும் ஆய்வு செய்யப்பட்டும், மேற்பார்வையிடப்பட்டு வருவதும் ஊராட்சி ஒன்றியங்களாலும் மாவட்ட ஊராட்சிகளாலும் மேற்கொள்ளப்படும், ஆய்வும் ஒருங்கிணைப்பும் நடத்தப் பெறுவதாலும் இம்முறை தெள்ளத் தெளிவாக விளங்கும். மக்களிடம் பஞ்சாயத்துஆட்சி நிறுவனங்கள், நெருக்கமாக இருப்பதால் இந்நிறுவனங்களின் செயலாக்கத்தை திங்கள் தோறும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும்
ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள்/ செயல்முறைத் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	பொது விநியோக முறை – புதிய நியாய விலைக் கடைகளைத் திறத்தல்	உ	அ, ஆ	தி, ஆ
2.	பகுதி நேர நியாய விலைக் கடைகள்	உ,பே	ஆ	தி, ஆ
3.	நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்புக்கான உதவி	உ	ஆ	ஆ, பா

உள்ளாட்சி மன்றங்களுக்கான நிறுவன தொடர்புகள்

தொ. எண்.	அரசு துறைகள் / நிறுவனங்கள்/ மையங்கள் / பிரிவுகள்	சிற்றூராட்சி	ஊராட்சி ஒன்றியக் குழுக்கள்	மாவட்ட ஊராட்சிகள்
1.	நியாய விலைக்கடைகள்	பா,மே	ஆ	ஒ, ஆ
2.	தமிழ்நாடு நுகர்வோர் உணவுப்பொருள் வழங்கு கழகம் கிடங்குகள்.	----	ஒ	ஒ, ஆ
3.	பகுதி நேர நியாயவிலைக்கடைகள்	எ	ஆ	ஆ
4.	நடமாடும் நியாய விலைக்கடைகள்	----	ஆ	ஒ, ஆ
5.	நியாய விலைக்கடைகளுக்கானக் கண்காணிப்புக்குழு	ஆ	ஆ	ஆ
6.	நேரடி கொள்முதல் மையங்கள்	நி, பா,மே	பா,மே,ஆ	ஒ
7.	நவீன அரிசி ஆலைகள் மற்றும் பகுப்பாய்வு சார்ந்த ஆய்வகங்கள்	---	ஆ	ஆ
8.	மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழு	---	---	ஒ

5.5.30. சமுதாயச் சொத்துக்கள் பேணுகை

(இனம் - 29)

சிறிய அளவிலான நீர்ப்பாசன ஆதாரங்கள், ஏரிகள் மற்றும் குளங்கள், சாலைகள், பொது இடுகாடு மற்றும் சுடுகாடு, நூலகங்கள் மற்றும் படிக்கும் அறைகள், பள்ளிக் கட்டிடம், பொது உரிமை நிலங்கள், அங்காடிகள், இறைச்சிக் கொட்டில்கள் முதலான பொதுச் சொத்துக்களை உள்ளாட்சி மன்றங்கள் பேண வேண்டுமென்று 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் தெரிவிக்கிறது. இச்சமுதாயச் சொத்துக்களைப் பேண உள்ளாட்சி மன்றங்கள் அரசிடமிருந்து மானியங்களைப் பெறுவதுடன் வரிகள், சாலைச் சுங்கங்கள் முதலியவற்றை விதிக்கவும் அவற்றிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உள்ளூர் சாலைகள் மானியம், உள்ளூர் நீர்ப்பாசன மானியம், மருந்தகங்களுக்கானப் பேணுகை மானியம், சமூகக் கல்வி மானியம் முதலியன இச்சமுதாயச் சொத்துக்களைப் பேணுவதற்கு உள்ளாட்சி மன்றங்களின் வருவாய்க்குரிய முக்கிய ஆதாரங்களாகும்.

பிரிவு 114 (2) மற்றும் 163 (2ஆ) இன் கீழ், ஆய்வு செய்ய ஊராட்சி ஒன்றியத்திற்கும் மாவட்ட ஊராட்சிக்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அவைகளுக்குத் தொடர்புடைய அலுவல் சார்ந்த முகமைகள் அவைகளால் செயற்படுத்தப்படும் திட்டங்களின் முழு விவரங்களை ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக வழங்கப்பட வேண்டும்.

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி நிலையில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்கான விளக்கமொன்றை பின்வரும் அட்டவணை அளிக்கிறது.

திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு

தொ. எண்.	திட்டங்கள் / செயல்முறைத் திட்டங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	அடையாளம் காணல், பதிவு செய்தல் வீதங்களை அறுதியிடல், சமுதாயச் சொத்துக்களுக்கானப் பயன்படுத் துவோர் கட்டணங்கள்	க, தி,ஆ	மே	பா
2.	விற்பனை, குத்தகை, மாற்றம் ஆகியவற்றுக்கான கருத்துரு	செ	ஆ,மே	ஆ,மே
3.	தவறாகப் பயன்படுத்துதல், ஆக்கிரமிப்பு சேதம் மற்றும் இழப்பிற்கு எதிரான பாதுகாப்பு	செ	ஆ,மே	ஆ,மே
4.	தொண்டு நிறுவனங்களின் பங்கு	செ	தி	தி

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான
நிறுவனத் தொடர்புகள்

தொ. எண்.	அரசு துறைகள் / நிறுவனங்கள் / மையங்கள்	ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சிகள்
1.	சிறிய அளவிலான நீர்ப்பாசனம், நீர் வழங்கல் ஆதாரங்கள் மீன்வளம், சிற்றூராட்சிக் சாலைகள், இடுகாடு மற்றும் சுடுகாடு நூலகங்கள் மற்றும் படிக்கும் அறைகள், பள்ளிக் கட்டிடங்கள் நல்வாழ்வு, குடும்ப நல மையங்கள், வளம், பொது உரிமை நிலங்கள் பொது அங்காடிகள் வடி கால்கள், பொதுக்கழிப்பிடங்கள், பொது மக்கள் இறங்கும் / தங்கும் இடங்கள், கட்டை வண்டி நிறுத்து மிடங்கள், கால்நடை கொட்டில் / பட்டிகள். இறைச்சிக் கொட்டில்கள், விளையாட்டுத் திடல்கள், பூங்காக் கள். விழா / கண்காட்சி மைதானம், பேருந்து நிலையம் / நிழற்குடை, நிறுத்துமிடம். காலி நிலங்கள், நிழல் தரும் மரங்கள் முதலியன.	நி, பே	ஆ,மே	பா
2.	ஊராட்சி ஒன்றியம் / ஊராட்சிச் சாலைகள்	நி, பே	நி,பே	ஆ


பரிந்துரைகளின்
செயலாக்கம்

இயல் VI

பரிந்துரைகளின் செயலாக்கம்

6.1. அரசியலமைப்புச் சட்ட திருத்தங்கள் மற்றும் மாநில அளவிலான சட்டங்கள் மூலம் நிறுவப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்பிகளை நடைமுறைபடுத்துவது உடனடித் தேவையாகும். நிறுவனமயமாக்கலின் ஒரு நிலையை தேர்தல் நடைமுறையானது முடித்துள்ளது. மக்களாட்சி முறையில் அமைந்த இந்த நிறுவனங்களை முழுமையடையச் செய்ய தகுந்த அதிகாரங்களை ஒப்படைப்பது இப்போது நிலுவையாக உள்ளது. இந்திய அரசமைப்புச்சட்டம் மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 29 இனங்களுக்கு வகை செய்துள்ளன. இவ்வினங்களுக்கு அதன் உண்மையான பொருளையும் விளக்கங்களையும் அளிப்பது மாநில அரசின் கடமையாகும்.

6.2. ஊரக உள்ளாட்சி மன்றங்களின் செய்கடமைகள் மற்றும் அதிகாரங்களின் தன்மைகளாவன. (1) கட்டாய கடமைகள் (2) விருப்புரிமைகள் (3) முகமை (4) ஆய்வு செய்தல் (5) ஒப்படைக்கப்பட்ட செய்கடமைகள், ஊராட்சிகள் செய்ய வேண்டிய கட்டாய கடமைகள் பற்றி தமிழ்நாடு ஊராட்சி சட்டப்பிரிவு 110 குறிப்பிடுகிறது. அதேபோன்று சட்டப்பிரிவு 111 விருப்புரிமை கடமைகள் பற்றியும், சட்டப்பிரிவு 119 (2) முகமைக் கடமைகள் பற்றியும் குறிப்பிடுகிறது. மேற்படி சட்டத்தின்படி ஊராட்சிகளுக்கு ஆய்வு செய்யும் செய்கடமைகள் இல்லை. ஆனால் சட்டப்பிரிவு 257ன் படி அவைகளுக்கு வழங்கப்படவிருக்கும் அதிகார ஒப்படைப்பு மூலம் ஆய்வு செய்யும் உரிமையினையும் பெறும். ஊராட்சி ஒன்றியங்கள் கட்டாய கடமைகளை சட்டப்பிரிவு 112ன் படியும், விருப்புரிமைக் கடமைகளை சட்டப்பிரிவு 115ன் படியும், முகமைக் கடமைகளை சட்டப்பிரிவு 113.114 மற்றும் 123 மூலம் பெறுகின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் ஆய்வு செய்யும் பணியினை சட்டப்பிரிவு 114(2) ன் படியும். அதிகார ஒப்படைப்பு பணியினை சட்டப்பிரிவு 257ன் படியும் பெறுகின்றன. மாவட்ட ஊராட்சிகள் கட்டாயக் கடமைகளை சட்டப்பிரிவு 163 மூலமும், விருப்பக் கடமைகளை சட்டப்பிரிவு 164ன் படியும், நிலைக்குழுக்கள் மூலம் ஆய்வு செய்யும் பணியினை சட்டப்பிரிவு 97ன் படியும் அதிகார ஒப்படைப்பு கடமைகளை சட்டப்பிரிவு 257ன் படியும் பெறுகின்றன.

6.3. இக்குழுவிற்கு அளிக்கப்பட்ட பணி வரைமுறையின் படி வெவ்வேறு அரசுத் துறைகளில் தற்போதுள்ள அதிகாரங்களை எந்த அளவிற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்க முடியும் என்பது குறித்து இக்குழு முழுக் கவனம் செலுத்தியது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்கனவே உள்ள பணிகள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவற்றை குறிப்பிடுவதைக் காட்டிலும் கிராமப் புற வளர்ச்சிக்கு வள ஆதாரங்களை எவ்வாறு அதிகபட்சம் பயன்படுத்தலாம் என்பது குறித்தும் இக்குழு நன்றாகவே உணர்ந்துள்ளது. உள்ளூர் முன்னுரிமைகளுக்கேற்றவாறு திட்டங்களை மாற்றி சீரமைக்க எண்ணியுள்ளோம். இதனால் வீணான செலவுகள் தவிர்க்கப்பட்டு, விரைவான செயலாக்கம், உள்ளாட்சி அமைப்புகளுக்கு பதிலளிக்கும் கடமை உருவாகி, தேவையற்ற ஊழலை களையவும் வழி கோலும். தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளின் விருப்பம். உள்ளூர் மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் உள்ளாட்சிகளின் வலுவான, திறமையான ஒளிவு மறைவற்ற நிர்வாகம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு திட்ட செயலாக்கம் சம்பந்தமாக அரசிற்கு இக்குழு சில பரிந்துரைகளை செய்துள்ளது.

ஊரக உள்ளாட்சி மன்றங்களின் நிருவாக அமைப்பு

6.4.1. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவைகளின் பணியமைப்பு முறையைப் பகுப்பாய்வு செய்யப்படவேண்டும். அப்போதுதான் இருக்கக்கூடிய தொழில்நுட்ப மற்றும் இதர பணியாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் மற்,றம் செய்கடமைகளை செயற்படுத்த போதுமான அளவில் உள்ளனவா என்பது உறுதிசெய்யப்படும்.

6.4.2. மாவட்ட நிலையில், மூன்று வேறுபாடான பணியமைப்புகள், ஊரக வளர்ச்சி வேலைகளை செயற்படுத்தப்பட உள்ளன. அண்மையில் மாவட்ட ஊராட்சி, நிறுவப்பட்டு பணியாளர்கள் சிலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து மாவட்ட ஊராட்சி பணிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் திட்ட அலுவலகம் என்பது இரண்டாவது பணியமைப்பாகும். இம்முகமையை மாவட்ட ஆட்சியர் தலைவராக இருந்து கொண்டு கட்டுப்படுத்துவதுடன், திட்ட அலுவலர் (1), உதவித்திட்ட அலுவலர்கள் (8), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (4) உதவியாளர்கள் (மதிப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி) (1), உதவியாளர்கள் (7), உதவிப்புள்ளியியல் புலனாய்வாளர் (2), இளநிலை உதவியாளர் (2), சுருக்கெழுத்தர் (3), தட்டச்சர் (2), ஓட்டுநர்கள் (5), அலுவலக உதவியாளர்கள் (7),

சாண எரிவாயு தொழில்நுட்பவியலர் (1) மற்றும் காவலாளி (1) ஆகியவர்கள் சேர்ந்த பணியமைப்பு உள்ளது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பணியமைப்பு மூலமாக, நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்கள் கவனிக்கப்படுகின்றன. மூன்றாம் அமைப்பாக மாவட்ட நிலையில் ஆட்சிய ரகம், ஊராட்சி தேர்தல், நிர்வாகம், ஆய்வு மற்றும் மேற்பார்வை ஆகியவற்றை கவனிக்கின்றன. மேலும், இரண்டு சிறப்புப் பணிகளை இப்பணியமைப்பு கட்டுப்படுத்துகின்றன. அதாவது மதிய உணவு திட்டங்கள் மற்றும் சிறு சேமிப்புகளாகும். ஆட்சியரகத்தில் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி) விரிவாக்க அலுவலர் (கணக்குகள்) (1), உதவியாளர்கள் (7), இளநிலை உதவியாளர்கள் (6), தட்டச்சர் (4), சுருக்கெழுத்தர் (1), ஓட்டுநர் (1), ஆவண எழுத்தர்கள் (3), அலுவலக உதவியாளர் (5) ஆகியவர்கள் சேர்ந்ததாகும். மதிய உணவு பிரிவிற்கு நேர்முக உதவியாளர், (மதிய உணவுத் திட்டம்) பொருப்பாளராகவும் கணக்கு அலுவலர் (1) உதவியாளர்கள் (2) இளநிலை உதவியாளர் (1), அலுவலர் உதவியாளர் (1) மற்றும் ஓட்டுநர் (1) ஆகியோரும் உள்ளனர். சிறுசேமிப்புப் பிரிவிற்கு நேர்முக உதவியாளர் (சிறு சேமிப்பு மற்றும் பரிசுச்சீட்டு) உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியவர்கள் ஒவ்வொரு பதவியும் உள்ளது.

6.4.3. மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் நிலைகளுக்கிடையே கோட்ட வளர்ச்சி அலுவலகம் ஒன்றுள்ளது. அவை வட்டார வளர்ச்சி அலுவலகங்களின் பல்வேறு வேலைகளை ஒருங்கிணைக்கவும், கட்டுப்படுத்தவும் செய்கிறது. ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகமும், வட்டார வளர்ச்சி அலுவலர் (1), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கணக்குகள்) (1), உதவியாளர் (5). இளநிலை உதவியாளர் (4) தட்டச்சர் (1) சுருக்கெழுத்தர் (1). ஓட்டுநர் (1) மற்றும் அலுவலக உதவியாளர் (2), அடங்கியதாகும்.

6.4.4. ஊராட்சி ஒன்றிய நிலையில் பணியமைப்பு என்பது, வட்டார வளர்ச்சி அலுவலர் (1) , கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் (1), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (1), விரிவாக்க அலுவலர் (9) ஆகியவர்களும், திட்ட செயற்கடமைப்பகுதிகள் சிறுசேமிப்பு மற்றும் பரிசு சீட்டு, மதிய உணவுத் திட்டம், சமூக நலம் (RLEGP) கால்நடை, கூட்டுறவு மற்றும் ஆதிதிராவிடர் நலம் ஆகியவைகளாகும். எனவே, விரிவாக்க அலுவலர் (9), ஊரக நல அலுவலர் (10), DWCRA (1) பொருத்துபவர் (1), ஊராட்சிப் பொறியாளர் (1), உதவி ஒன்றியப் பொறியாளர் (1), மேற்பார்வையாளர்கள் (2), சாலை ஆய்வாளர்கள் (3), உதவியாளர்கள் (2), கணக்காளர் (3), இளநிலை உதவியாளர் (5), ஓட்டுநர் (1) ஆவண எழுத்தர் (1), அலுவலக உதவியாளர் (5), காவலாளி (1), மற்றும் ஓட்டுநர் (1) ஆகியவர்களாகும்.

6.4.5. மாவட்டம் மற்றும் அதற்கு கீழ் உள் ஊரக வளர்ச்சிப் பணிகளை செய்வதற்கான நிர்வாக அமைப்பை நோக்குமிடத்து ஊராட்சி ஒன்றிய நிலையில் போதுமான தொழில் நுட்ப மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் போதுமான அளவில் உள்ளனர். ஆனால் ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் போதிய தொழில் நுட்பம் மற்றும் இதர பணியாளர்கள் இல்லை. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையை மாவட்ட ஊராட்சியுடன் இணைத்து முகமையிலுள்ள அனைத்துப் பணியாளர்களையும் மாவட்ட ஊராட்சிக்கு மாற்றுதல் செய்ய அரசிற்கு இக்குழு பரிந்துரை செய்கிறது. பல மாநிலங்களில் ஊராட்சிகளில் போதுமான எண்ணிக்கையில் பணியாளர்கள் உள்ளனர். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை ஊராட்சியில் ஒரே ஒரு உதவியாளர் மட்டும் இருக்கிறார். இந்நிலையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளைத் திருத்தி அமைத்தல் மிகவும் அவசியமாகிறது. திட்டப் பணியாளர்களை அந்தந்த ஊரக உள்ளாட்சிகளுக்கு மாற்றம் செய்வதும் அவசியமாகும். அவ்வாறு பணியாளர்களை மாற்றம் செய்வது என்பது சில சிக்கல்களை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, மூன்றடுக்கு உள்ளாட்சிகளின் சிறப்பான நிர்வாக முன்னேற்றங்களுக்கான ஆலோசனை வழங்க தனியாக நிபுணர் குழு ஒன்றினை அமைக்க இக்குழு பரிந்துரை செய்கிறது. அந்நிபுணர் குழுவில் அண்ணா மேலாண்மை நிறுவனம் (AIM) சென்னை வளர்ச்சிக்கல்வி நிறுவனம் (MIDS) சென்னை பொருளாதாரப் பள்ளி (MSE) மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் (SIRD) மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம் பெறுவர்.

6.4.6. மாநில நிதிக்குழு நிதி அதிகார ஒப்படைப்பிற்கான பரிந்துரையை கவனத்தில் கொண்டு எம்மாதிரியான நிர்வாக சீரமைப்பை கொண்டு வர வேண்டும் என்பது குறித்தும் பரிந்துரை செய்திருக்கும். அத்தகைய ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். கிராம வளர்ச்சிக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளை பயனுள்ள நிறுவனங்களாக மாற்றுவதற்கு அரசின் தலையீடு அவசியமாகிறது.

பணியாளர் பிரச்சனைகள்

6.5.1. பல்வேறு துறைகளில் குறிப்பாக பள்ளிக் கல்வித் துறைப் பிரதிநிகள் எங்களிடம் கூறிய வலுவான கருத்துக்களின் அடிப்படையில் பள்ளிக்கூடப் பணியாளர்களை ஊராட்சிகளின் நேரடி கட்டுபாட்டிற்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்ற எங்களது அணுகுமுறையை மாற்றிக் கொண்டோம். ஊராட்சி பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்களை உள்ளூர் ஆசிரியர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய ஊராட்சிகளுக்கு வாய்ப்பு அளிக்கலாம் என்ற எங்களது அணுகுமுறையைக் கல்வித்துறையின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து மாற்றிக் கொண்டோம். ஊராட்சிபள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்களை உள்ளூர் ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய ஊராட்சிகளுக்கு வாய்ப்பு அளிக்கலாம் என்ற எங்களது அணுகுமுறையைக் கல்வித்துறையின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து மாற்றிக்கொண்டோம். போதுமான ஆசிரியர்கள் இல்லையென்றால் ஆரம்ப கல்வியை சரியான முறையில் போதிக்க இயலாது. போதிய ஆசிரியர்களை நிர்வாகத்தினால் நியமனம் செய்ய முடியவில்லையென்றால் கிராம மக்களும், பெற்றோர் ஆசிரிய கழகங்களும் இணைந்து நிதி ஆதாரங்களை திரட்டி தேவைப்படும் ஆசிரியர்களை நியமனம் செய்ய தயங்கக் கூடாது. பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை, கிராம பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்களை நீண்ட நாட்களாக காலியாக வைத்திருப்பதை தவிர்க்க வேண்டும். கூடுதலாக ஆசிரியர்களை நியமனம் செய்ய உள்ளூரிலேயே ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இவ்வாறு ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது இதர சிக்கல்கள் எழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

6.5.2. உள்ளாட்சி அமைப்புகளே தங்களது சொந்த அலுவலர்களையும் பணியாளர்களையும் வைத்துக் கொள்வதின் அவசியத்தை இக்குழு உணர்ந்துள்ளது. நியமனம், மாற்றம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரங்கள் அவைகளிடம் இருக்க வேண்டும். தமிழ்நாடு ஊராட்சிகளி சட்டப்பிரிவு 108 மற்றும் 109ன் படி பள்ளி ஆசிரியர்களும், சுகாதாரப் பணியாளர்களும் அரசுப் பணியாளர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்கு பணிப் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் அரசு ஊழியர்களாக தொடரும் பட்சத்தில் பள்ளிகளும், ஆரம்ப சுகாதார நிலையங்களும் திறம்பட செயல்படுவதை உறுதி செய்வதற்காக அவர்களை ஊராட்சிகளுக்கு அயல் பணியில் நியமனம் செய்யலாம் என்ற கருத்தும் உள்ளது. சுகாதாரம் மற்றும் கல்வி வசதி அளிப்பது ஊராட்சி முக்கிய கடமையாகும். எனினும், இத்தகையப் பணியாளர்கள் மாற்றத்தில் பெருவாரியான ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் ஈடுபடுவதால் அரசிற்கு ஏராளமான பிரச்சனைகளை உருவாக்கும் என மாநில திட்டக்குழு உணர்கிறது. எனவே, இத்தகைய பணிமாற்றங்கள் அல்லது வேறு ஈடுபாடுகள் மற்றும் அதனால் ஏற்படும் நிர்வாக சிக்கல்களை கவனமாக பரிசீலிக்கப்பட வேண்டும். அவ்வாறு அரசு பரிசீலிக்கப்படும் போது அரசு கீழ்க்காணும் மூன்று நிலைகளை கருத்தில் கொள்ளவோம்.

1) கல்வி மற்றும் சுகாதாரப் பணியாளர்களை பணிப் பாதுகாப்புடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுதல் செய்வது.

2) அல்லது அவர்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அயலிடை பணியில் அனுப்புவது.

3) உள்ளாட்சி அமைப்புகள் தாங்களாகவே புதிய பதவிகளுக்கும், காலியிடங்களுக்கும் பணியாளர்களை நியமிக்க அனுமதித்தல். இது படிப்படியாக மக்களாட்சி பன்முகப்படுத்துதலை நிறைவு செய்ய ஏதுவாகும்.

தற்போதுள்ள பணியாளர்கள் அரசு ஊழியர்களாகவே தொடரலாம். வருங்காலத்தில் உள்ளாட்சி அமைப்புகள் தங்களுக்கானப் பணியாளர்களை நியமிக்கலாம். புதிய ஆரம்பப் பள்ளிகள், சுகாதார நிலையங்கள், மற்றும் துணை நிலையங்கள் நிறுவவும் பணியாளர்களை நியமனம் செய்யவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கலாம். காலப்போக்கில் மேற்படி நிறுவனங்களை நிர்வகிக்க அவர்களது சொந்தப் பணியாளர்களே இருப்பார்கள்.

தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் ஆலோசகர்களை ஈடுபடுத்தல்

6.5.3. தொழில் நுட்ப வல்லுநர்களை கிராமம் முதல் மாவட்டம் வரையிலான நிர்வாகத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளின் விரைவான முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கிறோம். இது முன் என்றுமில்லாத வளர்ச்சிக்கான சூழ்நிலையை உருவாக்கும். தற்போது தொழில் நுட்ப பணியாளர்களும், துறைசார்ந்த பணியாளர்களும் போதுமான அளவில் இல்லை. துறை சார்ந்த பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் எண்ணம் விரும்பத்தக்கதல்ல. அதிகப்பட்சமான துறை சார்ந்த பணியாளர்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுநியமனம் செய்வது ஒரு மாற்று ஏற்படாகும். கேரளாவில் ஓய்வு பெற்ற அலுவலர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்ட

தன்னார்வ தொழில்நுட்பக் குழு (Voluntary Technical Corps) அமைக்கப்பட்டு இக்குழு உள்ளாட்சி அமைப்புகளுக்கு திட்டங்கள் தீட்டுதல், ஆய்வு செய்தல், தொழில் நுட்ப பணிகளில் ஆலோசனை வழங்கல், செயற்படுத்துதல் போன்ற பணிகளில் உதவி செய்கிறது. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் இவ்வாறாக கவனமாக தீட்டப்பட்ட கொள்கைகளை பின்பற்றலாம்.

மனிதவள மேம்பாடு (பயிற்சி, மனமாற்றம்)

6.5.4. அடிமட்ட மக்களாட்சி நிறுவனங்களில் அரசியல்வாதிகளும் மற்றும் அரசுப் பணியாளர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றுவது தவிர வேறு வழியில்லை. இவ்வாறான நிர்வாக மற்றும் மனப்பான்மை மாறுதல்கள் ஏற்பட சிறிது காலம் பிடிக்கும். சுதந்திரமான இணையான, நல்லிணக்கமான பயிற்சியானது மனப்பான்மை மாறுதலுக்கும், மாநிலத்தில் உள்ளாட்சி நிறுவனங்கள் ஆழமாக வேறூன்றுவதற்கும் விரைவாக வழிவகுக்கும். அதிகாரப் பரவலாக்கத்திற்கு பயிற்சி, மனம மாற்றம் தேவைப்படுகின்றன.

6.5.5. உள்ளாட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிகள் மற்றும் அலுவலர்களின் புதிய பங்கு பற்றி விழிப்புணர்ச்சி ஏற்பட அவர்களுக்கு தேவையான பயிற்சியளிக்கப்பட வேண்டும். மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் அரசியல் தலைவர்களுக்கு தயக்கம் காட்டும் அதிகாரிகளிடமிருந்தும், தொழில்நுட்ப வல்லுநர்களிலிருந்தும் அதிகாரங்களை மாற்றித் தருவது என்பது எளிதான காரியம் அல்ல. மனப்பான்மை மாறுதல் தற்போதைய தேவையாகும். அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் புத்துணர்ச்சியூட்ட பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

6.5.6. தலைவர்கள், தலைமை நபர்கள், வட்ட உறுப்பினர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு உள்ளாட்சி அமைப்பின் பணிகள், அவர்களது உரிமைகள், கடமைகள், பொறுப்புகள் குறித்து பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

6.5.7. ஊராட்சிப் பணியாளர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் (நிர்வாக மற்றும் தொழில் நுட்பம்) குறித்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். உள்ளாட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்களின் தங்களின் பங்கினை முழுவதும் அறிந்து கொள்வதற்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்

திட்டங்கள் ஒருங்கிணைப்பு

6.6 தற்போதைய வளர்ச்சித் திட்டங்கள் ஒவ்வொரு துறை சார்ந்த பிரிவுகளாக அமைந்துள்ளது. இது அதிகப்பட்ச பயன் பெறுவது என்பது பொருளாதார கொள்கைக்கு முரணானது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சமுகத் துறை மேம்பாட்டுத் திட்டங்களில் இச்சூழ்நிலை குறிப்பாக காணப்பட்டது. நாங்கள் ஏற்கனவே தெரிவித்தபடி பல்வேறு துறைத் திட்டங்களுக்கான நிதி, மற்றும் செயல்படுத்துநர்கள் ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கப்படவேண்டும் என்று எதிர் நோக்குகிறோம். ஒட்டு மொத்த சமுதாய நலனை கருத்தில் கொண்டு திட்டங்கள் செயல்படுத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். அதற்கு இடையூறாக இருக்கின்ற அனைத்து தடைகளை அகற்ற வேண்டும். திட்ட ஒருங்கிணைப்புமூலம் அதிக பட்ச பலனை பெறுவதற்கு ஏதுவாக தேவையான வழிகாட்டு நெறிமுறைகளை மாவட்ட திட்டமிடல் குழுவிற்கு வழங்க வேண்டும.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான திட்ட ஆய்வு அதிகாரங்கள்

6.7 அரசு மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் மூலம் செயற்படுத்தப்படும் திட்டப் பணிகளை ஆய்வு செய்வதற்குரிய அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு தமிழ்நாடு ஊராட்சி சட்டப்பிரிவு 114 (2) வழிவகை செய்கிறது. மாவட்ட ஊராட்சிகளும் திட்டப் பணிகளை ஆய்வு செய்வதற்கான அதிகாரங்களை பெறும் வகையில் அரசு இச்சட்டப் பிரிவினை விரிவு படுத்த வேண்டும்.

கணக்கு மற்றும் தணிக்கை

6.8.1. உள்ளாட்சி அமைப்புகளுக்கு திறமையான கணக்கு மற்றும் தணிக்கை ஏற்பாடுகள் தேவைப்படுகிறது. ஊராட்சி , ஊராட்சி ஒன்றியம், மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு நடைமுறை விபரங்களை தெரிவிக்க கணக்கு மற்றும் தணிக்கை வழிகாட்டி நூல்கள் அவசியமாகும். இத்தணிக்கை நிதி மற்றும் பட்டியல் தணிக்கை மட்டுமில்லாமல் தொழில்

நுட்ப மற்றும் பணித் தணிக்கையாகவும் அமைய வேண்டும். உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு பொறுப்புகளை தணிக்கை செய்யும் அளவிற்கு தற்போதைய உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை அமையவில்லை. உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்விருக்கின்ற தொழில் நுட்ப பணிகளைத் தணிக்கை செய்வதற்கேற்ப தொழில் நுட்ப தணிக்கை குழு ஒன்றை நியமிக்க அவசியமாகிறது.

6.8.2. உள்ளாட்சி நிதி கணக்குகள் துறை 1980–ஆம் ஆண்டு துவக்கப்பட்டு இயக்குநர் துறையின் தலைவராகவும், 1329 பணியாளர்களுடன் செயற்பட்டு வருகின்றது. அங்கு 358 உதவி ஆய்வாளர்கள், 327 துணை ஆய்வாளர்கள், 78 உதவி இயக்குநர்கள் மற்றும் 16 இதர முதுநிலை அலுவலர்கள் இத்துறையில் உள்ளனர். இவ்வலுவலகர்கள் நகர மாநகராட்சிகள். நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், பல்கலைக்கழகங்கள், வட்டார நூலகக் குழுக்கள், அங்காடிகள் குழு ஆகியவற்றின் கணக்குகளின் தணிக்கையை ஏற்றுக் கொள்கிறார்கள். இத்துறையின் வேலையைப் பாகுப்படுத்தினால் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி கணக்குகள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியங்களின் கணக்கு அலுவலர்கள் தணிக்கைச் செய்யப்படுகின்றதென வெளிப்படுத்தப்படுகிறது. மாவட்ட ஊராட்சி என்பது ஒரு புதிய நிறுவனம் என்பதால், நடைமுறையில் எவ்வித தணிக்கை ஏற்பாடும் நடைமுறையில் இல்லை. இருந்தபோதிலும், 1996–97 ஆம் ஆண்டிலிருந்து உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரகம் மாவட்ட ஊராட்சி கணக்குகளை தணிக்கைக்கு எடுத்துக் கொள்ளும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்கள்/ பொறுப்புகள்/திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் ஒப்படைக்கப்படுவதால் 3 கட்டங்களிலுள்ள நடவடிக்கைகளின் எண்ணிக்கை மிகப் பெரியளவில் அதிகரித்துள்ளது. ஊராட்சி ஒன்றிய கணக்குகளில் மட்டும் 1.4.96 அன்று 97,440 எண்ணிக்கை தணிக்கை குறிப்புகள் உள்ளதென கண்டறியப்பட்டது.

6.8.3. உள்ளாட்சி நிதி இயக்குனரகம் மற்றும் கள பணியமைப்புகள் முற்றிலும்மாக வலுப்படுத்தப்பட வேண்டும். குழுவானது ஆலோசனை வழங்குவது என்னவென்றால் (1) பல்கலைக் கழகங்கள் மற்றும் விற்பனை குழுக்கள் தணிக்கை செய்கடமைகளை பட்டயக் கணக்கர்களிடம் ஒப்படைக்க வேண்டும். உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் கட்டுப்பாட்டிலிருந்து எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்வதினால் உள்ளாட்சி நிதி கணக்குகள் துறையின் பணியாளருக்கு வேலைப்பளு குறையும். உள்ளாட்சி அமைப்புகளின் கூடுதலான பணிகளை தணிக்கை செய்ய இது ஏதுவாகும் (2) பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்ததுறை மூலம் கண்டறியப்பட்ட அதிகப்படியான பணியாளர்களை உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பலாம். (3) உள்ளாட்சி அமைப்புகள் மேலும் திறம்பட பணிபுரிவதற்கு ஏதுவாக, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தொடர் உடன் தணிக்கை முறையினை ஏற்படுத்துவது அவசியமாகிறது.

6.9. ஊரக உள்ளாட்சி மன்றங்களில் வரப்போகும் ஆண்டுகளில் வளர்ச்சிப் பணிகளின் முக்கியத்துவம் அதிகரிக்கும் ஒவ்வொரு வேலையிலும் மதிப்பிடுத்ல், நிருவாக மற்றும் தொழில்நுட்ப ஒப்பளிப்பு, அளவுகோல்களை சரிபார்த்தல் மற்றும் பட்டியல்களை தீர்வு செய்தல் ஆகிய பணிகள் உள்ளடங்கியுள்ளன. ஊராட்சியில் ஒரேயொரு உதவியாளர் இருப்பாதால் அவரால் இது போன்ற மதிப்பிடுதல் மற்றும் ஒபபளிப்பிடுதல் ஆகிய பணிகளை செய்ய இயலாது. திட்டங்களுக்கும், பணிகளுக்கும் நிருவாக ஒப்பளிப்புச் செய்வதற்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு போதுமான அதிகாரங்கள் உள்ளன. ஆனால் தொழில்நுட்ப ஒப்பளிப்பிற்கு அவர்கள் தொடர்புள்ள மற்று துறையை நம்ப வேண்டியுள்ளது. இதன் காரணமாக திட்டங்கள் செயற்படுத்துவது தாமதமாகின்றன. எனவே ஊரக உள்ளாட்சி மன்ற மூன்று நிலைகளில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க பட வேண்டும் மற்றும் நிர்வாகம், தொழில்நுட்பம் மற்றும் நிதி ஆதாரங்கள் அளித்தல் ஆகியவை தேவைப்படுகிறது. கூடுதலாக நிதி அதிகாரங்களை வழங்கும் அதே வேளையில் அந்நிதியை நல்லவிதமாக பயன்படுத்தப் படுவதையும் அரசு உறுதி செய்யவேண்டும். திட்டங்கள் மதிப்பீடுகள் தயார் செய்தல், பலவித நிர்வாக, தொழில்நுட்ப மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கல், ஒப்பந்த புள்ளிகள் கோருதல், பணிகளை எடுத்து செய்தல் ஆகியவற்றில் எந்தவித ஒளிவு மறைவும் இன்றி வெளிப்படையாக செய்தல் வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெறும் நிகழ்வுகளை அறியவும், அங்குள்ள கோப்புகளை பார்வையிடுவதற்கும் அப்பகுதியிலுள்ள வாக்காளர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். எளிதான நடைமுறைகள் பற்றிய விவரம் பணி நடைமுறை நூல்களில் குறிப்பிடப்பட வேண்டும். கருத்து வேறுபாடுகளும், தேவையற்ற பயத்தையும் போக்க பணிக் குழுக்களுக்கு தெளிவான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

செயலாக்கமும் பொறுப்பும்

6.10.1 உள்ளாட்சிகளுக்கான நிர்வாக அமைப்புமுறை அவ் உள்ளாட்சிகளின் மேலாண்மை பொறுப்புகள் மற்றும் பங்கு பற்றி தெளிவாக குறிப்பிட வேண்டும. குறிப்பிட்ட பணிகள் மற்றும் சேவைகள் செய்வதற்கு யார் பொறுப்பானவர்கள் என்பது பற்றியும் நிதி மற்றும் நிர்வாக அமைப்புகள் தெளிவாக குறிப்பிட வேண்டும். நிதி மற்றும் பொருள் இலக்கு மற்றும் சாதனை விபரங்கள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். நிர்வாக மற்றும் நிதிநிலை பற்றி பதில் சொல்ல வேண்டிய ஒவ்வொரு அலுவலரும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு பணிகள் எந்த அளவில் முடிக்க வேண்டும் என்பது குறித்த விபரங்கள் அடங்க வேண்டும். நிர்வாக மற்றும் தொழில் நுட்ப அலுவலர்கள் போன்று தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் பதில் சொல்ல கடமைப்பட்டவர்களாவர். ஆனால் அவர்களது சாதனை ஒவ்வொரு தேர்தலிலும் மக்களால் தீர்மானிக்கப்படும். எனவே, அவரது அரசியல் பொறுப்புள்ளமை தேர்தலுக்கு மட்டுமே உள்ளன. ஆனால் நிர்வாகம் மற்றும் நிதி பொறுப்புள்ளமைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தெளிவாக தெரிவிக்க வேண்டும்.

6.10.2. துறைத் தலைவர்கள், மாவட்ட அலுவலர்கள், மற்றும் மாவட்ட நிலையின் கீழுள்ள அலுவலர்கள் ஆகியோருடைய கடமை, செய்கடமைகள், ஊராட்சிகளுக்குள்ள பொறுப்புகள் ஆகியவை பற்றி தெளிவான வழிகாட்டு நெறிமுறைகள் இருத்தல் வேண்டும். அதனால் திட்டப்பணிகள் சரிவர செயற்படுத்த ஏதுவாகும். சில துறை அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்பு மற்றும் துறைகளுக்கிடையே இணைப்புப் பாலமாக திகழ வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளுக்கான கடமைகளை மாவட்ட அளவில் மற்றும் அதற்கு கீழுள்ள அலுவலர்கள் சரிவர செய்கிறார்களா என்பதனை கண்காணிக்க வேண்டும். சில தொழில் நுட்ப துறைகள் உள்ளாட்சிக்கு தேவைப்படும் தொழில் நுட்ப அறிவையும், ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

6.10.3. மாறுபட்ட சூழ்நிலையில் அரசு, அரசு அலுவலர்களின் கடமைகள், உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்புகள், கடமைகள் பற்றி பத்திரிக்கைகள் மற்றும் தொலைக்காட்சிகளின் மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்திட வேண்டும். மக்களாட்சி பரவலாக்கல் என்ற தத்துவத்திற்கு முரண்படான பல சட்டங்கள், சட்ட முன்வடிவுகள் உள்ளன. அரசியலமைப்புச் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (1994) மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய அதிகாரங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிடையே சச்சரவு எழுமாயின், பொருத்தமான திருத்தங்களை கொண்டு வருவதன் மூலம் அம்முரண்பாடுகளை நீக்க வேண்டும்.

உள்ளாட்சி அமைப்பின் சொத்துக்கள், அவற்றிற்கு வழங்கிய சொத்துக்கள், பிற்காலத்தில் வரும் சொத்துகள் ஆகியவற்றைப் பேணுதல்

6.11 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வேலைக்கு உறுதியளிக்கும் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், வறட்சி நிவாரண திட்டங்கள் மற்றும் இதர சிறப்புத் திட்டங்கள், மூலம் சமூகச் சொத்துக்கள் ஆகியவை தோற்றுவிக்கப்பட்டு உள்ளாட்சி நிறுவனங்களிடம் பராமரிப்புகாக வழங்கப்பட வேண்டும். அவைகளின் சாலை, குடிநீர் வழங்குதல், பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றை சிறப்பாக பராமரித்தல் குறித்து இவ்வறிக்கைகள் தனியே குறிப்பிடப்பட்டுள்ளது. இதர இனங்கள் அதாவது சமூக நல மையங்கள், மதிய சத்துணவு மையங்கள், கசிவு நீர் குட்டைகள் மற்றும் இதர நீர் பிடிப்பு அமைப்புகள், மகப்பேறு மையங்கள், மருந்தக கட்டங்கள், சமுதாய கிணறுகள் முதலியனவாகும். இச்சொத்துக்கள் பல மேம்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இதரத் துறைகளான கல்வி, சமூக நலம் முதலியன இதுவரை பராமரிக்கப்பட்டு வந்த மதிய உணவு மையங்கள் இனி ஊராட்சி ஒன்றிங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும். வறுமை ஒழிப்புத் திட்ட செயல்பாட்டுடன் சொத்துக்களை உருவாக்கலையும் சேர்த்து அவற்றைப் பராமரிக்கவும் ஊராட்சி மன்றம் தனது சொந்த நிதியிலிருந்து செலவிட பொறுப்பேற்க வேண்டும். பராமரிப்புக்காக ஆண்டு ஒதுக்கீடுத் தவிர சிறப்புத் திட்டங்களின் கீழ் தனியாக எதுவும் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. ஊராட்சி ஒன்றிங்கள் ஏற்கனவே உள்ள அடிப்படை வசதிகள் செய்ய செலவிட முடியாமல் உள்ளதால். அவ்வொன்றியங்கள் சொந்த நிதி ஆதாரங்கள் மூலம் கூடுதலான பொறுப்புகளை ஏற்க முடியாது. இச்சொத்துக்களை பராமரிப்பதற்கான பொறுப்பு தற்பொழுது ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சமுதாய மக்கள், சமுக சொத்து என பின்னிப்பிணைந்த நிலையில் ஊராட்சிகள் உள்ளன. எனவே இச்சொத்துக்களை அவர்கள் பராமரிப்புக்கு போதுமான நிதியளிக்க வேண்டும். அரசானது ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் எச்சொத்துக்களைப் பேணுதல் வேண்டுமென்று வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட வேண்டும். நிதி ஒதுக்கீடு பொறுப்புகளை ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி

ஒன்றியங்களுக்கு மாற்றப்படும் பொழுது சொத்துக்கள் பராமரிப்பதற்கும் வழிவகைச் செய்ய வேண்டும். தோற்றுவிக்கப்பட்ட மொத்த சொத்து மதிப்பீட்டில் நிர்ணயிக்கப்பட்ட விழுக்காட்டில் பேணுதல் மானியம் ஊராட்சிகளுக்கு ஈடான அடிப்படையில் கிடைக்க வேண்டுமென்பதுடன் அச்சொத்துக்களை சரியாகவும் முறையாகவும் பராமரிக்க வேண்டும்.

தகவல் முறை

6.12. அடிப்படை விவரம் அடிப்படை தரமான, முறையான மற்றும் நன்கு வடிவமைப்பில் சரியான விவர முறைத் தோற்றுவிக்கப் தேவைப்படுகிறது. விவரமும் அடிப்படை விபரமும் செல்வதும் திட்டங்களைச் செயலாக்கவது, அடிப்படை விவரமும் அடிப்படைவிவரமும் செல்வதும், திட்டங்களைச் செயலாக்குவது, அடிப்படை பணி வசதிகள் முதலியன ஊராட்சிகளிடமிருந்து ஊராட்சி ஒன்றியத்திற்கும் மாவட்ட ஊராட்சிகளுக்கும் செல்வது இன்றியமையாததாகும். மாவட்ட தகவல் மையம் (DISMIC) இதில் முக்கிய பங்கு வகிக்கும் எனவே, இக்குழுவானது ஊரக செய்தி முறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கணிப்பொறி மென் பொருள் தயாரிப்பதை மேற்கொள்ள வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. தேசீய தகவல் மையம் தயாரித்த மென்பொருள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மேற்கொண்டு ஊராட்சி நிலையில் திட்ட அடிப்படை விவரத்தை காலமுறையாக சேகரிக்கப் பயன்படுத்த வேண்டும். ஊரக வளர்ச்சி இயக்குநரகம் நிலையான அடிப்படை குழு வைத்துக் கொண்டு ஊரக தகவல் முறையை செயல்முறையாக்கி, தேவையான நிருவாக மற்றும் தொழில் நுட்ப வழிகாட்டலை அளிப்பதுடன் ஊரக தகவல் முறை செயல்முறைத் திட்டத்தை கண்காணித்தும் வரவேண்டும். ஊராட்சியிலுள்ள அலுவலர்கள் புள்ளி விபரங்களை சேகரித்து ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்பும் பணியில் ஈடுபடுகின்றனர். இந்நிலை மாற்றப்பட வேண்டும். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், விண்ணப்பங்கள், தகவல் அனுப்பும் முறை ஆகியவற்றை எளிதாக்க மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் (SIRD) கேட்டுக் கொள்ளப்பட வேண்டும் என்று இக்குழு அரசிற்கு பரிந்துரை செய்கிறது. கணிப்பொறியைப் பயன்படுத்தி எல்லோரும் உபயோகப்படுத்தும் படியான எளிதான ஒரே மாதிரியான பதிவேடுகள், விண்ணப்ப படிவங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் குழுக்கள்

6.13.1. சட்டத்தின் பிரிவு 94–ல் ஊராட்சிகள் (அனைத்தும் 3 நிலைகளில்) ஊராட்சிகளின் ஆய்வாளர் ஒப்புதலுடன் குழுக்கள் அமைக்கலாம். இப்பிரிவை மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி ஆகியவை தொடர்புள்ள மன்றங்களின் ஏற்புக்கேற்ப குழு அமைக்க தகுந்த திருத்தம் கொண்டுவர வேண்டும். இக்குழுக்கள் செய்கடமைகள் மற்றும் பொறுப்புகளை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் உறுதி செய்ய வேண்டும். பிரிவு 95–இன் படி ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்கு இணைக் குழுக்கள் அமைத்து. அதுபோன்ற அமைப்பானது ஊராட்சி ஆய்வாளரின் ஏற்புக்கேற்ப கருத்து வேறுபாடுகள் தகராறுகள் தீர்க்க நிர்ணயம் செய்யும் ஊராட்சிகளுக்கென தனிக்குழுக்கள் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. ஊராட்சி ஒன்றியம் கீழ்க்கண்ட குழுக்களை அமைக்க சட்டம் வழிவகுத்துள்ளது. அதாவது நியமனங்கள் குழு (96(1). வேளாண் உற்பத்திக் குழு (96(1)(ஆ) (1) கல்விக்குழு (96(1)(இ) மற்றும் பொதுநோக்கு குழு (96(1)(இ) மேலும் பிரிவு 96(1) மாநில அரசானது தேவைப்படும் இதர குழுக்களை அமைக்க அதிகாரமளித்துள்ளது. சட்டப் பிரிவு (97 (1) (அ)–இல் எதிர்நேக்குவது என்னவென்றால் மாவட்ட ஊராட்சியானது (1) உணவு மற்றும் வேளாண்மை (2) தொழில் மற்றும் தொழிலாளர் (3) பொதுப்பணிகள் (4) கல்வி மற்றும் நல்வாழ்வு (5) நல நடவடிக்கைகள் ஆகிய நிலைக் குழுக்கள் அமைக்கலாம். பிரிவு 97 (1) (ஆ)–இல் மாவட்ட ஊராட்சி கூடுதல் நிலைக் குழுவானது தேவைப்படும் என்று நினைத்தால் அதை அமைக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஆய்வாளர் களுக்கென்று கொடுக்கப்பட்டுள்ள பணிகள் தொடர்பான சட்டப்பிரிவுகள் திருத்தப்பட்டு அந்த பொறுப்பபுகளை உள்ளாட்சி அமைப்புகள் பொறுப்பேற்று செயல் படுத்துமாறு வழிவகை செய்ய வேண்டும்.

6.13.2. (அ) வரி, நிதி, கணக்குகள் மற்றும் திட்டமிடுதல் (ஆ) கல்வி மற்றும் நல்வாழ்வு (இ) நல நடவடிக்கைகள் மற்றும் பொது விநியோகத் திட்டம் (ஈ) பணிக்குழு ஆகிய நிலைக் குழுக்களை ஊராட்சிகள் அமைக்கலாம் என்று இக்குழு ஆலோசனை நல்குகிறது.

6.13.3. சட்டப்பிரிவி 96–இன் கீழ் ஏற்கனவே உள்ள நான்கு நிர்ணயிக்கப்பட்ட குழுக்களுடன் கூடுதலாக பின்வரும் குழுக்கள், ஊராட்சி ஒன்றியம் சரியாக செயல்பட அமைக்கலாம் என இக்குழு பரிந்துரை செய்கிறது. (1) சாலைப் பணிகள், வீட்டு வசதி, குடிநீர் வழங்குதல் மற்றும் பொதுப்பணி ஆகிய துறைகளை கவனிக்க பணிக்குழு. (2) நிதி ஆதாரங்களை அதிகரித்தல், மானியங்கள் விடுவித்தலும் பயன்படுத்தலும், கணக்குகள் மற்றும் தணிக்கைப் பராமரித்தல், ஊராட்சி ஒன்றிய நிலையில் திட்டமிடுதலைத் தயாரித்தல் போன்ற துறைகளின் நடவடிக்கையை மேற்கொள்ள நிதி, வரி மற்றும் திட்டமிடுதல் குழு (3) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள், பழங்குடியினர்கள், வறுமை ஒழிப்பு, ஊரக வளர்ச்சி, பொது விநியோகத்திட்டம். நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைகளில் நடவடிக்கையை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை கவனிக்க மக்கள் நல்வாழ்வுக் குழு

6.13.4. (1) நிதி மற்றும் திட்டமிடுதல் (2) சமூக நலம், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் நலம் (3) குறைந்தபட்ச அடிப்படை பணிகள் ஆகிய நிலைக் குழுக்கள் மாவட்ட ஊராட்சிகளில் அமைக்க இக்குழு பரிந்துரை செய்கிறது.

6.13.5. இக்குழுக்களை அமைக்கும்போது திட்டப் பணிகள் தயாரித்தல், செயலாக்கல் போன்ற பணிகளை அக்குழுக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அரசு நிறுவனங்கள், தலைமை அலுவலகங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவை எடுத்த முடிவுகளை ஆய்வு செய்வதற்கும் தொடர் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் இக்குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

நிலைக்குழுவிற்கு அதிகாரமளித்தல்

6.14 மாநில அரசானது உள்ளாட்சிகளுக்கு அதிகாரங்கள் ஒப்படைப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதாலும், இக்குழுவின் முதல் அறிக்கையின் மீது ஏற்கெனவே விரைந்து முடிவுகள் எடுக்கப்பட்டமையாலும் இரண்டாம் மற்றும் இறுதி அறிக்கையின் மீதும் அரசு இறுதியான முடிவுகளை எடுக்கும் என இக்குழு நம்பிக்கை கொண்டுள்ளது. எனினும் அரசு பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டாலும் அதன் மீதான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் போது செயலாக்கத்தில் சில பிரச்சினைகளும் சந்தேகங்களும் எழலாம் எனவே, பரிந்துரைகளை விரைவாகவும் திருப்திகரமாகவும் நடைமுறைப்படுதத மாநில அளவில் அதிகாரமளிக்கப்பட்ட நிலைக்குழு ஒன்று ஏற்படுத்த இக்குழு ஆலோசனை வழங்குகிறது இக்குழுவிற்கு அரசு தலைமைச் செயலர் தலைவராக இருப்பார் அவ்வப்போது தேவைப்படும் விளக்கங்களையும் உத்திகளையும் அளிப்பதற்கு இக்குழு அதிகாரம் பெற்றிருக்கும்

மாநில வளர்ச்சி சபை

6.15 இத்துடன், தேசிய அளவில் உள்ள தேசிய வளர்ச்சி சபை போன்று மாநில வளர்ச்சி சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் இக்குழு பரிந்துரை செய்கிறது இச்சபையின் தலைவராக மாண்புமிகு மாநில முதல்வரும் அதன் உறுப்பினர்களாக மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள், மாநகராட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், மூத்த நிர்வாக அலுவலர்கள் மற்றும் மாநிலத்திட்டக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் இருப்பர். இச்சபை காலாண்டுகளுக்கு ஒரு முறை கூடி மாநில அளவிலான வளர்ச்சிப் பணி முன்னேற்றத்தையும் மாவட்ட அளவிலான முக்கிய வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றத்தினையும் ஆய்வு செய்யும். இதனால் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றங்களில் நல்ல விளைவுகள் ஏற்படுவதற்காக உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படும் அதிகார ஒப்படைப்பு உண்மையிலேயே எதிர்பார்க்கும் பலன்களைப் பெறுவதற்கு உறுதி செய்யப்படும். மேலும் வளர்ச்சிப் பணிகளில் பங்கேற்பவர்கள் தங்கள் பகுதி வளர்ச்சி பற்றி மட்டுமல்லாது மாநில அளவில் ஒட்டு மொத்த வளர்ச்சி பற்றியும் அக்கரை கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

சட்ட மன்றத்திற்குப்பதில் சொல்லும் பொறுப்புகள்

6.16 உள்ளாட்சி அமைப்புகளின் நடவடிக்கைகள் மற்றும் நிதி சார்ந்த செயல்பாடுகள் குறித்து சட்ட மன்றத்திற்குப் பதில் சொல்லும் பொறுப்பு யாருடையது என்ற கேள்விக்குரிய பதில் இன்னும் முடிவு செய்யப்பட வேண்டியுள்ளது. உள்ளாட்சி அமைப்புகள் தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனங்களாகும் என அரசியலமைப்புச் சட்டம் எதிர்பார்த்தாலும் அவை மாநில சட்ட மன்றங்களுக்கு உட்பட்டவையாகவே உள்ளன இந்த இரு நிலைகளையும் வரையறுத்து நிலைநிறுத்த ஒரு எல்லைக்கோடு அவசியமாகிறது. மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளின் அன்றாட நடவடிக்கைகள் மீது கேள்விகள் எழுப்பப்படுவது தவிர்க்க முடியாதது. ஆன்ால் இவ்வமைப்புகளின் அன்றாட நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படாமல் இருக்க சட்ட மன்றங்களுக்கு குறைந்த பட்சமாகத் தேவைப்படும் தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை ஆய்வு செய்யவும் அதுபற்றி சட்டமன்றம் விவாதித்து அங்கீகாரம் அளிக்கலாம் என இக்குழு கருதுகிறது. அத்துடன் உள்ளாட்சிகளின் பணிகள் பற்றி சட்டமன்ற அன்றாட நிகழ்ச்சிகளில் பல்வேறு கேள்விகளுக்கு அனுமதியளிப்பது பற்றி வழிகாட்டு நெறிமுறைகளை சட்டமன்றமே உருவாக்கலாம். இதுபோன்ற வாய்ப்பு உருவாக சிறிதுகாலம் ஆனாலும், உள்ளாட்சி அமைப்புகள் சட்ட மன்றத்திற்குப்பதில் சொல்லும் பொறுப்பு குறைக்கப்படாமல் அவை சுதந்திரமாகச் செயல்பட ஒரு நல்ல சூழ்நிலை உருவாக உதவிபுரியும்.

ஊரக உள்ளாட்சிகள் மற்றும் தொடர்ப்பு

6.17 அமைப்புகள் அடிப்படையில் அரசியல் சார்பற்ற, சமூக நல நோக்கம் மற்றும் லாபம் கருதா சமுதாயப்பணி ஆற்றுபவை. அவை சமுதாயத்தின் அடிமட்ட மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை. ஊரகப் பகுதிகளில் இந்நிறுவனங்கள் ஆற்றும் பணிகளின் வெற்றியும், நிலைப்பாடும் அந்நிறுவனங்களின் சுயநலமற்ற வலிய முயற்சிகளின் அடிப்படையில் அமையும். சமுதாய பங்கேற்பைச் செயற்படுத்துவதில் அரசு சாரா அமைப்புகள் அதிகமாக ஈடுபட வாய்ப்புள்ளவை. எனவே அரசு சாரா அமைப்புகளை கிராம வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டுவதில் மட்டுமின்றி திட்டப் பணிகளை செயல்படுத்திலும். ஆய்வு செய்வதிலும், திட்டம்பற்றி பயிற்சிகள் அளிப்பதிலும் ஈடுபடுத்த வேண்டும். மாவட்ட ஊராட்சி, மாவட்டத்திலுள்ள அரசு சாரா அமைப்புகள் அனைத்தையும் கணக்கிலெடுத்து அவற்றின் குறிப்பிட்ட பணிகள், திட்டங்கள் அவை செயலாற்றும் பகுதி ஆகியவைகளைக் கண்டறிய வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் அரசு சாரா அமைப்புகளுடன் நெருங்கி, ஒருங்கிணைந்து செயலாற்ற மாவட்ட ஊராட்சி ஒரு இணைப்புப் பாலமாக பணியாற்ற முடியும். மாவட்ட நிலைக்குழுக்கள், இணைக்குழுக்கள் மற்றும் ஊராட்சி இதர அமைப்புகளில் சில அரசு சாரா அமைப்புகள் ஈடுபடுத்தப்பட வேண்டும். சமுதாய உள்கட்டமைப்புக்களான, சாலைகள் குடிநீர் விநியோகம் போன்றவற்றைப் பராமரிப்பதில் சில அரசு சாரா அமைப்புகள் மிகவும் உதவிகரமான பணியைச் செய்து வருகின்றன. மிகச்சிறந்த முறையில் செயல்பட்டு வரும் சில அப்புகளிடம் ஊராட்சிப்பணிகளையும் திட்டங்களையும் சட்ட ஒப்பந்தங்கள் அடிப்படையில் ஒப்படைக்கலாம்.

ஊரக உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் பயன்பெறுவோர் குழுவுடன் தொடர்பு

6.18 நிலம் மற்றும் நீர் போன்ற அரிய இயற்கை வளங்களைச் சரியான முறையில், திறமையாகவும், ஒளிவு மறைவின்றியும் பயன்படுத்தி நிர்வகிப்பதை உறுதி செய்ய பயன்பெறுவோர் குழுக்களை அமைக்கலாம். உதாரணமாக பாசனப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் செயல்படும். பாசன நீர் பயன்படுத்துவோர் குழுக்கள் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள நீர்ப்பிடிப்புப்பகுதி பயன்பெறுவோர் குழுக்கள் செயல்படுவதைக் குறிப்பிடலாம். வேளாண்மை வளர்ச்சி பன்னாட்டு நிதி நிறுவனம். (IFAD) மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் (DWCRA) அமைக்கப்பட்டுள்ள சுயஉதவி குழுக்கள் நலிந்த பிரிவினர்க்கான முன்னேற்றத்திட்டங்களை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றன. பயன்பெறுவோர் குழுக்கள் மற்றும் ஊராட்சிகளுடனான தொடர்பானது இணக்கமான சூழ்நிலையை உருவாக்கும். குறிப்பிட்ட நலத்திட்டம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் கீழ் உள்ள பயன்பெறுவோர் குழுக்களும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளும், திட்டப்பணிகளின் முழுப்பயனும் கிராம மக்களுக்குக் கிடைப்பதற்காக ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும். பயன்பெறுவோர் குழுக்களுடன் நேரடித் தொடர்பு கொள்ள ஊராட்சி அமைப்புகளில் கிராம ஊராட்சிகளே மிகப் பொருத்தமான அடிமட்ட அமைப்பாகும். பல்வேறு திட்ட செயலாக்கப்பணிகளில் பயன்பெறுவோர் குழுக்களை ஒருங்கிணைத்துச் செயலாற்ற ஊராட்சி ஒன்றியங்களும் மாவட்ட ஊராட்சிகளும் ஏற்பாடுகளைச் செய்து

கொள்ள வேண்டும். விரைவான ஊரக வளர்ச்சிக்கு இத்தகைய அமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுமாறு பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கும், அரசுத்துறைகளுக்கும் வழிவாட்டும் நெறிமுறைகளை வகுத்துக் கொடுக்க வேண்டும்.

வாய்ப்பு வசதியற்றோர் மேம்பாட்டிற்கான முக்கியத்துவம்

6.19 வாய்ப்பு வசதியற்றோரான, பெண்கள், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு பிரதிநிதித்துவம் அளிக்க அரசியாமைப்புச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளதை நாங்கள் நினைவில் கொள்கிறோம். எனினும் அவர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முழுமையாக பிரதிபலிக்க சிறிது காலம் ஆகும். ஆகவே அவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற சிறப்பு திட்டங்களையும் புதிய யுக்திகளையும் கையாள்வது தற்போதைக்கு பொருத்தமானதாக இருக்கும். மற்ற திட்டங்களைப் பொருத்தவரை ஊராட்சிகளுக்கு தங்கள் பகுதி மேம்பாட்டிற்கான திட்டங்களின் தன்மைக் கேற்ப தாரளமாக நிதி ஒதுக்கப்படவேண்டும் என நாங்கள் வாதிட விரும்புகிறோம். வாய்ப்பு வசதியற்றவர்களின் மேம்பாட்டிற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான திட்டங்களையும் அதற்குப் போதுமான நிதிகளையும் ஒன்பதாவது திட்டத்தில் அரசு ஒதுக்கிவைக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

சமூக கலாச்சார மரபுகளுக்கு அங்கீகாரமளித்தல்

6.20. சமுதாயம் தனது பொருளாதார மற்றும் சமூக செயல்பாடுகளை நமது பண்டைய கலாச்சாரம், பண்பாடு பரம்பரியங்கள் மற்றும் வழக்கங்களின் பலமான அடிப்படையில் நடைமுறைப்படுத்த முனைய வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளான கிராம சபை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் ஆகியவை வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் போது இத்தகைய நமது கலாச்சார பண்பாடுகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப் போகின்றன என்பதை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இவை சமுதாய வளர்ச்சிப் பணிகளை விரைவு படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குவற்கு வலுவான ஆதாரங்களாக அவ்வப்போது பயன்படக்கூடும். இது போன்று தற்போது உள்ள ஏற்பாடுகளைக் கவனத்தில் கொண்டு எங்கெல்லாம் பயன் தரக்கூடியதும் புதிதாக உருவாக்கப்படும் பணிகளும் குறைந்த செலவில் நடைபெறுகிறதோ அந்த ஊராட்சிகள் அதிகப்படியான வாய்ப்புகளைப் பெறும். அதனால் அவை தங்களை இன்னும் பலமுள்ள அமைப்புகளாக ஆக்கிக் கொண்டு அதிகப்படியான நிர்வாக அமைப்புகளை குறைத்து அவற்றின் மூலம் உள்ளூர் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வாய்ப்பு உண்டாகும். உள்ளூர் தகராறுகளை சமரச அடிப்படையில் தீர்த்து வைக்கும் பரம்பரை வழக்கங்களும் உள்ளன. அதனால் சட்ட பிரச்சனைகளையும் நீண்ட கால தாமதத்தையும் தவிர்க்க முடியும். ஊராட்சிகள் இத்தகைய பாரம்பரிய பழக்கவழக்கங்களைச் சார்ந்திருக்க வேண்டும். அதன் மூலம் உள்ளூர் தகராறுகளை கூடியவரை சமரசமாகத் தீர்த்து வைக்க தங்களது பலமான ஆதரவுகளை அளிக்க வேண்டும்.

நடைமுறை விவரங்கள்

6.21. வளர்ச்சித் திட்டங்களும் அவற்றின் செயல்பாடுகளும் செயல் அலுவலர்கள் எடுக்கும் முடிவுகளின் படி நடைபெறும். அந்த முடிவுகள் அரசு ஆணைகளாகவும், விதி ஏடுகளாகவும், வழிகாட்டும் குறிப்புகளாகவும், சுற்றறிக்கைகளாகவும், மற்றும் விளக்கக் குறிப்புகளாகவும் அமையப் பெறும். ஆகவே செயல் அலுவலர்களின் விரிவான அறிவுரைகள் அளிக்கப்படாவிட்டால் இப்புதிய அமைப்புமுறை தடங்கலின்றி பணியாற்ற இயலாது. பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் தங்களுக்கு மாற்றப்பட்டுள்ள செயற்பணிகளை எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என்று தெளிவான செயல் அறிவுரைகள் அவைகளுக்கு அளிக்கப்படவேண்டும். எனவே பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கு மாற்றுதல் செய்யப்பட்டுள்ள செயற்கடமைகள் சுதந்திரமாகவும் தடங்கலின்றியும் நடைபெறுவதற்கு வசதியாக அனைத்து அரசுத் துறைகளும் தகுந்த ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும். அத்தகைய ஆணைகள் கீழ்க்கண்ட முக்கியமான கருத்துக்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். 1) பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள திட்டப்பணிகளுக்குரிய பயன் பெறுவோர் மற்றும் திட்டப்பணியிடங்கள் ஆகியவற்றைத் தாங்களே தேர்வு செய்து கொள்ளல் 2) சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் முன் ஒப்புதல் இன்றி எந்தவித நடவடிக்கைகளையோ அல்லது எந்த வித செலவினங்களையோ அரசுத் துறைகள் செய்யக் கூடாது. 3) பஞ்சாயத்து ஆட்சி

அமைப்புகள் தங்களின் முன் ஒப்புதல் பெறப்படாத செயற்பணிகளுக்குரிய நிதியை வழங்குமாறு அவைகளை கட்டுப்படுத்த முடியாது 4) தொழில்நுட்ப அனுமதிகள் வழங்கும் துறைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆணைகளை வழங்கவேண்டும். இல்லையெனில் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதாக எடுத்துக் கொண்டு மேல் நடவடிக்கைகளை உள்ளாட்சி அமைப்புகள் எடுக்கலாம். களப்பணியாளர்களிடம் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் உரிமையை மேலும் அதிக அளவில் வழங்கலாம். உள்ளாட்சிகள் சில தொழில்நுட்பத் திட்டங்களை தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ள அதிகாரம் அளிக்கலாம். 5) பொருட்கள் கொள்முதல் செய்தல் பணிகளை வாடகைக்கு அமர்த்துதல் மற்றும் அதற்குரிய நிதிக்கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கான வழி முறைகள் தெளிவாகக் கொடுக்கப் படவேண்டும். 6) உள்ளாட்சிகளுக்கு மாற்றப்பட்டுள்ள இனங்களின் அரசுத்துறை உயர் அலுவலர்களின் பங்குகள் பற்றியும் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும். 7) உள்ளாட்சிகளின் திட்டப்பணிகளின் செயலாக்கங்கள் பற்றிய காலமுறை அறிக்கைகள் அனுப்புவது பற்றியும் அவற்றை ஆய்வு செய்வது குறித்தும் ஒவ்வொரு துறையும் வழிகாட்டுதல்கள் அளிக்க வேண்டும்.

மக்களின் பங்கேற்பு

6.22. பொதுமக்கள் பங்கேற்பு கொள்வதற்கு கிராமசபை தான் முக்கியமான அமைப்பாக இருக்கும் என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இது பற்றி இக்குழுவின் ஆலோசனைகளாவன. கீழ்கண்ட முறைகள் மூலம் கிராம சபைகள் வலுப்படுத்த வேண்டும். 1) சபைக்கூட்டம் நடைபெற கலந்து கொள்வோர் எண்ணிக்கை குறைந்தபட்சம் 10 சதவீதமாக இருக்க வேண்டும். (தற்போது உள்ள மூன்றில் ஒரு பங்கு குறைந்த பட்ச எண்ணிக்கை நடைமுறையில் சாத்தியமில்லை) 2) கிராம சபைக் கூட்டம் சம்பந்தமாக ஒவ்வொரு வீட்டிற்கும் எழுத்து மூலம் அழைப்பு அனுப்பப்பட வேண்டும் 3) கிராம சபைகளின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அரசு ஆணையின் நகல்கள் கிராம சபையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அளிக்கப் பட வேண்டும். கீழ்க்கண்ட விபரங்களை உள்ளடக்கியதாக கிராம சபைகளின் உரிமைகள் குறிப்பிட வேண்டும். 1) ஒவ்வொரு நிதியாண்டிலும் நடைபெறும் திட்டப் பணிகள் பற்றிய செயல் திட்டம் பற்றி தெரிந்து கொள்ளுதல் 2) செயல்படுத்துவதற்குரிய திட்டப்பணிகளின் விரிவான மதிப்பீடுகளைப் பற்றி தெரிந்து கொள்ளுதல் 3) பயன் பெறுவோரைத் தேர்வு செய்வதற்குரிய தகுதிகள், வழிமுறைகள் பற்றியும் அத்தகுதி மற்றும் வழிமுறைகளுக் கேற்ப பயன் பெறுவோர் தேர்வு செய்யப்படுகின்றனரா என்பது பற்றியும் தெரிந்து கொள்ளுதல் 4) கிராம சபை எல்லைக்குள் செய்யப்படும் பணிச் செலவுகள் பற்றி இனம் வாரியாகத் தெரிந்து கொள்ளுதல் 5) ஊராட்சிகள் எடுக்கும் முடிவுகளின் தன்மைகள் பற்றி தெரிந்து கொள்ளுதல் 6) நிதியாண்டில் அலுவலர்களின் பணிகள் பற்றி அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளுதல். 7) திட்டங்கள் தயாரிப்பதற்குரிய முன்னுரிமைகள் மற்றும் கருத்துரு தயாரித்தல் 8) கிராம சபைகளின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளின் அடிப்படையில் பணிகளை மேற்பார்வையிட உட்குழுக்களை அமைத்தல்.

கிராமசபைகளின் பொறுப்புகள் கீழ்கண்ட விவரங்களை உள்ளடக்கியதாக இருக்கும் 1) வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்கள் பற்றிய தகவல்களைப் பரப்புதல் 2) சுகாதாரம், கல்வி போன்றவைகளுக்கான வளர்ச்சி முகாம்களில் பங்கு பெறுமாறு ஆதரவு திரட்டுதல் 3) சமூக மற்றும் பொருளாதாரம் சம்பந்தமாக அவசியமான புள்ளிவிபரங்களைச் சேகரித்தல் 4) வளர்ச்சிப்பணிகளின் செயற்பாடுகள் குறித்து தகவல்களைச் சேகரித்தல் 5) வரி செலுத்துவது, கடனைத் திரும்பச் செலுத்துவது, சுற்றுப்புற சூழ்நிலையைப் பேணுவது மற்றும் சமூக நல்லிணக்கம் பற்றி பிரச்சாரம் செய்வது. 6) ஊராட்சி வளங்களை அதிகரிப்பதற்காக உள்ளூர் வள ஆதாரங்களைத் திரட்டுவது 7) வளர்ச்சிப்பணிகளை மேற்பார்வையிடல் 8) தொற்று நோய், இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் இடர்ப்பாடுகள் போன்ற செய்திகளை விரைவில் அனுப்புவதற்குரிய ஏற்பாடுகளை உருவாக்குதல் 9) நடாளுமன்றத்தில் 24.12.1996 அன்று நிறைவேற்றிய சட்டத்தில் பட்டியல் பகுதியிலுள்ள கிராம சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை, பட்டியலில் சேராத பகுதிகளில் உள்ள கிராம சபைகளுக்கும் விரிவு படுத்தப்படவேண்டும்.

முடிவுரை

இயல் VIII

முடிவுரை

7.1. மேற்குறிப்பிட்ட இயல்களில் குழுவானது 1984 ம் ஆண்டிலிருந்து இந்நாள் வரை மக்களாட்சி பன்முகப்படுத்தலின் வரலாற்றையும் (இயல் 2), அணுகுமுறை ஏற்படுத்த குழு மேற்கோள் காட்டியமையும் (இயல் 3) மாநிலத்தில் மேம்படுத்தப்பட வேண்டிய 29 நடவடிக்கைகளைப் பாகுபடுத்தி ஊரக உள்ளாட்சி மன்றங்கள் பகுதிகளுடன், செய்கடமைகளை மூன்று நிலைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளமையும், (இயல் 4), இதுவரை திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாக இந்நிறுவனங்களின் இணைப்புகள் சுருக்கமும் (இயல் 5) மற்றும் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களின் மக்களாட்சி பன்முகப்படுத்தலைச் செயற்படுத்த கட்டமைப்பு சிறப்புக்கூறு பற்றிய விபரமும் (இயல் 6) குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையானது தமிழ்நாட்டில் மக்களாட்சி பன்முகப்படுத்தலின் செயலாக்கத்திற்கு ஒரு அடித்தளமாக அமையும்.

7.2. உள்ளாட்சி அமைப்புகளுக்கு படிப்படியான அதிகார ஒப்படைப்பிற்கு இக்குழு பரிந்துரை செய்துள்ளது. குழுவானது இயல்–4ல் அதிகாரங்கள், செய்கடமைகள், பொறுப்புகள் மாறுதல் தொடர்பாக ஆலோசனை வழங்கியுள்ளது. இயல் 5–ல் ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்குத் திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் இணைத்தல் குறித்தும், இயல்–6ல் இந்த ஒப்படைப்புகளைச் செயல்முறைப்படுத்தல் தொடர்பானவையும் தெரிவிக்கின்றன.

7.3. மக்களின் தேவையை நிறைவேற்றவும், உள்ளூர் பகுதியை மேம்படுத்தவும் தேவையான பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒரு புதிய நிறுவனக் கட்டமைப்பு அரசியலமைப்பு மற்றும் சட்ட ஆதரவுடன் உருவாக்கப்பட்டுள்ளது. அந்நிறுவன அமைப்புகளான ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் வளர்ச்சித்துறைகளின் நிர்வாக மேம்பாட்டிற்கு முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில சட்டம் மூலம் அதிகார ஒப்படைப்பு வழங்கப்பட்டிருப்பது பொதுமக்களிடமும் குறிப்பாக உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடமும் ஒரு புதிய எதிர்பார்ப்பினை உருவாக்கியுள்ளது. பஞ்சாயத்து ஆட்சி அமைப்புமுறை எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டனவோ அந்நோக்கங்களைத் திறம்பட செயல்படுத்துவது, இயற்கை வளங்களைச் சிறப்பாக பயன்படுத்துவது, மக்களாட்சி முறையில் அவற்றின் ஈடுபாடு ஆகியவற்றைக் கொண்டே பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் தீர்மானிக்கப்படும். அதிகார ஒப்படைப்பின் வலிமையும், பொறுப்புகளும், நிதி ஆதாரங்களும் மெதுவாகவே நடைபெறும் என்ற உணர்வு மக்களிடையே உள்ளது. மாநில அரசு தன்னிடமுள்ள பொறுப்புகளையும் தேவையான நிதி ஆதாரங்களையும் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கு வழங்குவதற்கு முன் வருவதன் மூலம் இக்கருத்தினை மாற்றி கொள்ளவும்.

7.4. இக்குழுவின் அறிக்கை உள்ளாட்சி அமைப்புகளில் பெருமளவு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கையில் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையாகும். ஏராளமான நிரந்தர ஏற்பாடுகள், வழிமுறைகள், மனப்பான்மை, அதிகாரிகள் ஆகியோர் ஒரு புதிய நிறுவனத்தினை உருவாக்க வேண்டி உள்ளது. ஏனெனில் அந்நிறுவனங்கள் மக்களாட்சி முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களிடமிருந்து அதிகாரங்களை நேரிடையாகப் பெற்றுள்ளது. அப்படியிருக்க தற்போதுள்ள ஏற்பாடுகள் அதிகாரிகளின் கட்டுபாட்டில் இயங்கி வருகின்றது. இச்சூழலில் மேற்கூறிய இரு அமைப்புகளும் ஒன்று பட்டு செயல்படுவது மிகவும் கடினமான ஒன்றாகும்.

7.5. இவ்வாறாக ஏற்கனவே கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகார மாற்றங்களும், செயல்பாடுகளும் நிறைவேற்றப்படும்போது அன்றாடம் பல பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. கடந்த ஐம்பதாண்டுகளில் நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்த கொள்கைகளின் அடிப்படையில் இப்பிரச்சனைகளை கண்ணுற்றால் அவற்றைத் தீர்ப்பதற்கு பல வழிமுறைகள் உள்ளன.

7.6. உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகார ஒப்படைப்பு முறைகளை விரைவுபடுத்த இக்குழுவின் அறிக்கை வழிவகை செய்கிறது. இக்குழுவின் முதல் அறிக்கையின் சில பரிந்துரைகளை ஏற்கனவே மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. நிதி ஆதார ஒப்படைப்பு சம்பந்தமான பரிந்துறைகளை மாநில நிதிக்குழுவும் வழங்கியுள்ளது. அவற்றின் சில முக்கிய பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதிகார ஒப்படைப்பிற்கு அரசு எடுக்கும் விரைவான முடிவானது பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளைப் பலப்படுத்தி அவற்றிற்கு ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கும். மாநில அரசு இது சம்பந்தமாக முக்கியமான வரவேற்கத் தக்க வழிமுறைகளை ஆரம்பித்துள்ளது. மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி தலைவர்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநில அளவில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் அமைச்சர் பெருமக்களும், உயர் அரசு அதிகாரிகளும் விவாதங்களில் கலந்து கொண்டனர்.

" உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளின் மீதான முடிவுகளை அவ்வமைப்புகளே எடுக்கும் அம்முடிவுகளை செயல்படுத்தும் பொறுப்பு மட்டுமே அலுவலர்களிடம் இருக்கும் என்பதனை நான் திட்டவட்டமாக கூறிக் கொள்கிறேன்" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1997-1998 ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை உரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் முறையான பங்கு பற்றி பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய அரசின் தொடர் நடவடிக்கைகள் மக்களாட்சி அதிகார பன்முகப்படுத்தலின் வெற்றிக்கு ஆதாரங்களாகும். தமிழ்நாட்டில் மக்களாட்சி அதிகார பரவலாக்கும் பயணத்தில் உறுதியான செயல்முறை அடிப்படைக்கு இக்குழுவின் அறிக்கை உதவிகரமாக அமையும் என இக்குழு நம்புகிறது.

சுருக்கம்

சுருக்கம்

1)	ஆ.தி.வ.	-	ஆதி திராவிடர் வகுப்பினர்
2)	ஆ.தி.ப	-	ஆதி திராவிடர் பழங்குடியினர்
3)	இ.பு.எ.வ.நி.	-	இந்திய புதுப்பிக்ககூடிய எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்
4)	இ.நி.தி.	-	இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்
5)	உ.ப.	-	உழவர் பயிற்சி
6)	ஊ.ச.தி.	-	ஊட்டச் சத்துணவுத் திட்டம்
7)	ஊ.ஒ	-	ஊராட்சி ஒன்றியம்
8)	ஊ.வ.து.	-	ஊரக வளர்ச்சி துறை
9)	எ.வி.	-	எண்ணெய் வித்துக்கள்
10)	ஒ.ஊ.வ.தி	-	ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்
11)	ஒ.ம.மே.தி	-	ஒருங்கிணைந்த மலைப்பகுதி மேப்பாட்டுத் திட்டம்
12)	ஒ.கு.மு.தி	-	ஒருங்கிணைந்த குழந்தைகள் முன்னேற்றப் பணித் திட்டம்
13)	க.ஊ.தொ. ஆ.	-	கதர் மற்றும் ஊரகத் தொழில் ஆணையம்
14)	க.செ.அ.	-	களப்பனி செயல் அலுவலர்
15)	கி.மீ	-	கிலோ மீட்டர்
16)	கு.ந.மை	-	குழந்தைகள் நல மையம்
17)	கே. எஸ். எஸ். பி.	-	கேரள சாஸ்த்ர சாகித்திய பரிஷத்
18)	ச.ந. துறை	-	சமூக நலத் துறை
19)	ச.ந. வாரியம்	-	சமூக நல வாரியம்
20)	சி.இ.வீ.	-	சிசு இறப்பு வீதம்
21)	சி.டி.எஸ்.	-	சமுதாய வளர்ச்சி மன்றம்
22)	சி.ப.தி	-	சிறப்பு பகுதித் திட்டம்
23)	சு & கு. ந. து.	-	சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை
24)	செ.க.த.	-	செய்தி கல்வி மற்றும் தகவலளிப்பு
25)	செ.ப.	-	செய்தி மற்றும் பயிற்சி
26)	த.எ.வ.நி.	-	தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்
27)	த.க.	-	தரக்கட்டுப்பாடு
28)	த.நா.	-	தமிழ்நாடு
29)	த.நா. ஊ.ச.	-	தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்
30)	த.நா.ஒ.ச.தி.	-	தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம்
31)	த.கு.வ.	-	தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீகரற்று வாரியம்
32)	த.நா.ஒ.ஊ.தி.	-	தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம்

33)	த.பா.	-	தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்
34)	த.வே.வ.தி	-	தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம்
35)	தா.வ.	-	தாழ்த்தப்பட்ட வகுப்பினர்
36)	து.இ.	-	துணை இயக்குநர்
37)	தே.உ.எ.வ.தி.	-	தேசீய உயிரியல் எரிவாயு வளர்ச்சி திட்டம்
38)	நெ.சா.ஊ.ப.	-	நெடுஞ்சாலை ஊரகப் பணி
39)	ப.ஆ.அ.	-	பஞ்சாயத்து ஆட்சி அமைப்பு
40)	ப. சா. க.	-	பள்ளி சாராக் கல்வி
41)	ப.ப.	-	பயிர் பாதுகாப்பு
42)	ப.செ.அ.	-	பண்ணை செயல்முறை அலுவலர்
43)	ப.மே.	-	பண்ணை மேலாண்மை
44)	பி.வ.	-	பிற்பட்ட வகுப்பினர்
45)	பே. இ.வி.	-	பேறுகால இறப்பு வீதம்
46)	ம.உ.தி	-	மதிய உணவுத் திட்டம்
47)	மா. தி	-	மாவட்டத் திட்டம்
48)	ம.பொ.தி	-	மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்
49)	மா. வ. அ.	-	மாவட்ட வன அலுவலர்
50)	ம.ப.மே.தி	-	மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம்
51)	மை. ஏ. தி.	-	மைய அரசு ஏற்கும் திட்டம்
52)	மி.பி.வ.	-	மிகவும் பிற்பட்ட வகுப்பினர்
53)	மு.எ.இ.	-	முழு எழுத்தறிவுத் திட்டம்
54)	மே.தே.சூ.அ.தி.	-	மேம்பட்ட தேசீய சூளைகள் அமைப்புத்திட்டம்
55)	மே.தொ.ம.மே.தி.	-	மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத்திட்டம்
56)	வ.செ.தி.ம.	-	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
57)	வெ.உ.தி	-	வெளிநாட்டு உதவித் திட்டம்
58)	வே. வே.	-	வேளாண்மை வேதியியல்
59)	வே. அ.	-	வேளாண்மை அலுவலர்
60)	வே. இ.	-	வேளாண்மை இயக்குநர்
61)	வே.உ.அ.	-	வேளாண்மை உதவி அலுவலர்
62)	வே.வா.உ.தி.	-	வேலைவாய்ப்பு உதவித் திட்டம்
63)	வே.உ.தி.	-	வேலைவாய்ப்பு உதவித் திட்டம்
64)	ஜ.வே.வா.தி	-	ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டம்
65)	ஜ.வே.வா.மு.தி.	-	ஜவஹர் வேலைவாய்ப்பு முனைப்புத் திட்டம்
66)	ஐ.பொ. குழு	-	ஐரோப்பிய பொருளாதாரக் குழு

இணைப்புகள்

1. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகார ஒப்படைப்பு குறித்த மாநில திட்டக் குழுவின் கருத்தினை கேட்டு பெறப்பட்ட அரசு கடிதம்

எஸ். நாரயண், இ.ஆ.ப
அரசு செயலர்
ஊரக வளர்ச்சித் துறை

தலைமைச் செயலகம்
சென்னை - 9.

நே.மு. கடித எண். 2099 / சி. ஐ. / 96 - 8, நாள் 20-9-1996

அன்பார்ந்த பண்டா,

பொருள் :- **உள்ளாட்சி அமைப்புகள் - அதிகார ஒப்படைப்புகள் தொடர்பாக**

மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் அக்டோபர் மாதத்தில் நடைபெற உள்ளது. மேலும் இப்புதிய அமைப்புகள் அக்டோபர் மூன்றாவது வாரத்தில் பொறுப்பேற்க உள்ளன.

மூவகைப்பட்ட அமைப்புகளான, மாவட்ட ஊராட்சிகள், வட்டார அளவிலான ஊராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்குவதற்கான பணிகளை இத்துறை ஏற்கனவே மேற்கொண்டு அதற்குரிய அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது. 1994 - ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 257-ல் அரசால் அதிகாரம் ஒப்படை செய்வதற்கான ஏற்பாடு அல்லது இச்சட்டத்தின் அட்டவனை 4-ல் பட்டியிடலப்பட்டுள்ள பொருள்கள் குறித்த அதிகாரங்களை வழங்க வகைப்படுத்தப்பட்டுள்ளது. அட்டவணை 4-ல் 29 இனங்கள் அதாவது வேளாண்மை, குடும்ப நலம், பொது விநியோக முறை போன்றவை வரிசையாக பட்டியிலிடப்பட்டுள்ளது.

ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகார ஒப்படைப்பு செய்வது மீதான கருத்துக்கள் மீது அரசு நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் பணிக் குழு ஒன்றை அமைத்து கீழ்கண்ட பொருள் பற்றி பரிசீலனை செய்து அதன் கருத்துக்களை பரிந்துரைச் செய்தால் அது எனக்கு நன்றியுள்ளதாய் இருக்கும்.

1) ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் ஒப்படைப்பு செய்தல் மற்றும்

2) ஊராட்சிகளின் பங்கு, கடமைகள் மற்றும் பணிகள் குறித்து அவைகளுக்கு ஏற்ற அதிகார ஒப்படைப்பு செய்தல்

குழு மேற்கண்டவற்றை கருத்தில் கொண்டு அதன் பரிந்துரைகளை ஒரு மாத காலத்திற்குள் கொடுத்தால் அது பாராட்டுக்குரியதாக இருப்பதுடன் அதன் மீது அரசாணைகள் வழங்கவும் ஏதுவாக இருகுகும்.

தங்களண்புள்ள

(ஒப்பம்)

(எஸ். நாரயணன்)

பெறுநர்

திரு. ஆர். சி. பண்டா இ.ஆ.ப
உறுப்பினர் செயலாளர், மாநிலத் திட்டக் குழு
சேப்பாக்கம். சென்னை - 600 005.

2. மாநிலத் திட்டக் குழு பிரிவு அமைத்தற்கான செயல் முறை ஆணை

உறுப்பினர் செயலர், மாநில திட்டக்குழு, ஆணைகள் சென்னை - 600 005
அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை :- டாக்டா இரமேஷ் சந்திர பண்டா இ.ஆ.ப.

செ.மு.எண் : 4871 / மா.தி.கு./ மா.தி/96 நாள் : 7-10-96

பொருள் :- உள்ளாட்சி அமைப்புகள் - அதிகாரங்கள் ஒப்படைப்பு - மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்களை கொண்ட பணிக்குழு அமைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது

பார்வை :- அரசுச் செயலர், ஊரக வளர்ச்சித் துறை அவர்களின் நே. மு. கடித எண். 20099 / சி1 /96 - 8 நாள் 20.9.1996.

ஆணை

மூன்றடுக்கு முறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளான மாவட்ட ஊராட்சி, வட்டார அளவிலான ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் அக்டோபர் 96ம் மாதத்தில் நடைபெறும். மேலும் புதிய அமைப்புகள் அக்டோபர் '96-ம் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் பொறுப்பேற்கும் என்றும் பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது. அரசு மேற்கண்ட மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கி ஆணைகள் வெளியிட எண்ணியுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகார ஒப்படைப்பு சம்பந்தமாக முடிவு செய்வதற்கு ஏதுவாக மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்களைக் கொண்ட பணி குழு ஒன்றினை அமைத்து கீழ்க்கண்ட விபரங்கள் குறித்து பரிந்துரைகள் செய்யுமாறு அரசு மாநிலத் திட்டக் குழுவினை கேட்டுக் கொண்டது.

1) ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் ஒப்பபுடைச் செய்தல் மற்றும்

2) ஊராட்சிகளின் பங்கு, கடமைகள் மற்றும் பணிகள் குறித்து அவைகளுக்கு ஏற்ற அதிகார ஒப்படைப்பு செய்தல்

02) மேற்கண்ட பொருள் குறித்து, 1996, செப்டம்பர் 27, அன்று நடைபெற்ற மாநிலத் திட்டக் குழு கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்க முடிவு செய்து அக்குழுவில் கீழ்கண்ட உறுப்பினர்கள் இருப்பர் என்றும் அக்குழு மேலே குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள் (1) மற்றும் (2) ன் மீதான தகுந்த பரிந்துரைகளை அரசுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது.

1) திரு. எல். சி. ஜெயின்
உறுப்பினர், மாநிலத் திட்டக் குழு. தலைவர்.

2) திரு. டி. வி. அந்தோணி, இ.ஆ.ப
உறுப்பினர், மாநிலத் திட்டக்குழு (ஒய்வு)

3) திரு. **கே. வி. பழநிதுரை**
முழுநேர உறுப்பினர்
மாநிலத் திட்டக் குழு — **உறுப்பினர்**

4) **டாக்டர் இரமேஷ் சந்திர பண்டா**, இ.ஆ.ப
ஊறுப்பினர் செயலர்
மாநிலத திட்டக் குழு — **அமைப்பாளர்**

5) **அரசு செயலாளர்** — **சிறப்பு அழைப்பாளர்**
ஊரக வளர்சசித துறை

மேற்கண்ட குழுவிற்கு குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்) மற்றும் குழுமத் தலைவர் (**ஊரக வளர்ச்சி**) தேவையான உதவிகள் செய்வார்கள.

03 இக்குழுவின் பரிந்துரைகளை, மாநில திட்டக் குழு கூட்டத்தில் பரிசீலித்த பின்னர் மாண்புமிகு முதல்வர் அவாகளது தலைமையில் நடைபெறும் மாநிலத் திட்டக் குழு கூட்டத்தின் முடிவுக்கு வைக்க வேண்டும்.

04. பார்வையில் குறிப்பிட்டுள்ள கடிடதத்தில் தெரிவித்துள்ள படி இவ்வறிக்கையினை மாநிலத் திட்டக் குழு அரசுக்கு அனுப்புவதற்கு ஏதுவாக குழு ஒரு மாத காலத்திற்குள் தன்னுடைய அறிக்கையினை அளிக்க வேண்டும்.

(ஒ.ம்) இரமேஷ் சந்திர பண்டா
உறுப்பினர் செயலாளர்
நாள் : 7-10-96

பெறுநர்

உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள்
அனைவருக்கும்

3. உத்தரமேரூர் குடவோலைமுறை கல்வெட்டு

A

1. ஸ்வஸ்திஸ்ரீ () மதுரை கொண்ட கோப்பாகேசரிவர்மர்க்கு யாண்டு பனிரண்டு ஆவது () உத்திரமேருச்சதுர்வேதி மங்கலத்து சபையொம் இவ்வாண்டு முதல் எங்களூர் ஸ்ரீ முகப்படி ஆஞை

2. யினால் தத்தனூர் மூவேந்த வேளான் இருந்து வாரியமாக ஆட்டொருக்காலும் ஸம்வத்ஸர வாரியமும் தோட்ட வாரியமும் ஏரி வாரியமும் இடுவதற்கு வ்யவஸ்தை செய் –

3. த பரிசாவது () குடும்பு முப்பதாய் முப்பது குடும்பிலும் அவ்வவ குடும்பிலாரேய் கூடி காநிலத்துக்கு மேல் இறை நிலமுடையான்தன் மனையிலே அ –

4. கம் எடுத்துக்கொண்டு இருப்பானை அறுபது பிராயத்துக்கு உள் முப்பது பிராயத்துக்கு மேல்பட்டோர் வேதத்திலும் சாஸ்திரத்திலும் காரியத்திலும் நிபுணரென்னப்பட்டி–

5. ருப்பாரை அர்த்த கௌசமும் ஆத்ம கௌசமும் உடையராய் மூவாட்டின் இப்புறம் வாரியஞ் செய்திலாத்தார் வாரியஞ் செய்தொழிந்த பெருமக்களுக்கு

6. அணிய பந்துக்கள் அல்லாத்தாரைக் குடவோலைக்குப் பேர் தீட்டிச் சேரி வழியேய் திரட்டி பன்னிரண்டு சேரியிலும் சேரியால் ஒரு பேராமாறு ஏதுமுரு வறியாத்தானெருரு

7. பாலனைக் கொண்டு குடவோலை வாங்குவித்துப் பன்னிருவாரும் ஸம்வத்ஸர வாரியமாவிதாகவும் () அதின் மின்பேய் தோட்ட வாரியத்துக்கு மேற்படி குடவோ --

8. லை வாங்கிப் பன்னிருவரும் தோட்ட வாரியமாவதாகவும் () நின்ற அறு குடவோலையும் ஏரி வாரியமா –

9. வதாகவு முப்பது குடவோலை பறிச்சு வாரியம் செய்கின்ற மூன்று திறத்து வாரியமும் முன்னூற்றுபது நாளும் நிறம்ப வாரியம் ஒழிந்த அனந்தரம் இடும்வாரியங்கள் இவ்யவஸ்தையோலைப்படியேய் குடும்புக்குக் குடவோலை இட்டுக் குடவோலை பறிச்சுக்கொண்டேய் வாரியம் இடுவதாகவும் () வாரியஞ் செய்தார்க்கு பந்துக்களும் சேரிகளில் அந்யோந்யம்மே *****

10. ம் குடவோலையில் பேர் எழுதி இடப்படாதாராகவும் () பஞ்சவார வாரியத்துக்கும் பொன் வாரியத்துக்கும் முப்பது குடும்பிலும் முப்பது குடவோலை இட்டு சேரியால் ஒருத்தரைக்குடவோலை பறித்து பன்னிருவாரிலும் அறுவர் பஞ்சவார வாரியமாவதாகவும் () அறுவர் பொன்வாரியமாவதாகவும் () ஸம்வத்ஸர வாரியம் அல்லாத்த

11. வாரியங்கள் ஒருக்கால் செய்தாரை பின்னை அவ்வாரியத்துக்கு குடவோலை இடப்பெராததாகவும் ( ) இப்பரிசே யிவ்வாண்டு முதல் சந்திராதித்தவத் என்றும் குடவோலை வாரியமேய் இடுவதாக தேவேந்திரன் சக்ரவர்த்தி ஸ்ரீ வீரநாராயணன் ஸ்ரீ பராந்தகதேவராகி பரகேசரிவர்மர் ஸ்ரீமுகம் அருளிச் செய்துவரக்காட்ட –

12. ஸ்ரீ ஆஞையினால் தத்ததூர் மூவேந்த வேளானுடனிருக்க நம் கிராம்த்து துஷ்டர் கெட்டு சிஷ்டர் வர்த்தித்திடுவாராக வ்யவஸ்தை செய்தோம் உத்தரமேருச் சதுர்வேதிமங்கலத்து சபையோம் ( ) •

B

1. ஸ்வஸ்திஸ்ரீ () மதிரைகொண்ட கோபரகேசரிவர்மர்க்கு யாண்டு பதினலாவது நாள் பதினாலு () காலியூர்கோட்டத்து தன்கூற்று உத்தரமேரு சதுர்வேதி மங்கலத்து சபையோம் இவ்வாண்டு முதல் எங்களுக்கு பெருமானடிகள் எம்பெருமான் ஸ்ரீ வீரநாராயணன் ஸ்ரீ பராந்தகதேவன் ஸ்ரீ பரகேசரி வன்மருடைய ஸ்ரீமுகம் வரக்காட்ட ஸ்ரீமுகப்படி ஆ –

2. கையினால் சோழ நாட்டுப் புறங்கரம்பை நாட்டு ஸ்ரீவங்கநகர்க் கரஞ்சை கொண்டயக்ரமவித்த பட்டனாகிய சோமாகிப்பெருமான் இருந்து வாரியமாக ஆட்டொருக்காலும் ஸம்வத்ஸர வாரியமும் ஏரி தோட்ட வாரியமும் வாரியமும் இடுவதற்கு வ்யவஸ்தை சேத பரிசாவது () குடும்பு முப்பதா முப்பது குடும்பிலும் அவ்வவ குடும்பிலா –

3. ரே கூடிக் காநிலத்துக்கு மேல் இறை நிலமுடையான் தன் மனையிலே அகம்மெடுத்துக் கொண்டிருப்பானை எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்பட்டார் மந்த்ரப்ராஹ்மணம் வல்லான் ஒதுவித்தறிவானைக் குடவோலை இடுவதாகவும் () அரைக்கா நிலமே உடையநாயினும் ஒரு வேதம் வல்லானாய் நாலு பாஷ்யத்திலும் ஒருபா –

4. ஷ்யம் வக்காணித்தறிவான் அவனையுங்குடவோலை எழுதிப்புக இடுவதாகவும் () அவர்களிலும் கார்யத்தில் நிபுணராய் ஆசாரமுடையரானாரையேய் கொள்வதாகவும் () அர்த்த சௌசமும் ஆன்ம சௌசமும் உடையராய் மூவாட்டினிப் புறம் வாரியஞ் செய்திலாத்தாரை கொள்வதாகவும் () எப்பேர்ப்பட்ட வாரியங்களும் செய்து கணக்குக் காட்டாதே இருந்தாரையும் இவர்களுக்குச் சிற்றவைப் போவை ம –

5. க்களையும் இவர்களுக்கு அத்தை மாமன் மக்களையும் இவர்களுக்குத் தாயோடு உடப்பிறந்தானையும் இவர்கள் தகப்பனோடுடப்பிறந்தானையும் தன்னோடுடப் பிறந்தானையும் இவர்களுக்குப் பிள்ளைகுடுத்த மாமனையும் இவர்கள் ப்ராஹ்மணி யோடுடப்பிறந்தானையும் தன்னோடுடப்பிறந்தாளை வேட்டானையும் உடப்பிறந்தாள் மக்களையும் தன் மகளை வேட்ட மருகனையும் தன் தமப்பனையும்

6. தன் மகனையும் ஆக இச்சுட்ட ***** பந்துக்களையும் குடவோலை எழுதிப்புக இடப்பெறாத்தாராகவும் () அகம்யாகமனத்திலும் மகா பாதகங்களில் முன்படைந்த நாலு மகாபாதகத்திலும் மெழுத்துப்பட்டாரயும் இவர்களுக்கும் முன் சுட்டப்பட்ட இத்தினை பந்துக்களையும் குடவோலை எழுதிப்புக இடப்பெறாதாராகவும் () ஸம்ஸர்க்கபதிதரை ப்ராயஸ்சித்தஞ் செய்யுமளவும்–

7. குடவோலை இடாததாகவும் ***** தியும் சாஹசியாயிருப்பாரையும் குடவோலை எழுதிப் புகவிடப்பெறாதாராகவும் () பரத்ரவ்யம் அபஹரித்தானையும் குடவோலை எழுதிப் புகவிடப்பெறாதாராகவும் () எப்பேர்ப்பட்ட கையூட்டுங்கொண்டான் க்ருதப்ராயஸ்சித்தஞ் செய்து சுத்தரானாரையும் அவ்வவர் ப்ராணாந்திகம்

8. வாரியத்துக்குக் குடவோலையெழுதி புகவிடப்பெறாததாகவும் ***** பாதகம் செய்து ப்ராயச்சித்தஞ் செய்து சுத்தரானாரையும் க்ராம கண்டகராய் ப்ராயஸ் சித்தஞ் சேது சுத்தரானாரையும் அகம்யாகமனம் சேது ப்ராயஸ்சித்தஞ் செய்து சுத்தரானாரையும் ஆக இச்சுட்டப்பட்ட அனைவரையும் ப்ராணாந்திகம் வாரியத்துக்குக் குடவோலை எழுதிப் புகவிடப்பெறாததாக –

9. வும் () ஆக இச்சுட்டப்பட்ட இத்தனைவரையும் நீக்கி இம்முப்பது குடும்பிலும் குடவோலைக்குப் போத்தீட்டி இப்பன்னிரண்டு சேரியிலுமாக இக்குடும்பும் வெவ்வேறேய் வாயோலை பூட்டி முப்பது குடும்பும் வெவ்வேறே கட்டிக் குடம்புக இடுவதாகவும் () குடவோலை பறிக்கும்போது மஹாசபைத் திருவடியாரை சபாலவ்ருத்தம் நிரம்பக் கூட்டிக்கொண்டு அன்றுள்ளூரில் இருந்த நம்பிமார் ஒருவரையும் ஒழியா –

10. மே மஹாசபையிலே உள்மண்டகத்திலேய் இருத்திக்கொண்டு அந்நம்பிமார் நடுவேப் அக்குடத்தை நம்பிமாரில் வ்ருத்தராய் இருப்பாரொரு நம்பி மேல் நோக்கி எல்லாஜ் ஜனமுங் காணுமாற்றலெடுத்துக்கொண்டு நிற்க பகலேயந்தர மறியாதானொரு பாலனைக்கொண்டு ஒரு குடும்பு வாங்கிய் மற்றொரு குடத்துக் கேய் புகவிட்டுக் குலைத்து அக்குடத்திலோரோலை வாங்கி மத்யஸ்தன் கையிலே

11. குடுப்பதாகவும் () அக்குடுத்தவோலை மத்யஸ்தன் வாங்கும்போது அஞ்சு விரலும் அகல வைத்து உள்ளங்கையிலே ஏற்றுக்கொள்வானாகவும் () அவ்வேற்று வாங்கின வோலை வாசிப்பானாகவும் () வாசித்த அவ்வோலை அங்குள் மண்டகத்திருந்த நம்பிமார் எல்லாரும் வாசிப்பாராகவும் () வாசித்த அப்பேர் தீட்டுவதாகவும் () இப்பரிசே முப்பது குடும்பிலும் ஒரோ பேர் கொள்வதாகவும் () இக்கொண்ட முப்பது பேரிலும் தோட்ட வாரியமும் ஏரி வாரியமும் செய்தாரையும் விஜ்யா வ்ருத்தரையும்

12. வயோ வ்ருத்தர்களையும் ஸம்வத்ஸரவாரியராக கொள்வதாகவும் () மிக்கு நின்றாருட் பன்னிருவரைத் தோட்ட வாரியங் கொள்வதாகவும் () நின்ற அறுவரையும் ஏரி வாரியமாகக் கொள்வதாகவும் () இவ்விரண்டு திறத்து வாரியமும் கரை காட்டிக்கொள்வதாகவும் () இவாரியம் செய்கின்ற மூன்று திறத்து வாரியப் பெருமக்களும் முன்னுற்றறுபது நாளும் நிரம்பச் செய்து ஒழிவதாகவும் () வாரியஞ் செய்யா நின்றாரை அப்ராதங் –

13. கண்டபோது அவனை யொழித்துவதாகவும் () இவர்கள் ஒழிந்த அனந்தரமிடும் வாரியங்களும் பன்னிரண்டு சேரியிலும் தன் மக்ருத்யங்கடைக்காணும் வாரியரே மத்யஸ்தரைக்கொண்டு குறிகூட்டிக் குடுப்பாராகவும் () இவ்யவஸ்தை யோலைப் படியேய் * * * க்குக் குடவோலை பறித்துக்கொண்டே வாரியம் இடுவதாகவும் () பஞ்சவார வாரியத்துக்கும் பொன் வாரியத்து –

14. க்கு முப்பது குடும்பிலும் குடவோலைக்கு பேர் தீட்டி முப்பது வாயோலை கட்டும் புக இட்டு முப்பது குடவோலை பறித்து முப்பதிலும் பன்னிரண்டுபேர் பறித்துக் கொள்வதாகவும் () பறித்த பன்னிரண்டிலும் அறுவர் பொன் வாரியம் அறுவர் பஞ்சவார வாரியமும் ஆவனவாகவும் () பிற்றை ஆண்டும் இவ்வாரியங்கள் குடவோலை பறிக்கும்போது இவ்வாரியங்களுக்கு முன்னம் செ –

15. ய்த குடும்பன்றிக்கே நின்ற குடும்பிலே கரை பறித்துக்கொள்வதாகவும் () கழுதை ஏரினாரையும் கூடலேகை செய்தானையும் குடவோலை எழுதிப்புக இடப்பெறாதாகவும் () மத்யஸ்தரும் அர்த்த சௌசமுடையானே கணக்கெழுதுவானாகவும் கணக்கெழுதினான் கணக்குப் பெருங்குறிப் பெருமக்களோடு கூடக் கணக்கு காட்டி சுத்தன் ஆச்சிதின் பின்னன்றி மற்றுக்கண் –

16. க்குப்புக பெறாதானாகவும் () தான் எழுதின கணக்குத் தானே காட்டுவானாகவும் () மற்றுக் கணக்கர் புக்கு ஒடுக்கப்பெறாதாராகவும் () இப்பரிசே இவ்வாண்டு முதல் சந்திராதித்யவத் என்றும் குடவோலை வாரியமே இடுவதாக தேவேந்திரன் சக்ரவர்த்தி பண்டிதவத்ஸலன் குஞ்சரமல்லன் சூர சூளாமணி கல்பகசரிதன் ஸ்ரீ பரகேசரிபன்மர்கள் ஸ்ரீமுகமருளிச்சேது வரக்காட்ட ஸ்ரீ ஆஞையா –

17. ல் சோழ நாட்டுப் புறங்கரம்பை நாட்டு ஸ்ரீ வங்கநகர்க் கரஞ்சை கொண்டயக்ரம வித்த பட்டனாகிய சோமாசிப் பெருமானுடன் இருந்து இப்பரிசு செய்விக்க நம் க்ராமத்துக்கு அப்யுதயமாக துஷ்டர் கெட்டு விசிஷ்டர் வர்த்திப்பதாக வ்யவஸ்தை செய்தோம் உத்தரமேரு சதுர்வேதிமங்கலத்து சபையோம் () இப்பரிசு குறியுள் இருந்து பெருமக்கள் பணிக்க வ்யவஸ்தை எழுதினேன் மத்யஸ்தன்

18. காட்டிப் போத்தன் சிவக்குறி இராஜமல்ல மங்கலப்ரியனேன் () *

4. 30.11.96 மற்றும் 1.12.96 அன்று சென்னையில் நடை பெற்ற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் உரை

முன்னிலையேற்றுள்ள உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு கோ.சி. மணி அவர்களே, அமைச்சர் பெருமக்களே,தலைமைச் செயலாளர் அவர்களே, அரசு அலுவலர்களே,

வேண்டுகோளையேற்று இம்மாநாட்டிற்கு வருகை தந்திருக்கும் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களே,

1996 மே திங்கள் 13ஆம் நாள் கழக அரசு மீண்டும் பதவிப் பொறுப்பேற்றதும், மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு – 23 ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த சென்னை மாநகராட்சிக்கும் – 10 ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த மற்ற அமைப்புகளுக்கும் உள்ளாட்சித் தேர்தலை நடத்தி வைத்து, நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமலிருந்த அரசியலமைப்பையொட்டிய ஜனநாயகக் கடமை ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

இதற்கு முன்பு உள்ளாட்சித் தேர்தல்களை அரசே நடத்தியது. இப்போது இதற்கென்றே முழுச் சுதந்திரம் படைத்த – அரசியல் சாசன சட்டப்படி உருவாக்கப்பட்ட மாநிலத் தேர்தல் ஆணையம் நடுநிலையுடன் திறம்படத் தேர்தலை நடத்தியிருக்கின்றது. இத்தேர்தலில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாத இட ஒதுக்கீடும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியோருக்குத் தனித்தனி இட ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் மட்டுமே ஒட்டுமொத்தமாக, ஒரேயடியாக, ஒரே கால கட்டத்தில் நடத்தப்பட்டது இந்தப் பிரமாண்டமான உள்ளாட்சித் தேர்தல் ; இதில் அராஜகமோ, குழப்பமோ நிகழாமல் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டதற்குத் துணை நின்ற தேர்தல் ஆணையர், காவல்துறையினர், அரசு அலுவலர்கள், உள்ளாட்சித் துறையினர், வாக்காளர் பெருமக்கள் மற்றும் அனைத்துக் கட்சியினருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் வெற்றிபெற்றுள்ளவர்களுக்கு இதயமார்ந்த வாழ்த்துக்களையும் வழங்கி வரவேற்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் 95,657 கிராம ஊராட்சி உறுப்பினர்களும், 12,584 கிராம ஊராட்சித் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை 6,501 ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களும், 382 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் பதவியேற்றுள்ளனர்.

தமிழகத்தில் 28 மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், 649 மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்வு பெற்றனர். அதுபோல 634 பேரூராட்சித் தலைவர்களும், 10,170 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நகராட்சிகளைப் பொறுத்தவரை 102 நகராட்சிகளுக்குத் தலைவர்களும் 3,392 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஊராட்சிகளைப் பொறுத்தவரை தலைவர் பதவிக்கு 3,197 இடங்கள் பெண்களுக்கெனவும் (பொது), 1,101 இடங்கள் ஆதி திராவிடப் பெண்களுக்கெனவும், 25 இடங்கள் பழங்குடியினர் பெண்களுக்கெனவும். ஆதி திராவிடர்களுக்கென 1,851 இடங்களும் பழங்குடியினர்களென 60 இடங்களும் ஒதுக்கப்பட்டன.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை தலைவர் பதவிக்கான 384 இடங்களில் ஆதி திராவிட இனத்திற்கு 43 இடங்களும், அந்த இனப்பெண்களுக்கு 32 இடங்களும். பொதுப் பிரிவில் 202 இடங்களும், பெண்களுக்கு 107 இடங்களுக்கு ஒதுக்கப்பட்டன.

இதுபோலவே மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் பதவி நிலையில் ஆதிதிராவிடப் பெண்களுக்கு இரண்டு இடங்களும், பொதுப்பிரிவில் பெண்களுக்கு எட்டு இடங்களும் ஒதுக்கப்பட்டன. மாவட்ட ஊராட்சித் தலைவாகளும், ஒன்றியத் தலைவர்களும், உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மற்ற அனைத்திற்கும் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் சென்னை. மதுரை. கோவை, திருச்சி, திருநெல்வேலி. சேலம் என ஆறு மாநகராட்சிகள் உள்ளன. இவற்றிற்கு 6 மேயர்களும், 474 உறுப்பினர்களும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவராக மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தேர்தலில் வெற்றி வாகை சூடி இந்த சிறப்பு மிக்க மாநாட்டில் வீற்றிருக்கும் வாய்ப்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். கடந்த 25–10–1996 அன்று பதவிப் பொறுப்பேற்ற நீங்கள் அனைவரும் உங்கள் பகுதியின் வளர்ச்சியில் முழு மூச்சுடன் கடமையாற்றத் தொடங்கியிருப்பீர்கள் என நினைக்கிறேன். இதன் மூலம் கிராம, நகரப் பகுதியில் மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி மீண்டும் தொடங்கி விட்டது என்ற நம்பிக்கை எல்லோருக்கும் ஏற்பட்டு விட்டது.

மக்களாட்சி முறை என்பது குறிப்பாக தமிழ்நாட்டுக் கிராமப் புறங்களில் – சிற்றூர்களில் – பேரூர்களில் – நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே அரும்புவிட்ட ஒன்றாகும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஊராட்சி முறை வகுத்து, மக்களாட்சிக்கு வழி காட்டிய பெருமை தமிழ் மன்னர்களான மூவேந்தர்களை மட்டுமே சாரும். இவர்கள் ஆட்சியில் ஊராட்சி சிறந்து விளங்கிய செய்திகளை கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள், வரலாற்றுச் சான்றுகள் மூலமாக அறியலாம். அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் கிராமத்திலுள்ள வைகுண்ட பெருமாள் கோவில் மதில் சுவர்களில் பல கல்வெட்டுகள் உள்ளன.

முலாம் பராந்தகச் சோழன் காலத்தில் கி.பி. 921–ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் கிராம சபைகள் மிகவும் தெளிவாகவும், திறமையாகவும் செயல்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமங்கள் பல குக்கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குக்கிராமமும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் குடவோலை மூலம் உறுப்பினர்கள் தேர்ந்து எடுக்கப்பட்ட விவரம் இந்தக் கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகின்றது. தேர்தலுக்கு நிற்கும் வேட்பாளர்களின் அறிவு, ஆற்றல், தொண்டுள்ளம், தூய ஒழுக்கம் இவற்றைக் கணக்கிலெடுத்து ஆராய்ந்த பின்னரே நிற்பதற்கே அனுமதிக்கப்பட்டனர் என்றால்; அவர்களைத் தேர்ந்தெடுப்பதில் எத்துணைக் கண்டிப்பு இருந்திருக்கும் என்பதை எளிதில் உணர முடியும். இந்தக் கிராமக் குடியரசுகள் நல்ல முறையில் வளர்ந்து சீராகச் செயலாற்றி, சமுதாயத்திற்குப் பேருதவிகள் பல புரிந்துள்ளன.

இந்தக் குடவோலை முறை சங்கக் காலத்திலேயே இருந்திருக்கிறது என்பதற்கு சங்கக் காலப் பாடல்கள் சான்றாக விளங்குகின்றன. போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கின்ற வீரர்களின் சடலங்களை, கழுகுகளும், காக்கைகளும், நரிகளும், நாய்களும் தின்று கொண்டிருக்கிற காட்சியை மருதன் இளநாகனார் எனும் புலவர் காண்கிறார். காணும்போது ஒரு கழுகு ஒரு வீரனுடைய வயிற்றினைத் தன்னுடையக் கூர்மையான அலகினால் கிழித்து, அவன் குடலை உருவிக் கொண்டிருப்பதைப் பற்றி அந்தப் புலவர் பாடுகிறார். இறந்து கிடக்கும் வீரனுடையக் குடலை, கழுகு உருவுவது எப்படியிருக்கிற தென்றால், கிராமப் புறங்களிலே குடவோலை முறையில் குடத்திற்குள் போடப்பட்ட ஓலைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்ப்பதைப் போல் இருக்கின்றது என்று அந்தப் புலவர் எழுதுகிறார்.

எனவே சங்க காலமே, மக்களாட்சி மாண்புக்கு அடியெடுத்துக் கொடுத்த தங்க காலமாக இருந்திருக்கின்றது.

தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்று வந்த ஊராட்சி முறைகள், ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின்போது உருமாறின. 1882–ஆம் ஆண்டு, வைஸ்ராயாக இருந்த ரிப்பன் பிரபு, இந்தியாவில், ஊராட்சிகளுக்குச் சட்ட வடிவம் கொடுக்க விரும்பினார். அதற்கிணங்க, 1884–இல் சென்னை மாகாணத்திலும், 1885–இல் வங்காள மாகாணத்திலும், ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. ரிப்பன் பிரவு காலத்தில் லோக்கல் போர்டு (உள்ளாட்சி) சட்டம் இயற்றப்பட்டு, ஜில்லா போர்டு, தாலுகா போர்டு மற்றும் யூனியன்கள் அமைக்கப்பட்டன. சாலைகளில் விளக்குப் போடுவது, ஊர்ச் சுகாதாரம், மருத்துவமனைகள், பள்ளிகள் அமைப்பது, கால்நடைகளையும், சாலைகளையும் பராமரிப்பது போன்ற பணிகளை இந்த ஊராட்சிகள் கவனித்து வந்தன. இச்சட்டங்கள் சரிவர இயங்காத நிலை ஏற்பட்டது. அதுமட்டுமில்லாமல், நியமிக்கப்பட்ட இந்த உறுப்பினர்களின் அமைப்புகள், அதிகாரிகளின் ஆதிக்கக் கூடங்களாகவே இருந்தன. ஒரு கிராமத்திற்கு ஒரு ஊராட்சி என்ற அடிப்படையில் இந்த அமைப்புகள் உருவாக்கப்படவில்லை.

இந்தச் சீர்கேட்டைச் சரி செய்ய அமைக்கப்பட்ட "ராயல் கமிஷன்", கிராமங்களில் ஊராட்சிகளை அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டது. அதன் அடிப்படையில் 1920–ஆம் ஆண்டு, கிராமப் பஞ்சாயத்துகள் சட்டம் இயற்றப்பட்டது. மத்திய அரசின் பரிந்துரைகள் புறக்கணிக்கப்பட்டு, மேல்தளத்தில் இருந்த ஜில்லா போர்டுகளின் மேற்பார்வையிலேயே பஞ்சாயத்துக்கள் இயங்கின. 1884–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட லோக்கல் போர்டு சட்டத்தின் வாரிசாக 1920ல் சென்னை லோக்கல் போர்டுகளின் சட்டம் இயற்றப்பட்டு, இரண்டு சட்டங்களும் ஒன்றாக இயங்கி வந்தன.

1930–ஆம் ஆண்டில் சென்னை லோக்கல் போர்டுகள் சட்டம் திருத்தப்பட்டது. 1946–இல் ஒரு திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இப்படி கடந்த காலத்திலே ஆங்கிலேய அரசு எடுத்த முயற்சிகள் பெரும்பாலும் கண்துடைப்பாகவே இருந்தன. அதிகாரம், வருமானம், கவனிப்பு ஆகியவை இல்லாததால் ஊராட்சிகள் ஆட்சி முறை சரிவர அமையவில்லை. நாடு சுதந்திரம் அடைந்ததும், ஊராட்சி அமைப்பு முறை, அனைத்து மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்றதாக அமைய வேண்டுமென்ற நோக்கத்துடன், 1950–ஆம் ஆண்டு சென்னை கிராம ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் நடைமுறையில் இருந்தபோதிலும், பொதுச் சுகாதாரம் போன்ற சில பொதுக் காரியங்களை, ஜில்லா போர்டுகள் தொடர்ந்து கவனித்து வந்தன. இதன் காரணமாக அவ்வப்போது சிக்கல்கள் தோன்றிக் கொண்டே இருந்தன.

1919–ஆம் ஆண்டு வெள்ளுடை வேந்தர், சர்.பிட்டி. தியாகராயர் – சென்னை மாநகராட்சியின் தலைவராக (பிரசிடெண்ட்) நியமிக்கப்பட்டு, மாநகராட்சி, சென்னை நகர மக்களின் சேவைக்காக முதல் அடியெடுத்து வைத்தது, 4 ஆண்டுகள் பணியாற்றிய அவருக்குப் பின் 10 பேர் அதே பொறுப்பை வகித்துள்ளனர். .

1934–ஆம் ஆண்டு தலைவர் (பிரசிடெண்ட்) ஆட்சி முறையை மாற்றி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் கட்டுப்பாட்டில் மாநகராட்சி இயங்கத் தொடங்கியது. அவ்விதம் சென்னை மாநகராட்சியின் முதல் மேயராக இருந்த பெருமையை இராஜா சர். முத்தையா செட்டியார் பெற்றார்.

அவருக்குப்பின் 42 பேர் நகரின் மேயர்களாக இருந்து பணியாற்றியுள்ளனர். கடைசி மேயராக திரு.ஆர். ஆறுமுகம் 1972–ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்கள் எல்லாம் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர். ஓராண்டு காலத்திற்கு மட்டுமே இந்தப் பதவியை வகித்தனர். இப்போதுதான் முதன்முறையாக ஆறு மாநகராட்சிகளில் மேயர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு – மற்ற உள்ளாட்சித் தலைவர்களைப் போல ஐந்தாண்டு காலத்திற்குப் பதவி வகிக்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்நாட்டில் இரண்டாவது மாநகராட்சி என்ற பெருமையைப் பெற்றது மதுரை மாநகராட்சி. லெவிங்ஸ் என்ற ஆங்கிலேயக் கலெக்டர் 1866–இல் மதுரையில் சிட்டி கவுன்சில் என்ற ஒன்றை அமைத்து அதற்குத் தலைவராக இருந்தார். அந்தக் கவுன்சிலில் நான்கு உறுப்பினர்கள் இருந்தனர். சிட்டி கவுன்சில் முறை 1882–ஆம் ஆண்டு வரை நீடித்தது.

அதன்பிறகு சிட்டி கவுன்சில் என்பது முனிசிபல் கவுன்சில் ஆனது. அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எட்டு பேரும், நியமன உறுப்பினர்களாக ஆறு பேரும் இருந்தனர். மதுரை நகர சபையின் முதல் தலைவராக திரு. இராம சுப்பையர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து திரு. அப்பாசாமி நாயுடு தலைவரானார்.

1921–ஆம் ஆண்டு முனிசிபாலிட்டி சட்டம் அமுலுக்கு வந்தபோது நகரசபை கவுன்சிலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. 27 பேர் கவுன்சிலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒன்பது பேர் நியமன உறுப்பினர்களாக இருந்தனர். நகர்மன்றத் தலைவருக்கு சம்பளம் வழங்க வகை செய்த முனிசிபாலிட்டி சட்டம் இது.

1931–ஆம் ஆண்டில் நகரசபை கவுன்சில் கலைக்கப்பட்டு, 1933–ஆம் ஆண்டு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது.

பின்னர் 1–5–1971 அன்று மதுரை, மாநகராட்சி என்ற தகுதியைப் பெற்று முதல் மேயராக எஸ். முத்து பொறுப்பேற்றார்.

சென்னை, மதுரை மாநகராட்சிகளையன்னியில், இப்போது புதிதாக கோவை, திருச்சி, திருநெல்வேலி. சேலம் ஆகிய நான்கு மாநகராட்சிகள் உள்ளன.

கிராமங்கள் சமுதாய நலத்திட்ட வேலைகளை, மக்கள் அமைப்புடன் இணைந்து செயல்படுத்தினால், அது பயனுள்ளதாக இருக்கும் எனக் கருதி, மாநில அரசுகள், அதற்கேற்றவாறு, ஊராட்சிகள் சட்டம் உருவாக்குவதை ஆராய்ந்து, பரிந்துரை செய்ய, காந்தியவாதியும், நிர்மாணத் திட்டங்களில் ஈடுபாடு உள்ளவருமான, திரு. பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையில், மத்திய அரசு ஒரு குழுவை 1957–ஆம் ஆண்டு நியமித்தது. அந்தக் குழுவானது, மாநில அரசுகளுக்கு மூன்றாடுக்குத் திட்டம் ஒன்றைப் பரிந்துரை செய்தது. அதன்படி, மாவட்ட அளவில் ஒரு அமைப்பும், கிராம அளவில் ஒரு அமைப்பும், இதற்கிடையில் இணைப்பாக ஒரு அமைப்பும் அமைப்பது தான் அத்திட்டத்தின் நோக்கம். அதன் அடிப்படையில் 1958–இல் பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த போது தமிழ்நாட்டில் மாவட்ட வளர்ச்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி என்ற மூன்று அமைப்புகள் உருவாக சட்ட வடிவம் கொடுக்கப்பட்டது.

காலத்தின் தேவைகள் மற்றும் இந்திய மக்களிடையே தோன்றிய விழிப்புணர்வின் காரணமாக ஊரக முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் பயன்கள், அடித்தளத்து மக்களை மேலும் தாமதமின்றிச் சென்றடைய வேண்டும் என்றும், அவர்களையும் திட்டப்பணிகளில் ஈடுபடுத்த வேண்டுமென்றும் ஒரு கருத்து உருவானது. அதன் வெளிப்பாடாக இந்தியப் பாராளுமன்றம், இந்திய அரசியல் சட்டத்திற்கு 1992–ஆம் ஆண்டு திருத்தங்களைக் கொண்டு வந்தது. இவையே 73–வது மற்றும் 74–வது இந்திய அரசியல் சட்டத் திருத்தங்களாகும். இதனால் கடந்த 46 ஆண்டுகளாக மாநிலப் பட்டியலில் இருந்து வந்த பஞ்சாயத்து நிர்வாகம், மத்திய அரசின் பொதுப பட்டியலுக்கு மாற்றப்பட்டது. அதன்படி பஞ்சாயத்து முறை இந்தியா முழுவதும், கிராமப் பஞ்சாயத்து, மாவட்டப் பஞ்சாயத்து, மற்றும் இடையில் ஊராட்சி ஒன்றியம் போன்ற ஓர் அமைப்பு என்ற மூன்று மட்டங்களைக் கொண்டதாக இருக்கும். இதனால், கிராமப்புற மக்களைச் சுயாட்சி அமைப்புகளில் ஈடுபடுத்தி, அந்த அமைப்புகளை முன்நடத்திச் செல்பவர்களாக உருவாக்க முடியும் என்றும், இது மக்களாட்சித் தத்துவத்தை மேலும் வலுப்படுத்தும் என்றும் அரசு கருதியது.

இதனைத் தொடர்ந்து 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் மற்றும் அனைத்து மாநகராட்சிச் சட்டம் திருத்தப்பட்டது.

ஏற்கெனவே இருந்த முறையில், ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு தொடர்பு இருந்தது. அவை ஒன்றையொன்று சார்ந்திருந்தன. ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் இருக்கும் அனைத்து ஊராட்சிகளும் சேர்ந்து ஊராட்சி ஒன்றியமாக இருந்தது. ஆனால் இந்த மூன்றாடுக்கு உள்ளாட்சி அமைப்புகளில், இந்தத் தொடர்பு இல்லை. ஒவ்வொரு அமைப்பும் தனியே இயங்கும் தன்மை கொண்டதாக அரசியல் சட்டப்படி அமைக்கப்பட்டுள்ளது.

ஊராட்சிச் சாலைகளை அமைத்தல், சாலைகளில் விளக்கு வசதி செய்தல், வடிகால்களை அமைத்தல், வடிகால் நீர் மாசுக்களை அகற்றுதல், தெருக்கள் துப்புரவு, பொதுக் கழிப்பிடங்களில் வசதி, இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகள் ஏற்படுத்துதல், கிணறு, குட்டைகள், குளங்கள் தோண்டுதல் போன்றவையும், அவற்றைப் பராமரித்தலும், தமிழகத்திலுள்ள 12,584 ஊராட்சி மன்றங்களில் பல்வேறு பணிகளில் ஒரு பகுதியாகும்.

ஊராட்சி ஒன்றியச் சாலைகள், மற்றும் அவை மீதான சிறுபாலங்கள், அணைகள், தரைப் பாலங்கள் கட்டுதல், பழுது பார்த்தல், மருத்துவமனைகளை நிறுவுதல், ஏழைகளுக்கான வீடுகள், அனாதை இல்லங்கள், கடைகள், விற்பனைச் சாவடிகள் கட்டுமானம் செய்தல், வீட்டுமனை வழங்குதல், போன்றவையும் அவற்றின் பராமரிப்பும் 384 ஊராட்சி ஒன்றிய அலுவல்களில் ஒரு பகுதியாகும்.

பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தைத் தயாரித்தல், மாவட்ட அளவில் நிறைவேற்றக் கூடிய மத்திய நிதி உதவி பெறும் திட்டங்களை ஒருங்கிணைத்தல், மாவட்ட அளவில் நிறைவேற்றக்கூடிய திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடல் போன்றவை 28 மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்பாகும்.

மூன்றாடுக்கு உள்ளாட்சி அமைப்புகளில், மாவட்ட ஊராட்சிகள் முதன் முறையாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு அளிக்கப்பட்ட உரிமைகளில், ஆலோசனை கூறும் உரிமைகளே பெரும்பாலும் உள்ளன. ஆனால், மேலும் என்னென்ன உரிமைகளை – படிப்படியாக மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்குவது என அரசு ஆழ்ந்து பரிசீலித்து வருகிறது.

இந்திய அரசியலமைப்பு (73–வது திருத்தச்) சட்டத்திற்கிணங்க, மாநில நிதிக்குழு ஒன்று 1994–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

உள்ளாட்சி அமைப்களின் நிதிநிலையினை ஆராய்ந்து, நிதி ஆதாரங்கள்ள அதிகரிக்கப் பரிந்துரைத்தல், மாநிலத்திற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே அரசால் விதிக்கப்படும் வரிகள், சுங்கம், கட்டணங்கள் ஆகியவற்றில் இருக்கும் நிகர வருமானத்தைப் பிரித்துக் கொள்வதில் கடைப்பிடிக்கக் கூடிய கொள்கைகளை வகுத்தல், அந்த வருமானத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கானக் கொள்கைகளை வகுத்தல், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைச் செய்ய வேண்டிய வரிகள், சுங்கம், கட்டணங்களை நிர்ணயித்தல், மானியம் அளிப்பதற்கான கொள்கைகளை வகுத்தல் போன்றவை இக்குழுவிற்கு வரையறுக்கப்பட்ட பணிகளாகும்.

இயற்றப்பட்டச் சட்டமும், அதன் அடிப்படையில் அமைந்திடும் மாநில நிதிக்குழு போன்றவையும் இயங்காமல் இருக்கக்கூடிய நிலையை மாற்றி, அவற்றை இயங்க வைக்கும் வகையில்தான், இந்த அரசு பொறுப்பேற்றவுடன் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்தியுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இயற்றப்பட்டச் சட்டமும், அதன் அடிப்படையில் அமைந்திடும் மாநில நிதிக்குழு போன்றவையும் இயங்காமல் இருக்கக்கூடிய நிலையை மாற்றி, அவற்றை இயங்க வைக்கும் வகையில்தான், இந்த அரசு பொறுப்பேற்றவுடன் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்தியுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பல்வேறு நிலைகளில் உள்ள உள்ளாட்சி அமைப்புப் பொறுப்புகளை ஒப்படைச் செய்யவும், அவ்வாறு ஒப்படை செய்பவிருக்கிறப் பொறுப்புகள் சம்பந்தமாக, உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு, கடமைகள் மற்றும் அலுவல்கள் பற்றி, ஆய்வு செய்து பரிந்துரைக்க அரசு ஒரு குழுவை, மாநிலத் திட்டக்குழுவின் கீழ் அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளை ஒரு மாதத்திற்குள் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும், மாவட்ட ஊராட்சியும், 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 240–ஆவது பிரிவின்படி, ஆண்டுதோறும் வளர்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். மாவட்ட திட்டக்குழு ஒன்றை அமைக்கவும், இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அக்குழு, உள்ளாட்சி அமைப்புகளான மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சியில் தயாரிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்டம் முழுவதற்கும் ஒரு வரைவு வளர்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதிலும், செயல்படுத்துவதிலும். ஊராட்சி நிறுவனங்கள கணிசமான பங்கை வகிக்கும்.

பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்திற்காக நடப்பாண்டில் ரூ.60 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகையினைக் கொண்டு உள்ளாட்சி நிறுவனங்கள், மக்களுக்குப் பயன்படக்கூடிய சமூகச் சொத்துக்களை உருவாக்க முடியும்.

1996–97 ஆம் ஆண்டிற்கு, பத்தாவது நிதிக்குழுவினால் வழங்கப்பட்ட மான்யத்தை ஒதுக்கீட செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் ரூ.ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் மாவட்ட ஊராட்சிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொளள் ரூ.15.00 லட்சம் வரை செலவு செய்பலாம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ.10.00 லட்சம் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சிகள். அவைகளுக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து 5 சதவீதத்தினை நிர்வாகத்திற்காகச்

செலவிடலாம். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர், மாவட்ட ஊராட்சியின் முதன்மைச் செயல் அலுவலராக இருப்பார். ஊராட்சி ஒன்றிய பொது நிதியை குடிநீர் விநியோகம், பள்ளிக் கட்டிடங்கள், சாலைப்பணிகள் மற்றும் சிறிய நீர்ப்பாசனம் ஆகியவைகளுக்குச் செலவிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு செலவிடும் முன்னர், குறைந்த பட்சம் ரூ.5.00 லட்சம் பொது நிதியின் இருப்பில் வைக்க வேண்டும். ஊராட்சியின் தலைவர் ஊராட்சியின் செயல் அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர் செயல் அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர் செயல் அலுவலருக்கான அதிகாரங்கள் மற்றும் அலுவல்களைச் செய்யலாம். எங்கெல்லாம் ஊராட்சி உதவியாளர் இல்லையோ, அங்கெல்லாம் பகுதி நேர எழுத்தர்கள் நியமிக்கப்படலாம். ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் பகுதி நேர எழுத்தர்கள் ஊராட்சித் தலைவர் கட்டுப்பாட்டில் இருப்பார்கள்.

நடப்பாண்டில் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், இந்திரா குடியிருப்புத் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம், வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டம், மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியத் திட்டங்களைச் செயல்படுத்த, மத்திய உதவியுடன் மாநில அரசு, ரூ.1,273.17 கோடி நிதி வழங்கியுள்ளது.

இந்த நிதியில் நடப்பாண்டில் எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள், வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், பழங்குடியினருக்கும் கட்டித் தரப்படும். மேலும், மொத்தம் ஐயாயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றப்படும். சதுப்பு நிலங்களில் இருபது குடியிருப்புகள் இருந்தால், அவை பக்கத்தில் உள்ள சாலையுடன் இணைக்கப்படும். அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளிலும் குடிநீர் வசதி செய்து தரப்படும். சமூகக் காடுகள் திட்டம் சீரமைக்கப்படும். 1-8-1996 முதல், தெரு விளக்கு பராமரிப்பு, மின் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முதன் முறையாக நடப்பு ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பேரூராட்சி மற்றும் நகராட்சிகளுக்குப் பெருமளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பேரூராட்சிகளுக்கு ரூ.25 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.9.15 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ள. சென்னை மாநகராட்சியைத் தவிர மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகருக்குட்பட்ட பகுதிகளுக்கு, "சென்னை மாநகர அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம்" மூலமாக நிதி உதவி பெற ரூபாய் ஐம்பது கோடி இந்த மேம்பாட்டுக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சிகள், நகராட்சிகள் அடிப்படை வசதிகளை உயர்த்துவதற்கு வசதியாக நிதி தேவை பற்றிய செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தேவையின் அடிப்படையிலும், மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலும், உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேவையாக நிதி உதவிகளை அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் சொத்து வரி தான் நிதி நிலையை உயர்த்துவதற்கான முதன்மை வரியாகும். பல உள்ளாட்சி நிறுவனங்களில் சொத்து வரியும், மற்ற வரிகளும் அதிக அளவில் நிலுவையில் உள்ளன. புதிய உள்ளாட்சி நிறுவன மன்றங்கள் இந்த நிலுவையிலுள்ள வரிகளை முறைப்படி வசூலித்து உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நிலையை உயர்த்த தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மேலும் தற்போதைய சொத்து வரி, வீட்டு வாடகை அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த முறையைப் பின்பற்றுவதில் பல குறைபாடுகள் உள்ளன. எனவே சொத்து வரி நிர்ணயிப்பது குறித்து புதிய முறைகளை வகுப்பதற்கு, ஏற்ற கருத்துக்களை, நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனத் தலைவர்கள் வழங்கலாம்.

சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இதன் அடிப்படையில் 1920 ஆம் ஆண்டு அனைத்து நகராட்சிகளுக்கும், 1971 மற்றும் 1981ஆம் ஆண்டுகளில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு தனித்தனியாகவும் சட்டங்கள் தயாரிக்கப்பட்டன. 1994ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட திருச்சி, சேலம், திருநெல்வேலி மாநகராட்சிகளுக்கும், கோவை மாநகராட்சி சட்டப் பிரிவுகள் பொருந்தும் என்று மூன்று தனிச் சட்டங்களும்

வெளியிடப்பட்டன. எனவே நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தற்போது ஏழு சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இச்சட்டங்களின் மூல ஆதாரச் சட்டமாகிய சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டதால், தற்போதுள்ள சூழ்நிலைக்கு, சில சட்டப்பிரிவுகள் பொருந்தாமல் உள்ளன. அவைகளை நீக்கி, சில புதிய சட்டப் பிரிவுகள் கொண்டு வரவேண்டியுள்ளது.

இவ்வாறு ஏழு சட்டங்களுக்கும் திருத்தங்கள் செய்வதற்குப் பதிலாக, அனைத்துப் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்குப் பொருந்தும் வகையில், கேரள மாநிலத்தில் உள்ளது போனற ஒரு பொதுவான சட்டம் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் இந்த வரைவுச் சட்டம் தயாரிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வரைவுச் சட்டத்தின் நகல்களின் பேரில் பொது மக்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களைப் பெற உரிய வழிவகை காணப்படும். பிற மாநிலங்களில் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு எவ்வாறு கூடுதல் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நேரில் பார்க்கச் செய்தும், தமிழ்நாடு மாநில நிதிக்குழு பரிந்துரைகளின் அடிப்படையிலும், நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு கூடுதல் உரிமைகள் வழங்குவதற்கு புதிய சட்டத்தில் சட்டப் பிரிவுகளைச் சேர்த்து, வருகின்ற சட்டமன்ற வரவு செலவுக் கூட்டத் தொடரில் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களுக்கு நிர்வாகத்தைப் பற்றி பயிற்சி அளிக்க கோயம்புத்தூரில் ஒரு பயிற்சி நிலையம் உள்ளது. இந்தப் பயிற்சி நிலையத்தில் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி நிறுவன உறுப்பினர் மற்றும் தலைவர்களுக்கு உள்ளாட்சி நிர்வாகத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு வசதியாக பயிற்சி கொடுக்கலாம் என்று கருதப்படுகிறது. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் சுமார் 15,000 தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உள்ளதால் இவர்களுக்கு கோயம்புத்தூரில் உள்ள பயிற்சி நிலையத்தில் மட்டும் பயிற்சி அளிக்க வேண்டுமென்றால் ஐந்து அல்லது ஆறு மாதங்களுக்கு மேலாகிவிடும்.

எனவே பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு மாவட்டத் தலைநகரிலும், சம்பந்தப்பட்ட மாநகாாட்சி அலுவலகங்களிலும் தனித்தனியாக பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தந்த நிர்வாகத் துறை அலுவலர்களும், கோயம்புத்தூர் நகர்ப்புற நிர்வாகப் பயிற்சி நிலைய அலுவலர்களும் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று பயிற்சி அளிக்க, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. என்னென்ன பொருள்கள் குறித்து பயிற்சி அளிக்க வேண்டுமென்பதைக் கோயம்புத்தூர் பயிற்சி நிலையம் தயாரித்து அதன் அடிப்படையில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்துப் பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளிப்பது தவிர, பெண் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் முதல் முறையாக பெருமளவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால், அவர்களுக்கு தனியாக ஒரு பயிற்சி அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பயிற்சிக்காக மட்டும் அரசு ரூ.ஐம்பது இலட்சம் தொகையை ஒதுக்கியுள்ளது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர், நல்ல சாலைவசதி, போதிய தெரு விளக்குகள், சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் அவர்களது உறைவிடத்தில் கிடைக்க வேண்டும் என்பதே கிராமப்புறங்களில் உள்ள சராசரி குடி மக்களின் எதிர்பார்ப்பாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாகிய நீங்கள், இந்த அடிப்படை வசதிகளை மக்களுக்குச் செய்து கொடுக்க உங்களது சீரிய கவனத்தைச் செலுத்துவீர்கள் என்று நான் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்ற கடந்த சில ஆண்டுகளில் பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிட்டதாக காட்டப்பட்ட போதிலும், உண்மையில், அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதில் மிகப் பெரிய அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை நாம் எல்லோரும் நன்கறிவோம்.

வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்ற மாநில மக்களின் விருப்பத்தை நிறைவுசெய்ய, மக்களின் பிரதிநிதிகளான உங்களுக்கு மேலும் அதிக உரிமைகளையும், நிதி ஒதுக்கீட்டையும் செய்ய வேண்டுமென்பதை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. இதுபற்றிய தனது பரிந்துரைகளை அரசுக்கு அளிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் "மாநில நிதிக்குழு" தனது அறிக்கையை அரசின் பரிசீலனைக்கு நேற்று (29–11–96) காலை தமிழக ஆளுநரிடம் வழங்கியுள்ளது. இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்களின் மூலம் கிடைக்கும் அனுபவத்தைக் கொண்டு, திட்டங்களை நிறைவேற்ற, உள்ளாட்சி அமைப்புகளுக்கு படிப்படியாக கூடுதல் உரிமைகளையும் அதற்கொப்ப நிதி ஆதாரங்களையும் அரசு அளிக்கும்.

இந்த மாநாட்டில் அனுபவம் வாய்ந்த உள்ளாட்சி மன்றத் தலைவர்களும், அனுபவம் பெறவிருக்கும் உள்ளாட்சி மன்றத் தலைவர்களும் கலந்து கொண்டிருக்கிறீர்கள். மாநகரங்கள், நகரங்கள், பேரூர் – சிற்றூர்கள் – இங்கெல்லாம் வாழ்கின்ற மக்கள் இந்த அரசிடமும், உங்களிடமும் ஏராளமாக எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற – தொண்டுள்ளத்தோடு – நேர்மை, நாணயம் இவற்றை உயிரை விட மேலாக மதிக்கும் தூய்மையான மனத்தோடு, இந்த மக்கள் பணியில் நம்மை நாமே ஒப்படைத்துக் கொள்ளவேண்டும். இந்த உணர்வைத் தான் உங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் நான் எதிர்பார்க்கிறேன். என் எதிர்பார்ப்பும், மக்களுடைய எதிர்பார்ப்பும் ஏமாற்றத்திற்கு உள்ளாகாமல் – சேர்ந்து பணியாற்ற வாரீர் என்று உங்களை எல்லாம் அழைக்கின்றேன்.

5. உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட குழு அறிக்கைகள்

⌘ ⌘ ⌘

குழு 1: ஊராட்சி ஒன்றியங்களுக்கான அதிகார ஒப்படைப்பு பற்றிய ஆலோசனை குழுவின் அறிக்கை

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

1. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் பணிகளில் ஆரம்பப் பள்ளிக் கட்டிடம், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், சத்துணவு மையக் கட்டிடம், தாய், சேய் நலவிடுதி, சிறுபாசன ஏரிகள் போன்ற பணிகள் ஊராட்சி ஒன்றியம் மூலம் தான் செய்யப்பட வேண்டும். பல பணிகளை ஊராட்சி ஒன்றியத்தின் மேற்பார்வையில் ஊராட்சி செய்யவேண்டும். கழிவுநீர்க் கால்வாய் போன்ற பெரிய பணிகளை ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் செய்ய அனுமதிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தின் பங்கு 15% என உள்ளதை 40% ஆக உயர்த்த பரிந்துரை செய்கிறது.

இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்

2. தொகுப்பு வீடுகள் கட்ட நிர்ணயித்துள்ள மதிப்பீட்டுத் தொகை உயர்த்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறு கொடுக்கப்படும் போது அந்தந்த மாவட்டத்தில் குவாரியில் இருந்து உள்ள தூரத்திற்கு ஏற்ப மதிப்பீடு தயாரித்து அதற்கேற்ப நிதி வழங்க வேண்டும்.

3. தொகுப்பு வீடுகளுக்கான பயனாளிகள் தேர்வினை ஊராட்சி ஒன்றியக் குழுவின் மூலம் தேர்வு செய்ய வேண்டும்.

4. இந்த தொகுப்பு வீடுகள் கட்டுவதை பயனாளிகளிடம் ஒப்படைக்க வேண்டும். பயனாளிகள் முன்வராதபட்சத்தில் ஊராட்சி ஒன்றியம் சம்மந்தப்பட்ட குழு மூலம் செய்ய வேண்டும்.

5. முந்தைய ஆண்டுகளில் கட்டி முடித்து இடிந்த மற்றும் இடியும் தருவாயில் உள்ள வீடுகளை அதே இடத்தில் அதே பயனாளிகளுக்கு புதியதாக ஒரு வீடு கட்டிக்கொடுக்க இக்குழு பரிந்துரை செய்கிறது.

மில்லியன் கிணறு திட்டம்

6. ஜீவன்தாரா கிணறுகளில் பயனாளிகள் தேர்வை ஊராட்சி ஒன்றியம் குழு மூலம் செய்ய வேண்டும்.

7. பாசன ஏரிகள் போன்ற மற்ற பணிகளையும் ஊராட்சி ஒன்றியம் மூலம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

8. இதில் பயனாளிகள் தேர்வு செய்யும் பணியின், ஊராட்சி ஒன்றியத் தலைவர், கிராமங்களில் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் வார்டு உறுப்பினர், சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர், வங்கி அலுவலர் ஆகியோரைக் கொண்ட குழுதான் இறுதி செய்யவேண்டும் என பரிந்துரை செய்கிறது.

கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்

9. இதில் பயனாளிகள் தேர்வுக் குழுவில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் தலைமையில் நடைபெற வழிவகை செய்யவேண்டும்.

10. பயிற்சியில் பங்குபெறும் பயனாளிகளில் ஊக்கத் தொகையை தாமதமின்றி உடனுக்குடன் வழங்க வேண்டும் என பரிந்துரை செய்கிறது.

11. பயிற்சி முடித்த பயனாளிகளுக்கு உடன் வேலைவாய்ப்புக்கான வழி வகை செய்ய வங்கிகள் மூலம் கடன் தொகை வழங்கவேண்டும்.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

12. இத்திட்டத்தில் வழங்கப்படும் சுழற்சி நிதியில் கடன்பெறும் பயனாளிகளுக்கு, திரும்ப வழங்கும்போது மான்யத்துடன் திரும்பச் செலுத்த பரிந்துரை செய்ய வேண்டும்.

13. இந்திரா நினைவுக் குடியிருப்பு மற்றும் மில்லியன் கிணறுத்திட்டம் இவைகளில் மின்னிணைப்பு வழங்குவதில் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு உள்ள முன்னுரிமை போன்ற பிற்பட்ட இனத்தவருக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும்.

தேசிய கரிம வாயு மேம்பாட்டுத் திட்டம்

14. இத்திட்டத்தில் 3 கன மீட்டர் கொள்ளவு உள்ள கலன்களுக்கு மட்டும் மான்யம் வழங்கப்படுகிறது. இதனை மாற்றி 3 கன மீட்டருக்கும் மேல் உள்ள கலன்களுக்கும் மான்யம் வழங்க வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகிறது.

பொது பரிந்துரைகள்

1. ஊராட்சிகளுக்கான நிதிக்குழு மானில அளவில் தொடர்ந்து நிரந்தரமாக இயங்க வேண்டும்.

2. ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்களுக்கு ரூ.1500/- கௌரவ ஊதியமாக்க வேண்டும்.

3. ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர்களுக்கு தனியாக வாகன வசதி செய்து தர வேண்டும்.

4. ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுபாட்டில் 1962 முதல் இயங்கி வந்த ஆரம்ப கல்வி, சுகாதாரம், வேளாண்மை, கால்நடை, சத்துணவு போன்ற அனைத்து துறைகளும் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் வரவேண்டும்.

5. ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள ஒன்றிய பணியாளர் பதவிகளை ஊராட்சி ஒன்றியமே நிரப்பிக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.

6. ஊராட்சி ஒன்றிய சாலைப் பணியாளர்கள் பதவிகளை மீண்டும் நிரப்ப அனுமதி வழங்கவேண்டும்.

⌘ ⌘ ⌘

குழு - 2: ஊராட்சிகளுக்கு அதிகார ஒப்படைப்பு பற்றிய ஆலோசனைக் குழுவின் அறிக்கை

1.. ஊரக குடிநீர் திட்டங்கள்

கிராமங்களில் குடிநீர் வசதிக்காக போதுமான ஆழ்குழாய் கிணறுகள் இல்லை. ஆகவே அதிகப்படியான ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க தமிழக அரசுக்கு பரிந்துரை செய்யப்படுகின்றது.

2. விசைப்பம்புகள்

மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டிகள் கிராமங்களில் போதுமான அளவு இன்னும் கட்டித் தரப்படவில்லை. ஆகவே தேவையான அளவுக்கு தேவையான கிராமங்களுக்கு உடடினயாக மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டித் தரும்படி தமிழக அரசை இக்குழு கேட்டுக்கொள்கிறது.

3. கைபம்பு, விசைபம்பு பராமரிப்பு

கைபம்புகள் பராமரிப்பதற்கு தற்பொழுதுள்ள பணியாளர்கள் போதுமானதாக இல்லை. ஆகவே அவர்களுடைய எண்ணிக்கையை 100 : 1 என்ற விகிதத்தில் நியமனம் செய்ய வேண்டும். கைபம்பு மற்றும் விசைபம்பு உதிரி பாகங்களை

வாங்கும் அதிகாரத்தினை ஊராட்சி ஒன்றியங்களுக்கே அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இக்குழு பரிந்துரைக்கின்றது. கைபம்பு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கப்படும்பொழுது ஊராட்சி மன்றத் தலைவர்களையும், பெருந்தலைவர்களையும் கலந்தாலோசித்து இடங்களை தேர்வு செய்யும்படி இக்குழு பரிந்துரை செய்கின்றது.

4. கூட்டு குடிநீர்த் திட்டம்

இத்திட்டம் கிராமங்களில் நல்லமுறையில் செயல்பட்டு மக்களுக்கு பயனளிக்கிறது. ஆகவே இதனை அனைத்து கிராமங்களிலும் இம்மாதிரியான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு இக்குழு பரிந்துரை செய்கிறது.

விசைபம்பு பராமரிப்பதற்கு தற்போது கோட்ட அளவில் ஒரு இளநிலைப் பொறியாளர் மட்டும் அவர்களுடைய கோட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சென்று பழுது பார்க்க இயலவில்லை. ஆகவே ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும், 25 மேல்நிலை தொட்டிகளுக்கு மேல் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒருஇளநிலை பொறியாளர் மற்றும் 2 தொழில் நுட்ப உதவியாளர்கள் என்ற வகையில் நியமனம் செய்ய வேண்டும் என்று இக்குழு பரிந்துரைக்கின்றது.

1500 மக்கள் தொகை உள்ள கிராமங்களில் மேல்நிலைத் தொட்டிகளில் இருந்து நீரினை விட்டு இணைப்பு மூலம் வழங்கி அதன் மூலம் ஊராட்சி மன்றங்களுக்கு வருமானத்தை பெருக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தருமாறு இக்குழு அரசுக்கு பரிந்துரை செய்கின்றது. கிராம ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான நிதி வசதி இல்லாததால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு உரிய மின்சாரக் கட்டணத்தை செலுத்த இயலவில்லை. ஆகவே மின்கட்டணத்தை கட்ட வசதி இல்லாத ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு முழு மான்யம் அளிக்க வேண்டும் என்று இக்குழு பரிந்துரை செய்கிறது.

5. மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம்

தற்போது ஒரு தனி நபருக்கு கழிப்பிடம் கட்டுவதற்கு அரசு ரூ.2000/- மானியமும் ரூ.500/- பங்குத் தொகையும் கொடுக்கப்பட வேண்டும் என்று விதிமுறைகள் உள்ளது. மேற்படி கழிவறை ஏழை எளிய மக்களுக்குக் கட்டுவதனால் பங்குத் தொகையை ரூ.500/- கொடுக்கவேண்டும் என்பதை ரத்து செய்து முழு மானியத்தில கழிப்பறை கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கவேண்டுமாய் இந்தக் குழு பரிந்துரை செய்கிறது.

பள்ளிகளில் குறிப்பாகப் பெண்கள் பள்ளிகளில் கழிப்பிடங்கள் இன்னமும் கட்டவேண்டிய நிலைமை உள்ளது. ஆகவே பள்ளிகளில் தேவைகளைக் கணக்கிட்டு ஒரே வருடத்தில் தேவையான அனைத்துப் பள்ளிகளுக்கும் கழிப்பறை கட்டுவதற்கு உதவிகள் வழங்க வேணுமாய் அரசுக்குப் பரிந்துரை செய்கிறது.

6. உள்ளூர் சாலை மானியம்

தற்போது அரசு வழங்கும் உள்ளூர் சாலை மானியம் போதுமானதாக இல்லை என்றும், சாலை மேம்பாடு செய்ய சாதாரண சாலைகளுக்கு ரூ.535/- கொடுப்பதை ரூ.1000/- ஆக உயர்த்தவேண்டும் என்றும், நபர் ஒன்றுக்கு 18 பைசா வீதம் கொடுப்பதை 50 பைசாவாக உயர்த்தவேண்டும் என்றும் இக்குழு பரிந்துரை செய்கிறது. சாலைப் பணியாளர்கள் இறந்துவிட்டால் ஏற்படும் காலம் பணியிடங்களில் அந்தப் பணியிடம் நிரப்பப்படாமல் இருக்கிறது. பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவது இல்லை. சாலை பராமரிப்பு அவசியம் என்பதன் காரணமாக ஊராட்சி ஒன்றிய சாலைகளின் எண்ணிக்கை மற்றும் நீளத்துக்கு ஏற்றவாறு சாலைப் பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு அதிகாரங்கள் வழங்கப்பட இக்குழு பரிந்துரை செய்கிறது.

1996–97ல் தமிழக அரசு 5000 கி.மீ. சாலைகளைத் தார் சாலைகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை 10000 கி.மீட்டராக உயர்த்தித் தரும்படியும், அதற்குரிய நிதி வசதிகளை செய்து தரும்படியும் இக்குழு பரிந்துரை செய்கிறது.

7. தெரு விளக்குகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் பொறுப்பேற்ற பிறகு கிராமங்களில் தெரு விளக்குகள் எரிவதற்கு அதிகமான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதன் காரணமாக தெரு விளக்குகள் எரிவதில் தற்போது திருப்திகரமான நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் இக்குழு தனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

பரிந்துரைகள்

1) மின்விளக்கு பராமரிப்பினை தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ஒப்படைத்து விடலாம் எனவும், மின் விளக்கிற்கு தேவையான பொருட்களை உயர் மட்டக் குழுவினால் நிர்ணயம் செய்யப்படும் விலையில் தரம் வாய்ந்த உதிரிப்பாகங்களை ஊராட்சி ஒன்றியம் மூலம் வாங்கி, மின் வாரியத்திற்கு அளிக்கலாம் எனவும் இக்குழு பரிந்துரை செய்கிறது.

மின் கட்டணம் செலுத்துவதற்கு ஊராட்சிகளில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே மின் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்க இக்குழு பரிந்துரை செய்கிறது. மேலும் ஒட்டு மொத்த ஏழ்மை மற்றும் வறுமையில் வாடும் ஊராட்சிகளுக்கு விளக்கு மற்றும் உதிரிப்பாகங்கள் வாங்குவதற்கு தொகையினை அரசே எற்கவேண்டும் என்று இக்குழு பரிந்துரை செய்கிறது. கூடுதல் மின் விளக்குக் கம்பங்கள் அமைப்பதற்கு மின் வாரியத்திற்கு வைப்பு கட்டணத் தொகை செலுத்த இயலாத ஊராட்சிகளுக்கு அரசே முழு மான்யத் தொகை வழங்கவேண்டும் என இக்குழு பரிந்துரை செய்கிறது.

2. சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகள் பராமரிப்பு

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் சுமார் 300 முதல் 500 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. இவைகளை நிறுவுவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவின் பேரில் அறைகள் கட்டப்பட்டு வருகிறது. இந்த தொலைக்காட்சிப் பெட்டிகளை பராமரிக்க தற்போது கோட்டயளவில் மட்டும் ஒரு தொழில் நுட்ப உதவியாளர் மட்டும் உள்ளார். இந்நிலையை மாற்றி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியளவில் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் உடனாள் நியமிக்கப்பட்டு, ஒன்றிய அளவில் தொலைக்காட்சிப் பெட்டிகளை நல்ல முறையில் பராமரிக்க ஆவண செய்யவேண்டும். இதற்கான பராமரிப்பு செலவினை அரசே மான்யமாக அளித்திட இக்குழு கேட்டுக்கொள்கிறது.

3. சமுதாயக் கல்வி மான்யம்

தற்போது அரசு அளிக்கும் மான்யம் பத்திரிகைகள் மற்றும் கண்காட்சிகளுக்கு போதுமானதாக இல்லை. ஆகவே, இந்த மான்ய தொகையினை அதிகரித்துத் தரும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

4. கால்நடை பராமரிப்பு மான்யம்

கால்நடை மருத்துவமனைகளுக்கு 3வது மற்றும் 4வது கட்டிடம் கட்டுவதற்கு அரசு மான்யம் போதுமானதாக இல்லை. ஆகவே இதனை உயர்த்தித் தருமாறு இக்குழு பரிந்துரை செய்கிறது.

கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை கிளை நிலையங்கள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர பரிந்துரை செய்கிறது.

5. சிறுபாசன மான்யம் மற்றும் தலபாசன மான்யம்

முன்னாள் ஜமீன் ஏரிகள் பொதுப் பணித்துறையினரால் சீர் செய்யப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு பராமரிப்பிற்காக கொடுக்கப்படுகிறது. அவைகளை பராமரிப்பதற்கு போதுமான மான்யம் அளிக்கும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு ஏரியை பராமரிக்க வேண்டும் என்று தற்போதுள்ள விதியை மாற்றி மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பராமரிப்பதற்கு போதுமான நிதி வசதி செய்து தருமாறும் இக்குழு அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

6. ஊரக மருந்தகங்கள் மான்யம்

தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.5400/- முழு நேர மருந்தகத்திற்கும் ரூ.2400/- பகுதிநேர மருந்தகத்திற்கும் அரசு மான்யம் அளிக்கப்படுகிறது. இவற்றிக்கு அரசு அளிக்கும் மான்யம் போதுமானதாக இல்லை. ஆகவே ஒரு மருந்தகத்திற்கு 1.00 இலட்சம் அரசு மான்யம் அளிக்கப்பட வேண்டும் என் இக்குழு பரிந்துரை செய்கிறது.

5000 மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு ஒரு சித்தா மருந்தகம் வீதம் அமைத்துத் தரும்படி இக்குழு அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

7. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம்

மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளில் சாலைப் பணிகள் மற்றும் பாலம் கட்டும் பணிகள் ஆகியவைகளுக்கு முன்னுரிமை அளித்து, தற்போதுள்ள 20% என்பதனை 40% ஆக அதிகரித்து ஆணைகள் வழங்கும்படி இக்குழு அரசுக்கும் பரிந்துரை செய்கிறது.

(2) ஊரக பகுதிகளுக்கு தற்போதுள்ள 60% மற்றும் நகர பகுதிகளுக்கு தற்போதுள்ள 40% ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இதனை ஊரக பகுதிகளுக்கு 75% ஆகவும், நகர பகுதிகளுக்கு 25% ஆகவும் மாற்றித் தரும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

8. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஒரு பணிக்கு ரூ.10,00 இலட்சத்திற்கு மேற்பட கூடாது என்ற உச்சவரம்பினை நீக்கி விடலாம் என இக்குழு பரிந்துரை செய்கிறது.

9. சத்துணவுத் திட்டம்

அங்கவாடித் திட்டம், பள்ளி சத்துணவு திட்டம் ஆகியவைகள் ஊராட்சி ஒன்றியங்களின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என இக்குழு பரிந்துரை செய்கிறது.

தற்போதுள்ள 15 நாட்களுக்கு ஒருமுறை முட்டை வழங்க வேண்டும் என்ற விதியினை மாற்றி வாரத்திற்கு ஒரு முறை முட்டை வழங்க இக்குழு பரிந்துரை செய்கிறது.

சோயாபீன்ஸ் கிராமங்களில் வரவேற்பு இல்லாததினால் இதற்கு பதிலாக பருப்பு அளவினை உயர்த்தி தரும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

தற்போது எண்ணெய் 1 கிராம் அளவு என்பதனை மாற்றி 1.5 கிராம் என்ற அளவில் வழங்கும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

தற்போது காய்கறி, மளிகை சாமான்கள் ஒரு நபருக்கு 0.18 பைசா வீதம் வழங்கப்படுவதை மாற்றி 0.25 பைசா வீதம் வழங்கும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

10. தலவரி, தலமேல் வரி ஈட்டு மானியம்

தலவரியில் கல்வி நிதிக்குக் கொடுக்கப்படும் பங்குத் தொகையை நிறுத்திவிட்டு, இதனை ஊராட்சி ஒன்றியப் பொது நிதிக்கு அளிக்கும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

11. வீட்டு வரி இணை மானியம்

வீட்டு வரி இணை மானியம் தற்போது 100 சதவீதமாக அளிக்கப்படுகிறது. இதனை 200 சதவீதமாக உயர்த்திக் தருமாறு இக்குழு பரிந்துரை செய்கிறது. வீட்டு வரி மற்றும் தொழில் வரி ஆகியவைகளை வசூல் செய்வதற்கு ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு முழு நேர ஊழியர் நியமனம் செய்ய இக்குழு பரிந்துரை செய்கிறது. மேலும் ஊராட்சியின் வரவு,

செலவுக் கணக்குகளை அவ்வப்போது எழுதுவதற்கும் ஊராட்சி மன்றத் தலைவருக்கு உதவியாக இருப்பதற்கு ஒரு இளநிலை எழுத்தாளர் பணியிடம் தோற்றுவிக்கவேண்டும். இதற்குரிய செலவினத்தை அரசே ஏற்றுக்கொள்ளும் படியும் இக்குழு பரிந்துரை செய்கிறது.

12. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் முக்கிய கோரிக்கைகள்

ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு மதிப்பூதியம் ரூ.1000/- ஆகவும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கிராமங்களுக்கு அடிக்கடி ஆய்வுசெய்யவேண்டி உள்ளதால் அவர்களுக்கு ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு உள்ள டீசலின் இலக்கினை மாற்றி 300 லிட்டராக உயர்த்தி தரமாறு இக்குழு பரிந்துரை செய்கிறது.

குழு . 3 : "ஊராட்சி ஒன்றியங்களின் நிதி ஆதாரங்களும் அதனை மேம்படுத்தலும் தொடர்பாக" ஊராட்சி ஒன்றிய தலைவர்களின் பரிந்துரைகள்

பரிந்துரைகள்

1. தெருவிளக்கு மின்கட்டணம், குடிநீர் விசைப்பம்பு மின்கட்டணம் ஆகியவற்றை முழுவதும் அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்கனவே விவசாய மின்சாரப் பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுப்பது போல் இதுவும் அரசால் கொடுக்கப்பட வேண்டும்.

2. கல்குவாரி, மணல், செம்மன் கிராவல் எடுக்கும் உரிமை அரசால் ஏலமிடுவதற்கு பதிலாக ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேலே கண்ட இனங்களில் ஏலமிடும் உரிமை ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும். அதில் வருமானம் 50 சதவிகிதம் ஊராட்சி ஒன்றியத்திற்கும், 50 சதவிகிதம் ஊராட்சிக்கும் கொடுக்க வேண்டும்.

3. தனியார் நிலங்களில் கல்குவாரி, மணல் எடுக்கும் உரிமைக்கு உரிமம் தாசில்தார் வழங்கி, கட்டணம் அரசுக்கு செலுத்தப்பட்டு தற்பொழுது 90% ஊராட்சி ஒன்றியத்திற்கு வரவுவைக்கப்படுகிறது. (45% ஊராட்சி ஒன்றியம், 45% ஊராட்சி). இந்தக் கட்டணத்தை நேரடியாக ஊராட்சி ஒன்றியத்திற்கு செலுத்த அரசு உத்திரவிட வேண்டும். அரசிடமிருந்து இந்தக் கட்டணம் 90% பெற மிக காலதாமதமாகிறது.

4. ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான வாரச்சந்தைகள், பேரூராட்சி எல்லையில் இருந்தாலும், ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பிலும் வருமானம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வர வேண்டும். சுங்கவரி வசூலிக்கும் இனங்களும் ஊராட்சி ஒன்றியத்திற்கே கொடுக்கப்பட வேண்டும்.

5. 1-4-74 முதல் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் (அலுவலக உதவியாளர்கள், பதிவறை எழுத்தர்கள், மகப்பேறு ஆயாக்கள் போன்றவர்கள் நீங்கலாக) அரசுப் பணியாளர்களாக மாற்றி அரசு உத்திரவிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பணியாளர்கள் தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். ஆனால் 5 இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர் ஆகியோர்களுக்கு மாதந்தோறும் சம்பளம் மற்றும் இதர படிகள் ஒன்றியப் பொது நீதியிலிருந்து வழங்கப்படுகிறது. இதனால் கணிசமான தொகை ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து செலவாகிறது. எனவே, இப்பணியாளர்கள் ஊதியத்தை அரசுத் தலைப்பிலிருந்து பெறும் வகையில் உத்திரவு பிறப்பிக்கலாம்.

6. நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் "ஓ.என்.ஜி.சி" இயற்கை வாயு, மற்றும் எண்ணெய் எடுப்பதற்கு ராயல்டி வசூல் செய்கிறார்கள். அதில் 25% ஊராட்சி ஒன்றியத்திற்கு கொடுக்க வேண்டும்.

7. உள்ளூர் சாலை மான்யம் தற்பொழுது வழங்கப்படும் விகிதம் போதுமானதாக இல்லை. சாலைப் பணியாளர்கள் (கேங்க் கூலிகள்) சம்பளம் கொடுக்கவே போதுமானதாக இல்லை. இதனை ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ள சாலையின் நீளம், சுழற்சி முறையில் பராமரிப்பு மதிப்பீட்டின் அடிப்படையில் மான்யம் வழங்க வேண்டும்.

8. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் அரசு நிலங்களில் ஆண்டிமடம், ஜெயங்கொண்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியங்களில் வனத்துறையினர் அரசு வனத்தோட்ட கழகம் மூலம் முந்திரி மரங்கள் பெருமளவில் பயிரிட்டு ஒரு ஆண்டிற்கு கிடைக்கும் ஏல வருமானம் ரூ.1 கோடிக்கு மேல் உள்ளது. இதில் 50% ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும்.

9. மதுக் கடைகள் ஏலம் அரசு விடுவதின் மூலம் வருமானத்தை 25% ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும்.

10. ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள பொதுப்பணித்துறை, ஊராட்சி ஒன்றிய கண்மாய்களில், கால்வாய்களில் வளர்க்கும் மரங்களை ஏலம் விடும் உரிமை ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும்.

சமூகக் காடுகள் துறை மூலம் கண்மாய்களில் வளர்க்கும் மரங்களையும் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஏலம் விட வேண்டும்.

11. மீன்பாசி ஏலமிடும் உரிமையும் எல்லாக் கண்மாய்களிலும் ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும்.

12. தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டம் கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள நெய்வேலி லிக்னைட் நிறுவனம் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு அடிப்படை வசதி செய்ய அரசு உத்திரவிட வேண்டும்.

13. அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு இடங்களிலும் வருமானம் அளிக்கும் மர வகைகளை நடுதல், பாதுகாத்தல் முதலிய பணிகளை செய்ய ஊராட்சி ஒன்றியத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டால் ஊராட்சி ஒன்றியத்தின் நிதி ஆதாரத்தைப் பெருக்கலாம்.

14. ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான கட்டிடங்களை அரசுத்துறைக்கு வாடகைக்கு விட்டு வருவாயை அதிகரிக்கலாம்.

15. முத்திரைக் கட்டணத்தில் 25% ஊராட்சி ஒன்றிய பொது நிதிக்கு வழங்கப்பட வேண்டும்.

16. ஊராட்சி எல்லைக்குள் வைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு உரிமக் கட்டணம் விதித்து வசூல் செய்யலாம்.

17. ஊராட்சி ஒன்றியப் பொது நிதிக்கு கொடுக்கப்படும் அரசு மானியம் 1996–97க்கு ரூ.10.00 லட்சம் அனைத்து ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. இதனை ஊராட்சி ஒன்றியங்களில் 1 முதல் 6 வரை உள்ள வகைப்படி ஒவ்வொரு ஆண்டும் ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும்.

18. காற்றாடிகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் இடங்களில் இதற்கு அரசு பல சலுகைகள் செய்து வருகிறது. எனவே இந்த இடங்களில் ஒவ்வொரு மின் காற்றாடிக்கும் ரூ.2,500 முதல் 3,000 வரை வரி விதித்து அதனை ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் சேர்க்கலாம்.

குழு - 4 : ஊராட்சி ஒன்றியங்களின் கடமைகளும் பொறுப்புகளும் பற்றிய அறிக்கை

1. ஊராட்சி கூட்டங்களின் போது, ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் ஊராட்சி மன்ற கூட்டத்தின் பொழுது, மாவட்ட ஊராட்சித் தலைவர்களும் கலந்து கொள்ளுதல் அவசியம். அவ்வாறு பங்கேற்று கூட்டத்தில் கலந்து கொள்வதால் ஆங்காங்கே உள்ள குறைபாடுகளும், பிரச்சனைகளும் தெரிய வந்து, அதனை எளிதில் தீர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும்.

2. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்களுக்கும் அரசு செலவில் தொலைபேசி வசதி செய்து கொடுக்க அரசு வழி வகை செய்ய வேண்டும்.

3. ஊராட்சி ஒன்றிய தலைவரது வீட்டில் தொலைபேசி வசதி செய்ய ஏற்கனவே ஆணை இருப்பினும், அதனை உடனே அவர்களது வீட்டில் இணைப்பினைப் பெற உரிய ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.

4. ஊராட்சி ஒன்றிய தலைவர்களுக்கு தனியாக அலுவலகத்திற்கு தொலைபேசித் தொடர்பு அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

5. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்திர ஊதியம் வழங்கப்படுவது போல் ஊராட்சி ஒன்றியதலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி உறுப்பினர்களுக்கு மாதாந்திர ஊதியம் வழங்க வழி வகை செய்ய வேண்டும்.

6. ஊராட்சி ஒன்றிய தலைவர்களுக்கு அரசு செலவில் தனியாக ஒரு வாகனம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

7. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பழைய மற்றும் கழிவிடை செய்யப்பட வேண்டிய வாகனங்கள் அனைத்தையும் மாற்றி புதிய வாகனங்கள் வழங்க உடனடியாக ஆவன செய்ய வேண்டும்.

8. ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனைத்து பிறதுணை திட்டப்பணிகளை அந்தந்த ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சிக்கு தெரிவித்தால் அது தேவையான வேலைதானா ? சரியான முறையில் நடைபெறுகிறதா ? தவறுகள் உள்ளனவா என கண்காணிக்க வாய்ப்பாக இருக்கும்.

9. பழங்காலத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள அநேக ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் அலுவலர்கள் அமர்ந்து பணி செய்ய எதுவான நிலையில் இல்லாமல் உள்ளது. இது போன்ற கட்டிடங்கள் புதுப்பிக்கவோ அல்லது புதிதாக கட்டவோ உரிய ஆணை விரைவில் வழங்கிட வேண்டும். தற்போது நெடுஞ்சாலை துறையினால் பராமரிக்க இக்கட்டிடங்களை ஊராட்சி ஒன்றிய பராமரிப்பிலேயே கொண்டு வரவும் ஆணை வேண்டப்படுகிறது.

10. ஊராட்சிகளால் பராமரிக்கப்படும் தெரு விளக்குகளுக்குரிய டியூப் லைட், சோக், ஸ்டாட்டர் மற்றும் பட்டீஸ் ஆகியவைகளை அரசு உத்திரவுப் படி ஊராட்சி ஒன்றியத்தினால் ஒரு நிறுவனத்தில் தான் வாங்க வேண்டும் என்ற நிர்பந்தத்தை மாற்றி அந்தந்த ஊராட்சி தலைவர்களே தரமான நிறுவனங்களில் உள்ளூர் நிறுவனங்களிலே விலைப்புள்ளிகள் பெற்று வழங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும். உதிரி பாகங்கள் வாங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்பினை அகற்றப்பட வேண்டும், அல்லது இயற்கை இடர்பாடுகளினால் மின்சார உதிரி பாகங்கள் பாதிக்கப்படும் பொழுதாவது, இதற்கான உச்சவரம்பு அகற்றப்பட வேண்டும்.

11. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொலைதூரப் பயணங்களுக்கு இலவச பஸ் பாஸ் அளித்திருப்பது போல் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களுக்கும் பஸ் பாஸ் அளிக்க வழி வகை செய்ய வேண்டும்.

12. ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ், ஏற்கனவே செயல்பட்டு வந்து பின் தனியாகப் பிரிந்த கல்வித்துறை, பொது சுகாதாரத் துறை, கால் நடை விவசாயத் துறை ஆகியவற்றை மீண்டும் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் ஊராட்சிகளில் கல்வித் தரம் உயர்வதற்கும், சுகாதார நிலையங்கள் திறம்பட செயல்படுவதற்கும் விவசாயத்தில் நல்ல முன்னேற்றம் காணவும் உரிய வழிவகை ஏற்படும். எனவே, 1994ம் ஆண்டு ஊராட்சி சட்டத்தில் குறிப்பிட்டுள்ள 29 துறைகளையும் ஊராட்சிகளின் பொறுப்பில் ஒப்படைத்து அவற்றின் மீதான நிர்வாக கட்டுப்பாடுகளை ஊராட்சியின் மூன்றடுக்குகளுக்கும் பிரித்தளிக்கப்பட வேண்டும்.

13. ஊராட்சி தெருவிளக்குகளுக்குரிய மின் கட்டணத்தை ஊராட்சிகளில் வசூல் செய்வதற்குப் பதில் அரசே மின் கட்டணத்தை ஏற்றுச் கொள்ள வேண்டும்.

14. தனிமங்கள் மூலம் கிடைத்திடும் வருமானங்களை அந்தந்த ஆண்டு ஊராட்சி நிதியில் வரவு வைத்திட ஆவன செய்திட வேண்டும்.

15. ஊரக பகுதிகளில் உணவு கலப்பட தடுப்பு சட்டத்தினை செயலாக்கிடவும் ஆவன செய்ய வேண்டும்.

16. ஊராட்சி ஒன்றியங்களிலிருந்த சமூகக் காடுகள் விரிவாக்க அலுவலர், ஆதி திராவிடர் நலம் விரிவாக்க அலுவலர் போன்ற பதவிகளை மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதிக்க வேண்டும். கோட்ட வளர்ச்சி அதிகாரி (டி.டி.ஒ) அலுவலகத்தையும், உதவி வட்டார வளர்ச்சி அதிகாரி (எ.பி.டி.ஒ) பதவியையும் எடுத்துவிடப் போவதாக அறிகிறோம். நிர்வாக பளுவை மனதில் கொண்டு அலுவலர்களை குறைக்கக் கூடாது என்பதுடன் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் கூடுதலாக ஒரு தட்டச்சர் பணியிடமும் தோற்றுவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

18. சாலை அமைக்கும் பணிக்கு, நெடுஞ்சாலைத் துறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை நிர்ணயித்தினையே ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

19. எண்ணெய் எரிவாயு நிறுவனத்தினரால் இயற்கை எரிவாயு எடுக்கும் பகுதிகளில் செல்லும் சாலைகள் அனைத்தும் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் அமைவதால் ஊராட்சி ஒன்றிய சாலைகள் அடிக்கடி பழுதடைகிறது. எனவே இச்சாலைகளை பராமரிப்பில் செலவினம், மத்திய அரசு இதற்கான "ராயல்டி" தொகையினை அந்தந்த ஊராட்சி ஒன்றிங்களுக்கு வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.

20. தற்போது வழங்கப்பட்டு வரும் தலசாலை மான்யம் உயர்த்தி வழங்கப்பட வேண்டும்.

21. ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள், மூன்றில் ஒரு பங்கு பெண் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தனியாக பெண்களுக்கென ஒரு கழிப்பறை வசதி செய்து தர வேண்டும்.

22. யூனியனில் உட்பட்ட பகுதி வாழ் மக்களுக்கு வருமான சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், போன்றவை யூனியன் ஆணையாளரால் தலைவரின் மேற்பார்வையில் வழங்கப்பட வேண்டும்.

23. யூனியனில் தலைவர் நல்லமுறையில் செயல்பட அரசு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

24. ஏற்கனவே ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள இளநிலை உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களை மீண்டும் வழங்கி செயல்பட ஆணை பிறப்பிக்க வேண்டும்.

25. ஊராட்சி ஒன்றிய உபரி பொது நிதியிலிருந்து எடுத்து செய்யும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ரூ.2 லட்சம் வரையும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ரூ.5/- லட்சமும் அனுமதிக்கப்பட்ட வரம்பினை முறையே ரூ.5 லட்சம், ரூ.10 லட்சம் என அனுமதிக்க ஆணை பிறப்பிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

26. ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் செயல்பட்டு வருகிறது. இதனை பழுது ஏற்படும் காலத்தில் உடனுக்குடன் பழுது பார்த்திட ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு டெக்னீஷியன் பணியிடம் ஏற்படுத்தல்.

27. ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது வேலைபளு அதிகமாக உள்ளதால், ஒரு ஒன்றிய பொறியாளரால் அனைத்து வேலைகளையும் கவனிக்க இயலவில்லை. அதனால் பணிகள் சிறப்பான நிலையில் முடிக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே கூடுதலாக ஒரு ஒன்றிய பொறியாளரோ அல்லது ஜனத்தொகை மற்றும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒரு கூடுதல் ஒன்றியப் பொறியாளரோ நியமிக்க வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

28. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் சமூக நலப்பணிகள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியப் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமணத் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு திட்டம் போன்றவைகள் ஊராட்சி ஒன்றியத்திலேயே அனுமதி அளிக்கப்பட்டு உடனுக்குடன் பயனாளிகளுக்குக் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும்.

29 ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களில் சில பிரிவுகளை அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டும் (Provisionalised) அவர்களது ஊதியம் ஊராட்சி ஒன்றிய நிதியினின்று பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. இதனை மீள அரசு மான்யமாக வழங்க வேண்டும்.

30. 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வீட்டு வரி நிர்ணயம் புதிதாக கணக்கெடுக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற நிலை இருந்தும் கடந்த பல ஆண்டுகளாக இவை மாற்றப்படவில்லை. இதற்காக உடனடியாக அலுவலர்களை நியமனம் செய்து, வீட்டுவரிகளை புதிதாக நிர்ணயம் செய்ய வேண்டும்.

31. நகராட்சி பகுதிகளில் புதிதாகச் கட்டப்படும் கட்டிடங்களை சோதனையிட்டு அனுமதி வழங்க தனியாக அலுவலர்கள் உள்ளனர். அதே நிலையில் ஊராட்சி ஒன்றியத்திற்காக கட்டிட ஆய்வாளர்கள் (Building Inspectors) தனியாக நியமனம் செய்யப்படவேண்டும்.

32. தற்போது ஊராட்சி பகுதிகளில் தெருவிளக்கு விரிவுபடுத்த விளக்கு ஒன்றுக்கு ரூ.3460/- வீதம் மின் வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலை உள்ளது. இதனை குறைக்கவோ அல்லது முழுமான்யமாகவோ ஊராட்சிக்கு வழங்கப்பட வேண்டும்.

33. கள்ளச்சாராயம் ஒழிப்பு மற்றும் மது ஒழிப்பினை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் முழுமையாகச் செயல்படுத்த ஒன்றியத் தலைவர் மற்றும் குழு உறுப்பினர்களை உள்ளடக்கிய தனியாகக் குழு ஏற்படுத்தி தீவிரமாக கண்காணிக்க வழிவகை செய்தல்.

34. ஊராட்சி அமைப்பும் வருவாய்த்துறை அமைப்பும் மாதம் ஒருமுறை கூட்டம் நடத்தி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆக்கிரமிப்பு சொத்துக்களை பட்டியலிட்டு மீட்க நடவடிக்கை மேற்கொண்டு அரசு வழிவகை செய்ய வேண்டும்.

35. திட்டப் பணிகளை மாவட்டங்களில் செவ்வனே செயல்படுத்த அந்தத் துறையிலேயே (ஊரக வளர்ச்சி) மிகுந்த அனுபவம் வாய்ந்த அலுவலர்களையே பதவி உயர்வில் நியமித்தல், ஊரகப் பகுதியில் நிலைமையினை அறிந்து செயல்பட ஏதுவாக அமையும். எனவே நேர்முகமாக இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்) அதிகாரிகளை நியமனம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

30.11.96 அன்று மாவட்ட ஊராட்சி தலைவர்களின் குழுக் கூட்டத்தில் ஏக மனதாக எடுக்கப்பட்ட தீர்மானங்களின் விவரங்கள்

1. தமிழகத்தில் பல ஆண்டு காலமாக நடைபெறாமல் இருந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு வெற்றி கரமாக தேர்தல் நடத்தியும் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கும் போதுமான இட ஒதுக்கீடு செய்து, அண்ணல் காந்தி கண்ட கிராம இராஜ்யத்தை நனவாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்களுக்கு மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் குழு தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

2. உள்ளாட்சி அமைப்புகளில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மாவட்ட ஊராட்சிகள் சிறப்பாக செயல்படவும், கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்திடவும். பொறுப்புகளையும், அதிகாரங்களையும் மற்றும் தேவையான நிதி ஆதாரங்களையும், நிர்வாக அமைப்புகளையும் மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கி இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறுகின்ற வகையில் தமிழக அரசு வழிவகை செய்திட வேண்டுகிறோம்.

3. கிராமப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகள் முழுமையாக கிடைத்திடவும், திட்டத்தின் பலன்களும், சலுகைகளும் உரியவர்களுக்கு முழுமையாக சென்றடையவும், மாவட்ட ஊராட்சிகளுக்கு சில பொறுப்புகளும், அதிகாரங்களும் கீழ்கண்டவாறு அமைய வேண்டும்.

   (அ) சில துறைகளின் மாவட்ட அளவிலான அதிகாரியையும், அவரின் கீழ் பணிபுரியும் அலுவலர்களையும் மாவட்ட ஊராட்சியின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும்.

   (ஆ) சில துறைகளின் திட்டப்பணிகள் மாவட்ட ஊராட்சிகளின் ஒப்புதல் / பரிந்துரை பெற்ற பின்பே நிறைவேற்றப்படல் வேண்டும்.

   (இ) சில துறைகளில் பணிகளை கண்காணிக்கவும், மற்றும் மேற்பார்வையிடவும் மாவட்ட ஊராட்சிக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

   (ஈ) ஊரக பகுதிகளில் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு பயனாளிகளை தேர்ந்தெடுக்கும்போது, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

4. பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிராம மக்களுக்கு வழங்குவது பஞ்சாயத்துகளின் தலையாய கடமையாகும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வாரியம் (ட்வார்டு) கைப்பம்பு, விசைப்பம்பு மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டம் (சி.டபிள்யூ. எஸ்.எஸ்) ஆகிய திட்டத்தினை செயல்படுத்துகிறது. கூட்டுக் குடிநீர் திட்டத்தை குடிநீர் வாரியமே பராமரித்து வருகிறது. கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு ஆகியவைகளை பணி முடிந்த பின்பு பஞ்சாயத்துகளுக்கு ஒப்படைக்கிறது.

   குடிநீர் வாரியம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை மட்டும் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு செயல்படுத்தும் பணிகளை மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். குடிநீர் வாரியம் கூட்டு குடிநீர் திட்டத்தை மட்டும் தொடர்ந்து செயல்படுத்தவும், பராமரிக்கவும் வேண்டும். கைபம்பு மற்றும் விசைபம்பு (ஓ.ஹெச்.டி) திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். இப்பணிகள் நிறைவேற்றிய பின்பு பராமரிப்பிற்கு ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி மன்றத்திற்கு ஒப்படைக்கப்படும். மேற்கூறிய பணிகளை நிறைவேற்ற குடிநீர் வாரியத்தின் ஊரக பிரிவு செயற்பொறியாளர் (எக்ஸிகூட்டிவ் இன்ஜினீயர்) (ஆர். டபுள்யூ.எஸ்.) மற்றும் அவரைச் சார்ந்த அனைத்து அலுவலர்களும் மாவட்ட ஊராட்சியின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் (விசைப்பம்பு பராமரிப்பு) மற்றும் அவரது சார்பு அலுவலர்கள் மாவட்ட ஊராட்சிக்கு மாற்றப்பட வேண்டும்.

5. சமூகநலத் துறையின் மூலம் ஏழை மக்களுக்கு பயன்படக்கூடிய பல்வேறு திட்டம் பணிகள் (சத்துணவு திட்டம் உட்பட) செயல்பட்டு வருகின்றன. இதைப் போல், மாவட்ட ஆட்சியரின் கீழ் பணிபுரியும் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் (டி.எ.டி.டபிள்யூ.ஒ.) மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் (டி.பி.சி.டபிள்யூ.ஒ.), பல்வேறு சலுகைகளை (வீட்டுமனை இல்லாத ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்குதல் உட்பட) ஆதிதிராவிடர்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர்களுக்கும் வழங்குகிறார்கள். இந்த மூன்று துறைகளின் திட்டங்கள் அனைத்தும் அதிகாரிகள் மூலமாக செயல்படுத்தப்படுவதால் உரியவர்களுக்கு சரிவர போய் சேருவதில்லை. இதனைத் தவிர்க்க மாவட்ட ஊராட்சியின் கீழ் மாவட்ட சமூக நல அலுவலர் (டி.எஸ்.டபிள்யூ.ஒ.) மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் (டி.எ.டி. டபிள்யூ.ஒ.) ஆகியோர்கள் மற்றும் அவரின்கீழ் பணிபுரியும் அனைத்து அலுவலர்களும் கொண்டு வரப்பட வேண்டும். மேலும், இவர்கள் செயல்படுத்தும் திட்டங்கள் அனைத்தும் மாவட்ட ஊராட்சிகளின் மூலமாகவே செயல்படுத்தப்பட வேண்டும்.

6. கீழ்கண்ட துறைகளின் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் தேர்வு செய்கின்ற பொறுப்புகளை மாவட்ட ஊராட்சியின் ஒப்புதலோ / பரிந்துரையோ பெற்ற பின்பே செயல்படுத்த வேண்டும்.

1. கோட்டப் பொறியாளர் (ஊரக சாலைகள்) மூலம் மேம்பாட்டிற்கு எடுக்கப்படும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்.
2. கரும்பு அபிவிருத்தி சாலை திட்டத்தில் எடுக்கப்படும் சாலைகள்.
3. வேளாண் விற்பனை குழுவின் மூலம் எடுக்கப்படும் சாலைகள்.
4. புதிதாக கட்ட எடுக்கப்படும் கால்நடை மருந்தகங்கள்.
5. புதிதாக கட்ட எடுக்கப்படும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்.
6. மண்வளப் பாதுகாப்பு மற்றும் வேளாண்மை பொறியியல் துறை மூலம் செயல்படுத்தும் திட்டங்கள்.
7. மாவட்ட மேலாளர், ஆதிதிராவிடர் நல வாரியம் (தாட்கோ) மூலம் செயல்படுத்தும் திட்டங்கள்.
8. மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
9. உதவி இயக்குநர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
10. அனைத்து அறிவொளித் திட்டங்கள்.

7. **கல்வி**

தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தொடக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிக்கட்டிடங்கள் புதிதாக கட்டவும், பராமரிக்கவும், ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பேற்கின்றன. ஆனால் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் கட்டுவதும், பராமரிப்பதும் பொதுப்பணி துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் போதிய நிதி ஒதுக்கீடு இன்மையாலும், தக்க பராமரிப்பின்மையாலும், மிக மோசமான நிலையில் உள்ளது. எனவே உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதையும் பராமரிப்பதையும் மாவட்ட ஊராட்சியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஊராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர கல்வி மிகவும் அவசியம். தரமான கல்வியை வழங்கும் அவசியத்தினை கருத்தில் கொண்டு, தொடக்கப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரை அனைத்து பள்ளிகளில் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்யும் பொறுப்பினை மாவட்ட ஊராட்சித் தலைவர் / உறுப்பினர்களுக்கு வழங்க தக்க ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். பள்ளிகளில் அடிப்படை வசதிகள்

மற்றும் கல்வித்தரம் இவற்றைப் பற்றி ஆய்வு செய்ய தக்க நடவடிக்கை எடுக்கும்பொருட்டும் முதன்மை கல்வி அலுவலரும். மாவட்ட கல்வி அலுவலர்களும் மாவட்ட ஊராட்சிக்கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டுமென்று அரசு தக்க ஆணை பிறப்பிக்க வேண்டும்.

8. சுகாதாரம்

ஊரகப்பகுதிகளில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் இயங்குவதில் குறைபாடுகள் உள்ளது பற்றிய பொதுக்கருத்து உள்ளது. இதனை தவிர்க்கும் வகையில், ஊரக மக்களுக்கு பொது மருத்துவ வசதி முழுமையாக கிடைக்க ஏதுவாகவும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் வருகை, மருந்துகள் வழங்கப்படுவது, படுக்கை வசதிகள் இவற்றை நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்ய மாவட்ட ஊராட்சித் தலைவர் / உறுப்பினர்களுக்கு தக்க அனுமதி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். மேலும் மாவட்ட ஊராட்சி மன்றக் கூட்டங்களில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பாடுகள் குறித்து விவாதிக்க மாவட்ட துணை இயக்குநர் (சுகாதாரம்) கலந்து கொள்ள அரசு தக்க ஆணை பிறப்பிக்க வேண்டும்.

9. ஊரக மக்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்கள் வழங்குவதில் குறைபாடுகள் மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. இதனை தவிர்க்க, நியாய விலைக்கடைகள் செயல்பாட்டினை கண்காணிக்கத்தக்க அளவில், மேற்பார்வையிட்டு ஆய்வு செய்ய மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்க தக்க ஆணை பிறப்பிக்க வேண்டும். மாவட்ட அளவில் இதன் பொறுப்பு அலுவலர்களான இணைப்பதிவாளர் / துணைப்பதிவாளர் (பொதுவிநியோகம்) மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர் ஆகியோரை மாவட்ட ஊராட்சி வளர்ச்சி மன்றக்கூட்டத்தில் கலந்து கொள்ள ஆணை பிறப்பிக்க வேண்டும்.

10. மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களும் பொதுமக்களால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதனால் வாக்களித்த பொதுமக்களிடையே அந்த உறுப்பினர்களிடமிருந்து அதிகமாக எதிர்பார்ப்பு உள்ளது. மற்றும் அவர்களது தேவைக்காக குறைத்தீர்க்கக் கோரும் மனுக்கள் அதிகம் பெறப்படுகின்றன. எனவே இந்தக்கோரிக்கைகளை நிறைவேற்ற கீழ்கண்ட திட்டங்களில் பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் பணியினை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் ஒப்படைக்காமல், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கும் போதிய அங்கம் வகிக்கப் வழி செய்யப்பட வேண்டும்.

திட்டப்பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் குழுக்களை கீழ்குறிப்பிட்டபடி அமைத்திட பரிந்துரை செய்யப்படுகிறது.

1. ஊராட்சி ஒன்றியத் தலைவர் (தலைவர்)
2. சம்மந்தப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்
3. சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்
4. சம்மந்தப்பட்ட ஊராட்சித்தலைவர்
5. தொடர்புடைய துறை அலுவலர்
6. பகுதி வங்கி அலுவலர் / கடன் வழங்குதல் (திட்டங்களுக்கு மட்டும்)

இந்தக் குழு கிராமங்களுக்குத் நேரில் சென்று, கிராம சபா முன்னிலையில் தகுதி படைத்த பயனாளிகளை தேர்வு செய்வார்கள்.

இக்குழுவின் மூலம் அடியிற் குறிப்பிட்ட திட்டங்களில் பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் பணிநிலை ஒப்படைக்க அரசைக் கேட்டுக் கொள்ள பரிந்துரை செய்யப்படுகிறது

1. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (ஐ.ஆர்.டி.பி.)
2. ஊரக இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம் (டிரைசம்).
3. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (டோக்ரா).
4. இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் (ஐ.ஏ.ஒய்)
5. ஜீவன்தாரா கிணறுகள்.
6. தமிழ்நாடு ஆதிதிராவிடர் நல வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் (தாட்கோ).
7. கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
8. மாவட்ட தொழில் மையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
9. பால்வளத் துறை மூலம் செயல்படும் திட்டங்கள்.
10. கால்நடைத் துறை மூலம் செயல்படுத்தும் திட்டங்கள்.
11. பட்டு வளர்ப்புத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
12. விவசாயத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.

மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், ஜீவன்தாரா கிணறுகள் ஆகிய திட்டங்களில் மாவட்ட ஊராட்சித் தலைவருக்கு மொத்த ஒதுக்கீட்டில் 15 சதவீதம் வரை பயனாளிகளை தேர்வு செய்ய தக்க ஆணை பிறப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

11. மூன்றடுக்கு ஊராட்சி நிலைகளில் தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்கள் தனித்தனியாக தேர்ந்தெடுக்கப்படுவதால் உறுப்பினர்களை பொறுத்தவரை ஒன்றுக்கொன்று நேரடி தொடர்பற்ற நிலை உள்ளது. இருப்பினும் நிர்வாக ரீதியில் அடிப்படை வசதிகள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்துவதில் மூன்று நிலைகளிலும் ஆழ்ந்த தொடர்பு உண்டு. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி மற்றும் அவற்றில் பொது நிதிகளில் செயல்பட தேர்வு செய்யும் பணிகளில் மாவட்ட ஊராட்சி குறுக்கிடாது என்றாலும், திட்டங்கள் செயல்படுத்துவதை கண்காணிக்கும் பொறுப்பு மாவட்ட ஊராட்சிக்கு முழுமையாக இருக்க வேண்டும். இல்லையெனில், திட்டங்கள் செயல்படுத்துவதில் ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டு ஒத்துழைப்பு இருப்பதற்கு வாய்ப்பில்லை. எனவே, மாவட்ட ஊராட்சி ஒன்றியங்கள் / ஊராட்சிகளில் பணிகளை கண்காணித்து ஆய்வு செய்யத்தக்க ஆணை பிறப்பிக்க அரசினை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12. மைய அரசின் பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரைக்கு பின்னர் மான்யத் தொகை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 1 கோடி ரூபாய் தமிழக அரசு ஆணை (நிலை) எண்.227, ஊரக வளர்ச்சித்துறை, நாள் : 15–10–96ல் வழங்கியுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலைமை ஆராய்ந்து அவைகளுக்கு போதிய நிதி ஆதாரத்தை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட மாநில நிதி ஆணையம் 29–11–96 அன்று மேதகு ஆளுநர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. மேற்கூறிய தீர்மானங்களில் அடங்கியுள்ள பொறுப்புகளை முழுமையாகவும், செம்மையாகவும் ஏற்று செயல்படுத்த சராசரி ரூ.10 கோடி ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் மிகவும் இன்றியமையாதது. எனவே, ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் கட்டுப் படுத்தப்படாத நிதியாக (அன்டைய்டு பண்ட்ஸ்) ஆண்டுக்கு சராசரி 10 கோடி ரூபாய் விரைவில் வழங்க தமிழக அரசை கேட்டுக் கொள்கின்றோம்.

13. மாவட்ட ஊராட்சிகளை அமைக்கும் போது அரசு, ஊரக வளர்ச்சி முகமையில் திட்ட அலுவலர்களை முதன்மை செயல் அலுவலராக (சி.இ.ஒ.) கூடுதல் பொறுப்பு வகிக்கவும், ஆறு மாதங்களுக்குப் பின் இதனை ஆய்வு செய்து தக்க ஆணை பிறப்பிக்கப்படும் என உத்திரவிட்டுள்ளது. தற்போது மாவட்ட ஊராட்சிகளில் தேர்ந்தெடுத்த அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளதாலும், ஆரம்ப கூட்டத்தில் பல முக்கிய அலுவலக ரீதியான பணிகள் இருப்பதாலும், இதற்கு முழுநேர முதன் செயல் அலுவலராக பணியாற்ற ஒரு அலுவலரை அரசு உடனடியாக நியமிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

14. மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு, இராஜங்க அமைச்சர்களுக்குண்டான (மினிஸ்டர் ஆப் ஸ்டேட்) அந்தஸ்து தரப்பட வேண்டும்.

15. மாவட்ட ஊராட்சி சிறப்பாக செயல்பட தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு சில அவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

தொகுப்பூதியம் (உறானரோரியம்) மற்றும் டி.ஏ., டீ.ஏ. ஆகியவை அண்டை மாநிலங்களில் ஊராட்சி தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுவதைப் போன்று வழங்க வேண்டும்.

மாவட்ட ஊராட்சித் தலைவருக்கு (அண்டை மாநிலங்களில் உள்ளது போல்) மாவட்ட தலைமையிடத்தில் தங்க வாடகையில்லாத ஒரு வீட்டு வசதி (மாதத்திற்கு ரூ. 5,000/- க்கு மிகையாகமல்) செய்து தரப்படவேண்டும். அல்லது பொருத்தமான அரசு குடியிருப்பு இருந்தால் அதனை ஒதுக்கீடு செய்து தர வேண்டும்.

மாவட்ட ஊராட்சித்தலைவர், மாவட்ட முழுமையும் விரிவான பயணம் செய்ய வேண்டி உள்ளதால், அவருக்கு ஒரு தனியாக கார் எரிபொருள் வரம்பு இன்றி வழங்கப்பட வேண்டும்.

மேலும், அலுவலக உபயோகத்திற்கும், கார் செல்ல முடியாத இடங்களுக்கு செல்லவும் ஒரு ஜீப்பு வழங்க வேண்டும்

மாவட்ட ஊராட்சித் தலைவருக்கு ஒரு நேர் முக எழுத்தரும் (ஸ்டெனோ) ஒரு அலுவலக உதவியாளரும் (டபேதகர்) வழங்கப்பட வேண்டும்.

16) இதுவரை குறிப்பிட்டுள்ள மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்புகளை சீரிய முறையில் செயல்படுத்த உரிய நிர்வாக அமைப்புகள் அவசியமாகிறது. அதனை உடனடியாக ஏற்படுத்தி தர அரசினை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதுவரை குறிப்பிட்டுள்ள பணிகள் அனைத்தும் மாவட்ட ஊராட்சிகள் முதற் கட்டமாக செயல்படுத்த தேவையானவை. மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும் அட்டவணை – 11 –ல் கண்டுள்ள மீதமுள்ள பணிகளையும் படிப்படியாக அடுத்த 6 மாதங்களில் ஒப்படை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம் மற்றும் சட்ட சிக்கல்களை ஆராய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதே போன்ற உள்ளாட்சி அமைப்புகளில் தலைவர்களில் கருத்தரங்கினை கூட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

உள்ளாட்சி அமைப்புகளில் மாவட்ட ஊராட்சி புதிய அமைப்பாக உள்ளதாலும், பல்வேறு நிர்வாக சிக்கல்களை களைவதற்காகவும், அவைகள் சிறப்பாக செயல்படவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது மாவட்டஊராட்சி தலைவர்களில் கூட்டத்தை கூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

6. மேற்கோள் - நூல்கள், சட்டங்கள், மற்றும் இதர வெளியீடுகள். (References)

Sl.No	Details

I - BOOKS

1. Abdul Aziz (1993), Decentralised Planning: The Karnataka Experiment, Sage, New Delhi.

2. Abdul Aziz (1994), Decentralisation: The Mandal Panchayat System in Karnataka, NIRD, Hyderabad.

3. Abdul Aziz and David Arnold (eds.) (1996). Decentralised Governance in Asian Countries, Saga, New Delhi.

4. Austin, Granvile (1966): The India Constitution: Cornerstone of Nation, Oxford University Press, Bombay.

5. Baker, C.J (1976): The Politics ofSouth India 1920-1937, Vikas Publishing House, New Delhi.

6. Bhargava, B S and V Venkatakrishnan (1995) "Constitutionalisation of Panchayati Raj: The case of Tamil Nadu; Kurukshetra, Vol.XLIII, No.7, April.

7. Chauhan, Yash (1995) Tamil Nadu Panchayats Act, 1994; In : State Panchayat Acts : A Critical Review. Voluntary Action Network India (VANI), New Delhi.

8. Cheema G S and Rondinell D A (eds.) (1983) Decentralisation and Development : Policy Implementation in Developing Countries, Beverly Hills, Saagea Publications, London.

9. Institute of Social Sciences (1994); Status of Panchayati Raj in the States of India, Coincept Publishing Company, New Delhi.

10. International India Institute for Population Sciences,Bombay, August 1995 - NationalFamily Health Survey for 1992-93.

11. Jain, S.P., "History of Panchayat Reform in Andhra Pradesh", NIRD, Hyderabad, (Unpublished).

12. Maddic H (196311110, Democracy, Decentralisation and Development, Asia Publishing House, Bombay.

13. Mathew, George (1994): Panchayat Raj: from Legislation to Movement, Concept Publishing Company, New Delhi.

14. Meenakshisundaram S S (1994), Decentralisation in Developing Countries, Concept, New Delhi.

15. Mishra, Sweta, "Democrataic Decentralisation in India", Mittal Pub., New Delhi, 1994.

16. Padmanaphan K (1994) "Tamil Nadu Panchayat Raj Act 1994 - An Evaluation" Political Economy Journal of India, Vol.3, No.2, July - December.

17. Patabiraman S, (1994) - Land Reforms Law in Tamil Nadu

18. Prasad, Sivalinga, V., "Panchayat and Development", Light and Life Pub., New Delhi, 1981.

19. Ram Reddy G (1979), Patterns of Panchayati Raj in India, Macmillan, Delhi.

Sl.No	Details

20 Reddy, Ram, G., "Patterns of Panchayati Raj in India", Macmillan, Delhi, 1979.

21. Rukmani R (1995); "Panchayat Raj Institutions in Tamil Nadu " A Historical Review" Madras Institute of Development Studies, Madras, (mimeo).

22. Saraswathi S (1973), "The Madras Panchayat System (Vol.1); Impex India, Delhi.

23. Sarumathy M (1985), "Panchayati Raj and Development Administration in Tamil Nadu" : Parashansnika, Vol.XIV, No.1, January - March.

24. Satis Chandran T R (1994), a chapter on 'Karnataka' in Status of Panchayati Raj in the States of India,Institute of Soscial Sciences,Concept, New Delhi.

25. Shiviah, M., et.al., "Panchayat Raj : An Analytical Survey", NIRD, Hyderabad, 1976.

26. Sonachalam K.S., 1970 - Land Remarms in Tamil Nadu

27. Subramanian, S (1977), "Tamil Nadu". In : Paterns of Panchayati Raj in India, by G. Rama Reddy (ed), Mac Millan, Delhi.

28. Tinker, Hugh (1967): The Foundations of Local Self Government in India, Pakistan and Burma, Lalvani Publishing House, Bombay.

29. Venkatarangaiya, M (1938): The Development of Local Boards in Madras Presidency, The Local Self Government Institute, Bombay.

30. Venkatarangaiya, M. and Pattabhiram, M.(ed) (1969) : Local Government in India. Allied Publishers. Calcutta.

31. Washbrook, D.A. (1977): The Emergence of Provincial Politics: The Madras Presidency, 1870-1920, Vikas Publishing House, New Delhi.

II - ACTS AND RULES

1. Consumer Protection Act, 1986.

2. Essential Commodities Act.

3. Govt. of India, 1993 - The Constitution Seventh-third Amendment Act, 1992.

4. Immoral Traffic (Prevention) Act 1956.

5. Indian Fisheries Act of 1987.

6. Juvenile Justice Act. 1986

7. Madras Local Funds Act (IV of 1871).

8. Madras Local Boards Act (V of 1884).

Sl.No	Details
9.	Madras Local Boards Act (XIV of 1920).
10.	Madras Village Panchayats Act (X of 1950).
11.	Persons with disabilities (equal opportunities, protection Rights and Full Participation) Act 1995.
12.	Prevention of Food Adulteration Act 1954.
13.	TNCSC Articles of Associations and Memorandum of Undertaking.
14.	Tamil Nadu Births and Deaths Regulation Rules 1977.
15.	Tamil Nadu Compulsory Labour Act 1968.
16.	Tamil Nadu Kudiyiruppu Law Amendment Act 1990 (T.N. Act 39\1990).
17.	Tamil Nadu Public Health Act, 1939.
18.	Tamil Nadu Public Libraries Act, 1948.
19.	Tamil Nadu Rural Artisans (Conferment of ownership of Ownership of Kudiyiruppu) Act 1976 (Presidents Act 38 of 1976)
20	Tamil Nadu Societies Registration Act.
21.	The Bonded Labour System (Abolition) Act, 1976.
22.	The SCs and STs Atrocities (Prevention) Act, 1989.
23.	The Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair rent) Act 1961.
24.	The Tamil Nadu Cultivating Tenants Protection Act 1955.
25.	The Tamil Nadu Land Public Trust Regulation of Administratio of Agricultural Land Act 1971.
26.	The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on land) Act 1961
27.	The Tamil Nadu Panchayat Act, 1994 - Section 112, 114(2),
28.	The Tamil Nadu Occupants Kudiyiruppu conferment of ownership (Tamil Nadu Act 40\71) Act 1961.
29.	The protection of Civil Rights Act, 1955.

III - GOVERNMENT PUBLICATIONS

1. Govt. of India - Ministry of Food Processing Industries Report for 1994 - Deep Sea Fishing Industries in India & Deep Sea Fishing Policy.

2. Govt. of India, 1957 - Report of the Team for the Study of Community Development Projects and National Extension Services, New Delhi - Volume - I.

Sl.No	Details
3.	Govt. of India, 1978 - Report of the Working Groups on Block Level Planning, Planning Com mission, New Delhi.
4.	The Gazetteer of India 1996 - Ministry of Law and Justice (Legislative Department), New Delhi.
5.	Govt. of Tamil Nadu, 1990 - Agriculture Department Mannual, Sixth Edition.
6.	Govt. of Tamil Nadu - Agriculture Department - Agro tatistics, 1994 (1B\1994-95)
7.	Govt. of Tamil Nadu, 1993 - Agriculture Department - TNADP Functional Reponsibility of Field Staff(15\1992-93)
8.	Govt. Tamil Nadu, 1996-97 - Detailed Demand for Grants on Health and Family Welfare Social Welfare
9.	Govt. of Tamil Nadu, 1996-97 - Performance Budget on Adi-Dravidar and Tribal Welfare Food, Civil Supplies and Consumer Protection. Health and Family Welfare, Forest, Social Welfare
10.	Govt. of Tamil Nadu 1996-97 - Policy Note on Agriculture, Animal Husbandry, Fisheries Health and Family Welfare, Irrigation, Land Revenue, Rural Development, Social Welfare
11.	Govt. of Tamil Nadu - Budget Plan Link, 1992-93, 1996-97 and 1997-98
12.	Govt. of Tamil Nadu - Annual Administrative Report for 1994-95, Animal Husbandry Depart ment.
13.	Govt. of Tamil Nadu - Administrative Report of Fisheries Department, 1980-81
14.	Govt. of Tamil Nadu - Administrative Report of Tamil Nadu, Forests Department 1992-93.
15.	Govt. of Tamil Nadu, 1996-97 - Budget Memorandum - Part-II and Revised Budget Estimate 1996-97,Budget Publication No.71.
16.	Govt. of Tamil Nadu - Financial Results of Irrigation Project - Commercial Project - Commercial Statement for Fasl.1403 (1993-94) - Supplimentary Report - Land Administration Department.
17.	Govt. of Tamil Nadu 1995 - National Watershed Development Project for Rainfed Areas (NWDPRA) in TamilNadu 1995-96 - Directarate of Agriculture, Chennai-5.
18.	Govt. of Tamil Nadu - Rural Development Department - Basic Statistics for 1995-96.
19.	International India Institute for Population Sciences,Bombay, August 1995 - National Family Health Survey for 1992-93
20.	State Planning Commission, 1996-97 - Review of Schemes under Decentralised District Plan ning for 1995 96.
21.	State Planning Commission December 1996 - Annual Plan 1996-97, Narrative notes on Plan Programmes.
22.	State Planning Commission - Review of Plan Schemes 1994-95 and 1995-96.
23.	State Planning Commission 1993 - VIII Five Year Plan 1992-97, Tamil Nadu.

Sl.No	*Details*

IV - GOVERNMENT ORDERS

1. G.O.Ms.No.857, Education Department, dated 23-05-1981.
2. G.O.Ms.No.820, Education and Science and Technology Department, dated 03-05-1982.
3. G.O.Ms.No.367, Rural Development Department, dated 03-05-1990.
4. G.O.Ms.No.332, Animal Husbandry and Fisheries (PS.V) Department, dated 17-11-1993.
5. G.O.Ms.No.289, Co-operation, Food and Consumer Protection Department, dated. 8.8.1995
6. G.O.Ms.No.84, Co-operation, Food and Consumer Protection (F1) Department, dated. 4.4.1996
7. G.O.Ms.No.226, Rural Development (CI) Department, dated 15-10-1996.
8. G.O.Ms.No.616, Co-operation, Food and Consumer Protection (F1) Department, dated.5.11.1996

7. கலந்தாலோசித்த அலுவலர்கள் மற்றும் வல்லுநர்கள் பட்டியல்

வ.எண்.	அறிக்கை தயாரிப்பதில் குழு கலந்தாலோசித்த அலுவலர்கள் / வல்லுநர்களின் பெயர் மற்றும் பதவி .

திரு. / திருமதி. / செல்வி

1. கே. அசோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
   ஊரக வளர்ச்சி இயக்குநர்

2. என். ஆதிமூலம், இ.ஆ.ப.,
   அரசுச் செயலர்
   வேளாண்மைத் துறை

3. ஏ.பால்ராஜ், இ.ஆ.ப.,
   தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
   தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை.

4. ஆர். கிறிஸ்துதாஸ் காந்தி, இ.ஆ.ப.,
   அரசு செயலர்
   ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.

5. பி.சி.சிரியாக், இ.ஆ.ப.,
   அரசுச் செயலர்
   தொழில் துறை.

6. எஸ்.பி.இளங்கோவன், இ.ஆ.ப.,
   அரசுச் செயலர்,
   உயர் கல்வித் துறை.

7. முனைவர். ஜார்ஜ் மாத்யூ,
   இயக்குநர்
   சமூக அறிவியல் மையம்,
   புது தில்லி.

8. எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.,
   அரசுச் செயலர்,
   பள்ளிக்கல்வித் துறை.

9. முனைவர். எஸ். குருமூர்த்தி, இ.ஆ.ப.,
   தலைமை நிர்வாக அலுவலர்,
   தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்

10. ஜே.டி.ஜான் சாமுவேல்,
    இணை ஆணையாளர்,
    நுகர் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்
    பாதுகாப்புத் துறை.

வ.எண்.	அறிக்கை தயாரிப்பதில் குழு கலந்தாலோசித்த அலுவலர்கள் / வல்லுநர்களின் பெயர் மற்றும் பதவி
	திரு. / திருமதி. / செல்வி
11.	ஆர். கண்ணன், இயக்குநர். நூலகத் துறை
12.	பி. கோலப்பன், இ.ஆ.ப., இயக்குநர். நிலச்சீர்திருத்த துறை
13.	திருமதி. எஸ்.இலஷ்மி, இயக்குநர் முதியோர் மற்றும் பள்ளிசாராக் கல்வித்துறை.
14.	திருமதி இலட்சுமி கிருஷ்ணமூர்த்தி, சத்தியமூர்த்தி மக்களாட்சி ஆராய்சி மையம்
15.	திருமதி இலட்சுமி பிரனேஷ், இ.ஆ.ப., அரசுச் செயலர், சமூக நலத் துறை.
16.	வி. மாதவன் நாயர், இ.ஆ.ப., அரசுச் செயலர், போக்குவரத்துத் துறை.
17.	திருமதி. எஸ். மாலதி, இ.ஆ.ப., அரசுச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை.
18.	திருமதி. மீரா, சமூக அறிவியல் மையம், புது தில்லி.
19.	முனைவர். எம். நாகநாதன், பேராசிரியர் மற்றும் தலைவர் பொருளியல் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.
20.	முனைவர். எஸ். நாராயணன், இ.ஆ.ப., அரசுச் செயலர், ஊரக வளர்ச்சித் துறை.
21.	ஆர். நாராயணசாமி, இயக்குநர், தொடக்கக் கல்வித் துறை.

வ.எண்.	அறிக்கை தயாரிப்பதில் குழு கலந்தாலோசித்த அலுவலர்கள் / வல்லுநர்களின் பெயர் மற்றும் பதவி
	திரு. / திருமதி. / செல்வி
22.	நரேஷ் குப்தா, இ.ஆ.ப., அரசு செயலர், பொதுப்பணித் துறை.
23.	முனைவர். டி. நடராஜன், இயக்குநர் தொலையுணர்வு மையம் அண்ணா பல்கலைக்கழகம்.
24.	முனைவர் ஓசியி பெர்னான்டஸ், சமூக அறிவியல் மையம், புது தில்லி..
25.	முனைவர். ஜி. பழனிதுரை, பேராசிரியர், அரசியல் அறிவியல் மற்றும் மேம்பாட்டு நிர்வாகம் காந்தி கிராமம் ஊரக கல்வி நிலையம் காந்தி கிராமம்.
26.	எல். பழமலை, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு குடிநீர் வழங்கள் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.
27.	ஆர். பூர்ணலிங்கம், இ.ஆ.ப., அரசுச் செயலர் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை.
28.	பி.வி. இராஜாராமன், இ.ஆ.ப., அரசுச் செயலர், நிதித் துறை.
29.	எஸ். இராசரத்தினம், இ.ஆ.ப., அரசுச் செயலர் வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை.
30.	எம். இராமன், இ.ஆ.ப., அரசுச் செயலர் கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை.
31.	எம். இராமு, இ.ஆ.ப., ஆணையாளர் நுகர் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

வ.எண்.	அறிக்கை தயாரிப்பதில் குழு கலந்தாலோசித்த அலுவலர்கள் / வல்லுநர்களின் பெயர் மற்றும் பதவி
	திரு. / திருமதி. / செல்வி
32.	இரமேஷ்புரம் மிஷ்ரா, இ.ஆ.ப. ஆணையாளர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை
33.	பி.ஏ. இராமையா, இ.ஆ.ப., இயக்குநர், வேளாண்மைத் துறை
34.	ஆர். சலபதி, இ.ஆ.ப., ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
35.	ஆர். சந்தானம், இ.ஆ.ப., அரசுச் செயலர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,
36.	எம்.கே. சீதாராமன், இணை இயக்குநர் (வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்) வேளாண்மைத்துறை
37.	திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., ஆணையர், மீன்வளத்துறை
38.	சிவமுத்தையய்யா, இணை இயக்குநர் (தொழில் பயிற்சி) வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை.
39.	திருமதி. ஒ.பி. சோசம்மா, இ.ஆ.ப., அரசு செயலர், சிறு தொழில் வளர்ச்சித் துறை
40.	டி.ஆர். ஸ்ரீனிவாசன், இ.ஆ.ப., கலை பண்பாடு ஆகியவற்றின் சிறப்பு ஆணையர்.
41.	கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., அரசுச் செயலர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை.
42.	முனைவர் கே.வி.சுந்தரம், வளர்ச்சிக்கான கலந்தறிவாளர், புது தில்லி.
43.	டி. சுந்தரேசன், இ.ஆ.ப., அரசுச் செயலர், தகவல் மற்றும் சுற்றுலாத் துறை.

வ.எண்.	அறிக்கை தயாரிப்பதில் குழு கலந்தாலோசித்த அலுவலர்கள் / வல்லுநர்களின் பெயர் மற்றும் பதவி
	திரு. / திருமதி. / செல்வி
44	வசயது முஸீர் வேளாதா, இ.ஆ.ப., அரசுச் செயலர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை
45.	ஆர். தெய்வமணி, இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை

இக்குழுவின் அறிக்கையை தமிழாக்கம் செய்ய பெரிதும் உதவிய தமிழ் வளர்ச்சித்துறை அலுவலர்கள்.

திரு. / திருமதி. / செல்வி

1. முனைவர். ச. நாகராசன், இயக்குநர்.
2. ஆ. பன்னீர் செல்வம், துணை இயக்குநர்.
3. உமா மகேஸ்வரி, உதவி இயக்குநர்.
4. பா. மார்க்க பந்து, கண்காணிப்பாளர்.
5. நா. வெள்ளைச் சாமி, கண்காணிப்பாளர்.
6. சீ. வெங்கட்ராமன், கண்காணிப்பாளர்.
7. சீ. பாபு, கண்காணிப்பாளர்.
8. கு. சுகந்தி, உதவியாளர்.

8. குழுவின் அறிக்கை தயாரிப்பில் உதவி செய்த மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள்

I. மாநில திட்டக்குழு உறுப்பினர்கள்

1. திரு எஸ். வெங்கட்டரமணன், இ.ஆ.ப., (ஓய்வு)
   உறுப்பினர்
2. திரு எஸ். குகன், இ.ஆ.ப., (ஓய்வு)
   உறுப்பினர்
3. திருமதி (டாக்டர்) லலிதா காமேஷ்வரன்,
   உறுப்பினர்
4. டாக்டர். ஏ. வைத்தியநாதன்,
   உறுப்பினர்
5. டாக்டர் வி. சண்முகசுந்தரம்
   உறுப்பினர்
6. பேராசிரியர் ஜி. சிதம்பரம்
   உறுப்பினர்

II. குழுமத் தலைவர்கள், முதுநிலைத் திட்ட அலுவலர்கள் திட்ட அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்கள்

திரு/திருமதி/செல்வி

1. எம்.ஆர்.ராமசாமி,
   குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்)
2. ஜி. இராமலிங்கம்
   குழுமத் தலைவர் (ஊரக வளர்ச்சி)
3. எம். நடராஜன்
   குழுமத் தலைவர்
   (தொழில்கள், மின்சாரம் மற்றும் போக்குவரத்து)
4. பி.ஏ. அப்துல் கரீம்
   குழுமத் தலைவர்
   (நிலப் பயன்பாடு)
5. அலமேலு
   முதுநிலைத் திட்ட அலுவலர்
   (பொருளாதார ஆய்வு மற்றும் மதிப்பிடுதல்)
6. வி. ஆறுமுகம்
   முதுநிலைத் திட்ட அலுவலர்
   (திட்ட ஒருங்கிணைப்பாளர்)
7. பி. பிச்சையா
   வேளாண்மைப் பொருளாதார வல்லுநர்
   (கொள்கை)
8. முனைவர். சி. சேகர்.
   வேளாண்மைப் பொருளாதார வல்லுநர்
   (திட்டம்)
9. எஸ்.எஸ். அப்துல் அஜீஸ்
   மாவட்டத் திட்ட அலுவலர்
10. என். தியாகராஜன்
    நிர்வாக அலுவலர் (ஓய்வு)
11. டி.வி.சிவசுப்ரமணியன்
    நிர்வாக அலுவலர் (பொறுப்பு)
12. ஏ. ராஜேந்திரன்
    திட்ட அலுவலர்

II. குழுமத் தலைவர்கள், முதுநிலைத் திட்ட அலுவலர்கள் திட்ட அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்கள்

திரு/திருமதி/செல்வி

13 எம். சுமதி
திட்ட அலுவலர்

14. ஜே. ஹரிஹரன்
திட்ட அலுவலர்

15. ஏ. ராமகிருஷ்ணன்
திட்ட அலுவலர்

16. கே. பேச்சி
திட்ட அலுவலர்

17. கே. பிரகாசம்
திட்ட அலுவலர்

18. வி. இராஜசேகரன்
கணினி தொகுப்பாளர்

19. வி.ஜி.திலக்ராஜ்
திட்டக் கண்காணிப்பாளர்

20. ஆர். மீனாட்சி சுந்தரம்
திட்டக் கண்காணிப்பாளர்

21. டி.எஸ். இராமகிருஷ்ணன்
நூலகர்

22. பி.சண்முகசுந்தரம்
நுட்ப உதவியாளர்

23. முகமது கலிமுல்லா
நுட்ப உதவியாளர்

24. எஸ். கிருபாகரன்
நுட்ப உதவியாளர்

25. ஆர். பேச்சிமுத்து
நுட்ப உதவியாளர்

26. ஆர்.கே.ஹாரூன்
நுட்ப உதவியாளர்

27. பி. நர்கீஸ்
நுட்ப உதவியாளர்

28. எம். நாகராஜன்
நுட்ப உதவியாளர்

29. ஆர். பத்மசூரன்
நுட்ப உதவியாளர்

30. வி.கே. வாசுதேவன்
நுட்ப உதவியாளர்

31. ஜே.இளஞ்சோழன்
நுட்ப உதவியாளர்

32. ரூத் பிரமிளா
நுட்ப உதவியாளர்

33 எஸ். ராமசந்திரன்
முதுநிலை திட்ட உதவியாளர்

34. எம். ராமச்சந்திரன்
முதுநிலை திட்ட உதவியாளர்

35. எம். கலா
திட்ட உதவியாளர்

36. ஜே. அனார்கலி
திட்ட உதவியாளர்

37. பி. சுப்பலட்சுமி
திட்ட உதவியாளர்

38. கே. சுசிலா
திட்ட உதவியாளர்

39. எஸ். எஸ். இராமநாதன்
திட்ட உதவியாளர்

40. ஆர். சேதுராமன்
திட்ட உதவியாளர்

41. என். முருகன்
திட்ட உதவியாளர்

42. எஸ். சுப்பு
திட்ட உதவியாளர்

43. வி. ஸ்ரீதரன்
திட்ட உதவியாளர்

44. எம். எஸ். கீதா
திட்ட உதவியாளர்

II. குழுமத் தலைவர்கள், முதுநிலைத் திட்ட அலுவலர்கள் திட்ட அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்கள்

திரு/திருமதி/செல்வி

45. பி. மாலா
திட்ட உதவியாளர்

46. எஸ். சித்ரா
திட்ட உதவியாளர்

47. வி. கஜலஷ்மி
திட்ட உதவியாளர்

48. ஆர். பி. கோட்டீஸ்வரி
திட்ட உதவியாளர்

49. எஸ். குமார்
திட்ட உதவியாளர்

50. கே. தட்சிணா மூர்த்தி
திட்ட உதவியாளர்

51. ஆர். கிருஷ்ணகுமார்
தனிச் செயலர்

52. எஸ். சுசிலா
தனிச் செயலர்

53. பி. பாலசுந்தரம்
தனிச் செயலர்

54. எம். மல்லிகா
தனிச் செயலர்

55. ஜோதி பிரபா
தனிச் செயலர்

56. டி. வி. கிருஷ்ணாம்பாள்
நேர்முக எழுத்தர்

57. என். ரமாதேவி
நேர்முக எழுத்தர்

58. கே.வி. தர்மசம்வர்த்தினி
நேர்முக எழுத்தர்

59. ஜி. ஆனந்தம்
நேர்முக எழுத்தர்

60. கே. சாவித்திரி
நேர்முக எழுத்தர்

61. எல். பாலகிருஷ்ணன்
பதிவுறு எழுத்தர்

62. டி. ரங்கநாதன்
பதிவுறு எழுத்தர்

63. என். ரங்கநாதன்
பதிவுறு எழுத்தர்

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.